

# நீ நான் தாமிரபரணி

என். கணேசன்

# நீ நான் தாமிரபரணி

## என்.கணேசன்

நிலா புக்ஸ்

முகவரி
Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

நூல் தலைப்பு : நீ நான் தாமிரபரணி

ஆசிரியர் : என்.கணேசன்

மொழி : தமிழ்

பதிப்பகம் : நிலாச்சாரல் லிமிடட்

காப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : நிலா

*"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்கு தமிழ் இலக்கியங்களை படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்கு தமிழ் இலக்கிய பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே **'நிலா புக்ஸ்'** -ன் இலட்சியம்"*

# (1)

The danger does not lie in failing to reach absolute perfection. It lies in giving up the chase. –Charles Moore

அருண் உள்ளே நுழைந்த போது அம்பலவாணன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். அறையின் சுவரில் தங்கத் தகட்டின் மீது எழுதப் பட்டிருந்த "சத்யமேவ ஜயதே" என்ற வடமொழி வாக்கியத்தில் அவர் கவனம் லயித்திருந்தது. சத்தியம் எல்லா சமயங்களிலும் ஜெயிக்குமோ?... இந்த உலகம் சத்தியத்தை ஜெயிக்க விடுமா?

"சார்" அருண் அழைக்க அவர் கவனம் கலைந்தது.

"உட்கார்" என்ற அம்பலவாணன் தன் பத்திரிக்கையின் பெரும் பலமாகத் திகழும் அருணைப் பார்த்து புன்முறுவல் பூத்தார்.

அந்தப் புன்முறுவலுக்கு ஒரே ஒரு அர்த்தம் தான் உண்டு. மிக மிகக் கஷ்டமான வேலையை அவனிடம் ஒப்படைக்கப் போகிறார் என்று அர்த்தம்.

அருண் உடனே உற்சாகமானான். "சொல்லுங்கள் சார்".

அந்த உற்சாகம்தான் அவனது தனித் தன்மை. எதுவும் என்னால் முடியாததல்ல, எதையும் சாதிப்பேன் என்ற தன்னம்பிக்கையோடு ஏற்படும் உற்சாகமது. அவன் அவரது "உண்மை" பத்திரிக்கையில் சேர்ந்த நாளில் இருந்து இந்த நாள் வரை அந்த உற்சாகம் குறைந்து அவர் பார்த்ததில்லை.

அவன் வேலைக்காக வந்த போது அவன் விளையாடுகிறான் என்று தான் அவர் நினைத்தார். பிரபல தொழில் மேதையும், கோடீசுவரருமான ராஜராஜனின் ஒரே மகன் அவரது பத்திரிக்கையில் ரிப்போர்ட்டர் வேலைக்கு வருவது நம்ப முடியாத ஒன்றாகப் பட்டது. அதை வாய் விட்டு அவனிடம் சொல்லவும் செய்தார்.

அவன் முகம் இறுகி ஒரே வார்த்தையில் சொன்னான். "அப்பா பிசினசுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை சார்". அன்றிலிருந்து இன்று வரை அவன் தன் தந்தையைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை.

ஒரு முறை ராஜராஜனை ஒரு பொது நிகழ்ச்சியில் பார்க்க நேர்ந்த போது அம்பலவாணன் அவரிடம் சொன்னார். "சார்! உங்க மகன் உங்களை மாதிரியே நல்ல சூட்டிகை. ஒரு காரியத்தை அவனிடம் கொடுத்தால் அதை வெற்றிகரமாக முடிக்காமல் திரும்பி வருகிற பழக்கம் இல்லை."

லேசாகத் தலையசைத்து விட்டு தன் மறு பக்கத்தில் அமர்ந்திருந்த மந்திரி ஒருவரிடம் பேச ஆரம்பித்த ராஜராஜன் நிகழ்ச்சி முடிகிற வரை அம்பலவாணன் பக்கம் திரும்பவேயில்லை. தந்தைக்கும் மகனுக்கும் இடையே சுமுகமான உறவில்லை என்பது மட்டும் அம்பலவாணனுக்குப் புரிந்தது. எது எப்படியாக இருந்தாலும் அருணைப் போன்ற ஒரு திறமைசாலி கிடைத்தது தன் பாக்கியம் என்றே அம்பலவாணன் நினைத்தார்.

"சார்! என்ன கனவா?" என்று கேட்ட அருண் சிரித்தான்.

அவன் சிரித்த போது மிக அழகாக இருந்தான். அசப்பில் அவன் தன் தந்தையைப் போலவே இருந்தாலும் அவர் சிரிப்பது அபூர்வமென்றால், அவன் சதா புன்னகையோடே இருப்பான். அந்த

அலுவலகத்திற்கு வரும் இளம் பெண்கள் அவன் கண்ணில் பட வேண்டும் என்று படாத பாடு படுவதை அம்பலவாணன் பல முறை பார்த்திருக்கிறார்.

"கனவல்ல, அருண்" என்று சமாளித்த அம்பலவாணன் தான் அவனை அழைத்த விஷயத்தை எங்கிருந்து ஆரம்பித்து அவனிடம் எப்படி சொல்வது என்று யோசித்து விட்டு பின் ஆரம்பித்தார். "சுமார் 25 வருஷங்களுக்கு முன் மூன்று நாள் நான் ஜெயிலில் இருந்தேன் என்பது தெரியுமா அருண்?"

அருண் முகத்தில் திகைப்பு தெரிந்தது.

"காரணம் இந்தப் புத்தகம் தான்" என்று சொன்ன அம்பலவாணன் ஒரு தடிமனான நாவலை எடுத்து மேசை மீது வைத்தார்.

"நீ நான் தாமிரபரணி" என்று கொட்டை எழுத்தில் பெரியதாக நாவலின் பெயரும், கீழே சிறிதாக "சேதுபதி" என்று ஆசிரியர் பெயரும் தெரிந்தது. அந்த நாவல் மிகப் பிரபலமானது. அது இலக்கிய வகையைச் சார்ந்தது என்றும் சேதுபதியின் மாஸ்டர்பீசென்றும் பலர் சொல்ல அருண் கேள்விப் பட்டிருக்கிறான். ஆனால் படித்ததில்லை.

முப்பதாவது பதிப்பு தற்போது வெளியாகி வெற்றிகரமாக விற்பனையாகிக் கொண்டு இருக்கிறது. அந்த நாவலாசிரியர் சேதுபதி திடீரென ஒரு நாள் தலைமறைவாகி விட்டார் என்றும் அந்த சூழ்நிலை பற்றி இன்னமும் பல கேள்விக்குறிகள் இருக்கின்றன என்றும் அவன் அறிவான். ஒரு பிரபல டைரக்டர் அதைத் திரைப்படமாக்க வேண்டும் என்பதே தன் நீண்ட நாள் லட்சியம் என்று சொல்லி இருந்ததைக் கூட அவன் படித்திருக்கிறான்.

ஆனால் அந்த நாவல் எப்படி அம்பலவாணனை சிறையில் அடைத்தது என்று புரியாமல் அருண் "எப்படி சார்?" என்றான்.

"இந்த நாவலைச் சுற்றி நிறைய மர்மம் இருந்தது அருண். இன்னமும் இருக்கு. அதைக் கண்டு பிடிக்க நான் முயற்சி செய்தேன். அது தான் என்னை ஜெயில் வரை கூட்டிட்டு போய் விட்டது"

"சார், புதிர் போடாமல் முழுவதும் சொல்லுங்க" என்று மிக ஆர்வத்துடன் அவன் கேட்க, அவர் ஆரம்பித்தார். "இந்த நாவல் வெளியாகும் வரை சேதுபதியை யாருக்குமே தெரியாது. வெளியான பிறகோ அவரைத் தெரியாதவர்களே கிடையாது என்று ஆகி விட்டது அருண். எங்கே பார்த்தாலும் அந்த நாவலைப் பற்றியே பேச்சு. அந்த சேதுபதி எழுதிய முதலும் கடைசியுமான ஒரே நாவல் இது தான். இதை நீ படிச்சிருக்கியா?"

இல்லை என்று அருண் தலையசைத்தான்.

"இதை நான் பல தடவை படிச்சிருக்கேன் அருண். ஒரு அழகான காதல் காவியம் இது. இது சேதுபதியை புகழின் உச்சாணிக் கொம்பிற்கே கொண்டு போய் விட்டது. நம் பத்திரிக்கை உட்பட பல பத்திரிக்கைகள் அவரைத் தங்கள் பத்திரிக்கைகளில் எழுதச் சொல்லி வற்புறுத்தினார்கள். அவர் ஏனோ பெரிய ஆர்வம் காட்டவில்லை. பல பரிசுகள், விருதுகள் கிடைத்த பின்னால் ஒரு நாள் திடீர் என்று சேதுபதி காணாமல் போய் விட்டார்...."

"முழு விவரங்கள் தெரியா விட்டாலும் அது பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன் சார்"

"அந்த நாளை என்னால் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது அருண். சேதுபதியைப் பாராட்டி பத்திரிக்கையாளர்கள் விழா ஒன்று ஏற்பாடு செய்திருந்தோம். நான் தான் விழா பொறுப்பாளன். அது ஒரு பெரிய விழா. ஆயிரக் கணக்கில் ஆட்கள் வந்திருந்தார்கள். விழா ஆரம்பித்ததில் இருந்தே சேதுபதி ஒரு மாதிரியாக நிலை கொள்ளாமல் இருந்தார். எதோ ஒன்று

அவரை நிறையவே பாதித்த மாதிரி இருந்தது. அதை என்னால் உணர முடிந்தது. அந்த நேரத்தில் தான் அவருக்கு ஒரு போன் கால் வந்தது. நாங்கள் விழா ஏற்பாடு செய்திருந்த அரங்கத்தில் ஆபிஸ் ரூமில் போன் கால் வந்ததை ஒரு வேலையாள் வந்து சொன்னான். அவரைத் தொந்தரவு செய்ய விரும்பாமல் நான் தான் முதலில் போய் போனில் பேசினேன். போனில் பேசிய ஆள் அது ஒரு எமர்ஜென்சி கால் என்றும் சேதுபதியிடம் தான் பேச வேண்டும் என்றும் சொன்னான். அங்கிருந்து கேட்ட சத்தங்களை வைத்து அந்த கால் ஒரு ஆஸ்பத்திரியில் இருந்து தான் வருகிறது என்று யூகித்தேன். அவரிடம் போய் சொன்னேன்..."

மேசை மீதிருந்த டம்ளரில் தண்ணீரை நிரப்பிக் குடித்து விட்டு அம்பலவாணன் மறுபடி தொடர்ந்தார்.

"அவர் பேசுவதற்கு முந்தைய ஆள் அப்போது மேடையில் பேசிக் கொண்டிருந்தார். பேசி விட்டு உடனே வருவதாய் சொல்லி விட்டுப் போனார். போய் பேசினார். ஏதோ ஒன்று என்னையும் அவரைப் பின் தொடர வைத்தது, அருண். அவர் போனை எடுத்து 'ஹலோ' என்று ஒரே வார்த்தை தான் சொன்னார். அந்தப் பக்கத்தில் இருந்து பேசியதை ஒரு வார்த்தை கூட பதில் சொல்லாமல் கேட்டார். பிரமை பிடித்தவர் போல ரிசீவரை வைத்தவர் திரும்பவும் மேடையேறவில்லை. அவர் அங்கிருந்து போய் விட்டார். நான் எத்தனையோ சொல்லியும் அவர் காதில் என் வார்த்தைகள் விழுந்த மாதிரி தெரியவில்லை. நடைப் பிணமாய் அந்த அரங்கத்தை விட்டுப் போனவர் ஒரு காரியம் செய்தார். பேனாவைத் தூக்கி வீசினார். அது தான் நான் அவரைக் கடைசியாகப் பார்த்தது. அன்றைய நாளுக்குப் பின் யாருமே இன்று வரை அவரைப் பார்த்ததாகத் தகவல் இல்லை அருண்".

மிக ஆர்வத்துடன் தன் பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டு இருக்கும் அருணைக் கூர்ந்து பார்த்தார் அம்பலவாணன். அவனிடம் அவர் கண்ட இதே ஆர்வம், உள்ளே ஒரு அக்னி அவரிடமும் அந்தக் காலத்தில் நிறையவே இருந்தது.

ஆனால்.... ஒரு பெருமூச்சு விட்டபடி அம்பலவாணன் தொடர்ந்தார்,

"சேதுபதி திடீரென்று காணாமல் போனது எல்லோரையும் ஒரு கலக்கு கலக்கியது. அவரை அன்றிரவு ரயில்வே ஸ்டேஷனில் பார்த்ததாக, பஸ் ஸ்டேண்டில் பார்த்ததாக பல விதமான வதந்திகள் தொடர்ந்து வந்தாலும் எந்த ஒரு தகவலும் உபயோகமாய் இருக்கவில்லை. சுமார் பத்து நாட்கள் எல்லா பத்திரிக்கைகளிலும் சேதுபதிதான் தலைப்புச் செய்தியாக இருந்தார். பிறகு ஒரு பிரபல நடிகை ஒரு அரசியல் பிரமுகரைக் கல்யாணம் செய்து கொண்டது தலைப்புச் செய்தியாக வந்தது. மக்கள் கவனம் சுலபமாகத் திசை திரும்பியது. சேதுபதி விஷயம் பின்னால் தள்ளப்பட்டது. மெல்ல மெல்ல பலரும் அவரை மறந்து போனார்கள். என்னால் மட்டும் அவரை மறக்க முடியவில்லை அருண்."

அம்பலவாணன் தொடர்ந்த போது அவர் வேறு உலகில் இருப்பது போல் அருணுக்குத் தோன்றியது. அவர் குரலில் புதிய உணர்ச்சிப் பிரவாகம் இருந்தது.

"ஒரு நல்ல கலைஞன் ஒரு அற்புதமான படைப்பு படைத்து விட்டு அதோடு திருப்திப் பட்டுக் கொண்டு இருந்து விட முடியாது, அருண், கலையின் தன்மை அவனை அப்படி இருக்க விடாது. ஆனாலும் சேதுபதி விஷயத்தில் அது நடந்து இருக்கிறது.

அவர் அந்த நாவல் தவிர வேறு எதையும் எழுதாததும், திடீரென்று ஒரு நாள் பேனாவைத் தூக்கி எறிந்து விட்டுத் தலை மறைவானதும் எனக்கு ஜீரணிக்க முடியாததாகவே இருந்தது. நான் சேதுபதி பற்றி துப்பு துலக்க ஆரம்பித்தேன். அப்போது நான் ஒரு பிரபல பத்திரிக்கையில் துணை ஆசிரியராக இருந்தேன். எனக்கு நிறைய பத்திரிக்கை நண்பர்களும் இருந்தார்கள். என் தேடலில் அவர்களும் ஆரம்பத்தில் இருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் பின் வாங்கினார்கள். சேதுபதி விஷயத்தில் தலையிடாமல் இருப்பது தான் அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்துக்கும்

பாதுகாப்பு என்று பெரிய பெரிய இடங்களில் இருந்து மிரட்டல் வந்ததென்றார்கள். என்னையும் இதிலிருந்து பின் வாங்கச் சொன்னார்கள். எனக்கும் ஒரு மந்திரியிடமிருந்து மறைமுக மிரட்டல் வந்தது. ஆனால் நான் பின் வாங்கவில்லை. அந்த சமயம் என் பத்திரிக்கை ஆசிரியரும் எனக்கு ஆதரவாக இருந்தார்."

"பத்திரிக்கையில் சேதுபதி பற்றி துப்பு தருபவர்களுக்கு ஒரு நல்ல தொகை தருவதாக விளம்பரம் செய்தோம். பல பேர் ஏதேதோ தகவலுடன் வந்தார்கள். ஆனால் எதுவுமே உருப்படியாக இருக்கவில்லை. ஒரு நாள் எனக்கு ஒரு போன் கால் வந்தது. ஒரு கிராமவாசி போன் செய்தார். சேதுபதி பற்றியும், அந்த நாவல் எழுதப் பட்ட சூழ்நிலை பற்றியும் தனக்கு எல்லாமே தெரியும் என்றும், அத் தகவல்கள் அந்த நாவலை விட சுவாரசியமானவை என்றும் சொன்னார். அவர் சொன்னதில் உண்மை இருப்பதாக என் உள்ளுணர்வு சொல்லியது. நேரில் வரச் சொன்னேன். மறுநாள் வருவதாகச் சொன்னார்."

அருண் நாற்காலியின் நுனியில் உட்கார்ந்திருந்தான்.

"மறுநாள் அவர் வருவதற்கு முன் போலீஸ் வந்தது. என்னைக் கைது செய்தது. பேட்டி எடுக்கப் போன இடத்தில் ஒரு பெரிய மனிதர் வீட்டில் ஏதோ திருடி விட்டேனாம். வைர மோதிரமோ எதுவோ சொன்னார்கள். மூன்று நாள் லாக்கப்பில் இருந்தேன். நான் கைதான செய்தி எங்கள் பத்திரிக்கை உட்பட எந்தப் பத்திரிக்கையிலும் வரவில்லை. என்னைப் பார்க்க எங்கள் பத்திரிக்கை ஆசிரியர் மூன்றாவது நாள் வந்தார். எல்லாவற்றையும் விட்டுவிடுவது தான் நல்லதென்றார். நினைத்ததை விடப் பெரிய தலைகள் எல்லாம் சம்பந்தப் பட்டிருப்பது போல இருக்கிறதென்றும் மேலும் தொடர்ந்தால் பத்திரிக்கையைத் தொடர்ந்து நடத்துவது கூடக் கஷ்டமாக இருக்கும் என்றும் அபிப்பிராயப் பட்டார். நான் விட்டு விட்டேன், அருண். அவர்களும் கேஸ் எதுவும் இல்லாமல் என்னை ரிலீஸ் செய்து விட்டார்கள்."

அவன் கண்கள் தன்னைக் குற்றம் சாட்டுவதைக் கண்ட அம்பலவாணன் தன் பார்வையைக் குற்ற உணர்வுடன் அவன் முகத்தில் இருந்து விலக்கினார். அவர் கண்கள் அறை சுவரில் இருந்த "சத்யமேவ ஜெயதே"வில் ஒரு கணம் தங்கியது. கரகரத்த குரலில் அவர் தொடர்ந்தார்.

"எனக்கு மூன்று பெண்கள், நோயாளி அம்மா, சதா அழுது புலம்பும் மனைவி இருந்த சூழ்நிலை அது, அருண். பணத்தோடும் அதிகாரத்தோடும் போராடித் தாக்குப் பிடிக்கும் நிலையில் நானிருக்கவில்லை. எனக்கு ஆதரவாய் யாரும் அன்று இருக்கவில்லை. அன்றிலிருந்து மனதில் ஒரு நெருஞ்சி முள்!"

அருண் மனம் இளகியது. வறுமை எத்தனை விஷயங்களை வாழ்க்கையில் தீர்மானிக்கிறது என்பதை அவனால் உணர முடிந்தது.

"அப்படியென்ன ரகசியத்தை நீங்கள் கண்டு பிடித்து விடுவீர்கள் என்று அவர்கள் உங்களைத் தடுத்து நிறுத்தினார்கள்?" என்று யோசித்தபடி அருண் கேட்டான்.

"தெரியலை அருண்! ஒரு வேளை அன்று போனில் பேசியவர் நேரில் வந்திருந்தால் எல்லாமே தெரிந்திருக்கலாம். ஆனால் அவர் வருவதற்கு முன்னாலேயே எல்லாம் நின்று போய் விட்டது. ஒரு வேளை அவர் வந்தாரா என்று கூட எனக்குத் தெரியாது. வந்து என் கைது விஷயம் தெரிந்து பின் வாங்கிப் போயிருக்கலாம். எனக்குத் தெரியலை. ஆனால் போனில் பேசிய போது அவர் சேதுபதிக்கு இணையாய் அந்த நாவலுக்கும் முக்கியத்துவம் கொடுத்த மாதிரி எனக்குப் பட்டது. அந்த நாவலும் சேதுபதியும் அதன் பின் ஒரு புதிராகவே தங்கி விட்டனர், அருண்.

ஏழு வருஷத்துக்கு முன் நான் இந்த 'உண்மை' பத்திரிக்கை ஆரம்பித்த நாளில் இருந்து என் மனதில் ஒரே ஒரு ஆசை. அன்றைக்குத் தோற்ற விஷயத்தில் ஒரு நாள் ஜெயிக்கணும். அந்த சேதுபதி ஃபைல் மறுபடி திறக்கணும். அந்த உண்மைகள் வெளி வரணும்."

"சார், 25 வருஷங்களில் எத்தனையோ நடந்திருக்கலாம். அந்த சேதுபதியும் உண்மைகள் தெரிஞ்சவங்க பலரும் இறந்து போயிருக்கலாம்....."

"நீ சொல்வது உண்மை அருண். என்னை மறைமுகமாய் மிரட்டிய மந்திரி கூட ஐந்து வருஷம் முன்னால் இறந்துட்டார். சேதுபதி உட்பட பலரும் இன்றைக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த நாவல் சாகவில்லை அருண். அது பற்றித் தெரிந்த சிலராவது இன்னும் எங்கோ ஒரு மூலையில் இருக்கலாம். நீ கண்டு பிடித்து நம் பத்திரிக்கையில் எல்லா உண்மைகளும் வெளிவர முயற்சி செய்வாயா அருண்?"

அருண் உறுதியாகச் சொன்னான். "இன்னும் சிறிது நாளில் எல்லா உண்மைகளும் அடங்கிய ஃபைல் உங்கள் மேசையில் இருக்கும், சார்."

அம்பலவாணன் முகம் பிரகாசித்தது. இவன் போல் பத்து பேர் உடன் இருந்தால் இந்த உலகையே ஜெயிக்கலாம் என்று தோன்றியது.

"நீ முதலில் இந்த நாவலைப் படி. இதில் உனக்கு நிறைய தகவல்கள் கிடைக்கலாம்," என்று சொல்லி அந்த நாவலை அவன் கையில் கொடுத்தவர் அவன் அறையை விட்டு வெளியேறிய பின்னும் அந்தக் கதவையே பார்த்தபடி இருந்தார். லேசாக மனம் உறுத்தியது. அவனிடம் அவர் தனக்கு பின்பு தெரிய வந்த ஒரு சில விஷயங்களை சொல்லாமல் விட்டு விட்டார். சொல்கின்ற துணிவு அவரிடம் இருக்கவில்லை. ஒரு வேளை அவன் மறுத்து விடுவானோ என்ற பயம் மனதின் ஒரு மூலையில் இருந்து பயமுறுத்தியது தான் காரணம். ஒரு காலத்தில் இருந்த அந்த நேர்மை இன்று தன்னிடம் இல்லை என்று மனசாட்சி குற்றம் சாட்டியது. அந்த அறையில் கடிகார சத்தம் மட்டும் கேட்க நிறைய நேரம் அவர் அமைதியாக அமர்ந்திருந்தார்.

## (2)

Things that are lovely
Can tear my heart in two..
Moonlight on still pools,
And You – Dorothy Dow

"என்ன கலகலப்பையே காணோம்?"

"என் வேலையை ராஜினாமா செய்துட்டேன் அருண்"

"ஏன் காவ்யா?"

சிறிது நேரம் அவள் பேசவில்லை.

அலைகளில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை ரசித்து விட்டு சொன்னாள். "எங்க மேனேஜரை செருப்பாலேயே அடிச்சுட்டேன்"

"என்ன ஆச்சு?"

"இவ்வளவு நாள் ஜாடை மாடையாய் பல்லிளித்துக் கொண்டிருந்தான். பார்த்தும் பார்க்காதது மாதிரி இருந்துட்டேன். இன்னைக்கு கையைப் பிடிச்சுட்டான் ராஸ்கல். கத்தி கலாட்டா செய்து செருப்பால் ஆரத்தி எடுத்துட்டேன். இனிமேல் வேலைக்கு வர்ற பெண் எல்லாம் விபசாரத்துக்கு வர்றவளல்லன்னு புரிஞ்சுக்குவான்."

"ஆனாலும் செருப்பால்...."

"அருண்! எனக்கு பாதி தான் அவன் மேல் கோபம். மீதி எல்லாம் இந்த ஆண் வர்க்கத்தின் மீதே கோபம். பட்டினிக்குப் பரிகாரம் தேட நாங்கள் வேலைக்குப் போறோம். ஆபிஸ் போய் சேரும் முன் தெருவில் சிலரது பார்வைக் கற்பழிப்புகள், அனாவசிய அசிங்கமான வர்ணனைகள், பஸ்ஸில் உரசல்கள், சிலரது பின் தொடரல்கள். இத்தனையும் என் மனதில் தினம் தினம் நெருப்பை பத்த வைக்குது தெரியுமா? பெண்ணைப் போகப் பொருளாகவே இந்த ஆண் வர்க்கம் நினைச்சுடுது"

"சும்மா ஒட்டு மொத்தமா ஆண்களையே தப்பு சொல்லாதே காவ்யா. எத்தனை பெண்கள் ஒழுங்கா டிரஸ் செய்து ஒழுங்கா நடந்துக்கறாங்க சொல் பார்க்கலாம். நீ சொன்ன அசிங்கமான, அனாவசிய கமெண்ட்ஸ் அடிக்கும் எத்தனை பெண்களை நானும் பார்த்திருக்கேன் தெரியுமா? ஆண் வர்க்கம், பெண் வர்க்கம்னு பிரிக்காதே. இது பலவீனங்கள் நிறைஞ்ச மனித வர்க்கம் அவ்வளவு தான். உனக்காக இந்த கடற்கரையில் இன்னைக்கு நான் காத்திருக்கும் போது கொஞ்சம் தள்ளி அந்தப் படகுப் பக்கம் உட்கார்ந்திருக்கிற பெண் என்னைப் பார்த்து கண் அடிக்கிறாள். அவளும் உன் பெண் வர்க்கம் தான். இதுக்கு என்ன சொல்றே?"

"சரி சரி...அந்த ஆண் வர்க்கம் என்கிற வார்த்தையை நான் வாபஸ் வாங்கிக்கிறேன்"

இருவரும் சிறிது நேரம் மௌனமானார்கள். எப்போதுமே அவர்களுக்குள் வாக்குவாதம் நடக்காமல் இருந்ததில்லை. அவர்களுக்குள் இனிமையான காதல் வார்த்தைகள் பேசிக் கொண்டது மிகவும் குறைவு. இதயத்தின் ஆழத்திலிருந்து உணர்ந்ததை தெரிவித்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கவில்லை. எத்தனையோ பொது விஷயங்கள் பற்றியும், மற்றவர்கள் பற்றியும் தான் வாக்குவாதம் நடக்கும். அதில் மற்றவர் சொல்வது சரியென்று பட்டால் அதை 'ஈகோ' இல்லாமல் ஒத்துக் கொள்ளும் அபூர்வ குணம் இருவரிடமும் இருந்தது.

காவ்யா பார்க்க சுமாராகத் தான் இருப்பாள். இரண்டு பெண்களும், ஒரு கடைகுட்டிப் பையனும், குடிகாரத் தகப்பனும் நிறைந்த ஒரு ஏழைக் குடும்பத்தின் மூத்த பெண் அவள். டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டு, தானும் படித்து, குடும்பத்தையும் கவனிக்க வேண்டி இருந்த நிலையில் தான் கல்லூரியில் மேல் வகுப்பில் இருந்த அவனை அவள் சந்தித்தாள்.

அழகிலும், அந்தஸ்திலும் அவன் எட்டாத உயரத்தில் இருந்தான். அவனைப் பல பெண்கள் கல்லூரியில் சுற்றி வந்தபடி இருப்பார்கள். சில பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி என போட்டிகளில் இருவரும் கலந்து கொண்ட போது தான் அவளது பேச்சாலும், நேர்மையாலும், அறிவாலும், கண்ணியத்தாலும் அவன் கவரப் பட்டான்.

சில காலம் தொடர்ந்த நட்பு காதலாய் மாறி ஒரு நாள் அவன் வெளிப்படுத்திய போது அவள் அவன் கிண்டல் செய்கிறான் என்று தான் எண்ணினாள். அவனால் அவள் நிறையவே ஈர்க்கப் பட்டாலும் எந்த விதத்திலும் தான் அவனுக்கு இணையானவள் அல்ல என்று நிஜமாகவே அவள் நம்பினாள். அவள் தன் எண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவித்த போது "இதென்ன பைத்தியக்காரத்தனமான கம்பேரிசன், காவ்யா! உன் கூட இருக்கும் போது நான் நானாய் இருக்க முடியுது. நான் எதையெல்லாம் உயர்வாய் நினைக்கிறேனோ அதெல்லாம் உன் கிட்ட இருக்கு. பின்னே கணக்குப் பார்த்து வர்றது காதலாய் இருக்க முடியும்னு நீ நினைக்கிறியா?" என்று கேட்டான்.

ஆத்மார்த்தமாய் காதலித்தாலும் அவன் கட்டுப்பாடோடு சற்று இடைவெளி விட்டே அவளுடன் பழகினான். காதலனுடன் பைக்கில் போகும் போது அடிக்கடி போடும் பிரேக்குகள் பற்றி அவளது தோழிகள் அவளிடம் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவனுடன் பைக்கில் போகும் போது அந்த அனாவசிய பிரேக்குகள் இருக்கவில்லை. மெதுவாகவே ஓட்டுவான். ஒரு நாள் குறும்பாகக் கேட்டாள்.

"அருண் நீ ஏன் அதிகம் பிரேக் போடறதில்லை?"

தன் அழகான புன்னகையோடு புருவங்களை உயர்த்தியபடி சொன்னான். "நான் என் மனசில் அடிக்கடி பிரேக் போட்டுக்கறேன் காவ்யா".

அது தான் அவனது தனித்தன்மை. 'இப்படியொரு மனிதன் என்னைக் காதலிக்கிறானே' என்று அவள் பெருமைப் படாத நாளேயில்லை.

அந்த அலைகள் சத்தத்தில் மௌனமாக இருவரும் சிறிது நேரம் அமர்ந்திருந்தார்கள். மௌனத்தை அவன் தான் கலைத்தான்.

"காவ்யா! நீ 'நீ நான் தாமிரபரணி' நாவலைப் படிச்சிருக்கியா?"

"படிச்சிருக்கேன். நீ... ?"

"இல்லை. நீ இது நாள் வரை அந்த நாவல் பற்றி பேசினதேயில்லையே காவ்யா"

"நீ அதைப் பற்றி கேட்டதேயில்லையே அருண்"

அவன் யோசித்தான். வாழ்க்கையில் பல விஷயங்கள் பற்றி நமக்குத் தெரியாமல் இருப்பதற்குக் காரணம் நாம் அவற்றைப் பற்றிக் கேட்காமல் இருப்பது தானோ?

"நீ அதை எப்படி மிஸ் செஞ்சே அருண்? அதைப் படிச்சதிலிருந்து நாமும் இப்படியொரு மனிதனைக் காதலிக்க மாட்டோமான்னு நிறைய நாளாய் தோணியிருக்கு. ஏறத்தாழ அதே மாதிரி குணாதிசயங்கள் இருக்கிற நீ எனக்குக் கிடைச்சே. சரி எப்படியாவது மேனேஜ் செய்து கொள்ளலாம்னு தான் நான் உன்னைக் காதலிக்க ஆரம்பிச்சேன்" என்று கிண்டலாகச் சொன்னாள்.

அவன் அவள் கிண்டலைக் கண்டு கொள்ளாமல், "நல்ல கதைன்னு கேள்விப் பட்டிருக்கேன். ஆனால் எதனாலோ அதைப் படிக்கப் போகலை. காதல் கதைங்கிற பேரில் நிறைய குப்பைகள் பிரபலமானது கூட ஒரு காரணமா இருக்கலாம். நான் ஒரு சில பிரபல கதைகள் படித்து வாழ்க்கை வெறுத்திருக்கிறேன் தெரியுமா" என்றான்.

"சேச்சே. இது நிஜமாவே ஒரு உன்னதமான காதல் கதை அருண். அத்தனை நல்ல காதல் கதை எழுதிய ஒரு மனிதர் அதோடு தலைமறைவானது உண்மையில் ஒரு துரதிர்ஷ்டம் தான்"

"நீ நினைக்கிற மாதிரி அது வெறும் காதல் கதை மட்டும் இல்ல காவ்யா. சேதுபதி தலைமறைவானது மட்டுமில்ல. அது கூட நிறையவே மர்மம் இருக்கு. சேதுபதி பற்றித் துப்பு துலக்க ஆரம்பித்தவர்களைத் தடுத்து நிறுத்த சிலர் தீவிரமாக இருக்கும் அளவுக்கு அதில் என்னவோ இருக்கு.... "

அம்பலவாணன் தன்னிடம் சொன்னதை அவளிடம் அருண் விவரிக்க ஆரம்பித்தான்.....

## (3)

Power said to the world, "You are mine"
The world kept it prisoner on her throne.

Love said to the world, "I am thine"
The World gave it the freedom of her house.

– Rabindranath Tagore

"ஹலோ"

"ஐயா, நான் சபாபதி பேசறேன்"

"எந்த சபாபதி?"

"உண்மை பத்திரிக்கையில் வேலை பார்க்கும் சபாபதி"

"என்ன விஷயம்?"

"அந்த சேதுபதி ஃபைலை மறுபடி திறக்கப் போகிறார்கள்"

"எந்த சேதுபதி?"

"நீ நான் தாமிரபரணி எழுதிய சேதுபதி"

அந்தப் பக்கம் திடீரென்று உஷாராகியது. "விவரமாய் சொல்லுடா"

"அம்பலவாணனும் அருணும் நிறைய நேரம் தனியாய் பேசினாங்க. வெளியே வந்தவுடன் சேதுபதி பற்றி எல்லாப் பத்திரிக்கைகளிலும் வெளி வந்த செய்திகள் க்ளிப்பிங்ஸை எல்லாம் கொண்டு வரச் சொல்லி அருண் மணிக்கணக்கில் உட்கார்ந்து படிச்சான்....."

"யாருடா அருண்?"

"ராஜராஜன் மகன்"

அந்தப் பக்கம் யோசித்தது. நீண்ட மௌனத்துக்குப் பிறகு போன் வைக்கப்பட்டது. ஐம்பது வயதைத் தாண்டிய தன்னை அந்தப் பக்கம் 'டா' போட்டுப் பேசியதை சபாபதியால் ரசிக்க முடியாவிட்டாலும் சுயமரியாதையை என்றோ இழந்து விட்டதால் கிடைக்கப் போகிற இனாமை மட்டுமே நினைத்து அவரால் திருப்தி அடைய முடிந்தது.

*****

அருண் அந்த நாவலைப் படித்து முடித்து விட்டு கீழே வைத்த போது அதிகாலை நான்கு மணி. மனம் மிக லேசாக இருந்தது. நேசம், காதல், மானுடம் எல்லாம் மிகவும் பவித்ரமாக அந்தக் கணம் அவன் மனதிற்குப் பட்டது. இப்படி ஒருவனும், ஒருத்தியும் இருக்க முடியுமா, நிஜ வாழ்வில் இதெல்லாம் சாத்தியமா என்ற கேள்வி மனத்¢ல் எழுந்தது.

கார் ஹாரன் சத்தம் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த போது அப்பா ராஜராஜனின் கார் வெளியே கிளம்பிக் கொண்டு இருந்ததைப் பார்த்தான். நேரம், காலம் பார்க்காமல் வியாபாரம், பணம் என்றலையும் அப்பாவுக்கு இந்த நேசம், பாசம், காதல் எல்லாம் புரியுமா என்று யோசித்துப் பார்த்தான்.

மனம் வலித்தது. சிறு வயதில் பாசத்திற்காக ஏங்கிய ஏக்கம் எல்லாம் இப்போது இல்லை. அப்பா வியாபாரத்திலும், அம்மா லேடீஸ் கிளப்பிலும் தங்கள் காலத்தைக் கழிக்க, அந்தப் பெரிய பங்களாவில் எதையாவது வெறித்துப் பார்த்தபடி அருண் உட்கார்ந்திருப்பான்.

காலம் போகப் போக அந்த வெறுமை கனக்க ஆரம்பித்தது. ஒரு நாள் கோபம் விசுவரூபம் எடுத்தது. சாப்பிடாமல் சத்தியாகிரகம் செய்தான். அம்மா மாதுரி இரவு ஒன்பது மணிக்கு லேடீஸ் கிளப்பில் இருந்து வந்தவள் விஷயத்தை வேலைக்காரர்கள் மூலம் கேள்விப்பட்டாள்

"அருண் ஏண்டா சாப்பிடலை?"

"எனக்கு செத்துப் போகணும்"

மாதுரி அதிர்ந்து போனாள்.

"உனக்கு லேடீஸ் கிளப் முக்கியம். அப்பாவுக்கு பிசினஸ் முக்கியம். நான் யாருக்கும் முக்கியமில்லை. எனக்கு இப்படி வாழப் பிடிக்கலை" அவன் அழ ஆரம்பித்தான்.

அம்மா அழும் மகனையே நிறைய நேரம் பார்த்தாள். ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தவள் நடைமுறை நிஜத்துக்கு வரும் முன் குழம்புவது போலக் குழம்பினாள். தெளிவடைந்த போது அவள் கண்களிலும் கண்ணீர் நிரம்பி இருந்தது.

"அம்மாக்கு நீ முக்கியம்டா, நீ மட்டுமே முக்கியம்" என்று அவன் தலையைக் கோதியபடி சொன்னாள்.

"நிஜம்....மா?" அவன் சந்தேகத்தோடு கேட்டான். கண்ணீர் வடிய அம்மா தலையாட்டினாள்.

அன்று அம்மாவே அவனுக்குப் பரிமாறினாள். அன்றிலிருந்து மாதுரி வாழ்வில் மகனே முதல் இடம் வகிக்க ஆரம்பித்தான். மற்ற எல்லாமே அவனுக்குப் பின் தான் என்றாகி விட்டது. எத்தனை நேரமானாலும் அவனுக்காக அவள் காத்திருந்து பரிமாறினாள். அவனுடன் இருந்து பேசினாள். அவனுடன் ஷாப்பிங் போனாள். அவனுக்குத் தேவைப் பட்ட நேரத்தில் எல்லாம் கூட இருந்தாள்.

அந்த மாறுதல் அருணையே ஆச்சரியப்பட வைத்தது. தன்னுடைய வார்த்தை அவளுள் ஆழமாய் எங்கோ பாதித்து விட்டது என்று உணர்ந்தாலும் அவள் அந்தக் கணம் என்ன நினைத்தாள் என்பதை அவனால் உணர முடியவில்லை. அவளும் சொல்லவில்லை. காரணம் அவள் என்றுமே மனம் விட்டுப் பேசுபவளாக இருந்ததில்லை.

அப்பா மட்டும் தூரத்திலேயே இருந்தார். ஒரு முறை பார்த்தால் மறுமுறை பார்க்க வைக்கிற அழகு, வயது பல ஆனாலும் அவரை விட்டு அகலவில்லை. யாரோ ஒருவர் அவரை 'கிரேக்க சிற்பம்' என்று வர்ணித்த நினைவு அருணிற்கு வந்தது.

எவ்வளவு உண்மை அது! அவர் உணர்ச்சியே இல்லாத சிற்பம் தான். மகனிடம் வெறுப்பாகவோ, கோபமாகவோ அவர் ஒரு முறை கூடப் பேசியதில்லை. அதே போல அன்புடனும் பாசத்துடனும் கூட அவர் பேசியதில்லை. அவனை ஒரு முறை கூட அவர் அடித்ததில்லை. அவர் தன்னைக் கொஞ்சியதாகவும் அவனுக்கு நினைவில்லை.

அது தான் அவனை வேதனைப்பட வைத்தது. வெறுப்பையும், கோபத்தையும் கூட அவனால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அவனால் அந்த வெறுப்பு விருப்பு இல்லாத தூரத்தை ஜீரணிக்க முடியவில்லை. மகனிடம் மட்டுமல்ல, மனைவியிடம் கூட அவர் அப்படித்தான் இருந்தார். அவர் உணர்ச்சியுள்ள மனிதனாக இருந்திருக்கிறார் என்பதற்கு அவனுக்குத் தன் பிறப்பைத் தவிர வேறு ஒரு ஆதாரத்தையும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவர் சாப்பிடுவது கூட தனதறையில் தான்.

அருண் சிறு வயதில் அம்மாவிடம் கேட்டு இருக்கிறான். "அப்பா ஏன் நம் கூட சேர்ந்து சாப்பிடறதில்லை?".

அம்மா எங்கோ சூனியத்தைப் பார்த்தபடி சொன்னாள். "தெரியலை"

அறையை விட்டு அவர் வெளியே வருகிறார் என்றால் அது வீட்டை விட்டு வெளியே போவதற்காகத் தான். வியாபாரம் மட்டுமே உயிர்நாடியாகப் போய் விட்ட அவர் வாழ்வில் வேறு எதற்கும் இடம் இருப்பதாகத் தெரியவில்லை. தேவை இல்லாமல் ஒரு வார்த்தை கூட அவரிடமிருந்து கேட்பது அபூர்வம். அம்மா இதை மௌனமாக ஏற்றுக் கொண்டு வாழப் பழகி விட்டாள். ஆனால் வயதாக ஆக அருணிற்கு இது தாங்க முடியாத ஒன்றாகி விட்டது.

படித்து முடித்தவுடன் அப்பா தன்னையும் பிசினஸ் செய்யக் கூப்பிடுவார், மறுக்க வேண்டும் என்று அருண் முன்பே முடிவு செய்து கொண்டான். பத்திரிக்கையில் வேலைக்குப் போகும் முன் மரியாதைக்காக அவரிடம் தெரிவிக்கவும் செய்தான். இந்த விஷயத்திலாவது அவரிடம் எதிர்ப்பு இருக்கும், கண்டிப்பாய் சண்டை போட வேண்டும் என்று தயாராக இருந்தான். தகராறு என்ற ஒன்றாவது தங்களுக்கிடையே இருக்கட்டும் என்று நினைத்தான்.

ஆனால் அந்தக் கோடீசுவரர் தன் ஒரே மகன் வேலைக்குப் போவதைக் கூட ஆட்சேபிக்காமல் சொன்னார். "உன் விருப்பம் போல் செய்"

வந்த ஆத்திரத்தில் அந்த பங்களாவை விட்டு வெளியேறி தனிக்குடித்தனம் போகத் தீர்மானித்து அம்மாவையும் தன்னோடு வர அழைத்தான். மாதுரி மறுத்து விட்டாள்.

"எனக்கு அவர் கூட இருக்கிறது தான் கௌரவம், அருண்"

"ஒரு வார்த்தை கூட அபூர்வமாய்த் தான் பேசற மனிதரோட இருக்கிறது கௌரவமா?"

"உனக்குப் புரியாதுடா"

"சரி.. நீ அவர் கூட கௌரவமாய் இரு. நான் தனியாய் போறேன்"

அம்மா அழ ஆரம்பித்தாள். அவன் தீர்மானம் அவள் அழுகையில் கரைந்தது. முதல் மாத சம்பளம் வந்ததும் ஒரு தொகையை அப்பாவிடம் நீட்டினான்.

"என்னது?" என்று கேட்டார்.

"எனக்காகும் செலவை மாசா மாசம் இனி நானே தர்றேன்"

"சரி".

பணத்தை வாங்கித் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு ராஜராஜன் போன போது அவரிடம் தான் தோற்றுப் போனதை அருண் உணர்ந்தான்.

பழைய நினைவுகளிலிருந்து அருண் மீண்ட போது அந்தப் புத்தகத்தை அப்பாவிடம் கொடுத்துக் கட்டாயமாய் படிக்கச் சொல்ல வேண்டும் என்று நினைத்தான். அப்போதாவது அவருக்கு எதாவது புரிகிறதா என்று பார்க்க வேண்டும் எனத் தோன்றியது. எங்கேயோ சேவல் கூவியது.

## (4)

**விதியின் அங்கமே மனிதனும்.**
**இந்த வகையில் மனிதன்**
**விதியை விதியால் எதிர்க்கலாம். – எமர்சன்**

"யாரோ ஒரு ஆள் ரொம்பவும் முரட்டுத்தனமாய் பேசறான். உங்க பேரை ஏக வசனத்தில் சொல்லி உடனடியாகப் பேசியாகணும்னு சொல்றான்" என்று உதவியாளர் வந்து சொன்ன போது ரங்காச்சாரிக்கு யோசிக்க சிறிது நேரம் தேவைப்பட்டது.

எழுபத்தைந்து வயதைக் கடந்த அவரை ஒருமையில் அழைக்கக் கூடிய நெருங்கிய பெரியவர்கள் எல்லாம் வைகுண்டம் போய் சேர்ந்து விட்டார்கள். அவருக்குத் தெரிந்து வயதில் சிறியவரானாலும் எப்பேர்பட்டவரையும் ஒருமையில் என்றுமே அழைக்கக்கூடிய அகங்காரி ஒருவர் மட்டுமே உண்டு. ஆனால் ஒரே நகரத்தில் இருந்தாலும் கிட்டத் தட்ட 25 வருடங்களாக தன்னைத் தொடர்பு கொள்ளாத அந்த மனிதர் திடீர் என்று தன்னை அழைக்கக் காரணம் இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை.

ரிசீவரை எடுத்தார். "ஹலோ! சொல்லு"

"எப்படிய்யா என்னைக் கண்டு பிடிச்சே?"

"அந்தக் கடவுளே நினைத்தாலும் உன்னை மாதிரி இன்னொரு ஆளை சிருஷ்டி செய்திருக்க முடியாதுங்கிற நம்பிக்கைதான்"

"உன் கிட்டே எனக்குப் பிடிச்சதே உன் துணிச்சல்தான்யா. என் கிட்டே கூழைக்கும்பிடு போடாத ஒரு மூணு நாலு பேரில் நீயும் ஒருத்தன்யா."

"சந்தோஷம். என்ன விஷயம் சொல்லு?"

"அவன் வந்தானாய்யா?"

"யாரு?"

"ராஜராஜன் மகன்"

"அவன் எதுக்கு இங்கே வர்றான்?"

"அந்த நாசமாய்ப் போன சேதுபதியைப் பற்றி விசாரிக்கணும்னா எவனுமே உன்கிட்டதானய்யா வந்தாகணும்? அந்த சேதுபதி நாயிற்கு உன்னை விட்டா நாதி ஏதுய்யா?"

ரங்காச்சாரி சிலையாய் சமைந்தார்.

"யோவ், இருக்கியா போய் சேர்ந்துட்டியா?"

"புதிர் போடாமல் விளக்கமா சொல்லு"

"எனக்கு கண்ணும் காதும் இந்த உலகத்தில் ஒவ்வொரு மூலையிலும் இருக்குய்யா. அம்பலவாணன் அந்த பழைய குப்பையைக் கிளற ஆரம்பிச்சுட்டான்யா. இருபத்தஞ்சு வருஷம் கழிச்சு அருண்ங்கிற கைத்தடி பிடிச்சு நிமிர்ந்திருக்கிறான்யா........."

தொடர்ந்து அந்தப்பக்கத்தில் இருந்து சொன்னதைக் கேட்கக் கேட்க ரங்காச்சாரிக்கு இதயம் கனக்க ஆரம்பித்தது. இறுதியில் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் பேசினார்.

"அந்த சேதுபதி பிரபலமாய் இருந்த போதே துப்பறியக் கிளம்பிய பல பேரை அப்படியே பின் வாங்க வைக்க உன்னைத் தவிர வேறு யாருக்கும் முடிஞ்சிருக்காது. நீ சொன்ன கண்ணும் காதும் எங்கெங்கிருந்தோ எப்படி வேலை செய்ததுன்னு நானும் பார்த்திருக்கேன். அன்றைக்கே உன்னால் முடிந்தது இன்றைக்கு உன்னால் முடியாதா என்ன?"

அந்த நேரமாகப் பார்த்து உதவியாளர் ஒரு விசிட்டிங் கார்டை அவர் மேசையில் வைத்து விட்டுப் போனார். அருணின் விசிட்டிங் கார்டு. ரிசீவர் வாயை மூடி "வரச் சொல்" என்று சொல்லியவர் போனில் "சரி போனை வை. நீ சொன்ன மாதிரியே அருண் வந்திருக்கான்" என்று சொன்னார்.

"அவன் கிட்டே, இந்தக் கேஸை நிறைய தோண்ட வேண்டாம்னு சொல்லு. தோண்டிட்டே போனா கடைசியில் எல்லாமே அவன் கிட்ட தான் வந்து முடியும்னு சொல்லி வை" கடைசியாகக் கேட்ட வார்த்தைகளில் இருந்த உண்மை சுளீர் என்று ரங்காச்சாரிக்கு உறைத்தது.

உள்ளே நுழைந்த அருண் அவரை மிகுந்த மரியாதையுடன் வணங்கினான். இலக்கிய உலகில் அவருக்கு இன்றும் பெரு மதிப்பு உண்டு. ஒரு காலத்தில் கல்லூரி பேராசிரியராக இருந்தவர், இன்று தரமான புத்தகங்களை மட்டும் லாப நஷ்டக் கணக்கு பார்க்காமல் பிரசுரிக்கும் ஒரே பிரசுரகர்த்தா. பேரறிஞர். இலக்கியத்திலும் தத்துவத்திலும் முத்திரை பதித்தவர். சிறந்த பேச்சாளர் எனப்பல சிறப்புகள் அவருக்கு உண்டு. பல முறை அவரை முன்பு சந்தித்திருந்தாலும் அவரது ஆபிசிற்கு அவன் வருவது அதுவே முதல் முறை.

அமரச் சொன்னார். அமர்ந்த போது தான் அவர் மேசை மீது இருந்த அந்தப் புகைப் படத்தை அவன் பார்த்தான். ஒரு நதிக்கரையில் ஒரு மாலை வேளையில் ஒருவன் அமர்ந்திருந்த புகைப்படம். அதில் அவனது உருவம் கருமையாகத் தெரிந்தது. நதியில் சூரியப் பிரகாசமும், அமர்ந்திருந்தவன் நிழல் உருவமும் ஏதோ ஒரு கவிதையாக அந்தப் புகைப் படத்தில் பதிந்திருந்தன.

ஒரு நிமிடம் ரசித்தவன் திடீரென்று அவரிடம் சொன்னான். "நேற்று தான் நீங்கள் பிரசுரம் செய்த 'நீ நான் தாமிரபரணி'' படிச்சேன். இந்த ஃபோட்டோ பார்க்கும் போது அந்தக் கதையில் வரும் காட்சி போலத் தோணுது"

இதைச் சிறிதும் எதிர்பார்க்காத ரங்காச்சாரி எச்சிலை மென்று விழுங்கினார். ராஜராஜன் மகனிடம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் போலிருக்கிறது. புன்னகையோடு சமாளித்துக் கொண்டு சொன்னார்.

"ஒரு நல்ல நாவலின் தாக்கம் அது அருண். படிச்சு முடிச்ச சில நாளுக்கெல்லாம் பார்ப்பதையெல்லாம் சம்பந்தப் படுத்தத் தோணும்"

அவன் லேசாக சிரித்தான். அவர் அதைச் சொல்வதற்கு முன்னால் திகைத்த அந்த ஒரு கணம் ஏதோ சொல்வது போல் இருந்தது. ஆனால் அதை வெளிக்காட்டாமல் சொன்னான். "இருக்கலாம். உண்மையில் நான் வந்தது அந்த நாவலாசிரியர் சேதுபதி பற்றி உங்க கிட்ட கேட்கத்தான்".

"அவரைப் பற்றி சொல்றதுக்குப் பெரியசாய் ஒன்றும் இல்லை அருண். ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. நெருங்கிய சொந்தம் என்று யாரும் இருந்ததாகத் தெரியலை. அவர் கல்லூரியில் படிச்சுட்டிருந்த போதே பெற்றோர் இறந்துட்டாங்க. அவர் கல்யாணம் கூட செய்துக்கலை. நல்ல எழுத்தாளர். இலக்கிய உலகின் பெரிய துரதிர்ஷ்டம் அவர் ஒரே ஒரு நல்ல நாவலோடு காணாமல் போனது. கடைசி கடைசியில் அவர் மனநிலை சரியில்லாதவர் போல நடந்துட்டார். அவர் திடீர்னு தலைமறைவானது கூட அதனால்தான்னு நாங்க நினைச்சோம்"

அது திடீரென்று கேட்ட கேள்விக்கு வந்த பதிலாய் அருணுக்குத் தோன்றவில்லை. எதிர்பார்த்த கேள்விக்கு ஒத்திகை பார்த்திருந்த பதிலாய் அவனுக்குத் தோன்றியது. மேலும் சேதுபதி பற்றி ஏன் கேட்கிறாய் என்று இயல்பாகக் கேட்க வேண்டிய கேள்வியைக் கூட அவர் கேட்கவில்லை.

"அவர் உங்க மாணவர். அவர் படிச்சப்ப அந்தக் கல்லூரியில் நீங்க பேராசிரியராக இருந்திருக்கீங்க. அவர் பின்னால் எழுதிய ஒரு நாவலைப் பிரசுரம் செய்திருக்கீங்க. அதனால் அவர் பத்தி உங்களுக்கு அதிகம் தெரிஞ்ச்¢ருக்கும்னு கேட்க வந்தேன்"

"சேதுபதி மட்டுமல்ல, உன் அப்பா ராஜராஜனும், அம்மா மாதுரியும் கூட அந்தக் கல்லூரியில் என் கிட்ட படிச்சவங்கதான். உன் அப்பா ராஜராஜனிடம் ஒரு அப்பாயின்மெண்டுக்காக நான் கிட்டத்தட்ட ஆறு மாதமாய் முயற்சி செய்யறேன். கிடைக்கலை. உன் அம்மாவை நான் பார்ப்பதே அபூர்வமாயிடுச்சு. ஏன் சொல்கிறேன்னா ஒரு ஆசிரியனும் மாணவனும் கல்லூரிக்கு வெளியே அந்நியமாயிடறாங்க. அது தான் யதார்த்தம். சேதுபதியின் நாவலைப் பிரசுரம் செய்திருக்கிறேன்னா அவரது எழுத்துத் திறமை பத்தி வேணும்னா சொல்லலாம். ஆனால் அது அந்த நாவல் படிக்கிறப்ப வாசகனுக்கே தெரிஞ்சுடும்"

"அவருக்கு நெருங்கிய சொந்தம் யாரும் இல்லைன்னீங்க. நெருங்கிய நண்பர்கள்...?"

சிறிது நேரம் அவரிடமிருந்து பதில் வரவில்லை.

கடைசியாக "தெரியலை, அருண்" என்றார்.

"அவருக்குக் கடைசியாய் ஒரு ஆஸ்பத்திரியில் இருந்து போன் வந்ததாய் கேள்விப்பட்டேன். அந்த சமயம் அவருக்கு வேண்டிய யாராவது ஆஸ்பத்திரியில் இருந்தாங்களா?"

"தெரியலை, அருண்"

சிறிது நேரம் தொடர்ந்த பேச்சில் அவனுக்குத் திரும்பத் திரும்ப அதே பதில்தான் கிடைத்தது. அவரிடம் இருந்து விடை பெறும் முன் அவரது மேசை மீது இருந்த புகைப்படம் பார்த்துக் கேட்டான்.

"இந்தப் படத்தில் இருப்பது யார் சார்?"

அவர் முகம் வெளிறிப் போனது. ஒரு வித சோகம் முகத்தில் படர சொன்னார். "எனக்கு ரொம்பவே நெருக்கமானவன். அவனை பல வருஷங்களுக்கு முன்னால இழந்துட்டேன். ஆனாலும் அவன் ஞாபகார்த்தமாய் இது எங்கிட்ட இருக்கு"

அவன் போன பின்பு அந்தப் புகைப்படத்தைக் கண்கலங்கப் பார்த்தார். சில நிமிடங்கள் கழித்து அவர் எண்ணங்கள் அருண் பக்கம் திரும்பின. சற்று முன் போனில் கடைசியாகக் கேட்டது காதில் இன்னமும் ஒலித்தது. இது விதியின் விளையாட்டாகவே அவருக்குப் பட்டது. இத்தனை வருடங்கள் கழித்து அருண் துப்பறியக் கிளம்பியுள்ள மர்மத்தில் அவனும் ஒரு அங்கம் என்பதை அவன் அறிவானா?

## (5)

"My task which I am trying to achieve is,
by the power of the written word,
To make you hear, to make you feel–
it is, before all, to make you see. – Joseph Conrad

"என் மனதில் அந்த ஃபோட்டோ அப்படியே பதிந்திடுச்சு, காவ்யா. ஒரு நல்ல காமிராக் கவிதை அது. ஒரு நிமிஷம் அதில் அந்த நாவலின் ஹீரோவையே பார்த்த மாதிரி ஒரு உணர்வு எனக்கு வந்தது"

"அவர் சொன்ன மாதிரி ஒரு நல்ல நாவலின் தாக்கமாய்க் கூட இருக்கலாம். படித்து முடித்த ஒரு நாளில் அந்தக் காமரா கவிதையைப் பார்த்திருக்கிறாய் அருண்"

"இருக்கலாம். ஆனாலும் என் உள்ளுணர்வு அதை ஒத்துக் கொள்ள மாட்டேன்கிறது. ரங்காச்சாரி நான் போவதற்கு முன்னால் என் வரவை எதிர்பார்த்த மாதிரி இருந்ததும், சேதுபதி பற்றிப் பெரிதாக ஒன்றும் சொல்லாததும் சந்தேகமாகவே இருக்கு காவ்யா. அந்த சேதுபதிக்கு காலேஜ் ஃபீஸ் எல்லாம் கட்டியது அவர்தான்னு ஒரு பேட்டியில் சேதுபதியே சொன்னதைப் படித்தேன். அப்படிப் பட்டவர் எத்தனையோ பேரில் சேதுபதியும் ஒருவர்ங்கிற மாதிரி பேசினது மறைத்துப் பேசற மாதிரி இருக்கு"

"ஆனால் நீ அங்கே போவதை அவர் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?"

"அதுதான் எனக்கும் தெரியலை"

அந்தக் கடற்கரையில் அவர்களுக்கு சுமார் இருபது அடி தள்ளி இரு சிறுமிகள் மணலில் வீடு அமைத்துக் கொண்டிருந்தார்கள். அது நன்றாக அமைய அமைய அந்தக் குழந்தைகள் முகத்தில் பெருமிதம் கொப்பளித்தது. காவ்யா புன்னகையோடு அதைப் பார்க்க, அருண் மனம் முந்தைய நாளில் படித்து முடித்த கதையை அசை போட்டது.

போலித்தனமான, இயந்திரத்தனமான, லட்சியமற்ற குடும்ப சூழ்நிலைகளில் இருந்து கதையின் நாயகனும் நாயகியும் தப்பிக்க முடிவு செய்து தாமிரபரணி நதிக்கரையில் உள்ள ஒரு கிராமத்தில்

போய் சேர்கிறார்கள். இரண்டு பேருமே அறிவு ஜீவிகள். ஒருவரில் ஒருவர் தங்கள் லட்சிய மனிதரைக் கண்டிருந்த அவர்கள் காதல் அந்தக் கிராமத்தில் மேலும் வேர் பிடிக்கிறது. ஒருவரைப் பிரிந்து ஒருவர் வாழ முடியாதென்ற நிலைக்கு அவர்கள் வரும் போது அவரவர் குடும்பத்தாரால் கண்டு பிடிக்கப் படுகிறார்கள். ஒருவரை ஒருவர் பிரிந்து வாழ்வதை விட, அந்த இயந்திரத்தனமான வாழ்க்கைக்குத் திரும்புவதை விட சேர்ந்தே மரணத்தை சந்திப்பது மேல் என்ற முடிவுக்கு வருகிறார்கள். இரு குடும்பத்தாரும் அந்தக் கிராமத்துக்கு வந்த போது தாமிரபரணி நதிக்கரையில் ஒதுங்கியிருந்த இரண்டு பிணங்களைப் பார்த்து திகைத்து நிற்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மௌன சாட்சியாய் ஓடிக் கொண்டிருந்த அந்த தாமிரபரணி நதி மட்டுமே அவர்கள் மரணத்திலும் கூட இருந்தது. கதை எளிமையானது என்றாலும் அந்தப் பாத்திரப் படைப்புகளை சொன்ன விதம் அவர்களைக் கண் முன் நிறுத்தியது. எல்லாமே ஒரு கவிதையாய் மனதை வருடியது.

"காவ்யா, நீ இன்றைக்குப் போன இண்டர்வ்யூ என்ன ஆச்சு?"

"வேலை கிடைத்திருக்கும். ஆனால் அந்தப் பழைய மேனேஜர் இந்தக் கம்பெனிக்குப் போன் செய்து நானொரு ஹிஸ்டீரியா பேஷண்டு, அடிக்கடி கோபம் வந்து செருப்பைக் கழற்றி அடிக்கும் ஒரு மென்டல் கேஸ் என்றெல்லாம் சொல்லியிருக்கிறான். பாவம் இந்தக் கம்பெனி மேனேஜர் வியர்த்து விறுவிறுத்து என்னைக் கையெடுத்துக் கும்பிட்டு அனுப்பிச்சுட்டார்"

"உங்க அப்பா என்ன சொல்றார்?"

"ராஜராஜன் பையனை சீக்கிரம் கல்யாணம் செய்துட்டு செட்டில் ஆகச் சொல்றார். காசு காசுன்னு அலையற ஜென்மம்".

"நீ உன் அப்பா பற்றி பேசும் போதெல்லாம் பேச்சில் அனல் பறக்கிறது காவ்யா"

"இருக்கிற மாதிரி இருந்தால்தான் எல்லா சொந்தத்திற்கும் ஒரு மரியாதை. சோம்பேறியாய்ப் பொறுப்பில்லாமல் அவர் மாதிரி இருக்கிற யாரையும் எனக்கு பிடிக்கிறதில்லை, அருண்"

தங்கள் இருவரது துர்ப்பாக்கிய நிலையை அவன் யோசித்துப் பார்த்தான். அவளுக்கு வேலை செய்யாத தகப்பன், தனக்கோ வேலையைத் தவிர வேறு எதுவும் செய்யாத தகப்பன்......

"வீட்டு செலவுக்கு என்ன செய்கிறாய்?"

"மூன்று வேளையும் கஞ்சி தான்"

"நான் பணம் தரட்டுமா?"

"வேண்டாம்"

"சரி கடனாய் தர்றேன்"

"கடன் எல்லாம் திருப்பிக் கொடுக்கிற நிலைமையில் நானில்லை".

அவள் அவனிடம் எப்போதுமே பண உதவியோ, பொருள் உதவியோ பெறத் தயாராக இருந்ததில்லை. அவளிடம் எத்தனையோ முறை இது சம்பந்தமாக விவாதம் செய்து அவன் தோற்றிருக்கிறான்.

"இன்றைக்கு உங்கப்பா கம்பெனியில் டைப்பிஸ்ட்/ஸ்டெனோ வேலை காலியிருப்பதாக விளம்பரம் பார்த்தேன், அருண். நான் அந்த வேலைக்கு எழுதிப் போடட்டுமா?"

சிறிது யோசித்து விட்டு "வேண்டாம்" என்றான்.

"ஏன்?"

"இது என் அப்பாவின் நேர் கீழ் இருக்கிற வேலைன்னு நினைக்கிறேன். இதற்கு முன்னால் இருந்தவள் போன வாரம் தான் திருமணம் ஆகி ராஜினாமா செய்து விட்டாள். அந்த வேலைக்காக இருக்கும்."

"ஏன் உன் அப்பாவும் கையைப் பிடித்து இழுப்பாரா?"

"சேச்சே' என்றவன் வாய் விட்டுச் சிரித்தான். "எப்பவுமே மெஷின் எல்லாம் கையைப் பிடித்திழுக்காது"

"மிருகத்துக்கு மெஷின் தேவலை. அத்தனை பெரிய கம்பெனியில் வேலை கிடைத்ததுன்னா அது என் அதிர்ஷ்டம்தான். எதற்கும் அப்ளை செய்யறேன்" என்று தீர்மானமாக சொன்னாள்.

அவனுக்குப் பிடிக்காத அப்பாவிடம் அவள் வேலைக்குப் போவதில் அவனுக்கு விருப்பமில்லை. ஆனால் அதைச் சொல்லவும் முடியவில்லை. மெல்ல பேச்சை மாற்றினான்.

*****

அந்தப் போட்டோகிராபரை ஆபிசில் பெரும்பாலானோருக்குப் பிடிக்காது. ஆனால் அதை அந்த நபர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. தன் தொழிலில் அவனுக்கு உள்ள திறமையை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அந்தத் திறமையைப் பற்றி அவனே அடிக்கடி தம்பட்டம் அடித்து மற்றவர்களை அதிகமாகவே துன்புறுத்தினான். இன்னோரு துர்ப்பாக்கியம் அவனுக்கு போட்டோகிராபி தவிர வேறெதுவுமே தெரியாது. தெரிந்து கொள்ளவும் ஆர்வம் காட்டியதில்லை. அதனால் கிடைத்த மனிதர்களையெல்லாம் அது பற்றியே பேசிக் கலங்கடித்தான். ஆகவே அவன் தலை தெரிந்தால் வெளி வேலை இருப்பவர்கள் அதனை ஞாபகப் படுத்திக் கொண்டு அவசரமாக வெளியேறினார்கள். அந்த வசதியில்லாதாவர்கள் தலை நிமிரக் கூட முடியாதது போல கையில் உள்ள வேலையில் கவனமாக இருந்தார்கள்.

வழக்கம் போல அன்று உள்ளே நுழைந்தவன் கருமமே கண்ணாக இருந்தவர்களைக் கண்டான். அருண் ஒருவன் மட்டும் கம்ப்யூட்டரிலோ, ஃபைல்களிலோ மூழ்காமல் மேசையில் இருந்த ஒரு புத்தகத்தையே ஆழ்ந்த சிந்தனையோடு பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்தான். பக்கத்தில் வந்து பார்த்த போது தலைப்பு தெரிந்தது.

"நீ நான் தாமிரபரணி"

"ஐயோ அருண், தயவு செஞ்சு அந்தப் புத்தகத்தைப் படிச்சுடாதே" அவன் குரலைக் கேட்டு திடுக்கிட்டு விழித்த அருணைப் பலரும் ஓரக் கண்ணால் இரக்கத்தோடு பார்த்தார்கள்.

அருண் வேறு வழியில்லாமல் புன்னகைத்து எதிரே உட்கார சைகை செய்தான். "ஏன்?"

"அது மாதிரி ஒரு ரம்பத்தை நான் இது வரைக்கும் படிச்சதில்லை. ஏதோ அவார்டு எல்லாம் வாங்கின புத்தகம்னு அட்டையில் போட்டிருந்தான். அதனால் போகப் போகப் புரியும்னு நான்

தொடர்ந்து படிச்சேன். அதை எழுதினவன் என்ன சொல்ல வர்றான்னு கடைசி வரைக்கும் கண்டு பிடிக்க முடியலை."

"அப்படியா?" என்று அருண் போலியாக ஆச்சரியப் பட்டான்.

"நீ எப்ப படிச்சே ரமேஷ்?"

"போன வருஷம்தான். தூக்கம் வராதவங்களுக்கு மாத்திரைகளே தேவையில்லை. இந்தப் புத்தகம் போதும். ஒரு தடவை வாங்கினால் வாழ்க்கை பூரா உதவும். அதை எழுதின ஆள் கிட்டே நான் நேராகவே சொல்லிட்டேன்"

அருணுக்கு தூக்கிவாரிப் போட்டது. "என்னது அதை எழுதின ஆளைப் பார்த்தாயா?"

ரமேஷ் மனமார சிரித்தான். "அந்த ஆள் துரதிர்ஷ்டம் நான் படிச்சு முடிச்ச நாளே என் கண்ணில் பட்டான். விடுவேனா?........" என்றவன் தன் முன் அருணும், அவன் பின் அம்பலவாணனும் சிலையாக நிற்பதைப் பார்த்து இவர்களுக்கு என்ன ஆயிற்று என்று திகைத்தான்.

## (6)

உனது விசாரணையே
'கூண்டு'களில்
தொடங்கும் போது
தீர்ப்பு
சிறைச்சாலைகளில் முடிவதில்
வியப்பொன்றும் இல்லை.

– நா.காமராசன்

ஏன் என்னை அப்படிப் பார்க்கிறீங்க?" என்று ரமேஷ் அவர்கள் இருவரையும் ஆச்சர்யத்துடன் கேட்டான்.

அம்பலவாணன்தான் முதலில் திகைப்பிலிருந்து மீண்டவர். அவனிடம் கேட்டார். "உனக்கு எப்படி அந்த நாவலாசிரியரைத் தெரியும்?"

"அந்த நாவலுக்குப் பின் அட்டையில் தான் அந்த ஆளின் படம் இருக்கே"

"அது கிட்டத் தட்ட 26 வருஷங்களுக்கு முந்தைய படம். இப்போதெப்படி அடையாளம் கண்டுபிடித்தாய்?"

"அது தான் ஒரு நல்ல ஃபோட்டோகிராபர், ஓவியர் இவங்களோட ஸ்பெஷாலிட்டி. மனிதன் வயதாக ஆக எத்தனை மாறினாலும் அவன் கண்கள் மாறாது. கண்களை அடையாளம் கண்டு பிடிக்க முடிந்தால் மனிதனையும் அடையாளம் கண்டு பிடிக்க முடியும்"

அம்பலவாணனுக்கு அதை நம்புவதா வேண்டாமா என்று குழப்பமாக இருந்தது. அருணைக் கேள்விக்குறியுடன் பார்த்தார்.

"ரமேஷ். நீ அவரை எப்படி எங்கே பார்த்தாய்? ஆரம்பத்திலிருந்து விவரமாய் சொல்" என்று அருண் பரபரப்புடன் கேட்டான்.

"என் கல்யாணத்தில் வந்த கிஃப்ட்களில் ஒன்று அந்த அறுவை புத்தகம். நான் அதை நிறைய நாள் படிக்காமல் வைத்திருந்தேன். போன வருஷம் என் நண்பன் ஒருத்தன் வீட்டுக்கு, அவன் தங்கை என்கேஜ்மெண்டுக்கு ஃபோட்டோ எடுக்க கர்நாடகாவில் மைசூர் பக்கம் இருக்கும் மடிக்கேரிக்குப் போக வேண்டி இருந்தது. ரொம்ப தூரம் போகிறோமே என்று பிரயாணம் செய்கிறப்ப நேரம் போகணுமேன்னு இந்த புத்தகத்தையும் எடுத்துட்டுப் போனேன்.

நான் முதல்லயே சொன்ன மாதிரி கதை மகா அறுவை. அந்தக் கதாநாயகனும், நாயகியும் ஏதோ வேறு கிரகத்து மனிதர்கள் மாதிரி பேசறாங்க. ஒண்ணுமே புரியலை. எரிச்சலில் இருந்தேன். அந்த நண்பன் வீட்டில் வைத்துதான் அந்த ஆளைப் பார்த்தேன். ஏதோ பூத்தொட்டியைக் கொடுக்க வந்திருந்தான். பார்த்த உடனேயே எனக்கு சந்தேகம் வந்துடுச்சு. அந்தப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். வயதாகி இருந்தாலும், உருவம் நிறைய மாறி இருந்தாலும் அதே மனிதன்தான் என்று உறுதியாயிடுச்சு."

"கூப்பிட்டு ஏன்யா இந்த மாதிரி கதை எழுதறேன்னு கேட்டான். அவன் எதுவும் தெரியாத மாதிரி முழிச்சான். அந்தப் புத்தகத்தை அவன் கிட்டே காண்பிச்சேன். பேயறைஞ்ச மாதிரி அவன் முகம் மாறிடுச்சு. ஏதோ கன்னடத்தில் மழுப்பிட்டு ஒரே ஓட்டமாய் அங்கேயிருந்து ஓடிட்டான், பாவம். அதுக்கப்புறம் நான் வர்ற வரைக்கும் என் கண்ணிலேயே படலை அந்த ஆள்" என்று சொல்லி ரமேஷ் வயிறு குலுங்கச் சிரித்தான்.

"அந்த ஆள் அங்கே என்னவாக இருந்தார்?" அருண் கேட்டான்.

"யாருக்குத் தெரியும்? நான் கேட்கப் போகலை"

"அந்த ஆளை ஒரு முக்கிய விஷயமாய் நானும், ஆசிரியர் சாரும் பார்க்கணும். அவரைப் பற்றிய தகவல் எல்லாம் வேணும். உன் அந்த நண்பனிடம் கேட்டுச் சொல்லேன்"

"அவன் அங்கே இருந்த வீட்டை வித்துட்டு மைசூர் போய் செட்டிலாயிட்டான். ஆனாலும் பாக்கி டீடெய்ல்ஸ் சொல்லிக் கேட்டுப் பார்க்கிறேன்"

"இப்பவே கேள். இது கொஞ்சம் அவசரமான விஷயம்" என்று போனைக் கை காட்டினான்.

அவர்கள் பரபரப்புக்கு காரணம் ரமேஷுக்கு விளங்கவில்லை. ஆனாலும் உடனடியாக அருண் சொன்னபடி போன் செய்தான். அவர்கள் அவசரத்துக்கு எதிர்மாறாக நிதானமாக நண்பனிடம் குசலம் விசாரித்து கடைசியில் பூத்தொட்டி கொண்டு வந்த மனிதனைப் பற்றி விசாரித்தான். அந்த நண்பனுக்கு ஆரம்பத்தில் இவன் யாரைக் கேட்கிறான் என்று புரியவில்லை. இவன் தொடர்ந்து அந்த ஆளை வர்ணித்துக் கேட்க கடைசியில் புரிந்து கொண்டு பதில் சொன்னான்.

கேட்ட பிறகு ரமேஷ் குழப்பத்தோடு போனை வைத்தான்.

"என்ன சொல்றான்?"

"பக்கத்து காபி எஸ்டேட் தோட்டக்காரன்னு சொல்றான்."

"தோட்டக்காரனா?" என்று அம்பலவாணனும், அருணும் ஒரே நேரத்தில் அத்தனை உற்சாகமும் வற்றிப் போய்க் கேட்டார்கள்.

அவர்கள் முகத்தில் தெரிந்த ஏமாற்றத்தைப் பார்த்தும் ரமேஷ் தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

"அவன் தோட்டக்காரனாக இருந்தாலும் சரி, காவல்காரனாக இருந்தாலும் சரி. நான் பார்த்தது இந்த ஆளைத்தான்" என்று உறுதியாக அந்த நாவல் பின்பக்கம் இருந்த சேதுபதியின் புகைப்படம் காண்பித்து சொன்னான்.

சொல்லும் போது ஒரு பிரபல எழுத்தாளரை தோட்டக்காரனாகப் பார்த்தோம் என்று சொல்கிறோமே என்ற குழப்பமோ, வருத்தமோ அவனிடம் இல்லை. அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த அருண் கடைசியில் "சார், நாம் இரண்டு பேரும் போய்த் தான் பார்ப்போமே" என்றான்.

அரை மனதோடு அம்பலவாணன் தலையசைத்ததைப் பார்த்த சபாபதி டீ குடிக்கும் சாக்கில் வெளியே போனார். டீக்கடைக்கு வெளியே இருந்த போனில் சற்று முன் கிடைத்த தகவலைச் சொன்னார்.

****

ரங்காச்சாரியின் செல் போன் இசைத்தது.

"ஹலோ"

"போயும் போயும் உன் ஸ்டூடண்டுக்கு தோட்டக்காரன் வேலை தானா கிடைச்சது?"

சில வினாடிகள் இதயம் நின்று போய் மீண்டும் இயங்க ஆரம்பித்தது. அந்தப் பக்கத்திற்கு முன்னுரையோ முடிவுரையோ பேச்சிற்கு அலங்காரமோ கிடையாது. ஆனால் அவரது இதயத்திற்கு முந்தைய தெம்பு இல்லாததால் அவர் சுதாரித்துக் கொள்ள சிறிது நேரம் தேவைப் பட்டது. மனமெல்லாம் ரணமாக பலவீனமான குரலில் ரங்காச்சாரி கேட்டார்.

"சேதுபதி எங்கே இருக்கிறான்?"

ரங்காச்சாரி அந்தப் பக்கத்தில் இருந்து வந்த பதிலை உன்னிப்பாகக் கேட்டார். அதை ஜீரணிக்க அவருக்கு சில வினாடிகள் தேவைப்பட்டன. மீண்டு வந்து சொன்னார்.

"என் ஸ்டூடண்ட்ஸ் சிலர் அதை விட மோசமான நிலையில் இருக்கிறாங்க என்ன செய்யறது. அவர்களை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள இந்த உலகத்துக்குத் தெரியலை. அவன் என்ன வேலையோ செய்து எப்படியோ பிழைச்சுட்டுப் போகிறான். உன் தொந்தரவுக்கு வராமல் அவன் பாட்டிற்கு இருக்கிறான். அதில் உனக்கென்ன பிரச்னை?"

"எனக்கு வாயில நல்லா வந்திடும் ரங்காச்சாரி. அவன் அதை எழுதினது தப்பு. அதை நீ பிரசுரம் செஞ்சது தப்பு. எல்லாத்தையும் விடப் பெரிய தப்பு அந்த நாயி தலைமறைவானது....."

"உண்மைதான் ஒத்துக்கறேன்....." என்று சொன்ன ரங்காச்சாரி தலையில் கையை வைத்துக் கொண்டார். "என்னை என்ன செய்யச் சொல்றே"

"போனைப் போடுய்யா அந்த ராஜராஜனுக்கு. மகனை நிறுத்தச் சொல்லுய்யா"

"அமெரிக்க ஜனாதிபதிகிட்ட பேசச் சொல்லு. பேசறேன். அது சுலபம். வேறு ஒரு பொது விஷயமாய்ப் பேச அவன் அப்பாய்ன்மெண்டுக்காக ஆறு மாதமாய் முயற்சி செய்யறேன். முடியலை."

"அவன் சம்சாரத்துகிட்டப் பேசுய்யா. அவளும் உன் ஸ்டுடண்ட்தானே"

"மாதுரி கிட்ட பேசிப் பிரயோஜனமில்லை"

"சே. அந்தப் பையன் பொறந்ததில் இருந்தே எனக்குப் பிரச்சனை ஆரம்பமாயிடுச்சுய்யா. சரி நானே பாத்துக்கறேன்"

"சேதுபதியை எதுவும் செய்துடாதே. உன்னை நான் கையெடுத்துக் கும்பிடறேன்"

"நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா ரங்காச்சாரி? நான் எத்தனையோ தடவை தயவு தாட்சண்யமே இல்லாம நடந்திருக்கேன். அதனால் எல்லாம் எனக்கு ஒரு பிரச்சனையும் வந்ததில்லை. எனக்கு இது வரைக்கும் வந்த பிரச்சனை எல்லாம் நான் பாவ புண்ணியம் பார்க்கப் போய் வந்தது தான். அதுசரி அவன் இன்னும் அந்த எஸ்டேட்டில் இருப்பானாயா?"

"எனக்குத் தெரியலை. அவனை நானும் பார்த்து 25 வருஷமாச்சு. பார்த்து சந்தோஷப் படற நிலைமையில் அவனும் இல்லை. பார்க்கிற தெம்பும் எனக்கு இல்லை"

"அங்க இருப்பான்கிற நம்பிக்கை எனக்கில்லை. என் கணக்கு சரியாய் இருந்தால் அந்த நாயி அந்த ஃபோட்டோகிராப்பர் பார்த்த அடுத்த நாளே அங்க இருந்து ஓடியிருக்கும்"

## (7)

The truth is out there, Neo.
It's looking for you and
it will find you,
if you want it too.

– A dialogue in the movie "Matrix"

காவ்யாவின் இதயம் மாரத்தான் ஓடிக் கொண்டிருந்தது. அருணின் அப்பா கம்பெனியில் இது இரண்டாம் இண்டர்வ்யூ. முதல் இண்டர்வ்யூவில் இருந்து ஐந்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டாம் இண்டர்வ்யூவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்த இண்டர்வ்யூ செய்யும் குழுவில் ராஜராஜனும் இருப்பார் என்று சொன்னார்கள். அவளது படபடப்பிற்கு அதுவும் ஒரு காரணம்.

அருண் சேதுபதியைத் தேடி மடிக்கேரிக்குப் போயிருந்தான். இரண்டாம் இண்டர்வ்யூவிற்கு அழைத்திருக்கிறார்கள் என்று சொல்லும் போதே அவன் அவ்வளவு உற்சாகம் காட்டவில்லை. ஆனால் வேண்டாம் என்று தடுக்க அவனால் நல்லதொரு காரணத்தைச் சொல்ல முடியாததால் அவன் ஒன்றும் எதிர்மறையாகச் சொல்லவில்லை.

அந்தக் கம்பெனியின் வாசற்படியில் ஆரம்பித்து ஒவ்வொரு அடியிலும் பணத்தின் சக்தி தெரிந்தது. ஒவ்வொன்றும் உள்ளதிலேயே முதல் தரப் பொருளாகவே தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தது. அங்கு இரண்டாம் தரம் என எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை.

தன்னுடன் இண்டர்வ்யூவிற்கு வந்திருந்த மற்ற நான்கு பேரை காவ்யா பார்த்தாள். இரண்டு பேர் மிக அழகாக இருந்தார்கள். அழகைப் பார்த்தால் வேலை அவர்களுக்குக் கிடைக்கலாம். ஒருத்தி உடல் ஊனமுற்றவள். இரக்கம் பார்த்தால் வேலை அவளுக்குக் கிடைக்கலாம். இன்னொருத்தி ஆங்கிலோ இந்தியன். ஆங்கிலோ இந்தியன் என்றால் ஆங்கிலப் புலமை அதிகம் என்றொரு அபிப்பிராயம் பொதுவாக உள்ளது. அப்படிப் பாத்தால் வேலை அவளுக்குக் கிடைக்கலாம். ஆக போட்டி அதிகமாக இருக்கிறது.

முதலாவதாகவே அவளை அழைத்தார்கள். அவள் உள்ளே சென்ற போது ஒரு மிக அகன்ற பர்மாத் தேக்கு மேசையின் பின் ராஜராஜனும், அவருக்கு இரு பக்கத்திலும் வேறு இருவரும் அமர்ந்திருந்தார்கள். ராஜரானை அவள் நேரில் பார்ப்பது இதுவே முதல் முறை. இந்த வயதிலும் மகனை விட அழகாகவே இருந்தார். ஆனால் அந்த அழகில் ஒரு உயிர் இல்லை. ஒருவித எந்திரத் தன்மை அவரிடம் பிரதானமாக இருந்தது. ஆனால் அவரது கூர்மையான கண்களுக்கு மற்றவர் மனதில் உள்ளதை எளிதாகக் கண்டுபிடிக்கக் கூடிய சக்தி இருந்ததாக அவளுக்குப் பட்டது.

அவளை உட்காரச் சொன்னார்கள். மூவர் கைகளிலும் அவள் ஃபைல் இருந்தது. ராஜராஜனின் வலப்பக்கம் இருந்தவர் ஃபைலில் இருந்து ஒரு தாளை எடுத்தார். "மிஸ் காவ்யா. உங்கள் முந்தைய வேலையை ஏன் விட்டீர்கள் என்று சொல்ல முடியுமா?"

அந்தத் தாள் அவள் முன்பு வேலை பார்த்த பிருந்தாவன் எண்டர்ப்ரைசஸினுடையது. அதைப் பார்த்தவுடன் அவள் வயிற்றில் புளியைக் கரைத்தது. ஆனால் முடிந்த வரை அமைதியாக நடந்ததைச் சொன்னாள். ராஜராஜனின் கூட இருந்தவர்கள் கண்கள் விரிந்தன. ராஜராஜன் முகத்தில் சிறு சலனம் கூட இல்லை. அவர்கள் இருவரும் அமைதியாக அவரைப் பார்த்தார்கள். அவர் வாயைத் திறந்தார். "மிஸ் காவ்யா நீங்கள் போகலாம்".

அவளுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. மேலும் சில கேள்விகள் கேட்டு அனுப்பி பின் வேலை இல்லை என்றிருந்தாலும் கூட இந்த வருத்தம் இருக்காது. கேள்விகளே இல்லாமல் தீர்ப்பு சொன்ன மாதிரி போகச் சொன்னது அவள் இரத்தத்தைக் கொதிக்க வைத்தது. அவமானமாக இருந்தாலும் மௌனமாக நன்றி சொல்லி விட்டு வெளியேறினாள்.

போன வேகத்தில் வெளியே வந்த அவளை ஹாலில் இருந்தவர்கள் எல்லோரும் ஒரு விதமாகப் பார்த்தார்கள். ஏழைகளுக்கு இந்த மாதிரியான பார்வைகள் புதிதல்ல. வேகமாகச் சென்று லிஃப்டில் தஞ்சமடைந்தாள். தெருவில் நடக்க நடக்கத் தன் வீட்டு நிலைமை பற்றி நினைத்தாள். இனி எத்தனை நாட்கள் சமாளிக்க முடியும் என்று அவளுக்குத் தெரியவில்லை. மனம் கனக்க ஆரம்பித்தது. இந்த மாதிரி சமயங்களில் எல்லாம் அருணிடம் சிறிது நேரம் பேசினால் மனம் சமாதானமாகும். ஆனால் இன்று அவனும் இல்லாததால் மனச் சுமையை இறக்கி வைக்கக் கூட முடியாமல் தளர்வுடன் நடந்தாள்.

****

எஸ்டேட் உரிமையாளர் ராமப்ப கௌடா அருணிடம் கன்னடத்தில் சொன்னார், "நீங்கள் சொன்ன ஆள் கிட்டத்தட்ட பத்து வருஷமாய் இங்கே தான் வேலை பார்த்தார். போன வருஷம் தான் வேலையை விட்டுப் போனார்" அருணும் அம்பலவாணனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஏன் வேலையை விட்டுப் போனார்?" அம்பலவாணன் கேட்டார்.

"யாரோ வேண்டியவருக்கு உடல்நிலை சரியில்லை இனி அவருடனேயே இருக்க வேண்டி வரும் என்று சொல்லி வேலையை விட்டுப் போய் விட்டார். நேற்று சாயங்காலம் கூட அவருடைய சொந்தக்காரர்கள் யாரோ அவரைத் தேடி காரில் வந்தாங்க."

"நேற்று வந்தவர்கள் இதற்கு முன்னால் இங்கே வந்திருக்காங்களா?" அருண் கேட்டான்.

"இல்லை. சொல்லப்போனால் இந்தப் பத்து வருஷத்தில் அவரைத் தேடி ஆட்கள் வந்தது இரண்டு தடவை தான். நேற்று அவங்க. இன்றைக்கு நீங்க".

"அவரைப் பற்றி வேறு எதாவது சொல்ல முடியுமா?"

"நல்ல மனிதர். நல்லா வேலை செய்வார். எனக்குத் தெரிந்து சம்பளம் சேர்த்துக் கொடுக்கச் சொல்லிக் கேட்காத ஒரே வேலைக்காரர் அவர்தான். அவர் கொஞ்சம் சித்த சுவாதீனமில்லாத ஆள். அதனால் கூட இருக்கலாம். அதிகம் பேச மாட்டார். கைநாட்டு. யார் வம்புக்கும் போக மாட்டார். ஏன் கேட்கிறீங்க?"

அருண் சமாளித்தான். "நாங்கள் தேடி வந்த ஆள் அவர் தானா என்று உறுதி செய்துக்கத் தான் கேட்டோம். அவரே தான். இன்னும் ஒரு இடம் இருக்கு. முக்கால் வாசி அங்க தான் இருப்பார். நன்றி. வரட்டுமா" அவர்கள் கிளம்பினார்கள். நாலு அடி வைத்திருப்பார்கள்.

கௌடா அழைத்தார். "ஒரு நிமிஷம்...அவர் போகிற அவசரத்தில் ஒரு கவர் விட்டுட்டுப் போய் விட்டார். வேலைக்காரன் அந்த ரூமை சுத்தம் செய்யும் போது கிடைச்சது. ஏதாவது முக்கியமானதாய் இருக்கலாம்னு எடுத்து வச்சிருந்தோம். அவரைப் பார்த்தால் குடுத்துடறீங்களா" வேலைக்காரனை அழைத்து குடகு மொழியில் என்னவோ சொன்னார்.

சிறிது நேரத்தில் பழுப்பேறிய உறை ஒன்றை வேலைக்காரன் கொண்டு வந்து கொடுத்தான். அவர்கள் வாங்கிக் கொண்டு நன்றி சொல்லிக் கிளம்பினார்கள். காரில் திரும்பிப் போகும் போது பரபரப்புடன் அந்த பழுப்பு நிறக் காகித உறையைப் பிரித்தார்கள். சுமார் முப்பது தாள்கள் இருந்தன. அவையும் பழுப்பேறி இருந்தன. "ஐன்ஸ்டீனுக்கு அப்புறம்...." என்ற தலைப்பில் ஒரு ஆங்கிலக் கட்டுரை கையால் எழுதப் பட்டிருந்தது. தலையும் காலும் புரியவில்லை. எல்லாம் அறிவியல் சித்தாந்தமாக இருந்தது.

"ஒரு தோட்டக்காரன் கையில் படித்தவனுக்கே புரியாத அளவு உயர்ந்த ஒரு விஞ்ஞானக் கட்டுரை இருக்குன்னா அவர் அந்த கௌடா சொன்னபடி கைநாட்டாக இருக்க முடியாது, அருண். இது ரமேஷ் சொன்ன மாதிரி சேதுபதியேதான். ஆனால் சேதுபதி எதுக்கு தோட்டக்காரனாகணும். அந்தக் காலத்து பட்டதாரிக்கு ஒரு நல்ல கௌரவமான வேலை தாராளமாய் கிடைச்சிருக்குமே. இது சேதுபதின்னா, சேதுபதிக்கு விஞ்ஞானத்தில் ஈடுபாடு இருந்ததாக நமக்கு இது வரை எந்த ஒரு தகவலும் இல்லை. ஒரே குழப்பமாய் இருக்கு"

"ஆனால் அந்த நாவலின் கதாநாயகன் தேவன் ஒரு விஞ்ஞானி சார். அதில் தேவன் தியரி ஆஃப் ரிலேடிவிடி பத்தி பேசியதாய் ஒரு சேப்டரில் சேதுபதி எழுதியிருக்கார்" அருண் ஆழ்ந்த யோசனையுடன் சொன்னான்.

"அப்படின்னா சேதுபதிக்கு கொஞ்சமாவது விஞ்ஞானம் தெரிஞ்சிருக்கணும்...." அம்பலவாணனுக்குத் தலை சுற்றியது.

"எதற்கும் இந்தக் கட்டுரையை ஒரு விஞ்ஞானி கிட்ட குடுத்து படிக்கச் சொல்லி எந்த ஒரு தீர்மானத்துக்கும் வர்றது நல்லது சார்"

யோசித்தபடி அம்பலவாணன் தலையாட்டினார். அவர்கள் இருவருக்கும் அந்தத் தாள்களில் ஏதோ ஒரு தடயம் அல்லது பதில் இருப்பதாக உள்ளுணர்வு சொல்லியது. அருண் மனதில் இன்னொரு விஷயம் உறுத்தியது. தன் மனதில் உள்ளதை அவரிடம் சொன்னான்.

"சார். இத்தனை வருடங்கள் இங்கிருந்த சேதுபதி ரமேஷ் கண்டுபிடித்தவுடன் இங்கிருந்தும் போய் விட்டார். ஆனால் இத்தனை நாளாய் அவரைத் தேடி யாரும் வரவில்லை என்றாலும் நாம் இங்கு வர முடிவு செய்தவுடன் நமக்கு முன்னால் இங்கு சிலர் வந்து போனது தற்செயல் என்று எனக்குத் தோன்றவில்லை. யாரோ நம்மைக் கண்காணிக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது"

25 வருடங்களானாலும் இந்த மர்ம முடிச்சு அவிழ்வதில் சிலருக்கு உடன்பாடில்லை என்பதும், அவர்கள் அதே பழைய உறுதியுடன் தங்கள் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து காய்களை நகர்த்துகிறார்கள் என்பதும் இருவருக்கும் தெளிவாகத் தெரிந்தது.

## (8)

You want to forget,
but you can't forget.
Someday it will be buried deep,
but it will not be forgotten.

– Harold Robins (in a novel)

அவர்களது கார் அந்தப் பகட்டான பங்களா முன் நின்ற போது இரவு மணி எட்டு. பங்களாவின் பெரிய கேட்டில் பித்தளைத் தகட்டில் "நரசிம்மராஜுலு" என்ற பெயர் பொறிக்கப் பட்டிருந்தது.

அறிவியல் வட்டாரத்தில் நரசிம்மராஜுலுவுக்கு ஒரு பெரிய மதிப்பு இருந்தது. பல வெளிநாட்டுப் பல்கலைகழகங்களுக்கு அடிக்கடி சென்று உரையாற்றும் அளவு நிறைய அறிவியல் ஞானமும் இருந்தது. பௌதிகத்தில் ஐன்ஸ்டீனின் ஃக்வாண்டம் தியரிக்கும், ரிலேடிவிட்டி தியரிக்கும் தனித் தனியாக புத்தகம் எழுதி அவை இரண்டும் பல்கலைகழக மாணவர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகள் மத்தியில் மிகப் பிரபலமாக இருந்தன.

அவர்கள் உள்ளே நுழைந்த போது நரசிம்மராஜுலு வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து லதா மங்கேஷ்கரின் பழைய பாடலைக் கேட்டுக் கொண்டு இருந்தார். பந்தா எதுவும் இல்லாமல் எழுந்து அவர்களைருவரையும் வரவேற்றார்.

"வாங்க அம்பலவாணன். பார்த்து பல காலம் ஆயிடுச்சு".

அவருடன் கைகுலுக்கிய அம்பலவாணன் அருணை அறிமுகப் படுத்தினார். "இது அருண். என் பத்திரிக்கைக்கு இப்ப இவர் தான் முதுகெலும்பு"

அருணுடன் கைகுலுக்கிய நரசிம்மராஜுலு முகத்தில் எதையோ ஞாபகப் படுத்திக் கொள்ளும் முயற்சி தெரிந்தது. அதைக் கவனித்த அம்பலவாணன் புரிந்து கொண்டு "அருண் ராஜராஜன் மகன்" என்று விளக்க நரசிம்மராஜுலு முகம் தெளிவாகியது.

ஏதோ சொல்ல வந்தவர் ஒரு கணம் நிதானித்து பின் சொன்னார். "அது தானே பார்த்தேன். அடிக்கடி பேப்பரிலும், டிவியிலும் பார்க்கிற ஒரு முகத்தோட சாயல் இருக்கேன்னு பார்த்தேன்". அவர் குரலில் ஒரு புதிய மரியாதை தெரிந்தது.

அருண் எத்தனை தான் தனித்துவம் படைக்கவும் தந்தையின் நிழலில் இருந்து தள்ளி நிற்கவும் முயற்சித்தாலும் எங்குமே அவனுக்கு ராஜராஜன் மகன் என்று தான் முதல் முக்கியத்துவம் கிடைத்தது. உள்ளே எழுந்த எரிச்சலை அப்படியே அவன் விழுங்கிக் கொண்டான்.

"இந்த நேரத்தில் வந்து உங்களைத் தொந்திரவு செய்யக் காரணம் எங்களுக்கு கிடைச்ச ஒரு பழைய விஞ்ஞானக் கட்டுரை தான். இதைப் படிச்சுட்டு உங்க கருத்து சொன்னா எங்களுக்கு உதவியாய் இருக்கும்" என்று அம்பலவாணன் சொல்லி அந்தப் பழுப்பேறிய உறையைக் கொடுத்தார்.

பலருக்கு தங்கள் துறையை மறந்து ஓய்வு எடுக்க சில மணி நேரங்கள் அவ்வப்போது தேவைப்படுகின்றன. அதுவும் அந்தந்த துறையில் பிரபலங்கள் என்றால் பார்ப்பவர்கள் எல்லாம் எப்போதும் அது சம்பந்தமாகவே கேட்பதும் பேசவும் செய்வதால் அவர்களுக்கு அதை மறந்து இருக்க கட்டாயம் ஓய்வு தேவைப் படுகிறது. இதில் நரசிம்மராஜுலுவும் விதி விலக்கல்ல. எனவே அவர் சற்று தயக்கத்தோடு தான் அந்த உறையை வாங்கினார்.

"என்ன சாப்பிடறீங்க? டீ, காபி, ஜூஸ்...?"

"எதுவுமே வேண்டாம். இதைப் படிச்சுட்டு உங்க கருத்து சொன்னால் அதுவே போதும்" அம்பலவாணன் சொன்னார்.

"எனக்கு நேரம் கிடைக்கையில் வாசித்துச் சொல்கிறேனே. ஏன்னா எனக்கு இந்த ராத்திரி நேரத்தில் இசை தவிர வேறு எதுவும் பிடிப்பதில்லை."

அம்பலவாணன் வேறு வழியில்லாமல் தலையசைத்தார். "சரி, இது எங்களுக்குக் கிடைச்ச ஒரு முக்கியமான டாக்குமெண்ட். கொஞ்சம் பத்திரமா பாத்துக்கங்க. நாங்க மறுபடி எப்ப வரட்டும்?"

நரசிம்மராஜுலு "அடுத்த வாரம் வாங்களேன்" என்று சொன்னபடி சும்மா அந்தக் கவரைப் பிரித்துப் பார்த்தார். மேலோட்டமாக அதைப் பார்த்தவர் "இந்தக் கையெழுத்து எனக்கு நன்றாய் தெரிஞ்ச கையெழுத்து போல இருக்கே" என்று சொல்லி அருகில் டீபாயிலிருந்த தன் மூக்குக் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டு அந்தப் பக்கங்களைப் புரட்டினார்.

அவர் முகம் மாறியது. "இது உங்களுக்கு எப்படிக் கிடைச்சது?" என்று அவர்களிருவரையும் கேட்டார்.

"இதை எழுத்தாளர் சேதுபதி வைத்திருந்தார்"

நரசிம்மராஜுலுவுக்கு சேதுபதி பெயர் பற்றி பெரிதாகத் தெரியவில்லை என்பது அவர் முகபாவனையில் இருந்து அவர்களுக்குத் தெரிந்தது. அவர் ஆழ்ந்த யோசனையுடன் "இல்லை...இந்தக் கையெழுத்து...." என்று இழுத்தார்.

"இது சேதுபதி கையெழுத்து தான்" என்று சொன்ன அருண் அவர் முகத்தையே கூர்ந்து பார்த்தான்.

"அல்ல" என்று அழுத்தமாகத் தலையாட்டிய நரசிம்மராஜுலுவுக்கு அது பற்றி உறுதி செய்யாமல் தலை வெடித்து விடும் போலத் தோன்றியது. இரவில் இசையைத் தவிர வேறு எதுவும் செய்ய விரும்பாதவர் பொறுமையாக ஆரம்பித்திலிருந்து படிக்க ஆரம்பித்தார். சிறிது படிப்பது, சிறிது யோசிப்பது, பின் தலையாட்டி விட்டுப் படிப்பது, தனக்குள் கணக்குப் போட்டுக் கொண்டு மீண்டும் தொடர்வது என்று நரசிம்மராஜுலு அந்தப் பக்கங்களில் மூழ்கிப் போனார்.

அருணும், அம்பலவாணனும் மறக்கப் பட்டார்கள். அவர்கள் இருவரும் நரசிம்மராஜுலுவை ஏதோ வசியம் செய்யப் பட்டவர்கள் போல பார்த்துக் கொண்டிருந்தார்கள். லதா மங்கேஷ்கரின் குரல் மட்டும் இதயத்தை வருடிக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் கழித்து பிரமிப்புடன் தலை நிமிர்ந்தார்.

அவர் பழைய சூழ்நிலைக்கு வந்து அவர்கள் இருப்பதை உணரவே சிறிது நேரம் பிடித்தது. "இன்றைக்கு சில அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடிச்சிருக்கிற ஒருசில விஷயங்களை அவன் அன்றைக்கே கண்டு பிடிச்சு எழுதிட்டான்....." என்று குரல் கம்ம அதிசயித்தார்.

"யார் சார், சேதுபதியா?" அருண் கேட்டான்.

"சேதுபதிக்கும், விஞ்ஞானத்துக்கும் என்ன சம்பந்தம்?" அவர் கிண்டலாகக் கேட்டார்.

"பிறகு அதை எழுதியது யார் சார்?"

நரசிம்மராஜுலு மௌனமானார். அவர் முகத்தில் சோகம் படர்ந்தது. "நான் பார்த்ததிலேயே ஈடு இணையில்லாத மூளை.... அவன் முன்னால் நான் எல்லாம் பூஜ்யம் தான்"

"யார் சார் அது?" அருண் விடவில்லை.

யாரை மறந்திருக்க அவர் எண்ணியிருந்தாரோ அவனை அவர்கள் மறுபடியும் நினைவு படுத்துகிறார்கள். என்ன கேட்கிறோம் என்று தெரியாமல் இந்த இளைஞன் கேட்கிறான். அவருள்ளே புதைந்திருந்த அந்த மகத்தான நினைவுகளை உரசிப் பார்க்கிறான். சில பழைய நினைவுகளால் மனம் ரணமாவதைத் தவிர வேறு பலன் எதுவும் கிடைக்கப் போவதில்லை....

"இன்றைக்கு இல்லாதவனைப் பத்திப் பேசி என்ன பிரயோஜனம். அவன் மட்டும் இருந்திருந்தால் இன்றைக்கு உலகம் அவனைப் பத்திப் பேசி இருக்கும். தயவு செய்து மேலே எதுவும் கேட்காதீங்க." தளர்வுடன் எழுந்து நின்றார்.

வேறு வழி இல்லாமல் அருணும் அம்பலவாணனும் எழுந்து புறப்பட்டார்கள். குழப்பத்துடன் அம்பலவாணன் மறுபடி கேட்டார். "அப்படின்னா இதை எழுதியது சேதுபதி அல்லன்னு நீங்க உறுதியாய் சொல்றீங்க, இல்லையா?"

ஆமென்று தலையசைத்த நரசிம்மராஜுலு அந்த காகிதங்களை அவர்களிடம் நீட்டினார். 'புதிர்கள் நீண்டு கொண்டே போகின்றன' என்று நினைத்தவர்களாய் அதை வாங்கிக் கொண்டு இருவரும் நன்றி கூறி விட்டுக் கிளம்பினார்கள்.

காரில் போகும் போது இருவர் மனதிலும் ஏராளமான கேள்விகள். "அப்படின்னா அந்தக் கட்டுரை எப்படி சேதுபதியிடம் வந்தது, அருண்?" என்று நீண்ட நேரம் கழித்து அம்பலவாணன் கேட்டார்.

"அவர் நாவலின் கதாநாயகன் தேவன் விஞ்ஞானத்தில் நிபுணன் சார். ஒரு வேளை அவர் கதாநாயகன் கற்பனை அல்லாமல் ஒரு நிஜ மனிதனாக இருந்திருந்தால்.....?" யோசித்ததில் அது

உண்மையாக இருக்கும் என்றே அவர் உள்ளுணர்வு சொன்னது. சேதுபதி பற்றி துப்பு கொடுப்பதாக அன்று போன் செய்த அந்த நபர் கூட சேதுபதிக்கு இணையாக அந்த நாவலுக்கு முக்கியத்துவம் கொடுத்த நினைவு வந்தது.

"அப்படிப்பட்ட உயர்ந்த, பரிபூரணமான கதாநாயகனும், நாயகியும் நிஜமாகவே இந்த உலகில் வாழ்ந்திருக்க முடியும்னு நினைக்கிறியா அருண்?"

அருணும் அதையே தான் யோசித்துக் கொண்டு இருந்தான். "அறிவு இருக்க முடியாதுன்னு சொல்லுது. இதயமோ இருக்கலாம்கிறது சார்! இதில் எதை நம்பறது சார்?"

"இதயத்தை நம்பு அருண். அதுக்கு அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்களையும் உணர முடியும்" என்றார் அம்பலவாணன்.

## (9)

Life has its difficult side no matter how well we do. It's often very helpful and comforting to look back and honor our suffering and let it teach us to be more compassionate to ourselves and understanding of other people. – Bud Harris

கையில் இருந்த இரண்டு தங்க வளையல்களையும் காவ்யா கழற்றினாள். 'நமக்குள் இருந்த நெருக்கம் இன்றோடு முடிஞ்சிடுச்சு' என்று அதனிடம் மௌனமாய் சொன்னாள். அம்மாவின் பழைய நகைகளை அழித்து முதல் முதலாக அவள் செய்து கொண்ட நகை. எத்தனையோ கஷ்டங்களிலும் அவள் அதை இழக்கத் துணிந்ததில்லை. ஆனால் இன்று அதை இழக்க வேண்டிய அவசியம் அவளுக்கு வந்து விட்டது. தங்கைக்கு காலேஜ் ஃபீஸ் கட்டியாக வேண்டும். மேலும் சாப்பிடாமல் உயிர் வாழும் வித்தையும் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. இந்த வளையல்களை விட தங்கையின் கல்வி முக்கியம். வீட்டில் சாப்பிடுவது முக்கியம்.

வீடு எப்படி நடக்கிறது என்று அப்பா சந்திரன் சிறிதும் யோசித்ததாகத் தெரியவில்லை. அவர் யோசனையே வேறாக இருந்தது.

"அவன் என்ன சொல்றான்?"

"எவன்?"

"ராஜராஜன் மகன்"

"எதைப் பத்தி அவர் சொல்றது?"

"உன்னைக் கல்யாணம் செய்துக்கறது பத்தி"

"நான் அவரிடம் அதைப் பத்திப் பேசலை"

"ஏன்?"

"எனக்குப் பின்னால் ஒரு தங்கை, ஒரு தம்பி இருக்கிறாங்களே. அவங்களப் பத்தி நான் யோசிக்க வேண்டாமா?"

"கல்யாணத்திற்கப்புறம் அவன் யோசிக்க ஆரம்பிக்கிறான். அப்புறம் இது அவன் குடும்பம் ஆயிடுமே"

அவளுக்கு அவரது சிந்தனையே அவமானமாக இருந்தது. வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னாள். "மாத்தி சொல்றீங்க. கல்யாணத்திற்கப்புறம் நான் அவர்கள் குடும்பமாகி விடுவேன்"

"எல்லாமே ஒன்றுதானேம்மா". அவளுக்குப் பதில் சொல்லப் பிடிக்கவில்லை. "நீ அவன் கிட்ட கல்யாணம் பற்றி உடனே பேசறது நல்லதும்மா. வயிற்றில் ஒரு குழந்தையைக் கொடுத்துட்டு அவன் கழன்றுடுவானோன்னு பயமா இருக்கு. பணக்கார வீட்டுப் பசங்களை நம்ப முடியாது."

சவுக்கால் அடிபட்டது போல ஒரு கணம் அவள் துவண்டு போனாள். என்ன வார்த்தை இது? யார் யாரிடம் சொல்வது? இத்தனை நேரத்து பொறுமை காற்றில் பறந்தது. "அப்படி வயிற்றில் சுமக்கிற அளவுக்கு ஆயிட்டா ஒரு பெரிய தொகை அவர் கிட்ட இருந்து கறந்துடறேன். கவலைப் படாதீங்க"

சந்திரன் பதறினார். "அந்த அர்த்தத்தில் நான் சொல்லலை காவ்யா. உன் நல்லதுக்காக சொல்ல வந்தேன்."

"எனக்கு நல்லது செய்ய ஆசைப்பட்டா குடிச்சுட்டு ஆட்டம் போடறதை நிறுத்தி ஏதாவது ஒரு வேலைக்குப் போங்கப்பா. அது முடியாட்டியும் குடிப்பதை நிறுத்திட்டு வீட்டில் ஒரு கௌரவமான தகப்பனாய் இருந்தாலும் போதும்"

"என்ன பேசறாய் நீ. உன் அம்மா போன துக்கத்தை, கஷ்டத்தை மறக்கத்தானேம்மா நான் குடிக்கிறேன். அது உனக்கும் தெரியும்"

"அப்படின்னா தினம் எனக்கும் கொஞ்சம் கொண்டு வாங்க. எனக்கும் நிறைய துக்கம் இருக்கு. நானும் மறக்கணும்"

சந்திரன் வாயடைத்து நின்றார். இது வரை அவள் அவரிடம் இந்த அளவுக்குப் பேசியதில்லை. அவரைப் பார்க்கக்கூடப் பிடிக்காமல் அவள் வெளியேறினாள். குடும்பத் தலைவன் பொறுப்பில்லாதவனாய் அமைந்து விட்டால் அந்தக் குடும்பம் கடையாணி கழன்ற வண்டி மாதிரிதான். எப்போது வண்டி சாயும் என்று சொல்ல முடியாது. அப்படி சக்கரம் கழன்று விழாவிட்டாலும் நிம்மதியாய் தைரியமாய் பயணம் போக முடியாது. ஒவ்வொரு கணமும் மனதில் திக் திக் தான்.

மார்வாடிக் கடை வாசல் படியை அவள் மிதிக்கவும் அருணின் பைக் அங்கு வந்து நிற்கவும் சரியாக இருந்தது. முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அவளை அருண் பார்த்தான். "வண்டியில் ஏறு"

"இல்லை கொஞ்சம்..." அவள் பேச்சை அவன் கேட்பதாய் இல்லை. அவன் பைக்கை ஸ்டார்ட் செய்தான். அவள் மௌனமாக ஏறி அமர்ந்தாள். கடற்கரை மணலில் வந்தமரும் வரை அவன் ஒன்றும் சொல்லவில்லை.

உட்கார்ந்த பின் கேட்டான். "இந்த தடவை வளையல்தானே?" கண்களைத் தாழ்த்தி தலையை மட்டும் அசைத்தாள்.

"அடகா, விற்பனையா?"

அவள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். "வித்துடலாம்னு தான்..... வட்டியோடு பணம் கட்டி மீட்க முடியும்னு எனக்குத் தோணலை"

"எவ்வளவுக்குப் போகும்னு எதிர்பாக்கறே" சொன்னாள். அவள் கைகளிலிருந்த வளையல்களைப் பிடுங்காத குறையாக வாங்கினான். அவள் கைகளில் பணத்தை எண்ணித் திணித்தான். "உன் சுய கௌரவம் குறைய வேண்டாம். என்னையே மார்வாடின்னு நினைச்சுக்கோ." என்று சொன்ன படி வளையல்களை தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

அவள் கண்கள் லேசாகக் கலங்கின. "தேங்க்ஸ்" என்றாள். அவன் பேச்சை மாற்றினான். "எங்கப்பா கம்பெனி இண்டர்வ்யூ என்னாச்சு?" அவள் நடந்ததைச் சொன்னாள்.

"நீ தான் வீராங்கனை ஆச்சே. நாலு வார்த்தை நாக்கைப் பிடுங்கற மாதிரி கேட்டு விட்டுருக்கலாமே"

"உன் அப்பா கிட்ட போய் அப்படியெல்லாம் கேட்க முடியுமா?"

அவன் முகம் இளகியது. அவளைப் பார்த்த பார்வையில் பெருமிதம் தெரிந்தது.

"உங்கப்பா என்ன செய்யறார்?"

"கையில் காசில்லா விட்டாலும் தினம் குடிச்சுட்டு வர்றார். அதென்னவோ தெரியலை அருண், இந்தக் குடிகாரங்களுக்கு மட்டும் வீட்டுக்கு அரிசி பருப்பு வாங்க யாரும் உதவி செய்யறதில்லை. குடிக்க மட்டும் கடனோ, தர்மமோ கண்டிப்பாய் கிடைக்குது" அவள் வார்த்தைகளில் இருந்த உண்மை அவனை வாய் விட்டுச் சிரிக்க வைத்தது. அவள் கேட்டாள். "சேதுபதி விவகாரம் என்னாச்சு அருண்?"

ராமப்ப கௌடாவிலிருந்து நரசிம்மராஜுலு வரை அவன் விவரித்தான். அது ஒரு நிஜக் கதையாக இருக்கலாம் என்கிற எண்ணமே அவளுக்கு பிரமிப்பாக இருந்தது. தன் கவலை எல்லாம் மறந்து ஒரு குழந்தையைப் போல சந்தோஷப் பட்டாள். பல விடையில்லாத கேள்விகள் மனதில் எழ அது பற்றி அவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள்.

திடீரென்று அவள் அருணுக்கு நினைவுபடுத்தினாள். "அந்த ரங்காச்சாரி உன் கிட்ட உங்கப்பாவும் அம்மாவும் கூட அவரோட ஸ்டூடண்ட்ஸ்னு சொன்னாரில்லையா அருண். அவங்களும் சேதுபதியும் ஒரே சமயத்தில் படிச்சிருக்காட்டி கூட அவங்களோட சீனியராகவோ, ஜுனியராகவோ அவர் இருந்திருக்கலாம். அவங்க அவரைப் பத்தி கேள்விப் பட்டிருக்கலாம். எதற்கும் அவங்களைக் கேட்டுப் பாரேன் அருண்"

"எனக்குத் தோணலை பாரேன். எங்கப்பாவிடம் எனக்குக் கேட்கப் பிடிக்கலை. ஆனால் அம்மாவிடம் கேட்கலாம்" அவளுடன் பேசி விட்டு வீட்டுக்குத் திரும்பிய போது அவள் வலையல்கள் அவன் சட்டைப் பையில் இருந்து கொண்டு அவன் நெஞ்சை வருடிக் கொண்டே வந்தன. இதயத்தின் மிக அருகில் அந்த இனிமையான உரசல்களை ரசித்தபடி பைக்கை ஓட்டினான். அவளுடைய ஸ்பரிசம் தன்னுடனேயே இருந்தது போல் உணர்வு அவனுக்கு இருந்தது.

அன்றிரவு சாப்பிடும் போது அருண் அம்மாவிடம் கேட்டான். "அம்மா உனக்கு சேதுபதியைத் தெரியுமா?"

"சேதுபதியா? அது யார்?"

"அம்மா, நீ நான் தாமிரபரணின்னு ஒரு நாவல். அதை எழுதினவர்தான் அந்த சேதுபதி. அவரும் உங்க காலேஜ் தான் படிச்சார்னு ரங்காச்சாரி சொன்னார். அது தான் உனக்குத் தெரியுமான்னு கேட்டேன்."

ஒரு கணம் மாதுரி சிலையானாள். அவள் முகம் வெளுத்தது. மகனையே வெறித்துப் பார்த்தாள். "அம்மா உனக்கு என்னாச்சு?" அருண் பயந்து போனான்.

பிரம்மப் பிரயத்தனம் செய்து மாதுரி புன்னகை செய்தாள். "ஒன்றுமில்லை. திடீர்னு தலை சுற்றல். அது ஏனோ ரெண்டு நாளாய் சரியாய் தூக்கம் வரலை. அதனால்தான்னு நினைக்கிறேன். ஆமா, என்ன கேட்டாய்?"

"சேதுபதிங்கிற எழுத்தாளரைத் தெரியுமான்னு கேட்டேன்"

"நான் படிக்கிறப்ப அந்த மாதிரி கதை எழுதற ஆட்கள் யாரும் இருந்த மாதிரி தெரியலை அருண்"

"சரிம்மா நீ சாப்பிட்டுட்டு போய் ரெஸ்ட் எடுத்துக்கோ" மகன் அந்த இடத்தை விட்டு நகரும் வரை இயல்பாக இருப்பது போல் தாக்குப் பிடித்த மாதுரி அவன் போன பின் அப்படியே நாற்காலியில் சாய்ந்தாள். இத்தனை வருடங்கள் கழித்து சேதுபதி பேசப்படுவது, அதுவும் தன் மகனாலேயே பேசப் படுவது நல்ல அறிகுறியாக அவளுக்குப் படவில்லை.

இந்த உலகில் ஒவ்வொரு அணுவும் உங்கள் கட்டளையை மீற முடியாத போது, நீங்கள் என்னைப் பாவி என்று கூறுவது விசித்திரமாகவே இருக்கிறது. பாவம் செய்வதற்கான கட்டளை, கடவுளே, உம்மிடமிருந்து தானே வந்தது? – உமர் கய்யாம்

அன்றிரவு மாதுரிக்கு உறக்கம் வரவில்லை. பங்களாவின் தோட்டத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்தபடி ஆகாயத்தில் பிறை நிலாவைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அருண் சேதுபதி பற்றிப் பேசி அவள் மன அமைதியைக் குலைத்து விட்டான். சமூகத்தில் அவளைப் பார்த்துப் பொறாமைப் படாதவர்கள் குறைவு. அழகு, அந்தஸ்து, பணம் எல்லாமே அவளிடம் இருந்தது. அழகும், அறிவும் நிறைந்த கணவனும், மகனும் அவளுக்கு இருந்தார்கள். எதை ஆசைப் பட்டாலும் அதை அடையக் கூடிய அதிர்ஷ்டசாலி என்று எல்லோரும் அவளைப் பார்த்துப் பொறாமைப் பட்டார்கள். காரணம் உலகம் எப்போதும் புறத் தோற்றங்களை வைத்தே எதையும் எடை போடுகிறது. ஆனால் எத்தனை நாட்கள் வெறுமையை மட்டுமே தன் வாழ்வில் உணர்ந்திருக்கிறாள் என்பதை அவள் மட்டுமே அறிவாள். அந்த வெறுமையை நிரப்ப பணத்தாலோ, புகழாலோ, பகட்டான பொருட்களாலோ முடிந்ததில்லை.

கோடீசுவரர் செல்வரங்கத்தின் ஒரே மகளாகப் பிறந்த அவள் பிறந்த போதே தாயை இழந்து விட்டாள். தன் சுய சம்பாத்தியத்தில் எல்லா செல்வத்தையும் அடைந்த அவருக்குத் தன் மகள் தாயில்லாத குறை தெரியாமல் வளர வேண்டும் என்ற பேராவல் இருந்தது. தன் விதவைத் தமக்கை விசாலத்தையும் அவள் மகன் ராஜராஜனையும் வரவழைத்து தங்களுடன் இருத்திக் கொண்டார். பெண் குழந்தை இல்லாத அத்தை மாதுரியைத் தன் மகளாகவே நினைத்து வளர்த்தாள்.

தந்தையின் மிதமிஞ்சிய செல்லமும், அத்தையின் மிதமிஞ்சிய பொறுமையும் ஒரு கட்டுப்பாடில்லாத, தன்னிச்சையான வாழ்வை அவளை வாழ வைத்தது. அப்பாவிற்கு மகள் என்ன செய்தாலும் அது சரி தான். அத்தையோ அவள் நடவடிக்கைகள் சில பிடிக்காமல் இருந்தாலும் அதை தன் இயல்பான பொறுமையால் சகித்திருக்கிறாள். சில சமயங்களில் செல்வரங்கம் தன் விஷ வார்த்தைகளால் தமக்கையை நோகடித்திருக்கிறார். ஆனால் அத்தை ஒரு வார்த்தை கூட எதிர்த்துப் பேசியதில்லை.

"ஏன் அத்தை உனக்குக் கோபமே வராதா?"

"கோபம் ராட்சஸ குணம். அது மனுஷங்களுக்கு வரக் கூடாது."

"அப்படின்னா கோபப்படறவங்க எல்லாமே ராட்சஸர்களா?"

"ஆமா, அந்த நிமிஷத்துக்கு அவங்க ராட்சஸர்கள்தான்."

"அப்படின்னா அப்பா ஏன் அடிக்கடி ராட்சஸன் ஆறார்?"

அத்தை தன் தம்பியைப் பார்த்துப் புன்னகைத்தது மாதுரிக்கு இப்போதும் பசுமையாக நினைவிருக்கிறது. அத்தையின் அந்த அசாத்தியப் பொறுமை எவ்வளவு கஷ்டமானது என்பதை இப்போதும் அவளால் உணர முடிகிறது. அத்தையை அவள் எத்தனையோ வேதனைப் படுத்தியிருக்கிறாள். ஆனால் அத்தை பாசத்தைத் தவிர வேறெதையும் அவளிடம் காட்டியதில்லை.

"சாரி அத்தை," என்று ஆகாயத்தைப் பார்த்து சொன்னாள்.

"வாழ்க்கையை மறுபடி ஆரம்பத்திலிருந்து வாழ முடிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்று இப்போது குழந்தைத் தனமாக அவள் கேட்டுக் கொள்கிறாள்.

எத்தனையோ மாறுதல்கள் செய்திருக்கலாம்.... எத்தனையோ முட்டாள்தனங்களைத் தவிர்த்திருக்கலாம்.... நினைக்க நினைக்க மனம் கனத்தது. இத்தனை துக்கங்களுக்கு நடுவே பாலைவனச் சோலையாக மகன் அருண் இருந்து வருகிறான் என்பதுதான் அவளுக்கு ஒரே ஆறுதல். ஆனால் அவனும் இப்போது தேவை இல்லாமல் சேதுபதி பற்றி பேச்சு எடுக்கிறான். ஏன் எல்லோரும் முடிந்ததை முடிந்ததாகவே விட மாட்டேன் என்கிறார்கள் என்பது தான் அவளுக்குப் புரியவில்லை.....

"ஏம்மா நீ தூங்கலையா?" அருணின் குரல் கேட்டுத் திரும்பினாள்.

"இல்லை தூக்கம் வரலை."

அவள் எதிரே இருந்த இன்னொரு பிரம்பு நாற்காலியில் அவன் அமர்ந்தபடி கேட்டான். "ஏன்?"

இந்தக் கேள்வியைக் கேட்பது சுலபம். ஏன்? அது ஏன்? இது ஏன்?... என்று யாரும் கேட்கலாம். ஆனால் பதில் சொல்வது கஷ்டம். அதுவும் எல்லாரிடமும் சொல்ல முடிவது கஷ்டத்திலும் கஷ்டம்.

மாதுரி மௌனமாக இருந்தாள்.

"அம்மா நான் ஒரு கேள்வி கேட்டா கோவிச்சுக்குவியா?"

"கேளு."

"நீ ஏன் அப்பாவைக் கல்யாணம் செய்துகிட்டாய்? அப்பாவின் குணாதிசயங்கள் எல்லாம் உனக்கு சின்ன வயதிலிருந்தே நல்லா தெரியும். அப்படியிருந்தும் நீ அந்த முட்டாள்தனம் ஏன் செஞ்சே?"

'இன்று யார் முகத்தில் விழித்து விட்டு இவனிடம் இப்படி மாட்டிக் கொள்கிறோம்' என்று மாதுரி யோசித்தாள். இவனை விட்டால் இன்னும் என்னவெல்லாம் கேட்பானோ என்று பயந்தவளாய் பேச்சை மாற்றினாள். "இதை இன்னும் பத்து வருஷம் கழிச்சுக் கேளு. உன் கல்யாணம் பத்திப் பேச வேண்டிய நேரத்தில் ஏன் என் கல்யாணத்தைப் பத்திப் பேசறே. கலெக்டர் மகளுக்காக உன்னைக் கேட்டு தினம் போன் வருது. பொண்ணு பார்க்க அழகாய் இருக்காடா. நீ என்ன சொல்றே"

"அவங்களை வேற இடம் பார்க்கச் சொல்லு" அவன் பதில் அவள் எதிர்பார்த்தது தான். காரணம் சென்ற வாரம் டி.எஸ்.பி மனைவி செய்த போன்.

மகனிடம் நேரடியாகவே கேட்டாள். "போன வாரம் டி.எஸ்.பி சம்சாரம் போன் செஞ்சா. தினமும் பைக்கில் உன் பின்னால் யாரோ ஒரு பொண்ணு உட்கார்ந்துட்டு போறதா சொன்னா. யாரது அருண்?"

"அதையும் டி.எஸ்.பி சம்சாரமே சொல்லியிருப்பாளே"

"அவளுக்குத் தெரியலையாம்"

"அவ பேர் காவ்யா"

"அவங்கப்பா என்ன செய்றார்?"

"தினம் சாராயக்கடைக்குப் போறார்"

மாதுரி அதிர்ந்து போனாள். இன்றைய நாள் நிஜமாகவே சரியில்லை. "என்ன சம்பந்தம்டா இது?"

"பொண்ணு ரொம்ப நல்லவம்மா"

"அருண், நல்லா யோசிச்சுதான் பேசறியா?"

"நான் யோசிக்காம பேச மாட்டேன்மா."

மாதுரி மௌனமானாள். தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளையிடம் பேசுவது தோற்பதற்காகத்தான். சிறிது நேரம் இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்து விட்டு பின்பு எழுந்தார்கள்.

படுக்கப் போன பின்பும் அவளுக்கு நிறைய நேரம் தூக்கம் வரவில்லை. ஒருபக்கம் அருண் குடிகாரன் மகளைக் காதலிப்பதற்காக கவலைப்பட்டாள், மறுபக்கம் சேதுபதி பற்றி அவன் துப்பு துலக்கக் கிளம்பியதற்காக பயப்பட்டாள்.

மறுநாள் அருண் ஆபிசிற்குக் கிளம்பும் வரை காத்திருந்து விட்டு அவன் சென்றவுடன் அவன் அறைக்குள் நுழைந்தாள். அவனது மேசையைப் பார்வையிட்டாள். மேசை மீது சேதுபதி பற்றி வந்திருந்த பத்திரிக்கைத் தகவல்கள் அடங்கிய ஃபைல் இருந்தது. அதன் பக்கத்தில் 'நீ நான்

தாமிரபரணி' நாவல் இருந்தது. ஃபைலைப் பிரித்தாள். பெரும்பாலானவை சேதுபதி பத்திரிக்கைகளுக்குக் கொடுத்த பேட்டிகள், அவரது ஃபோட்டோக்கள்..... பத்திரிக்கையில் இருந்து சேதுபதி அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

கல்லூரி நாட்களில் என்றுமே இருப்பது தெரியாதபடி ஒதுங்கி நின்ற சேதுபதி பின்னால் திடீரென்று பிரபலமாகி பிரகாசித்ததும், மறுபடி தலைமறைவானதும் அவளால் இன்னமும் நம்ப முடியாததாகவே இருக்கிறது. ஒரு மாபெரும் துப்பறியும் நாவலின் கடைசி அத்தியாயம் காணாமல் போனது போல பலர் மனதில் ஒரு பேராவலைத் தூண்டி விட்டு மறைந்து போன சேதுபதியின் புன்னகையை அவளால் ரசிக்க முடியவில்லை.

பல வருடங்களுக்கு முன் ஒரு நாள் மாலைப் பொழுதில் தன்னிடம் தயங்கித் தயங்கி சேதுபதி பேசியதெல்லாம் அவளுக்கு அந்தப் புகைப்படம் பார்த்தவுடன் மனதில் மறு ஒளிபரப்பாகியது. சேதுபதி அவ்வளவு தூரம் பேசி அவள் கேட்டது அன்று மட்டுமே. ஆனால் அன்று அவரை அவள் பொருட்படுத்தவில்லை.

கிளம்புவதற்கு முன்னால் இரக்கத்துடன் அவளைப் பார்த்து சேதுபதி சொன்னார். "மாதுரி எதிர்காலத்தில் உன்னையே உன்னால் மன்னிக்க முடியும்னு எனக்குத் தோணலை"

அதற்கு மேல் தாங்க முடியாமல் மகனின் நாற்காலியில் அமர்ந்து அவள் அழ ஆரம்பித்தாள். அவர் சொன்னது போல இன்று அவளாலேயே அவளை மன்னிக்க முடியவில்லை.

## (10)

Keep on going and the chances are that you will stumble on something, perhaps when you are least expecting it. I have never heard of anyone stumbling on something sitting down.
– Charles F. Kettering

சேதுபதி பற்றி இது வரை பன்னிரண்டு நபர்களை அருண் விசாரித்து விட்டான். எல்லாரும் அம்பலவாணனுடன் ஆரம்ப கட்டத்தில் சேதுபதி விஷயத்தில் ஆர்வம் காட்டியவர்கள், அல்லது ஏதாவது ஒரு வகையில் சேதுபதியுடன் தொடர்பு வைத்து இருந்தவர்கள். அவர்களிடம் இருந்து பெரியதாய் புதுத் தகவல் எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

சேதுபதி யாரோடும் சீக்கிரம் பழகி விடுகிற மனிதராக இருந்திருக்கவில்லை. பழகியவர்களுடன் கூட அவர் எவ்வளவு தேவையோ அவ்வளவுதான் தொடர்பு வைத்திருந்தார். ரங்காச்சாரி தவிர மற்றவர்கள் அனைவரும் நாவல் பிரபலமான பிறகுதான் அவருடன் பரிச்சயமானவர்கள். எல்லோரும் கூச்ச சுபாவமுள்ள ஒரு நல்ல மனிதரை நினைவு கூர்ந்தார்கள். அவர்களுக்குத் தெரிந்த வரை சேதுபதியிடம் நெருக்கமாக பழகியவர் ரங்காச்சாரிதான். அவர்களும் சேதுபதிக்கு விஞ்ஞானத்தில் ஈடுபாடு இருந்ததாக தங்களுக்குத் தெரியவில்லை என்றார்கள். ஒரே ஒருவர் மட்டும் சிங்கப்பூர் போய் இருந்ததால் அவரை அவனால் சந்திக்க முடியவில்லை.

அடுத்த கட்டமாக சேதுபதி படித்த கல்லூரிக்குச் சென்று அவருடைய நண்பர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்க அவன் கிளம்பிக் கொண்டு இருக்கையில் அவன் செல் போன் இசைத்தது. அழைத்தது காவ்யாதான்.

"அருண், ஒரு சந்தோஷமான விஷயம்"

"என்ன காவ்யா உனக்கு கல்யாணம் நிச்சயமாயிடுச்சா?" அருண் குறும்பாகக் கேட்டான்.

"பாவி உன்னைப் போய் காதலிச்சேனே."

"அது இல்லையா, சரி விடு. வேறென்ன விஷயம். உங்கப்பா குடியை நிறுத்திட்டாரா?"

"அழுகாச்சி சீரியல்களை நம்ம தமிழ் டிவி சேனல்கள் போடறதை நிறுத்தறப்பதான் அதெல்லாம் நடக்கும்"

"அப்புறம் என்ன?"

"எனக்கு வேலை கிடைச்சிடுச்சு"

அருண் மனம் சந்தோஷத்தில் நிறைந்தது. "எந்தக் கம்பெனியில் காவ்யா?"

"உங்கப்பா கம்பெனியில்தான். இப்ப தான் குரியரில் அப்பாயின்மென்ட் ஆர்டர் வந்துச்சு. போன கம்பெனியில் வாங்கினதை விட ரெண்டு மடங்கு சம்பளம்" அருணிற்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. அதைப் புரிந்து கொண்டவள் போல அவள் சொன்னாள். "இதே ரியாக்ஷன்தான் எனக்கும். நேரா உங்கப்பா காலில் விழுந்து அழணும் போலத் தோணுது"

"போய் விழு" அருண் எரிச்சலோடு சொன்னான். அவன் தன் தந்தையிடம் கொண்டுள்ள வெறுப்பை அவள் அறிவாள். சிரித்து விட்டு மாலை வழக்கம் போல சந்திப்பதாகச் சொல்லி போனை வைத்தாள்.

அப்பா ஒரு கேள்வி கூட கேட்காமல் அவளை அனுப்பி விட்டு இப்போது வேலை கொடுத்ததை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை. இதில் ஏதோ இருக்கிறது என்று தோன்றியது. ஆனாலும் அவளுக்காக அவன் சந்தோஷப்பட்டான். அவள் பணக் கஷ்டம் இனி தீர்ந்து விடும், அவள் பாரம் குறைந்து விடும் என்பதில் ஒரு மன நிறைவு இருந்தது. ஆனால் இதே சம்பளத்தில் வேறு ஒரு நல்ல கம்பெனியில் அவளுக்கு வேலை கிடைத்திருந்தால் இன்னும் சந்தோஷப்பட்டிருப்பான்.

கல்லூரிக்குள்ளே நுழைந்த போது அங்கு போலீஸ் ஜீப் நிற்பதைக் கண்டான். போய் விசாரித்த போது நேற்றிரவு யாரோ கல்லூரியின் பழைய ரெகார்டுகளுக்கு தீ வைத்து விட்டுப் போய் விட்டதாகத் தெரிந்தது.

"இது நாள் வரைக்கும் பஸ்ஸுக்கும் ரயிலுக்கும் தான் தீ வச்சுட்டு இருந்தானுக. இப்ப இங்கயும் வந்து இந்தக் காரியம் செய்ய ஆரம்பிச்சுட்டானுக. என்ன லாபமோ தெரியலை. கலி முத்திடுச்சு. அதான் இப்படியெல்லாம் நடக்குது. அதோட அங்க பழைய ரெகார்டுகளை டேட்டாவாய் வச்சிருந்த கம்ப்யூட்டரையும் கரப்ட் செய்து காலியாக்கிட்டாங்க.... விசாரிக்க இன்ஸ்பெக்டர் உள்ளே போய் இருக்கார். நல்ல வேளையாய் இப்பத்து ரெகார்டெல்லாம் பத்திரமாய் இருக்குன்னாங்க... நீங்க எந்தப் பத்திரிக்கையிலிருந்து வர்றீங்க?"

இந்த முறையும் எதிர்த்தரப்பு தன்னை முந்திக் கொண்டதை அருண் உணர்ந்தான். இங்கு இன்று வர வேண்டும் என்று அம்பலவாணனிடம் சொன்ன போது யாரெல்லாம் அந்த இடத்தில் இருந்தார்கள் என்று ஆலோசித்தான். சபாபதி தான் ஏதோ ஃபைல் தேடும் சாக்கில் அங்கு இருந்தது நினைவுக்கு வந்தது. இன்னும் யோசித்த போது சில நாட்களாகவே அம்பலவாணனுடன் பேசும் போதெல்லாம் ஏதோ ஒரு சாக்கு வைத்து அந்த இடத்தில் சபாபதி நடமாடுவது அவனுக்கு

நினைவுக்கு வந்தது. இந்த உபயோகமான தகவலுடன் இன்னோர் உண்மையும் அவனுக்குப் புலப்பட்டது. புதிருக்கெல்லாம் ஏதோ ஒரு விடை அந்த ரெகார்டுகளில் இருக்கிறது!

****

அந்த மனிதர் கேட்ட கேள்விகள் எல்லாம் விசித்திரமாக இருப்பதாக சபாபதிக்குப் பட்டது. அருணைப் பற்றி என்னவெல்லாமோ கேட்டார். சில அபத்தமாக இருந்தன. அவன் அடிக்கடி சிரிப்பானா, அவன் வாழ்க்கைக் குறிக்கோள் என்ன, அவனுக்கு என்னவெல்லாம் பிடிக்கும், என்னவெல்லாம் பிடிக்காது, அவனுக்கு எந்த மாதிரி சந்தர்ப்பங்களில் கோபம் வரும், அவன் எதற்கெல்லாம் பயப்படுவான், அவனுக்கு நெருங்கிய நண்பர்கள் யார், எதிரிகள் யார், அவன் அப்பா எப்போதாவது பத்திரிகை ஆபிசிற்கு வந்ததுண்டா, அவன் யாரையாவது காதலிக்கிறானா – இப்படி ஏராளமான கேள்விகள்.... சபாபதி தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொன்னார்.

காதல் பற்றிய கேள்விக்கு ஏளனமாய் சபாபதி பதில் சொன்னார். "ஒரு பொண்ணு பின்னாடி அலையறான். அந்தப் பொண்ணு குடும்பம் பிச்சைக்காரக் குடும்பம் தலைவரே"

சபாபதியை அந்த மனிதர் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தார். சபாபதி அருண் பற்றிப் பேசிய போதெல்லாம் வெறுப்பு கொப்பளித்ததை அவர் கவனிக்கத் தவறவில்லை. ஈனமான மனிதர்களுக்கு உயர்ந்த மனிதர்கள் ஏதாவது கெடுதல் செய்திருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. காரணமில்லாமலேயே பொறாமையும், வெறுப்பும் அவர்கள் மீது இவர்களுக்கு ஏற்படுவது இயற்கை. தங்களால் முடியாத ஒரு உயர்ந்த தரமான வாழ்க்கை அவர்கள் வாழ்ந்து கொண்டு வருவதைப் பார்க்க இவர்களுக்கு சகிப்பதில்லை.

அந்த மனிதர் முகத்தில் முதல் முறையாக புன்னகை தவழ்ந்தது. சபாபதிக்கு அந்த மனிதரின் கூர்மையான கண்களும், அந்த அபூர்வ புன்னகையும் ஏனோ ரத்தத்தை உறைய வைத்தது. முடிந்த வரை அவருடன் போனில் பேசுவதையே சபாபதி விரும்பினார். ஆனால் இன்று நேரில் வர அந்த மனிதர் கட்டளை இட்டதால் வேறு வழி இல்லாமல் நேரில் வந்தார்.

வெளி வராந்தாவில் ஒரு மந்திரி காத்துக் கொண்டிருக்கையில் தன்னை உள்ளே அழைத்து அவர் பேசுவது பார்ப்பவர்கள் கண்களில் பெரிய கௌரவமாகத் தெரியும் என்பதில் சபாபதிக்கு சந்தோஷம். ஆனால் முக்கியத்துவம் அவருக்கல்ல, அருணுக்குத்தான் என்பது உள்மனதிற்குத் தெரிந்ததால் அருண் மீது சபாபதிக்கு வெறுப்பு இன்னும் அதிகமாகியது.

"உன் கிட்ட அவன் எப்படிடா பழகுவான்?"

"வெளிப்பார்வைக்கு மரியாதை தந்தாலும் உள்ளுக்குள்ள தான்தான் புத்திசாலி, நானெல்லாம் முட்டாள்ங்கிற அபிப்பிராயம் அவனுக்கு இருக்கு தலைவரே. எல்லாம் எடிட்டர் கொடுக்கிற இடம்தான். எத்தனையோ வருஷம் நானும் அவர் கூட வேலை பார்த்திருக்கேன், ஆனா நேத்து வந்த அவனுக்கு அங்க இருக்கற மரியாதை எனக்கில்லை..." பேசப் பேச வெறுப்பு உச்சத்துக்குப் போய் சபாபதி தன்னையும் மீறி தன் ஆசையை வெளியிட்டார்.

"பேசாம அவனைத் தீர்த்துக் கட்டறது நல்லது தலைவரே. அவன் கண்டிப்பா சேதுபதி விவகாரத்தோட முழு விவரமும் தெரியாம ஓய மாட்டான். அது வரைக்கும் அவனை விட்டு வைக்காதீங்க தலைவரே"

அந்த மனிதரின் புன்னகை பெரிதாகியது. ஒவ்வொரு மனிதனும் ஒரு தீவிரமான உணர்வால் உந்தப்படும் போது அடி மனதில் உள்ளதை வெளிப்படுத்தி தான் யார் என்பதைக் காட்டுகிறான் என்பது அவர் அனுபவம். அவரும் தன் எண்ணங்களை வெளிக்காட்டாமல் பேசினார்.

"அவன் ஊர் பேர் தெரியாதவன் இல்லைடா. அவங்கப்பன் மனசு வச்சா தமிழ்நாட்டுல இன்னைக்கு எதுவும் செய்ய முடியும்டா"

"ஆனா அந்த ஆளுக்கு மகனை ஆகிறதில்லை தலைவரே. அப்புறம் உங்க சக்திக்கு முன்னாடி அவங்க எல்லாம் எந்த மூலைக்குத் தலைவரே"

அந்த மனிதர் காதில் அது விழுந்ததாகத் தெரியவில்லை. திடீரென்று எழுந்து நின்றார். "சரி கிளம்புடா. ஏதாவது புது தகவல் கிடைச்சா போன் செய்" அந்த மனிதரைப் புரிந்து கொள்ள முடியாமல் சபாபதி வெளியேறினார்.

உடனே ஒரு தலை உள்ளே எட்டிப் பார்த்தது. "தலைவரே அந்த மந்திரியை உள்ளே அனுப்பட்டுங்களா?"

"அந்த நாயை அரை மணி நேரம் கழிச்சு அனுப்பு. எனக்கு இன்னும் கொஞ்சம் வேலையிருக்கு"

அந்த மனிதர் அருண் நிலைமையில் இருந்து எல்லா கோணங்களையும் அலசினார். கிட்டத்தட்ட அருணாகவே மாறி விட்டார் என்றே சொல்ல வேண்டும். சில நிமிடங்களில் எல்லாம் தெளிவாகியது. நிதானமாக தாமிரபரணி ஆற்றங்கரையில் இருக்கும் பூங்கொடி கிராமத்தில் உள்ள ஒரு வீட்டுக்குப் போன் செய்ய ஆரம்பித்தார்.

# (11)

There is nothing harder than the softness of indifference. – Juan Montalue

காவ்யா வேலைக்குச் சேர்ந்து மூன்று நாட்களாகி விட்டன. அந்த மூன்று நாட்களில் ஒரு முறை கூட ராஜராஜன் சிரித்தோ, புன்னகைத்தோ அவள் பார்த்ததில்லை. ஒரு வார்த்தை கூட தேவையில்லாமல் பேசியோ, தேவையில்லாதது என்று அவர் நினைத்த அடுத்தவர் பேச்சைக் கேட்டோ அவள் பார்த்ததில்லை.

வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் நன்றி தெரிவிக்கும் பாவனையில் கை கூப்பி அவள் ஏதோ சொல்ல ஆரம்பிக்கையில் அவர் போனில் ஏதோ பேச ஆரம்பித்து விட்டார். மறு நாள் பழையபடி நன்றி சொன்னாள். அவர் அதைக் காதிலேயே வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. அவளுக்கு டைப் செய்ய ஏதோ 'டிக்டேட்' செய்ய ஆரம்பித்து விட்டார். அவளுக்கு பளார் என்று அறைந்தது போல இருந்தது.

அருண் எப்போதும் அவளிடம் சொல்வான், "கோபம், வெறுப்பு இதெல்லாம் கூடத் தாங்கலாம் காவ்யா. ஆனா எங்கப்பா கண்டுக்கவே மாட்டார். இந்த 'கண்டுக்காத' குணம் இருக்கு பார், இதை மாதிரி நம்மள அவமானப்படுத்தறது வேற எதுவும் இல்லை தெரியுமா?"

அவன் சொன்னது நிஜம் என்பது அவளுக்கு அனுபவத்தில் தெரிந்தது. ஆனால் மற்றபடி அவர் பேச்சிலோ, நடவடிக்கைகளிலோ அவளையோ மற்றவர்களையோ சிறுமைப் படுத்தும் எண்ணம் சிறிதும் தெரியவில்லை. ஆபிசில் மற்றவர்கள் அவர் சுபாவத்திற்குப் பழக்கப்பட்டிருந்ததால் வேலை பற்றியல்லாது எது பற்றியும் அவரிடம் பேசப் போகவில்லை. எல்லோரும் அவர் மீது நிஜமாகவே பெருத்த மரியாதை வைத்திருந்தார்கள் என்பது அவர்கள்

பேச்சில் தெரிந்தது. அவளும் அதிலிருந்து அவரிடம் அனாவசியமாக எதையும் சொல்லாமல் இருக்கப் பழகிக் கொண்டாள்.

அன்று ஏதோ ஒரு லெட்டர் அவர் அவளுக்கு 'டிக்டேட்' செய்து கொண்டிருந்த போது அவரது செகரட்டரி அறைக்குள் தயக்கத்துடன் வந்தார். 'டிக்டேட்' செய்வதை நிறுத்திய ராஜராஜன் என்ன என்பது போல் அவரைப் பார்த்தார்.

"உங்க பழைய ப்ரொஃபசர் ரங்காச்சாரி உங்க அப்பாயின்மெண்டுக்காக நிறைய தடவை போன் செய்துட்டார், சார். அவர் கிட்ட கறாராய் ஏதாவது சொல்லவும் எனக்குக் கஷ்டமாயிருக்கு...."

ஒரு கணம் மௌனம் சாதித்த ராஜராஜன் "என்னவாம்" என்று கேட்டார்.

"உங்க காலேஜ் பழைய ஆசிரியர், மாணவர் எல்லாம் சேர்ந்து ஏழைப் பசங்க படிக்க பண உதவி செய்ய ஏதோ டிரஸ்ட் அமைக்கப் போறாங்களாம். அதுக்கு உங்க டொனேஷன் எதிர்பார்க்கிறார் போல இருக்கு"

"எவ்வளவு எதிர்பார்க்கிறார்?"

"கிட்டத்தட்ட அஞ்சு லட்சம் கிடைச்சா உபயோகமாயிருக்கும்னு நினைக்கிறார்."

"பத்து லட்சத்திற்குச் செக் போட்டு இன்னைக்கே அனுப்பிச்சிடுங்க."

"சரி.. அப்புறம் உங்க மகனைப் பத்தி ஏதோ பேசணும்னு சொன்னார்."

ராஜராஜன் பார்வை காவ்யா மீது விழுந்தது. அது எதேச்சையாகவா, காரியமாகவா என்று காவ்யாவால் ஊகிக்க முடியவில்லை. தன் பார்வையைச் சலனமில்லாமல் மறுபடி தன் செகரட்டரி மீது அவர் திருப்பினார். "நான் ரொம்ப பிசியாய் இருக்கேன்னு சொல்லிடுங்க."

மறுபடி டிக்டேஷன் தொடங்க காவ்யா எழுதத் தொடங்கினாள். செகரட்டரி வெளியேறினார்.

***

சந்திரனுக்கு நடப்பதெல்லாம் சரியாகத் தோன்றவில்லை. எந்த வீட்டிற்குத் தன் மூத்த மகள் மருமகளாகப் போவாள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாரோ அந்த வீட்டின் கம்பெனிக்குத் தன் மகள் வேலைக்காரியாகப் போனதில் அவருக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. அவர் மகள் இன்னும் பிழைக்கத் தெரியாத பெண்ணாக இருப்பதாகவே அவருக்குப் பட்டது. பணக்காரர்கள் மீது அவருக்கு என்றுமே அவநம்பிக்கை. அவளிடம் அது பற்றிப் பேசினாலோ அவள் அனாவசியமாகக் கோபப்படுகிறாள். அவள் மீது அவருக்கு மிதமிஞ்சிய பாசம் இருந்தது. அவரை முதல் முதலில் அப்பா என்று அழைத்த குழந்தை அவள். அவரது மனைவி இறந்த பின் அவரது மற்ற குழந்தைகளுக்கு அக்காவாக இல்லாமல் அம்மாவாக இருந்தவள் அவள். இத்தனை வருடங்களாக அவள்தான் இந்தக் குடும்பத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். அவளை நேசித்த அளவு அவர் தன் கடைக்குட்டி மகனைக் கூட நேசித்ததில்லை. அப்படி அவர் நேசித்த மகள் அவள் காதலிப்பவனைத் திருமணம் செய்து கொண்டால் இந்தக் குடும்பமே கடைத்தேறி விடும்.

அதன் பின் எப்படி எல்லாம் இருக்கலாம் என்று அவர் கனவு காண ஆரம்பித்துப் பல காலம் ஆகி விட்டது. ஒரு குவார்ட்டர் வாங்க ஒவ்வொருவர் காலையும் அவர் பிடிக்க வேண்டியதில்லை. ஸ்காட்ச்சிலேயே குளிக்கலாம். காரிலேயே ஊர் சுற்றலாம். பார்ப்பவர்கள் எல்லாம் அவரை ஒருவித பயபக்தியோடு பார்ப்பார்கள். ராஜராஜன் சம்பந்தி என்றால் சும்மாவா?....

நினைக்க நினைக்க இந்தக் கல்யாணத்தைக் காலம் தாழ்த்துவதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஒரு தந்தையாக அவள் கல்யாணத்தை நடத்துவதில் அவருக்குப் பெரிய பொறுப்பிருக்கிறது. அவளுக்குப் பின்னால் இன்னொரு பெண்ணும் கல்யாணத்திற்குத் தயாராக இருக்கிறாள். ஏதாவது கண்டிப்பாக செய்தாக வேண்டும்.

இந்த முடிவை எடுத்தது அவரா இல்லை சற்று முன் அவர் குடித்த சரக்கா என்று தெரியவில்லை. ஆனால் முடிவெடுத்தவர் இன்றே ராஜராஜனிடம் சென்று இந்தக் கல்யாணம் பற்றிப் பேசுவது என்று தீர்மானித்தார்.

அவர் தள்ளாட்டத்துடன் ராஜராஜன் பங்களாவை அடைந்த போது இரவு மணி எட்டு.

"எனக்கு ராஜராஜனைப் பார்க்கணும்" என்று கூறியபடி நின்ற ஆளை கூர்க்கா மேலும் கீழும் பார்த்தான்.

"போய்யா சும்மா! அவரை அப்பாயின்மெண்ட் இல்லாமப் பாக்க முடியாது."

"எனக்கெதுக்கய்யா அப்பாயின்மெண்ட்? நான் யார் தெரியுமா? நான் அவர் சம்பந்தி."

கூர்க்காவின் மூக்கை சாராய நெடி துளைத்தது. தயவு தாட்சண்யம் இல்லாமல் அவரைக் கழுத்தைப் பிடித்துத் தள்ள அவன் தாயாரானான். அந்த நேரமாகப் பார்த்து கோயிலுக்குப் போய் விட்டு வந்த மாதுரியின் கார் கேட்டை நெருங்கியது.

கார் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த மாதுரியை சந்திரன் கைகூப்பி வணங்கினார். "நமஸ்காரம் சம்பந்தியம்மா."

மாதுரிக்கு ஒரு கணம் ஒன்றும் விளங்கவில்லை. அதைப் புரிந்து கொண்டது போல அவர் தெளிவுபடுத்தினார். "நான் தான் காவ்யாவோட அப்பா."

மாதுரிக்கு சில நாட்களுக்கு முன் மகனுடன் பேசியது நினைவுக்கு வந்தது.

"அவங்கப்பா என்ன செய்றார்?"

"தினம் சாராயக்கடைக்குப் போறார்."

சந்திரன் அவள் காரின் ஜன்னல் பக்கம் வந்தார். சாராய நெடி அவள் மூக்கைத் துளைத்தது. அவரது தோற்றமும், அந்த நெடியும் அவளுக்கு அவமானமாக இருந்தது. அந்த கூர்க்காவும், அவளது கார் டிரைவரும் இருக்கையில் இப்படியொரு சந்திப்பு அவளை தர்மசங்கடப் படுத்தியது. பங்களாவுக்குள் ராஜராஜன் கார் இருந்ததையும், அருண் பைக் இல்லாததையும் அவள் கவனித்தாள். மகன் அந்தப் பெண்ணை எவ்வளவு தூரம் நேசிக்கிறான் என்பதை அன்றைய பேச்சிலேயே அவள் கணித்திருந்ததால் இந்த ஆளை அலட்சியப்படுத்தி அனுப்பவும் அவள் தயங்கினாள்.

"அருண் இல்லை. இன்னொரு நாள் வாங்களேன்," என்றாள்.

ஆனால் அவர் நகர்கிற மாதிரி தெரியவில்லை. "நான் அருணைப் பார்க்க வரலை. எனக்கு சம்பந்தி ராஜராஜனைப் பார்க்கணும்," என்றார்.

இந்த ஆளை எப்படி சமாளிப்பது என்று தெரியாமல் மாதுரி விழித்தாள். இந்த வீட்டில் அவளிடமே அவள் கணவன் இரண்டு வார்த்தை பேசுவது அபூர்வமாய் இருக்கையில் இந்த மனிதனை அவர் தலை நிமிர்ந்தாவது பார்ப்பாரா என்பது சந்தேகமாக இருந்தது. அதையும் விட அந்த விதமான வரவேற்பிற்கு இந்த ஆள் எப்படி நடந்து கொள்வார் என்பதை அவளால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

# (12)

This whole society has been created around a certain idea that is basically hypocritical. Here you have to be what others expect you to be, not what you are. That's why everything has become false, phony.

– Osho

என்ன பிரச்சனையானாலும் அதை வெளியாட்களுக்குத் தெரியாமல் சமாளிக்க வேண்டும் என்று நினைத்த மாதுரிக்கு சந்திரனை உள்ளே அழைப்பதைத் தவிர அந்த நேரத்தில் வேறு வழி தெரியவில்லை. அவரை உள்ளே விடச் சொல்லி கூர்க்காவிற்குச் சைகை செய்தாள். டிரைவர் போர்ட்டிகோவில் காரை நிறுத்தியதும் வேகமாக இறங்கி உள்ளே போய் சோபாவில் அமர்ந்தாள். அவளுக்கு ஏற்பட்ட படபடப்பு நொடிக்கு நொடி அதிகரித்துக் கொண்டு இருந்தது. வந்த ஆளை எப்படி சமாளிப்பது என்று யோசித்தால் மூளை சிறிதும் ஒத்துழைக்கவில்லை.

இது போல் வேறொரு மனிதன் வந்திருந்தால் அவள் தயவு தாட்சண்யம் இல்லாமல் கூர்க்காவை விட்டு கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பாள். ஆனால் மகன் அருண் உறுதியாகக் காதலிக்கும் பெண்ணின் தகப்பனை அப்படிச் செய்து அந்தப் பெண்ணிற்குக் கோபம் வந்து, அதனால் அருணுக்கும் கோபம் வந்து அவன் தன்னை விட்டுப் பிரிந்து விட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் அவளுள் பெரும் பயத்தைக் கிளப்பியது. ஏற்கெனவே அருண் அந்த வீட்டில் வேண்டா வெறுப்பாகத் தான் இருந்து வருகிறான்.

தள்ளாட்டத்துடன் பங்களாவினுள்ளே நுழைந்த சந்திரன் அந்த போதையிலும் பங்களாவின் பகட்டான பிரம்மாண்டத்தைப் பார்த்து பிரமித்துப் போனார். 'என்ன இது வீடா அரண்மனையா?' இந்த அரண்மனையின் ஒரே வாரிசு தன் மகளைக் காதலிக்கிறான் என்பதே அவருக்குப் பெருமையாக இருந்தது. 'இது என் மகள் வீடு. இனிமேல் என் ரேஞ்சே தனி' என்று போதையில் தன்னையே மெச்சிக் கொண்டார்.

"உட்காருங்க" என்று மாதுரி எதிரே இருந்த சோபாவைக் கை காண்பித்தாள். அவர் உட்கார்ந்தார்.

"என்ன விஷயமாய் அவரைப் பார்க்கணும்?" என்றவள் ஹாலில் யாராவது வேலையாட்கள் இருக்கிறார்களா என்று பார்த்தாள். நல்ல வேளையாக யாரும் இல்லை.

"என் பொண்ணுக்கும் உங்க பையனுக்கும் கல்யாணம் முடிக்கிற விஷயமாய்த்தான்."

'சம்பந்தம் பேச வந்திருக்கும் லட்சணத்தைப் பார்' என்று உள்ளே குமுறினாலும் வெளியே அமைதியாகச் சொன்னாள். "அதற்கு இப்ப என்ன அவசரம்?"

"இப்ப செய்யாம நாலு குழந்தை பெத்ததுக்கப்புறமா கல்யாணம் செஞ்சு வைப்பாங்க. நல்ல வேடிக்கை போங்கம்மா. அவங்க ரெண்டு பேரும் பழக ஆரம்பிச்சு பல வருஷமாச்சு. பையனப் பெத்தவங்க நீங்க அவசரப்படாம இருக்கலாம். பொண்ணப் பெத்தவன் நான் அப்படி இருக்க

முடியுமா? இன்னைக்கே இது விஷயமா ஒரு முடிவு எடுத்துடணும். நீங்க உங்க வீட்டுக்காரரைக் கூப்பிடறீங்களா?"

அவள் எச்சிலை மென்று விழுங்கினாள். "அவருக்கு நாளைக்கு ஏதோ ஜெனரல் பாடி மீட்டிங் இருக்கு. அது விஷயமாய் பிசியாய் இருக்கார். இன்னொரு நாள் வாங்களேன்."

சந்திரனுக்குக் கோபம் வந்தது, "என்னம்மா விளையாடறீங்களா. நான் சீரியசா அவரைப் பாக்கணும்கிறேன். நீங்க மீட்டிங் அது இதுன்னு இழுத்தடிக்கப் பாக்கறீங்க. பையன் கல்யாணப் பேச்சை விட மீட்டிங் முக்கியமா? நான் உங்க கிட்டப் பேசத் தயாராயில்ல. அவரைக் கூப்பிடுங்க."

இந்தக் குடிகாரனை இனி சமாளிப்பது கஷ்டம் என்பதை உணர்ந்தவளாக மாதுரி எழுந்தாள். அருணும் இன்னமும் வரவில்லை. ராஜராஜன் இது போன்ற ஆட்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். ஆனால் இந்த வீட்டு நிலவரம் தெரியாத இந்த மனிதர் பையனின் தந்தையுடன் பேச வந்திருக்கிறார். தயக்கத்துடன் மாடிப்படி ஏறினாள்.

ராஜராஜன் அவள் உள்ளே நுழைந்த போது ஒரு சட்டப் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தார். அபூர்வமாகத் தனதறைக்கு வந்த மனைவியை கேள்விக் குறியுடன் பார்த்தார்.

தயங்கித் தயங்கி அவள் விஷயத்தைச் சொன்னாள்.

"குடிகாரன் கிட்ட என்ன பேசறது மாதுரி. வெளியே அனுப்பிச்சுடு".

"எனக்கு பயமாய் இருக்குங்க."

அவர் சட்டப் புத்தகத்தை மூடினார். "பயப்பட இதில் என்ன இருக்கு?"

"என் வாழ்க்கையில் நான் என் மகனைத் தவிர எல்லாத்தையும் இழந்துட்டேன். இப்ப அவனையும் இழக்க விரும்பலை. அந்த ஆளை வெளியே அனுப்பி அந்த ஆள் கோபத்தில் மகள் கிட்ட ஏதாவது சொல்லி, அவள் அருண் கிட்ட ஏதாவது சொல்லிட்டா...." அவளுக்கு முடிக்கத் தெரியவில்லை. கண்களில் நீர் நிரம்பி வழிந்தது.

இதென்ன பைத்தியக்காரத்தனம் என்பது போல் அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு மறுபடி புத்தகத்தைத் திறந்தார்.

அவள் கெஞ்சுகிற தொனியில் கேட்டாள். "நான் என்ன செய்யட்டும்?"

"அதான் சொன்னேனே. அந்த ஆளை வெளியே போகச் சொல்லு. உன் பையன் வந்தவுடனே விஷயத்தைச் சொல்லிக்கலாம்."

"எனக்குப் பயமாய் இருக்குங்க. நான் அவன் கிட்ட சொல்றதை விட அந்தப் பொண்ணு அவன் கிட்ட சொல்றது தான் எடுபடும். காதலுக்குக் கண் இல்ல."

"கண் இல்லாதது காதலுக்கு அல்ல, காமத்துக்கு", என்று சொன்ன ராஜராஜன் மறுபடி படிக்க ஆரம்பித்தார்.

மாதுரி நகராமல் அங்கேயே நின்றாள். அந்தக் குடிகாரன் முன்னால் போய் நிற்பதை விட இங்கு நிற்பது உத்தமம் என்று அவளுக்குத் தோன்றியது.

ஓரிரு நிமிடங்கள் கழித்து புத்தகத்திலிருந்து கண்களை எடுக்காமல் ", சரி, உன் பையன் செல்லுக்கு ஒரு போன் போட்டு அவனையே வரச் சொல்லு."

அதுவும் சரிதான் என்று நினைத்தவளாக மாதுரி அங்கிருந்தே மகனுக்குப் போன் செய்தாள்.

"என்னம்மா விஷயம்?"

"அருண், கொஞ்சம் அவசரமாய் வீட்டுக்கு வர்றியா....."

மாதுரியின் குரலில் தொனித்த பதட்டம் அவனுக்குப் புதிது. அவள் அனாவசியமாய் போன் செய்பவளும் அல்ல. "என்னம்மா விஷயம்? உனக்கு உடம்புக்கு ஏதாவது....."

"நான் நல்லாதான் இருக்கேம்ப்பா"

"அப்பா...?"

"அவரும் நல்லாத் தான் இருக்கார். நீ வாயேன், சொல்றேன்."

மாதுரி போனை வைத்தாள். சட்ட புத்தகத்தில் இருந்து கண்களை எடுக்காத கணவன் மீது கோபம் வந்தது. "நாளைக்கு என்ன பரீட்சையா?" என்று கேட்கத் தோன்றியது. அதைக் கேட்காமல் தனக்கு ஏற்பட்ட வேறொரு சந்தேகத்தை வாய் விட்டுக் கேட்டாள். "அவன் வந்து என்ன செய்வான்?"

"வாய்க்கு வந்தபடி திட்டி அந்த ஆளை அனுப்பிடுவான்" ,அவர் புத்தகத்திலிருந்து பார்வையைத் திருப்பாமல் அவளுக்குப் பதில் சொன்னார்.

கீழேயிருந்து சந்திரன் குரல் கோபத்தில் ஒலித்தது. "ஏன்யா, ஏழைன்னா அவ்வளவு இளக்காரமாப் போச்சா? ஒரு மனுஷன் இவ்வளவு நேரமா இங்க உட்கார்ந்துட்டிருக்கேன்...."

மாதுரி தன் கணவனை தர்மசங்கடத்துடன் பார்த்தாள். "அந்த ஆள் தான்...."

ராஜராஜன் சட்ட புத்தகத்தை மூடி வைத்து விட்டுக் கிளம்பி கீழே வந்தார். கையைப் பிசைந்து கொண்டு மாதுரி பின் தொடர்ந்தாள்.

அவரைப் பார்த்து சந்திரன் எழுந்து நின்று கை கூப்பினார். "நமஸ்காரம் சம்பந்தி".

உணர்ச்சியே இல்லாமல் "நமஸ்காரம்" என்று கூறி ராஜராஜன் எதிரே உள்ள சோபாவில் அமர்ந்தார். ராஜராஜனைப் பார்த்த பிறகு சந்திரனுக்கு காரணம் தெரியாத பயம் தொற்றிக் கொண்டது. கற்சிலை போல உணர்ச்சியே இல்லாமல் உட்கார்ந்திருக்கும் இந்த மனிதரிடம் இனி எப்படி வந்த விஷயத்தைப் பேசுவது என்று தெரியாமல் விழித்தார். ஓரிரு நிமிடங்கள் கனத்த மௌனத்தில் நகர்ந்தன. பின்பு சந்திரன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

"என்னைத் தெரிகிறதா?"

இல்லை. நீங்கள் யார்?"

"நான் காவ்யாவோட அப்பா."

"காவ்யா யார்?"

"காவ்யா என் மகள்."

அந்த சமயத்திலும் மாதுரிக்கு சிரிப்பை அடக்குவது கஷ்டமாக இருந்தது. ராஜராஜன் முகத்திலோ சிரிப்பின் அறிகுறியே இல்லை. "சரி நீங்கள் யார்?" என்று மறுபடி சாவதானமாகக் கேட்டார்.

"நான் காவ்யா ..... " என்று ஆரம்பித்த சந்திரனுக்குத் தன் பேச்சின் அபத்தம் புரிந்தது. லேசாய் கோபம் கிளம்ப அதை அடக்கிக் கொண்டு நேரடியாகச் சொன்னார். "என் மகளை உங்க மகன் காதலிக்கிறான்."

"சரி."

அந்த சமயத்தில் போர்ட்டிகோவில் அருணின் பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. நிம்மதிப் பெருமூச்சு விட்டவளாக மாதுரி சொன்னாள். "அவனே வந்துட்டான்."

"யார்?" சந்திரன் கேட்டார்.

ராஜராஜன் சொன்னார், "உங்க மகளோட காதலன்."

## (13)

மூன்று நாட்களில் மாறக் கூடிய ஒரு புதுமை உணர்ச்சிக்கு காதல் என்று பெயரில்லை. அதன் பெயர் பிராந்தி. காதலென்பது தேவலோக வஸ்து.

– பாரதியார்

மாதுரி அவசரமாக வாசலை நோக்கி ஓடினாள். அருண் உள்ளே வருவதற்கு முன் நிறுத்தி விஷயத்தைச் சொன்னாள். அருண் முகம் கோபத்தில் சிவந்தது. "அந்த ஆளை நீ ஏம்மா உள்ளே விட்டே?"

"அந்தப் பொண்ணை நீ காதலிக்கிறியே, அவங்கப்பாவை மரியாதைக் குறைவாய் நடத்தினா நீ கோபிச்சுக்குவியேன்னு தான் ..."

அருணிற்குத் தன் தாயைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று விளங்கவில்லை. "நீ எதுக்கு அந்த ஆள் சொன்னான்னு அப்பாவைக் கூப்பிடப் போனே?"

"எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலைடா"

யார் முன்னால் தலை குனியக் கூடாதென்று நினைத்தானோ அவர் முன்னால் இந்தக் குடிகாரனால் தலை குனிய நேர்ந்து விட்டதே என்று நினைக்கையில் அவனுக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவில்லை. உள்ளே ஒரு எரிமலையே வெடிக்க "எங்கே அந்த ஆள்?" என்று கேட்டான்.

அவனது சத்தம் உட்கார்ந்திருந்த சந்திரனை எழுந்து நிற்க வைத்தது. அருண் கண்களில் தீப்பந்தங்கள் எரிந்தன. "யாருய்யா நீ?"

"நான் காவ்யாவோட அப்பா"

"உனக்கு என்னய்யா வேணும்?" சற்றும் மரியாதை இல்லாமல் அவன் கேட்ட விதம் சந்திரனை அவமானத்துக்குள்ளாக்கியது. போதை எல்லாம் விலகி தெளிவுக்கு வந்தார். அவர் உடல் லேசாக நடுங்கியது.

"அவளை நீங்க எப்ப கல்யாணம் செய்துக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியணும்"

"அவளை நான் கல்யாணம் செய்துக்கப் போறேன்னு உனக்கு யாருய்யா சொன்னது?"

மாதுரியே அதிர்ந்து போனாள். சந்திரன் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. எதிர்ப்பிருந்தால் அது ராஜராஜனிடம் இருந்து வரும் என்று எதிர்பார்த்தவர் அருணே இப்படிப் பேசுவான் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லை. உள்ளே நுழைந்த போது இருந்த எக்காளம் எல்லாம் போய் அதிர்ச்சியுடன் கேட்டார். "அப்படின்னா...."

"உன்னை மாதிரி ஒரு குடிகாரக் கபோதி பொண்ணை கட்டிக்க நான் தயாரில்லை. மரியாதையா வெளியே போ"

"அப்படின்னா என் பொண்ணு கதி.....?" அவருக்கு வயிற்றைக் கலக்கியது.

"சாராயக்கடைக்கு உன் கூட தினம் வர்ற எவனையாவது பார்த்து கட்டி வை" அவனது வார்த்தைகளின் உஷ்ணம் அவரை எரித்தது.

ஒரு தந்தையின் துக்கம் இன்னொரு தந்தைக்குத்தான் தெரியும் என்று எண்ணியவராக நிலைகுலைந்து போய் ராஜராஜனைப் பார்த்தார். ராஜராஜனோ யாரோ சம்பந்தமில்லாத இரண்டு பேர் சண்டையைப் பார்ப்பது போல் வெறுமனே உணர்ச்சி இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்ததன் அவமான உணர்வு சந்திரனை பலமாய் அழுத்தியது. என்னென்னவோ சொல்ல வேண்டும் என்று நினைத்தவருக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

ஒரு உண்மையை மட்டும் கடைசியில் குரலடைக்கச் சொன்னார். "நீங்க இப்படிப் பேசக்கூடாது. அவ தாங்க மாட்டா"

"உன்னையே அப்பனாய் தாங்கறவ எதையும் தாங்குவா. வெளிய போய்யா"

சந்திரனுக்கு சப்தநாடியும் ஒடுங்கிப் போயிற்று. போதையில் தள்ளாடியபடி உள்ளே நுழைந்தவர், அது நீங்கி அவமானம், அதிர்ச்சி, துக்கம், எல்லாம் சேர்ந்து அவர் இதயத்தை இமயமாக அமுக்க சக்தியிழந்து தளர்ச்சியுடன் அந்தப் பங்களாவை விட்டு வெளியேறினார்.

நடந்தது எதையும் ஜீரணிக்கவோ, நம்பவோ முடியாமல் மாதுரி தன் மகனைப் பார்த்தாள். அவளுக்குத் தன் மகனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. "அப்ப நீ அந்தப் பொண்ணைக் காதலிக்கலையா அருண்?"

"நீ ஏம்மா ரெண்டையும் போட்டு குழப்பிக்கறே? அவளைக் காதலிக்கறதுக்கும் அவங்கப்பாவோட இந்த அநாகரிகத்த ஏத்துக்காததுக்கும் சம்பந்தம் இல்லைம்மா. அது வேற, இது வேற. அவ படற கஷ்டத்துக்கு எல்லாம் இந்த ஆள்தாம்மா காரணம். அதனால் இந்தாளை அறையற மாதிரி நாலு வார்த்தை பேசணும்னு பல தடவை நினைச்சிருக்கேன். இன்னைக்கு அருமையாய் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிடுச்சு. பயன்படுத்திட்டேன். அவ்வளவு தான்"

"இந்த ஆள் அவ கிட்ட போய் நீ நடத்தினதையும், சொன்னதையும் சொன்னா அவ வருத்தப்பட மாட்டாளா?"

"என்னை அவளுக்கு நல்லாத் தெரியும்மா. அவளையும் எனக்கு நல்லாத் தெரியும்மா. ஒருத்தரை ஒருத்தர் சந்தேகப்படற, தப்பாய் நினைக்கிற கட்டத்தை எல்லாம் நாங்க என்னைக்கோ தாண்டிட்டோம்."

மாதுரிக்கு இன்னும் தெளிவு பிறக்கவில்லை. "என்னவோப்பா, நான் நிஜமாவே பயந்துட்டேன்" என்றாள். ராஜராஜன் எழுந்தார்.

அப்போது தான் அவர் அங்கு இருப்பதை அருண் உணர்ந்தான். மகனின் காதல் பற்றிய தகவலோ, அவன் காதலியின் குடிகாரத் தகப்பனாரின் பிரவேசமோ அவரை பாதித்ததாகத் தெரியவில்லை. அது பற்றி அவனிடம் ஏதாவது கேட்க வேண்டும் அல்லது பேச வேண்டும் என்று கூட அவர் நினைத்த மாதிரித் தெரியவில்லை. ஆனாலும் சந்திரனின் நடவடிக்கைக்காக அவரிடம் அருண் "சாரிப்பா" என்றான். ராஜராஜன் ஒன்றும் சொல்லாமல் அவன் தோளை லேசாகத் தட்டிக் கொடுத்து விட்டு தன் வேலையைப் பார்க்க மாடி ஏறினார்.

அவர் தட்டிக் கொடுத்த இடத்தைத் தடவியபடி அருண் பிரமித்து நின்றான். அவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அவராக அவனைத் தொட்டது இது தான் முதல் முறை. அவனுக்கு இது கனவா நனவா என்று புரியவில்லை. தாயிடம் வாய் விட்டுக் கேட்டான். "அம்மா இது கனவில்லையே".

அவன் அதைக் கேட்ட விதமும், அவர் தொட்ட இடத்தைத் தடவி நின்ற விதமும் அவள் கண்களைக் கலங்க வைத்தன. தொண்டையை அடைக்கத் தலையை மட்டும் அசைத்தாள். அவன் இன்னும் கனவு நிலையிலேயே இருப்பது போல உணர்ந்தான். நடந்தது எல்லாமே மறந்து போயிற்று. அவர் தட்டிக் கொடுத்தது ஒன்றுதான் பிரதானமாய் அவன் மனதில் நின்றது. தாயின் கையை இழுத்து தனதருகே சோபாவில் அவளை உட்கார வைத்தான். "அம்மா எனக்கு அந்த ஆள் இங்கே வந்ததில் இருந்து, நான் இங்க வர்ற வரை நடந்ததெல்லாம் சொல்லு. நீ எதையும் விடக்கூடாது".

அவள் அப்படியே எதையும் விடாமல் சொன்னாள். அவர் "கண் இல்லாதது காதலுக்கு அல்ல, காமத்துக்கு" என்றதையும், "அவன் வாய்க்கு வந்தபடி திட்டி அந்த ஆளை அனுப்பிடுவான்" என்றதையும் மூன்று மூன்று முறை சொல்ல வைத்தான். கடைசியில் சந்தேகம் தீராமல் கேட்டான். "நிஜமாவே அவர் அப்படி சொன்னாராம்மா?"

அவனைக் கோபத்தோடு முறைத்தாள். அவள் தோளில் தலை சாய்த்து சொன்னான். "கோவிச்சுக்காதம்மா. அவர் என்னை இந்த அளவு புரிஞ்சுகிட்டிருப்பார்னு நான் கனவுல கூட நினைச்சுப் பார்த்ததில்லை. அதான்......"

மாதுரிக்குப் பேச வார்த்தைகள் கிடைக்கவில்லை. அவன் தலைமுடியைக் கோதி விட்டாள்.

தனியாக இருக்கையில் அன்றைய தின நிகழ்ச்சிகளை அருண் ஆழ்ந்து யோசித்தான். அப்பா லேசாகத் தட்டிக் கொடுத்ததற்கு என்ன அர்த்தம்? சாரிப்பா என்றதற்குப் பரவாயில்லை என்பது போல அவர் சொன்ன பதிலா, இல்லை வேறு ஏதாவதா? இன்னொரு விஷயமும் இடித்தது. வீட்டுக்குக் குடித்து விட்டு சம்பந்தம் பேச வந்திருக்கும் ஒரு கடைநிலை மனிதரின் மகளைக் காதலிப்பதற்குக் கூட அப்பா எதிர்ப்பு தெரிவிக்காமல், குறைந்த பட்சம் முகம் சுளிக்கக் கூட செய்யாமல் இருப்பதற்குக் காரணம் எவளையாவது காதலி, எக்கேடாவது கெட்டுப் போ என்று அர்த்தமா? பெண் யாரென்ற குறைந்த பட்ச ஆவல் கூட இல்லாததற்குக் காரணம் அவள் யாரென்று முன்கூட்டியே அவருக்குத் தெரிந்திருக்குமோ? அன்று மாலைதான் அவரது செக்ரட்டரி ரங்காச்சாரி அவனைப் பற்றிப் பேச வேண்டும் என்று சொல்கிறார் என்றவுடன் அவர் பார்வை காவ்யா மீது விழுந்தது என்று சொன்னாள்.....

திடீரென்று அவன் எண்ண ஓட்டம் தடம் மாறியது. ரங்காச்சாரி அவன் விஷயமாக என்ன பேச ராஜராஜனை அழைத்தார்? ஐந்து லட்சம் கேட்டதற்குப் பத்து லட்சம் தர முன் வந்த ராஜராஜன் அவரிடம் நேரடியாகப் பேசவோ, மகனைப் பற்றி அவர் சொல்வதைக் கேட்கவோ முன் வராதது ஏன்?... கேள்விகளுக்கு அவனால் விடை காண முடியவில்லை.

## (14)

when God has made each of us so completely unique, it is funny that we expend so much energy trying to dress, act, speak, and even think the same way.
– Brad Jensen

அந்த கிராமவாசி மருதமுத்துவிற்கு கிட்டத்தட்ட 55 வயதிருந்தாலும் அவரது கருத்து முறுக்கேறிய உடற்கட்டைப் பார்த்தால் பொதுவாக யாரும் பத்து வயது குறைத்தே மதிப்பிடுவார்கள். அந்த போன் கால் வந்த போது சாப்பிட்டு விட்டு வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொண்டிருந்தார். அலட்சியமாக ரிசீவரை எடுத்தவருக்கு எதிர்ப்பக்கம் யாரென்று தெரிந்த போது கைகள் லேசாக நடுங்க ஆரம்பித்தன.

போன் ரிசீவரைக் கீழே வைத்த போது அவர் முகம் வெளுத்துப் போயிருந்தது. சைத்தான் கிட்டத் தட்ட 25 வருடங்கள் கழித்து அவரைத் தொடர்பு கொண்டு இருக்கிறது. அந்த சைத்தானுக்கு பயந்தது போல மருதமுத்து யாருக்கும் இதுவரை பயந்தது இல்லை. முதல் முதலாய் அந்த நபரைப் பார்த்தவுடனேயே மருதமுத்து ஆசைப்பட்டது ஒன்றே ஒன்றிற்குத்தான். இன்னொரு முறை இந்த நபரின் தரிசனத்திற்கு ஆளாகக் கூடாது என்பதுதான் அந்த ஆசையாக இருந்தது. மருதமுத்துவின் ஆழ்மனத்தில் பீதியைக் கிளப்பிய அந்த நபர் இத்தனைக்கும் முதல் சந்திப்பின் போது குரலைக் கூட உயர்த்திப் பேசவில்லை. ஆனால் அந்தக் கண்களில் எமனையே மருதமுத்து பார்த்தார். அம்பலவாணனை சர்வ சாதாரணமாக ஜெயிலில் அடைத்து விட்டு அவர் கொடுப்பதாகச் சொன்ன இனாமைத் தானே கொடுப்பதாக அந்த நபர் சொன்ன போது தன்னை விட்டால் போதும் என்ற முடிவுக்கு வந்து அந்த இனாம் எல்லாம் தேவையில்லை என்று சொல்லி அங்கிருந்து தப்பி வந்ததை இன்னமும் மருதமுத்து சாதனையாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

தன் பத்து வயதில் தந்தையையும் தாயையும் இழந்து தாயின் தமக்கையின் ஆதரவில் வாழ்வதற்காக அவர் பூங்கொடி கிராமத்திற்கு வந்தார். பெரியம்மா செங்கமலத்தை அந்த ஊரே ஆச்சி என்றுதான் அழைத்தது. விதவையான அவளுக்குக் குழந்தைகள் இல்லாததால் அவளும் அவரைத் தன் மகனாகவே வளர்த்தாள். எல்லாமே அவர் வாழ்வில் நன்றாகப் போய்க் கொண்டிருந்தது. செங்கமலத்திற்கு சில ஏக்கர் விளைநிலமும், தோட்டங்களும் இருந்தன. படிப்பு முடிந்தவுடன் வேலை ஏதும் தேடப் போகாமல் விவசாயத்திலேயே கவனம் செலுத்தி அமைதியாக அவர் வாழ்ந்து கொண்டிருந்தார். பெரியம்மா அவருக்குப் பெண் பார்க்க ஆரம்பித்த வேளையில் ஒரு காதல் ஜோடி அங்கு தஞ்சம் தேடி வந்தது. அன்றிலிருந்து அவர் வாழ்க்கை தடம் புரள ஆரம்பித்தது. அந்தப் பெண்ணைப் பார்த்த அந்தக் கணமே வாழ்ந்தால் அவளோடு என்ற முடிவை அவர் இதயம் எடுத்து விட்டது. ஆனால் அவளோ தன் காதலன் மீது உயிரையே வைத்திருந்தாள். மருதமுத்து என்ற ஒரு மனிதர் இருந்ததை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை.

மருதமுத்து ஆரம்பத்தில் முடிந்த வரை அவனைப் போல் இருக்கவும், பேசவும் எல்லாம் அவர் முயற்சி செய்து பார்த்தார். ஆனால் அவர்கள் வந்த ஒரு வாரத்திலேயே எதிலுமே தான் அவளுடைய காதலனோடு போட்டி போட முடியாது என்பது மருதமுத்துவிற்குப் புரிந்து போய் விட்டது. எல்லாவற்றிலுமே அவன் உயரத்தில் இருந்தான். ஆச்சி செங்கமலம் கூட சில நாட்களில் அவனைத் தன் மகன் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க ஆரம்பித்தது மருதமுத்துவிற்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்த்தது போல ஆயிற்று. அவன் முன்னால் சுற்றி இருந்த எல்லாரும் களையிழந்து போனார்கள் என்றே சொல்ல வேண்டும். அன்றிலிருந்து மருதமுத்து அவனை வெறுத்தது போல யாரையும் என்றும் வெறுத்ததில்லை.

போன் ரிசீவரைக் கீழே வைத்ததிலிருந்து நிலை கொள்ளாமல் தவிக்கும் மருதமுத்துவை ஆச்சி செங்கமலம் ஆச்சரியத்துடன் பார்த்தாள். ஆச்சிக்கு வயது சுமார் 75 இருக்கும். குள்ளமான உருவம், தும்பைப் பூவாய் நரைத்த தலை, வெள்ளை சேலை, நெற்றியை நிறைத்த விபூதிப் பட்டை. ஆச்சி கேள்விக்குறியுடன் எதிரே வந்து நின்ற போது மருதமுத்துவிற்கு உடனடியாக பதில் சொல்ல முடியவில்லை. ஆச்சி பொறுமையாக நின்றாள். அவள் அப்படி எதிரே நின்றது அவர் இரத்தக் கொதிப்பை அதிகப் படுத்தியது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விஷயத்தைச் சொன்னார். ஆச்சியின் அமைதி அவர் முழுவதும் சொன்ன பிறகு காணாமல் போயிற்று. ஒவ்வொரு வார்த்தையாக அவரைத் திரும்பவும் சொல்ல வைத்தாள்.

ஆச்சி கேட்கும் எதையும் எப்போதும் தெளிவாகப் புரியும் வரை சொல்பவரை விட மாட்டாள். நம்மைப் பற்றிக் குறைவாக அடுத்தவர்கள் நினைப்பார்கள் என்பது போன்ற எண்ணம் எல்லாம் என்றுமே அவளை பாதித்ததில்லை. அப்படியும் சிலர் அவளிடம் எரிச்சலடைந்தால் "நான் படிக்காதவ ராசா, எனக்கு மெதுவாத்தான் தலையில ஏறும்" என்று சொல்லி தனக்குப் புரியும் வரை விட மாட்டாள். இதனாலேயே ஆச்சியிடம் பேச்சுக் கொடுப்பவர்கள் குறைவு. மருதமுத்துவுக்குத் தெரிந்த வரை அந்த இரண்டு பேர் மட்டுமே சிறிது கூட அவள் கேள்விகளால் முகம் சுளிக்காதவர்கள்.

அவர் இரண்டாம் முறை சொன்னதை ஜீரணித்துக் கொள்ள அவளுக்குச் சிறிது நேரம் தேவைப்பட்டது. "இங்கே ஒருத்தன் வருவான்னு அவர் சொன்னாரே அவன் பேர் என்ன?"

"அருணாம். யாரோ பத்திரிக்கை ரிப்போர்ட்டராம்"

"அவன் இங்க எப்படி வருவான்? யார் சொல்லியிருப்பாக?"

"அவன் ரொம்ப புத்திசாலியாம். அவனாவே கண்டு பிடிச்சுடுவானாம்"

"ஏன், அவரே அவன தடுத்து நிறுத்தறது?"

அதை அந்த ஆளிடம் கேட்க முடியுமா என்று மனதில் நினைத்த மருதமுத்து வாய் விட்டு ஒன்றும் சொல்லவில்லை.

மருதமுத்துவின் நடுக்கம் இப்போது ஆச்சியை ஆச்சரியப் படுத்தவில்லை. அந்த மனிதரின் சரித்திரம் அப்படி. ஆச்சி சிறிது நேரத்தில் மருதமுத்துவையும் அந்த மனிதரையும் மறந்து பழைய நினைவுகளில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள். சுமார் அரை மணி நேரம் சுவரில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தவள் எழுந்து வீட்டை விட்டு வெளியே கிளம்பினாள். போகும் அவளையே பார்த்துக் கொண்டிருந்த மருதமுத்துவின் மனதில் பொறாமையும் வெறுப்பும் போட்டி போட்டுக் கொண்டு வெடித்தன. அவள் எங்கே போகிறாள் என்பதை அவர் அறிவார். தாமிரபரணி நதிக் கரைக்குப் போகிறாள். இனி நேரம் போவது தெரியாமல் வழக்கமாக உட்காரும் இடத்தில் உட்கார்ந்திருப்பாள். அந்த நதியும் அவளும் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வார்கள். சுமார் ஒரே வருடம் அவளுடன் பழகிய அந்த இருவர் அவள் மனதில் வேர் விட்டு ஆலமரமாகப் ஆணித்தரமாக நிற்கிறார்கள். ஆனால் தனது பத்தாம் வயதிலிருந்து அவளுடன் இருக்கும் மருதமுத்துவோ...?

இதே விஷயமாய் அந்த நாட்களில் அவளுடன் வாய் விட்டு மருதமுத்து சர்ச்சை செய்திருக்கிறார். அவள் வாய் விட்டு அவருக்குப் பதில் சொன்னதில்லை. ஒரு முறை அவர் பேசிய போது 'அவனு'ம் இருந்தான். அவன் புன்னகையுடன் ஒரு பழந்தமிழ் பாடலைச் சொன்னான். "நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை நீர்க்குள் பாசி போல் வேர் கொள்ளாதே".

இன்னமும் அவருக்கு அதை நினைக்கையில் வலிக்கிறது. அறிவியல் ஆகட்டும், இலக்கியம் ஆகட்டும், தத்துவம் ஆகட்டும் அவனுக்குத் தெரியாததேயில்லை. அந்தப் பாட்டை அவன்

சொன்னவுடனேயே அவனுக்கு வேட்டு வைக்க அவர் தீர்மானம் செய்து விட்டார். அவன் சொன்ன பாசி விஷமாகியது. அவனை அழிக்க எண்ணியதில் அன்று அவர் வெற்றியும் கண்டார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவனை மட்டும் தனியாக அவரால் அழிக்க முடியவில்லை. அவனில் ஒரு பாகமாகவே ஆகி விட்ட 'அவளு'ம் சேர்ந்தே அழிந்தாள். ஆச்சி அதற்காக இன்னும் அவரை மன்னிக்கவில்லை. ஏன், அவரில் ஒரு பகுதியும் 'அவள்' அழிவிற்கு அவரை இன்று வரை மன்னிக்கவில்லை.

அத்தனையையும் அவர் மறந்து வாழ முயற்சி செய்து கொண்டிருக்கையில், அவர் வாழ்க்கையில் ஒரு விதமாய் அமைதி ஏற்படத் துவங்கி இருக்கும் இந்த நேரத்தில் அருண் என்ற அபஸ்வரம் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது.

## (15)

Never seek to tell thy love
Love that never told can be;
For the gentle wind doth move
Silently, invisibly.
– Barlett

தன் தந்தை குடித்து விட்டு அருண் வீட்டிற்கு சென்று கலாட்டா செய்த தகவல் அருண் சொல்லித் தான் காவ்யா அறிந்தாள். அவமானத்தால் அவள் கூனிக் குறுகிப் போனாள். கண்களில் நீர் மல்க அருணிடம் எத்தனை முறை 'சாரி அருண்' என்று சொல்லியிருப்பாள் என்றே தெரியவில்லை. ஒரு கட்டத்தில் அருணே நொந்து போனான். இவளிடம் இதை சொல்லி இருக்க வேண்டாமோ?

அவளால் அவன் ராஜராஜன் முன்பு எந்த அளவு அவமானத்தை அனுபவித்திருப்பான் என்று ஊகிக்க முடிந்ததால் அவளுக்குத் தன் தந்தையை மன்னிக்கவே முடியவில்லை. அங்கு போவதற்கான அறிகுறியைச் சிறிதும் காண்பிக்காத அவர் திடீரென்று போய் இப்படியெல்லாம் நடந்து கொண்டு வந்திருப்பது அவளுக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அவளுடைய தன்மான உணர்வு அவளை சித்திரவதை செய்து கொண்டிருந்தது முகத்தில் நன்றாகவே தெரிந்தது.

"சாரி...சாரி" என்று மீண்டும் ஒரு முறை சொன்னாள்.

"சும்மா கீறல் விழுந்த ரிகார்டாட்டம் அதையே சொல்லாதே காவ்யா. நீ இவ்வளவு ஃபீல் செய்வேன்னு தெரிஞ்சிருந்தா நான் உன் கிட்ட இதைச் சொல்லியிருக்கவே மாட்டேன். விட்டுத் தள்ளு. வருத்தப்பட்டு என்ன செய்யறது?"

"இந்த வருத்தம் இயலாமையில வர்றது அருண். எவ்வளவு சொன்னாலும் மனசு சமாதானமாக மாட்டேன்கிறது. கையைப் பிடிச்சு இழுத்த ஆளுக்கு செருப்படி குடுத்து கணக்கை நேர் செய்து மறந்துடலாம். ஆனா இந்த மாதிரி பொறுப்பில்லாம நடந்துக்கற குடிகாரத் தகப்பனை என்ன செய்யறது? இதையெல்லாம் எப்படி மறக்கறது சொல்லு பார்க்கலாம். உங்க வீட்டில் எங்களைப் பத்தி என்ன நினைச்சிருப்பாங்கங்கற எண்ணமே என்னை அணுஅணுவாய் சித்திரவதை செய்யுது..."

"உன்னைப் பத்தி நானும் என்னைப் பத்தி நீயும் சரியாய் புரிஞ்சுகிட்டிருக்கறப்ப அடுத்தவங்க நம்மளப் பத்தி என்ன நினைக்கிறாங்கங்கறது நமக்கு அனாவசியம், காவ்யா. ஒரு விதத்தில உங்கப்பா வந்து எங்க வீட்டுல ஒரு அதிசயத்தை உண்டாக்கிட்டுப் போய் இருக்கார். அதுக்கு நான் நிஜமாவே நன்றி சொல்லணும் தெரியுமா?" என்றவன் ராஜராஜன் தட்டிக் கொடுத்ததைச் சொன்னான்.

"உங்கப்பாவிற்கு அந்த காவ்யா நான்தான்னு தெரிஞ்சிருக்குமா, அருண்?"

"இப்ப யோசிச்சுப் பார்த்தா அவருக்கு என்ன தெரியும், என்ன தெரியாதுன்னு என்னால் யூகிக்க முடியலை, காவ்யா"

"இன்னைக்கு ஆபிசில் அவர் எப்பவும் போல இயல்பாய்த்தான் இருந்தார்.... " என்றவளுக்கு அவருக்குத் தெரிந்திருந்தால் என்ற நினைவே மகா தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. மேலும் அதை நினைக்கப் பிடிக்காமல் தன் இன்னொரு சந்தேகத்தைக் கேட்டாள். "உங்கம்மாவுக்கு நான் உங்கப்பா ஆபிசில்தான் வேலை பார்க்கிறேன்னு தெரியுமா?"

"நானாய் சொல்லப் போகவில்லை, காவ்யா. ஆனா எங்கம்மா உங்கப்பா போன பிறகு ஒரு கேள்வி கேட்டாங்க......"

"என்ன கேள்வி?"

"உனக்கு உங்கப்பா காவ்யா என்று எப்படி ரசனையுடன் பேர் வைத்தார்னு கேட்டாங்க"

"பேர் வச்சது அப்பா அல்ல, எங்கம்மா. ஆரம்பத்தில் அம்மா நிறைய கவிதைகள் எழுதியிருக்கிறாளாம். எங்கப்பாவைக் கல்யாணம் செய்துகிட்ட பிறகு அம்மாவோட கவிதைகள் எல்லாம் நின்னுடுச்சு. அவள் இலக்கிய ரசனையின் கடைசி அறிகுறி எனக்கு வச்ச பேர் தான். அதுக்கப்புறம் அவள் ஒரு எந்திரமாய்தான் வாழ்ந்து செத்தாள்"

"அதெப்படி காவ்யா மனிதர்களால் எந்திரமாய் மாற முடிகிறது?"

"வாழ்க்கையில் ஒரு அர்த்தம் இல்லாமல் போகும் போது மனிதர்கள் எந்திரமாகிடறாங்க, அருண்"

"எந்தவொரு சூழ்நிலையிலும் ஒவ்வொருத்தரும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ முடியும்னு நினைக்கிறேன், காவ்யா. என்ன, நம்பிக்கை மட்டும் இழந்துடக் கூடாது. நம்பிக்கை போயிடறப்ப வாழ்க்கையில் அர்த்தமும் போயிடுது."

"நீ நான் தாமிரபரணியின் தேவன், தேவி மாதிரி இருக்கற உயர்வானவர்கள் கூட ஒரு கட்டத்தில் இனி வாழ்றதில் அர்த்தம் இல்லைங்கிற முடிவுக்கு வந்துடறாங்களே, அருண். நீ சொல்ற மாதிரி அவங்க நிஜ வாழ்க்கை மனிதர்களாய் இருந்தா அவங்க எடுத்த அந்த தற்கொலை முடிவில் எனக்கு அவங்க மேல இருக்கிற மதிப்பு ஏனோ குறைஞ்சுடுது. இந்த உலகத்து கிட்ட அவங்க தோத்துட்ட மாதிரி ஒரு தோணல்"

"அந்த நாவல் சம்பந்தமாய் ஒரு சுவாரசியமான விஷயம் தெரியுமா, காவ்யா. என்னோட துப்பறியும் வேலையில் ஒரு மைல்கல் கிடைச்சுடுச்சு. கதை நிஜம்னா ரொம்ப தத்ரூபமாய் கதையில் வர்ணிக்கப்பட்ட அந்த பூங்குளம் கிராமம் கூட ஒரு நிஜமான கிராமமாய் இருக்கலாம்னு ஒரு உள்ளணர்வு எனக்கு வந்தது. அந்த ஏரியாவில் இருக்கிற எங்க பத்திரிக்கை நண்பர்களை விசாரிச்சப்ப அந்த வர்ணனைக்குப் பொருத்தமாய் பூங்கொடின்னு ஒரு கிராமம் இருப்பதாய் தகவல் வந்துருக்கு. நான் நேரடியாய் அங்க போய் பார்க்கலாம்னு இருக்கேன் காவ்யா"

"போய்ட்டு வா அருண். அப்புறம் நம்ம சம்பந்தமாய் நான் ஒரு முடிவு எடுத்துருக்கேன், நீயும் ஒத்துக்கணும்" அவள் குரலில் லேசாக சோகமும், உறுதியும் தெரிந்தன.

"என்ன சொல்லு..."

"இனி கொஞ்ச நாளுக்கு நாம் சந்திச்சுக்க வேண்டாம், அருண்"

அவன் முகத்தில் தெரிந்த ஏமாற்றம் அவளையும் சங்கடப்படுத்தியது. அவன் ஏன் என்று கேட்காமல் அவளையே கூர்ந்து பார்த்தான்.

"நாம பழையபடி பழகறோம்னு எங்கப்பாவுக்குத் தெரிய வேண்டாம்னு பார்க்கறேன், அருண். அவர் வந்து கலாட்டா செஞ்சதால் உனக்குக் கோபம் வந்து நாம் பிரிஞ்சுட்டோம்கிற ஷாக் ட்ரீட்மெண்ட் அவருக்குத் தரப் போறேன். அவரோட இவ்வளவு நாள் பொறுப்பில்லாத குணத்துக்கு ஆழமாய் இருக்கற காரணம் நம் காதல்னு எனக்கு தோண ஆரம்பிச்சுடுச்சு, அருண். பணக்கார இடத்துக்கு மகள் போறப்ப எதிர்காலத்தைப் பத்திக் கவலைப்படறது அனாவசியம்னு அவர் நினைச்சுட்டிருக்கார். அதை என் கிட்ட வாய் விட்டு சொல்லியும் இருக்கார். நீ அவர் கிட்ட பேசினது நிஜமாவே அவருக்கு உறைக்கணும்னா உன் கோபம் நிஜம்னு அவர் உணரணும். அது நாம் தொடர்ந்து சந்திச்சுட்டு இருந்தா நடக்காது..."

அவள் சொன்னதில் இருக்கும் உண்மை அவனை எதிர்ப்பு தெரிவிக்க விடவில்லை. ஆனால் அவளை சந்திக்காமல் இருப்பது என்பதையும் அவனுக்கு நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. சின்னக் குழந்தை போல் கேட்டான், "எவ்வளவு நாள் காவ்யா?"

"நான் போன் பண்ணி சொல்றேன், அருண். அது வரைக்கும். அவரை மாத்த இது எனக்குக் கடைசி சந்தர்ப்பம்."

அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் சேர்ந்திருந்த சமயங்களில் தங்கள் காதலைப் பற்றிப் பேசியது மிக மிகக் குறைவு. ஒருவரை ஒருவர் எவ்வளவு நேசிக்கிறார்கள் என்பதை இது வரை ஒரு முறை கூட சொல்லிக் கொண்டதில்லை. இதயத்தின் ஆழத்தில் உணர்ந்ததை வார்த்தையாக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்ததில்லை. ஆனால் அருண் வேலை விஷயமாய் வெளியூர் போன நாட்கள் தவிர மற்ற நாட்கள் அவர்கள் என்னவானாலும் சந்திக்காமல் இருந்ததில்லை. அதை தற்காலிகமாகக் கூட நிறுத்துவது ஏதோ பேரிழப்பாய் அவனுக்கு இருந்தது.

"இது எனக்கு மட்டும் கஷ்டமாய் இல்லைன்னு நினைக்கறியா, அருண். நீ உம்முன்னு இருந்தா நான் எப்படி இந்த பிரிவை சமாளிக்க முடியும்னு நினைக்கிறே?"

அவன் உடனே புன்னகைக்கு மாறினான். "சாரி காவ்யா. போனில் பேசிக்கலாம், ஓகே. பெஸ்ட் ஆஃப் லக். ஒரே ஊரில் இருந்துட்டு உன்னைப் பார்க்காமல் இருக்க இன்னும் நான் பழகலை. அது தான் பிரச்னை. அதுக்கு ஒரு வழி கண்டு பிடிச்சுட்டேன். நானும் பூங்கொடி கிராமத்துக்குப் போயிட்டு நிதானமாய் வர்றேன், சரியா."

அவள் ஈரமான கண்களுடன் அவனிடம் சொன்னாள், "என் வாழ்க்கையில் நடந்த ஒரே ஒரு நல்ல விஷயம் நீ தான் அருண். நீயும் இல்லாம இருந்திருந்தா எனக்கு சந்தோஷம்கிறதே தெரியாமப் போயிருக்கும்"

# (16)

Fear is the deadly enemy of accomplishment, it paralyzes effort, destroys initiative and corrodes the mental machinery. Fear and worry go hand in hand, the one produces the other. Worry never yet succeeded in overcoming a difficulty, neither has it ever succeeded in elucidating a problem; all it can do is to destroy health, wreck happiness and peace of mind, and make the difficulties more difficult to overcome and the problems less easy of solution.

– HENRY THOMAS HAMBLIN.

அருண் வீட்டினுள் நுழைந்த போது ராஜராஜன் வீட்டை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தார். மகனைப் பார்த்த அவர் முகத்தில் வழக்கம் போல் எந்த உணர்ச்சியும் இல்லை. தயாராக நின்றிருந்த காரில் ஏறிப் போய் விட்டார். அவர் கார் போவதையே பார்த்துக் கொண்டிருந்த அருண் பெருமூச்சு விட்டான்.

சோபாவில் உட்கார்ந்திருந்த மாதுரியிடம் சொன்னான். "அம்மா உன் புருஷனுக்குப் புன்னகை செய்யறது எப்படின்னு கொஞ்சம் சொல்லிக் கொடுக்கக் கூடாதா?"

மாதுரி அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"சரி சரி எவரெஸ்ட் ஏறச் சொன்னது மாதிரி என்னைப் பார்க்காதே. ஒரு ஆதங்கத்தில் சொன்னேன், அவ்வளவு தான்" என்றவன் அவளருகே அமர்ந்தான். அன்று அதிசயமாய் அவனைத் தட்டிக் கொடுத்தவர் அதற்குப் பிறகு ஒரு முறை கூட அந்த மாதிரியான ஒரு நெருக்கமான உணர்வை அவனிடம் காட்டவில்லை. அன்றைய தினம் நடந்தது நிஜம் என்பதற்கான அறிகுறியே அவரிடம் இருக்கவில்லை.

"என்னடா யோசனை?" மாதுரி மகனைக் கேட்டாள்.

"நம்ம வீட்டு மெஷினைப் பத்தி தான்"

மாதுரி சிறிது நேரம் ஒன்றும் சொல்லவில்லை.

"அம்மா நான் நாளைக்குக் காலை வெளியூர் போறேன். எப்ப வருவேன்னு சரியா சொல்ல முடியாது...."

அவள் முகம் வாடியது. இந்த வீட்டில் ஒவ்வொரு நாளிலும் சிறிதாவது ஆசுவாசம் அவளுக்குக் கிடைக்கிறதென்றால் அது அருண் இருப்பதால் தான். அவனும் இல்லாத நாட்கள் வரவர அவளால் சகிக்க முடியாத நாட்களாகவே இருக்கின்றன.

"ரொம்ப தூரம் போறியா?"

"தாமிரபரணி நதி வரைக்கும் போறேன்"

ஒரு கணம் அவள் இதயத் துடிப்பு நின்று பின் இயங்கியது.

"அம்மா நான் சேதுபதி பத்தி அன்றைக்குக் கேட்டேனில்லையா. அந்த நாவல் கற்பனை இல்லை நிஜம்கிற முடிவுக்கு வந்திருக்கோம்.... அம்மா உனக்கு உடம்பு சரியில்லையா? ஏன் என்னவோ மாதிரி இருக்கே"

"லேசா தலை சுற்றின மாதிரி இருந்தது, அவ்வளவு தான்.... நீ ஏன் அந்தப் பழைய நாவல் பத்தி துப்பறியப் போறே. புதுசா உனக்கு எதுவுமே கிடைக்கலையா?"

"அந்த நாளிலேயே அதோட மர்மம் விலகியிருந்துதுன்னா அதை அப்படியே விட்டுருக்கலாம்மா. ஆனா என்ன நடந்ததுன்னு தெரியுமா?" என்றவன் எல்லாவற்றையும் அவளிடம் சுருக்கமாகச் சொன்னான். மறுபடி தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி அவன் சந்தேகத்தைக் கிளப்பக் கூடாது என்று மாதுரி மிகக் கவனமாக இருந்தாள். அவன் முடித்தவுடன் சொன்னாள். "எனக்குப் பயமாய் இருக்கு அருண். உனக்கு ஏதாவது ஆயிட்டா எனக்குத் தாங்க முடியாதுடா. இந்த நாசமாய் போன ரகசியங்கள் 25 வருஷம் கழிச்சு யாருக்குடா வேணும். பேசாம விட்டுடேன் அருண்"

"அம்மா, எதிர்ப்பு இருக்குன்னும், கஷ்டமாய் இருக்குன்னும் பின் வாங்கறவங்க வாழ்க்கையில் எந்த சாதனையும் செய்ய முடியாதும்மா."

அவளோ இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள். 'கடவுளே நான் என்ன செய்வேன்?' என்று மனதில் புலம்பியவள் அவன் தோளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள். "அம்மா சொன்னா கொஞ்சம் கேளேண்டா"

"அம்மாவே சொன்னாலும் சரியாய் இருந்தாத் தான் கேட்பேன். நான் உன் கிட்டே எல்லாத்தையும் சொன்னதே தப்பு. ஆளை விடு"

அவள் முகத்தில் தெரிந்த வலி அவன் மனதை இளக வைத்தது.

"அம்மா எனக்கு எதுவும் ஆகாதும்மா. அப்படி ஆகறதுன்னா இதுவரைக்குமே ஏதாவது ஆகியிருக்கணும். உன் புருஷன் என்னை ஒரு பொருட்டாவே நினைக்காட்டியும் வெளி உலகத்துக்கு அது தெரியாதில்லையா. அதனால ராஜராஜன் மகனை ஏதாவது செய்ய வெளியுலகத்தில பயம் இருக்கு போல இருக்கு"

"முட்டாள்" மாதுரி தன்னை மறந்தாள். "கொலை கூட செய்ய அவங்க தயங்க மாட்டாங்கடா. உனக்கு அவங்க சக்தி தெரியாது"

அருண் தாயை வியப்புடன் பார்த்தான். மாதுரி தன் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"உனக்கு அவங்களைத் தெரியுமாம்மா?"

"எனக்கு ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாது. ஆனா நீ சொன்னதை வச்சு என்னால யூகிக்க முடியாதா என்ன"

அருண் வியப்பை விரட்டி வாய் விட்டு சிரித்தான். "நல்லாவே கற்பனை பண்றம்மா நீ. ஒரு நிமிஷம் அவங்க யாருன்னு உனக்குத் தெரியுமான்னு நானே சந்தேகப் பட்டுட்டேன்". ஆனால் அவள் முகம் வெளுத்துப் போய் இருந்தது. ஏதோ தாங்க முடியாத சோதனைக்கு உள்ளானது போலவும் பத்து வயது திடீரென்று கூடியது போலவும் தெரிந்த தன் தாயை அருண் பாசத்துடன் அணைத்துக் கொண்டான். "அம்மா உனக்கு நிஜமாவே உடம்புக்கு முடியலை. இந்த மாதிரி நேரத்தில் நீ எனக்கு என்ன ஆகுமோன்னு வேற பயப்பட்டு இன்னும் உன் ஆரோக்கியத்தை மோசமாக்கிக்கிறே. போம்மா போய் ரெஸ்ட் எடுத்துக்கோ"

உலகத்தில் யாருக்கும் தனக்கு ஏற்பட்ட நிலை ஏற்படக் கூடாது என்று மாதுரி நினைத்துக் கொண்டாள். எல்லாவற்றையும் அவன் அறிந்து கொண்டு அவளிடம் வந்தால் அவனை எப்படி அவள் எதிர் கொள்ளப் போகிறாள்? எல்லாம் தெரிந்த பின்னும் அவன் அவளை இதே பாசத்துடன் பார்ப்பானா? அவள் மனம் ஆயிரம் கேள்விகள் கேட்டது. பதில்களோ பயங்கரமானவையாக இருந்தன. பஞ்சமகாபாதகத்தையும் கண்ணிமைக்காமல் மகா அமைதியாக செய்யக் கூடிய அந்தப் பெரும் புள்ளி வேறு அவள் வயிற்றில் புளியைக் கரைத்தார். எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு பரிகாரம் இருந்தது. 'கடவுளே எப்படியாவது அருணை இதில் பின் வாங்க வை' என்று வேண்டிக் கொண்டாள். ஆனால் தெய்வம் கூட இப்போது எதிரணியில் இருப்பதாய் அவள் மனம் சொன்னது.

மாதுரியின் நிலையைப் பார்க்கும் போது அருணிற்கு பாரதியின் பாடல் வரிகள் தான் நினைவுக்கு வந்தன. "அஞ்சி அஞ்சி சாவார் இவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே" ஆனால் அதே சமயம் அவன் தாய் அப்படியன்றும் பயந்தாங்கொள்ளி ரகமல்ல என்ற உண்மையும் உறைத்ததால் அடுத்த கணமே அவள் உடல்நிலை சரியில்லை, அதனால் தான் இப்படி இருக்கிறாள் என்ற முடிவுக்கு வந்தான். "அம்மா, டாக்டர் கிட்ட போலாமா?"

"எனக்கு எங்கயும் போக வேண்டாம். நான் நல்லாத் தான் இருக்கேன். நீ ஏன் அங்கே தனியாய் போகிறாய். கூட யாரையாவது கூட்டிட்டு போகக் கூடாதா?" அவள் குரலில் கவலையும் பயமும் தொனித்தன.

"உன் பையன் என்ன சின்னக் குழந்தையா, எப்பவும் கூட ஒரு ஆளைக் கூட்டிட்டு போக" என்று அருண் சொன்னான்.

உண்மையில் அம்பலவாணன் கூட அவன் தனியாக அங்கு போவதை விரும்பவில்லை. தாங்கள் துப்பறிவதை விரும்பாதவர்கள் இன்னும் நேரடியாக தங்களை மிரட்டவோ, தடுக்கவோ செய்யாதது அவருக்குப் புதிராகவே இருந்தது. ஒருவேளை அவர்கள் தாக்க தக்க சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் அவருக்கு எழுந்ததை வாய் விட்டே சொன்னார். ஆனால் அருண் தான் தனியாகப் போவதில் உறுதியாக இருந்தான்.

"அப்படி நேராய் தாக்க வந்தாலும் அது நல்லது தான் சார். இந்த நிழல் யுத்தத்துக்கு அது தேவலை. யார் என்னன்னு அலச அது நமக்குப் பெரிய உபகாரமாய் இருக்கும்"

மறுநாள் காலை பத்திரிகையின் காரில் பூங்கொடி கிராமத்துக்கு அவன் கிளம்பினான். மகன் போவதையே மிகுந்த துக்கத்தோடு ஜன்னல் வழியாக மாதுரி பார்த்துக் கொண்டு நின்றாள். விதியை யாரால்தான் வெல்ல முடியும்?

## (17)

In his heart he heard the voice talking, which was newly awaking, and it told him:
Love this water! Stay near it! Learn from it! Oh yes, he wanted to learn from it, he wanted to listen to it. He who would understand this water and its secrets, so it seemed to him, would also understand many other things, many secrets, all secrets.
– Herman Hesse in "Siddhartha"

அந்த ரயில் தண்டவாளத்தைத் தாண்டி சிறிது தூரம் சென்றவுடன் "பூங்கொடி" கிராம பெயர்ப்பலகை அவனை வரவேற்றது. அந்தப் பெயர்ப் பலகையைத் தாண்டியவுடன் ஒரு பெரிய

ஆலமரம். அதன் நிழலில் நின்று அரசியல் பேசிக் கொண்டிருந்த இரண்டு இளம் வயது கிராமவாசிகள் அருண் காரை அதிசயமாகப் பார்த்தார்கள். இந்த அளவுக்குப் பகட்டான கார் அவர்களது கிராமத்துக்கு வருவது அபூர்வம். அருண் காரை நிறுத்தி விட்டு கீழிறங்கி அவர்களிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தான். அவர்களில் ஒருவனாக நட்புடன் அவன் பேசிய விதமும் அவன் சொன்ன தகவலும் சுமார் ஒரு மணி நேரத்தில் அவனை அந்த கிராமவாசிகள் மத்தியில் பிரபலப் படுத்தி ஒவ்வொருவரையும் அவனைப் பற்றியே பேச வைத்தன.

"ஏதோ கதை எழுதறவராம். நம்ம நதிக்கரையில் நடக்கிற மாதிரி ஒரு கதை எழுத வந்திருக்கார். யதார்த்தமாய் இருக்கணும்கிறதுக்காக எழுத நேரா இங்கயே வந்திருக்கார். நல்ல பணக்காரர் போல இருக்கு. ஆனா ரொம்ப எளிமையாய் பழகறார்."

கிராமத்தில் முக்கியமான ஓரிருவரைக் கண்டு சிறிது பேசி விட்டு நதிக்கரைக்குச் சென்று அமர்ந்தான். புதியவர்களை தங்கள் மண்ணில் அபூர்வமாய் மட்டுமே காண முடிந்த அந்த கிராமவாசிகளுக்கு அவனைப் பற்றி அறிய பெரும் ஆவல் இருந்தது. சிறுவர்கள் அவனை சிறிது நேரம் கவனிக்க வேண்டும் என்பதற்காகவே அந்த மாலை நேரத்தில் நதியில் குளிக்க வந்தார்கள். பெரியவர்கள் சிலரும் ஏதோ ஒரு வேலையைக் கண்டு பிடித்துக் கொண்டு அங்கு வந்து நடமாடிக் கொண்டிருந்தார்கள். சிலர் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்கள். ஒரு பெண் அவன் சினிமாவுக்குக் கதை எழுதுகிறானா என்று ஆவலோடு கேட்டாள். இல்லை என்றதும் டிவி சீரியலுக்கா என்று கேட்டாள். அதற்கும் அவன் இல்லை என்றதும் வெறுத்துப் போய் இடத்தைக் காலி செய்தாள்.

அவன் எதுவும் செய்யாமல் அமைதியாக உட்கார்ந்திருந்ததைக் கண்டு மற்றவர்களும் தங்கள் சுவாரசியத்தை இழந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். ஆனால் தொலைவில் இருந்து அவனை நிறைய நேரம் மருதமுத்து மட்டும் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பார்வையில் எல்லையில்லாத வெறுப்பிருந்தது. அவன் அமைதியாக அங்கு அமர்ந்திருந்த விதம் அவருக்குப் பழைய நாட்களை நினைவு படுத்தியது. அந்த நதிக்கரையில் ஒரு வார்த்தை கூட பேசாமல் அந்த மௌனம் தங்களுக்கு வெகு இயல்பானது என்பது போல மணிக் கணக்கில் உட்கார்ந்திருந்த அந்த இரண்டு பேரை நினைக்க நினைக்க உள்ளே எல்லாம் அவருக்குப் பற்றி எரிந்தது. ஆனாலும் அவர் நின்று கொண்டிருந்த இடத்தில் கால்கள் வேரூன்றி விட்டது போல அங்கேயே நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சூரியன் சிவப்புக் கிரணங்களை வானில் படர விட்டு மறைந்து கொண்டிருந்தான். அருண் அந்த நதி தன் ரகசியங்களை அவனிடம் சொல்லக் கூடும் என்பது போல தன்னை மறந்து அதனை பார்த்துக் கொண்டிருந்தான். சில பறவைகளின் குரல்களும் நதியின் மெல்லிய சலசலப்பும் மனதை லேசாக்கிக் கொண்டிருந்தது. இதே நதிக்கரையில் தான் ஒரு காதல் பூத்து வளர்ந்திருக்கிறது. உயிருக்குயிராக இரு நெஞ்சங்கள் காதலித்திருக்கின்றன. சேதுபதி காவியமாகப் படைத்த அந்தக் காதல் கதையின் நிஜத்தை அறிந்தவர்கள் வேறு யாராவது இன்னமும் இங்கு இருக்கிறார்களா என்ற கேள்வி மனதில் எழுந்தது. அதே சமயம் யாரோ தன்னைக் கவனிக்கிறார்கள் என்று உள்ளுணர்வு சொல்ல சடாரென்று அருண் திரும்பிப் பார்த்தான்.

தூரத்தில் சற்று மேடான பகுதியில் நின்றிருந்த ஒரு மனிதர் அந்த அஸ்தமன வேளையின் அரையிருட்டில் தெரிந்தார். நிறைய நேரமாய் அந்த மனிதர் தன்னைக் கண்காணித்துக் கொண்டிருப்பதாய் அருண் உணர்ந்தான். அவன் திடீரென்று திரும்பி தன்னைக் கண்டு விட்டதில் ஒரு கணம் செயலிழந்து போனாலும் அந்த ஆள் அவசர அவசரமாக அங்கிருந்து நகர்ந்து மறைந்தார்.

அருண் அந்தத் திசையையே சிறிது நேரம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு தன் கவனத்தை மறுபடி நதி மீது திருப்பினான். மனம் திரும்ப படிய மறுத்தது. அப்போது இன்னொரு உண்மையும் அவனுக்கு உறைத்தது. இந்த இடம் சேதுபதியின் நாவலில் மிகத்

தெளிவாக விவரிக்கப் பட்டிருந்தது. நதி அந்த இடத்தில் தான் சற்று வளைந்து ஓட ஆரம்பித்திருந்தது. பின்னால் அந்த ஆள் நின்றிருந்த இடத்தில் ஒரு மிகப் பெரிய மரம் கூட அந்தக் கதையில் வர்ணிக்கப் பட்டிருந்தது. கதைப்படி அந்தப் பெரிய மரத்தை ஒட்டிய படி இருந்த பாதையில் சற்று நடந்தால் அந்த நாயகனும் நாயகியும் வசித்த வீட்டை அடையலாம்.

நினைக்கையில் அவனுக்கு மயிர் கூச்செறிந்தது. அவன் கணிப்பு சரியென்றால் அவன் வழக்கமாக அவர்கள் தங்கிப் பேசும் இடத்தில் தான் இருக்கிறான். அவர்கள் எப்போதும் அங்கு வரும் அஸ்தமன சமயத்தில் தான் இப்போது இருக்கிறான். இன்னும் அந்த இரண்டு ஆத்மாக்கள் அங்கிருப்பதாக அவனுக்குப் பட்டது. அந்த தாமிரபரணி நதி மற்றும் கரையோடு என்றென்றும் தங்கி தங்கள் இனிய நினைவுகளோடு அந்தப் பிரதேசத்தில் அந்தப் பாத்திரங்கள் உலவுவதாக அவனுக்குத் தோன்றியது. நிஜமாகவே அந்த நாவல் தன்னை நிறைய பாதித்துதானிருக்கிறது என்பதை அவன் மனமாற ஒப்புக் கொண்டான். இல்லா விட்டால் இது போன்ற எண்ணங்கள் எல்லாம் தனக்கு வர வாய்ப்பில்லை என்று அவனுக்குப் பட்டது.

பௌர்ணமி நிலவில் தற்போது அந்த இடமே மிக ரம்மியமாகத் தெரிந்தது. அந்த மேடான பகுதியில் தெரிந்த பெரிய மரத்தையே ஆழ்ந்த யோசனையுடன் அருண் பார்த்தான். அந்த மரத்தை ஒட்டி ஒரு பாதை இருக்கிறதா, அதில் சிறிது நடந்தால் ஒரு சிறிய வீடு இருக்கிறதா என்று பார்த்தால் என்ன என்று தோன்றவே அந்த மரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். இன்னமும் அந்த இடத்தை விட்டுப் போகாமல் அந்தப் பெரிய மரத்திற்குப் பின்னால் இருந்த அடர்த்தியான மரங்களின் பின்னால் நின்றிருந்த மருதமுத்து அவன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு திகைத்துப் போனார். விதி அவன் ரூபத்தில் அந்த இடத்திற்கு மீண்டும் ஒரு முறை பிரவேசம் செய்கிறது என்று மனதில் சொல்லிக் கொண்டார். சர்வ வல்லமை படைத்த அந்தப் பெரும் புள்ளி நகரத்திலேயே இவனைக் கிள்ளி எறியாமல் இவன் இந்தக் கிராமத்திற்கு வருவதை வேடிக்கை பார்ப்பது ஏன் என்ற கேள்வி அவர் மனதில் கோபத்தோடு எழுந்தது. பார்வையாலேயே இரத்தம் உறைய வைக்கக்கூடிய அந்த மனிதர் இந்த இளைஞன் விஷயத்தில் புதிராகவே நடந்து கொள்வதாக அவருக்குப் பட்டது. அவன் நெருங்க நெருங்க அந்த இடத்தை விட்டு வேகமாகச் சென்று விட ஒரு கணம் நினைத்த மருதமுத்து தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். இப்போது நடந்தால் கீழே உள்ள சருகுகள் பாதம் பட்டு சத்தம் ஏற்பட்டு தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்ற பயம் வந்தது. அடர்ந்த மரங்களுக்கிடையே உள்ளதால் அவன் தன்னைக் காண முடியாது என்பதால் அப்படியே ஒரு மரத்தை ஒட்டியபடி நின்றார்.

அந்தப் பெரிய மரத்தை அடைந்தவுடன் அருண் அதை ஒட்டிய சிறு பாதையைக் கண்டான். அவனுக்கு அந்தப் பாதையைப் பார்த்தவுடன் பரபரப்பு ஏற்பட்டது. அப்படியானால் அந்த வீடும் சற்று நடந்தால் கிடைக்க வேண்டும். அந்தப்பாதையில் நடக்க ஆரம்பித்தான். கீழே உள்ள சருகுகள் அவன் வருவதை சத்தமாக அறிவித்தன. மறுபடியும் அவன் பின்புறத்தில் யாரோ கவனிப்பதாக உள்ளுணர்வு சொன்னது. ஆனால் அவன் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் நடக்கும் சத்தம் மட்டும் கேட்டதால் அவனைக் கண்காணிப்பவர்கள் தொடரவில்லை, நின்ற இடத்திலிருந்தே கவனிக்கிறார்கள் என்பதைக் கணித்தான்.

அவன் எண்ணம் பொய்க்கவில்லை. அந்தப் பாதை ஒரு சிறிய வீட்டை அடைந்தது. அதுவும் கூட சேதுபதியின் வர்ணனையின் படியே இருந்தது.

## (18)

It is not advisable for you to indulge in focusing your attention on past events. We may touch on them, but only in reference.

– Don Juan

ஒரு சொகுசுக் காரில் ஒருவன் கதை எழுத தங்கள் கிராமத்திற்கு வந்திருக்கிறான் என்று கேள்விப் பட்டவுடன் ஆச்சி மற்றவர்களைப் போல அவனைச் சென்று பார்க்க ஆர்வம் காட்டவில்லை. வருபவன் எதற்காக வருகிறான் என்பதை அவளால் ஊகிக்க முடிந்தது. அன்று நடந்ததை இன்று அலசத் துடிக்கும் அந்த வாலிபன் வரவை முன்கூடியே போனில் அந்த மனிதர் எச்சரித்திருந்ததால் அவன் வந்தால் என்ன சொல்ல வேண்டும் என்ற எண்ணமே அவளிடம் பிரதானமாக இருந்தது.

மருதமுத்து வீட்டிலிருந்து பதட்டத்தோடு போன பிறகு அவள் தன் பெரிய வீட்டின் பின் புறம் இருந்த அந்த சிறிய வீட்டின் திண்ணைக்குப் போய் அமர்ந்தாள்.அவர்கள் நினைவு வரும் போதெல்லாம் ஆற்றங்கரையில் அவர்கள் வழக்கமாக உட்காரும் இடத்திற்கோ, இல்லை இந்த வீட்டின் திண்ணைக்கோ அவள் வந்தமர்வது வழக்கம். அது எத்தனை துக்ககரமாக இருந்தாலும் அவளால் அந்த வழக்கத்தை மட்டும் இத்தனை காலமாக மாற்றிக் கொள்ள முடிந்ததில்லை.

எத்தனை நேரம் அவள் அப்படி அங்கு அமர்ந்திருந்தாளோ அவளுக்குத் தெரியவில்லை. சருகுகளில் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்க அவள் தற்காலத்துக்கு வந்தாள். ஆரம்பத்தில் அது மருதமுத்து என்று தான் நினைத்தாள். ஆனால் வரும் உருவம் நெருங்க நெருங்க அவளுக்கு உண்மை விளங்கியது. அந்த நிலவொளியில் அந்த இளைஞன் உறுதியாக நடந்துவந்த விதம் ஒரு கணம் அவனை விதியின் உருவமாகவே அவளுக்குக் காட்டியது. சிலையாக அவள் சமைந்து விட்டாள்.

அந்த வீட்டைப் பார்த்து அருண் திகைத்தான் என்றால் சற்று அருகில் சென்றவுடன் ஒரு பழுத்த கிழவி அந்த வீட்டுத் திண்ணையில் தன்னைப் பிரமை பிடித்தது போல பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்து ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான். பின் தன்னை சமாளித்துக் கொண்டு கை கூப்பினான்.

"வணக்கம் பாட்டி என் பேர் அருண். நான்......... "ஆச்சி அவன் பேசியதைக் கவனிக்கவில்லை. அவள் எண்ணம் எல்லாம் வேறு எங்கோ இருந்தது. அவன் எல்லோரிடமும் சொன்னதையே அவளிடமும் சொல்லவில்லை. இங்கு உண்மையே சிறந்தது என்று தோன்ற வந்த நிஜக் காரணத்தைச் சொன்னான்.மற்றவர்களிடம் சொன்னது போல் அல்லாமல் தன்னிடம் உண்மை சொன்னதாலோ அல்லது வேறு ஏதோ காரணத்தாலோ ஆச்சியின் முகத்தில் பெரிய மாறுதல் தெரிந்தது. மலர்ந்த முகத்துடன் நிறைய நாட்கள் பழகியது போல் அவனை வரவேற்றாள்.

"வா ராசா, உட்கார்," அருண் அந்தத் திண்ணையில் அவள் எதிரில் அமர்ந்தான்.

சருகுகளில் யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. வந்தவர் மருதமுத்துதான். அவர் அருகில் வந்ததும் ஒன்றும் தெரியாதவர் போல

"யார் ஆச்சி இது?" என்று கேட்டார். அருண் அவரைக் கூர்ந்து பார்த்தான். சந்தேகத்திற்கு இடமில்லாமல் அவனுக்குத் தெரிந்தது. இது தன்னை ஆற்றங்கரையில் வெகு நேரம் கண்காணித்த அதே நபர் தான். ஆச்சி அருணை அறிமுகப்படுத்தினாள்.

"பத்திரிக்கையிலிருந்து வந்திருக்காக மருது. ஏதோ புஸ்தகத்தை பற்றி விசாரிக்க இவ்வளவு தூரம் வந்திருக்காக". ஆனால் அருணிடம் அவர் யார் என்று அவள் சொல்லவில்லை.மருதமுத்துவே சொன்னார்.

"நான் ஆச்சியோட மகன். பெயர் மருதமுத்து"

"நான் ஆத்தங்கரையில் உட்கார்ந்திருந்தப்ப அந்த மரத்துகிட்ட இருந்து பார்த்துக் கொண்டிருந்தது நீங்கதானோ?"

முன்னறிவிப்பு இல்லாமல் நேரடியாக அருண் கேட்டதை மருதமுத்து எதிர்பார்க்கவில்லை. தன்னை சுதாரித்துக் கொண்டு சொன்னார்.

"ஆமா, யாரோ புது ஆள் மாதிரி இருக்கேன்னு பார்த்தேன்" அவன் அதை நம்பிய மாதிரி தெரியவில்லை. அவன் எதிரில் நிற்பதே தீயில் நிற்பது போன்ற ஒரு அவஸ்தையை அவருக்கு ஏற்படுத்தியதால் ஏதோ அவசர வேலை இருப்பதாகச் சொல்லி "பேசிகிட்டிருங்க. வந்துடறேன்" என்று அந்த வீட்டைக் கடந்து போனார்.

"எங்க வீடு பின்னாடி தெரியற பெரிய வீடு ராசா. அங்க போறான்" என்று ஆச்சி அவனுக்கு விளக்கினாலும் அருண் தங்கள் பேச்சு காதுக்கு எட்டும் தூரத்திலேயே அந்த மனிதர் இருப்பார் என்று நம்பினான்.

"அப்ப இந்த வீடு?" அருண் ஆச்சியைக் கேட்டான்.

"இதுவும் எங்களதுதான் ராசா. ஆரம்பத்தில் வேலைக்காரங்க தங்கறதுக்காக கட்டுனோம். அப்புறம் வாடகைக்கு விட்டோம். இப்ப யாரும் இதில் குடியில்லை.

"அவங்க ரெண்டு பேரும் இங்க தங்கினது ஒரு வருஷம்தானோ?" எதிர்பார்க்காத நேரத்தில் திடீரென்று அவன் கேள்வி கேட்டதில் ஆச்சி திடுக்கிட்டுப் போனாலும் அவன் எதிர்பார்த்தது போல அவள் தடுமாறவில்லை. ஒரு கணம் என்ன சொல்வது என்று தீர்மானித்து விட்டு "

"ஆமா ராசா, ஒரே வருஷம்தான் அதுக இங்க தங்குச்சுக" என்று சொல்லி அவனை அசத்தினாள். அவள் மழுப்புவாள், தெரியாதது போல் நடிப்பாள் என்றெல்லாம் ஏனோ எதிர்பார்த்த அருண் ஏமாந்து போனான்.

"ஆச்சி, எனக்கு அவங்களப் பத்தி விவரமாய் சொல்லுங்களேன்",

"என்ன ராசா இந்தக் கிழவிக்கு சொல்லக் கிடக்கு? எல்லாம்தான் உனக்குத் தெரியுமே?"

"எனக்குத் தெரிஞ்சிருந்தா நான் இவ்வளவு தூரம் ஏன் வரப் போறேன் ஆச்சி?"

"உனக்குத் தெரிஞ்ச அளவுதான் எனக்கும் தெரியும் ராசா"

"சரி அந்த அளவுக்குத்தான் சொல்லுங்களேன்"

"அது உனக்கே தெரியுமே நானென்ன மறுபடி சொல்றது?"

"எனக்குத் தெரிஞ்சதையே வாய் விட்டு உங்க வாயால சொல்லுங்களேன். கேட்கறேன்"

"அதுதான் அந்த புஸ்தகத்திலேயே இருக்கே ராசா," அருண் அசந்து போனான்.ஆச்சியின் பேச்சுத் திறமை அவனை வியக்க வைத்தது. வாய் விட்டு சிரித்தபடி

"உங்க கிட்ட பேசி ஜெயிக்க முடியாது ஆச்சி. வெல்டன். கைகுடுங்க" என்று ஆச்சியின் கைகளை அருண் குலுக்கினான். எத்தனை சீக்கிரத்தில் ஒட்டி விடுகிறான் என்று ஆச்சி மனதில் நினைத்துக் கொண்டாள். அதையே பின்புறமிருந்து அவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த மருதமுத்து எண்ணி மனம் புழுங்கினார்.

ஆச்சியின் முகத்தில் கனிவு கூடியது. "வெல்டன்னா என்ன ராசா?"

அருண் விளக்கினான். ஆச்சி அந்த வார்த்தையை மனதில் வாங்கிக் கொண்டு ஓரிரு முறை அந்த வார்த்தையை மனதில் சொல்லிப் பார்த்துக் கொண்டாள். அருணுக்கு அந்தக் கிழவியை ஏனோ பிடித்து விட்டது. இந்த வயதிலும் ஒரு வார்த்தையை ஆர்வமாகக் கற்றுக் கொள்ளும் அந்தத் தன்மை அவனை பிரமிக்க வைத்தது. இன்னும் இது போன்ற அதிசயங்கள் நம் கண்ணில் படாமல், கருத்தில் வராமல் இந்த தேசத்தில் நடந்து கொண்டுதானிருக்கின்றன!

"ஆச்சி, ஒரு நிமிஷம் என்னை உங்க பேரனாய் நினைச்சுட்டு கொஞ்சம் உதவி செய்யுங்களேன். அவங்களைப் பத்தி சொல்லுங்களேன்"

ஆச்சியின் முகத்தில் ஒரு இனம் தெரியாத துக்கம் பரவியதை அருண் கவனித்தான். மறுபடி வாய்ஜாலம் செய்யப் போகிறாள் என்று நினைத்த போது ஆச்சி மறுபடி அவன் எண்ணத்தைப் பொய்யாக்கினாள்."ராசா, சேதுபதி கொஞ்ச காலம் இதில் குடியிருந்தான். அப்புறம் அவனுக்கு வேலை கிடைச்சு போகும் போது அவனுக்குத் தெரிஞ்ச ஒரு ஜோடியை இங்க தங்க வச்சான். அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நல்ல மாதிரி ராசா. அந்த மாதிரி ஆள்களும் இருக்காகன்னு தெரிஞ்சுகிட்டதே பெரிய பாக்கியம்னு நான் இப்பவும் நினைக்கிறேன்...." ஆச்சியின் கண்கள் கனவுலகில் சஞ்சரித்தது போல் ஒரு கணம் அருணுக்குத் தோன்றியது.

".....புதுசாய் ஒரு வாழ்க்கை ஆரம்பிக்க இங்க வந்தாக ராசா. ஆரம்பிச்சாக. எல்லாமே நல்லபடியா இருந்தது. ஆனா மனுசனோட பழசை அப்படி அழிச்சிட முடியாதுன்னு சொல்ற மாதிரி பழசு பழைய படி வந்தது. பழைய மனுசங்க வந்தாக. ..பாக்கி எல்லாம் அந்தக் கதையிலயே இருக்கே ராசா."

சேதுபதி அங்கு குடியிருந்ததும், பின் அவர்களை அவர் அங்கு தங்க வைத்ததும் தவிர ஆச்சி புதியதாய் வேறு எதையும் சொல்லி விடவில்லை என்பதை கவனித்த அருண் "ஆச்சி...." என்று மேலும் ஏதோ கேட்க வந்தான்.

ஆச்சி இடை மறித்தாள்.

"நேத்து என்ன நடந்ததுன்னே நினைச்சுட்டு இருக்கறதும் அதைப் பத்தியே பேசிட்டு இருக்கறதும் இன்றைய தினத்துக்கு நாம் செய்யற அவமரியாதைன்னு அவன் எப்பவும் சொல்வான் ராசா. பழசை விட்டுடு. அதனால் ஒரு பிரயோசனமும் இல்லை"

## (19)

True happiness is of a retired nature, and an enemy to pomp and noise; it arises, in the first place, from the enjoyment of one's self, and in the next from the friendship and conversation of a few select companions.

Joseph Addison

"அதை சொன்னது யாரு ஆச்சி, அந்த சேதுபதியா?"

"இல்ல தம்பி அந்த கதாநாயகன்."

"அவர் பேர் என்ன ஆச்சி?"

"பேருல என்ன இருக்கு ராசா...." என்ற ஆச்சி மௌனமானாள். என்ன தான் நேற்றைய தினத்தைப் பற்றியே நினைப்பதும், பேசுவதும் இன்றைய தினத்திற்கு செய்யும் அவமரியாதை என்று அவன் சொன்னதை அருணுக்குத் தெரிவித்தாலும் அவளால் அந்தக் கணத்தில் 'அவனை' நினைக்காமல் இருக்க முடியவில்லை. அந்த ஒரு வருடத்தின் ஒவ்வொரு நாளையும் அவளால் இன்றைக்கும் விவரித்துச் சொல்ல முடியும். திரும்பத் திரும்ப அந்த நாட்களின் இனிமை நினைவுக்கு வந்து துக்கத்தில் முடிந்தாலும் மறக்க இன்னும் மனது பழகவில்லை.

"என்ன ஆச்சி அந்த நாள் ஞாபகமா?"

ஆச்சி அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். "ஆமா ராசா. அவங்க, நான் எல்லாம் முடிஞ்சு போன கதைக. நேத்தைய மனுசங்க. எங்கள விடு. உன்னைப் பத்திச் சொல்லு.... நீ தான் இன்னத்து சேதி"

"அதான் சொன்னேனே ஆச்சி. உண்மை பத்திரிக்கையில வேலை பார்க்கறேன். ....."

"அதை விடு ராசா. உன்னப் பெத்தவங்களப் பத்திச் சொல்லு. கூடப் பிறந்தவங்களப் பத்திச் சொல்லு... கல்யாணம் ஆயிருந்தா பொண்டாட்டி புள்ளைகளப் பத்திச் சொல்லு"

"அப்பா வியாபாரம் செய்யறார். பேர் ராஜராஜன். அம்மா பேர் மாதுரி. நான் ஒரே பிள்ளை. கல்யாணம் ஆகலை....."

ஆச்சி ஒரு கணம் அவனையே கூர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் ஏகப்பட்ட உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. பின் இயல்பாகக் கேட்டாள். "கல்யாணத்துக்கு யாரையாவது பார்த்து வச்சிருக்கியா ராசா?"

அவன் முகத்தில் லேசாக நாணம் கலந்த மகிழ்ச்சி தெரிந்தது. "ஆமா ஆச்சி. காவ்யான்னு ஒரு பொண்ணு"

ஆச்சி அவன் முக மாறுதலைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள். இந்தக் காதலுக்குத் தான் எத்தனை சக்தி. அரசனில் இருந்து ஆண்டி வரை காதலிக்கும் கணத்தில் அது ஒரே போல் தான் பாதிக்கிறது!

கேள்வி கேட்க வந்த தன்னிடமே கேள்விகள் கேட்டுத் தன்னைப் பற்றி எல்லாம் தெரிந்து கொள்ளும் ஆச்சியின் சாமர்த்தியம் அருணை வியக்க வைத்தது. "ஆச்சி நீங்க பேசாம எங்க தொழிலுக்கு வந்துடலாம். அதுக்கான எல்லா சாமர்த்தியமும் உங்க கிட்ட இருக்கு".

ஆச்சி கள்ளங்கபடமில்லாமல் சிரித்தாள். "உனக்கு இந்த கிராமத்துக் கிழவியப் பார்த்தா தமாசாப் போச்சு ராசா"

அருணும் சிரித்தபடியே எழுந்தான். "ஆச்சி நான் இந்த வீட்டுக்குள்ள போய் பார்க்கலாமா?"

ஆச்சியும் எழுந்தாள். "தாராளமா பாரு ராசா". கதவைத் திறந்து விளக்கைப் போட்டாள். வீட்டை மேலோட்டமாக ஒரு முறை அருண் நோட்டமிட்டான். முன்னால் ஒரு வரவேற்பறை. இடது

பக்கத்தில் படுக்கையறை. வரவேற்பறையைத் தாண்டி சமையலறை. அதையும் தாண்டி வெளிப் பக்கமாகக் குளியலறை, கழிப்பறை.

வரவேற்பறையில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு ஓவியத்தில் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தைய ஆச்சியை அருண் பார்த்தான். ஆச்சியின் கண்களில் கனிவும், சந்தோஷமும், பெருமிதமும் ஜொலித்ததைத் தத்ரூபமாய் யாரோ வரைந்திருந்தார்கள். யாரோ இல்லை அந்தக் கதையின் நாயகியாகத் தான் இருக்க வேண்டும். கதைப்படி அவள் வரைவதிலும், கவிதைகள் எழுதுவதிலும் வல்லவள். "இது அந்தப் பொண்ணு வரைஞ்சது. இல்லையா ஆச்சி". ஆச்சி தலையசைத்தாள்.

"ஆச்சி உங்க சந்தோஷத்தை அந்தப் பொண்ணு அப்படியே இந்த ஓவியத்தில் கொண்டு வந்துருக்கு. பிரமாதம் ஆச்சி."

"என் வாழ்க்கையில நான் உண்மையா சந்தோஷமா இருந்தது அந்த ஒரு வருஷம் தான் ராசா. அதுகளோடவே நான் அதையும் இழந்துட்டேன்". சொல்லச் சொல்ல ஆச்சியின் கண்கள் நிரம்பின.

"அந்தப் பொண்ணு வேற ஏதாவது வரைஞ்சிருக்கா ஆச்சி?" அருண் கேட்ட போது தன்னையும் அறியாமல் ஆச்சி அந்தப் படுக்கையறையைப் பார்த்தாள். மருதமுத்துவிற்கு அந்த ஃபோன் வரும் வரை அங்கு 'அவன்' ஓவியம் தொங்கிக் கொண்டு இருந்தது. மறு நாளே அந்த ஓவியத்தை ஆச்சி அப்புறப்படுத்தி விட்டாள். "அந்தப் பொண்ணு நிறைய படம் வரைஞ்சா ராசா. ஆனா இப்ப எதுவும் இல்ல"

"அதெல்லாம் என்ன ஆச்சு ஆச்சி?"

"ஒரு சிலத அந்தக் குடும்பத்து ஆளுகளே கொண்டு போனாங்க. சிலத சேதுபதி எடுத்துட்டுப் போனான்"

"சேதுபதிய நீங்க கடைசியா எப்பப் பார்த்தீங்க ஆச்சி"

"போன வருஷம் பார்த்தேன்"

அருண் திடுக்கிட்டான். "போன வருஷமா?"

"ஆமா. ஒரு அமாவாசை இருட்டுல இந்த நதிக்கரையில அவன் உட்கார்ந்துட்டு இருந்ததப் பாத்தேன். நான் போறதுக்குள்ள அவன் போயிட்டான்"

"அது சேதுபதிதான்னு எப்படி உறுதியாய் சொல்றீங்க ஆச்சி"

"அந்த இடத்துல அந்த நேரத்துல என்னத் தவிர உட்காரக் கூடிய ஆள் அவன் ஒருத்தன் தான் ராசா"

"இந்த நதிக்கரைக்கு அவர் அடிக்கடி வர்றதுண்டா?"

"இத்தனை வருஷத்துல ரெண்டு மூணு தடவ பாத்திருக்கேன். ஆனா அவன் எனக்குப் பேசக் கிடைக்கல"

"அவர் ஏன் தலை மறைவானார் ஆச்சி?"

ஆச்சி சிறிது நேரம் ஒன்றுமே பதில் பேசவில்லை. பின் சொன்னாள். "ராசா, உன் கிட்ட பொய் சொல்ல நான் பிரியப்படல. அதே நேரம் நிஜத்த சொல்லவும் என்னால முடியல. அதனால இதுக்கு மேல என்னை ஒண்ணும் கேட்காதப்பா"

"ஏன் ஆச்சி நிஜத்த சொல்லத் தயங்கிறீங்க?"

ஆச்சி பதில் ஒன்றும் சொல்லவில்லை. அவள் அவர்கள் இருவரையும் நிறையவே நேசித்திருக்க வேண்டும் என்பது அவளிடம் பேசிக் கொண்டிருந்த சிறிது நேரத்திலேயே அருணுக்குத் தெரிந்து விட்டது. தொடர்ந்து அவன் எத்தனை கேட்டும் அவர்களை அடையாளம் காட்டவோ, அவர்களைப் பற்றிய தகவல்கள் தரவோ ஆச்சி முன்வரவில்லை.

"சரி ஆச்சி. நேரமாச்சு, நான் கிளம்பறேன். பக்கத்து டவுன்ல லாட்ஜ்ல தங்கிட்டு நாளைக்கு வர்றேன். எனக்கு இன்னும் இங்கே கொஞ்சம் வேலை இருக்கு"

"நல்ல கதையா இருக்கு. இத்தன பெரிய வீடு இருக்கறப்ப நீ டவுன்ல போய் ஏன் தங்கணும் ராசா. என் வீட்டுலயே தங்கிக்க. நாளைக்கு உன் வேலைய முடிச்சுட்டு ஒரேயடியா போனாப் போச்சு"

ஆச்சியின் அந்த வார்த்தைகள் அவனை வியக்க வைத்தன. இன்னமும் கிராமங்களில் மட்டுமே இந்த விருந்தோம்பல் இருக்கிறது.

"பரவாயில்லை ஆச்சி, உங்களுக்கு ஏன் வீண் சிரமம். நான் கார்ல கால் மணி நேரத்தில் டவுனுக்குப் போயிடுவேன்."

"அதெல்லாம் நான் ஒத்துக்க மாட்டேன். என் வீடு இருக்கறப்ப நீ லாட்ஜுக்குப் போய் தங்கறத ஒத்துக்க மாட்டேன்"

அருண் வேறு வழியில்லாமல் தலையசைத்தான். திடீரென்று வேறு ஒரு எண்ணம் தோன்றவே அவன் கேட்டான். "உங்க பெரிய வீட்டுல தங்கறதுக்கு பதிலா நான் உங்க இந்த வீட்டுலயே தங்கினா என்ன?"

ஆச்சி தயங்கினாள். பின் சிறிது யோசனை செய்து விட்டு "சரி ராசா" என்று சம்மதித்தாள். வெளியே அந்த வார்த்தையைக் கேட்ட மருதமுத்து இதயத்தில் எரிமலையே வெடித்தது. இத்தனை வருடங்களாக ஆச்சி இந்த வீட்டில் யாரையும் தங்க அனுமதித்ததில்லை. அவளைப் பொறுத்த வரை அவள் வசிக்கும் அந்தப் பெரிய வீட்டை விட இந்த சிறிய வீடு பவித்திரமானது. அந்த இருவர் வாழ்ந்த வீட்டில் வேறு எவரும் தங்க அவள் சம்மதித்ததில்லை. ஒரு முறை அவரது நண்பர்கள் சிலர் வந்த போது ஒரே ஒரு நாள் அவர்கள் இங்கு தங்க மருதமுத்து அனுமதி கேட்ட போது முடியாது என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள். இன்று முதல் முறையாக ஒரு விதி விலக்கு இங்கு நிகழ்கிறது. சில மணி நேரப் பழக்கத்திலேயே அருண் அதைச் சாதித்து விட்டான். அவள் சம்மதித்ததற்கான காரணம் அருணிற்குத் தெரிய நியாயமில்லை. ஆனால் மருதமுத்து அறிந்திருந்தார். அதனாலேயே அவனை மனமார வெறுத்தார்.

## (20)

Nothing happens by chance, my friend... No such thing as luck. A meaning behind every little thing, and such a meaning behind this. Part for you, part for me, may not see it all real clear right now, but we will, before long.

– Richard Bach

"அருணிற்கு வேண்டிய சௌகரியங்களை செய்து கொடுத்து விட்டு ஆச்சி வீட்டுக்குள் நுழைந்த போது மருதமுத்து நிலை கொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டு இருந்தார். ஆச்சியைப் பார்த்தவுடன் பல்லைக் கடித்துக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னார். "அவனை ஏன் தங்கச் சொன்னீக?"

ஆச்சி மருதமுத்துவை ஆச்சரியத்துடன் பார்த்தாள். மருதமுத்து விளக்கினார். "அந்த ஆளுக்கு இது தெரிஞ்சா தேவையில்லாத பிரச்சனை".

"என் வீட்டில் நான் யாரைத் தங்க வைக்கணும்னு முடிவு செய்ய யாரவுக?"

இந்தக் கிழவிக்கு புத்தி பேதலித்து விட்டதா என்று மருதமுத்து யோசித்தார். அந்த ஆளைப் பற்றி இந்தக் கிழவிக்கு சரியாகத் தெரியாததால் தான் இப்படி கிறுக்குத் தனமாகக் கேள்வி கேட்கிறாள் என்று நினைத்துக் கொண்டார். கடைசியில் "ஆனாலும் நமக்கு இது தேவையில்லாதது" என்று சொன்னார்.

ஆச்சி பதில் பேசாமல் தனதறைக்குச் சென்றாள். அன்று அவளால் உறங்க முடியவில்லை.

அருணுக்குக் கூட உறக்கம் வரவில்லை. அந்தப் படுக்கையில் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். அந்தத் தாமிரபரணி நதிக் கரையைப் போலவே அந்த வீடும் அவன் மனதை என்னவோ செய்தது. அவர்கள் வாழ்ந்த இடம் இது. அவர்கள் காதலித்து அன்னியோன்னியமாக இருந்த இடம் இது. இந்த இடம் எத்தனையோ ரகசியங்களை அறியும். இங்கு அந்த ரகசியங்களுக்கான தடயம் ஏதாவது இருக்குமோ என்று அறிய அவன் விரும்பினான். அங்கிருந்தே அவனால் ஆச்சியின் ஓவியத்தைப் பார்க்க முடிந்தது. 'அதுகளோடவே நான் என் சந்தோஷத்தையும் இழந்துட்டேன்' என்ற அவளது வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தன. திடீரென்று ரங்காச்சாரியின் மேசையில் இருந்த புகைப்படமும் அவர் முகத்தில் சோகம் படர சொன்னதும் நினைவுக்கு வந்தது. "எனக்கு ரொம்பவே நெருக்கமானவன். அவன் ஞாபகார்த்தமாக இதை வைத்திருக்கிறேன்". நரசிம்மராஜுலு குரல் கம்ம சொன்னதையும் நினைவுபடுத்திக் கொண்டான். "உலகத்திலேயே இணை இல்லாத மூளை... அவன் முன் நான் எல்லாம் பூஜ்ஜியம் தான்".

"யாரவன்? இத்தனை பேர் மனதில் இப்படியரு இடம் பிடித்துக் கொண்டு சுவடே இல்லாமல் அவனால் எப்படி இறந்து போக முடிந்தது?" என்று மனதில் அருண் பலமுறை கேட்டுக் கொண்டான். அவள் வேறெந்த ஓவியத்தையும் வரையவில்லையா என்ற கேள்விக்கு ஆச்சி தன்னையும் அறியாமல் படுக்கையறையைப் பார்த்தது அவனுக்கு நினைவுக்கு வர நான்கு சுவர்களையும் கூர்ந்து பார்த்தான். ஒரு சுவரில் ஒரு ஓவியம் பல காலம் தொங்கிக் கொண்டிருந்ததற்கான அறிகுறியாக அந்தக் குறிப்பிட்ட இடம் மட்டும் பளிச்சென்று இருந்தது. மற்ற இடமெல்லாம் பழுப்பேறி இருந்ததையும் அவன் கவனித்தான். அவன் நினைத்தது சரி தான் என்பதற்கு அறிகுறியாக ஆணி இன்னும் அங்கு சாட்சியாக இருந்தது. அது யாருடைய ஓவியமாயிருக்கும்? 'அவனு'டையதா? 'அவளு'டையதா?

அவன் எழுந்து வீட்டை நிதானமாக ஆராய்ந்தான். ஆனால் அந்த இரண்டு பேர் பற்றி தகவல் சொல்கிற மாதிரி அவனுக்கு எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. அன்று அவன் தூக்கத்தில் சேதுபதியைப் பார்ப்பதாய் கனவு கண்டான். அவர் அந்த தாமிரபரணி நதிக்கரையில் உட்கார்ந்திருப்பதாகவும் அவரை அவன் சத்தமில்லாமல் நெருங்குவதாகவும் கனவு கண்டான். திடீரென்று அம்மா கனவில் இடையில் வந்தாள். "வேண்டாண்டா...." என்றாள். அவன் கண் விழித்த போது காலை மணி ஆறு.

அன்று காலை ஆச்சி டிபனுக்கு சுடச் சுட இட்லியும், காபியும் கொடுத்தாள். அன்புடன் பரிமாறிய போது அவனுக்கு அம்மா நினைவுக்கு வந்தாள். ஒரே நாளில் இந்த ஆச்சி எவ்வளவு தூரம் பழகி விட்டாள் என்று அவன் அதிசயித்தான். மருதமுத்து முகத்தில் மட்டும் வெறுப்பின் இறுக்கம் தெரிந்தது.

"இன்னைக்கு என்ன செய்யப் போறே ராசா?" என்று ஆச்சி கேட்டாள்.

"சேதுபதியையும், அந்த ரெண்டு பேரையும் இந்த கிராமத்தில் வேற யாருக்காவது தெரியுமான்னு பார்க்கப் போறேன்"

ஆச்சி முகத்தில் ஒரு வித தளர்ச்சி தெரிந்தது. அவள் ஒன்றும் சொல்லவில்லை.

பிறகு அவன் பழையபடி ஊர்க்காரர்களிடம் சென்று பேசினான். தான் இங்குக் கதை எழுத வந்த காரணமே இந்த ஊரில் முன்பு ஒருவர் வந்து எழுதிய ஒரு நாவல் பின்பு பிரபலமானது தான் என்றும் அவர் பெயர் சேதுபதி என்றும் பலரிடமும் சொன்னான். இருபத்தைந்து வருடங்களுக்கு முந்தைய பழைய ஆட்களிடம் அதிகம் பேசினான். ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தார்கள். சேதுபதியை சிலர் ஒரு சங்கோஜமுள்ள இளைஞனாக மட்டும் நினைவு கூர்ந்தார்கள். அவர்களில் சிலர் அந்தக் காலக் கட்டத்தில் ஆச்சி வீட்டில் சுமார் ஒரு வருட காலம் தங்கிய ஒரு ஜோடியை தெளிவில்லாமல் நினைவு கூர்ந்தார்கள். அவர்கள் யாரிடமும் ஒட்டவில்லை என்றும் பகலில் வெளியே வந்தது கூடக் குறைவு என்றும் சொன்னார்கள். ராமசாமி என்ற பெரியவர் மட்டும் சற்று அதிகப்படியாக பல தகவல்களைச் சொன்னார்.

"செங்கமலமும் நானும் ஒரே வயசுக் காரங்க தம்பி. அந்தக் காலத்திலிருந்தே அவுக பேசறது குறைவு. கிராமத்து ஆளுக பேசற வம்பு தும்பெல்லாம் பேசறதோ, மத்தவக கூட சேர்றதோ கிடையாது. அதனால நாங்களும் அதிகமா அவுக வீட்டுக்குப் போறது இல்ல....

சேதுபதி பத்தியெல்லாம் தெரியாது. அவனும் கொஞ்ச காலம் தான் இருந்தான். அவன் மருதமுத்து கூடப் படிச்சவன், அவன் நண்பன்கிறது மட்டும் தெரியும்.....யாரைக் கேட்கிறீக தம்பி? ....அவுக வீட்டுல குடியிருந்த ஒரு சோடியக் கேக்குறீகளா... அதுக பகல்ல வெளியவெ வராதுக...இருட்டுனதுக்கப்புறம் நதிக்கரையில உட்கார்ந்து பேசிகிட்டிருப்பாக. அந்த நேரத்துல யாரு தம்பி நதிக்கரைக்குப் போவாக. அதனால அதிகமா அவுகளப் பத்தித் தெரியாது... சில சமயம் செங்கமலம் கூட அவுக கூட உக்காந்து பேசறத தூரத்துல இருந்து பாத்திருக்கேன். .....இல்ல தம்பி அவுக ரெண்டு பேரும் யாரு என்னன்னு தெரியாது. அந்தப் பையன் நல்லாப் பாடுவான் தம்பி. பல சமயம் லேசா காதில் விழும். கண்ணதாசன் பாட்ட டி எம் எஸ் குரல்ல ப்ரமாதமா பாடுவான். சில சமயம் இந்திப் பாட்டும் பாடுவான். எங்க திருவிழா சமயம் பாடறதுக்கு அந்த வருசம் எங்க பசங்க அவுகள கேக்கப் போனப்ப செங்கமலம் ஏதோ இனாம் கேக்கப் போனவுகள துரத்தற மாதிரி துரத்திட்டா. அந்தப் பையனப் பாக்கக் கூட விடல. இதெல்லாம் எங்க மாதிரி கிராமத்துல ரொம்பவே கவுரவக் குறைவு தம்பி. அதில இருந்து நாங்க அவுக வீட்டுப் பக்கம் தல வச்சுப் படுக்கறது கூட இல்ல. நீங்க என்ன சொன்னீக தம்பி நேத்து அவுக வீட்டுல தங்குனீகன்னா.... நிசமாவே அதிசயம் தான். ஏன் தம்பி நீங்க அந்த சோடிக்கு ஏதாவது சொந்தமா... ஓ இல்லையா நான் கேட்டது எதனாலன்னா அவுக சொந்தம் ஒரு சிலரத் தவிர வெளியாளுன்னு தங்குனது அந்த சோடிக்கு அப்புறம் நீங்க தான்..... என்ன சொன்னீக தம்பி உங்கள மாதிரி சேதுபதி கூட கதை எழுதறவன்னா.. இல்ல தம்பி நீங்க சொல்லித் தான் தெரியும். இந்த கிராமத்துல அந்த காலத்துல மருதமுத்து ஒருத்தன் தான் படிச்சவன். அதனால கதை பத்தியெல்லாம் தெரியாது தம்பி..... அந்த சோடி எப்படி செத்தாகன்னா கேக்குறீக ...யாருக்கு தம்பி தெரியும்? அவுக ரெண்டு பேரும் செத்துட்டாங்கன்னே நீங்க சொல்லித் தான் தெரியும். எப்ப தம்பி செத்தாக?"

அருண் திகைத்துப் போனான். கதையின் படி இருவரும் தாமிரபரணி நதிக்கரையில் இறந்து போனார்கள். கதையில் பாக்கி எல்லாம் நிஜம் என்று சிறிது சிறிதாகத் தெரிய வந்ததால் அவர்கள்

மரணம் கூட நிஜம் என்று இது வரை எண்ணி வந்த அருண் பரபரப்புடன் கேட்டான். "அவங்க சாகலைன்னா அவங்க அப்புறம் என்ன ஆனாங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியல தம்பி. பெரிய கப்பல் மாதிரி ரெண்டு காரு இந்தக் கிராமத்துக்கு வந்துது. அந்த மாதிரி கார நாங்க சினிமால கூடப் பாத்ததில்ல தம்பி. சில சனங்க வந்து ஒரு நாள் முழுசும் ஆச்சி வீட்டுல இருந்தாக. அவுக போறப்ப அந்த சோடியும் அவுக கூடப் போயிடுச்சு. நீங்க நெனச்ச மாதிரி அவுக சாகல. ஏன் செங்கமலம் அப்படியா சொல்லிச்சு? சொல்லலியா....ஓ நீங்க தான் அப்புடி நெனச்சீட்டீகளா....நீங்க அந்த சோடியப் பத்தி கத எழுத வந்தீகளா?.........."

அதற்குப் பிறகு அந்தக் கிழவரிடம் என்ன பேசினான் என்றோ அவர் என்ன சொன்னார் என்றோ அருணுக்கு நினைவில்லை. அருண் வேறு உலகத்தில் இருந்தான். அவர்கள் இருவரும் அங்கு சாகவில்லை என்ற உண்மை சம்மட்டியாக தலையில் அடித்தது. அவனுக்கு ஏற்பட்ட படபடப்பு நிமிடத்துக்கு நிமிடம் அதிகமாகியது. அந்தக் கதாபாத்திரங்கள் இப்போது கூட எங்கேயோ உயிருடன் இருக்கலாம் என்று நினைக்கையில் ஏற்பட்ட உற்சாகத்திற்கு அளவேயில்லை. அவர்கள் உயிரோடு இருப்பதால் தான் அவர்கள் பற்றிய உண்மைகள் பற்றி சிலர் சொல்லத் தயங்குகிறார்கள், சிலர் அந்த உண்மைகள் வெளியாவதைத் தடுக்க முயல்கிறார்கள் என்ற உண்மை சிறிது சிறிதாக அவனுக்கு உறைக்க ஆரம்பித்தது.

## (21)

It was a dream of perfect bliss

Too beautiful to last.

–T.S.Bayly

அருண் முதல் போனை காவ்யாவுக்குத்தான் செய்தான். "காவ்யா, அந்த நாவல்ல சொன்ன மாதிரி அவங்க அந்த நதிக் கரையில் தற்கொலை செய்துக்கலை. உண்மையில் இப்போது கூட அவங்க உயிருடன் இருக்க வாய்ப்பிருக்கு".

அவளுக்கு சிறிது நேரம் பேச்சு வரவில்லை. பேசிய போது அவள் நிறையவே உணர்ச்சிவசப் பட்டாள். "அப்படி அவங்க உயிரோட இருந்தா அவங்கள கண்டு பிடிச்சதுக்கப்புறம் எனக்கு அவங்க கிட்ட பேச நீ ஒரு சந்தர்ப்பம் செய்து தரணும். எனக்கு அவங்க கிட்ட நிறைய பேசணும். நிறைய கேட்கணும்"

"என் உள் மனசு சொல்லுது, அவங்க இப்ப உயிரோடதான் இருக்காங்கன்னு. கண்டிப்பா நாம அவங்கள சந்திப்போம் காவ்யா"

"அருண்...."

"என்ன காவ்யா?"

"அவங்க உயிரோட இருக்கிறாங்கன்னா, சேர்ந்திருக்காங்களா, இல்லை பிரிஞ்சிருக்காங்களா? நீ என்ன நினைக்கிறே?"

"பிரிஞ்சிருக்காங்கன்னு நினைக்கிறேன் காவ்யா. அவங்க கூட நெருக்கமா இருந்தவங்க எல்லாரும் ஒரு சோகத்தோட தான் அவங்களப் பத்திப் பேசறாங்க. அதையும், அந்தக் கதை

பத்தின உண்மைகள் வெளியே வரக் கூடாதுன்னு நடக்கற முயற்சிகளையும் பார்க்கறப்ப எனக்கு அப்படித்தான் தோணுது."

"ரெண்டு நாள் உன்னைப் பிரிஞ்சு இருக்கிறதே நரகமாய் இருக்கு. அவங்களால எப்படி இவ்வளவு வருஷம் பிரிஞ்சு இருக்க முடிஞ்சிருக்கும் அருண். அப்ப இல்லாட்டியும் பிறகாவது அவங்க அந்தப் பிரிவைத் தாங்க முடியாம இறந்துருக்கலாம் இல்லையா"

அவள் சொன்னதில் ஒரு லாஜிக் இருந்தாலும் அதை மனம் ஏனோ ஏற்க மறுத்தது. சிறிது நேரம் பேசி விட்டு அடுத்ததாக அம்பலவாணனிடம் போனில் விஷயத்தை அவன் சொன்ன போது அவரும் சிறிது நேரம் பேச்சிழந்து போனதாகத்தான் அருணுக்குத் தோன்றியது. பின் பேசிய போது அவர் குரல் ஏனோ தாழ்ந்திருந்தது. "அருண் ஜாக்கிரதையாய் இரு"

"பயப்படற மாதிரி இங்க எதுவும் இல்லை சார்"

"இருக்கு" என்றார் அம்பலவாணன்.

"என்ன சார்?"

"நான் உன் கிட்ட சொல்லாம விட்ட ஒரு விஷயம் இருக்கு அருண். அதை நீ நேரில் வர்றப்ப சொல்றேன். அது வரைக்கும் ஜாக்கிரதையாய் இரு. இந்த உண்மையை விட எனக்கு இப்ப நீ ரொம்ப முக்கியம்....."

போனை வைத்த அருணுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்கள் இருவரும் உயிரோடு இல்லை என்று நினைத்திருந்த வரையில் பெரிதாக பயப்படாத அம்பலவாணன் அவர்கள் இருவரும் உயிரோடு இருக்கக் கூடும் என்றான பிறகு பயப்படுவது ஏன் என்று அவனுக்கு விளங்கவில்லை.

அவன் ஆச்சி வீட்டை அடைந்த போது ஆச்சி அவனுக்காக சாப்பிடாமல் காத்திருந்தாள். "மருது சாப்பிட்டாச்சு. சரி நீ எப்படியும் வருவாய். வந்தவுடன் சேர்ந்தே சாப்பிடலாம்னு இருந்துட்டேன். வாப்பா சாப்பிடலாம்"

அவன் நெகிழ்ந்து போனான். ஒரே நாள் பழக்கத்தில் சம்பந்தமே இல்லாத இந்த ஆச்சி காட்டும் அன்பு அவனை திக்கு முக்காடச் செய்தது. சாப்பிடும் போது திடீரென்று சொன்னான். "அந்தக் கதாநாயகனுக்கு நல்லாப் பாட வரும்னு கேள்விப் பட்டேன்"

ஆச்சி ஆமென்று தலையசைத்தாள்.

"தமிழ், ஹிந்தி ரெண்டுலயும் பாட வரும்னு சொன்னாங்க"

ஆச்சி தலையசைத்தாள். "படே அச்சே லக்தே ஹே" என்ற பாடலை எப்போதும் அனுபவித்துப் பாடுவான் அவன். பாடும் போது தன் காதலியைப் பார்த்துப் பாடுவான். ஹிந்தி தெரியாத ஆச்சி அவனிடம் ஒரு முறை அதன் அர்த்தம் கேட்டாள். சொன்னான். "சில விஷயங்கள் மிகவும் இனிமையாக இருக்கின்றன. இந்த இடம், இந்த நதி, இந்த சூழ்நிலை, இத்தனையோடு நீ". அந்தக் கணம், அவன் தன் காதலியைப் பார்த்த பார்வை, எல்லாம் மிகவும் பவித்திரமாக இன்றும் ஆச்சி நினைவில் இருக்கின்றன. அந்தப் பாட்டின் முதல் சில வரிகளை ஆச்சி மனப்பாடம் செய்து அந்த நாட்களில் தனிமையில் பல முறை மெல்ல முணுமுணுத்திருக்கிறாள். மிக அழகான நாட்கள் அவை. ஆனால் எல்லாம் ஒரு குறுகிய காலத்தில் முடிந்து போய் விட்டன.

ஆச்சியின் முகத்தில் தெரிந்த வலியை அருண் கவனித்தான். ஆச்சிக்கு ஹிந்தி தெரிய வாய்ப்பில்லை என்பதால் "எந்தத் தமிழ்ப் பாட்டு நல்லாப் பாடுவான் ஆச்சி?" என்று கேட்டான்.

ஆச்சி கோபப் பட்டாள். "உன் வயசென்ன அவன் வயசென்ன அவன், இவன்னு ஏன் சொல்றே ராசா"

அருண் வாய் விட்டு சிரித்தான். "அது கதாபாத்திரமாவே மனசில் பதிஞ்சிட்டதால அப்படி சொன்னேன். சரி எந்தப் பாட்டு நல்லாப் பாடுவார்"

"பொதுவா எல்லாப் பாட்டும் நல்லாப் பாடுவான். குறிப்பா சொல்லணும்னா ஆலயமணில 'பொன்னை விரும்பும் பூமியிலே.." நல்லாப் பாடுவான். அவள் எழுதற கவிதை எல்லாம் அவன் ட்யூன் போட்டு பாடுவான். அந்தக் குரல்ல உயிர் இருக்கும் ராசா. அது மனசோட ஆழத்தைத் தொடும்"

அவள் அவனைப் பற்றிப் பேசிய போதெல்லாம் ஒருவித பெருமிதம் தொனித்ததை அருண் கவனித்தான். அது ஒரு தாயின் பெருமிதம். வாழ்க்கையில் இரத்த பந்தம் இல்லாதவர்களால் கூட இவ்வளவு தூரம் நேசிக்கப் பட அந்த மனிதன் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று அருண் ஒரு கணம் நினைத்தான். சிறிது நேரம் கழித்து திடீரென்று கேட்டான்.

"அவங்க ரெண்டு பேரும் அப்பவே சாகல இல்லையா ஆச்சி?"

ஆச்சி அமைதியாக அவனைப் பார்த்தாள். அவன் ஆர்வத்துடன் அவளருகே அமர்ந்து கேட்டான். "ஆச்சி ஒரே ஒரு உண்மைய மட்டும் சொல்லுங்க. அவங்க ரெண்டு பேரும் இப்பவும் உயிரோட இருக்காங்களா?"

ஆச்சி கண்கலங்கினாள். அவள் முகத்தில் தாங்க முடியாத துக்கம் படர்ந்தது. "தெரியல ராசா" என்றாள்.

"சரி ஆச்சி. உங்களுக்குத் தெரிஞ்சதையாவது சொல்லுங்க. அவங்களப் பத்தி சொல்லுங்க. அவங்க குடும்பத்தைப் பத்திச் சொல்லுங்க..."

மாட்டேன் என்பது போல ஆச்சி தலையசைத்தாள்

"ஏன் ஆச்சி?"

ஆச்சி எரிமலையாக வெடித்தாள். "உங்க மாதிரி பத்திரிக்கைக்காரர்க கிட்ட ஒரு பெரிய கெட்ட பழக்கம் இருக்கு ராசா. அடுத்தவுக விசயத்தில தலையிடறத நீங்க உங்க உரிமையாகவே நினைக்கிறீக. அதை வெளிப்படுத்தி பிரசுரம் செய்யறதுல எத்தன பேர் மனசு புண்படுதுங்கறது பத்தி நீங்க நினைச்சுக் கூட பாக்கறது இல்ல. ஏன் தம்பி உங்க வாழ்க்கைல அடுத்தவங்களுக்குத் தெரியத் தேவையில்லைன்னு நீங்க நினைக்கிற தனிப்பட்ட விசயங்களே இருக்காதா? அந்த மாதிரி விசயங்கள மத்தவுக வெட்ட வெளிச்சத்துக்குக் கொண்டு வர துடிச்சா நீங்க ஒத்துக்குவீகளா?"

அவள் வார்த்தைகளில் இருந்த உண்மை அருணை ஒரு கணம் பேச்சிழக்க வைத்தது. ஒரு கிராமத்துக் கிழவி பத்திரிக்கை சுதந்திரத்தை இப்படி சாடுவாள் என்று அவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பின்பு சொன்னான். "பொதுவா நீங்க சொல்றதுல நிஜம் இருக்கு ஆச்சி. ஆனால் என்னைப் பொறுத்த வரைக்கும் நான் உறுதியா ஒண்ணு மட்டும் சொல்ல முடியும். நான் கண்டு பிடிக்கற விஷயம் உண்மையிலேயே உயிரோட இருக்கற மனுஷங்கள நியாயமில்லாம பாதிக்கும்னா நான் கண்டிப்பா அத பிரசுரம் செய்ய மாட்டேன் ஆச்சி. ஆனா அந்த ரெண்டு பேரைக் கண்டு பிடிக்கற வரைக்கும், முழுசா தெரிஞ்சிக்கற வரைக்கும் நான் கண்டிப்பா ஓய மாட்டேன்"

ஆச்சி அவன் குரலில் தெரிந்த உறுதியைக் கண்டு மனதிற்குள் புலம்பினாள். "சேதுபதி! நீ ஏன் அந்தக் கதைய எழுதினே? உன்னோட கதை முடியக் காரணமா இருந்தவனே இப்ப அதை திரும்ப ஆரம்பிக்க வந்திருக்கான்....."

## (22)

Take some time to reflect on the question, What is true? What does your experience tell you? What have you learned so far in this life? What have you noticed? The answer you will receive is not always a straight answer, like X or Y. Rather the question leads to a deeper and more profound experience of the question.

–Soren Gordhamer

சில நாட்களாகவே மாலை நேரங்களில் சீக்கிரமாகவே வீடு வந்து சேர்ந்த மகளைப் பார்க்கப் பார்க்க சந்திரனுக்கு மனம் என்னவோ செய்தது. அருண் வீட்டுக்குச் சென்று தான் செய்த அட்டகாசத்தைப் பற்றி மகள் கேட்பாள், சண்டை போடுவாள் என்றெல்லாம் எதிர் பார்த்திருந்ததற்கு மாறாக காவ்யா மிக அமைதியாக இருந்தாள். சீக்கிரமாக வருகிறாள் என்றால் அவள் அருணை சந்திப்பதில்லையென்று அர்த்தம். அருணும் அவளும் சந்திக்காமல் இருக்கத் தன் நடவடிக்கை தவிர வேறு எதுவும் காரணம் இருக்க முடியும் என்று அவருக்குத் தோன்றவில்லை. மனம் உறுத்தியது.

ஒரு நாள் பொறுக்காமல் வாய் விட்டே காவ்யாவிடம் கேட்டார். "அருண் ஊரில் இல்லையா?"

மகளிடம் திட்டு வாங்கினால் கூடப் பரவாயில்லை என்று அவருக்குத் தோன்றியது. அவளது மௌனம் தான் சம்மட்டியாக அவரைத் தாக்குகிறது.

"தெரியலப்பா" என்று அவள் அமைதியாக சொன்னாள்.

"இப்பல்லாம் சாயங்காலம் சீக்கிரம் வர்றியேன்னு கேட்டேன்"

"நாங்க பிரிஞ்சுட்டோம்ப்பா"

"ஏன்?" என்று கேட்டு விட்டு மகளிடம் வசவைக் கேட்க சந்திரன் தயாரானார்.

ஆனால் அவள் அவரைத் திட்டவோ, குற்றம் சாட்டவோ இல்லை. மாறாக பலவந்தமாக முகத்தில் சோகத்தைக் கொண்டு வந்து "நான் குடுத்து வச்சது அவ்வளவு தாம்ப்பா" என்று சொல்லி அங்கிருந்து சென்று விட்டாள்.

அந்த வார்த்தைகள் அவர் இதயத்தை வெட்டிப் போட்டன. உள்ளே ரத்தம் கசிந்தது. என்ன ஆனாலும் அவர் மகளை மிக தைரியமானவளாகவும், பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் முகம் மலர்ந்தவளாகவும் தான் இது வரை அவர் பார்த்திருக்கிறார். ஆனால் இன்று அவள் எதிர்மாறாக இருப்பதைக் காண அவருக்குத் தாங்க முடியவில்லை. அதுவும் அதற்குத் தானே காரணமாக இருந்திருக்கிறோம் என்ற குற்ற உணர்வு அவரைப் பாடாகப் படுத்தியது. அவளுக்குத் தான் ஒரு நல்ல தந்தையாக இருக்கவில்லை என்பதை அவர் அறிவார். ஆனால் அவளுக்கு அமைய இருந்த ஒரு நல்ல வாழ்க்கையைக் கெடுத்து விட்ட ஒரு வில்லனாக மாறி விட்டோம் என்பதை உணர்ந்த போது அவர் மனம் படாத பாடு பட்டது.

திரும்பவும் சென்று மகளிடம் பேசினார். "நான் தப்பு செஞ்சதுக்கு உன்னை எதுக்கு தண்டிக்கணும்?"

அப்போதாவது அவள் அவரைக் கண்டபடி திட்டினால் தேவலை என்று அவருக்குப் பட்டது. ஆனால் அவள் அப்போதும் திட்டாமல் விரக்தியுடன் சொன்னாள். "பெண் எப்பவுமே தனியா எடை போடப் படறதில்லைப்பா. ஒரு காலத்தில் அப்பா, ஒரு காலத்தில் புருஷன், ஒரு காலத்தில் பிள்ளைன்னு எப்பவுமே இவங்கள வச்சி தான் அவளுக்கு அந்தஸ்தே கிடைக்குது"

சந்திரன் குற்ற உணர்வு இமயமாக அழுத்த மகளிடம் கேட்டார். "நீ ஏன் என்னைத் திட்ட மாட்டேங்கிறே?"

"அதனால் ஒரு உபயோகமும் இல்லைன்னு இத்தனை நாள்ல தெரிஞ்சுகிட்டேன்ப்பா" அவள் சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

சந்திரனுக்கு முதல் முறையாகத் தன் மேலேயே வெறுப்பு வந்தது. அன்று அருண் வீட்டுக்குப் போய் பேச வேண்டிய அவசியம் என்ன இருந்தது. குடும்பத்திற்காக ஓடாக உழைக்கும் பெண்ணிற்கு இப்படியரு நிலையை ஏற்படுத்தி விட்டோமே என்று உறுத்திக் கொண்டே இருந்தது. அன்று பிராந்திக் கடை வாசலில் இரட்டை மனதோடு நிறைய நேரம் நின்றார். கடைசியில் எல்லாம் இந்த சனியனால் தான் வந்தது என்று எண்ணம் வரவே எதுவும் வாங்காமல் திரும்பி வந்தார். முதல் முறையாகக் குடிக்காமல் வீடு வந்த தகப்பனைக் காண ஆச்சரியமாக இருந்தாலும் காவ்யா ஒன்றும் சொல்லவில்லை.

அன்று இரவு சந்திரனுக்குத் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலை குளித்து டிபன் சாப்பிட்டு முதல் வேலையாக ராஜராஜன் வீட்டுக்குக் கிளம்பினார். அவர் கேட்டில் கூனிக் குறுகி நின்ற போது மாதுரி முன்னால் தோட்டத்தில் இருந்தாள். அவரைப் பார்த்தவுடன் அவளுக்கு ஒரு கணம் இதயத் துடிப்பு நின்றது. காலையிலேயே இந்த ஆள் குடித்து விட்டுக் கலாட்டா செய்ய வந்து விட்டாரா என்று பயந்தாள். இந்த நேரமாகப் பார்த்து அருணும் இல்லை, ராஜராஜனும் வீட்டில் இல்லாதது அவளுக்குக் கலவரத்தை ஏற்படுத்தியது. ஆனாலும் கேட்டில் தேவையில்லாமல் பலர் பார்க்க அசிங்கப் பட வேண்டாம் என்று அவரை உள்ளே விட கூர்க்காவிற்குச் சைகை செய்தாள்.

"வணக்கம்மா" என்று பவ்யமாக அவர் கை கூப்பினார்.

அவர் குடித்து விட்டு வரவில்லை என்ற விஷயமே அவளுக்குத் தெம்பைத் தந்தது. ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். "வணக்கம்"

"ஐயா இல்லைங்களா?" கூப்பிய கைகளைப் பிரிக்காமல் அவர் ராஜராஜனைக் கேட்டார். அவரைப் பொருத்த வரை வீட்டுக் குடும்பத் தலைவரிடம் முதல் மன்னிப்பைக் கேட்பது தான் முறை.

இந்த ஆள் ராஜராஜனை விடுவதாக இல்லை என்று நினைத்த போது அவளையும் அறியாமல் மாதுரி முகத்தில் புன்னகை அரும்பியது. 'நல்ல காம்பினேஷன்'

"அவர் வெளியே போயிருக்கார்"

சந்திரன் சாஷ்டாங்கமாய் அவள் காலில் விழுந்தார். இதை எதிர்பாராமல் மாதுரி சற்று பின் வாங்கினார். "என்ன இதெல்லாம்..?"

"என்னை மன்னிச்சுடுங்கம்மா. அன்னைக்கு நான் நிதானத்தில் இல்லை. ஏதோ ஏடாகூடமாய் நடந்துகிட்டேன். என் தப்புக்கு என் பெண்ணை தண்டிச்சுடாதீங்க. அவ பத்தரை மாத்துத் தங்கம்.

என்னை மாதிரி ஒரு தண்டத்துக்கு மகளாய் பொறந்ததைத் தவிர வேற எந்த தப்பையும் அவ செய்யலை...."

பேசுவது என்ன என்று கூர்க்கா காதில் விழா விட்டாலும் அவன் வேடிக்கை பார்க்கிறான் என்ற உண்மை உறைக்க வெட்கம் பிடுங்கித் திங்க "சரி சரி முதல்ல நீங்க எந்திரிங்க" என்று மாதுரி சொன்னாள்.

சந்திரன் எழுந்தார். அவர் கண்கள் நிறைந்திருந்தன. "நான் தனித் தனியா உங்க மூணு பேர் கால்லயும் விழுந்து மன்னிப்புக் கேட்க வந்தேம்மா. என் பொண்ணு என்ன ஆனாலும் சோர்ந்துடாம எப்பவும் தைரியமா, சிரிச்ச முகத்தோட இருப்பா. அப்படிப்பட்டவள கொஞ்ச நாளா எதிர்மாறாப் பார்க்க எனக்குத் தாங்கல...."

மாதுரிக்கு மனம் நெகிழ்ந்தது. இனி ராஜராஜன் காலில் விழுவதற்காக அவர் ஒரு முறை அர்த்தமில்லாமல் வர வேண்டாம் என்று நினைத்தவளாகச் சொன்னாள். "அருண் ஊரில் இல்லை. அவன் வந்தப்பறம் அவனைப் பாருங்க. நாங்க ரெண்டு பேரும் அவன் பர்சனல் விஷயத்தில் தலையிடறதில்ல"

திரும்பத் திரும்ப அவளிடம் பலவிதங்களில் மன்னிப்பு கேட்டு விட்டு சந்திரன் கிளம்பினார்.

குடிகாரன் கூடத் தன் ரத்தம், தன் குழந்தை என்றாகும் போது எப்படி மாறி விடுகிறான் என்று மாதுரி வியந்தாள். அவளுக்குத் தன் தந்தை நினைவு வந்தது. அவரும் சாகும் வரை மகளுக்காக எதுவும் செய்யத் தயாராக இருந்தார். திடீரென்று மனம் ராஜராஜனையும் அருணையும் நினைத்தது. அவர் ஒரு முறை கூட இது போன்ற ஒரு பாசத்தைக் காட்டியதாக அவளுக்கு நினைவில்லை. அதிசயமாய் ஒரு முறை தட்டிக் கொடுத்த போது அந்த இடத்தைத் தொட்டபடி ஆச்சரியப் பட்டு அருண் நின்ற விதம் இப்போதும் அவள் மனதில் பசுமையாக இருந்தது. மனம் வலித்தது. என்றோ சேதுபதி சொன்னது போல் அவளால் அவளையே மன்னிக்க முடியவில்லை.

## (23)

To meet, to know, to love and then to part

Is the sad tale of many a human heart. – S.T.Coleridge

**அ**ன்று இரவு மாதுரி தன் மகனுக்குப் போன் செய்த போது அவன் தாமிரபரணி நதிக்கரையில் ஆச்சியுடன் அமர்ந்திருந்தான். மாதுரி மகனிடம், சந்திரன் வந்து மன்னிப்பு கேட்டுப் போனதை விவரமாய் சொன்னாள். அருணுக்குக் காவ்யாவின் தந்தையின் மாற்றம் ஆச்சரியப்பட வைத்தது. மகளுக்காக கண்ணீருடன் அவர் சொன்னதை மாதுரி சொன்ன போது அவனும் பெருமூச்செறிந்தான். இந்த விஷயத்தில் காவ்யா தன்னை விட அதிர்ஷ்டக்காரி என்று நினைக்கத் தோன்றியது. உலகத்தில் தன் தந்தையைத் தவிர எல்லாத் தந்தைகளும் தங்கள் குழந்தைகளை நேசிக்கிறார்கள் என்று தோன்றிய போது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. எல்லாருக்கும் எல்லாமே கிடைத்து விடுவதில்லை என்று உடனே தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான்.

"அருண் அங்க ஒட்டல் எல்லாம் நல்லாயிருக்கா, சாப்பாடெல்லாம் சரியாய் கிடைக்குதா?" மாதுரி கேட்டாள்.

அருண் உற்சாகத்திற்கு மாறினான். "இங்க வந்ததுக்கப்புறம் ஒட்டலுக்கே போகலை. வீட்டு சாப்பாடு தான். இங்க ஆச்சின்னு ஒருத்தர் எனக்கு நல்லா சமைச்சுப் போடுறாங்க. இந்த மாதிரி

ருசியாய் நான் இது வரைக்கும் சாப்பிட்டதில்லைன்னே சொல்லலாம். அவங்க பரிமாறும் போது உன் ஞாபகம் தான் வருதும்மா. எனக்கு ஒரு பாட்டி இருந்திருந்தா இப்படித் தான் இருந்திருப்பாங்கன்னு தோணுதும்மா. அவங்க என் பக்கத்தில் தான் இருக்காங்க. நீ கொஞ்சம் பேசேன். அவங்க கிட்ட போனைத் தர்றேன்"

தன் செல் போனை ஆச்சியிடம் அருண் கொடுத்தான். "எங்கம்மா..." என்றான். ஆச்சி இதை எதிர்பார்த்திருக்கவில்லை. திகைத்துப் போய் சிலையாய் சமைந்தாள். அதே நிலையில் தான் அங்கு மாதுரியும் இருந்தாள். திடீரென்று சமாளித்துக் கொண்டு தன் செல் போனை ஆ•ப் செய்தாள். ஆனால் அவளது படபடப்பு குறைய அதிக நேரம் ஆகியது.

எந்திரத்தனமாக செல் போனை அருண் கையில் இருந்து வாங்கிய ஆச்சி "ஹலோ" என்று சொன்னாள். இரண்டு மூன்று ஹலோக்களுக்குப் பின் அவன் கையில் போனைத் திருப்பிக் கொடுத்தாள். "சத்தமே இல்லை ராசா" என்றாள்.

"கட் ஆகியிருக்கும்" என்று சொன்ன அருண் தன் தாயின் செல்லிற்கு மறுபடி முயன்ற போது இணைப்பு கிடைக்கவில்லை. "பரவாயில்லை லேண்ட் லைனுக்கு செய்யறேன். பேசுங்க ஆச்சி" என்று அவன் சொன்ன போது ஆச்சி வேண்டாம் என்றாள். "இந்தக் கிராமத்துக் கிழவி கிட்ட அவங்களுக்கு பேச என்ன கிடக்கு ராசா. எனக்கும் என்ன பேச முடியும்?"

அருண் அவள் பேச்சைக் கேட்பதாயில்லை. வீட்டு போனுக்கு முயன்றான்.

மாதுரி எடுத்தாள். "ஹலோ"

"அம்மா நான் அருண் பேசறேன். பேசப் பேச உன் செல் போன் கட்டாயிடுச்சு. ஒரு நிமிஷம் ஆச்சி கிட்ட தர்றேன் பேசு"

மாதுரிக்கு மயக்கமே வந்து விடும் போல இருந்தது. தர்மசங்கடத்துடன் சரியென்றாள்.

"ஹலோ" என்ற போது ஆச்சியின் குரல் ஏனோ நடுங்கியது.

"நான் அருணோட அம்மா பேசறேன் ஆச்சி......உங்க சமையலையும், உங்க உபசரிப்பையும் பத்தி சொன்னான். ரொம்ப தேங்க்ஸ்"

ஆச்சிக்கு சிறிது நேரம் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பின் குரல் கரகரக்கச் சொன்னாள். "அது என் பாக்கியம் தாயி. புள்ள குட்டி இல்லாத எனக்கு என்னவோ ஒரு பேரனப் பார்க்கிறதா தோணுச்சு.... பின்ன அருண் சொல்ற மாதிரி பெருசா எதுவும் நான் செஞ்சுடல...அருண் கிட்டக் குடுக்கட்டுமா தாயி"

அருண் செல்லை வாங்கி சொன்னான். "சரிம்மா. நான் நாளைக்கு வர்றேன். பை. குட் நைட்"

மாதுரி ரிசீவரை வைத்து விட்டு அப்படியே பக்கத்திலிருந்த சோபாவில் சாய்ந்தாள். 'இது அதே ஆச்சி தானா, இல்லை வேறு ஏதோ ஆச்சியா. அந்த ஆச்சி இவ்வளவு காலமும் உயிரோடு இருப்பாளா? கிட்டத் தட்ட 75 வயதை அந்த ஆச்சி தாண்டி இருப்பாளே.........'

ஆச்சியும் மாதுரியிடம் பேசும் வாய்ப்பு கிடைக்கும் என்று கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. அதிர்ச்சியில் இருந்து மீண்டு அருணைப் பார்த்தாள். அருண் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். "எங்கம்மா ஒரு குழந்தை மாதிரி. அதிகமா பேசக் கூடிய ரகமல்ல. அம்மாக்கு நானுன்னா உயிர்"

ஆச்சி ஏனோ பதில் சொல்லாமல் அந்த நதிநீரையே பார்த்துக் கொண்டிருந்தாள். நதி மெல்லிய சலசலப்புடன் ஓடிக் கொண்டிருந்தது. நிலவின் ஒளியில் அந்த நீரில் அருணுடைய பிரதிபிம்பம் தெரிந்ததைப் பார்த்தாள். மனம் அவளையும் அறியாமல் அந்தப் பழைய நாட்களுக்குப் போனது. பல நாட்கள் அவளும் அவர்களுடன் உட்கார்ந்து அவர்கள் இருவருடைய பிரதிபலிப்பை அந்த நீரில் பார்த்திருக்கிறாள். அவர்கள் அந்த நதிக்குள் இருப்பது போல் சில சமயங்களில் தோன்றும். அந்த நதியுடன் இரண்டறக் கலந்து விட்டது போலத் தோன்றும். சேதுபதிக்கும் அப்படியே தோன்றியிருக்க வேண்டும். அதனால் தான் அந்தக் கதைக்கு "நீ நான் தாமிரபரணி" என்று தலைப்பிடத் தோன்றியிருக்கும். அவர்களைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் வழக்கம் போல் மனம் ரணமாகியது. இன்று அவர்கள் இடத்தில் அருண் உட்கார்ந்திருக்கிறான். அவர்கள் வந்து, சேர்ந்திருந்து பிரிந்த இந்த மண்ணில் நினைவுகளைச் சுமந்து கொண்டு அவளும், நிறைய கேள்விக்குறிகளோடு அவனும் உட்கார்ந்திருந்தார்கள். இது போன்ற பல காட்சிகளைக் கண்டு பழக்கப்பட்டுப் போன அந்த நதியோ பாதிக்கப்படாதது போல ஓடிக் கொண்டிருந்தது.

நிறைய நேரம் கழித்து ஆச்சி மௌனத்தைக் கலைத்தாள். "நாளைக்குப் போனா இனி எப்ப வருவே ராசா?"

"அடிக்கடி வருவேன். உங்க சமையல் சாப்பிடணும் போலத் தோணிச்சுன்னா வருவேன். உங்களுக்குத் தெரிஞ்ச உண்மையை எல்லாம் சொல்லணும்னு நீங்க எப்பவாவது முடிவு செஞ்சா ஒரு போன் செஞ்சா போதும். உடனே வந்து உங்க முன்னாடி நிப்பேன்"

ஆச்சி சோகமாக சிரித்தாள். "சொல்லி சந்தோஷப்படற விஷயமாய் இருந்தா நான் முதல்லயே சொல்லியிருப்பேன். அதை விடு. நீ நான் சொல்லாமலேயே கண்டுபிடிச்சுடுவேங்கற நம்பிக்கை எனக்கிருக்கு. அப்படி நீ அவனப் பாத்தா எனக்காக அவன் கிட்ட ஒரு விஷயம் சொல்வியா ராசா?"

"ஒரு வேளை இந்தக் கிழவி உயிர் விட்டுட்டேன்னா எனக்கு அவன் தான் கொள்ளி போடணும்னு சொல்லுவியா ராசா" சொல்லச் சொல்ல அவள் குரலடைத்தது.

"அது யாரு என்னன்னு சொன்னா உலகத்தில் எந்த மூலையில இருந்தாலும் அந்த ஆளைக் கையோட கூட்டிட்டு வந்து ஆச்சி சாகற வரைக்கும் கூட இருந்து, செத்ததுக்கப்புறம் கொள்ளி வச்சுட்டு அப்புறம் போனாப் போதும்னு உங்க பக்கத்திலேயே உட்கார வச்சுட மாட்டேனா என்ன? இப்ப சொல்லுங்க அது யார்?"

ஆச்சி மறுபடியும் சோகமாகச் சிரித்தாள். "விளையாட்டுப் பிள்ளை ராசா நீ"

அவர்கள் வீடு திரும்பினார்கள். அன்றிரவு ஆச்சி 'அவன'து ஓவியத்தை எடுத்து நிறைய நேரம் கையில் வைத்துக் கொண்டிருந்தாள். தன் மரணத்திற்கு முன் ஒரு முறையாவது 'அவனை' நேரில் பார்க்க ஆச்சி ஆசைப்பட்டாள். 'அவனே' கொள்ளி வைக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டாள். விதி என்ன எண்ணியிருக்கிறது என்று தான் அவளுக்கு விளங்கவில்லை.

## (24)

முதுமை–

ஞாபகங்களின் குப்பைக் கூடை.

– அப்துல் ரகுமான்

மாதுரிக்கு இது எல்லாம் விதியின் விளையாட்டாகவே பட்டது. பல வருடங்கள் கழித்து விதி பழையபடி அவள் வாழ்வில் விளையாட ஆரம்பித்திருக்கிறது என்று உறுதியாக நம்பினாள். அந்த ஆச்சி இன்னும் அந்தக் கிராமத்தில் உயிரோடு இருப்பதும், அருண் அந்தக் கிராமத்துக்குப் போனதும், அந்த ஆச்சியை சந்தித்ததும், பேசியதும் எல்லாம் தற்செயலாக நடக்கக் கூடிய சம்பவங்கள் அல்ல என்று அவள் மனதுக்குப் பட்டது. ஒரு வேளை இது வேறு ஒரு ஆச்சியாக இருக்குமோ என்ற சந்தேகம் அவள் மனதில் எழுந்தாலும் வேறொரு ஆச்சி அருணுடன் இவ்வளவு பாசத்துடன் பழகியிருக்க சாத்தியமில்லை என்று தோன்றியது. ஆச்சி கண்டிப்பாக அருணை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு பிடித்திருப்பாள் என்று தோன்றியது. அன்றிரவு அவளுக்குத் தூக்கம் வரவில்லை. ஆச்சி அருணிடம் எதை எல்லாம் சொல்லி இருப்பாள் என்ற கேள்வி அவள் மனதில் திரும்பத் திரும்ப எழுந்தது. அருண் இங்கு வரும் போது எத்தனை தெரிந்து கொண்டு வருவான் என்று தெரியாமல் குழம்பினாள்.

அவளது தந்தை செல்வரங்கம் ஒரு முறை அவளிடம் ஆச்சியை கோபத்தில் ஒரே ஆங்கில வார்த்தையில் வர்ணித்தார் – . "Bitch". இன்று அவரது பேரன் அவளிடம் சொல்கிறான். "எனக்கு பாட்டி இருந்திருந்தா இப்படித்தான் இருந்திருப்பாங்கன்னு தோணுதும்மா".

அவளைத் தூக்கம் அணுக மறுத்தது. அருண் அந்த நாவல் பற்றி துப்பு துலக்க ஆரம்பித்த நாளில் இருந்து தூக்கம் அவளுக்கு அன்னியமாகத் தான் போய் விட்டது. முதல் முறை விதி விளையாடிய போது அப்பா, அத்தை எல்லோரும் அவளுக்குப் பக்கபலமாக இருந்தார்கள். இன்றோ அவள் தனியாக நிற்கிறாள்.

கிராமத்தில் இரவு பதினோரு மணி வரையில் மருதமுத்துவும் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டார். அருண் மறுநாள் காலை கிளம்புவதாக ஆச்சியிடம் சொல்லிக் கொண்டிருந்தது இன்று மாலை காதில் விழுந்தது. அவன் போய் விடுவான் என்ற தகவலே மனதிற்கு நிம்மதியாக இருந்தது. ஆனால் அவனை அடிக்கடி வந்து போக ஆச்சி சொன்னது எரிச்சலைத் தந்தது.

'இந்தக் கிழவி தன் வயதிற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ள மாட்டேன்கிறாள். வயதான காலத்தில் கடவுள், பக்தி என்று இருக்காமல் சின்ன வயதுப் பசங்களுடன் சுத்துவது, பேசுவது இதெல்லாம் என்ன வேண்டிக் கிடக்கிறது. அந்த நாளில் கூட அந்தக் காதலர்கள் தான் அந்த தாமிரபரணி நதிக்கரையில் உட்கார்ந்து பேசினார்கள் என்றால், அப்போதும் வெட்கம் இல்லாமல் இந்தக் கிழவி கூடப் போய் உட்கார்ந்து கொண்டாள். அவர்கள் இருவரும் கூட அது இயற்கை என்கிற மாதிரி இந்தக் கிழவியை தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். இன்றைக்கும் கூட அருணுடன் சேர்ந்து நதிக்கரையில் உட்கார்ந்து பேசுகிறாள். அவனுடைய செல்போன் வாங்கிப் பேசுகிறாள். என்னவொரு விவஸ்தை கெட்ட ஜென்மம்'

மனமார ஆச்சியை வசைபாடி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தவர் படுக்கையை விட்டு எழுந்தார். அறையை விட்டு வெளியே வந்தார். ஆச்சி அறையில் விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. போய் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். ஆச்சி அந்த ஓவியத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவர் எட்டிப் பார்த்ததை உணராமல் அந்த ஓவியத்தைக் கண்ணீருடன் ஆச்சி தடவிக் கொண்டிருந்தாள். ஒரே ஒரு வருடத்தில் 'அவன்' சாதனை இப்போதும் அவரை வியக்க வைத்தது. என்ன மாயம் செய்து விட்டான்? கிழவி முதல் குமரி வரை அத்தனை பேரும் அவனுக்காக இப்படி உருகுகிறார்கள். காதலி உருகட்டும் பரவாயில்லை, இந்தக் கிழவி ஏன் இப்படி நேரம் காலம் இல்லாமல் உருகுகிறாள் என்று மறுபடி ஆச்சி மீது எரிச்சல் பட்டார். அவளிடம் அவ்வளவு சொத்து மட்டும் இல்லையென்றால் மருதமுத்து அந்தக் கணமே கழுத்தை நெரித்துக் கொன்றிருப்பார்.

மேலும் அங்கே நிற்கப் பிடிக்காமல் வீட்டை விட்டே மருதமுத்து வெளியே வந்தார். அப்போது தான் அருணும் தூக்கம் வராமல் நதிக் கரை பக்கம் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தார். சற்று இடைவெளி விட்டு அவரும் அவனைப் பின் தொடர்ந்தார்.

அருணை ஏதோ ஒன்று காந்தமாக அந்த நதிக் கரை அருகே இழுத்தது. ஏன் என்று அவனுக்கே தெரியவில்லை. உண்மையில் அவன் உறங்கி இருந்தான். திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. நதிக்கரைக்குப் போக அவன் உள்ளுணர்வு வற்புறுத்தியது. பல சந்தர்ப்பங்களில் அவன் வாழ்வில் அந்த உள்ளுணர்வு சரியாக வழி காட்டி இருந்திருக்கிறது. ஆகவே அவன் சற்றும் யோசிக்காமல் அந்த நள்ளிரவு நேரத்தில் கிளம்பி இருந்தான். பின்னால் ஒரு ஆள் வருவது அவனுக்குத் தெரிந்தே இருந்தாலும் அவன் அதை சட்டை செய்யவில்லை. மருதமுத்து பின் தொடர்வது அவனுக்குப் புதியதல்ல. 'லூசு' என்ற பட்டம் அவருக்குக் கொடுத்து மனதில் கௌரவித்திருந்தாலும் அவனுக்கு ஓரிரு நாட்களாகவே அந்த நாவலில் இந்த மருதமுத்துவுக்கும் ஒரு தொடர்பு இருப்பதாக சந்தேகம் வர ஆரம்பித்திருக்கிறது.

காற்றில் ஒரு பழைய ஹிந்திப் பாடல் மிதந்து வந்தது. "படே அச்சே லக்தே ஹே...ஏ தர்த்தி, ஏ நதியா, ஏ ரெஹ்னா, ஓர் தும்..."

காவ்யாவிற்கு மிகவும் பிடித்தமான பாடல். அவளும் இந்தக் கணம் தன்னுடன் இருந்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் என்று அருணுக்குத் தோன்றியது. அந்தப் பாடல் அந்த நதிக்கரையில் இருந்தே வந்த மாதிரித் தோன்றவே தன் நடையை அருண் துரிதப் படுத்தினான். நதிக்கரை தூரத்தில் கண்ணுக்குத் தெரிந்த போது அங்கு ஒரு வயதான ஆள் உட்கார்ந்திருந்தது அவனுக்குத் தெரிந்தது. அவர் அருகில் இருந்த ஒஒரு டேப் ரிக்கார்டர் தான் அந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தது.

அந்த நபர் உட்கார்ந்திருந்த இடம் 'அவர்கள்' வழக்கமாக உட்கார்ந்த இடம்.

"அந்த இடத்துல அந்த நேரத்துல என்னத்தவிர உட்காரக் கூடிய ஆள் அவன் ஒருத்தன் தான் ராசா" என்று ஆச்சி சேதுபதி பற்றி சொன்னது திடீர் என்று நினைவுக்கு வர ஒரு கணம் அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது. "உண்மையாகவே இது சேதுபதியாக இருக்குமோ" என்று பரபரப்புடன் தனக்குள் கேட்டுக் கொண்டான். கண்டிப்பாக அது சேதுபதி தான் என்று உள்ளுணர்வு அவனுக்குச் சொன்னது. பின்னால் திரும்பிப் பார்த்தான். மருதமுத்துவும் அந்த நபரைப் பார்த்துத் திகைத்துப் போய் தான் நின்று கொண்டிருந்தார்.

"அது சேதுபதி தானே" என்று மிக இயல்பாக அருண் மருதமுத்துவிடம் கேட்டான். ஆமாம் என மருதமுத்து வேறு வழி இல்லாமல் தலையசைத்தார். இத்தனை நேரம் தான் பின் தொடர்ந்து வந்ததை அவன் அறிந்தே இருந்தான் என்று அவர் உணர்ந்த போது ஒரு மாதிரியாக இருந்தது. அதே நேரம் பின்னால் காலடியோசை கேட்க அருணும், மருதமுத்துவும் ஒரே சமயத்தில் திரும்பிப் பார்த்தார்கள்.

ஆச்சி!

"என்ன ராசா இந்த நேரத்தில் நீங்க ரெண்டு பேரும் இங்க நிக்கிறீக"

"நம்ம சேதுபதி வந்திருக்கார் ஆச்சி. அதனால அவரப் பாத்து பேசிட்டுப் போலாம்னு வந்தோம்" என்று மெல்லிய குரலில் அருண் உற்சாகமாகச் சொன்னான். ஆச்சி அப்போது தான் சேதுபதியைக் கவனித்தாள். ஒரு கணம் சிலையாக நின்றாள். அருண் எப்படி சேதுபதியை அணுகுவது என்று மனதில் யோசித்தபடி நின்றான். மருதமுத்துவோ சேதுபதி அருண் கையில் சிக்கிக் கொண்டால் என்ன நடக்கும் என்று எண்ணியபடி நின்றார்.

இப்படி தொலைவில் மூவர் நின்று தன்னை கவனிப்பது தெரியாத சேதுபதி அந்த நதியைப் பார்த்தபடி பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்தார்.

# (25)

I cannot live without my soul.... Can you?

– A dialogue in film "Last Samurai"

அருண் பரபரப்புடன் சேதுபதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ஆச்சியும் மருதமுத்துவும் அவர்கள் நின்ற இடத்திலேயே நின்றார்கள். அந்த சூழ்நிலையின் இறுக்கத்தை உணர்ந்தாற் போல் சேதுபதி திடீரென்று திரும்பிப் பார்த்தார். தொலைவில் வந்து கொண்டிருந்த அருணைப் பார்த்து ஒரு கணம் சிலையானார். மறுகணம் அவர் மின்னல் வேகத்தில் இயங்கினார். டேப் ரிக்கார்டரை எடுத்துக் கொண்டு அருகில் இருந்த தோப்புக்குள் ஓடி மறைந்தார். அதை சிறிதும் எதிர்பார்த்திராத அருண் "சேதுபதி, நில்லுங்க" என்று கத்தியது அந்தப் பகுதி முழுவதும் எதிரொலித்தது. ஆனால் அந்தக் குரல் சேதுபதியை நிறுத்தவில்லை.

ஏமாற்றத்துடன் பின் தொடர்ந்து ஓட முயற்சித்த அருணைப் பார்த்து ஆச்சி சொன்னாள். "அவன் கிடைக்க மாட்டான் ராசா"

அவள் சொன்னதைப் பொருட்படுத்தாமல் அருண் பின் தொடர்ந்து ஓடினான். இவ்வளவு நாட்கள் கழித்து சேதுபதி பார்க்கக் கிடைத்து அவரிடம் பேச முடியாமல் போவதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் அந்தத் தோப்பை அடைந்து அவன் அவரைத் தேடிய போது அவர் அங்கிருக்கவில்லை. தோப்பைக் கடந்த போது ஒரு நெடுஞ்சாலை வெறிச்சோடிக் காட்சியளித்தது. அவன் அந்த நெடுஞ்சாலையில் சிறிது தூரம் நடந்தும் பார்த்தான். அவர் ஒளிந்து கொள்ளக் கூடிய மூலை முடுக்கெல்லாம் பார்த்தான். ஒரு தெரு நாய், ஒரு குடிகாரக் கிழவன், ஒரு பெருச்சாளி எல்லாம் பார்த்தானே ஒழிய சேதுபதியை எங்கேயும் காணோம்.

ஏமாற்றத்துடன் அவன் திரும்பி வந்த போது மருதமுத்து போயிருந்தார். ஆச்சி மட்டும் அதே இடத்தில் நின்றிருந்தாள்.

"ஆச்சி நீங்க சொன்ன மாதிரியே சேதுபதி கிடைக்கலை"

"அவன் இங்கயே பல வருஷம் இருந்தவன் ராசா. இங்கத்து மூலை முடுக்கெல்லாம் அவனுக்கு அத்துப்படி"

"அப்படின்னா இங்கயே எங்கயாவது ஒளிஞ்சிருப்பார்னு சொல்றீங்களா?"

"இல்ல ராசா. உன்னைப் பார்த்ததுக்கப்புறம் அவன் இந்த வட்டாரத்தில் இருக்க மாட்டான். அந்த மெயின் ரோட்டுக்குப் போய் ஏதாவது லாரி ஏறி ஊரை விட்டுப் போயிருப்பான்"

"நான் யாருன்னு அவருக்கு எப்படித் தெரியும் ஆச்சி"

ஆச்சி பதில் சொல்லவில்லை. "வீட்டுக்குப் போகலாம் வா ராசா" என்று அவள் நடக்க ஆரம்பித்தாள். ஆச்சியை அருண் ஏமாற்றத்துடன் தொடர்ந்தான். அவன் மனதில் ஆயிரம் கேள்விகள் எழுந்து பதில் கிடைக்காமல் தத்தளித்தன. அந்தச் சிறிய வீட்டில் அவன் உள்ளே நுழைய ஆச்சி தன் வீட்டுக்குப் போனாள். மருதமுத்து தென்படவில்லை. ஆச்சி தூங்க முயற்சித்தாள்.

டெலிபோன் அந்த அர்த்த ராத்திரியில் அலறியது. ஆச்சி ரிசீவரை எடுத்தாள். "ஹலோ"

"ஆச்சி...."

பல வருடங்கள் கழித்து ஆச்சியின் காதில் சேதுபதியின் குரல் ஒலிக்கிறது. பல்வேறு உணர்ச்சிகள் சேர்ந்து அலை மோத ஆச்சி மெல்லிய குரலில் "சேது" என்றழைத்தாள்.

"யாரு ஆச்சி அந்தப் பையன்?"

"உன்னோட நாவலை முடிச்சு வச்சவன் சேது"

நிறைய நேரம் சேதுபதி பேச்சிழந்தாற் போல தோன்றியது. பின் குரல் கரகரக்க சேதுபதி கேட்டார். "அவன் ஏன் ஆச்சி இங்கே வந்தான்?"

"ஒரு நல்ல நாவல எழுதிட்டு உன்னால் எப்படி காணாமல் போக முடிஞ்சதுன்னு அவன் துப்பு துலக்கிட்டு இங்க வரைக்கும் வந்திருக்கான் சேது"

மறுபக்கத்தில் மறுபடியும் சிறிது நேர மௌனம் நிலவியது. பின் சேதுபதி திகைப்புடன் கேட்டார். "என்னை எப்படி ஆச்சி அந்தப் பையன் அடையாளம் கண்டுபிடிச்சான்?"

"நான் அவன் கிட்ட பேசறப்ப நீ சில தடவை இங்க வந்ததைப் பத்தி சொல்லியிருக்கேன். அதை வச்சு அந்தப் பையன் யூகிச்சிருப்பான்னு தோணுது"

"அவனுக்கு எந்த அளவு உண்மை தெரியும் ஆச்சி?"

"அந்த நாவல் கதை அல்ல நிஜம்கிற அளவு தெரியும்"

மறுபடி சேதுபதி மௌனம் சாதித்தார். ஆச்சியே பேசினாள். "இங்க பல தடவை வந்துட்டும் இந்தக் கிழவியை ஒரு எட்டு பாத்துட்டுப் போகணும்னு உனக்கு ஏன் சேது தோணலை."

"நாம சந்திச்சா அவங்களப் பத்தி பேசத் தோணும். அப்படிப் பேசினா மனசு திரும்ப ரணமாகும்னு தான் வீட்டுக்கு வரலை ஆச்சி. அந்த நதிக்கரைக்குக் கூட வராம இருக்கணும்னு எத்தனையோ தடவை நினைச்சிருக்கேன். ஆனா அது மட்டும் என்னால முடியல ஆச்சி. திரும்பத் திரும்ப தாமிரபரணி என்னை காந்தமாய் இழுக்குது. அந்த நதியே எல்லாத்தையும் ஞாபகப்படுத்துது. அழ வைக்குது. ஆறுதல் சொல்லுது...... "

"சேது, அந்தப் பையன் அருண் பேசறப்ப சொன்னான், நீ ஏதோ எஸ்டேட்டுல தோட்ட வேலை செஞ்சாய்னு. இதெல்லாம் எதுக்கு சேது? இத்தனை படிச்சதும் மம்முட்டி பிடிக்கவா?"

"பேனாவுக்குப் பதிலாய் நான் எதைப் பிடிச்சு வேலை செய்யவும் தயாராய் இருக்கேன் ஆச்சி" சேதுபதி ·போனை வைத்து விட்டார். ஆச்சி சுவரில் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக்கொண்டு சிறிது நேரம் நின்றாள்.

மறுநாள் காலை அருண் கிளம்பினான். ஆச்சியின் கண்கள் அவன் சூட்கேஸை எடுத்துக் கொண்டு கிளம்புகையில் கலங்கின. இத்தனை குறுகிய காலத்தில் இத்தனை தூரம் நேசிக்க முடிந்த அந்தக் கிராமத்துக் கிழவி அருண் மனதில் ஒரு தனி இடம் பிடித்து விட்டாள்.

"இனிமே எப்ப வருவே ராசா?"

"தோணிச்சுன்னா வந்துடுவேன் ஆச்சி. நீங்க எப்ப எங்க வீட்டுக்கு வர்றீங்க?"

அவனது அழைப்பை சற்றும் எதிர்பார்த்திராத ஆச்சி பாசத்துடன் அவனைப் பார்த்தாள். "நான் இந்தக் கிராமத்தை விட்டு எங்கேயும் போறதில்லை ராசா. அவரு இருக்கறப்ப அவர் கூட வெளியே போனதோட சரி. அதுக்கப்பறம் நான் எங்கேயும் போனதேயில்லை. ஆனா நீ வா ராசா"

"கண்டிப்பாய் வர்றேன். முடிஞ்சா அடுத்த தடவை வர்றப்ப எங்கம்மாவையும், காவ்யாவையும் கூட்டிகிட்டு வர்றேன்"

ஆச்சி அவன் அம்மா இங்கே வருவாள் என்று நம்பாவிட்டாலும் "கூட்டிகிட்டு வா ராசா" என்றாள். அவளுக்கு அவன் காதலியை ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது.

அருண் ஆச்சியிடம் விடைபெற்றான். நான்கு அடிகள் வைத்திருப்பான். பின் விளையாட்டாய் திரும்பி அவளைப் பார்த்து சொன்னான். "கட்டாயம் அந்தக் கதாநாயகனை நான் கண்டுபிடிச்சு, உங்களுக்குக் கொள்ளி போட கண்டிப்பாய் வரணும்னு சொல்லி வைக்கிறேன், சரியா ஆச்சி? முடிஞ்சா கையோட கூட்டிகிட்டே வந்துடறேன். அதுவரைக்கும் உடம்பை ஜாக்கிரதையாய் பார்த்துக்குங்க"

கனத்த இதயத்துடன் அவன் கண் மறைந்து போகும் வரை பார்த்துக் கொண்டே நின்ற ஆச்சி வீட்டுக்குள் நுழைகையில் மருதமுத்து அருண் வந்ததிலிருந்து நடந்ததை எல்லாம் விவரமாக ·போனில் சொல்லிக் கொண்டு இருந்ததைக் கேட்டாள். "இப்ப தான் இங்க இருந்து அந்தப் பையன் போறானுங்கையா" என்று நல்ல பிள்ளையாக ஒப்பித்து விட்டு ·போனை வைத்தவரை அருவெறுப்புடன் ஆச்சி பார்த்தாள். "இப்படியும் சில ஜென்மங்கள்"

# (26)

உண்மையை ஒருவனும் நம்புவதில்லை. பொய்யை உலகம் நம்புகிறது. மோரைத் தெருத் தெருவாய் அலைந்து விற்கிறார்கள். கள் உட்கார்ந்த இடத்தில் விற்றுப் போகிறது.

–கபீர்தாசர்

அருண் பூங்கொடி கிராமத்தில் இருந்து வந்தவுடன் மகனிடம் ஏதாவது மாற்றம் தெரிகிறதா என்று மாதுரி கூர்ந்து பார்த்தாள். ஆனால் அவனிடம் பெரிய மாற்றம் ஏதும் தெரியவில்லை. வந்தவுடன் அம்மாவைக் கட்டிக் கொண்டான். கண்களில் பெருகிய நீரைக் கட்டுப்படுத்த மாதுரி கஷ்டப்பட்டாள்.

"என்னம்மா நீ சின்னக் குழந்தை மாதிரி" என்றவன் அவளை சோபாவில் உட்கார வைத்தான்.

"எப்படியிருக்கு அந்தக் கிராமம்"

"நல்ல அழகான தமிழ்நாட்டுக் கிராமம்மா அது. அங்க அழகான நதி ஓடுது. நல்ல மனுஷங்க இருக்காங்க. நீ ஒரு தடவை அங்க வரணும்மா. உன்னைக் கூட்டிகிட்டு வர்றதா ஆச்சி கிட்ட நான் வாக்குக் கொடுத்திருக்கேன்"

மாதுரியின் முகம் வெளிறியது. பெரும்பாடுபட்டு இயல்பாகக் கேட்டாள். "யார் அந்த ஆச்சி?"

"நீ பேசினியே அவங்க கிட்டே" என்ற அருண் தாயிடம் ஆச்சியைப் பற்றிச் சொன்னான். அவள் உபசரிப்பைப் பற்றிச் சொன்னான். அவள் அந்த இரண்டு பேரையும் உயிராக நேசித்ததைப்

பற்றி சொன்னான். அவன் முடித்த போது அவள் வேறு நினைவுகளில் மூழ்கி இருந்தாள். அவள் மனம் கொந்தளித்தது.

"அம்மா நீ இங்க தான் இருக்கியா?" என்று மகன் கேட்ட போது "அந்த ஊரும் அந்த ஆச்சியும் எப்படியிருப்பாங்கன்னு நான் கற்பனை செஞ்சு பார்த்தேன்டா. அவ்வளவு தான்" என்று சமாளித்தாள்.

"அம்மா ஒரு பெரிய ஆச்சரியம் என்ன தெரியுமாம்மா? நான் சேதுபதியைப் பார்த்தேன்"

மாதுரியின் அதிர்ச்சியை அவளால் இந்த முறை மறைக்க முடியவில்லை. அவளது அதிர்ச்சியைப் பார்த்து அவன் சிரித்தான். "நான் சேதுபதியைப் பத்தி சொல்லிச் சொல்லி நீயும் என்னை மாதிரியே ஆயிட்டேம்மா. இதே மாதிரி தான் நானும் அதிரிச்சியடைஞ்சுட்டேன்".

மாதுரிக்கு மூச்சு விடக் கஷ்டமாக இருந்தது. மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டாள். "அந்த ஆள் கிட்டப் பேசினியா"

"இல்லை. அதுக்குள்ள அவர் ஓடிப் போயிட்டார்"

அந்தப் பதிலில் நிம்மதிப் பெருமூச்சு விட்ட மாதுரி மகனைக் கேள்விக்குறியுடன் பார்த்தாள். தாயிடம் சேதுபதியைப் பார்த்தும் பேச முடியாமல் போன அந்த சம்பவத்தை அருண் விவரித்தான்.

"எல்லாத்தையும் விட ஒரு ஆச்சரியமான விஷயம் என்ன தெரியுமாம்மா?"

அவள் பரிதாபமாக அவனை என்ன என்பது போல பார்த்தாள். இவன் என்ன குண்டைத் தூக்கிப் போடப் போகிறான் என்பது தான் அவள் சிந்தனையாக இருந்தது.

"அந்தக் கதை நிஜமாக இருந்தாலும் அதோட முடிவு கற்பனைதான்மா. அந்த ரெண்டு பேரும் சாகலை. இப்பவும் அவங்க உயிரோட இருக்க வாய்ப்பு இருக்கும்மா"

அவளுக்கு உடம்பெல்லாம் அந்த ஏ.சி ஹாலிலும் வியர்த்தது. சேதுபதியை அவன் நழுவ விட்டாலும் உண்மையை நழுவ விடவில்லை என்பதை அவள் உணர்ந்தாள். சிறிது சிறிதாக அவன் உண்மையை நெருங்க ஆரம்பித்து விட்டான் என்பது உறைத்த போது மனதார அம்பலவாணனை அவள் திட்டித் தீர்த்தாள். 'எல்லாம் அந்த ஆளால் வந்தது.'

"எனக்கு ஒரு விஷயம் மட்டும் இன்னும் பிரமிப்பாய் இருக்கும்மா"

என்ன என்று கேட்கும் திராணி அவளுக்கு இருக்கவில்லை.

அவனே சொன்னான், "எல்லாரும் அந்த அளவு ஒரு மனுஷனை நேசிக்கணும்னா அவன் எப்படி இருந்திருக்கணும்னு நினைக்க நினைக்க எனக்கு........"

மேலே கேட்க முடியாமல் மாதுரி மயங்கி விழுந்தாள். அருண் "அம்மா.... அம்மா..." என்று கத்தியது வெகு தொலைவில் இருந்து கேட்பது போல இருந்தது. முகத்தில் விழுந்த குளிர்ந்த நீர் அவளை நினைவுக்குக் கொண்டு வந்தது.

"என்னம்மா ஆச்சு. டாக்டரைக் கூப்பிடட்டுமா" அவன் கவலையுடன் கேட்டான்.

"ஒண்ணுமில்லைடா. நீயும் இல்லாததால சரியா சாப்பாடு கூட இறங்கலை. அதுதான்...." என்று சமாளித்தாள்.

அருண் ஏதோ சொல்லப் போனபோது ராஜராஜன் உள்ளே வந்தார். மாதுரி படுத்திருந்ததைப் பார்த்த அவர் அதிசயமாய் அவர்கள் அருகில் வந்தார். "என்ன ஆச்சு"

"நான் பேசப் பேச அம்மா மயக்கமாயிட்டாங்க" என்ற அருண் அப்பாவை அதிசயமாகப் பார்த்தான்.

"நீ அப்படி என்ன பேசினே...?"

அப்போது தான் அவனுக்கும் தான் பேசியதைக் கேட்டு அம்மாவிற்கு மயக்கம் வந்திருக்கலாம் என்கிற கோணமே தென்பட்டது. ஆனால் அதே சமயம் மனிதர் அபூர்வமாய் தன்னிடம் ஒரு கேள்வி கேட்கிறாரே என்று ஆச்சரியமாகவும் இருந்தது. அவன் பதில் சொல்ல வாய் திறந்தபோது மாதுரி அவசர அவசரமாக இடைமறித்தாள். "அவன் டூரைப் பத்தி சொல்லிகிட்டு இருந்தான். நான் இன்னைக்குக் காலைல சாப்பிடலை. அதனால தான் மயக்கம்......"

ஒன்றும் பேசாமல் ராஜராஜன் நகர்ந்தார். அருண் அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அம்மாவைப் பார்த்து சொன்னான். "நீ ஏன் என்னைப் பேச விடலை? நான் அந்த கதாநாயகனைப் பத்தி அவர் கிட்ட சொல்லியிருப்பேன். பணம் தவிர உலகத்தில் வேறு நல்ல விஷயங்களும் இருக்குன்னு அவர் தெரிஞ்சுக்கணும்."

கலவரத்துடன் மாதுரி சொன்னாள், "நீ அதைப் பத்தியெல்லாம் அவர் கிட்ட சொல்ல வேண்டாம்"

அருண் தன் தாயையே சந்தேகத்துடன் பார்த்தான். 'அம்மா அந்த நாவலைப் பற்றிப் பேசும்போதெல்லாம் ஒரு மாதிரியாகி விடுகிறாள். போன சந்தர்ப்பங்களில் கூட அவள் இப்படித் தான் அசாதாரணமாக நடந்து கொண்டாள்'.

"இல்லைடா. நீ அவர் கிட்ட அந்தக் கதாநாயகனைப் பத்தி சொல்லிகிட்டே போனா, அவர் கேட்டுகிட்டே இருப்பார்னா நினைக்கிறே. ஒரு வாக்கியத்துக்கு மேலே போனா இரண்டாவது வாக்கியத்தைக் கேட்க அவர் இங்கே இருந்தாத் தானே. அவர் பாட்டுக்குப் போய்கிட்டே இருப்பார்"

அவள் பேச்சில் இருந்த உண்மையை அவன் அறிந்தே இருந்தான். ராஜராஜன் தன் பேச்சில் எப்போதும் சுருக்கமாகத் தான் இருப்பார். அதே போல மற்றவர்களும் தன்னிடம் பேசும் போது சுருக்கமாகப் பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பார். அப்படி இல்லாமல் போகும்போது அவர்கள் பேசப் பேச அங்கிருந்து நகர்ந்து விடும் பழக்கம் அவரிடம் உண்டு.

"அம்மா நீ என் பேச்சைக் கேட்டா மயங்கி விழுந்தாய்?"

"அப்படியெல்லாம் இல்லை. அவர் ஏதோ கிண்டலுக்குக் கேட்டால் நீயும் அதைக் கேட்கறியே"

"அவருக்குக் கிண்டல் எல்லாம் வருமாம்மா?"

மாதுரி பதில் சொல்லவில்லை. ஆயாசத்துடன் கண்களை மூடினாள்.

நரசிம்மராஜுலு தன் கைகளில் இருந்த காகிதக் கட்டைக் கீழே வைத்தார். அது ஒரு பெண் விஞ்ஞானி அவருக்கு அனுப்பியிருந்த அறிவியல் கட்டுரை. தன் புதிய கருத்துகளை அவர் பார்வைக்கு அவள் அனுப்பியிருந்தாள். அதைப் படிக்கப் படிக்க அவருக்கு சில நாட்கள் முன் அம்பலவாணன் கொண்டு வந்த அந்தக் கட்டுரை நினைவுக்கு வந்தது. அன்று அம்பலவாணனும், அருணும் அவரிடம் வந்ததும், இன்று அவள் தன் கட்டுரையை அவருக்கு அனுப்பியிருப்பதும் எல்லாமே விதி மறுபடி தன் பகடைக் காய்களை உருட்டுவதாகவே அவருக்குப் படுகிறது.

எத்தனையோ அரைகுறைகள் இன்று தங்களை விஞ்ஞானிகள் என்று சொல்லிக் கொண்டு திரிகையில் அந்த மிகப் பெரிய விஞ்ஞானி யாருக்கும் தெரியாமல் மறைந்து போனதை அவரால் இன்னமும் ஜீரணிக்க முடியவில்லை. அருணும் அந்தப் பெண் விஞ்ஞானியும் மனம் வைத்தால் அவனைத் திரும்பக் கொண்டு வர முடியும் என்று அவர் உள்மனம் சொன்னது. மறுபடி அந்தக் கட்டுரையை எடுத்துக் கடைசியில் பதிவாகி இருந்த அந்தப் பெயரைப் பார்த்தார். "தாமிரா".

எழுந்து தன் நூலக அறைக்குப் போய் நூற்றுக் கணக்கான அறிவியல் புத்தகங்களுக்கு நடுவில் இருந்த ஒரே நாவலை எடுத்தார். "நீ நான் தாமிரபரணி". அதை எடுத்துப் பிரித்து உள்ளே வைத்திருந்த ஒரு பழைய புகைப்படத்தை எடுத்தார். அதில் அவருடன் நின்றிருந்த அந்த இளைஞனைப் பார்த்து மனதினுள் சொன்னார்.

"ஒருநாள் நீ என்னிடம் சொன்னாய், 'எந்தத் தடயமும் இல்லாமல் நான் மறையப் போகிறேன்' என்று. ஆனால் உன்னைப் போன்றவர்கள் அப்படிப் போய் விட முடியாது. நீ உன்னையும் அறியாமல் சிலரிடம் உன்னை விட்டுப் போய் இருக்கிறாய். தாமிராவின் இந்தக் கட்டுரையில் மட்டுமல்ல அவளுடைய எல்லா விஞ்ஞானச் சிந்தனைகளிலும் உன்னுடய சாயல் இருக்கிறது......."

## (27)

If you are having an argument with yourself, who can intervene?

– Brad Jensen

அம்பலவாணன் அருணிடம் எல்லா விவரங்களையும் கேட்டுவிட்டு சிறிது நேரம் அமைதியாக இருந்தார்.

"என்ன சார் யோசிக்கிறீங்க?" அருண் கேட்டான்.

"அருண். நான் அன்றைக்கு உன் கிட்ட சொல்லாமல் விட்ட ஒரு விஷயம் இருக்கு. நியாயமாய் அப்பவே நான் உன் கிட்ட சொல்லியிருக்கணும். ஆனா சொன்னா நீ எப்படி எடுத்துக்குவேன்னு என்னால் ஊகிக்க முடியலை. அதனால சொல்லலை."

"சார் புதிர் போடாமல் விஷயத்தை இப்பவாவது சொல்லுங்களேன்."

"நான் ஜெயிலில் இருந்து தப்பிக்க அந்தத் துப்பறிகிற வேலையை விட்டுத் தொலைத்து வெளியே வந்த ஆறு மாதம் கழிச்சு இன்னொரு பத்திரிக்கை நண்பர் ஒருவர் மூலம் இதைப் பின்னணியில் இருந்து தடுத்த இரண்டு பெரிய மனிதர்கள் பெயர்கள் தெரிந்தது...."

"யார் சார் அவங்க?"

அம்பலவாணன் தர்மசங்கடத்துடன் சற்றுத் தயங்கினார். பின்பு சொன்னார். "ஒரு நபர் உன் தாத்தா செல்வரங்கம்...."

பெரிய இடியாக அந்தத் தகவல் அவன் தலையில் விழுந்தது. பேச அவனுக்கு வார்த்தைகள் வரவில்லை.

"உண்மையில் உன் தாத்தாவிற்கும் அந்த ரகசியத்திற்கும் ஒரு சம்பந்தமும் இருப்பதாக நான் இப்பவும் நம்பலை. காரணம் அவர் வியாபார நண்பர்களுக்காக பல வேலைகளை தன் தலையில் இழுத்துப் போட்டுகிட்டு செய்யக் கூடியவர். அந்த நண்பர்களுக்கு அந்த வேலைகளை முடித்துக்

கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக வியாபாரத்தில் ஆதாயம் தேடிக் கொள்கிற ரகம் அவர். ஆனால் அவர் யாருக்காக என்னைத் தடுக்க முயற்சி செய்தார்னு எனக்கு இன்றைக்கு வரை தெரியலை......"

வார்த்தைகள் காதில் விழுந்தாலும் ஜீரணிக்க அவனுக்கு நேரம் இன்னமும் தேவைப்பட்டது. ஆனாலும் அடுத்த நபரையும் தெரிந்து கொள்ள அவரைக் கேட்டான். "இன்னொருத்தர்?"

"ஈஸ்வரன்"

அருண் திகைப்பின் உச்சத்திற்கே சென்றான். எதற்கும் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள,

"எந்த ஈஸ்வரன்?" என்று கேட்டான்.

"கண்டிப்பாய் பகவான் ஈஸ்வரன் அல்ல. தமிழ்நாட்டின் தலையெழுத்தை தீர்மானிக்கும் ஈஸ்வரன் தான்"

அருண் மறுபடி பேச்சிழந்தான். தமிழ்நாட்டு அரசியலில் ஈஸ்வரன் வகித்த பங்கு இது வரை இந்திய அரசியலே கண்டிராதது. ஆளுங்கட்சியில் ஒரு உபதலைவர் பதவியை மட்டுமே தன்னிடம் வைத்துக் கொண்டு முதலமைச்சர் மற்றும் கட்சித் தலைவர், மந்திரிகள் என அனைவரையும் தன் கைப்பாவைகளாக ஆக்கி நகர்த்திக் கொண்டிருக்கும் ஒரு விசித்திர மனிதர் அவர். கிட்டத்தட்ட நாற்பதாண்டு காலம் அரசியலில் சர்வ வல்லமை படைத்தவராக இயங்கிக் கொண்டிருக்கும் அந்த மனிதர் இன்று வரை ஒரு தேர்தலில் நின்றதில்லை. பெயருக்கு ஒரு உப தலைவர் பதவியைத் தவிர வேறெந்தப் பதவியும் வகித்ததில்லை. மேடைகளில் பேசியதில்லை. பத்திரிக்கைகளுக்குப் பேட்டி கொடுத்ததில்லை. எந்த அறிக்கையும் விட்டதில்லை. புகழை நாடியதில்லை.

ஆனால் கந்தல் உடையுடன் திருநெல்வேலி தெருக்களில் வாழ்க்கையை ஆரம்பித்த அந்த மனிதர் "POWER" என்ற வார்த்தையின் அத்தனை நுணுக்கங்களையும் அறிந்திருந்ததோடு, மாக்கியவெல்லியின் 'அரச'னுக்கு இருந்த அத்தனை குணாதிசயங்களுக்கும் அதிபதியாக இருந்தார். ஆனால் பல சமயங்களில் மக்கள் தங்கள் தலைவனை கோமாளி போல ஆக்கி விடுகிறார்கள் என்பதையும், அவனது சுதந்திரத்தை பெருமளவு குறைத்து விடுகிறார்கள் என்பதையும் தன் அரசியலில் ஆரம்ப காலத்திலேயே கண்ட போது அந்த வேடத்திற்குத் தகுந்த ஆட்களைத் தயார் செய்து முன்னுக்கு நிறுத்தி பின்னால் இருந்து இயங்க ஆரம்பித்தார். என்ன சொல்ல வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்து நல்ல வேடதாரிகளைத் தேர்ந்தெடுத்து வெற்றி பெறச்செய்து அதே நேரத்தில் எந்தக் காலத்திலும் அவர்கள் தன்னையும் மீறி நடந்து கொள்ளத் துணிந்து விடாத அளவுக்கு அவர்களை அடக்கி வைக்கும் அஸ்திரங்களை என்றும் தயார் நிலையில் வைத்துக் கொண்டு ஈஸ்வரன் அரசியல் நடத்தினார். ஒவ்வொருவரின் அந்தரங்க சரித்திரங்களையும் அவர் விரல் நுனியில் வைத்திருந்தார் என்றால் அது மிகையாகாது.

அவர் முன்னணியில் நிற்கத் தேர்ந்தெடுத்த தலைவர்கள் பதவி வகித்தார்கள். 'வாழ்க' கோஷம் வாங்கினார்கள். பணம் சம்பாதித்தார்கள். சம்பாதித்ததில் பாதியை அவருக்குத் தந்தார்கள். அவர் சொல்லிக் கொடுத்த வாக்குறுதிகளை வழங்கினார்கள். அவர் சொன்னபடி போராட்டங்களை நடத்தினார்கள். அவர் சொன்னபடியே இம்மியளவும் மாறாமல் நடந்து கொண்டவர்கள் பணம், பதவி, புகழ் அனுபவித்தார்கள். ஏமாற்ற நினைத்தவர்கள் அரசியலில் காணாமல் போனார்கள். ஒரு கைப்பாவை முதலமைச்சர் மக்களிடையே மிகுந்த புகழ் பெற்று அந்த இறுமாப்பில் அவரையே அரசியலில் இருந்து அப்புறப்படுத்த முயன்றார். உடனே ஒரு நாள் அவர் தனது தாய்லாந்து பயணத்தில் ஒரு இரவு விடுதியில் ஒரே சமயத்தில் இரு இளம் பெண்களுடன் உல்லாசமாக இருந்த வீடியோ காட்சி இண்டர்நெட்டிலும், புகைப்படங்கள் பத்திரிக்கைகளிலும் வெளியாகி தமிழக அரசியிலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எல்லாத் தரப்பிலும் அதை

பெரிதுபடுத்தினர். அந்த நபர் அரசியல் வனவாசம் பெற, அடுத்த ஒரு நடிகர் நாற்காலியில் உட்கார வைக்கப் பட்டார். அதன் பிறகு அவருக்கு எதிராக எவரும் இயங்க நினைக்கவில்லை. ஓட்டுப் பெறும் வித்தையும் சொல்லிக் கொடுத்து, புகழ், பணம். அதிகாரத்தை அனுபவிக்கவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த அவருக்கு விசுவாசமாக இருக்கும் வரை 'குறையொன்றுமில்ல' என்று அவருடைய கைப்பாவைகள் இருந்து வந்தார்கள்.

ஈஸ்வரன் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஒரு விதவைத் தங்கையையும், மருமகளையும் தவிர அவருக்கு உறவு என்று யாரும் இருக்கவில்லை. அவருக்குப் பலவீனங்கள் என்று இருந்தால் அது அவரது எதிரிகளுக்கும், பத்திரிக்கைகளுக்கும் தெரிந்திருக்கவில்லை. பல குற்றங்களுக்கும் அவர் தான் மூல காரணம் என்று தெரிந்தாலும் அதை யாராலும் நிரூபிக்க முடிந்ததில்லை.

அப்படிப்பட்ட ஈஸ்வரன் இந்த சேதுபதி விவகாரத்தில் ஒரு நிலை எடுத்து இயங்கி இருக்கிறார் என்பதே அருணிற்கு அதிர்ச்சியாக இருந்தது. அந்த மனிதரும், தன் தாத்தாவும் இந்த விவகாரத்தில் அந்த அளவுக்குத் தீவிரமாக யாருக்காக செயல்பட்டார்கள் என்பதை அவனாலும் அனுமானிக்க முடியவில்லை. ஈஸ்வரன் வெளியே வரக் கூடாது என்று நினைத்த ஒரு விஷயத்தை வெளியே வர வைக்கக் கிளம்பியும் தான் உயிரோடு இருக்கும் மர்மமும் அவனுக்கு விளங்கவில்லை. எத்தனையோ விபத்துகளில் ஈஸ்வரனின் எதிரிகள் இறந்து போய் இருக்கிறார்கள், காணாமல் போயிருக்கிறார்கள். அப்படியேதும் தனக்கு ஆகாமல் இருக்கக் காரணம் தான் செல்வரங்கத்தின் பேரன் என்பதாலா, ராஜராஜன் மகன் என்பதாலா, அல்லது வேறு எதாவது காரணத்தாலா என்று அவனுக்குத் தெரியவில்லை.

"ஈஸ்வரனுக்கும் அந்த விஷயத்தில் தனிப்பட்ட ஒரு ஈடுபாடு இருக்கக் காரணம் இருப்பதாய் அப்போ நான் நினக்கலை அருண். ஆனால் நீ இப்ப அந்தத் தாமிரபரணி நதிக்கரையில் நடந்த ஒரு நிஜக் கதை தான் அந்த நாவல்னு சொன்னதுக்கப்புறம் நான் கொஞ்சம் விசாரித்துப் பார்த்தேன். ஒரு சுவாரசியமான தகவல் கிடைச்சது...."

"என்ன சார் அது?"

"ஈஸ்வரனோட மருமகள் ஒரு விஞ்ஞானியாக அமெரிக்காவில் இருக்கிறாள்"

"அது எனக்கும் தெரியும் சார்."

"அவள் பெயர் என்ன தெரியுமா அருண், தாமிரா"

அந்தப் பெயர் தாமிரபரணியால் வந்த பெயராக இருக்கலாமோ என்ற அம்பலவாணனின் அதே சந்தேகம் அருணிற்கும் வர அவன் மெல்ல விசில் அடித்தான்.

# (28)

Some men see things as they are and say "why";

I dream of things that never were and say "why not."

– George Bernard Shaw

ரங்காச்சாரி, நரசிம்மராஜுலுவின் வரவிற்காகக் காத்திருந்தார். ஒரு மணி நேரத்திற்கு முன், ‘சந்திக்க வரட்டுமா' என்று நரசிம்மராஜுலு கேட்ட போது சிறிது தயங்கி விட்டுத் தான் ஒப்புக் கொண்டார். அந்த விஞ்ஞானிக்கும், இந்த இலக்கியவாதிக்கும் பொதுவாக இருந்த ஒரே விஷயம் 'அவன்' தான். எனவே அவர் வருவதன் காரணம் 'அவனாக'த் தான் இருக்க வேண்டும் என்று உணர்ந்திருந்ததால் தான் ரங்காச்சாரி தயக்கம் காட்டினார். ஆனால் 'அவனை'ப் பற்றி பேசுவது தன்னைப் போலவே நரசிம்மராஜுலுவிற்கும் துயரமான விஷயம் என்பதால் சரியான காரணம் இல்லாமல் அந்த விஞ்ஞானி வர மாட்டார் என்று அறிந்து தான் ஒத்துக் கொண்டார். தன் மேசையில் இருக்கின்ற 'அவன்' புகைப்படத்தைப் பார்த்தார். தாமிரபரணி நதிக்கரையில் கருப்பு உருவமாக அந்த புகைப்படத்தில் பதிந்து கேமிராக் கவிதையாகத் தெரிந்தான் அவன். எத்தனையோ முறை ஏதோ ஒரு இலக்கியத் தலைப்பு எடுத்து மணிக்கணக்கில் சரளமாக புறநானூறில் இருந்து கம்பராமாயணம் வரை கண்ணதாசனில் இருந்து மு.மேத்தா வரை மேற்கோள் காட்டிப் பேசுவான். அவன் பேசுவதைக் கேட்கக் கேட்க அவருக்குப் பிரமிப்பாக இருக்கும். என்ன மனிதனிவன்? மறுநாள் நரசிம்மராஜுலுவின் வீட்டில் உட்கார்ந்து கொண்டு நியூட்டனிலிருந்து ஐன்ஸ்டீன் வரை மணிக்கணக்கில் புதிய கோணங்களில் அலசுவான். அந்த விஞ்ஞானியும் அவன் பேச்சில் இருந்து எத்தனையோ விஷயங்களைப் புதிதாகச் சிந்திக்க ஆரம்பிப்பார். ரங்காச்சாரிக்கும், நரசிம்மராஜுலுவிற்கும் இடையே ஒரு கருத்து வித்தியாசம் பெரிதாக உண்டு. அவன் பெரும் இலக்கியவாதி ஆவானா அல்லது பெரிய விஞ்ஞானியாவானா என்ற கேள்விக்கு உடன்பாடான பதில் அவர்களுக்குள் அமைந்ததில்லை. ஆனால் அவன் அந்த இரண்டுமாகவும் ஆகாமல் அவர்களிடமிருந்து மறைந்து போய் விட்டான்.....

நரசிம்மராஜுலு "வணக்கம்" என்று அவர் சிந்தனைகளைக் கலைத்தார். "வாங்க" என்று ரங்காச்சாரி எழுந்து நின்று வரவேற்றார்.

நரசிம்மராஜுலுவின் பார்வை மேசையில் இருந்த புகைப்படத்தில் விழுந்தது. அவர் முகத்தில் வேதனை ஒரு கணம் தோன்றி மறைந்தது. தளர்ச்சியுடன் அமர்ந்தார். நேராக விஷயத்திற்கு வந்தார். தாமிராவிடம் இருந்து தன் பார்வைக்கு வந்த விஞ்ஞானக் கட்டுரை பற்றி சொன்னார்.

"அந்தக் கட்டுரை சம்பந்தமாய் 'அவன்' 25 வருஷத்துக்கு முன்னாலேயே நிறைய எழுதிட்டான். அதைத் தான் சில நாள் முன்னால் அம்பலவாணனும் அருணும் என் கிட்ட கொண்டு வந்தார்கள். அந்தப் பொண்ணு யாருன்னு தெரியுமில்லை?"

ரங்காச்சாரி தெரியும் எனத் தலையசைத்தார்.

"அந்தப் பொண்ணு என்னோட கருத்து கேட்க, போன் செய்தப்ப நான் அந்த பழைய கட்டுரை பத்தி சொல்லிட்டேன். அதைப் படித்தால் நீ மேற்கொண்டு ஆராய்ச்சி செய்ய உபயோகமாய் இருக்கும்னு நான் என்னையும் மீறி சொல்லிட்டேன். என்னால சொல்லாமல் இருக்க முடியலை....."

ரங்காச்சாரி உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தாரே தவிர வாய் திறக்கவில்லை. "சரி அதற்கென்ன?" என்பது போல அவரைப் பார்த்தார்.

"சொல்றப்ப சொல்லிட்டேன். ஆனா ஈஸ்வரன் என்ன செய்வானோங்கற பயம் அப்புறம் தான் வந்தது. அந்தப் பொண்ணு கிட்ட பேசறப்ப சயன்ஸ் மட்டும் தான் ஞாபகம் இருந்தது. போனை வச்சதுக்கப்புறம் தான் ஈஸ்வரன் ஞாபகம் வந்தது. அதுக்கப்புறம் அவனைத் தவிர வேற எதையும் நினைக்க முடியலை....."

ரங்காச்சாரி பெருமூச்சு விட்டார்.

நரசிம்மராஜுலு கேட்டார். "அவன் என்ன செய்வான்னு நினைக்கிறீங்க?"

"தமிழ்நாட்டில் இதற்குப் பதில் தெரிஞ்சவங்க யாருமில்லை" என்று ரங்காச்சாரி சொன்னார். "அவன் என்ன நினைக்கிறான், என்ன செய்வான்னு முன் கூட்டியே தெரிஞ்சுக்க எத்தனையோ பெரிய தலைகள் கோடிகணக்கில் செலவு செய்யக் கூடத் தயங்க மாட்டாங்க."

நரசிம்மராஜுலுவின் முகம் வெளிறியது.

"நீங்க, அந்தக் கட்டுரை இப்ப யார் கிட்ட இருக்கிறதா தாமிரா கிட்ட சொன்னீங்க?" ரங்காச்சாரி கேட்டார்.

"அம்பலவாணன் கிட்ட இருக்கிறதா சொல்லியிருக்கேன். வேற எதையும் நான் சொல்லலை".

ரங்காச்சாரி வாய் விட்டுச் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"இத்தனை நாள் அருண் 'அவனை'த் தேடிகிட்டிருந்தான். இப்ப அந்தக் கட்டுரையைப் படிச்சுட்டு 'அவனை'த் தேட ஈஸ்வரன் மருமகளையும் நீங்க ஏற்பாடு செஞ்சுட்டீங்க"

பரிதாபமாக நரசிம்மராஜுலு கேட்டார். "ஏங்க, உங்களுக்கே இது நியாயமாய் இருக்கா?. நொந்து போய் வந்திருக்கேன். வெந்த புண்ணுல வேலைப் பாய்ச்சுறீங்களே!"

உடனே ரங்காச்சாரி சிரிப்பை விரட்டினார். "இல்லை விதியை நினைச்சேன்"

"நான் இப்ப என் விதியை மட்டுமே நினைக்கிற நிலையில் இருக்கேன். நான் இனி என்ன செய்யட்டும்னு சொல்லுங்க"

"நீங்க தைரியமாய் இருங்க. ஒரு வேளை ஈஸ்வரன் போன் செய்து கேட்டால் உண்மையைச் சொல்லுங்க. அந்தப் பொண்ணுக்கு அந்தக் கட்டுரை உபயோகமாய் இருக்கும்னு நினைச்சு தான் அது பத்தி சொன்னதாய் சொல்லுங்க. அவன் கேட்டுட்டு சில சமயம் மட்டரகமாய்ப் பேசுவான். கேட்டுட்டு அமைதியாய் இருங்க. எதிர்த்து மட்டும் பேசாதீங்க. மனிதர்களைத் துல்லியமாய் எடை போட ஈஸ்வரன் மாதிரி யாராலும் முடியாது. நீங்க திட்டம் போட்டு செய்ததாய் அவன் கண்டிப்பாய் நினைக்க மாட்டான். "

நரசிம்மராஜுலு சிறிது அமைதியடைந்தார். அவர் பார்வை மறுபடி அந்தப் புகைப்படத்தில் படர்ந்தது. அவருக்குத் தெரிந்து 'அவனை'ப் போல் கனவு கண்டவர்களும் இல்லை. 'அவனை'ப் போல் சாதித்தவர்களும் இல்லை.

வாய் விட்டு ரங்காச்சாரியைக் கேட்டார். "அந்தப் பழைய சுவடே இல்லாமல் அவனால் எப்படிப் போக முடிஞ்சது?"

ரங்காச்சாரி பதில் சொல்லாமல் பெருமூச்சு விட்டார். "அவனால் முடியாதது எதாவது இருக்க முடியுமா?"

அதே சமயத்தில் அமெரிக்காவில் இருந்து தாமிரா என்னும் விஞ்ஞானி தன் தாய் மாமன் ஈஸ்வரனுக்குப் போன் செய்தாள்.

ஈஸ்வரன் அந்த சமயத்தில் தங்கள் கட்சித் தலைவரிடம் பேசிக் கொண்டிருந்தார். பேசுவது தாமிரா என்று அறிந்ததும் "கொஞ்சம் இருய்யா" என்று அந்தத் தலைவரிடம் சொல்லி விட்டுத் தன் தனியறைக்குப் போனார்.

"சொல்லும்மா தாமிரா"

"அம்மா எப்படியிருக்காங்க மாமா?" என்று அவள் எப்போதும் கேட்கும் முதல் கேள்வியைக் கேட்டாள். "நல்லாயிருக்காம்மா" என்று ஈஸ்வரன் சொன்னார்.

"நீங்க எப்படியிருக்கீங்க மாமா?"

"நல்லாயிருக்கேம்மா"

"உங்க ஷ¤கர் கன்ட்ரோல்ல இருக்கா மாமா?"

"நான் எல்லாத்தையும் மாதிரி அதையும் கன்ட்ரோல்ல தான் வச்சிருக்கேன் தாமிரா"

தாமிரா வாய் விட்டுச் சிரித்தாள். "எல்லார் கிட்டயும் பொய் சொல்ற மாதிரி என் கிட்டயும் சொல்லாதீங்க. நான் அடுத்த வாரம் வந்து நேரில் செக் செய்து பார்த்தாத் தான் நம்புவேன்..... மாமா உங்களுக்கு 'உண்மை' பத்திரிக்கை ஆசிரியர் அம்பலவாணனைத் தெரியுமா?"

இடியே விழுந்தாலும் அசராத ஈஸ்வரன் இந்தக் கேள்வியைத் தன் மருமகளிடம் இருந்து எதிர்பார்த்திராததால் அதிர்ந்து போனார்.

## (29)

Sailors caught in a storm should pray not for safety from danger, but for deliverance from fear. Why should they accept the storm? Because a smooth sea never made a skillful mariner.

– Chuck Gallozzi

எல்லா நேரங்களிலும் தன்னை சுதாரித்துக் கொள்ளும் சக்தி படைத்த ஈஸ்வரன் தன் அதிர்ச்சியை சில நொடிகளில் மறைத்துக் கொண்டு சொன்னார், "அந்த ஆளைப் பத்திக் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா நல்ல பரிச்சயம் போதாதும்மா. ஏன் கேட்கிறாய்?"

"மாமா, நான் இப்ப ஒரு ரிசர்ச் செய்துகிட்டுருக்கேன். அதைப் பத்தி யாரோ ஒருத்தர் முதல்லயே நிறைய எழுதியிருக்கார்னும், அந்தப் பேப்பர்ஸ் அந்த அம்பலவாணன் கிட்ட இருக்குன்னும் என் கிட்ட ஒரு விஞ்ஞானி சொன்னார். அதனால தான் கேட்டேன்."

'எந்த நாய் சொல்லுச்சு' என்று கேட்க வாய் எடுத்த ஈஸ்வரன் பேசுவது தன் மருமகளுடன் என்று உணர்வு வர, "சொன்னது யாரும்மா?" என்று மாற்றிக் கேட்டார்.

"நரசிம்மராஜுலுன்னு நம்ம இந்தியாவில் இருக்கும் விஞ்ஞானி தான் மாமா...."

எத்தனையோ நினைவுகள் ஒன்றாக மனதில் பெருக்கெடுக்க அத்தனையையும் ஒரு கணத்தில் ஒதுக்கி விட்டு ஒன்றும் அறியாதது போல் சொன்னார், "எனக்கு இந்த விஞ்ஞானிகள் பத்தியெல்லாம் என்ன தெரியும் தாமிரா."

"மாமா எனக்கு அந்தப் பேப்பர்ஸ் படிக்கறதுக்கு வேணும். நீங்க ஒரு வார்த்தை அந்த அம்பலவாணன் கிட்டப் பேசி வாங்கிக் கொடுங்களேன்"

"நீயே அந்த ஆள் கிட்டப் பேசி வாங்கிக்கோம்மா. இந்தச் சின்ன விஷயத்துக்கெல்லாம் நான் பேசினா நல்லா இருக்காது."

"ஓ.கே. மாமா, நான் அடுத்த வெள்ளிக் கிழமை வர்றேன். ஒரு மாசம் அங்க தான் தங்கப் போறேன். எனக்கென்னவோ அம்மா கூட சில நாள் இருக்கணும்னு ஆசையா இருக்கு. வந்து முதல் வேலையாய் உங்க ஷுகர் தான் செக் செய்யப் போறேன். ரெடியாய் இருங்க"

அவள் பேசி முடித்த பிறகு நிறைய நேரம் ஈஸ்வரன் பல விதமான சிந்தனைகளில் இருந்தார். 'அம்மா கூட சில நாட்கள் இருக்கணும்னு ஆசையா இருக்கு' என்ற வார்த்தைகளை நினைத்துப் பார்க்கையில் மனம் கனத்தது. அவர் மேல் உண்மையான அன்புடன் இருக்கும் மனிதர்கள் இரண்டே பேர். ஒருத்தி உடன் பிறந்தவள். மற்றவள் அவள் பெற்ற மகள். மற்ற எல்லா மனிதர்களுக்கும் அவர் மேல் இருப்பது பயம், பொறாமை, இத்தியாதிகள் தான். அவள் அவர் உடல் நிலையைப் பற்றி அக்கறையுடன் கேட்டது மனதை நெகிழ வைத்தது. அந்த இருவருக்கு மட்டும் அவர் ஒரு வித்தியாசமான நபராக வாழ்ந்தார்.

நரசிம்மராஜுலுவின் அதிகப்பிரசங்கித்தனம் ஒரு பக்கம் எரிச்சலைக் கிளப்பினாலும், மறு பக்கம் இந்தப் புதிய திருப்பம் வேறு ரீதியில் அனுகூலமாகத் தெரிந்தது. நிகழ்ச்சிகள் அவரையும் மீறி நடப்பது அவருக்கு என்றுமே சகிக்க முடிந்த விஷயமல்ல என்றாலும் இந்தத் துப்பறியும் வேலையில் அருணின் பங்கு முக்கியமாக இருப்பது சில நாட்களாகவே அவருக்கு சாதகமாகவே படுகிறது. விதி நகர்த்தும் காய்களை சிறிது வேடிக்கை பார்க்க ஈஸ்வரன் முடிவெடுத்தார்.

*****

அருணின் பைக் அவன் வீட்டு கேட்டை அடைந்த போது அங்கு சந்திரன் அவனுக்காகக் காத்திருந்தார். அவன் ஊரில் இருந்து வந்து விட்டதை கூர்க்கா மூலம் தெரிந்து கொண்டவர் இன்று அவனைப் பார்க்காமல் போவதில்லை என்ற தீர்மானத்தில் இருந்தார்.

"வணக்கம் தம்பி" என்று அவனைப் பார்த்ததும் பவ்யமாகக் கை கூப்பினார்.

முகத்தில் கடுமையை வரவழைத்துக் கொண்டு என்ன என்பது போல் அருண் அவரைப் பார்த்தான்.

"அன்னைக்கு நடந்துகிட்ட விதத்துக்கு என்னை மன்னிக்கணும்"

'சரி' என்று தலையசைத்து விட்டு உள்ளே போகத் துவங்கியவனைப் பரிதாபமாக அவர் பார்த்தார். 'இனியென்ன?' என்பது போல அவன் அவரைப் பார்த்தான்.

"என் பொண்ணு கொஞ்ச நாளாய் ஒரு நடைபிணம் மாதிரி இருக்கா. என்னால அதைப் பார்க்க முடியலை. என் தப்புக்கு என் பொண்ணை தண்டிச்சுடாதீங்க"

'உலகத்தில் எல்லாத் தந்தைகளும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலாவது தங்கள் குழந்தைகள் பற்றிக் கவலைப்படுகிறார்கள், இந்தக் குடிகாரன் உட்பட. ஆனால் என் ....." வந்த சிந்தனையை அப்படியே அருண் வெட்டிப் போட்டான். கீறல் விழுந்த ரிக்கார்டாய் இந்த எண்ணம் திரும்பத் திரும்ப வருவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

பைக்கை நிறுத்தி விட்டு அவரிடம் கோபமில்லாத ஆனால் கண்டிப்பான குரலில் சொன்னான், "பாருங்க, உங்க மேல எனக்குக் கோபம் இல்லை. ஆனா இனி நானும் உங்க பொண்ணும் பழையபடி பழக முடியாதுன்னு நல்லா யோசிச்சுப் பார்த்தப்ப எனக்குப் புரிஞ்சுடுச்சு. அதுக்கு உங்க ஏழ்மை காரணம் இல்லை. நான் ஒரு பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கலாம். ஆனா அது மூலமாய் ஒரு குடும்பத்தையே கல்யாணம் பண்ணிக்க முடியாது. உங்க பொண்ணைக் கல்யாணம் செஞ்சுகிட்டா அவ கூட உங்க மூணு பேர் பொறுப்பையும் நான் ஏத்துக்க வேண்டி இருக்கும். உங்களையெல்லாம் நிராதரவாய் விட்டுட்டு அவள் வரத் தயாராய் இருக்க மாட்டா. எனக்கோ உங்க குடும்பத்தையே தாங்கற பெருந்தன்மை இல்லை. அதை உங்க மகள் கிட்ட நான் தெளிவாய்

சொல்லிட்டேன். அவளும் புரிஞ்சுகிட்டா. நாங்க பிரிஞ்சுட்டோம். அதனால நடக்க முடியாத ஒரு விஷயத்துக்காக இனிமே சும்மா இங்க வராதீங்க."

அவனது வார்த்தைகள் அவரை அறைந்தன. ஆனால் சந்திரன் ஒரு தந்தையாக மட்டுமே அந்தக் கணத்தில் அங்கு நின்றார். குரல் நடுங்க அவனைக் கேட்டார். "அப்ப அவள் மேல உங்களுக்குக் கோபம் இல்லையே?"

அவர் எதற்காகக் கேட்க வருகிறார் என்று புரியாமல் அவன், "இல்லை" என்று சொன்னான்.

"தம்பி, என் மத்த குழந்தைகளைப் பார்த்துக்க நான் இருக்கேன். நான் ஏதோ ஒரு வேலை பார்த்து அதுகளைப் பார்த்துக்கறேன். உங்க வாசலுக்கு அதுகளைக் கண்டிப்பாகக் கூட்டிக்கிட்டு வர மாட்டேன். காவ்யாவை மட்டும் கை விட்டுடாதீங்க" அவர் கண்களில் நீர் நிரம்பியது.

அவன் மனம் நெகிழ்ந்தாலும் அதை வெளிக்காட்டாமல் வாய் விட்டு சிரித்தான். "குடிகாரன் பேச்சு....."

"தம்பி, நான் உயிரை விட அதிகமாய் நேசிக்கிற என் மூத்த பொண்ணு மேல சத்தியம் பண்றேன். என்னை நம்புங்க"

"முதல்ல ஒரு வேலை பார்த்துட்டு அவங்களைக் காப்பாத்த முடியும்னு எனக்கு நிரூபிச்சுக் காட்டுங்க. அப்புறம் பார்க்கலாம்" என்று சொல்லி விட்டு அங்கிருந்து வேகமாய் உள்ளே வந்தான்.

அவர் தளர்ந்த நடையுடன் அங்கிருந்து கிளம்பினார். அருண் பாசத்திற்கு இத்தனை வலிமையா என்று வியந்தான். இந்த வார்த்தைகளை அவன் சந்திரனிடமிருந்து எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் மகளுடைய வேதனையை சகிக்க முடியாத போது ஒரு தந்தை எவ்வளவு தூரம் மாற முன் வரக்கூடும் என்று அவன் கண்கூடாகப் பார்க்கிறான். ஆனால் அந்த மனிதரால் சொன்னபடி செய்ய முடியுமா என்ற சந்தேகம் அவனுக்கு இன்னும் இருந்தது.

அந்த யோசனையுடன் அவன் வீட்டினுள்ளே நுழைந்த போது அம்மா அவனை ஆவலுடன் கேட்டாள். "காவ்யாவோட அப்பா என்னடா சொல்றார்?"

அவன் நடந்ததை சொன்னான். கேட்டு மாதுரியும் மனம் நெகிழ்ந்தாள். "பாவம்டா அவர்." அதோடு அவள் நிறுத்தியிருக்கலாம். "எங்கப்பாவும் இப்படித் தான் அருண், என் மேல் உயிராய் இருந்தார்"

அருண் அம்பலவாணன் சொன்னது நினைவுக்கு வர, தாயிடம் ஆவலுடன் கேட்டான், "அம்மா தாத்தாவும் ஈஸ்வரனும் ஃபிரண்ட்ஸா?"

மாதுரி புரியாமல் கேட்டாள், "எந்த ஈஸ்வரன்?"

"தமிழ்நாட்டின் கிங் மேக்கர்"

அவள் முகம் மாறியது, "எங்கப்பாவுக்கு அந்த ஆளைப் பார்த்தால் ஆகாது. ஏன் கேட்கிறாய்?"

"அவர்கள் ரெண்டு பேரும் சேர்ந்து தான் சேதுபதி ரகசியங்கள் வெளியே வரக் கூடாதுன்னு தடுக்கப் பாடுபட்டாங்கன்னு கேள்விப்பட்டேன். அதனால் தான் கேட்டேன்."

மாதுரி தன் முகம் வெளிறியதை மகன் காணக் கூடாது என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஆனால் படபடக்கும் இதயத்தையும், கிளம்பிய பயத்தையும் அவளால் கட்டுப் படுத்த முடியவில்லை. 'கடவுளே இது என்ன சோதனை?'

# (30)

Power is nothing unless you can turn it into influence.

– Condoleezza Rice

அம்மாவின் மௌனம் அருணை யோசிக்க வைத்தது. அம்மா எதையோ மறைக்கிறாளோ என்று சந்தேகம் லேசாக உதயமாக "என்னம்மா சத்தத்தையே காணோம்" என்று தாயைக் கேட்டான்.

மகனை எப்படி சமாளிப்பது என்று தெரியாததால் மாதுரி கோபம் தான் சிறந்த வழி என்று நினைத்தாள். "எப்பப் பார்த்தாலும் அந்தப் பாழாப் போன நாவல் பத்தியே பேசினால் எனக்கு எரிச்சல் தான் வருது"

அருண் அந்தக் கோபத்தைக் கண்டு கொள்ளவில்லை. "நீ சொல்றே தாத்தாவுக்கும் ஈஸ்வரனுக்கும் ஆகாதுன்னு. ஆனா ஆகாத ரெண்டு பேர் சேர்ந்து சேதுபதி பத்தின ரகசியங்கள் வெளியே வரக் கூடாதுன்னு பாடு பட்டுருக்காங்க. எங்கேயோ இடிக்கிற மாதிரி இருக்கேம்மா"

"எங்கப்பா எதை எதுக்கு செஞ்சார்னு எனக்கு எப்படிடா தெரியும். வியாபார விஷயமா எங்கப்பா யார் கூட வேணும்னாலும் சேர்ந்துக்குவார். பிடிக்குது, பிடிக்கலைன்னு பார்க்க மாட்டார்"

"சேதுபதிக்கும் வியாபாரத்துக்கும் என்னம்மா சம்பந்தம்"

மாதுரிக்கு நாக்கு வரண்டது. "எனக்குத் தெரியாதுடா. இனிமே அந்த சேதுபதி பத்தி என் கிட்ட எதுவும் கேட்காதே. எனக்கு அந்த ஆள் பத்தியும் அந்த நாவல் பத்தியும் உன் கிட்ட கேட்டு கேட்டு காது புளிச்சுடுச்சு" என்று மகன் மேல் எரிந்து விழுந்து விட்டு உடனே சாமர்த்தியமாக அந்த இடத்தைக் காலி செய்தாள்.

அருன் புன்னகைத்தான். தாத்தாவின் எல்லா நடவடிக்கைகளும் அம்மாவுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று அவனும் உணர்ந்தே இருந்தான். அடிக்கடி சேதுபதி பற்றியும், அந்த நாவல் பற்றியும் அம்மாவிடம் பேசி அவளை வெறுப்பேற்றி விட்டோம் என்று புன்னகையுடன் நினைத்துக் கொண்டான். தாத்தாவின் இந்த நடவடிக்கைகள் பற்றி அப்பாவிற்குத் தெரிந்திருக்கலாம். வியாபார விஷயமாக கூடவே இருந்ததால் அவர் அறிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் அந்த எந்திரத்திடம் கேட்க அவனுக்கு இஷ்டமில்லை. ஒற்றை வார்த்தைகளில் வரும் அவரது பதில்கள் அவனுக்கு ரத்தக் கொதிப்பை வரவழைக்கவும் வாய்ப்புண்டு.

ஈஸ்வரனின் மருமகள் பெயர் தாமிரா என்று தெரிந்ததும் அவள் பற்றி பல தகவல்கள் சேகரித்திருந்தான் அருண். பெரிய உபயோகமான தகவல்கள் கிடைக்கா விட்டாலும் மருமகள் மீது ஈஸ்வரன் வைத்திருந்த அக்கறையும் அன்பும் அதீதமானது என்பதற்கான ஆதாரங்கள் அவனுக்குக் கிடைத்தன. அவர் சம்பந்தமான தகவல்கள் வழக்கம் போல பத்திரிக்கைகள் வெளியிடத் தயங்கினாலும், பத்திரிக்கை நண்பர்கள் அவனுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்கவில்லை.

தாமிரா படித்த கல்லூரியில் அவள் ஈஸ்வரனின் மருமகள் என்பதே பலருக்கும் தெரிந்திருக்கவில்லை. அந்தப் பெண்ணின் எளிமையும், அவள் அந்தத் தகவலை ரகசியமாய் வைத்திருந்ததும் காரணங்கள். அதே கல்லூரியில் சீனியராக அராஜகம் செய்து கொண்டிருந்த ஒரு மந்திரியின் மகன் அவள் கல்லூரியில் சேர்ந்த புதிதில் அவளிடம் சில்மிஷம் செய்ய, அடுத்த நாள் உடம்பில் பெரும்பாலான எலும்புகள் நொறுங்கி ஆஸ்பத்திரியில் சேர்ந்து அவன் எழுந்து முன் போல நடமாட எட்டு மாதங்கள் தேவைப்பட்டன. முன்பின் தெரியாத சில குண்டர்கள் அவனை அடித்துப் போட்டதைக் கேட்டு ரத்தம் கொதித்த மந்திரிக்குக் காரணம் யார் என்று தெரிந்த போது மகன் உயிர் பிழைத்ததே பெரிய பாக்கியம் என்று பட்டது. மகன் சார்பில் உடல் நடுங்க

ஈஸ்வரனிடம் போய் சாஷ்டாங்கமாய் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டு விட்டு வந்தார். அந்த விஷயம் வெகு சிலரைத் தவிர யாருக்கும் தெரியாமல் மறைக்கப்பட்டது. அந்த மந்திரியின் மகன் திரும்ப அந்தக் கல்லூரியில் காலடி எடுத்து வைக்கவில்லை.

தாமிரா எங்கு போனாலும் இடைவெளி விட்டு ஈஸ்வரனின் பாதுகாப்புப் படை பின் தொடர்ந்தது சாதாரணமாக யாருக்கும் புலப்படாத அளவு ஜாக்கிரதையாகவும், ரகசியமாகவும் இருந்தது. ஆனால் பத்திரிக்கையாளர்கள், போலீஸ் துறை எல்லாம் அறிந்திருந்தார்கள். பாதுகாப்புப் படையின் கண் பார்வை எப்போதும் மருமகள் மீது இருக்கும் படி பார்த்துக் கொண்ட ஈஸ்வரன் அவள் வெளிநாட்டுக்குப் போனபின்பும் அங்கும் அப்படியே ஏற்பாடு செய்துள்ளதாக பேசிக் கொண்டார்கள்.

தாமிராவின் பெற்றோர் பற்றி பெரிதாக யாரும் அறிந்திருக்கவில்லை. அவள் தந்தை அவள் பிறந்த போதே இறந்து விட்டார் என்றும் அவள் தாய் அப்போதிருந்தே உடல் நலம் சரியில்லாமல் இருக்கிறாள் என்றும் அருண் கேள்விப்பட்டான். மற்றபடி யாருக்கும் அவர்கள் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை. குறிப்பாக தாமிராவின் தாய் தற்போது எங்கிருக்கிறாள் என்ற தகவல் கூட யாருக்கும் தெரியவில்லை. சிலர் மகள் வெளிநாட்டுக்குத் தன் தாயைக் கூட்டிக் கொண்டு போய் விட்டாள் என்றார்கள். சிலர் உள்ளூரிலேயே ஏதோ தனியார் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார்கள். சிலர் ஒரு ரகசிய பங்களாவில் தன் தங்கையை ஈஸ்வரன் தங்க வைத்துள்ளதாகச் சொன்னார்கள். ஆனால் உறுதியாக யாராலும் சொல்ல முடியவில்லை. ஈஸ்வரனின் தனிப்பட்ட விஷயங்களில் யாராவது மூக்கை நுழைப்பதாக அவர் அறிந்தால் அது ஆபத்து என்று அறிந்திருந்ததால் அனாவசியமாக யாரும் வம்பை விலைக்கு வாங்கப் போகவில்லை.

டெலிபோன் அலறி அருணின் சிந்தனைகளைக் கலைத்தது. "ஹலோ"

"அருண், நான் அம்பலவாணன் பேசறேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் எனக்கு தாமிரா போன் வந்தது. நரசிம்மராஜுலு அந்தக் கட்டுரையைப் பத்தி அந்தப் பொண்ணு கிட்ட சொல்லியிருக்கார் போல இருக்கு. அந்தப் பொண்ணு அந்த சப்ஜெக்ட்ல ஏதோ ரிசர்ச் செய்யுதாம். அதனால அந்தக் கட்டுரையை முடிஞ்சா ஃபேக்ஸ் செய்யச் சொல்லிச்சு. அடுத்த வாரம் இந்தியா வருதாம். ஆனா அதுக்கு முன்னால் அந்தக் கட்டுரை படிக்க ஆவலாய் இருக்காம். நான் உன் கிட்ட தான் அந்தக் கட்டுரை இருக்கிறதா சொல்லியிருக்கேன். என்ன செய்யலாம்?'

"அனுப்பலாம் சார். நமக்கும் ஈஸ்வரன் கோட்டைக்குள் நுழைய தாமிராவை விட ஒரு நல்ல உதவி கிடைக்க முடியாது"

"ஈஸ்வரன் கோட்டைக்குள்ளே நுழையறது கஷ்டம் தான் அருண். ஆனால் வெளியே வர்றது அதை விடக் கஷ்டம். நாம் ஜாக்கிரதையாய் இருக்கணும்"

ஈஸ்வரன் கோட்டைக்குள் நுழைவதைப் பற்றி மகன் போனில் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்ட மாதுரி அதிர்ந்து போனாள். அதுவும் தாமிராவின் பெயர் காதில் விழுந்த போது அவள் திகில் இரட்டை மடங்காகியது.

# (31)

ஜனன மரணக் கணக்கெடுக்கும்
கார்ப்பரேஷனே!
உன்னிடம் உள்ள கணக்கு சரியா?
உன்னிடம் இறந்தும் இருப்பவர்களின்
எண்ணிக்கை உள்ளதா?
– அம்சலட்சுமி

நகரத்தின் எல்லைப் பகுதியில் ஒரு ஏக்கர் நிலத்தில் மையப்பகுதியில் கட்டப்பட்டிருந்த அந்த பங்களாவில் எப்போதும் போல் ஒருவித அமானுஷ்ய அமைதி நிலவியது. வேலையாட்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் போது கூட மிக மெல்லிய குரலில் மட்டுமே பேசினார்கள். அதுவும் அவசியமான போது மட்டுமே பேசினார்கள். இன்று ஞாயிற்றுக் கிழமையானதால் அவர்களுக்குள் லேசான மன நடுக்கம், பதற்றம் இரண்டும் குடி கொண்டிருந்தன. காரணம் ஈஸ்வரன் வருகை புரியும் நாள் இது.

அந்த பங்களாவின் அதி நவீன சொகுசான பெரிய அறையையும் அதில் இருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்து இருந்த பெண்மணியையும் தலைமை நர்ஸ் பதட்டத்துடன் பார்வையிட்டாள். சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த பெண்மணி விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். சுமார் ஐம்பது வயதை எட்டியிருந்தாலும் அந்தப் பெண்மணி முகத்தில் ஒருவித லட்சுமி கடாக்ஷம் இருந்தது. அவள் ஊமையல்ல என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் அந்தப் பங்களாவின் மூத்த வேலைக்காரக் கிழவன் வெள்ளைச்சாமியைத் தவிர வேறு எந்த வேலையாளும் அவள் குரலைக் கேட்டதில்லை. அவனும் கூட சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு தான் அதைக் கேட்டிருப்பதாக ஒரு சமயம் சொல்லி அந்த நர்ஸ் கேட்டிருக்கிறாள். மிக இனிமையான குரல் என்று அவன் சொன்னதாக அவளுக்கு ஞாபகம். அவள் பேசாததால் தான் அந்தப் பங்களாவில் யாருமே குரலை உயர்த்திப் பேச பயப்பட்டது போல் அந்த நர்ஸிற்குத் தோன்றியது.

எல்லாம் சரியாக இருக்கிறதா என்று உன்னிப்பாக மறுபடி அந்த நர்ஸ் பார்வையிட்டு, பின் திருப்தி அடைந்து சத்தமில்லாமல் அந்த அறையை விட்டு வெளியேறினாள். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நர்ஸ் அந்தப் பெண்மணியிடம் சற்று அலட்சியமாக நடந்து கொண்டதாக ஈஸ்வரன் அறிய, அந்த நர்ஸ் வேலையை விட்டு நீக்கப்பட்டதுடன் அவளுக்கு சுமார் இரண்டு வருடம் எந்த வேலையும் கிடைக்காமல் ஈஸ்வரன் பார்த்துக் கொண்டார். பல முறை அவள் குடும்பத்தோடு சென்று ஈஸ்வரனிடம் கெஞ்சி, மன்றாடிய பின்பு தான் ஈஸ்வரன் பிடி அவள் வாழ்க்கையில் இருந்து விலகியது. ஆகவே ஒரு ஜடமாக அமர்ந்திருந்தாலும், யார் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று பல சமயங்களில் அந்தப் பெண்மணி அறியாவிட்டாலும் யாருமே அந்தத் தவறை பின்பு செய்யப் பயப்பட்டார்கள். இரும்பு மனிதரான ஈஸ்வரன் தன் தங்கை முன்பு வரும் போது முற்றிலும் மாறி விடுவதை அந்தத் தலைமை நர்ஸ் பார்த்து இருக்கிறாள். இவ்வளவு தூரம் ஒரு மனிதன் தன் தங்கையை நேசிக்க முடியுமா என்று அவள் எப்போதும் வியப்பதுண்டு.

ஈஸ்வரன் கார் அந்தப் பங்களாவினுள் நுழைந்தது. தலைமை நர்ஸ் ஈஸ்வரனை ஹாலில் சந்தித்தாள். வழக்கம் போல முதல் கேள்வியை அவளிடம் கேட்டார். "எப்படியிருக்கா?"

"நல்லாயிருக்காங்க சார்"

சொல்லி விட்டு அவள் அங்கேயே நின்றாள். ஈஸ்வரன் மட்டும் தன் தங்கையின் அறையை நோக்கிச் சென்றார். அவர் தன் தங்கையின் அறையில் இருக்கையில் அறையின் அருகில் கூட யாரும் இருக்க அனுமதி கிடையாது.

உள்ளே நுழைந்தவுடன் தங்கையை அழைத்தார். "தாரா"

பெரும்பாலான சமயங்களில் அவர் குரல் அவளை எட்டுவதில்லை. அவள் பார்வை எங்கோ ஒரு தொலைவை நோக்கி இருக்கும். சில அபூர்வமான சமயங்களில் அவள் தன் தமையனைப் பார்த்துப் புன்னகைப்பதுண்டு. அந்த சமயங்கள் அவர் வாழ்வின் மிக இனிமையான கணங்கள். இன்று இரண்டுமில்லாமல் ஒரு வித்தியாசத்தை அவர் தன் தங்கையிடம் பார்த்தார். அந்த முகத்தில் ஒரு மேக மூட்டம். ஏதோ ஒரு துக்கத்தின் சாயல். அவள் கண்கள் அவரை நேராகப் பார்த்தன. அதில் தெரிந்த துக்கம் அவர் இதயத்தை வெட்டிப் போட்டது. "தாரா, என்னம்மா?"

அவள் ஒன்றும் சொல்லாமல் அவரையே பார்த்தாள். அவளிடம் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்று தன்னை தயார்ப்படுத்திக் கொண்டு வந்தவர் அவளைப் பார்த்தவுடன் 'இன்று வேண்டாம்' என்ற முடிவுக்கு வந்தார். அவளருகே ஒரு நாற்காலியை இழுத்து உட்கார்ந்தார். "என்னம்மா?"

பதிலில்லை. இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகத் தன் தங்கையின் குரலை ஒரு முறையாவது கேட்க முடியாதா என்று அவர் ஏங்கிக் கொண்டிருக்கிறார். ஆனால் பலனில்லை.

"அடுத்த வெள்ளிக் கிழமை தாமிரா வர்றாள்"

தாராவின் முகத்தில் லேசாக ஒரு மாற்றம். மேக மூட்டம் சிறிது விலகியது.

"அவளுக்கு அமெரிக்க அரசாங்கம் ஏதோ பட்டம் கொடுத்து கௌரவிச்சிருக்காம். ஏதோ சொன்னாள். எனக்குத் தலையில் ஏறலை."

அவள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உன் பொண்ணு வர்றான்னாலே எனக்கு பயமாயிருக்கு தாரா. அதை சாப்பிடாதே, இதை சாப்பிடாதேன்னு ஆயிரத்தெட்டு கண்டிஷன் போடறா. அவளுக்கு நான் பயப்படற மாதிரி நான் யாருக்கும் பயப்பட்டதில்லை"

தாராவின் முகத்தில் மெல்லியதாய் ஒரு புன்னகை அரும்பி மறைந்தது. ஈஸ்வரன் மனம் உடனே நிறைந்தது. நிறைய நாட்கள் கழித்து இந்தப் புன்னகையைப் பார்க்கிறார். உற்சாகத்துடன் அவர் தாமிராவைப் பற்றி பேசினார். அவர் பேசப் பேச அவள் கவனம் அவர் பேச்சிலிருந்து நழுவி எங்கேயோ போக ஆரம்பித்தது. அவர் பேச்சை நிறுத்தினார். தங்கையை ஆழமாகப் பார்த்தார். அவள் முகத்தில் பழையபடி ஒரு சோகம். அவள் வேறு உலகத்தில் இருந்தாள்.

"தாரா" அவர் அழைத்தார். ஆனால் அவள் காதில் அவர் அழைத்தது விழுந்ததாகத் தெரியவில்லை. இனி இன்றைக்கு அவள் கவனத்தைத் திருப்ப முடியாது என்று அவரது அனுபவம் சொல்லியது. சுமார் அரை மணி நேரம் அவளையே பார்த்தபடி சிலையாக அமர்ந்திருந்தார். பின்பு அறையை விட்டு வெளியேறினார்.

அவரைக் கண்டவுடன் ஹாலில் இருந்த நர்ஸ் எழுந்து நின்றாள்.

"அவ கிட்ட ஏதோ மாற்றம் தெரியுதே. என்ன ஆச்சு?"

நர்ஸைப் பொறுத்த வரை தாராவிடம் ஒரு மாற்றமும் தெரியவில்லை. அதை ஈஸ்வரனிடம் தயக்கத்துடன் சொன்னாள்.

'பெரும்பாலான மனிதர்களுக்குப் பார்க்கத் தெரிவதில்லை. அதனால் தான் அவர்கள் எதையும் காண்பதில்லை' என்று ஈஸ்வரன் நினைத்தார். வந்த எரிச்சலை வெளியே காட்டாமல் 'வித்தியாசமாய் எதுவும் நடந்ததா?" என்று அவளைக் கேட்டார்.

"இல்லையே சார்"

"சரி நீ போகலாம்" என்பது போல தலையசைத்து அவளை அனுப்பி விட்டு வெள்ளைச்சாமியை அழைத்துப் பேசினார். அவனும் வழக்கத்திற்கு மாறாக எதுவும் நடக்கவில்லை என்றான்.

"தாரா ரூமுக்கு அந்த நர்ஸைத் தவிர யாராவது போனாங்களா?"

வழக்கமாய் போகும் டாக்டரும், அறையைக் கூட்டித் துடைக்கும் அஞ்சலையும் தவிர யாரும் போகவில்லை என்றான். இருவரும் சுமார் இருபது வருடமாய் வழக்கமாய் போய் வருபவர்கள்.

'மனநிலை சரியில்லாதவர்களிடம் தெரியும் மாற்றங்களுக்கு யாரால் என்ன காரணம் சொல்ல முடியும்' என்று சமாதானம் சொல்லிக் கொண்டாலும் அவர் உள்மனது அதை ஏற்க மறுத்தது. சிறிது யோசித்து விட்டு அதை மறந்தார்.

அவர் போனபின் சிறிது நேரம் அவர் கேள்வியைப் பற்றி வெள்ளைச்சாமியும் யோசித்தான். "தாராம்மா ரூமுக்கு யாரும் போகலையே. புதுசா இங்க யாரும் வரலியே. நம்ம தோட்டக்காரன் ஊருக்குப் போனதால ஒரு வாரத்துக்கு அவனுக்குத் தெரிஞ்ச வேற ஆளை வேலைக்கு விட்டுட்டுப் போயிருக்கான். அந்தப் புது ஆளும் வாயே திறக்காத ஒரு மனுஷன். இருக்கற இடமே தெரியறதில்லை. அதுவும் தோட்டத்தை விட்டு அவன் பங்களாவுக்குள்ளே காலடி கூட எடுத்து வைக்கிறதில்லை......"

ஒரு கணம், 'தற்காலிகமாய் வேலைக்கு வந்திருக்கும் அந்தத் தோட்டக்காரனைப் பற்றி எசமானிடம் சொல்லியிருக்கலாமோ' என்று அவனுக்குத் தோன்றியது. பிறகு "தாராம்மாவுக்கு சம்பந்தமேயில்லாத அந்தத் தோட்டக்காரனைப் பத்தி அவர் கிட்ட சொல்ல என்ன இருக்கு" என்று தன்னையே அவன் சமாதானப்படுத்திக் கொண்டான்.

## (32)

'What is a human being, then?'
'A seed'
'A... seed?'
'An acorn that is unafraid to destroy itself in growing into a tree.'
–David Zindell

தாமிரா அந்தக் கட்டுரையைத் திரும்பத் திரும்பப் பல முறை படித்தாள். அவளுக்கு ஏற்பட்ட பிரமிப்புக்கு அளவேயில்லை. அந்தக் கட்டுரை ஒரு ஜீனியஸால் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதில் அவளுக்கு சந்தேகமில்லை. அதில் தேவையில்லாத ஒரு வார்த்தையோ, கருத்தோ இல்லை. ரத்தினச் சுருக்கமாக தெளிவாக எழுதப்பட்டிருந்தது. அம்பலவாணன் இது சுமார் 25 வருடங்களுக்கு முன்னால் எழுதப்பட்டதாக இருக்கலாம் என்று சொல்லியதை யோசித்துப் பார்க்கிறாள். யாரந்த மனிதன்? அவளுக்கு வெள்ளிக்கிழமை வரைப் பொறுத்திருக்க முடியாமல் அம்பலவாணனுக்கு போன் செய்து கேட்டு விட்டாள். அவர் தாங்களும் அதைக் கண்டு பிடிக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டு இருப்பதாகச் சொன்னார். ஆனால் அவர் நரசிம்மராஜுலுவுக்கு அந்த விஞ்ஞானியைப் பற்றித் தெரியும் என்றும் ஆனால் அவர் அதைப் பற்றிய தகவல் எதுவும் சொல்லத் தயங்குவதாக நாசுக்காகத் தெரிவித்தார். நரசிம்மராஜுலுவோ எங்கேயோ போயிருப்பதாக போன் செய்த போது அவரது ஆபிசில் சொன்னார்கள். அவளுக்கு அம்பலவாணனிடமும், நரசிம்மராஜுலுவிடமும் கேட்க ஆயிரம் கேள்விகள் இருந்தன. இந்தியா சென்றதும் முதல் வேலையாக அதைச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தாள்.

இந்தியாவைப் பற்றி எண்ணியதும் அம்மா ஞாபகத்திற்கு வந்தாள். மாமா சற்று முன் தான் போன் செய்தார். அம்மாவைப் பார்த்து விட்டு வந்ததாகச் சொன்னார். அம்மாவைப் பற்றி எண்ணும் போதே மனம் வலித்தது. மருந்துகளாலும், மருத்துவத்தாலும் குணப்படுத்த முடிந்திருந்தால் மாமா என்றோ அதைச் செய்திருப்பார். ஆனால் அம்மா அப்பா மறைவுக்குப் பின்னால் அதை மறக்க பலவந்தமாக அந்த ஜட நிலைக்குப் போய் விட்டதாக அவளுக்குப் பட்டது. நலமடைய விரும்பாதவர்களை யார் தான் குணப்படுத்த முடியும்? கணவர் தான் உலகம் என்றும் அவரது மறைவுக்குப் பின் வாழ்வில் எந்த அர்த்தமும் இல்லை என்றும் அம்மா முடிவுக்கு வந்தது காதலையும், தாம்பத்தியத்தையும் பொறுத்த வரை உன்னதமான விஷயமாக இருக்கலாம். ஆனால் தாய்மை என்ற நிலையில் இருந்து பார்க்கையில் அம்மா தன் கடமையில் இருந்து தவறி விட்டதாகவே தாமிராவிற்குத் தோன்றியது. ஒரு முறை அதை வாய் விட்டே தன் தாய்மாமனிடம் சொல்ல அவர் அன்று முதல்முறையாக அவளிடம் கோபித்துக் கொண்டார். அவரைப் பொருத்த வரை அவரது தங்கை தவறே செய்ய முடியாதவள். தன் தங்கை மீது கண்மூடித்தனமான பாசம் வைத்திருக்கும் அவரைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. அதனால் அவரிடம் அவள் பிறகு சர்ச்சை செய்யப் போகவில்லை.

என்றோ இறந்து போன கணவன் இன்னும் உயிரோடு தான் இருக்கிறான் என்ற நினைவில் தான் அம்மா இருக்கிறாள் என்பதை தாமிரா தன் சிறு வயதிலேயே அறிவாள். அம்மா என்ன ஜடநிலையில் இருந்தாலும் பொட்டு வைக்க மறந்ததில்லை. அவள் கழுத்தில் இன்னமும் தாலி இருக்கிறது. இதையும் மாமா மாற்ற நினைக்காதது தாமிராவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மாவிற்குப் பழைய நினைவை ஏற்படுத்தக் கூடிய எல்லா பழைய போட்டோக்களையும் எரித்து விட்டதாக மாமா தாமிராவிடம் சொல்லியிருந்தார். தாமிராவிடம் மட்டும் தான் அவளது தந்தையின் படம் ஒன்று இருந்தது. அவளது தந்தையின் வேறு எந்த போட்டோவும் தற்போது இல்லை. ஆனாலும் அம்மா மனசில் அப்பா அசைக்க முடியாத அளவு வேரூன்றி இருந்தார்.

போன் அலறியது. "ஹலோ"

"நரசிம்மராஜுலு பேசறேம்மா. நீ ஃபோன் செஞ்சதா ஆபீஸ்ல சொன்னாங்க....என்ன விஷயம்மா"

நரசிம்மராஜுலுவிற்கு அவள் போன் செய்தது எதற்கு என்று தெரிந்தே இருந்தது. இது வரை ஈஸ்வரன் தன்னைத் தொடர்பு கொள்ளாமல் இருந்ததே தனது பூர்வ புண்ணியப் பலன் என்று நினைத்தார். இந்தப் பெண்ணிற்கு பாதகமில்லாத சில உண்மைகளை மட்டும் சொல்லி விட்டு இந்த சிக்கலில் இருந்து விலகிக் கொள்ள நினைத்ததால், தானே அவளுக்கு போன் செய்தார்.

"சார் அந்த விஞ்ஞானி பற்றி உங்களுக்குத் தெரியும்னு அம்பலவாணன் சொன்னார். அதற்காகத் தான் ஃபோன் செய்தேன்"

"ஒரு காலத்தில் என் மாணவன் அவன். ஆனா அவன் இப்ப இல்லைம்மா"

"ஏன் சார். அவர் செத்துட்டாரா?"

ஒரு கணம் நரசிம்மராஜுலு அமைதியாக இருந்தார். "தெரியலைம்மா. ஆனா அவன் உயிரோட இருந்திருந்தா இந்நேரம் எல்லாரும் அவனைப் பத்தி சொல்ற அளவு பிரபலமாய் இருந்திருக்கணும். அந்த அளவு புத்திசாலிம்மா அவன். அந்தக் கட்டுரை படிச்ச உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே"

"அவர் பெயரென்ன சார்"

நரசிம்மராஜுலு தயங்காமல் பொய் சொன்னார். "சரியாய் ஞாபகம் இல்லைம்மா. எத்தனையோ வருஷங்களுக்கு முந்தைய மாணவன்.... தொடர்பு விட்டுப்போய் கிட்டத் தட்ட 27 வருஷம் ஆயிடுச்சு....."

நரசிம்மராஜுலுவுக்கு அந்த மாணவனை அவரது கடைசி நினைவு வரை மறக்க முடியாது. வீட்டிற்குத் தெரியாமல் தினமும் இரவு பத்து மணிக்கு ஓடி வந்து அவரது ஆய்வுக் கூடத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டும், படித்துக் கொண்டும் இருந்து விட்டு அதிகாலை ஐந்து மணிக்கு மறுபடி வீட்டுக்கு ஓடும் அந்த இளைஞன் அவர் நினைவுக்கு வந்தான். அவ்வளவு திருட்டுத்தனமாய்தான் விஞ்ஞானத்தில் ஈடுபட்டிருந்தான். கள்ளக் காதல் அல்லது போதைப் பொருள் அளவுக்கு விஞ்ஞானத்தில் ஈடுபட கட்டுப்பாடு வைத்திருந்த அந்த குடும்பத் தலைவர் மீது அவருக்கு அந்தக் காலத்தில் ஏற்பட்ட வெறுப்பிற்கு எல்லையே இல்லை. இத்தனைக்கும் நரசிம்மராஜுலுவே ரங்காச்சாரியுடன் நேரில் சென்று அவரிடம் பேசி இருக்கிறார். எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போல வீணாய்ப் போயிற்று.

ஆனாலும் அந்த மாணவன் தெய்வத்தின் அபூர்வ சிருஷ்டி. அவனுள் இருந்த அந்த அக்னி விதை எல்லாவற்றையும் மீறி அவனை முன்னேற வைத்தது. எத்தனையோ விஷயங்களை அவருக்கே அவன் கற்றுத் தந்தான். ஒவ்வொரு ஆசிரியனும் தங்கள் வாழ்வில் இவனைப் போல ஒருவனையாவது பெறுவது அவசியமான பேரதிர்ஷ்டம் என்று அவர் நினைப்பார். ஒரு ஆசிரியனுக்கு வேறு என்ன வேண்டும்? ஒரு நாள் உலகமே இவனைப் பற்றிப் பேசப் போகிறது என்று அவர் உறுதியாக நம்பினார். ஆனால் விதி வேறு விதத்தில் விளையாடி விட்டது.....

"அவரைப் பற்றி உங்களுக்குத் தெரிஞ்ச வேறு ஏதாவது தகவல் இருந்தால் சொல்லுங்களேன் சார்...."

"எதற்கம்மா?"

"என் மாமா கிட்ட சொன்னால் அவர் அந்த விஞ்ஞானியைக் கண்டுபிடிச்சுடுவார். அதனால் தான் கேட்டேன்"

நரசிம்மராஜுலு பதறிப் போனார். "உன் மாமா கிட்ட நான் சொன்னதாய் தயவு செய்து எதுவுமே சொல்லிடாதேம்மா"

"ஏன் சார்?"

"முதல்ல எனக்கு வாக்குக் கொடும்மா" அவர் குரலில் தெரிந்த திகில் தாமிராவை ஆச்சரியப்படுத்தியது.

"சரி சார். நான் எதுவும் சொல்லலை...."

அந்த வார்த்தையைக் கேட்டதும் நரசிம்மராஜுலு ஃபோனை வைத்து விட்டார். அவர் இதயத் துடிப்பு சகஜ நிலைக்கு வர நிறைய நேரம் ஆகியது.

## (33)

In a busy world, it's tempting to believe that someone else has the answers.
Sometimes they do, but even then, their answers may not be yours.
– Joan Borysenko, Ph.D.

**அ**திகாலையில் எழுந்து சீக்கிரமே குளித்துத் தயாரான அப்பாவை ஆச்சரியத்துடன் பார்த்தாள் காவ்யா. சில நாட்களாக அவர் குடிக்காமல் வருவதே ஆச்சரியம் என்றால் இது பேராச்சரியம்.

விழிப்பு வந்தாலும் படுக்கையில் புரண்டு சோம்பலாகப் படுத்துக் கொண்டு இருப்பவர் இப்போது இவளை அசத்தினார். அவளாக ஒன்றும் கேட்காவிட்டாலும் அவராகவே சொன்னார். "எனக்கு டிரைவர் வேலை கிடைச்சிருக்கும்மா. ஆரம்பத்தில் மூவாயிரம் தர்றதாய் சொல்லி இருக்காங்க. வெளியூருக்கு போறன்னைக்கு தனியா பேட்டாவும் கிடைக்கும்"

கேட்க சந்தோஷமாய் இருந்தது. அவசரமாக ஆஃபிஸ் கிளம்புகையில் தன் டிபன் பாக்ஸோடு இன்னொன்றையும் ரெடி செய்து அவர் கையில் கொடுத்தாள்.

"உன் தங்கச்சி எடுக்கிற டியூசனும், என் சம்பளமும் நம்ம குடும்பம் நடத்தப் போதும்மா. அருண் கிட்ட சொல்லும்மா. நாளைக்கு ஒவ்வொண்ணுக்கும் அவங்க கிட்ட போய் நாங்க நிக்க மாட்டோம்மா. உன்னை ஏத்துக்க சொல்லும்மா"

அவள் கண்களில் நீர் கோர்த்தது.

"நீ இனிமேயாவது சந்தோஷமா எப்பவும் மாதிரி இருக்கணும் காவ்யா. அப்பாவுக்கு உன் முகத்தை சோகமாய்ப் பார்க்கிற தெம்பு இல்லைம்மா" அவர் குரல் கரகரக்க சொன்ன போது அவரைக் கட்டிக் கொண்டு மனம் நிறைந்து அழுதாள். எத்தனையோ சண்டைகள், திட்டுகள், கண்டிப்புகள் செய்ய முடியாத காரியத்தை இந்த நடிப்பு செய்யும் என்று அவளுக்கு முன்பே தெரிந்திருந்தால் அவரை எப்போதோ கடைத்தேற்றியிருப்பாள்.

அழுகின்ற மகளைப் பார்க்கையில் அவருக்கும் கண்களில் நீர் நிறைந்தது. குடிப்பழக்கமும், பொறுப்பில்லாத்தனமும் பிரதானமாக இருந்தாலும் அதையும் விட அதிகமாய் அவர் தன் மூத்த குழந்தையை நேசித்தது உண்மை.

"என்னை மன்னிச்சுடும்மா. இனி எப்பவுமே அப்பா உனக்குக் கஷ்டம் தர மாட்டேன்"

அன்று காவ்யா அருணுக்குப் ஃபோன் செய்து விஷயத்தைச் சொன்னாள். "........அருண், நான் உனக்குத் தான் தேங்க்ஸ் சொல்லணும். நீயும் ஒத்துழைச்சிருக்காட்டா அப்பாவை மாத்தறது முடியாமலே போயிருக்கும்னு நினைக்கிறேன்"

அருணுக்கு சந்திரனின் மாற்றம் பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தது. "அன்பு, காதல், பாசம்னு ஏதாவது மனசில் ஆழமாய் இருக்கும் வரை அந்த மனிதன் மேல் நாம நம்பிக்கை இழக்க வேண்டியதில்லைன்னு உன் அப்பா மூலம் புரியுது காவ்யா. சரி அப்ப சாயங்காலம் சந்திக்கலாமா?"

"எதுக்கும் மூன்று நாள் அவர் தொடர்ந்து வேலைக்குப் போகட்டும் அருண்...."

"ஏன் காவ்யா உன் அப்பா மேல் உனக்கு இன்னும் சந்தேகம் இருக்கா?"

"ஒரே ஒரு பர்சன்ட் இன்னும் இருக்கு அருண். இத்தனை வருஷமாய் உட்கார்ந்து தின்ன உடம்பு வளையுமான்னு அந்த ஒரு பர்சன்ட் சந்தேகம் இன்னும் இருக்கு"

அவளைப் பார்க்காமல் அவனுக்கு இருக்க முடியவில்லை. இன்னும் மூன்று நாட்கள் என்பது மூன்று வருஷங்கள் என்பது போல் கஷ்டமாக இருந்தது. ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு சொன்னான். "சரி காவ்யா"

போனைக் கீழே வைப்பதற்கு முன் ஒரு நிமிடம் அவள் எடுத்துக் கொண்டாள். அந்த மௌனம் வார்த்தைகள் தெளிவாக உணர்த்த முடியாத எத்தனையோ அவனுக்குச் சொல்லியது. அவளுக்கும் அவனை சந்திக்காமல் இருப்பது எவ்வளவு வருத்தமான விஷயம் என்பது அவனுக்கும் தெரியும். யாருமே வெறும் தனி மனிதர்கள் அல்ல. பொறுப்புணர்வு இருப்பவர்கள் கண்டிப்பாக தங்கள் விருப்பு வெறுப்பின் படியே நடந்து கொள்ள முடியாது. அவன் பெருமூச்சு விட்டான்.

அம்பலவாணன் முன் வந்து உட்கார்ந்த போது உற்சாகமாகி விட்டான்.

"என்ன அருண் முக்கிய தகவல் ஏதாவது.....?"

"எல்லாமே ஈஸ்வரனில் தான் வந்து முடிகிறது சார்"

"எப்படி?"

"ஈஸ்வரன் குடும்பத்தில் நிறைய விஷயங்கள் கேள்விக்குறியாகவே இருக்கு சார். ஈஸ்வரன் கிட்ட நெருக்கமாய் இருப்பவங்க எல்லாம் ஒரு விஷயம் மட்டும் ஒத்துக்கறாங்க. அவர் தங்கைக்கு ஏதாவது சின்ன அசௌகரியமானால் கூட யாரால் ஆச்சோ அவங்களை சுட்டுக் கொல்லக் கூட அவர் தயங்க மாட்டார்னு சொல்றாங்க. அப்படிப்பட்டவர் தான் சேர்த்து வைத்திருக்கிற கோடிக்கணக்கான சொத்தை வைத்துக் கொண்டு தன் தங்கை கல்யாணத்தை எப்படி நடத்தி இருக்க வேண்டும்? ஆனால் அந்தக் கல்யாணம் பற்றி யார்க்கும் எதுவும் தெரியலை."

அம்பலவாணனுக்கும் அப்போது தான் அந்த உண்மை உறைத்தது. அந்தக் கல்யாணம் நடந்ததற்கான அறிகுறியே அந்தக் காலகட்டத்தில் இல்லை. "அப்படியொரு கல்யாணம் நடந்ததா?"

"அது தான் சார் மில்லியன் டாலர் கேள்வி"

"சரி, தங்கையின் கணவர் பற்றி ஏதாவது தகவல்?"

"அந்த நபரைப் பார்த்தவர்கள் யாருமேயில்லை சார். அவர் அற்பாயுசில் போய் விட்டார் என்று சொல்கிறார்களே ஒழிய, அவர் உயிரோடு இருந்த காலத்தில் அவரைப் பார்த்தவர்கள் யாருமில்லை"

"அவர் குடும்பம், உறவினர் .....?"

"அதைப் பற்றியும் யாருக்கும் தெரியலை சார். அவர் மரணம் பற்றி கூட யாருக்கும் எந்த ஐடியாவும் இல்லை. ஈஸ்வரன் தங்கை கல்யாணமாவது ஒரு லவ் மேரேஜாகக் கூட இருக்கலாம். அதை வெளியே சொல்லத் தயங்கி அவர் அப்படியே விட்டிருக்கலாம். ஆனால் அவர் தங்கை கணவர் மரணம் கண்டிப்பாக ஒரு பப்ளிக் நியூசாகி இருக்க வேண்டும். அதுவும் ஆகவில்லை"

அம்பலவாணனுக்கும் அது விசித்திரமாகத் தோன்றியது. எவ்வளவு தான் தன் குடும்ப விஷயங்களை ஒரு மனிதன் ரகசியமாய் வைத்துக் கொள்பவனாக இருந்தாலும் கல்யாணம், கருமாதி எல்லாம் அப்படி ரகசியமாய் வைக்க முடிகிற விஷயங்கள் அல்லவே. ஈஸ்வரனின் தங்கையைத் திருமணம் செய்து கொள்பவன் யாரானாலும், கல்யாணத்திற்குப் பின்பாவது, விலாசம் இல்லாத ஆசாமியாக முடியாதே.

"சரி அவர் ஃபோட்டோவையாவது யாராவது பார்த்திருக்கிறார்களா?"

"அவர் ஃபோட்டோவைப் பார்த்தவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர் இறந்த பின் சில வருடங்கள் அது ஈஸ்வரன் வீட்டு ஹாலில் தொங்கிக் கொண்டு இருந்ததாக சொல்கிறார்கள். ஆனால் பிறகு அதுவும் இல்லை என்கிறார்கள்"

"ஏதோ இடிக்கிறது அருண். அப்படி ஒரு கல்யாணம் நடந்ததா? அப்படி ஒரு மனிதர் இருந்திருக்கிறாரா? நிஜமாகவே தாமிரா ஈஸ்வரன் தங்கைக்கும் அந்த மனிதருக்கும் பிறந்தவள் தானா?"

# (34)

It isn't life that weighs us down – it's the way we carry it –

Elizabeth Potier

**தா**மிரா வந்து மூன்று மணி நேரமாகி விட்டது. தாயின் உடல்நிலை பற்றியும், தாய் மாமன் நலம் பற்றியும் விசாரித்தவள் பிறகு அதிகம் பேசியது அந்த விஞ்ஞானியைப் பற்றித் தான். ஈஸ்வரன் தன் மருமகள் பேசப் பேச அவளைப் பாசத்தோடு பார்த்தார். அவரது தங்கையும் இந்த வயதில் இவளைப் போல தான் இருந்தாள். ஆனால் இவ்வளவு பேச மாட்டாள்.....

தங்கையைப் பற்றி நினைவு வந்ததும் அவரையும் அறியாமல் மனம் பின்னுக்கு ஓடியது. தந்தையையும் தாயையும் அவர்கள் இருவரும் இழந்து வீதிக்கு வந்த போது ஈஸ்வரனுக்கு வயது ஏழு. தாராவிற்கு வயது மூன்று. உறவுகள் நிராகரிக்க, ஈஸ்வரனும் தங்கையும் பல நாட்கள் வீதியிலேயே தங்கள் வாழ்க்கையைக் கழித்தார்கள். அந்த சில நாட்களில் கூட தாரா ஒரு சந்தோஷமான குழந்தையாகவே இருந்தாள். மழை பெய்யும் போது மெள்ள தன் பிஞ்சுக் கையை நீட்டி மழையைக் கையில் வாங்கி ஆனந்தப்பட்ட தாரா இப்போதும் ஈஸ்வரன் மனதில் பசுமையாக இருக்கிறாள். "மழை எவ்வளவு நல்லா இருக்கு இல்லைண்ணா". பசி என்று அண்ணனிடம் அவள் சொன்னதில்லை. விளையாட அது வேண்டும் இது வேண்டும் என்று அவள் கேட்டதில்லை. எந்த சூழ்நிலையிலும் முகம் வாடாமல், குறைகள் சொல்லாமல் சந்தோஷமாக இருந்த அவர் தங்கை அவரை எப்போதும் ஆச்சரியப்படுத்தினாள். தெருவில் இருந்த சிறு கற்கள், காலி சிகரெட் பாக்கெட்டுகள், காலி தீப்பெட்டிகள், தெருவில் வீசப்பட்ட கலர் காகிதங்கள் என சேர்த்து வைத்துக் கொண்டு அவற்றை ஏதோ பொக்கிஷமாக பாவித்து விளையாடிய அவர் தங்கை மீது அவர் வைத்திருந்த பாசம் எல்லையில்லாதது. அவள் என்றுமே எல்லோருக்குமே நல்லவளாக இருந்தாள்.

ஆனால் அவரோ அந்த சிறு வயது கசப்பான அனுபவங்களாலேயே மனத்தை இரும்பாக்கிக் கொண்டிருந்தார். அவள் ஒருத்தியைத் தவிர மற்றவர்களிடம் அவர் தன் மூளையை மட்டுமே பயன்படுத்தினார். ஒரு பாடத்தை அவர் இரண்டாவது முறை கற்றுக் கொண்டது இல்லை. சில எடுபிடி வேலைகள், சின்ன வியாபாரங்கள், அரசியல் என்று சென்ற வாழ்க்கையில் தன் இதயத்தை என்றுமே நுழைய விட்டதில்லை. அரசியலில் பெரிய சூத்திரதாரியாக உருவெடுத்த அவர் "நல்லவன்" என்ற பெயரை மட்டும் பெற்று விடக்கூடாது என்று பாடம் கற்றுக் கொண்டிருந்தார்.

நல்லவன் என்பதற்கு பல யதார்த்தமான அர்த்தங்கள் அரசியலில் இருந்தன–இளித்தவாயன், எளிதில் ஒதுக்கக் கூடியவன், ஏமாற்ற ஏதுவான ஆள் இப்படி எத்தனையோ. நல்லவன் என்று வாய் நிறைய சொன்னாலும் யாரும் அந்த நல்லவனுக்குக் கஷ்ட காலத்தில் உதவவோ, உடன் நிற்கவோ தயாரில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

ஒவ்வொருவரும் தங்களுக்கு என்ன லாபம் என்பதில் தான் கருத்தாக இருக்கிறார்களே ஒழிய நியாயம் தர்மம் என்பதையெல்லாம் தேவைப்படும் தருணங்களில் சௌகரியமாக மறந்து விடுகிறார்கள் என்பதும் அவரது அனுபவ உண்மை. மனிதனது பயமும், பேராசையுமே அவர் நம்பும் விஷயங்கள். அரசியலில் இரண்டில் ஒன்று எப்போதுமே அவருக்குக் கை கொடுத்திருக்கிறது.

"மாமா...." தாமிரா கத்த, என்ன என்பது போல ஈஸ்வரன் பார்த்தார்.

"என்ன கனவா? இங்க ஒருத்தி பேசிகிட்டே இருக்கேன். நீங்க எங்கேயோ இருக்கீங்க"

"ஏதோ யோசனை. என்ன சொல்லிகிட்டிருந்தாய்"

"உங்க மாதிரி அரசியல்வாதிகள் செய்யற அரசியல்ல, திறமைக்கு இந்த நாட்டில மதிப்பில்லாம போச்சு"

அவரை விமரிசனம் செய்வதில் அவள் எப்போதுமே தன் தாயிற்கு எதிர்மறையாக இருந்தாள். ஈஸ்வரன் புன்னகை செய்தார். "எப்படி சொல்றே"

"அந்த மாதிரி ஒரு விஞ்ஞானி அட்ரஸே இல்லாம போகணும்னா உங்க அரசாங்கம் ஊக்கம் கொடுக்காமப் போறது தான் காரணம்னு நான் சொல்றேன். நீங்க எல்லாம் எங்கே திறமைக்கு ஊக்கம் தர்றீங்க? சொல்லுங்க பார்க்கலாம்"

"எல்லாத்துக்குமே அரசியல்வாதிகளைக் குறை சொல்றது இப்ப ஃபேஷனாப் போச்சு. நிஜமான திறமைக்கு யாரும் ஊக்கம் தரணும்னு இல்லை. அது தானா முன்னுக்கு வரும். ஒரு விஷயத்தை எப்பவுமே ஞாபகம் வச்சுக்கோ தாமிரா. ஒவ்வொரு மனிதனும் தான் என்ன ஆகணும், எப்படி வாழணும்னு அவனே தான் தீர்மானிக்கிறான். அரசியல்வாதிகள், அடுத்தவர்கள், சூழ்நிலைகள் இதெல்லாம் சில விஷயங்களை சுலபமாக்கலாம், கஷ்டமாக்கலாம், ஆனால் அவனே தீர்மானம் செய்தால் ஒழிய எதுவும் அவனை மாத்திட முடியாது"

ஈஸ்வரனின் வார்த்தைகளில் இருந்த உண்மை தாமிராவிற்குப் புரியாமல் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு மேதை தானே தன் திறமையை குழி தோண்டிப் புதைத்து விட்டு மறைந்து போனதை இன்னமும் அவளால் ஜீரணம் செய்ய முடியவில்லை. அதை வாய் விட்டே மாமாவிடம் சொன்னாள்.

"அவனுக்கு பர்சனலாக ஏதாவது காரணம் இருக்கும் தாமிரா"

'அப்படியென்ன காரணம் இருக்கும்' என்று யோசித்த தாமிரா "சரி மாமா, அது எப்படியோ இருந்து விட்டுப் போகட்டும். அந்த ஆள் பற்றி எல்லாத் தகவல்களும் எனக்குத் தெரியணும். அவர் யார், உயிரோடு இருக்காரா இல்லையா, இன்னும் என்னவெல்லாம் அவர் எழுதியிருக்கார், ஏன் இதையெல்லாம் எழுதும் அளவு அறிவு இருந்தும் எல்லாத்தையும் விட்டுட்டுப் போனார் – இதெல்லாம் எனக்குத் தெரியணும். நீங்க தான் கண்டு பிடிச்சுத் தரணும்"

ஈஸ்வரன் ஒரு கணம் அதிர்ந்தாலும் மறு கணம் வாய் விட்டுச் சிரித்தார். "இது தான் உன் அம்மாவுக்கும் உனக்கும் இடையே இருக்கிற பெரிய வித்தியாசம். உன் அம்மா என் கிட்ட எதுவும் கேட்டதில்லை. நீ என்னடான்னா அதிகாரத்தோட கேட்கிறாய்"

தாமிரா மாமாவைப் பார்த்து புன்னகைத்தாள். "நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லுங்க"

"ஏதோ ஒரு விஞ்ஞானி 25 வருஷங்களுக்கும் முன்னால் எப்பவோ எதையோ எழுதி வச்சுட்டு காணாமல் போனதைப் பத்தி இப்ப என்னை துப்பு துலக்கச் சொல்றியேம்மா. அதெல்லாம் ஆகிற காரியமாம்மா"

"உங்களால் முடியாத காரியம்னு ஏதாவது இருக்கா மாமா?"

"எத்தனையோ இருக்கும்மா. உதாரணத்துக்கு உன் அம்மாவையே எடுத்துக்கோ. என்னால் முடிஞ்சிருந்தா என் உயிரைக் கொடுத்தாவது அவளை சந்தோஷமாய் வச்சிருக்க மாட்டேனா. ஒரு நடைபிணமா அவள் இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் என் கையாலாகாத்தனத்தை நான் நினைச்சு புழுங்காத நாளில்லை தாமிரா" அவர் குரலில் தெரிந்த வலியால் அவளும் சற்று கண் கலங்கினாள்.

"நீங்க உங்க தங்கையை நேசிக்கிற அளவு யாருமே யாரையும் நேசிக்க முடியும்னு எனக்குத் தோணலை மாமா"

ஈஸ்வரன் ஒரு கணம் ஒன்றும் பேசவில்லை. பின்பு தளர்ந்த குரலில் சொன்னார்.

"இல்லைம்மா. உன் அம்மா உன் அப்பாவை அதை விட அதிகம் நேசித்தாள்"

"ஏன் மாமா எங்கப்பாவும் அம்மாவை அதே அளவு நேசித்தாரா?"

"ஆமாம்" என்று அவர் தலையசைத்தார். இனி இங்கு நின்றால் இவள் ஏதேதோ கேட்க ஆரம்பித்து விடுவாள் என்று அங்கிருந்து நகர்ந்தார். அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த தாமிராவிற்கு திடீரென்று ஒரு உண்மை உறைத்தது. 'அப்பாவைப் பற்றிப் பேச்செடுக்கும் போதெல்லாம் மாமா அவளருகே அதிக நேரம் இருப்பதில்லை'

# (35)

காதல் என்பது

விரித்தவர்களே

அகப்பட்டுக் கொள்ளும்

விசித்திர வலை தான்.

**–மு.மேத்தா**

காவ்யாவை சுமார் பத்து நாட்கள் கழித்து அருண் பார்க்கிறான். அவளைப் பார்க்காத இந்தப் பத்து நாட்களிலும் அவன் உணர்ந்த வெறுமையை அளவிட முடியாது. வேலையில் மூழ்கி இருக்கும் போது அதை அவன் உணராவிட்டாலும் வேலை முடிந்து சுய நினைவுக்கு அவன் வரும் போது முதலில் அவள் நினைவு தான் வந்தது. காதலிக்க ஆரம்பித்ததிலிருந்து இத்தனை நாட்கள் தொடர்ந்து பார்க்காமல் இருந்தது இது தான் முதல் முறை. பார்த்து அவள் கைகளைப் பிடித்துக் கொண்ட போது ஏதோ புதையல் கிடைத்த மகிழ்ச்சி அவனுள் பரவியது. அவனைப் பார்த்தவுடனேயே அவள் கண்களிலும் லேசாக நீர்த்திரை. சிறிது நேரம் இருவராலும் எதுவும் பேச முடியவில்லை. பிறகு பேச ஆரம்பித்தவர்களுக்குப் பேச்சை நிறுத்த முடியவில்லை. அவர்களுக்குப் பேச நிறைய இருந்தது. ஃபோனில் முக்கிய தகவல்களை மட்டும் தான் சொல்ல முடிந்தது. அவள் தன் தந்தையைப் பற்றி சொன்னாள். இப்போது அவர் தொடர்ந்து வேலைக்குப் போகிறார் என்று தெரிவித்த போது அவள் குரலில் தெரிந்த நிம்மதிக்கு அளவேயில்லை.

அவன் பூங்கொடி கிராமம், ஆச்சி, சேதுபதி, தாமிரா, ஈஸ்வரன் என்று எல்லோர் பற்றியும் சொன்னான். தங்கள் சந்தேகங்களையும், அறிய வந்த உண்மைகளையும் சொன்னான்.

"அருண் எனக்கு அந்த ஆச்சியை ஒரு தடவை பார்க்கணும்னு தோணுது"

"கண்டிப்பாய் போகலாம் காவ்யா. அந்த அமைதியான கிராமம், அந்த அழகான நதி, அன்பான ஆச்சி, அந்த வீட்டையும் நதியையும் சுற்றி இருக்கிற நினைவுகள் எல்லாமே நேரில் போய் பார்த்தால் தான் உனக்குப் புரியும். நான் உன்னைக் கூட்டிகிட்டு வர்றதாய் ஆச்சி கிட்ட ப்ராமிஸ் செய்திருக்கேன்"

ஒரு கணம் காவ்யா மனக்கண்ணில் அங்கு போய் பார்த்தாள். மனம் லேசாகியது. அந்த இரண்டு பேரும் உயிரோடு இருப்பார்களேயானால் ஒரு முறையாவது அவர்களைப் பார்க்க

வேண்டும், பேச வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. அவர்கள் இரண்டு பேரும் மிக வித்தியாசமான நபர்களாக அவளுக்குத் தோன்றியது. அவர்கள் இருவரும் அறிவு பூர்வமாக வாழ்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது அந்த நாவலைப் படித்ததில் இருந்தும், அருண் சொன்னதில் இருந்தும் புரிந்தது. ஆனால் அவர்கள் உலகத்தில் ஒரு படிப்பறிவில்லாத பட்டிக்காட்டுக் கிழவிக்கும் இடம் இருந்திருக்கிறது....

"அருண், உங்க தாத்தா இதில் எந்த விதத்தில் சம்பந்தப்படறார்னு நீ நினைக்கிற?"

"சரியாய் தெரியலை காவ்யா. அம்மா கிட்டே கேட்டால் அவங்களுக்கும் தெரியலை. அந்தக் கதாநாயகன் அல்லது கதாநாயகி குடும்பத்துக்கு என் தாத்தா நெருக்கமானவராய் இருக்கலாம்னு தோணுது"

"அப்படின்னா உங்க அம்மாவுக்குத் தெரிஞ்சிருக்கணுமே"

"தெரியலைங்கிறாங்க. எங்கம்மா அந்த ஈஸ்வரன் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நான் தலையிடறதை ரசிக்கலை. அவங்க பயப்படறதாய் எனக்குத் தோணுது. வாய் விட்டு சொல்லவும் மாட்டேன்கிறாங்க. ஈஸ்வரன்னு சொன்னாலே நிறைய பேருக்கு எமன்னு சொல்ற மாதிரி கேட்குது"

"உங்கப்பாவுக்குத் தெரிஞ்சிருக்கலாம்"

"கேட்க எனக்கு மனசில்லை"

தன் தந்தை மீது அவனுக்கு இருந்த வெறுப்பு அவளுக்குப் புரியாமல் இல்லை. ராஜராஜன் அவ்வளவு சீக்கிரம் யாராலும் நெருங்கி விடக்கூடிய மனிதர் அல்ல. தனிப்பட்ட முறையில் அவரிடம் உரிமை எடுத்துக் கொண்டு யாரும் பேசி விட முடியாது. உணர்ச்சியற்ற பார்வையாலோ, பேசப் பேச அங்கிருந்து நகர்ந்தோ பேசுபவரை கேலிக்கூத்தாக்கி விடுவார். ஆனால் முதலாளி என்ற முறையில் அவரை யாரும் குற்றம் சொல்ல முடியாது. தன்னிடம் வேலை செய்பவர்களிடம் திறமையும், நேர்மையும் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு கை நிறைய சம்பளம் கொடுத்து கௌரவமாக நடத்தினார். அங்கு வேலைக்கு சேர்ந்த பிறகு காவ்யா யாரிடமும் அவர் கத்தியோ, நியாயமற்ற முறையில் நடந்தோ பார்த்ததில்லை. அருணின் தாத்தா செல்வரங்கத்தின் காலத்தில் இருந்து அந்தக் கம்பெனியில் வேலை செய்யும் ஒரு சிலர் மாமனார் காலத்தை விட மருமகன் காலத்தில் சம்பளமும், கௌரவமும் எத்தனையோ அதிகமாக கிடைப்பதாக அவளிடம் சொன்னார்கள். கம்பெனியில் சீனியரான ஒருவர் சொன்னார். "செல்வரங்கம் மாதிரி ஒரு பணத்திமிர் பிடிச்ச ஆளை பார்க்க முடியாது. அடுத்தவங்களை புழு மாதிரி பார்ப்பார். வேலைக்காரங்கன்னா அவர் அகராதியில அடிமைன்னு தான் அர்த்தம். ராஜராஜன் ரொம்பவே டீசண்ட். சோஷியலாய் பழகவோ, வெட்டிப் பேச்சு பேசவோ மாட்டாரே ஒழிய மத்தபடி இவர் கிட்ட வேற தப்பு சொல்ல முடியாது"

காவ்யாவுக்கு அவர் ஒரு புதிராகவே இருந்தார். ஆரம்பத்தில் அவர் தன்னை வேலைக்குச் சேர்த்ததற்கு நன்றி சொல்லப் போன போது முகத்தில் அடித்தாற் போல அவர் ஏதோ 'டிக்டேட்' செய்ய ஆரம்பித்ததிலிருந்து அவள் வேலையைத் தவிர வேறு எதையும் அவரிடம் பேசக்கூடாது என்பதை கற்றுக் கொண்டிருந்தாள். சந்திரன் அங்கு சென்று தான் காவ்யாவின் அப்பா என்று அறிமுகப்படுத்திக் கொண்டு செய்த கலாட்டாவிற்குப் பின் கூட அவர் அதுபற்றி பேசாதது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. தான் அருணின் காதலி என்பதை அவர் அறிவாரா என்பது அவளுக்கு இன்னும் சந்தேகமாக இருந்தது. 'அந்தக் காவ்யா தான் இந்தக் காவ்யா' என்று அவர் அறிவாரா?

திடீரென்று நினைவுக்கு வந்தவளாய் இரண்டு நாட்கள் முன்பு தான் அறிய நேர்ந்த ஒரு விஷயத்தை அருணிடம் தெரிவிக்க ஆர்வமாய் ஆரம்பித்தாள். "அருண், உங்கப்பா பத்தி ஒரு தகவல் சொன்னால் நீ அதிர்ச்சியடைஞ்சுட மாட்டியே"

"எங்கப்பா வாய் விட்டு சிரிச்சாரா?"

காவ்யா வாய் விட்டு சிரித்தாள். "அப்படியாயிருந்தா எங்க கம்பெனியில் பாதி பேருக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கும். அதில்ல, வேற"

"அஞ்சு நிமிஷம் விடாம பேசினாரா"

புன்னகையுடன் சொன்னாள். "அதெல்லாம் இல்லை. வேற"

"தெரியலை. நீ தைரியமாய் சொல்லு. வேற எதுவுமே அதிர்ச்சியடையற சமாச்சாரம் அல்ல"

"உங்கப்பா உன் பேரில் ஒரு டிரஸ்ட் ஆரம்பிச்சிருக்கார். அந்த டிரஸ்ட் மூலமாய் ஒரு அனாதை ஆஸ்ரமம் நடக்குது"

நிஜமாகவே அவனுக்கு தன் காதுகளை நம்ப முடியவில்லை. ஒரு அனாதை ஆஸ்ரமம் நடத்தும் அளவு தன் தந்தைக்கு வியாபாரத்தைத் தவிர வேறு ஒரு எண்ணம் இருந்ததும், அதுவும் தன்னுடைய பெயரில் வைத்து அதை நடத்துவதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எப்போ ஆரம்பிச்சது?"

"பதினாறு வருஷங்களுக்கு முன்னால் ஆரம்பிச்சது. அவர் கையெழுத்து போட்டு அந்த டிரஸ்ட் பேரில் எழுதின செக்கைப் பார்த்தேன். மெள்ள விசாரிச்சேன். அப்ப தான் தெரிஞ்சுச்சு"

அருணுக்கு அந்தத் தகவலை ஜீரணம் செய்ய சிறிது நேரம் தேவைப்பட்டது.

"அதே மாதிரி உங்கப்பா தன் அம்மா பேரில் டிரஸ்ட் ஏற்படுத்தி அது மூலமாய் ஒரு முதியோர் இல்லம் நடத்தறார்"

அவன் சிலையாக சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். அவனை அசைக்க செல் இசைத்தது. எடுத்தான்.

"அருண். அம்பலவாணன் பேசறேன். தாமிரா ஃபோன் வந்தது. நாளை காலை பத்து மணிக்கு ஆஃபிஸ் வர்றதாய் போன் செய்தாள்"

## (36)

"A vow is fixed and unalterable determination to do a thing, when such a determination is related to something noble which can only uplift the man who makes the resolve."

– Mahatma Gandhi

ஒரு ஜடமாகவே வருடக்கணக்கில் இருந்து வந்த பெண்மணியிடம் இந்த ஐந்து நாட்களில் தெரிந்த மாறுதல் மருத்துவ சாஸ்திரங்களுக்கு அப்பாற்பட்டதாகவே அந்த நர்ஸ் நம்பினாள். ஈஸ்வரன் வந்த போது தன் தங்கையிடம் ஏதோ மாறுதல் தெரிவதாக சொன்ன போது அவள் அது அவருக்குத் தோன்றும் பிரமை என்றே நினைத்தாள். அவள் மாறுதலைப் பார்க்க ஆரம்பித்தது டாக்டர் சாம்பசிவத்தின் வரவுக்குப் பின் தான்.

ஈஸ்வரன் வந்து விட்டுப் போனதற்கு மறு நாள் காலை டாக்டர் சாம்பசிவம் தாராவைப் பார்க்க வந்தார். அவர் சுமார் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தான் வருவது வழக்கம். வழக்கத்திற்கு மாறாக அவர் வந்து விட்டுப் போன நான்காவது நாளே வந்தார். மேலும் வழக்கமாக அவர் தாராவை பரிசோதனை செய்யும் போது அந்த நர்ஸ் கூட இருப்பது வழக்கம். ஆனால் அன்று மட்டும் டாக்டர் சாம்பசிவம் அந்த நர்ஸை வெளியே போகச் சொல்லி விட்டார். ஈஸ்வரன் குடும்பத்தினரின் குடும்ப டாக்டரான அவர் ஈஸ்வரனையும், தாமிராவையும் ஒருமையில் அழைத்துப் பேசும் அளவு உரிமையையும், வயதையும் அடைந்திருந்தார். அன்று அவரிடம் வழக்கமான அமைதி இருக்கவில்லை. மாறாக ஒருவித பதட்டம் இருந்ததை நர்ஸ் கவனித்தாள். அறைக்கு வெளியே நர்ஸ் நின்ற போது அவர் மெல்லிய குரலில் தாராவிடம் பேசுவது கேட்டது. ஆனால் என்ன பேசுகிறார் என்பதை நர்ஸால் அறிய முடியவில்லை. இதுவும் அவளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. தாராவிடம் ஓரிரு வார்த்தைகளுக்கு மேல் டாக்டர் பேசி அந்த நர்ஸ் இது வரை கேட்டதில்லை. அவளிடம் அதற்கு மேல் யாராலும் பேசவும் முடியாது, ஈஸ்வரனையும், தாமிராவையும் தவிர. அவர்கள் இருவரும் மட்டும் அவளிடம் இயல்பாக பேசுவார்கள். அவளுடைய மௌனம் அவர்கள் பேச்சை எப்போதும் நிறுத்தியதில்லை. ஆனால் வழக்கத்திற்கு மாறாக சாம்பசிவம் பேசியது அவளுக்குப் பேரதிசயமாக இருந்தது. அரை மணி நேரம் கழித்து அந்த ஏர் கண்டிஷன் அறையிலிருந்து வியர்வையைத் துடைத்துக் கொண்டு சாம்பசிவம் வெளியே வந்தார். நர்ஸைப் பார்த்து தலையசைத்து விட்டு வேகமாக வெளியேறியவர் காரில் மின்னல் வேகத்தில் அங்கிருந்து பறந்து விட்டார்.

நர்ஸ் உள்ளே நுழைந்த போது தாரா கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில் கொந்தளிப்பு தெரிந்தது. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் அவள் நிறைய நேரம் இருந்தாள். பின்பு ஏதோ அதீத சக்தியால் உந்தப்பட்டவள் போல எழுந்து நிற்கவும், எதையாவது பிடித்துக் கொண்டு நடக்கவும், அன்று முழுவதும் முயற்சி செய்தாள். மறுநாள் முழுவதும் பேச முயற்சித்தாள். முதலில் வார்த்தைகள் ஏதோ தெளிவில்லாத ஓசைகளாக வெளி வந்தாலும் சிறிது சிறிதாக அவள் தன் முயற்சியில் வெற்றி பெற்றாள் என்றே சொல்ல வேண்டும்.

அதிர்ச்சியின் உச்ச கட்டத்திற்கே போன நர்ஸ், சாம்பசிவத்திற்கு ஃபோன் செய்தாள். அவள் சொல்லி முடித்த போது, சிறிது நேர அதிர்ச்சி கலந்த மௌனத்திற்கு பிறகு, "தேங்க் காட்" என்றார் அவர்.

"சார், ஈஸ்வரன் சாருக்கு ஃபோன் செய்யட்டுமா?"

"வேண்டாம்" என்று அவசரமாக மறுத்தவர் பிறகு சொன்னார்.

"அடுத்த தடவை வர்றப்ப ஈஸ்வரனுக்கு சர்ப்ரைஸாய் இருக்கட்டும். நான் திங்கட்கிழமை வந்தது ஈஸ்வரனுக்குத் தெரியுமா?"

"இல்லை சார். சொல்லலை...."

"நல்லது. சொல்ல வேண்டாம்" என்றவர் ஃபோனை வைத்து விட்டார். ஈஸ்வரனாகக் கேட்டால் ஒழிய மற்றவர்களும் அதைத் தெரிவிக்க மாட்டார்கள் என்றாலும் இதைக் குறிப்பாக அவர் ஏன் சொல்கிறார் என்று நர்ஸால் ஊகிக்க முடியவில்லை.

நர்ஸைக் குழப்பிய இன்னொரு மனிதன் புதிதாக வந்த தோட்டக்காரன். அவனுக்கு இரவு நேரங்களில் பழைய பாடல்களை சத்தமாக வைத்துக் கேட்கும் பழக்கம் இருந்தது. எதனால் என்று நர்ஸிற்குத் தெரியாவிட்டாலும், அவன் தேர்ந்தெடுத்த பாடல்கள் எல்லாம் தாராவை மிகவும் பாதித்தது போல அவளுக்குத் தோன்றியது. ஈஸ்வரன் வந்து போன அன்றே இரவு அவன் டேப் ரிகார்டரில் இருந்து 'ஆலய மணி' படப்பாடல் வந்தது.

'பொன்னை விரும்பும் பூமியிலே
என்னை விரும்பும் ஒருயிரே!
புதையல் தேடி அலையும் உலகில்
இதயம் தேடும் என்னுயிரே!"

தாராவின் கண்களில் இருந்து தாரை தாரையாக வழிந்த நீரைப் பார்த்தவள் அந்தத் தோட்டக்காரனை அழைத்து மிரட்டினாள்.

"இனிமே இந்தப் பாட்டெல்லாம் சத்தமாய் வச்சு கேக்கக் கூடாது. அது அவங்களை டிஸ்டர்ப் செய்யுது. இன்னொரு தடவை சத்தம் கேட்டா வேலையை விட்டு அனுப்பிடுவோம்". அதன் பிறகு பாட்டு கேட்கவில்லை. ஆனால் வாய் திறந்து பேசாவிட்டாலும் அடிக்கடி ஜன்னலருகே வந்து தாராவை எட்டிப் பார்க்கும் ஒரு விசித்திரப் பழக்கம் அவனுக்கு இருந்தது. ஒரு முறை அவன் பார்க்கும் போது நர்ஸ் பார்த்து விட்டாள். அவன் முகத்தில் தெரிந்த வேதனை அவளை என்னவோ செய்தது. இந்த வேதனையை அவள் ஈஸ்வரன் முகத்தில் தான் இங்கு பார்த்திருக்கிறாள். அந்தத் தோட்டக்காரனுக்கு மிக நெருங்கிய யாராவது இது போன்ற நோயாளியாக இருக்கக் கூடும். இவளைப் பார்க்கும் போது அவனுக்கு அவர்கள் நினைவு வந்திருக்கலாம் என்று நர்ஸ் நினைத்துக் கொண்டாள். சாம்பசிவம் வந்து பேசும் முன் தாரா அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. ஆனால் தாரா உடல்நிலையில் இருந்து தேற ஆரம்பித்தவுடன் வேலையை விட்டு அந்தத் தோட்டக்காரன் போய் விட்டான்.

தாராவின் உடல்நிலை முன்னேற்றம் நர்ஸை மிக சந்தோஷப்படுத்தியது. தாராவின் மன உறுதியும், வைராக்கியமுமே இதை சாதித்தது என்பதை அவள் எடுத்துக் கொண்ட முயற்சிகளைக் கூட இருந்து பார்த்ததால் அவள் அறிவாள். இத்தனை வருடங்களாக வராத இந்த மாற்றம் ஏற்பட இப்போது என்ன நிகழ்ந்து விட்டது என்பது மட்டும் அவளுக்குப் புரியவில்லை.

தாரா பேச ஆரம்பித்த பிறகு அவள் நர்ஸிடம் கேட்ட முதல் கேள்வியே அந்தத் தோட்டக்காரனைப் பற்றித் தான். "அவன் எங்கே காணோம்"

"அந்த ஆள் வேலையை விட்டுப் போயிட்டான்மா. ஏம்மா அவனால் உங்களுக்கு ஏதாவது தொந்திரவாச்சா"

தாரா சோகமாகப் புன்னகைத்தாள். "அவனால் எப்பவுமே யாருக்குமே தொந்திரவானதில்லை"

பல காலமாய்ப் பழகிய ஆள் பற்றிப் பேசுவது போல அவள் பேசியது கேட்ட போது 'இந்தம்மாவுக்கு இன்னும் குணம் ஆகலையோ' என்ற சந்தேகத்தில் நர்ஸ் ஆழ்ந்தாள். ஆனால் அந்த வயதான வேலைக்காரன் சொன்னது போல் அவள் குரல் மிக இனிமையாக இருந்தது.

"அம்மா, நீங்க உங்க அண்ணா கிட்ட பேசறீங்களா? அவர் ரொம்ப சந்தோஷப்படுவார்"

"அண்ணா கிட்ட அப்புறம் பேசறேன். டாக்டர் சாம்பசிவத்துக்கு ஃபோன் போடும்மா. அவர் கிட்ட முதல்ல பேசணும்"

தனக்குப் புரியாத ஏதோ நடக்கிறது என்று நினைத்தவளாக நர்ஸ் டாக்டர் சாம்பசிவத்துக்கு ஃபோன் செய்தாள்.

# (37)

When the time comes to choose from the lessons you have left to learn, you will choose only those that you yourself decide to take on.

–Cheryl Canfield

டாக்டர் சாம்பசிவத்திற்கு எழுபது வயதாகிறது. தன் வாழ்நாளில் அவர் எத்தனையோ மனித துக்கங்களைப் பார்த்திருக்கிறார். அதுவும் தினந்தோறும் அதைக் காண வேண்டிய தொழிலில் இருந்ததால் அவர் மனம் பெருமளவு பாதிக்கப்படாமல் இருக்கப் பழகி விட்டது என்றே சொல்ல வேண்டும். எந்த விஷயங்களை மாற்றுவது நம் கையில் இல்லையோ அந்த விஷயங்களால் பாதிக்கப்படுவது தன் தொழிலை திறம்பட நடத்த உதவாது என்று அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். ஆனால் ஃபோனில் தாரா அழைத்து, இங்கு வந்து அவளிடம் பேசிக் கொண்டிருக்கும் இந்த சில நிமிடங்களில் அவர் மனதை ஏதோ ஒரு துக்கம் பாறையாக அழுத்துவதை உணர்ந்தார். ஆரம்பத்தில் அவள் அழ ஆரம்பித்த போது ஆரம்பித்த அந்தச் சுமை, அவள் அழுவதை நிறுத்தி அவரிடம் கேள்விகள் கேட்க ஆரம்பித்த போது அதிகரித்து, அவள் மௌனமாக ஜன்னல் வழியே வெறித்துப் பார்க்க ஆரம்பித்த போது பல மடங்காக கூடி இருந்தது.

ஈஸ்வரனுக்கு எதிர்மாறாக என்றுமே மென்மையானவளான அவள் உடைந்து போய் ஜடமாக மாறிய போது, அந்த நாட்களில் அவளை குணப்படுத்த அவரும், மற்ற மருத்துவர்களின் குழுவும் செய்த முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல. எல்லாம் தோற்றுப் போன போது ஈஸ்வரன் கோபத்தில் அவர்கள் அனைவரையும் இழிவாகப் பேசிய வார்த்தைகள் அவர் தன் தொழிலில் இன்று வரை கேட்டிராதவை. பொறுக்க முடியாமல் போன போது பொறுமையாக அவர் ஈஸ்வரனிடம் அன்று சொன்னார், "உன் தங்கையாக மனம் வைத்து குணம் ஆகத் தயாரானால் ஒழிய உலகத்தில் எந்த டாக்டரும், எந்த மருந்தும் அவளைக் குணப்படுத்த முடியாது, ஈஸ்வரன். இத்தனை திட்டும் நீ உன் தங்கையைத் திட்டியிருக்கணும்."

அந்தக் கணம் சாம்பசிவத்தின் மனதில் இன்றும் பசுமையாக நினைவிருக்கிறது. ஈஸ்வரன் ஏதோ சொல்ல வாய் திறந்து, வார்த்தைகளை விழுங்கி, கண்கலங்கி ஒரு நிமிடம் மௌனமாக இருந்து விட்டுச் சொன்னார். "எனக்குத் தெரியும் டாக்டர். ஆனால் என்னால் அவளை என் மனசில் கூட திட்ட முடியாது". அந்த வார்த்தைகள், அதை அவர் சொன்ன விதம், முகத்தில் செதுக்கி இருந்த அந்தத் துக்கம் எல்லாம் ஒரு புதிய ஈஸ்வரனை அன்று அவருக்கு அறிமுகப்படுத்தியது. அதற்குப் பிறகும் எத்தனையோ முறை ஈஸ்வரனின் காட்டுமிராண்டித்தனமான அணுகுமுறைகளை அவர் பார்க்க நேர்ந்த போதிலும் அவரால் கோபப்படவோ, வெறுக்கவோ முடியவில்லை.

இன்று மனித மனதின் சக்தியை அவர் கண்கூடாகப் பார்க்கிறார். என்றோ எல்லோரும் நம்பிக்கையை இழந்திருந்தாலும் இன்று தாரா ஒரு அதிசயத்தை நிகழ்த்தி இருக்கிறாள். அவள் தெளிவான சித்தத்துடன் இருப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்பதை அவர் அறிவார். சில நினைவுகளுடனும், சில நிஜங்களுடனும் சித்த சுவாதீனத்துடன் வாழ்வது சுலபமான விஷயமல்ல. ஆனால் மன உறுதியுடன் தீர்மானிக்கும் போது எதுவுமே சாத்தியம் தான்.

அவள் முகத்தில் தெரிந்த வேதனையை அதிக நேரம் பார்க்க முடியாமல் எழுந்தார். "தாரா நான் கிளம்பறேம்மா".

அவள் தலையை அசைத்தாள்.

"தாரா, ஈஸ்வரன் கிட்ட நான் சொன்னதாய் எதுவும் சொல்லிடாதேம்மா"

அதற்கும் தலையசைத்தாள், "தேங்க்ஸ் டாக்டர்"

அவர் போய் விட்டார். அவள் அசையாமல் நிறைய நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். உள்ளே நுழைந்த நர்ஸ் ஒரு கணம் சந்தேகப்பட்டாள். "பழையபடியே ஆயிட்டாங்களோ?". சிலையாக நின்றவளைப் பார்த்து "என்ன?" என்பது போல தாரா பார்த்த பிறகு தான் நர்ஸின் சந்தேகம் தீர்ந்தது.

"தாமிராம்மா வர்றாங்கன்னு போன் வந்ததும்மா. கிளம்பிட்டாங்களாம்"

மகள் வரவு ஒருவித துக்கம் கலந்த மகிழ்ச்சியை அவளிடம் ஏற்படுத்தியது. "அண்ணா....?" என்று கேட்டாள்.

"அவர் வரலையாம்"

"போன் போடும்மா. அண்ணா கிட்ட பேசணும்"

நர்ஸ் போன் செய்த போது ஈஸ்வரன் மத்திய அமைச்சர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார். போனை எடுத்த வேலையாளிடம் ஈஸ்வரனிடம் அவரது தங்கை பேச விரும்புவதாக சொன்ன போது வேலையாள் யாரோ விளையாடுவதாக தான் நினைத்தான். "யாரு ஐயா கிட்டயே விளையாடறது?" என்று கோபப்பட்டு போனை வைத்து விட்டான். பிறகு நர்ஸ் வெள்ளைச்சாமியை அழைத்து விஷயத்தைச் சொல்ல வெள்ளைச்சாமியே நர்ஸை சந்தேகப்பட்டான்.

"நீயே வந்து பார்" என்றவள் அவனை தாராவிடம் அழைத்து வந்தாள்.

தங்களது பழைய வேலைக்காரனைப் பார்த்து "என்ன வெள்ளைச்சாமி? எப்படியிருக்கிறாய்?" என்று தாரா கேட்ட போது வெள்ளைச்சாமி கண்கள் நிரம்பி வார்த்தைகளைத் தேடி நின்றான். பணத்திலும், பாதுகாப்பதிலும் மிக தாராளமாக இருந்த ஈஸ்வரன் என்றுமே அதற்கு மேல் வேலைக்காரர்களிடம் நெருக்கமாக இருந்ததில்லை. பணம், பாதுகாப்புடன் பயமும் சேர்ந்து தான் அவர்கள் எல்லோரையும் ஈஸ்வரனுக்கு விசுவாசமாக இருக்க வைத்தன. ஆனால் தாரா என்றுமே அவர்களுடன் அன்பாக இருந்தாள். அவர்கள் குடும்பம், நலன் பற்றி அக்கறை காட்டுபவளாக இருந்ததால் பழைய வேலைக்காரர்கள் அனைவருக்கும் அவள் மீது எல்லையில்லாத பக்தி இருந்தது என்றே சொல்லலாம்.

"தாராம்மா..." வெள்ளைச்சாமி இன்னும் கனவா நனவா என்று புரியாத நிலையில் நின்றான். அவள் புன்னகைத்தாள். "என்ன வெள்ளைச்சாமி உன் மகன் எப்படியிருக்கான்? இப்பவும் ஆர்க்கெஸ்ட்ராவில் பாடறானா?"

இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும் கூட, தன்னைப் போன்ற ஒரு கடைநிலை ஊழியனின் குடும்பத்தினரை நினைவு வைத்திருக்கும் அவளைப் பார்த்த அவனது கலங்கிய கண்களில் நன்றி தெரிந்தது. "இன்னும் பாடறாம்மா. உங்க தயவுல நாங்க எந்தக் குறையும் இல்லாம இருக்கோம் தாயி" என்றவன்

"எனக்கே சந்தோஷம் தாங்கல, ஐயா என்ன செய்வாரோ" என்று சொல்லி போனை நோக்கி ஓடினான்.

"ஹலோ நான் வெள்ளைச்சாமி பேசறேன். ஐயாவைக் கூப்பிடு. அட மந்திரியாவது, முந்திரியாவது. ஜனாதிபதியே கூட இருந்தாலும் பரவாயில்லை கூப்பிடு. ஐயாவோட தங்கச்சி பேசறாங்கன்னு சொல்லுப்பா"

வேலைக்காரன் வந்து சொன்ன போது ஈஸ்வரன் எரிச்சலுடன் கேட்டார். "என்ன பகல்லயே தண்ணி போட்டுட்டியா?"

"ஐயா முதல்ல நானும் நம்பலீங்க. வெள்ளைச்சாமியே போன் செஞ்சு சொன்னாருங்கய்யா"

மத்திய மந்திரிக்கு தான் பேசப் பேச இது போன்ற குறுக்கீடுகள் வருவது தன் பதவிக்கு இழைக்கப்படும் அவமரியாதைகளாகப் பட்டது. "அப்புறமா பேசச் சொல்லுங்க ஈஸ்வரன்" என்றார்.

பேசுவது தங்கை என்று இன்னும் நம்பாவிட்டாலும் வெள்ளைச்சாமி என்றவுடன், தங்கையைப் பற்றிப் பேச அவன் போன் செய்ததை இந்த வேலையாள் இப்படிப் புரிந்து கொண்டு இருக்கிறான் என்பதாக எடுத்துக் கொண்ட ஈஸ்வரன், மந்திரியை நோக்கி, "நீ வேணும்னா அப்புறம் வந்து பேசு", என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

முகத்தில் அடித்தாற் போல பேசி விட்டுப் போகும் ஈஸ்வரனை கையாலாகாத கோபத்துடன் மந்திரி பார்த்தார். 'அரசியலில் தாக்குப் பிடிக்க இப்படிப்பட்ட காண்டாமிருகங்களை எல்லாம் சமாளிக்க வேண்டி இருக்கிறது'. மறுகணம் கோபத்தை உதறித் தள்ளி ஒன்றுமே நடக்காதது போல் சுற்றும் முற்றும் கம்பீரமாகப் பார்த்தார்.

போனை எடுத்த ஈஸ்வரன் "என்ன வெள்ளைச்சாமி?" என்று கேட்டார்.

"அண்ணா...." தாராவின் குரல் கேட்டது.

# (38)

The energy of love is potentially more powerful than any bomb and more subtle than any herb. We just have not yet learned how to harness this most basic and pure energy. When we do, healing at all levels, individual and planetary, can occur.

–Brian Weiss

ஒரு நிமிடம் ஈஸ்வரன் ஒன்றும் பேசவில்லை. அவரால் தன் காதுகளை நம்ப முடியவில்லை. மனப்பிரமை என்றே தோன்றியது.

"அண்ணா...." அவள் மறுபடி அழைத்தாள்.

உடம்பில் ஒவ்வொரு அணுவிலும் மின்சாரத்தை ஈஸ்வரன் உணர்ந்தார். இரும்பினால் உருவாக்கப்பட்ட மனிதன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட அந்த மனிதர் அடுத்த கணம் குழந்தை போலானார். "தாரா....." அவர் குரல் தழுதழுத்தது. கண்களில் இருந்து அருவியாய் நீர் வழிய அவர் உடைந்து போனார். அவர் இருந்த அறையில் இருந்த இரு வேலையாட்கள் மாபெரும் அதிசயத்தைப் பார்ப்பது போல் அவரைப் பார்த்தார்கள். இது இத்தனை வருடங்களாக அவர்கள் அறியாத ஆள்.

"நான் சாகறதுக்கு முன்னால் நீ அண்ணான்னு கூப்பிட்டுக் கேட்க முடியும்கிற நம்பிக்கையை இந்த அண்ணன் எப்பவோ இழந்துட்டேம்மா. ஆனா இனி எனக்கு சாகக் கூட வருத்தம் இல்லை தாரா. அண்ணன் நிம்மதியா போயிடுவேன்"

"சாவைப் பத்தி ஏன் பேசறேண்ணா. தாமிரா இங்க வந்துட்டு இருக்கறதா சொன்னாங்க. அவ கூடவே நானும் வீட்டுக்கு வந்துடறேன் அண்ணா. வந்துட்டு பேசறேன்."

போனை வைத்து விட்டார் ஈஸ்வரன். தாமிரா பெயர் கேட்டவுடன் அவர் மூளை மின்னல் வேகத்தில் வேலை செய்தது. உடனடியாக தாமிராவிடம் செல் போனில் பேசினார்.

"என்ன மாமா?"

"தாமிரா நீ எங்கே இருக்கே?"

"இப்ப தான் அம்மாவைப் பார்க்க பங்களாவுக்குள்ளே என் கார் நுழைஞ்சுது. என்ன மாமா?"

"உன் அம்மா கிட்ட இப்ப தான் பேசினேன் தாமிரா"

தாமிராவுக்கு தன் காதுகளை நம்ப முடியவில்லை. "என்ன மாமா சொல்றீங்க?"

"உன் அம்மா கொஞ்சம் குணம் அடைஞ்சுட்ட மாதிரி தெரியுது. நல்லாவே பேசினாம்மா"

"வாவ்" என்று கத்தினாள் தாமிரா. "மாமா இது கிரேட் நியூஸ்"

"ஆமா தாமிரா. என் வாழ்க்கைல நான் இந்த அளவுக்கு சந்தோஷமாய் இருந்த நாள் இருந்ததாய் எனக்கு ஞாபகமில்லை. ஆனா இந்த சந்தோஷம் நிலைக்கிறது உன் கைலதாம்மா இருக்கு"

"என்ன மாமா சொல்றீங்க?"

"உங்கப்பா பத்தி உங்கம்மா கிட்ட அதிகம் பேசிடாதேம்மா. திரும்ப அவள் பழையபடி ஆயிடுவாளோன்னு எனக்கு பயமாய் இருக்கும்மா"

"கண்டிப்பாய் பேச மாட்டேன் மாமா, எனக்கும் கொஞ்சம் அறிவிருக்கு"

கோபமாய் செல்லை ஆப் செய்தாள் தாமிரா. மாமா சொன்னதில் இருந்த உண்மை அவளுக்கு தெரிந்தே இருந்தாலும், கண்டிப்பாய் அம்மாவிடம் அவள் அப்பாவைப் பற்றிப் பேசப் போவதில்லை என்றாலும் 'பிறகு யார் கிட்ட தான் எங்கப்பாவைப் பத்தி பேசறது' என்று மாமாவிடம் கத்தத் தோன்றியது. ஆனால் இத்தனை காலம் கழித்து அம்மா திரும்பக் கிடைத்த சந்தோஷம் ஒரு நிமிடத்தில் எல்லாவற்றையும் அவளை மறக்க வைத்தது. சுயநினைவுடன் இருக்கும் போது அம்மா எப்படியிருப்பாள் என்று எண்ணியபடியே காரிலிருந்து இறங்கினாள்.

அம்மா வாசலில் அவளுக்காகக் காத்திருந்தாள். கண்களில் நீர் நிறைய அவளைப் பார்த்துப் புன்னகை செய்தாள். அம்மா மிக அழகாக இருந்தாள். ஓரிரு நரைமுடிகள் அங்கங்கே தெரிந்தாலும் அம்மா இன்னும் இளமையாகவே தெரிந்தாள். இன்னும் அந்த நெற்றியில் தெரிந்த குங்குமப் பொட்டு மட்டும் தாமிராவை அதிர வைத்தது. அம்மா ஓரளவு தான் குணமாகியிருக்கிறாளோ? அப்பா மரணம் அவள் மனதில் இன்னும் பதிவாகவில்லையோ? மாமா பிரத்தியேகமாக அப்பா பற்றி பேச வேண்டாம் என்றது இதற்காகத் தானோ?

"தாமிரா"

ஓடிப் போய் தாயைக் கட்டியணைத்துக் கொண்ட தாமிராவுக்குள் ஏற்பட்ட ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. பிறந்ததிலிருந்து தனக்குக் கிடைக்காத அந்தத் தாய்ப் பாசம் இப்போது கிடைக்கும் போது இது ஒன்றே போதும் என்று தோன்றியது.

அதே நேரத்தில் ஈஸ்வரன் தன் சந்தோஷத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். தன் செகரட்டரியை அழைத்தார். "நம்ம கிட்ட எத்தனை பேர் வேலைக்கு இருக்காங்க"

செகரட்டரிக்கு எப்படி பதில் சொல்வதென்று தெரியவில்லை. தமிழ்நாட்டில் பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு அவ்வப்போது வேலை தரும் இந்த மனிதர் பொதுவாக இப்படி கேட்டால்.........?

"அட மாசா மாசம் நாம் கொடுக்கிற பணத்தால் குடும்பம் நடத்தறவங்க எவ்வளவு பேருன்னு சொல்லுய்யா?"

தலையை சொறிந்து கொண்டே "ஐயா, ரெளடிகளையும் சேர்த்துங்களாய்யா?"

"ஊம். சேர்த்துக்கோ"

"சுமார் நூறு பேர் இருப்பாங்கய்யா"

"ஆளுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடு. என் தங்கச்சி இந்த வீட்டுல காலடி எடுத்து வைக்கிற அந்த நேரம் அவங்க கையில காசு இருக்கணும். அந்த நர்ஸையும் சேர்த்துக்கோ"

கோடிக்கணக்கில் காசிருந்தாலும் ஒருவனுக்காவது மனதார அதிகம் காசு தர மனம் வராத மனிதன் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அந்த செகரட்டரியை வாயைப் பிளக்க வைத்தது. "ஐயா ஆளுக்கொரு லட்சம்னா ஒரு கோடி ரூபாய் ஆகும்......"

"ஆளுக்குப் பத்து லட்சம் கொடுக்கக்கூட நான் தயார் தான்யா. ஆனா அளவுக்கு அதிகமாய் கிடைக்கிற காசோட அருமை யாருக்கும் தெரியாதுய்யா. அதான் ஒரு லட்சம் போதும்னு முடிவு செஞ்சேன். பரவாயில்லை கொடுய்யா. என் தங்கச்சி குணமான சந்தோஷத்தை என் வேலைக்காரங்க அத்தனை பேரும் கொண்டாடட்டும்யா"

"ஐயா அதுல ......" செகரட்டரி தலையை சொறிந்தார்.

"உன்னையும் சேர்த்துதான்யா"

சந்தோஷமாய் அங்கிருந்து கிளம்பிய செகரட்டரி தான் இன்று யார் முகத்தில் முழித்தோம் என்று யோசித்தபடி நகர்ந்தார். போன வேகத்தில் வந்தார். "தாமிராம்மாவுக்கு போன்".

"யாரு?"

"அருண். உண்மை பத்திரிக்கையிலிருந்து..."

# (39)

"Wishes are like seeds – few ever develop into something."

– Michael Garofalo

ஈஸ்வரனின் மனதில் இருந்த சந்தோஷம் எல்லாம் ஒரு கணம் காணாமல் போயிற்று. அருண் இந்த மாதிரி முக்கிய கட்டங்களில் அவர்கள் வாழ்க்கையில் புகுவது யதேச்சையாக நடக்கின்ற ஒன்றாக அவருக்குத் தோன்றவில்லை. விதி தங்கள் வாழ்க்கையில் அவனை ஆழ்ந்த அர்த்தத்துடனேயே உள்ளே புகுத்துவதாக அவருக்குத் தோன்றியது. தாரா குணமடைவதற்கு சற்று முன்பு வரை அவனைப் பெரிய பிரச்சனையாக நினைப்பதை நிறுத்தி இருந்தார். ஒரு விதத்தில் அவன் உபயோகமாகக் கூட இருக்கலாம் என்கிற எண்ணம் அவருள் உருவாக ஆரம்பித்திருந்தது. ஆனால் இப்போதைய தாராவின் நிலை பழையபடி கேள்விக்குறியை எழுப்பி விட்டது.

அருணை ஒதுக்குவதும் அவ்வளவு சுலபமாக முடிகிற காரியம் அல்ல. அவன் அந்தக் கால அம்பலவாணன் அல்ல. தாரா முழுநலத்துடன் திரும்பி வந்து விட்ட இந்த சந்தர்ப்பத்தில் அவனைத் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை உணர்ந்தே இருந்தார். இந்தப் பிரச்சனையை இன்னும் பூதாகரமாக மாற்ற தாமிரா வேறு இங்கே வந்து சேர்ந்திருக்கிறாள்.

"ஐயா அந்தப் பையனுக்கு என்ன சொல்றது?"

"அவள் வெளியே போயிருக்கிறாள். பிசியாய் இருக்கிறாள்னு மட்டும் சொல்லு"

அவருக்கு அருணைக் காட்டிலும் அதிகக் கோபம் மாதுரி மீது வந்தது. 'அந்தப் பொம்பளைக்கு அறிவே கிடையாது. ஏதாவது சொல்லி மகனை திசை திருப்பறதை விட்டு வேடிக்கை பார்க்கிற அளவு முட்டாளாக இருக்கிறாள். அப்பன் என்னடான்னா மகன் இப்படி எல்லாம் பழைய குப்பையை கிளறுவது தெரியாமல் ஏதோ ஒரு உலகத்தில் இருக்கிறான். அந்த அறிவு கெட்ட நரசிம்மராஜூலு வேற தாமிராவை இதில் இழுத்துருக்கான். அந்த ஆளைப் போட்டுத் தள்ளினாலும் தப்பில்லை. வயசாச்சுன்னா பாடம் நடத்திகிட்டு ஒதுங்கி இருக்கத் தெரியாத அதிகப்பிரசங்கி. யாரை சொல்லியும் தப்பில்லை. எல்லாம் அந்த சேதுபதி நாயால வந்தது. கதை எழுதறானாம், கதை. எவன் கதையை எவன் எழுதறது? எல்லா லூசுகளும் சேர்ந்து நம்ம வாழ்க்கைல வந்து விளையாடுதுங்க'

இப்படி மாதுரி தொடங்கி சேதுபதி வரை அவர் அர்ச்சனை செய்து கொண்டிருந்த அதே நேரத்தில் அவரது மற்ற பங்களாவில் தாராவும் தாமிராவும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தாயும் மகளும் குழம்பினாலும் தாமிரா தாயின் உடல்நலம் குறித்து சுருக்கமாக விசாரித்து விட்டு பிறகு தன்னைப் பற்றியும் தன் படிப்பைப் பற்றியும் அமெரிக்காவில் தன் ஆராய்ச்சியைப் பற்றியும் அம்மாவிடம் சொல்ல ஆரம்பித்திருந்தாள். அவளது ஆராய்ச்சியைப் பற்றி அவள் பாமரனுக்கும் புரியும்படி எளிமையான வார்த்தைகளில் உற்சாகமாக விவரித்த போது தாராவின் முகத்தில் சின்னதாய் ஒரு புன்னகை அரும்பியது.

"என்னம்மா ஸ்மைல் செய்யறே?"

"நீ பேசறது உங்கப்பா மாதிரியே இருக்கு. அவரும் இப்படித்தான். எத்தனை பெரிய விஷயமானாலும் அதை ரொம்பவே சிம்பிளாய் சொல்வார்"

ஒரு நிமிடம் தாயை தாமிரா கூர்ந்து பார்த்தாள். மாமாவின் எச்சரிக்கை மட்டும் இல்லாதிருந்தால் பேச்சை அப்படியே தன் தந்தை பற்றித் திருப்பி இருப்பாள். ஆனால் அது ஆபத்து என்பதால் பழையபடி தன் ஆராய்ச்சி பற்றியே சொன்னாள். ஆனால் அவள் கண்கள் தாயின் முகத்தில் லேசாகத் தெரிந்த வலியையும் துக்கத்தையும் கவனிக்கத் தவறவில்லை. அது மட்டும் அவள் முகத்தில் ஆரம்பத்தில் இருந்தே தெரிந்தது. இன்னும் அம்மா மனதில் அப்பாவைப் பற்றிய துக்கம்தான் பிரதானமாய் இருக்கிறதோ?

"அம்மா நீ என்ன யோசிக்கிறே?"

"நீ சின்ன வயசுல எப்படி இருந்தாய் எப்படி பேசினாய்ங்கிறதெல்லாம் அங்கொண்ணும், இங்கொண்ணும் ஞாபகம் வருது தாமிரா. ஒரு தாய்க்கு அதெல்லாம் ஒரு பொக்கிஷம் மாதிரி மனசெல்லாம் நிரம்பி இருக்கணும். நிறைய இருக்கணும். ஆனா எனக்கு ஏதோ ஒரு சிலதுதான் ஞாபகம் வருது. நான் எவ்வளவு மிஸ் பண்ணிட்டேன்னு நினைச்சுப் பார்க்கறேன். மனசுக்குக் கஷ்டமாய் இருக்கு தாமிரா"

ஒரு கணம் தாயை வெறித்துப் பார்த்து விட்டு கண்கள் கலங்க அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள் தாமிரா.

மகள் தலையைக் கோதி விட்டுக் கொண்டே தாரா குரல் கரகரக்க சொன்னாள். "என் சின்ன வயசுலயே எங்கம்மா, அப்பா ரெண்டு பேரும் இறந்துட்டாங்க தாமிரா. அண்ணாதான் எனக்கு எல்லாமாய் இருந்தான். ஆனா நான் உயிரோடு இருந்தும் கூட உனக்கு இல்லாத மாதிரி ஆயிடுச்சேன்னு நினைக்கிறப்ப வேதனையாய் இருக்கு. என்னை மன்னிச்சுடும்மா"

"நீ எனக்கு இப்ப கிடைச்சிட்டேயில்லம்மா. அது போதும்"

உண்மையிலேயே தாமிராவின் மனம் நிறைந்திருந்தது. அம்மா முகத்தில் தெரிந்த துக்கம் அப்பாவுக்காக என்று நினைத்தவளுக்கு மகளின் குழந்தைப் பருவத்தை ரசிக்க முடியாததையும், தாயாக தன் கடமையைச் செய்யாததையும் நினைத்து அம்மா வருத்தப்படுகிறாள் என்று உணர்ந்த போது நெகிழ்ச்சியாக இருந்தது.

தாமிராவின் செல் இசைத்தது. ஈஸ்வரன்தான் பேசினார். "என்ன தாமிரா நீங்க ரெண்டு பேரும் கிளம்பி வர்றீங்களா. இல்லை நானே வரட்டுமா. எனக்கு அவளைப் பார்க்காம இருப்பு கொள்ளலை"

"கிளம்பிட்டோம் மாமா" என்ற தாமிரா எழுந்தாள். "போகலாம்மா, உன் அண்ணன் உன்னைப் பார்க்க அவசரப்படறார்"

புன்னகையுடன் தாரா எழுந்தாள். காரில் போகும் போது தாமிரா சொன்னாள். "இப்படியொரு அண்ணன் கிடைக்க நீ நிறையவே புண்ணியம் செஞ்சிருக்கம்மா"

ஆமென்று தலையை ஆட்டிய தாரா கண்களை மூடி அண்ணாவைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தாள். அப்படி கண்களை மூடாமல் இருந்திருந்தால் எதிரே வந்த காரில் இருந்த மாதுரியை பார்த்திருப்பாள். மாதுரி தன் கண்களை நம்ப முடியாமல் தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். 'தாரா குணமடைந்து விட்டாளா?'

கூட இருந்தது தாமிராதான் என்பதை எளிதில் ஊகிக்க முடிந்தது. படபடக்கும் இதயத்தை நெஞ்சில் கை வைத்து சற்று சமாதானப்படுத்த மாதுரி முயற்சி செய்தாள். ஆனால் படபடப்பு அதிகமாகிக் கொண்டு போனதே ஒழிய குறையவில்லை. 'இத்தனை காலம் இருக்கும் இடமே தெரியாமல் இருந்த தாரா இப்போது அவள் போகும் வழியில் மறுபடி குறுக்கிடுகிறாள். என்றென்றும் முடிந்து விட்டது என்று அவள் நினைத்த ஒரு பயங்கர பழைய கதை இரண்டாம் பாகமாக மறுபடி ஆரம்பமாகிறது.'

# (39)

சிற்றெறும்பைச் சவமாக்க
மேல் விழுந்தது
கருங்கல் அல்ல,
கற்கண்டு தான் என்றாலும்
சாவுக்குச் சுவையா கூடி விடும்?
– வெங்கடேச ரவி

சேதுபதியைப் பார்க்கையில் ரங்காச்சாரியின் இதயத்தில் இரத்தம் கசிந்தது. நீண்ட ஆயுளின் நிஜமான பிரச்சனையே அதிக துக்கங்களையும் காண நேர்வது தான். ஒரு மகத்தான எழுத்தாளனாக போற்றப்பட்டவன் தோட்டக்காரனாக மாறி தோற்றத்திலும் அப்படியே இருந்தது அவருக்குச் சகிக்க முடியாததாக இருந்தது.

"சேது நீ ஏன் உன்னையே இப்படி தண்டிச்சுக்கறேன்னு எனக்குத் தெரியலை"

சேதுபதி பதில் சொல்லவில்லை. ரங்காச்சாரியின் மேசையில் இருந்த 'அவன்' படத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். எண்ணங்கள் தாமிரபரணி நதிக்கரையோரம் செல்ல சேதுபதியின் கண்கள் ஈரமாயின. தன் ஆசிரியரை அவர் வேறொரு கேள்வி கேட்டார். "நீங்க ஏன் சார் இந்த ஃபோட்டோவை தினமும் பார்க்கிற மாதிரி இங்கேயே வச்சுருக்கீங்க. பார்க்கறப்பக் கஷ்டமாயில்லையா"

"கஷ்டமானாலும் அந்தக் கஷ்டத்திலும் ஒரு சந்தோஷம் இருக்கு சேது. பார்க்கறப்ப அவன் பக்கத்தில் இருக்கற மாதிரி ஒரு தோணல்.", என்ற ரங்காச்சாரி சோகமாகப் புன்னகைத்தார். "நீ நான் கேட்டதுக்கு பதில் சொல்லலையே"

"பேனா பிடிக்கப் பிடிக்கலை சார். பேனா பிடிக்காமல் செய்யக்கூடிய வேலை இதைத் தவிர வேற எனக்குத் தெரியலை"

ரங்காச்சாரி பதிலுக்கு ஒன்றும் சொல்லவில்லை. சிறிது நேர மௌனத்திற்குப் பின்னால் சொன்னார். "ஆனால் நீ ஈஸ்வரன் பங்களாவிலேயே போய் வேலை பார்த்தது முட்டாள்தனம் சேது. அதுவும் தாரா இருந்த இடத்தில் நீ வேலை செய்தது அவனுக்குத் தெரிந்திருந்தால் உன்னை வெட்டிப் புதைச்சிருப்பான். சுபாவத்திலேயே அவன் முரடன். அதுவும் தாரா விஷயத்தில் அவன் எது செய்யவும் முன்பின் யோசிக்க மாட்டான். அருண் துப்பறியக் கிளம்பினப்பவே என்னைக் கூப்பிட்டு உன்னைக் கண்டபடி திட்டினான்....."

"எனக்கு அவளை ஒரு தடவை பார்க்கணும் போல் இருந்துச்சு. அவங்க தோட்டக்காரன் லீவில் போனது சாதகமாச்சு. அதான்..."

"எல்லாத்தையும் பார்க்க சகிக்காமல் தானே இங்கிருந்து போனாய். மறுபடி ஏன்....?"

"ஒட்டகம் பாலைவனத்துல முள் செடிகளை சாப்பிடறப்ப பல சமயம் முள் குத்தி ரத்தம் வர்றதுண்டு. ஆனாலும் ஒட்டகத்தால அந்த முள் செடிகளை சாப்பிடாமல் இருக்க முடியறதில்லை. எனக்கும் அப்படித் தான். இதெல்லாம் எத்தனை துக்கத்தைத் தந்தாலும் திரும்பவும் அவங்களைப் பார்க்கணும், அந்த இடங்களுக்குப் போய் அந்த நினைவுகளை அசை போடணும்னு சில நாளாவே ஒரு உந்துதல்.... முதல்ல எல்லாம் அப்படி இல்லை. இப்ப தான் அப்படி.... ஏன்னே தெரியலை....அப்படிப் போய் தான் அருண் கண்ல பட்டேன். தப்பிச்சு வர்றதுக்குள்ள பெரும்பாடு ஆயிடுச்சு"

"எல்லாம் நீ அந்த விஞ்ஞானக் கட்டுரையை விட்டுட்டுப் போனதால் வந்த பிரச்சனை. அந்தக் கட்டுரையை வச்சு தான் அந்தக் கதை கற்பனை இல்லை நிஜம்கிற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கணும். அது சரி அந்தக் கட்டுரை உன் கையில் எப்படி வந்தது சேது?"

"அவன் எல்லாத்தையும் விட்டுட்டுப் போயிட்டான். எனக்கு விஞ்ஞானம் தெரியாட்டியும் அவனைத் தெரியுமே சார். அவன் எழுதினதெல்லாம் சாதாரணமாயிருக்காதுன்னும் தெரியும். அதையெல்லாம் ஒரு குப்பை மாதிரி விட்டுட்டுப் போக எனக்கு மனசு வரலை. அவன் எழுதின எல்லாத்தையும் அள்ளி எடுத்துகிட்டேன். அதுல ஒண்ணு அந்த கௌடா எஸ்டேட்டுல எப்படியோ தங்கிடுச்சு"

ரங்காச்சாரி தனக்குள் சில நாட்களாகவே இருந்த பெருத்த சந்தேகத்தைச் சொன்னார். "எப்படி ஈஸ்வரன் அருணை ஆச்சியை சந்திக்க விட்டான்னே எனக்கு இன்னமும் புரியலை சேது. எனக்குத் தெரிஞ்ச ஈஸ்வரன் அருண் அங்கே போறதுக்குள்ள ஆச்சியை அங்கிருந்து அப்புறப்படுத்தியிருக்கணும். ஏன் அவன் அப்படி செய்யலை?"

சேதுபதி பதில் சொல்லவில்லை. ஈஸ்வரன் மனதில் என்ன ஓடுகிறது என்று யாரால் சொல்ல முடியும்?

"சேது, ஆச்சி என்ன சொல்றாங்க?"

"சாகறதுக்கு முன்னால் அவங்க ரெண்டு பேரையும் ஒரு தடவை பார்க்கணும்னு ஆசைப்படறாங்க"

இனம் புரியாத துக்கம் ரங்காச்சாரியின் தொண்டையை அடைத்தது. அவருக்கும் அதே ஆசை இருக்கிறது. ஆசை ஜெயிக்குமா, மரணம் ஜெயிக்குமா என்று தெரியவில்லை.

"ஆச்சிகிட்ட பேசினதுக்கப்புறம் எனக்கும் அப்படி தோணிச்சு சார். அது தான் தாரா இருந்த பங்களாவுக்கு வேலைக்குப் போனேன். அப்படிப் போனதால தான் தாரா குணமானதையும் கண்ணால் பார்க்க முடிஞ்சது"

ரங்காச்சாரி இன்னமும் நம்ப முடியாமல் கேட்டார். "தாரா குணமடைஞ்சுட்டதை நீ கண்ணால பார்த்தியா"

"இப்ப தான் பார்த்துட்டு வர்றேன். அவளும் அவள் மகளும் காரில் ஈஸ்வரன் வீட்டுக்குப் போறதை வெளியே இருந்து பார்த்தேன்"

"ஆனா நீ அங்கே வேலை செஞ்சுகிட்டிருந்தப்ப அவள் குணமாகலை....?"

"இல்லை. நான் எத்தனையோ நாள் ஜன்னல் வழியா அவகிட்ட பேசியிருக்கேன். அவள் என்னை அடையாளம் தெரிஞ்சுகிட்ட மாதிரி தோணிச்சு. என்னைப் பார்த்தவுடனேயே அந்தப் பழைய நினைவுகள் பாதிச்ச மாதிரி ஒரு சோகம் அவள் முகத்தில் நான் பார்த்தேன். நான் சத்தமாய் வச்சுக் கேட்ட அந்தப் பழைய பாட்டுகளும் அவளை சங்கடப்படுத்தினதா அந்த நர்ஸ் சொன்னா. அப்பவும் அவள் குணம் ஆகலை. ஈஸ்வரன் வந்து பேசிட்டுப் போனான். அப்பவும் அவள் சகஜ நிலைமைக்கு வரலை...."

"அப்படின்னா திடீர்னு எப்படி அவள் குணமானாள்?"

"அந்த வேலைக்காரன் வெள்ளைச்சாமியைக் கேட்டேன். டாக்டர் சதாசிவம் வந்து அவகிட்ட பேசிட்டுப் போனதுக்கப்புறம் தான் இந்த மாற்றம்னு சொன்னான்"

"ஆனா சதாசிவம் மாசத்துக்கு ரெண்டு தடவை வந்து அவளைப் பார்க்கக்கூடிய ஆள். இத்தனை வருஷமாய் இல்லாமல் இந்த தடவை அவளிடம் பேசி அவளை குணமாக்கியிருக்கிறார்னா, அவர் அவள் கிட்ட என்ன சொல்லியிருப்பார் சேது?"

"அவள் ஏன் அப்படியானாள்னு நமக்குத் தெரியும் சார். அந்தக் காரணம் இன்னும் அப்படியே தான் இருக்கு. அவளைக் குணமாக்க அந்தக் காரணம் 'இல்லாமப்' போயிடலை. ஆனா அதையும் விட பெரிய விஷயம் ஏதோ நடந்திருக்குன்னு தோணுது சார். அது தான் அவளை உலுக்கி நிஜ உலகத்துக்கு வரவழைச்சிருக்கணும். அப்படியென்ன அவர் சொல்லியிருப்பார்னு தெரியலையே சார்"

இந்த ஒரு கேள்வி அந்த இருவரையும் நிறையவே யோசிக்க வைத்தது. அதற்கு விடை அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

# (40)

Life's greatest happiness is to be convinced we are loved.

–Victor Hugo

ஈஸ்வரனுக்குத் தன் தங்கை நேரில் வரும் வரை அவள் குணமாகி விட்டதை நம்ப முடியாமல் தானிருந்தது. யாரோ ஏதோ செப்படி வித்தை செய்து தன்னிடம் விளையாடுவது போன்ற பிரமையுடன் இருந்தார். தாமிராவும், அவளும் வரும் வரை இருப்புக் கொள்ளாமல் தவித்தார். அவர்களுடைய காரிலிருந்து தாரா இறங்கிய பிறகு தான் உண்மை உறைக்க ஆரம்பித்தது. அவள் அவரைப் பார்த்து லேசாகப் புன்னகைத்து "அண்ணா" என்றழைத்த போது அவரையும் அறியாமல் கண்களில் இருந்து அருவியாக கண்ணீர் வழிந்தது. எத்தனை வருடங்களாக இதைக் கேட்க அவர் காத்திருக்கிறார்.

அந்த இடத்தில் இருந்த ஒரு சில வேலைக்காரர்கள் ஏதோ உலக அதிசயத்தைப் பார்ப்பது போலப் பார்த்தார்கள். ஈஸ்வரன் என்ற இரும்பு மனிதனுக்கு இளகிய மனம் ஒன்று இருக்கக் கூடும் என்று அவர்கள் இது வரை எண்ணிப் பார்த்திருக்கவில்லை. அவர்கள் முகத்தில் தெரிந்த ஆச்சரியத்தைக் கவனிக்கும் நிலையில் ஈஸ்வரன் இல்லை. 'அவர் தங்கை குணமடைந்து விட்டாள். அவருக்கு அது போதும்'. அந்தக் கணம் அவர் ஒரு சிறுவனைப் போல் ஆனார். எந்த ஒரு நிலையிலும் பரபரப்புக்கு ஆளாகாத, அலட்டிக் கொள்ளாத அந்த மனிதர் ஓடி வந்து தங்கை கையைப் பிடித்துக் கொண்டார். "தாரா....தாராம்மா....." அவரால் மேற்கொண்டு பேச முடியவில்லை. பொங்கி வரும் கண்ணீரையும் அடக்க முடியவில்லை.

"அடாடா, பாசமலர் சிவாஜியும் சாவித்திரியும் தான். சும்மா படம் காண்பிக்காதீங்க. உள்ளே போகலாம்" என்று தாமிரா கிண்டல் அடித்தது அவர்கள் இருவர் காதிலும் விழுந்தது போலத் தெரியவில்லை.

ஈரமான கண்களுடன் தாரா சொன்னாள். "நீ ரொம்பவே இளைச்சுட்டேண்ணா"

இது போன்ற வார்த்தைகள் அவரிடம் வேறு யாராலும் சொல்லப் பட்டதில்லை. அவர் நலத்தைப் பற்றி யாருமே இந்த அளவுக்குக் கவலைப்பட்டதில்லை. தாமிரா அவர் நலத்தில் அக்கறை காட்டினாள் என்பது உண்மையானாலும் அவர் தங்கை அளவுக்கு – பார்த்தவுடன் துடித்துப் போகும் அளவுக்கு ஆழமான பாசமாய் இருந்ததில்லை. அவரது தங்கை வந்த பிறகு தான் வாழ்க்கை முழுமை அடைந்தது போல் அவர் உணர்ந்தார்.

"சரி அம்மா நீ உள்ளே போய் ரெஸ்ட் எடுத்துக்கோ" என்று தாமிரா சொன்ன பின் தான் தங்கையின் முகத்தில் தெரிந்த களைப்பை ஈஸ்வரன் கவனித்தார். "ஆமாம்மா நீ போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ. அப்புறமாய்ப் பேசலாம்", என்று தங்கையை உள்ளே அழைத்துக் கொண்டு போனார். தங்கை அவளது அறையில் களைப்பு மிகுதியால் கண்களை மூடிக் கொண்டு சாய்ந்த பிறகு வெளியே வந்து மருமகளிடம் ஈஸ்வரன் சொன்னார். "இருபத்தஞ்சு வருஷமாய் பேசாமல், எங்கேயும் போகாமல் இருந்துட்டு திடீர்னு அந்த உடம்புக்கு வேலை கொடுத்தா அது அட்ஜஸ்ட் ஆகணுமில்லையா. பாவம் கொஞ்சம் அவ ரெஸ்ட் எடுத்துக்கட்டும்"

தங்கையைப் பற்றி பேசும் போதெல்லாம் மாமா மாறி விடுவதை எண்ணி தாமிரா வியந்தாள். அந்த அலட்டிக் கொள்ளாத அலட்சியம், எப்போதும் அவரை விட்டு அகலாத கர்வம், கவனம் இதெல்லாம் இல்லாமல் ஈஸ்வரன் இருக்கும் சந்தர்ப்பங்கள் தங்கை சம்பந்தப்படும் போது தான்.

"அவள் குணமாயிட்டா. எனக்கு அது போதும். இனி நான் செத்தாலும் கவலை இல்லை. நிம்மதியாய் சாவேன்"– ஈஸ்வரன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

தாமிரா பொறுமையாகச் சொன்னாள். "மாமா அம்மா இன்னும் முழுசா குணமாயிடலை. அவங்க கழுத்தில் இருக்கிற தாலியும், நெத்தியில் இருக்கிற குங்குமத்தையும் பார்த்தீங்க இல்லையா. அம்மாக்கு இன்னும் அப்பா செத்தது மனசில் பதியலை. அதனால சாகறதை இன்னும் கொஞ்ச நாளைக்குத் தள்ளி வைங்க"

ஈஸ்வரன் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றார். மறு கணம் பழைய மனிதரானார். ஏதோ கனவில் இருந்து விழித்து நிஜத்திற்கு வந்தவர் போல மருமகளைப் பார்த்தார்.

"தாமிரா, தயவு செஞ்சு அவ கிட்ட உங்கப்பாவைப் பத்தி மாத்திரம் பேசிடாதேம்மா. அவ மனசில் என்ன நம்பிக்கை இருக்குதோ அது அப்படியே இருந்துட்டுப் போகட்டும். அவர் பத்தின பேச்சே அவளை எப்படி பாதிக்கும்னு தெரியலை"

"மாமா நீங்க பேசறது உங்களுக்கே நியாயமாய்த் தெரியுதா?"

"என்னம்மா?"

"நான் எங்கப்பாவைப் பத்தி பேசறதுன்னா பிறகு யார் கிட்ட பேசறது? எனக்கு அவர் பத்தி தெரிஞ்சுக்கணும்னு ஆசை இருக்காதா? அம்மா கிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்காம யார் கிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்கறது. ஒரு சின்ன போட்டோவைத் தவிர அவர் ஞாபகமாய் என் கிட்ட என்ன இருக்கு? சொல்லுங்க பார்க்கலாம்"

ஓங்கி அறைந்தது போல ஈஸ்வரனுக்கு இருந்தது. அவள் வார்த்தைகளில் இருந்த உண்மை தான் அப்படி அறைந்திருக்க வேண்டும். இந்தப் பெண் இன்னும் கொஞ்ச நாள் அமெரிக்காவில் இருந்திருக்கலாம் என்று மனதில் சொல்லிக் கொண்டார். வார்த்தைகள் கிடைக்காமல் அவர் தடுமாறினார்.

"சரி உங்க தங்கை கிட்ட நான் அவரைப் பத்திப் பேசலை. உங்க கிட்ட பேசட்டா? நீங்க பேசுவீங்களா?"

சிறு வயதில் இருந்து அடிக்கடி அவள் தந்தை பற்றி கேட்டு வந்த கேள்விகளுக்கு, தெளிவில்லாத பொதுப்படையான பதில் சொல்லித் தப்பித்து வந்த ஈஸ்வரன் ஒரு காலத்திற்குப் பின் அவளிடம் இருந்து அது சம்பந்தமான கேள்விகள் வருவது நின்று போன போது அடைந்த நிம்மதிக்கு அளவில்லை. இப்போது பழையபடி கேள்விகள் அணுகுண்டுகளாக வருகின்றன. அதுவும் அவரது தங்கை குணமாகி வந்த இந்த சந்தர்ப்பத்தில்...... இவளை எப்படிச் சமாளிப்பது என்று ஈஸ்வரன் மலைத்து நின்றார்.

தாரா ஒரு புறமும் தாமிரா ஒரு புறமும் இருக்கும் போது, இப்போதும் விஸ்வரூபம் எடுத்து 'அவன்' கேள்விக் குறியாக நிற்கிறான். அவன் நினைவின் முன் அன்று போலவே இன்றும் அவர் நிராயுதபாணியாக நிற்கிறார். ஆயிரக்கணக்கான பிரச்சனைக்குரிய மனிதர்களை கண்களைக் கூட இமைக்காமல் அனாயாசமாக சமாளிக்கத் தெரிந்தவர் தன் மருமகளை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் தவித்தார்.

"என்ன மாமா பதிலே காணோம்?"

"சரி தாமிரா என் கிட்டயே பேசு" என்று வேறு வழியில்லாமல் தோல்வியை ஒப்புக் கொண்டவர் போல சொன்னார்.

அவர் தர்மசங்கடத்தைப் புரிந்து கொண்டவள் போல் தாமிரா புன்னகைத்தாள். "எனக்குத் தெரியும் நீங்க ஏன் எங்கப்பா பத்திப் பேசத் தயங்குறீங்கன்னு" என்று அவள் சொன்ன போது அணுகுண்டு நிஜமாகவே தலையில் வந்து விழுந்ததாக ஈஸ்வரன் உணர்ந்தார்.

# (41)

Fate loves to play tricks, and will heap up chances to catch us unawares. Care always fails just when it was most wanted.

–Balthasar Gracian

திகைத்து நின்ற ஈஸ்வரனைப் புரிந்து கொண்டவள் போல தாமிரா பொறுமையாகச் சொன்னாள். "மாமா, அம்மா உங்களையும் விட அதிகமாய் அப்பாவை நேசிச்சதை உங்களால் இன்னமும் சகிச்சுக்க முடியலை. அதனால் தான் அப்பாவைப் பத்திப் பேச உங்களுக்குக் கஷ்டமாய் இருக்கு. நான் சொல்றது சரி தானே"

ஈஸ்வரன் பாறை ஒன்று தன் மீதிருந்து விலகியது போல உணர்ந்தார். இருக்கலாம் என்பது போல மருமகளிடம் அவர் தலையசைத்தார்.

"ஐயா சி.எம் போனில் கூப்பிடறாங்கய்யா" என்று வேலைக்காரன் வந்து சொன்னான். குடும்பத்தினர் முன்னிலையில் எந்தப் பெரிய பதவி வகிப்பவரானாலும் சட்டை செய்யாத ஈஸ்வரன் இதையே சாக்காக வைத்து, "இதோ வர்றேன்" என்று அவனை அனுப்பி விட்டு "நாம் சாவகாசமாய் அப்புறம் பேசலாம் தாமிரா" என்று மருமகளிடம் சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு அவசரமாகக் கிளம்பினார்.

தாராவும் தாமிராவும் மனம் விட்டுப் பேச ஆரம்பிக்கும் முன் தாராவிடம் தான் பேச வேண்டியது நிறைய இருக்கிறது என்று ஈஸ்வரன் எண்ணிக் கொண்டே போனார். அதே சமயம் அவளுக்கு இதெல்லாம் எப்படிப்பட்ட மன வேதனையை அளிக்கும் என்று நினைக்கையில் அவர் மனம் துடித்தது.

ஈஸ்வரன் போன பின்பு தாமிரா தன் தாயின் அறையில் எட்டிப் பார்த்தாள். தாரா கண்களை மூடிப் படுத்திருந்தாள். அவள் முகத்தில் ஒரு இனம் புரியாத துக்கம் தெரிந்தது. தாமிராவுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அம்மா முகத்தில் அந்த துக்கம் இருக்கிறது. அம்மாவைக் கட்டியணைத்துக் கொண்டு ஆறுதல் சொல்ல வேண்டும் என்று தாமிராவுக்குத் தோன்றியது. 'அம்மா நீ அப்பாவையே நினைத்து துக்கப்படுவதில் அர்த்தமில்லை. மரணம் எடுத்துக் கொண்டதை யாராலும் திருப்பி வாங்குவது சாத்தியமில்லை. இருக்கும் எங்களைப் பார். நிஜத்துக்கு வாம்மா ப்ளீஸ்' என்று சொல்லி நிஜத்திற்கு அவளை வரவழைக்க முயற்சி செய்யத் தோன்றியது. ஆனால் ஈஸ்வரன் சொன்னது போல் அம்மா மறுபடி பழைய நிலைக்கே போய் விட்டால்...என்ற கேள்விக்குறி இமயமாக அவள் முன் எழுந்து நின்றது.

தாமிரா தன் தாயைப் பார்த்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்த அதே நேரத்தில் அருணும் தன் தாயை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். எங்கோ வெளியே போய் விட்டு வந்த மாதுரியின் முகம் ஏதோ பேயைப் பார்த்தது போல் வெளிறியிருந்தது.

"என்னம்மா, என்ன ஆச்சு?"

மகன் கேள்விக்குப் பதில் சொல்லும் நிலையில் மாதுரி இருக்கவில்லை. எப்போதுமே மகன் அருகில் இருந்தால் பெரும் தைரியத்துடன் இருக்கக் கூடியவளுக்கு, இந்த கணம் அவன் கூட இருந்து கேள்வி கேட்பது பெரிய பிரச்சனையாக இருந்தது. "ஒண்ணுமில்லைடா" என்று சொல்லிப் புன்னகைக்க முயன்று தோற்றுப் போனாள்.

அருண் தன் தாயருகே வந்து உட்கார்ந்தான். அவளிடம் அளவு கடந்த அன்போடு சொன்னான். "அம்மா, உன்னை ஏதோ ரொம்பவே கஷ்டப்படுத்துது. உடம்பு சரியில்லையா, மனசு சரியில்லையா. சொல்லும்மா?"

தாராவைப் பார்த்தது முதல் பெரும் கொந்தளிப்பில் மூழ்கி இருந்த மாதுரி மகனிடம் எதுவும் சொல்ல முடியாமல் தவித்தாள். "ஒண்ணுமில்லை அருண்."

"நீ சில சமயம் நான் அந்த சேதுபதி நாவலைப் பத்தியும், ஈஸ்வரனைப் பத்தியும் பேசறப்ப இதே மாதிரி ஆயிடறதைப் பார்த்திருக்கேன். அப்பல்லாம் அந்த ஈஸ்வரனைப் பார்த்து எல்லாரும் பயப்படற மாதிரி நீயும் பயப்படறே, அந்த ஆளாலே எனக்கு ஏதாவது ஆபத்து வந்துடும்னு பயப்படறேன்னு நினைச்சேன். இப்ப நீ வெளியே போயிட்டு வர்றப்ப கூட அப்படியே இருக்கிறதைப் பார்த்தா விஷயம் வேற ஏதோன்னு தோணுது. சொல்லும்மா, எது உன்னை இப்படி பாதிக்குது?"

தனது கைகளைப் பிடித்துக் கொண்டு கரிசனத்துடன் கேட்கும் மகனை நேருக்கு நேர் அவளால் பார்க்க முடியவில்லை. அவள் தன்னை பாதிக்கும் விஷயங்களை அவனிடம் எப்படிச் சொல்வாள். ஈஸ்வரனின் தங்கையின் பிரவேசமும், மகனின் 'நீ நான் தாமிரபரணி' நாவல் மற்றும் அந்த கதாபாத்திரங்கள் பற்றிய துப்பறிதலும் ஒருங்கிணைந்து எப்படிப்பட்ட விபரீதத்திற்கு வழி வகுக்கும் என்றறியாமல் தான் திணறுவதை என்ன சொல்லி அவனுக்கு அவளால் புரியவைக்க முடியும்? ஒரு தாய் மகனிடம் சொல்லக் கூடிய விஷயங்களா அவை?

"அம்மா ப்ளீஸ் சொல்லும்மா...."

அவன் முகத்தில் தெரிந்த கவலை, அவன் குரலில் தொனித்த கரிசனம், கேட்டு விட்டு அவள் தோள்களைப் பிடித்துக் கொண்ட பாசம் எல்லாம் சேர்ந்து அவள் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. வார்த்தைகளால் இறக்கி வைக்க முடியாததைக் கண்ணீரால் இறக்கி வைக்கப் பார்த்தாள். மகனின் தோளில் சாய்ந்து கொண்டு ஒரு குழந்தையைப் போல் அழுதாள். அவன் மௌனமாக அவளை அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்த முயன்றான். அம்மாவின் மனதை செல்லரிக்கும் விஷயம் என்ன என்பதை உணர முடியாவிட்டாலும் அது அவளால் வாய் விட்டு சொல்ல முடியாத விஷயம் என்பதை மட்டும் அவனால் ஊகிக்க முடிந்தது.

அம்மாவால் அவனிடம் வாய் விட்டுப் பேச முடியாத விஷயம் உண்டு என்றால் அது அவன் தந்தையைப் பற்றியதாகத் தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. மாற்ற முடியாத மனிதர்கள் பற்றி வருந்தி என்ன பயன் என்று கேட்க நினைத்தாலும் அப்படிக் கேட்பது கூட அவள் துக்கத்தை அதிகப்படுத்தும் என்று அமைதியாக இருந்தான். ஆனால் அப்பா அவனுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து இப்படித் தான் இருக்கிறார் என்ற உண்மை திடீர் என்று உறைக்க அவளது தற்போதைய துக்கத்திற்குக் காரணம் வேறெதுவோ என்று உணர்ந்தான்.

"அம்மா ஒரு நிமிஷம் என்னை உன் ஃப்ரண்ட் மாதிரி நினைச்சுக்கோ. உன் மனசில் இருக்கிறதை சொல்லு. ஒரு நல்ல ஃப்ரண்ட் மாதிரி நானும் உன்னைப் புரிஞ்சுக்கவும், உதவி செய்யவும் முயற்சி செய்வேன். சொல்லும்மா"

மாதுரியை அந்த வார்த்தைகள் மிக ஆழமாக ஆசுவாசப்படுத்தின. ஆனால் உண்மைகளை அவன் அறியும் போது அவனால் அவன் சொன்ன மாதிரியே செய்ய முடியுமா என்ற சந்தேகம் கூடவே பலமாக எழுந்தது. அவன் முகத்தைப் பார்க்காமல் அவன் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு சொன்னாள். "எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுப்பாயா?"

ஆச்சரியத்துடன் கேட்டான். "என்னன்னு"

"எப்பவுமே என்னை நீ வெறுத்துட மாட்டேன்னு சத்தியம் செய்து கொடுப்பாயா?"

அருண் அதிர்ந்து போனான். அம்மா இப்போதும் அவன் முகத்தைப் பார்க்கவில்லை. ஆனால் அவன் பதிலுக்காகக் காத்துக் கொண்டு இருந்த அவள் கைகள் லேசாக நடுங்கியதை அவன் கவனித்தான். "என்னால் உன்னை வெறுக்க முடியும்னு நீ எப்படிம்மா நினைக்கிறாய்?"

அவள் அவன் கேள்வியை சட்டை செய்யவில்லை. "எனக்கு சத்தியம் செய்து கொடுப்பாயா?"

அம்மாவுக்கு புத்தி பேதலித்து விட்டதோ என்று அவன் சந்தேகப்பட்டாலும் பேரன்புடன் அவளைப் பார்த்து சொன்னான். "நான் உன்னை எப்பவுமே வெறுக்க மாட்டேன்மா. இது சத்தியம்"

மடை திறந்த வெள்ளம் போல் மறுபடி கண்ணீர் அவள் கண்களில் இருந்து கிளம்பியது. அவள் அமைதியடையும் வரை அவன் அவள் அருகில் அமைதியாக உட்கார்ந்து ஆசுவாசப்படுத்தினான்.

# (42)

The flapping of a single butterfly's wing today produces a tiny change in the state of the atmosphere. Over a period of time, what the atmosphere actually does diverges from what it would have done. So, in a month's time, a tornado that would have devastated the Indonesian coast doesn't happen. Or maybe one that wasn't going to happen does.

– Ian Stewart

அன்றிரவு அருணுக்கு உறக்கம் வர நிறைய நேரமாயிற்று. அம்மாவின் அழுகையும், அவளை வெறுக்கக் கூடாதென்று அவள் சத்தியம் வாங்கிக் கொண்டதும் அவனை நிறையவே யோசிக்க வைத்தது. மறுநாள் காலையும் அவன் பெற்றோர் பற்றிய எண்ணங்களே அவன் மனதைக் குழப்பின. இத்தனை வருடங்களாகியும் அவன் பெற்றோர் இருவரும் ஏனோ அவனுக்குப் புதிராகவே இருந்தார்கள். அப்பா என்றுமே புதிராகவே இருந்தார் என்றால், சமீப காலமாக அம்மாவும் புதிராக மாறி வருகிறாள்.

காவ்யா அவனது பெயரில் ஒரு டிரஸ்ட் மூலம் அனாதை ஆஸ்ரமம் ஒன்றை ராஜராஜன் நடத்தி வருகிறார் என்று சொன்னவுடன் தன் பத்திரிக்கை நண்பன் மூலமாக அதைப் பற்றிய தகவல்கள் சேகரித்தான். அங்கே மூன்று வயது முதல் பதினாறு வயது வரை சுமார் நூறு அனாதைக் குழந்தைகள் இருப்பதாகவும், அந்த குழந்தைகளுக்கு சகல சௌகரியங்களும் இருப்பதாகவும் அந்த நண்பன் தெரிவித்தான்.

"குழந்தைகளைப் பார்த்தால் அனாதைகள் மாதிரித் தெரியலை. ஏதோ மிடில் கிளாஸ் குழந்தைகள் மாதிரி எல்லாம் டீசண்டாய் இருக்காங்க. படிப்பு விளையாட்டுன்னு சந்தோஷமாய் இருக்காங்க.... ஒரு ஆச்சரியமான விஷயம் என்னன்னா தீபாவளி, பொங்கல் மாதிரி நவம்பர் ரெண்டாம் தேதியும் வடை பாயாசம், ரெண்டு வகை ஸ்வீட்டுன்னு விருந்து சாப்பாடு போடறாங்களாம். அது ஏன்னு அங்கே யாருக்கும் தெரியலை... இன்னொரு ஆச்சரியமான விஷயம் இது வரை உங்கப்பா ஒரு தடவை கூட அந்த ஆசிரமத்துக்கு விசிட் செய்ததில்லையாம். ஆனா பணம் மட்டும் சரியாய் தேவைக்கேத்த மாதிரி அனுப்பிடறார். மற்றபடி நிர்வாகம் செய்ய சரியான, நல்ல ஆள்களை வேலைக்கு வைத்திருக்கார். அதனால் எல்லாம் ஒழுங்காய் நடக்கிறது. ஒரு விஷயத்தை மட்டும் உங்கப்பாவை நல்லா தெரிஞ்ச எல்லாரும் ஒத்துக்கறாங்க. 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்'னு குறள் சொல்றபடி ஆள்களைத்

தேர்ந்தெடுக்கிறதில் அவர் நிஜமாகவே கில்லாடிங்கிறாங்க. தேர்ந்தெடுத்தப்புறம் அனாவசியமா அவங்க வேலை விஷயத்தில் மூக்கை நுழைக்க மாட்டார்ங்கிறாங்க. அவர் ஏற்படுத்தின டிரஸ்ட் மூலமாய் தான் அந்த ஆஸ்ரமம் நடக்குதுன்னு எந்த விதத்திலும் விளம்பரம் இல்லாததால் யாருக்கும் வெளியே தெரியலை....."

நவம்பர் இரண்டு அருணின் பிறந்த நாள். அந்த நாளில் வருடா வருடம் விருந்து சாப்பாட்டுக்கு அவர் ஏற்பாடு செய்திருப்பது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு முறை கூட அவனது பிறந்த நாளில் அவர் அவனை வாழ்த்தியதாக அவனுக்கு ஞாபகம் இல்லை.

பணம் சம்பாதிப்பதைத் தவிர வேறு எந்த எண்ணமும் இல்லாதவர் என்று அவன் கணித்திருந்த மனிதருக்கு இப்படி இன்னொரு பக்கம் இருப்பதை நம்ப முடியவில்லை. அதுவும் அவன் பெயரில் நடத்துவது இன்னொரு அதிசயமாகத் தானிருந்தது. ஆனால் ஒரு தடவை கூட அந்த அனாதை இல்லத்துக்கு அவர் சென்றதில்லை என்ற தகவல் நெருடலாக இருந்தது. பணம் ஒன்றைக் கொடுத்து விட்டால் போதும் என்பது போன்ற எண்ணமே அந்த நல்ல காரியத்தை மங்கச் செய்வதாக அவனுக்குத் தோன்றியது. ஆனாலும் அது ஒரு மிக நல்ல தர்ம காரியம் என்பதில் ஒரு நிறைவு வந்தது. 'அப்பா வெறும் பணம் சம்பாதிக்கும் மெஷின் அல்ல'

அப்பாவைப் பற்றிய எண்ணத்துடன், அம்மாவும் நினைவுக்கு வந்தாள்.

அவளது பயமும், துக்கமும் அதை அவள் வெளியே சொல்ல முடியாமல் தவிப்பதும் ஏனென்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை. எப்போதோ ஏதோ தவறு செய்து விட்டு தற்போது அவள் வருந்துவதாக அவனுக்குத் தோன்றியது. ஆரம்ப நாட்களில் சதா லேடீஸ் கிளப், ஷாப்பிங் என்று சுற்றிக் கொண்டிருந்தவள். அன்றைய நாட்களில் அவனுக்கே கூட அவள் மீது வெறுப்பாகத் தான் இருந்தது. ஆனால் எப்போது அவன் "எனக்கு செத்துப் போகணும்" என்கிற பிரம்மாஸ்திரத்தை விட்டானோ அப்போது மாறியவள் இந்தக் கணம் வரை ஒரு நல்ல அம்மாவாக இருக்கிறாள் என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. அவள் எப்போது எந்தத் தவறு செய்திருந்தாலும் அவளை என்றுமே அவனால் வெறுக்க முடியாது என்பதை அவளால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை என்று அவனுக்குத் தெரியவில்லை. தவறுகள் செய்யாதவர்களைத் தான் நேசிக்க முடியும் என்றால் இந்த உலகத்தில் யாரை யார் தான் நேசிக்க முடியும். தவறுகளையும் குறைபாடுகளையும் பொருட்படுத்தாமல் வெளிப்படுவது தானே நிஜமான அன்பு?

செல்போன் இசைக்க சிந்தனைகளில் இருந்து மீண்டு அருண் அதை எடுத்தான்.

"ஹலோ....மிஸ்டர் அருணா?.... சார் நான் தாமிரா பேசறேன்....சாரி நான் நேற்று வர முடியலை.... இப்ப வந்தால் நீங்களும் அம்பல வாணன் சாரும் ஃப்ரீயாக இருப்பீங்களா?"

"வாங்க தாமிரா. நானும் ஆபிசுக்குத் தான் கிளம்பிட்டிருக்கேன். அம்பலவாணன் சாரும் இருப்பார். எத்தனை மணிக்கு வர்றீங்க?"

அவள் அரை மணி நேரத்தில் வருவதாகச் சொன்னாள். அவன் வாயிலிருந்து 'தாமிரா' பெயர் வந்ததும் மாதுரி பதட்டமானாள். அவளைக் கவனிக்காத அருண் அவசரமாக ஆபிசிற்குக் கிளம்பினான். மகன் போவதைப் பார்த்துக் கொண்டே மாதுரி சோகமாக நின்றாள். மகனிடம் சத்தியம் வாங்கி இருந்தாலும் அவள் மனதில் ஏனோ சமாதானமில்லை. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு சத்தியம் செய்வதென்பது வேறு, தெரியாமல் சத்தியம் செய்வது வேறு. தன் கையாலாகாத்தனத்தை நினைத்து வருத்தத்தோடு நின்றவளுக்கு ஈஸ்வரன் மீது கோபம் வந்தது. "என்ன மனுஷன் அந்த ஆளு? ஊரையே அடக்கி வைக்கத் தெரிஞ்ச ஆளுக்கு சொந்த மருமகளை அடக்கத் தெரியலையே! ஏதாவது செய்து அவளை அமெரிக்காவுக்கு திருப்பி அனுப்பறதை விட்டுட்டு அவள் அருணை சந்திக்க வர்றதை வேடிக்கை பார்த்துட்டு இருக்கார். நான் தான் கையாலாகாதவள். இந்த ஆளுக்கு புத்தி எங்கே போயிடுச்சு....எல்லாம் விதி" என்று ஈஸ்வரனை மனதிற்குள் மாதுரி திட்டினாள். ஆனால் மனிதர்கள் ஆசைப்படுவதற்கு இணங்க

இயங்கத் தெரியாத விதி தாமிராவையும் அருணையும் சந்திக்க வைக்கும் காரியத்தை நிறுத்தவில்லை.

தாமிரா அவர்கள் ஆபீசில் நுழைந்த போது அருணும் அம்பலவாணனும் அவளுக்காகக் காத்திருந்தார்கள். சபாபதி பதட்டத்துடன் ஈஸ்வரனுக்கு போன் செய்ய வெளியே விரைந்தார்.

## (43)

The hours I spent with thee, dear heart,
Are as a string of pearls to me;
I count them over, every one apart,
My rosary, my rosary. –
R.C.Rogers

ஈஸ்வரன் போனை வைத்து விட்டு ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்தார். தாமிரா தன்னிடம் வாக்குக் கொடுத்தபடி அவள் தந்தையைப் பற்றி தாராவிடம் பேச மாட்டாள் என்றாலும் அந்த விஞ்ஞானியைப் பற்றியும், அருணைப் பற்றியும் தாராளமாக பேசக் கூடும் என்பதால் இப்போது நடந்து கொண்டிருப்பதை தன் தங்கைக்கு சூசகமாகவாவது தெரிவிக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் அவள் அதையெல்லாம் தெரிந்து கொண்டு அதிர்ச்சியாகி திரும்பவும் பழைய நிலைக்குப் போய் விட்டால் என்ன செய்வது என்ற பயமும் அவரை அழுத்தியது. தாமிராவும் அருணும் இணைவது பட்டாசுத் திரியும் நெருப்பும் இணைவது போல் என்று உணர்ந்தே இருந்ததால் தொடரப் போகும் அதிர்வெடிகளுக்குத் தன் தங்கையை இனி எப்படி தயார் செய்வது என்று குழப்பத்துடன் தவித்தார்.

தங்கை குணமாகி விட்டாள் என்று உணர்ந்த போது இனி செத்தாலும் கவலையில்லை என்று ஆனந்தத்தின் எல்லையையே தொட்டவர் கடவுள் அந்த நிலையில் யாரையும் அதிக நேரம் தங்க விடுவதில்லை என்று நினைத்துக் கொண்டார். இப்போது அந்த ஆனந்தத்தைக் கரைக்க எத்தனையோ கவலைகள் வர ஆரம்பித்து விட்டன. மெள்ள எழுந்து தங்கையின் அறைக்குச் சென்று பார்த்தார்.

தாரா விழித்தே இருந்தாள். அவள் ஏதோ கனவில் மிதப்பது போல் தெரிந்தது. அந்தக் காட்சி ஈஸ்வரன் வயிற்றில் புளியைக் கரைத்தது. பல வருடங்களுக்கு முன்பும் இதே போல் தான் மணிக்கணக்கில் அமர்ந்திருப்பாள். பிறகு தான் சிறிது சிறிதாக அவள் இயல்பு நிலையில் இருந்து மாறிப் போனாள். மறுபடி அவளை இந்தக் கோலத்தில் பார்க்க அவருக்குக் கவலையாக இருந்தது.

பழைய நினைவுகளில் மீண்டும் சஞ்சரிக்கத் துவங்கியிருந்த தாரா தமையனின் வருகையை உணர்ந்து நிகழ்காலத்திற்கு வந்தாள்.

"வா அண்ணா"

அவள் குரலில் இருந்த தெளிவும் முகத்தில் தெரிந்த புன்னகையும் ஈஸ்வரன் மனதைச் சமாதானப்படுத்தியது. அவள் அருகில் உட்கார்ந்தார். அண்ணனையே சிறிது நேரம் கூர்ந்து பார்த்த தாரா திடீரென்று முகத்தில் கவலை பரவக் கேட்டாள். "நீ ஏன் அண்ணா கல்யாணமே செய்துக்கலை"

சுமார் இருபத்தியேழு வருடங்களில் நடந்த, நடக்காத பலவற்றிற்கும் அவளுக்குக் காரணம் சொல்லி விளக்க வேண்டும் என்ற போது ஒரு சுமை அவர் மனதை அழுத்தியது.

"எனக்கு வரக்கூடிய மனைவி தாமிராவை தன் குழந்தை மாதிரி பார்த்துக் கொள்வாள்னு எனக்குத் தோணலை. அதனால் செய்துக்கலை"

மறுகணம் அவள் கண்கள் நிரம்பின. தனக்காகவும் தன் மகளுக்காகவும் அவர் செய்த தியாகத்துக்கெல்லாம் துக்கத்தை மட்டுமே தான் பிரதிபலனாக கொடுத்திருப்பதை உணர்ந்த போது அவள் அடைந்த வருத்தத்திற்கு அளவு இருக்கவில்லை. அவரது மடியில் தலை வைத்து அவள் குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதாள். தங்கை முகம் வாடினாலே சகித்துக் கொள்ள முடியாத ஈஸ்வரன் துடித்துப் போனார்.

தலையை உயர்த்தி தாரா கேட்டாள், "உனக்குன்னு ஒரு வாரிசு வேண்டாமாண்ணா"

"உன் மகள் ஒரு விஞ்ஞானியான மாதிரி, என் வாரிசு இருந்ததுன்னா அதுவும் ஏதாவது உருப்படியா வந்திருக்கும்னு நினைக்கிறியா தாரா. அது ஒரு ரௌடியா, தாதாவாய் வந்திருக்கும். அதனால நான் கல்யாணம் செய்துக்காததில் நாட்டுக்கு நல்லது தான் நடந்திருக்கு"

பாதி உண்மையாகவும், பாதி விளையாட்டாகவும் அண்ணன் சொன்னது அவள் காதுகளில் விழுந்தது போல் தெரியவில்லை. காலம் கடந்து விட்ட பிறகு வருந்தி என்ன பயன் என்பது போல சிறிது நேரத்தில் அவள் விரக்தியான மௌனத்தில் ஆழ்ந்தாள். சிறிது நேரம் அண்ணனும் தங்கையும் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

பின்பு தாரா கேட்டாள். "தாமிரா எங்கே போயிட்டா?"

ஈஸ்வரன் என்ன சொல்வது என்று யோசித்தார். அண்ணனைக் கூர்ந்து பார்த்த தாராவுக்கு அவரது தர்மசங்கடம் புரிந்தது போல் இருந்தது. "என்னண்ணா தயங்கறாய்"

"உன் கிட்ட சொல்ல வேண்டியது நிறைய இருக்கு தாரா. நீ இப்ப தான் குணமாய் வந்திருக்கிறாய். கொஞ்ச நாள் போனப்புறம் சொல்றேன்"

"நான் பழையபடி ஆயிடுவேனோன்னு பயப்படறாய் இல்லையா?"

அவளது நேரடியான கேள்விக்கு பதில் சொல்லத் தயங்கியவராய் ஈஸ்வரன் நெளிந்தார்.

"பயப்படாதேண்ணா. நான் கண்டிப்பாய் அப்படி ஆயிட மாட்டேன். சொல்லு"

மேலும் சிறிது அவர் தயங்கினாலும் அவள் முகத்தில் தெரிந்த தெளிவையும், உறுதியையும் பார்த்து சற்று நம்பிக்கை அடைந்து, ஆரம்பத்தில் இருந்து சொல்ல முடிவு செய்தார் . அவள் முகத்தில் அபாயக்குறி ஏதாவது தெரிந்தால் உடனடியாக நிறுத்தி விடத் தீர்மானம் செய்தவராய் ஆரம்பித்தார்.

"பல வருஷங்களுக்கு முன்னால் 'நீ நான் தாமிரபரணி'ங்கற கதை எழுதி பிரபலமான பின்னால் சேதுபதிங்கிற நாய் காணாமல் போயிடுச்சு......."

சேதுபதியின் மீது ஈஸ்வரனுக்கு இருந்த கோபம் அவர் அந்தக் கதை எழுதுவதற்கும் முன்பே ஆரம்பமாகி இருந்ததால் அந்தப் பெயரைச் சொன்ன போதெல்லாம் ஈஸ்வரன் குரலில் இருந்த உக்கிரம் தாராவை ஆச்சரியப்படுத்தவில்லை. அது அந்தக் கதை பிரசுரம் ஆன போது அதிகரித்து காணாமல் போன போது விஸ்வரூபம் எடுத்திருந்தது. தாரா தமையனின் மீது வைத்த கண்களை எடுக்காமல் அவர் சொன்னதை எல்லாம் அமைதியாகக் கேட்டாள்.

தாமிராவிடம் அவளது தந்தை இறந்து விட்டார் என்று சொல்லி இருந்ததைச் சொன்ன போது மட்டும் அவள் முகத்தில் வேதனை பளிச்சிட்டது. அதைக் கண்ட ஈஸ்வரன் குற்ற உணர்ச்சியுடன் குரலைத் தாழ்த்தியபடி சொன்னார். "எனக்கு அந்தக் குழந்தையை சமாளிக்க அப்ப வேற வழி தெரியலை...."

புரிந்து கொண்ட தாரா தலையசைத்தாள். தன் நெற்றியில் குங்குமத்தை வெறித்துப் பார்த்து நின்ற தாமிரா நினைவுக்கு வந்தாள். மேலே சொல்ல தாரா சைகை செய்தாள். அருண் சேதுபதி பற்றி துப்பு துலக்க ஆரம்பித்ததை சொல்ல ஆரம்பித்த போது தாரா முகத்தில் பெரும் திகைப்பு தெரிந்தது. ஆனால் அவர் சொன்னதை இடைமறிக்காமல் கேட்டாள்.

அருண் பூங்கொடி கிராமம் போய் வந்ததைச் சொன்ன போது மட்டும் ஒரே ஒரு வார்த்தையைக் கேள்வியாய் கேட்டாள். "ஆச்சி?"

"கிழவி இன்னும் சாகலை"

அவள் முகத்தில் ஒரு மென்மை படர்ந்தது. அவர் தொடர்ந்தார். நரசிம்மராஜுலு தாமிராவிடம் ஒரு விஞ்ஞானக் கட்டுரையைக் கொடுத்து இப்போது தாமிராவும் அந்த விஞ்ஞானியைப் பற்றி அறிய கிளம்பி இருப்பதை அவர் சொன்ன போது அவளால் அதிர்ச்சியடையாமல் இருக்க முடியவில்லை.

"இப்போ தாமிரா அது சம்பந்தமாய் தெரிந்து கொள்ளத் தான் அருணைப் பார்க்கப் போயிருக்கிறாள்...." என்று அவர் முடித்த போது தாரா பேச்சிழந்து அமர்ந்திருந்தாள்.

## (44)

The Best Leave a Legacy. They aren't in it just for themselves. Rather, they build things that last beyond themselves, things that can be enjoyed by others as well.

– Chris Widener

அம்பலவாணன் பெரும் வியப்புடன் அருணையும் தாமிராவையும் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் பல காலமாக பழகியவர்கள் போல பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் ஏதோ ஈர்ப்பு சக்தி இருந்தது போல் அவருக்குப் பட்டது. காவ்யாவைப் பற்றி மட்டும் அவருக்குத் தெரியாதிருந்தால் அவர்களுக்குள் காதல் என்று கூட அவருக்கு சந்தேகம் தோன்றியிருக்கும். இருவர் கண்களிலும் பரஸ்பர சிநேகம் பளிச்சிட்டது. ஒருசில கணங்களில் அவர்கள் இருவரும் அவர் இருப்பதையே மறந்து விட்டது போல் இருந்தது.

அந்தக் கட்டுரையைப் படித்து முடித்த பின் தனக்கு ஏற்பட்ட பிரமிப்பைப் பற்றி தாமிரா அருணிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

".....கிட்டத்தட்ட இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னாலேயே அந்த விஞ்ஞானி இவ்வளவு தூரம் ஆராய்ச்சி செய்திருக்கார்னு நினைக்கறப்பவே எனக்குப் புல்லரிச்சுடுச்சு. ஆனா இவ்வளவு தூரம் ஆராய்ந்த ஆள் அதை இந்த உலகத்துக்குத் தெரிவிக்காமல் இருந்தது நமக்கெல்லாம் பெரிய இழப்புன்னு அந்தக் கட்டுரையைப் படிச்சப்புறம் நான் நினைக்காத நாளில்லை. உங்களுக்கு அவரைப் பத்தித் தெரிஞ்சதெல்லாம் தயவு செய்து சொல்லுங்களேன்"

"உண்மையைச் சொன்னால் அவரைப் பத்தி எங்களுக்கு எதுவும் தெரியாது. நாங்க அப்படி ஒரு ஆள் இருந்தார்னே தெரியாமல் இருந்தோம். வேறு ஒரு ஆளைப் பத்தித் துப்பு துலக்கப் போனப்ப தற்செயலாய் இவர் எழுதின இந்தக் கட்டுரை கிடைச்சுது...."

அவள் குழப்பம் அவளுடைய முகத்தில் தெரிந்தது.

"நீ நான் தாமிரபரணிங்கற நாவல் பத்தி கேள்விப்பட்டிருக்கீங்களா"

அவள் கேள்விப்பட்டதில்லை என்றாள். "அதுக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம்?"

"நாங்க துப்பு துலக்கப் போனது அந்த நாவலாசிரியர் பத்தி. அவர் அந்த நாவல் எழுதி பிரபலமானதற்கப்புறம் திடீர்னு காணாமல் போயிட்டார்......." என்ற அருண் ஆரம்பத்தில் இருந்து ஆரம்பித்தான். சொல்லும் போது எந்த இடத்திலும் ஈஸ்வரன் பற்றிக் குறிப்பிடாமல் மற்ற எல்லாவற்றையும் அவளிடம் விவரித்தான். சொல்லச் சொல்ல அருணும் அம்பலவாணனும் தாமிராவைக் கூர்ந்து கவனித்தார்கள். அவள் மிகவும் சுவாரசியமாக அதைக் கேட்டாள். தாமிரபரணிக்கரையில் சேதுபதியைப் பார்த்தும் நழுவ விட்ட போது நிஜமாகவே அருண் மீது அவள் கோபப்பட்ட மாதிரி தெரிந்தது. 'என்ன ஆள் நீ' என்பது போல அவனைப் பார்த்தாள். பிறகு பரபரப்பு குறையாமல் கேட்டாள்.

"அப்ப அது நிஜக் கதையா?"

"ஆமா... அந்தக் கடைசிப் பக்கம் தவிர. கதையில் அவங்க செத்துட்டாங்க. ஆனா உண்மையில் அவங்க சாகலை"

"அந்த புக் உங்ககிட்ட இருக்கா?" ஆவலுடன் கேட்டாள்.

அருண் அந்த நாவலை எடுத்துக் கொடுத்தான்.

"இவ்வளவு பெருசா" என்று அந்த நாவலின் தடிமனைப் பார்த்து சொன்னாள். "பொதுவா நான் கதைகள் படிக்கறதில்லை. அதுவும் ஒரு பக்கத்துக்கு மேல் இருந்தா நான் கண்டிப்பாய் படிக்கவே மாட்டேன். எனக்கு சயன்ஸ் மேல் இருக்கிற க்ரேஸ் கதைகள்ல கிடையாது. ஆனா இதை நிச்சயமா படிக்கறேன். அந்த தேவன் தேவி மேல் எனக்கும் ஒரு ஈடுபாடு வந்துடுச்சு"

அந்த நாவலை எடுத்துத் தன் கைப்பையில் போட்டுக் கொண்டவள் பிறகு சிந்தனையோடு சொன்னாள். "அப்படின்னா அவர் யார்னு ரங்காச்சாரிக்குத் தெரியும், நரசிம்மராஜுலுவுக்குத் தெரியும், ஆச்சிக்குத் தெரியும். ஆனா அவங்க எல்லாம் சொல்ல மறுக்கறாங்க. அவங்களை சொல்ல வைக்க முடியாதா அருண்?'

"அவங்க எல்லாரும் அவரை நிறையவே நேசிக்கறாங்க தாமிரா. ஏனோ தெரியலை அவர் பத்தி வெளியே சொல்லத் தயங்கறாங்க"

"ஆனா அவர் உயிரோட இருக்கிறாரா அருண்"

"தெரியலை. ஆனா அவர் உயிரோட இருக்கார்னு என் உள்மனசு சொல்லுது"

தாமிரா முகத்தில் உறுதி தெரிந்தது. ஆணித்தரமாய் சொன்னாள். "அப்படி இருந்தார்னா கண்டிப்பாய் அவர் யார்னு கண்டு பிடிக்கணும் அருண். ஏன்னா அந்த மாதிரி ஒரு ஜீனியஸ் இருந்ததே தெரியாமல் இந்த உலகம் இருக்கிறது துரதிர்ஷ்டம் தான்."

"நானும் அப்படித் தான் நினைக்கிறேன். சேதுபது பத்தி துப்பறிய ஆரம்பிச்சு பிறகு தெரிஞ்சுகிட்டதெல்லாம் என்னை அதிகமாவே இதில் பைத்தியமாக்கிடுச்சு. எவ்வளவு

தூரத்துக்குன்னா உங்க பேரைக் கேட்ட பிறகு அது கூட தாமிரபரணியோட சுருக்கமாய் இருக்குமோன்னு எனக்கு சந்தேகம் வந்துடுச்சுன்னா பாருங்களேன்"

அருண் சமயோசிதமாக அதைச் சொன்ன விதத்தை அம்பலவாணன் ரசித்தார். தாமிரா சிரித்தபடி சொன்னாள். "எங்கம்மா பெயர் தாரா. அம்மா பெயர் என் பெயருக்குள் இருக்கிற மாதிரி செலக்ட் செய்யறப்ப கிடைச்ச பெயர் தான் இது"

"அப்படியா? இப்ப என் சந்தேகம் போயிடுச்சு" என்ற அருணும் சிரித்தான்.

"உங்களுக்கு சேதுபதியோட காலேஜ்மேட்ஸ் யாரும் கிடைக்கலையா?"

"சுவாரசியம் என்னன்னா எங்கம்மா கூட அந்தக் காலேஜில் அதே சமயம் படிச்சவங்க தான். ஆனா சேதுபதியைப் பத்தி அவங்களுக்கு எதுவும் ஞாபகம் வரலை. அவர் அந்த சமயம் காலேஜில் அவ்வளவு பிரபலமில்லை போல இருக்கு"

"எந்தக் காலேஜ், எந்த வருஷம்?"

இரண்டையும் அருண் சொன்னான்.

தாமிரா அதிசயித்துச் சொன்னாள். "என்ன ஆச்சரியம்! எங்கம்மா கூட அதே காலேஜில் கிட்டத்தட்ட அதே சமயத்தில தான் படிச்சவங்க"

"அப்படியா" என்று ஒரே சமயத்தில் அருணும் அம்பலவாணனும் சேர்ந்து கேட்டார்கள். அருண் புதிய நம்பிக்கை குரலில் தொனிக்க சொன்னான். "அப்படின்னா உங்கம்மா கிட்ட கூட நீங்க சேதுபதி பத்தி கேட்டுப் பார்க்கலாம். அவங்களுக்கு ஏதாவது தெரிஞ்சிருக்கலாம்"

## (45)

You cannot teach a man anything; you can only help him find it within himself.

– Galileo

பேச்சோடு பேச்சாக சாமர்த்தியமாய் அருண் தாமிராவிடம் சேதுபதி பற்றி அவள் தாயிடம் கேட்கச் சொன்ன விதத்தை அம்பலவாணன் மனதிற்குள் மெச்சினார். தாமிரா முகத்தில் ஒருவித சோகம் தோன்றி மறைந்தது.

"அம்மா பல வருஷமாய் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தாங்க. நேற்று தான் குணமானாங்க. அது மெடிக்கல் மிஸ்ட்ரி தான்னு சொல்லணும். அதனால அவங்களுக்கு அந்தப் பழைய தகவல் எல்லாம் எந்த அளவு ஞாபகம் இருக்கும்னு தெரியலை"

"சாரி..." என்றான் அருண்.

"பரவாயில்லை....அப்பா இறந்த அதிர்ச்சியை அவங்களால ஜீரணிக்க முடியலை. கிட்டத்தட்ட இருபத்தி அஞ்சு வருஷமாய் சிலை மாதிரி தான் இருந்தாங்க. ஏதோ அதிசயமாய் நேற்று திடீர்னு சரியாயிட்டாங்க..... சரிங்க நான் கிளம்பறேன். அந்த விஞ்ஞானி பற்றி ஏதாவது புதுத் தகவல் கிடைச்சா எனக்கு சொல்லுங்க. நான் இந்த புக் படிச்சு முடிச்சவுடன் திருப்பித் தர்றேன். நீங்க இந்த நாவல் சம்பந்தமாய் சொன்னப்ப எனக்கு ஏதோ த்ரில்லர் படம் பார்த்த மாதிரி தோணிச்சு. போய் முதல் வேலை இந்த புக் படிக்கறது தான். பை...." இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு தாமிரா கிளம்பினாள்.

அவள் போய் சிறிது நேரம் இருவரும் ஒன்றும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர்.

அம்பலவாணன் தான் முதலில் பேசினார். "கிட்டத் தட்ட சேதுபதி காணாமல் போனது, தாமிராவின் அம்மா மனநிலை பாதிக்கப்பட்டது எல்லாம் ஒரே காலகட்டமாய் தான் தெரிகிறது அருண். . . ."

"சார் நமக்குத் தெரிந்தவரை ஈஸ்வரன் தங்கை கல்யாணமோ, தங்கை கணவன் மரணமோ பற்றி ஒரு விவரமும் இல்லை. யோசிச்சுப் பார்த்தால் நீ நான் தாமிரபரணியின் 'தேவி' தாமிராவின் அம்மாவாகவே கூட இருக்கலாம்னு தோணுது. தாமிரபரணி நதிக்கரையில் ஏற்பட்ட காதல் கல்யாணத்தில் முடியவில்லை. பிரிவில் தான் முடிந்திருக்கிறது. அந்தப் பிரிவையே மரணம்னு மாற்றி மருமகளிடம் அவர் சொல்லி இருக்கலாம்......"

"எனக்கும் அது தோணிச்சு அருண். ஆனால் அந்த லாஜிக்கில் பெருசா இடிக்கிற விஷயம் ஒண்ணு இருக்கு. அவங்க பிரிஞ்ச சமயம் தாமிராவின் அம்மா கர்ப்பமாய் இருந்தாங்கன்னா ஈஸ்வரன் அவங்களுக்குக் கண்டிப்பாய் கல்யாணம் செய்து வைக்காமல் இருந்திருக்க மாட்டார். ஈஸ்வரனை மீறி கல்யாணத்திற்கு மறுக்க அந்த தேவன் குடும்பத்திற்கு என்ன காரணம் இருக்க முடியும்? அப்படியே இருந்தாலும் ஈஸ்வரனை எதிர்த்துகிட்டு யாரும் ஜெயிச்சதா சரித்திரம் இல்லை அருண்....."

அவர் சொன்னதிலும் உண்மை இருந்ததாக அவனுக்குப் பட்டது. எப்படி யோசித்துப் பார்த்தாலும் முடிவில் குழப்பமே அவர்களுக்கு மிஞ்சியது.

அன்று இரவு அவன் வீட்டுக்குப் போன போது வாசலில் சந்திரன் அவன் வரவுக்காகக் காத்திருந்தார். காவ்யாவின் தந்தை அப்படிக் காத்திருந்தது அவனுக்கு என்னவோ போலிருந்தது. காவ்யா தன் தந்தையின் மனமாற்றத்தையும் அவர் ஒழுங்காக வேலைக்குப் போய்க் கொண்டிருப்பதையும் தெரிவித்தது முதல் அருண் மனதில் ஒருவித மரியாதையை அவர் சம்பாதித்திருந்தார். பைக்கை நிறுத்தி "ஏன் இங்கேயே நிற்கிறீங்க. உள்ளே போய் உட்கார்ந்திருக்கலாமே" என்று சொன்னான்.

"பரவாயில்லை தம்பி...." என்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொண்டாலும், உள்ளே போய் தான் ஒரு முறை அநாகரிகமாக நடந்து கொண்டது அவர் மனதில் கசப்பான நினைவாக இருப்பதை அருண் ஊகித்தான்.

"என்ன விஷயம் சொல்லுங்க"

"உங்க கல்யாண விஷயமாய் சீக்கிரம் நீங்க ஒரு முடிவெடுத்தாப் பரவாயில்லை. எனக்கு கல்யாண வயசில் இன்னொரு பொண்ணும் இருக்கா.... உங்க கல்யாணம் தாமதமாச்சுன்னா அவளோடதும் தாமதமாகும்........."

அருண் அவருக்குப் பதில் எதுவும் சொல்லவில்லை. யோசித்தான். அவன் யோசிப்பதற்கான காரணத்தைத் தப்பாகப் புரிந்து கொண்ட அவர் அவசரமாகச் சொன்னார். "தம்பி சத்தியமாய் சொல்றேன். கல்யாணத்துக்கப்புறம் வந்து உங்க குடும்பத்தை அசிங்கப்படுத்த மாட்டேன். என் குடும்பம் நடத்த ஒரு பைசா உங்க கிட்ட இருந்து எதிர்பார்க்க மாட்டேன்....."

அருண் அவரையே கூர்ந்து பார்த்தான்.

அவர் தொடர்ந்தார். "நான் காவ்யா கிட்டயே உங்க கிட்ட பேசச் சொன்னேன். அவள் உங்களை அவசரப்படுத்த விரும்பலை. ஆனா கல்யாண வயசில் இன்னொரு பெண்ணை வச்சிருக்கிற நான் அவசரப்படாம இருக்க முடியும்களா? நீங்க தப்பாய் எடுத்துக்கக் கூடாது..."

முதல் முறை தங்கள் வீட்டில் வந்து கலாட்டா செய்த மனிதருக்கும் இப்போது பொறுப்போடு யோசிக்கும் மனிதருக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை எண்ணி அருண் ஆச்சரியப்பட்டான். "வீட்டில் கலந்து பேசி ஒரு நல்ல நாள்ல நாங்களே உங்க வீட்டுக்கு வர்றோம். எந்த நாள்னு நான் காவ்யா கிட்ட சொல்லி அனுப்பறேன்."

அவன் வார்த்தைகளை நம்ப முடியாமல் சந்திரன் ஒரு கணம் சிலையாக நின்றார். அவன் காலில் விழுந்தாவது கல்யாணத்திற்கு சாதகமாக அவனை யோசிக்க வைக்க வேண்டும் என்று வந்தவருக்கு அவன் உடனடி பதில், வயிற்றில் பாலை வார்த்தது. இரு கைகளையும் சேர்த்து கூப்பினார். அருணுக்கு அவர் அப்படிக் கைகூப்பியது தர்மசங்கடமாக இருந்தது. "உள்ளே வாங்களேன்...."

"இல்லை தம்பி...வீட்டில குழந்தைகள் காத்துகிட்டிருப்பாங்க. கிளம்பறேன்"

அவர் போவதையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அருண் உள்ளே போனான்.

மாதுரியை அழைத்து சந்திரன் சொன்னதைச் சொன்னான். "....அவர் சொல்றதிலேயும் ஒரு நியாயம் இருக்குன்னு தோணிச்சு. ஒரு நல்ல நாள் பார்த்து நாங்க பேச வர்றோம்னு சொல்லியிருக்கேன்"

"வர்றோம்னா நாம அவங்க வீட்டுக்குப் போகணும்னு சொல்றியா?" மாதுரி கேட்டாள்.

"அது தானே முறை. ஏன் அவங்க ஏழைகள், அவங்க வீட்டுக்கு நாம எப்படிப் போறதுன்னு நீ யோசிக்கிறியா?"

அவன் முகம் இறுகியதையும் அவன் கோபத்தில் கேட்டதையும் பார்த்து மாதுரி பயந்து போனாள். "ஏண்டா நான் நினைக்காததையெல்லாம் நினைச்சதா சொல்றே...." அவள் மழுப்பினாலும் அவர்கள் வீட்டுக்குப் போவதில் அவளுக்கு இருந்த தயக்கத்தை அருண் உணராமல் இல்லை.

அவளே அவசரமாக தொடர்ந்தாள். "சரி நான் ஜோசியர் கிட்ட நாளைக்கே பேசி நல்ல நாள் பார்த்து சொல்லச் சொல்றேன்..."

"பார்த்துட்டு உன் புருஷன் கிட்டயும் சொல்லிடு. நீ நான் அவர் மூணு பேரும் அவங்க வீட்டுக்குப் போய் சம்பந்தம் பேசுறோம்"

மாதுரியின் முகம் வெளிறியது. "அவருமா?......"

"அவர் தானே எனக்கு அப்பா?"

"நீ ஏண்டா இன்னைக்கு ஏடாகூடமாவே பேசறாய்?'

"பின்னே நீ எதுக்கு அவருமான்னு கேட்கிறாய்? பெத்துப் போட்டுட்டா மட்டும் போதாது. அவர் பொறுப்பை அவர் செஞ்சு தான் ஆகணும்...... அவர் கிட்ட உனக்குப் பேச தயக்கமாய் இருந்தா சொல்லு. நானே பேசறேன்....."

"வேண்டாம்.....நானே கேட்கறேன்"

"எனக்கு பிசினஸ் மீட்டிங் இருக்கு வெளியூர் போகணும் அது இதுன்னு சாக்கு சொன்னா அதையெல்லாம் கேன்சல் பண்ண சொல்லு" அவன் சொல்லி விட்டு உடை மாற்ற அவனுடைய அறைக்குச் சென்றான்.

மாதுரி என்ன செய்வதென்று குழப்பத்தோடு யோசிக்க ஆரம்பித்தாள்.

## (46)

The only way to discover the limits of the possible is to go beyond them into the impossible.

– Arthur C. Clarke

அருண் உடை மாற்றிக் கொண்டு வந்த போதும் தன் தாய் ஆழ்ந்த சிந்தனையிலேயே இருப்பதைப் பார்த்தான். அம்மாவின் கவலை என்னவென்று அவனுக்குத் தெரியும். தன் பெயரில் இருந்த டிரஸ்ட் பற்றி தெரிவதற்கு முன்னால் தன் சம்பந்தமான எந்த விஷயத்திற்கும் தந்தையிடம் போகப் போவதில்லை என்பதில் அருண் உறுதியாகத் தான் இருந்து வந்தான். ஆனால் தற்போது அவனால் எதையும் அவர் பற்றி தீர்மானிக்க முடியவில்லை. இந்த விஷயத்தில் மனிதர் என்ன தான் செய்கிறார் என்று பார்க்கலாமே என்று தோன்றியது. காவ்யாவின் வீடு ஒரு அறை ஒரு சமையலறை என இரண்டு அறைகள் மட்டுமே கொண்டது என்பதை அவன் அறிவான். அந்த வீட்டுக்கு சம்பந்தம் பேசி முடிக்க ராஜராஜன் வருவது என்பது அவனுக்கே கூட ஒருமாதிரியாகத் தான் இருந்தது. ஆனாலும் இந்தத் திருமணம் காவ்யா குடும்பத்திற்கு அவர்கள் போடும் பிச்சை போல் இருக்கக் கூடாது என்பதில் அவன் உறுதியாக இருந்தான். ஒரு இயல்பான திருமண ஏற்பாட்டிற்கு தன் பெற்றோர் அவர்கள் வீட்டிற்குப் போய் பேசுவது தான் கௌரவமாக இருக்கும் என்று அவன் நம்பினான்.

ஆனால் மாதுரியோ இதைத் தன் கணவனிடம் எப்படிப் போய் சொல்வது என்ற சிந்தனையில் முடிவு காண முடியாமல் தவித்தாள். பிறந்த நாள் முதல் செல்வச்செழிப்பிலேயே இருந்தவளுக்கு தன் மகன் ஒரு ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது ஆரம்பத்தில் ஜீரணிக்க முடியாத ஒன்றாகவே இருந்தது. ஆனால் அருண் தன் முடிவை எந்த நிலையிலும் மாற்றிக் கொள்ள மாட்டான் என்பதை அறிந்து இருந்ததால் அதை ஏற்றுக் கொண்டு விட்டாள். மகன் மருமகள் பேரக்குழந்தை என தன் குடும்பம் சந்தோஷமாக மாறப் போவதைப் பற்றி கனவு கூட காண ஆரம்பித்து விட்டாள். மேலும் ராஜராஜனும் மகன் காதலை எதிர்ப்பது போல அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால் சம்பந்தம் பேச அந்தப் பெண்ணுடைய வீட்டுக்கு அவர் வருவது என்பதை அவளுக்குக் கற்பனை கூட செய்ய முடியவில்லை. தன்னிடமும், அருணிடமும் ஒரு வார்த்தை பேசக் கூட நேரமோ மனதோ இல்லாத ராஜராஜனிடம் இந்த விஷயத்தை எப்படிச் சொல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் அருணை அவரிடம் பேச விடுவது வீண் மனஸ்தாபத்தைத் தான் உருவாக்கும் என்பதில் அவளுக்குச் சந்தேகம் இருக்கவில்லை. தனக்குப் பிடிக்காத அல்லது பயனில்லாத விஷயங்களை மற்றவர்கள் பேச ஆரம்பிக்கும் போது அவர்கள் பேசப் பேச அங்கிருந்து நகர்வது அல்லது அவர்கள் பேச்சைத் தவிர வேறு ஏதோ ஒன்றில் ஆழ்ந்து விடுவது ராஜராஜனின் ஒரு பிரத்தியேக குணம். பெரும்பாலோருக்கு அது பெரிய அவமரியாதையாக இருக்கும். ஆனால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி ராஜராஜன் கவலைப்பட்டதில்லை. அருணிடம் அவர் அப்படி நடந்து கொண்டால் அவன் எடுக்கக்கூடிய முதல் முடிவு அந்த வீட்டை விட்டு வெளியேறுவதாகத் தான் இருக்கும். மாதுரியால் அதை நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.

ராஜராஜனிடம் பேசுவதற்கு முன்னால் ஜோசியருக்கு போன் செய்து நல்ல நாள் இரண்டு மூன்று பார்க்கச் சொன்னாள். அந்த நாட்களில் ராஜராஜனுக்கு வசதியான ஒரு நல்ல நாளை தேர்ந்தெடுக்கலாம் என்று எண்ணினாள். ஜோசியர் ஏதோ கணக்குப் போட்டு அடுத்த வெள்ளிக் கிழமை ஒரு நாள் தான் இதற்குப் பொருத்தமான நல்ல நாள் என்றும், விட்டால் அடுத்த நாற்பது

நாட்களுக்கு நாள் இல்லை என்றும் சொன்னார். அந்த நாளிற்கு ராஜராஜன் என்ன அப்பாயின்மென்ட் வைத்துக்கொண்டு இருக்கிறாரோ என்று மறுபடி மாதுரி யோசனையில் ஆழ்ந்தாள்.

"என்ன சொன்னார், ஜோசியர்" அருண் கேட்டான்.

மாதுரி அவர் சொன்னதைச் சொன்னாள். "அப்பா அன்றைக்கு முதல்லயே என்ன அப்பாயின்ட்மென்ட் ஒத்துகிட்டிருக்காரோன்னு யோசிக்கிறேன்"

"ஒரே பிள்ளைக்காக ஒரு நாள் அப்பாயின்மென்டை கேன்சல் செஞ்சா தப்பில்லை"

மாதுரி மகனைப் பரிதாபமாகப் பார்த்தாள். ஒரு தாய், தந்தைக்கும் மகனுக்கும் இடையே பாலமாக இருக்கிறாள் என்பதை எங்கேயோ படித்த ஞாபகம் வந்தது. ஆனால் அதை சாதிக்கும் முன் ஒரு மத்தளமாக இரு பக்கங்களில் இருந்தும் பல அடிகள் வாங்க வேண்டி இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

அருண் அவள் அருகே வந்து அமர்ந்தான். "நீ ஏன் இவ்வளவு யோசிக்கிறாய்னு எனக்குப் புரியலைம்மா. நீ உரிமையாய் அவர் கிட்ட போய் சொல்ல வேண்டியதை விட்டுட்டு அவர் கிட்ட ஏதோ யாசகம் கேட்கற மாதிரி ஏன் யோசிக்கிறாய்?"

மகனின் பிரசங்கம் கேட்கும் மனநிலையில் அவள் இல்லை. இதயத்தில் சம்மட்டியால் அடிக்கும் இந்தப் படபடப்பில் இருந்து தப்பிக்க ஒரேயடியாக கணவனிடம் பேசி முடித்து விடத் தீர்மானித்தாள். நேரம் ஆக ஆக இதயம் வெடித்து விடும் போல் இருந்ததால் தாமதிக்க மனம் இல்லாமல் எழுந்தாள். "அவர் கிட்ட பேசிட்டு வந்துடறேன்"

அவள் போவதைப் பார்க்க அவனுக்குப் பாவமாக இருந்தது. வேகமாக எழுந்தாலும் நடக்கும் போது கால்களில் பாறையைக் கட்டி விட்டது போல நடையில் அவளையும் மீறிய தயக்கம் இருந்தது. அவர் அறையை நோக்கி மேலே படியேறுகையில் அவள் தனது சர்வ பலத்தையும் சேர்த்து நடப்பது அவனுக்குப் புரிந்தது. அவள் கொண்டு வரப்போகும் பதிலுக்காகக் காத்திருந்தான். ஒரு வேளை அவர் மறுத்து விட்டால் அடுத்து என்ன செய்வது என்று இன்னும் அவனால் தீர்மானிக்க முடியவில்லை. ஆனால் அதன் பிறகு இங்கு வசிப்பதில் அர்த்தமில்லை என்று மட்டும் அவன் மனம் சொன்னது.

மாதுரி அறையினுள் நுழைகையில் ராஜராஜன் ஏதோ ரிப்போர்ட்டுகளை படித்துக் கொண்டிருந்தார். அவள் வந்ததைப் பார்த்து புருவங்களை என்ன என்பது போல் உயர்த்திப் பார்த்து விட்டு மறுபடி தன் கைகளில் இருந்த ரிப்போர்ட்டுகளில் கவனம் செலுத்தினார்.

"அருண் அந்தப் பொண்ணு காவ்யாவை சீக்கிரமாய் கல்யாணம் செய்துக்க தீர்மானிச்சுட்டான். அதுக்கு....அதுக்கு...."

அவர் அவள் தயக்கத்தைப் பொருட்படுத்தவில்லை. அவள் மேற்கொண்டு என்ன சொல்லப் போகிறாள் என்று தெரிந்து கொள்ளவும் ஆர்வம் காட்டவில்லை.

அவளாகவே தொடர்ந்தாள். ".....முறைப்படி அந்தப் பொண்ணு வீட்டுக்கே போய் ஒரு நல்ல நாளில் நாம சம்பந்தம் பேசணும்னு சொல்றான். ஜோசியர் கிட்ட கேட்டால் வர்ற வெள்ளிக்கிழமை விட்டால் நாற்பது நாளுக்கு வேற நல்ல நாள் இல்லைன்னு சொல்றார்...."

அவர் ஒன்றும் பேசாமல் தன் ரிப்போர்ட்டுகளில் ஆழ்ந்திருந்தார். மாதுரி சொன்னாள். "அவன் இது நாள் வரைக்கும் எதுக்குமே உங்களை வரச் சொன்னதில்லை. இதுக்கும், அவன்

கல்யாணத்துக்கும் மட்டும் நீங்க வராட்டி அது நல்லா இருக்காது. இது அவனா போய் பேசக்கூடிய விஷயம் இல்லை....."

அவர் அப்போதும் ஒன்றும் சொல்லவோ, ரிப்போர்ட்டுகளில் இருந்து தலை நிமிரவோ இல்லை.

மாதுரி துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்னாள். "இதுக்குக் கூட நீங்க வராம இருக்க என் குழந்தை அவன் பிறந்ததைத் தவிர வேற எந்தத் தப்பும் செய்யலைங்க"

எதற்குமே அசராத ராஜராஜன் நிமிர்ந்து தன் மனைவியைப் பார்த்தார். அந்தப் பார்வையில் ஒரு கணம் எத்தனையோ உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. மறுபடி அந்த சலனமே இல்லாத வெறுமை அவர் முகத்தை மூடியது. தனது அப்பாயின்மென்ட் புத்தகத்தை எடுத்தபடி "என்ன தேதி வருது?" என்றார்.

அவள் சொன்னாள். "இருபதாம் தேதி"

அவளிடம் மேற்கொண்டு ஒன்றும் சொல்லாமல் தன் அப்பாயின்மென்ட் புத்தகத்தைப் பிரித்துப் பார்வையிட்டு தன் செல்போனில் செகரட்டரியை அழைத்தார். "....வர்ற இருபதாம் தேதி வெள்ளிக்கிழமை சாயங்காலம் எல்லா அப்பாயின்மென்டையும் கேன்சல் செய்துடுங்க. எனக்கு பர்சனல் வேலை கொஞ்சம் இருக்கு"

அந்தத் தேதிய பக்கத்தில் சிவப்பில் பெரிய கோடிழுத்து ஏதோ எழுதியவர் அதை மூடி விட்டு அவளைப் பார்த்துத் தலையசைத்தார்.

கண்கள் கலங்கச் சொன்னாள். "தேங்க்ஸ்".

அவள் போய் நிறைய நேரம் ராஜராஜனால் அந்த ரிப்போர்ட்டுகளில் கவனம் செலுத்த முடியவில்லை. "....அவன் பிறந்ததைத் தவிர வேற எந்தத் தப்பும் செய்யலைங்க" என்ற வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவர் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தது.

## (47)

An answer is invariably the parent of a great family of new questions.
– John Steinbeck

அடுத்த வெள்ளிக்கிழமை பெற்றோருடன் திருமணப் பேச்சு பேச வீட்டுக்கு வருவதாகச் சொன்ன போது காவ்யாவுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. "அருண்.....உங்கப்பா வர்றாரா?"

"ஆமா. ஏன் இப்படி அவரை எட்டாத தூரத்தில் வச்சிப் பார்க்கிறீங்கன்னு எனக்குப் புரியலை."

"அருண், சின்ன சமையல் ரூமைத் தவிர வேறொரு ரூம் மட்டும் தான் எங்க வீட்டில் இருக்கு"

"அந்த ஒரு ரூமில் நாங்க மூணு பேர் வந்தால் உட்கார இடம் இருக்குமில்ல"

அவள் தர்மசங்கடத்துடன் நெளிந்தாள். "இருக்கும்..... நீ பரவாயில்லை. ஆனா உங்கம்மா அப்பா அதை ஒரு ரூமுன்னாவது சொல்லுவாங்களான்னு எனக்கு சந்தேகமாய் இருக்கு."

"அவங்களுக்குப் பிடிக்கலைன்னா அதுக்கு வேற பெயர் வச்சுக்கட்டும்"

"ஜோக் அடிக்காதே. எனக்கு வயித்தைக் கலக்குது" என்றாள் காவ்யா. ராஜராஜனின் கம்பீரமான தோற்றத்துக்கு அவரை அவளது வீட்டு, அந்தக் குறுகிய களையிழந்த அறையில் இருப்பதாக எண்ணிப்பார்க்கக் கூட அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

"அருண், இல்லாட்டி ஒரு கோயில்ல வச்சுகிட்டா என்ன?" சொன்ன பிறகு தான் அப்படி ஒரு கோயிலில் வைத்துக் கொண்டால் கூட ராஜராஜனுடன் சம்பந்தம் பேசும் அவர்கள் ஏழைக் குடும்பத்தை வெளியாட்கள் ஏளனமாகப் பார்ப்பார்கள் என்ற எண்ணமும் வந்தது.

அருண் ஒரேயடியாக அவளது எல்லா ஆலோசனைகளையும் உதறித் தள்ளினான். "பார் காவ்யா. இது எங்கப்பா பங்கேட்கிற பிஸினஸ் கான்ஃபரன்ஸ் அல்ல, இடம் அவருக்குப் பிடிக்குமா இல்லயான்னு யோசிக்க. இது நம்ம கல்யாணம். பொண்ணு நீ, நீ இருக்கிற வீடு அது. இதை நாம மாத்த முடியாது. அவரும் அம்மாவும் ஒரு மணி நேரம் அங்க இருக்கிறதால் குறைஞ்சு போயிடமாட்டாங்க. நான் தீர்மானம் செய்தாச்சு......"

அவளால் இன்னமும் இதை ஜீரணிக்க முடியவில்லை. அருணுக்கும் முதலில் அவன் அம்மா வந்து சொன்ன போது உடனடியாக நம்பக் கஷ்டமாகவே இருந்தது. "அவர் வர்றார். அன்னைக்கு சாயங்கால அப்பாயின்மென்ட் எல்லாம் கேன்சல் செய்ய என் முன்னால் தான் செகரட்டரிக்கு போன் செய்தார்." என்று அவள் சொன்ன போது அருண் ஆவலோடு கேட்டான். "மெஷின் எப்படி ஒத்துகிச்சு?"

"இன்னொரு தடவை அவரை மெஷின்னு கூப்பிட்டால் தோளுக்கு மேல் வளர்ந்தவன்னு பார்க்க மாட்டேன். ஓங்கி அறைஞ்சுடுவேன், சொல்லிட்டேன்" அம்மா நிஜமாகவே கோபப்பட்டாள்.

"சாரி, சாரி. உன் வீட்டுக்காரர் உடனடியாய் ஒத்துகிட்டாரா, இல்லை ஆரம்பத்தில் தயங்கினாரா"

மாதுரி சாதுரியமாக பதில் சொல்லாமல் மழுப்பினாள். "உங்கப்பா வர்றார். அவ்வளவு தான்"

அவள் எப்படி சாதித்தாள் என்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும் அவளுக்கு அதை சுலபமாக சாதித்திருக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியாமல் இல்லை. அதைப் பற்றி மேலும் யோசிக்க விரும்பாமல் "காவ்யா தாமிராவை நேற்றைக்குப் பார்த்தேன்....." என்று தாமிராவைப் பற்றி காவ்யாவிடம் சொல்ல ஆரம்பித்தான். "....என்ன ஒரு அழகு தெரியுமா அவள்...."

நிறுத்தி ஒரு கணம் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். காவ்யா கேட்டாள். "என்ன பார்க்கிறாய்?"

"இன்னொரு பெண் ரொம்பவே அழகுன்னு சொல்றேன். கொஞ்சம் கூட பொறாமையே இல்லாம கேட்கிறாயே"

"இதில் பொறாமைப்பட என்ன இருக்கு?"

அவன் புன்னகைத்தான். சாதாரண பெண்களிடம் இருந்து வித்தியாசப்பட்ட இந்தக் குணம் தான் ஆரம்பத்திலிருந்தே அவளிடம் அவனை ஈர்த்தது. தாமிராவைச் சந்தித்ததைப் பற்றி விவரமாக அவளிடம் சொல்ல ஆரம்பித்தான்.

தாயை சமையலறையில் பார்த்த தாமிரா திகைத்துப் போனாள். பலவிதமான உணவுப் பதார்த்தங்கள் தயாராக இருந்தன. தாமிரா ஆச்சரியத்துடன் அவற்றைப் பார்வையிட்டாள். எல்லாமே ஈஸ்வரனுக்குப் பிடித்தவை. தாய் நலமடைந்ததுமல்லாமல் இப்படி விதவிதமாக சமைக்கும் அளவு

முன்னேறியிருப்பது அவளை அசத்தியது. அதை வெளிக் காட்டாமல் தாமிரா சொன்னாள். "இதென்ன எல்லாமே உன் அண்ணனுக்குப் பிடிச்ச ஐட்டமாவே இருக்கு"

தாரா மகளைப் புன்னகையுடன் பார்த்தாள். "சமைக்கிறதுக்கு முன்னால் உன்னைத் தேடினேன். நீ வெளியே போயிருந்தாய். நீ உனக்குப் புடிச்சதை சொல்லு. நான் அடுத்த வேளைக்கு அதையெல்லாம் செய்து வைக்கிறேன், சரியா"

தாமிரா சந்தோஷமாக தனக்குப் பிடித்ததை எல்லாம் வரிசைப்படுத்த ஆரம்பித்தாள். பட்டியல் நீண்டு கொண்டே போனதைப் பார்த்த ஈஸ்வரன் "போதும், போதும். ஒரேயடியாய் இத்தனையும் சமைக்க அவள் என்ன மெஷினா?" என்று அவளைக் கட்டுப்படுத்தினார்.

தங்கை மேல் அவருக்கு இருந்த பாசம் வழக்கம் போல் தாமிராவை பிரமிக்க வைத்தது. "அம்மா நீ ஏன் என்னோட நிறுத்திட்டே. எனக்கும் இந்த மாதிரி பாசம் வைக்கிற ஒரு அண்ணனோ தம்பியோ இருந்திருந்தால் எவ்வளவு நல்லாயிருந்திருக்கும்"

ஒரு கணம் தாரா தடுமாறிக் கையில் வைத்திருந்த பாத்திரத்தை நழுவ விட்டாள். ஈஸ்வரன் பதறினார். "தாரா...."

"ஒண்ணுமில்லைன்னா....கையில் இருந்தது நழுவிடுச்சு. அவ்வளவு தான்" என்ற தாரா தன்னை சுதாரித்துக் கொண்டு மகளிடம் இயல்பாகக் கேட்டாள். "நீ எங்கே போயிருந்தாய்?"

தாமிரா உற்சாகத்துடன் சொல்ல ஆரம்பித்தாள். "எல்லாம் ஒரு பழைய விஞ்ஞானியைப் பத்தித் தெரிஞ்சுக்கத்தான். அம்மா நான் இன்னைக்கு அருண்னு ஒரு பத்திரிக்கைக் காரரைப் பார்த்தேன். என்ன ஸ்மார்ட் தெரியுமா? பார்த்தவுடனேயே எனக்கு நிறைய நாள் பழகின மாதிரி ஒரு தோணல். ......." அங்கு தெரிய வந்தவற்றை அவள் உற்சாகமாக சொல்லச் சொல்ல ஈஸ்வரனும் தாராவும் இடைமறிக்காமல் கேட்டார்கள். தன் மகள் முகத்தில் தெரிந்த உற்சாகத்தையும், அருணைப் பற்றிச் சொன்ன போதெல்லாம் அவள் கண்களில் மின்னிய ஒளியையும் பார்த்த தாராவுக்கு வயிற்றைக் கலக்கியது. ஈஸ்வரன் மருமகளைப் பார்ப்பதை விட்டு விட்டு தங்கையைக் கவலையுடன் பார்க்க ஆரம்பித்தார்.

கடைசியில் தாமிரா மூச்சு வாங்காமல் கேட்டாள். "அம்மா நீ, 'நீ நான் தாமிரபரணி' படிச்சிருக்கியா?"

ஈஸ்வரன் கைகள் நாற்காலியை இறுக்கிப் பிடித்தன. தாரா ஒரு கண மௌனத்திற்குப் பின் சொன்னாள். "படிச்சிருக்கேன்"

"அதோட ஹீரோ தான் என்னோட சயிண்டிஸ்ட்டுங்கிறது ஆச்சரியமாய் இருக்கு இல்லையாம்மா. நான் இனி மேல தான் அந்த புக் படிக்கப் போறேன். அம்மா உனக்கு அந்த சேதுபதியைத் தெரியுமா? அவர் உன் காலேஜ்ல தான் படிச்சவராம்"

தாரா ஒருவிதத் தயக்கத்துடன் சொன்னாள். "தெரியும். ஆனா அப்ப அவர் கதை எழுதக் கூடியவர்னு தெரியாது"

ஈஸ்வரன் தன் கட்டுப்பாட்டையும் மீறி நிகழ்வுகள் நடப்பதை உணர்ந்தார். அவரது தங்கையால் கூசாமல் பொய் பேச முடியாது என்பதை அவர் அறிவார். இது போன்ற விஷயங்களில் அவள் என்றுமே அவருக்கு நேர் எதிர்மாறாக இருந்தாள். இந்த உலகத்தில் இன்னமும் இப்படிப்பட்ட களங்கமில்லாத, பவித்திரமான ஜீவன்கள் இருக்க முடிவது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. மாசுகள் நிறைந்த இந்த உலகத்தால் கூட களங்கப்படுத்த முடியாத இவ்வளவு நல்லவளாக இருப்பது தான் இவளுடைய இத்தனை துக்கங்களுக்கும் காரணம் என்று நினைக்கையில் இதயத்தில் ரத்தம் கசிந்தது.

தாமிரா சொன்னாள். "அருணுக்கு மட்டும் உனக்கு சேதுபதியைத் தெரியும்னு தெரிஞ்சால் அடுத்த ஐந்தாவது நிமிஷம் இங்கே இருப்பார்...."

மருமகளின் உற்சாகத்தை ஈஸ்வரன் உடனடியாக வெட்டினார். "தாமிரா என்ன ஆனாலும் சரி இந்த வீட்டுக்கு அருண், அவன், இவன்னு பத்திரிக்கைக்காரங்க வர்றதை நான் ஒத்துக்க மாட்டேன்."

ஈஸ்வரனுக்குப் பத்திரிக்கையாளர்கள் மேல் இருந்த வெறுப்பு தாமிரா அறிந்ததே. சிறு வயதில் இருந்தே அவர் வீட்டில் எந்தப் பத்திரிக்கையாளரும் வந்து அவள் பார்த்ததில்லை என்பதால் அருண் வரவை எதிர்க்க அவருக்கு வேறு பிரத்தியேக காரணம் இருக்கக்கூடும் என்று தாமிராவுக்கு சந்தேகம் வரவில்லை.

"சரி. அவரை வரச்சொல்லலை, சரி தானே. அம்மா உனக்கு அந்த விஞ்ஞானியைப் பத்தி ஏதாவது தெரியுமா?"

# (48)

There is no such thing as chance or accident, the words merely signify

Our ignorance of some real and immediate cause.

Adam Clarke

தாமிராவின் கேள்வி தாராவை நிலைகுலைய வைத்தது. என்ன சொல்வது என்று அவள் தடுமாறுவதற்குள் ஈஸ்வரன் மருமகளைப் பார்த்து எரிச்சலுடன் சொன்னார். "அந்த விஞ்ஞானியைப் பத்திக் கேட்டு கேட்டு எனக்குக் காது புளிச்சுடுச்சு. உங்கம்மா கிட்டயும் அந்த ராமாயணத்தை ஆரம்பிச்சுடாதே".

தாமிரா மாமாவைக் கோபத்துடன் பார்த்தாள். "உங்களுக்கு விஞ்ஞானத்தோட அருமை என்ன தெரியும். நான் அம்மா கிட்ட கேட்க வந்தது என்னன்னா, அருண் சொல்ற மாதிரி சேதுபதி படிச்ச காலத்துலயே அந்த விஞ்ஞானியும் படிச்சிருக்கலாம். அம்மாவுக்கு சேதுபதியை தெரிஞ்சிருக்கறதால அந்த விஞ்ஞானியையும் தெரிஞ்சிருக்கலாம்னு கேட்டேன். அது என்ன ராமாயணமா?"

"சரி உன்னோட லாஜிக்குக்கே வர்றேன். அந்தக் கதையில் அந்த விஞ்ஞானி சேதுபதி கூட படிச்சவன், நண்பன்னு சொல்லியிருக்கா? அது நிஜக் கதைன்னே வச்சுகிட்டா கூட அவங்களை சேதுபதி அந்த நதிக்கரையில தான் பார்த்த மாதிரி இருக்கு. காலேஜ் பத்தி ஒரு இடத்துல கூட சொன்ன மாதிரி தெரியலியே"

"நான் அந்தக் கதையை இனிமே தான் படிக்கணும். அதுசரி மாமா நீங்க கூட அந்தக் கதையைப் படிச்சிருக்கீங்களா?'

"நான் எங்க படிச்சேன். அந்த சேதுபதி நாய் காணாம போனப்ப எந்த புஸ்தகத்தைத் திறந்தாலும் அந்தக் கதை பத்தின டிஸ்கஷன் தான். டிவியை ஆன் பண்ணினா அதே நியூஸ் தான். அப்ப காதில விழுந்தது தான் எல்லாம். சரி தாரா, நாம் சாப்பிடலாம். எனக்குப் பசிக்குது"

"அந்த சேதுபதியை எதுக்கு நாயின்னு கூப்பிடறீங்க?"–தாமிரா விடுவதாக இல்லை

"நாயை வேற எப்படி கூப்பிடறது"

மாமாவை முறைத்துப் பார்த்தாள் தாமிரா. "சரி அந்த காணாமல் போன நாயைக் கண்டு பிடிச்சுத் தர முடியுமா?"

"ஏதாவது அரசியல்வாதியை வேணும்னா கண்டுபிடிச்சுத் தர்றேன். எழுத்தாளன், விஞ்ஞானின்னு கண்டு பிடிக்கச் சொல்லாதே"

"அரசியல்வாதிகள் காணாமல் போனதா சரித்திரமே இல்லையே. அப்படிக் காணாமப் போனா நாடு எவ்வளவோ நல்லாயிருக்குமே"

ஈஸ்வரன் முகத்தில் புன்னகை அரும்பியது. தாரா இருவரையும் அடக்கினாள். "சாப்பிடறப்ப அமைதியாய் சாப்பிடணும். உங்க ரெண்டு பேரோட வாக்குவாதம் எல்லாம் அப்புறம்"

தாமிரா தான் ஆரம்பத்தில் விஞ்ஞானியைத் தெரியுமா என்று தாயைக் கேட்டதை இந்த சர்ச்சையில் மறந்திருந்தாள். "சரி சாப்பிடலாம். நானும் சாப்பிட்டதுக்கப்புறம் அந்தக் கதை படிக்கணும்"

தாயின் சமையலை முதல் முதலில் சாப்பிட்ட போது அவள் அந்தக் கதையைக் கூட தற்காலிகமாக மறந்தாள். "அம்மா உன் சமையல் நிஜமாகவே சூப்பர்ம்மா. இவ்வளவு ருசியாய் நான் இது வரைக்கும் சாப்பிடவேயில்லை......."

தாரா தன் மகளை அளவற்ற பாசத்துடன் பார்த்தாள். அவள் கண்களில் லேசாக நீர்த்திரை. தாயின் சமையலை முதல் முதலாக சாப்பிடவே அவள் மகள் இருபத்தைந்து வருடங்களுக்கும் மேல் காத்திருக்க நேர்ந்து விட்டதே.

சாப்பிட்டு முடித்ததும், "நீ நான் தாமிரபரணி"யைப் படிக்க ஆவலோடு தாமிரா தன் அறைக்குச் சென்றாள். ஈஸ்வரன் தன் தங்கையை ஆழ்ந்த சிந்தனையோடு பார்த்தார்.

"என்னண்ணா பார்க்கிறாய்?"

"நீ உன் மகளை எப்படி சமாளிக்கப் போகிறாய்னு யோசிக்கிறேன், தாரா. நான் நாளைக்கு அவசரமாய் டில்லி போக வேண்டி இருக்கு. ரெண்டு நாள்ல வந்துடுவேன். அது வரைக்கும் அவள் கிட்ட இது சம்பந்தமாய் பேச்சு கொடுக்காதே"

தாரா தலையசைத்தாள். ஈஸ்வரன் எரிச்சலோடு சொன்னார். "அந்த மாதுரி எப்படி அருண் துப்பு துலக்கறதை அனுமதிக்கிறாள்னே எனக்குத் தெரியலை".

"நம்மால் தாமிராவைக் கட்டுப்படுத்த முடியுதாண்ணா. அது மாதிரி தான் மாதுரியும் அவனைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறாள்னு நினைக்கிறேன். அவள் என்ன சொல்லி அவனைத் தடுக்க முடியும்?"

ஒன்றும் சொல்லாமல் ஈஸ்வரன் எழுந்தார். "நீ போய் ரெஸ்ட் எடுத்துக்கோ தாரா"

அன்றிரவு தாமிரா அந்தக் கதையில் ஆழ்ந்து விட்டாள். ஒரு பக்கத்துக்கு மேல் கதைகளைப் படிக்கும் அளவு பொறுமை இல்லாதவள் ஒரு காதல் காவியத்தின் கதாபாத்திரங்களில் ஒன்றிப் போய் விட்டாள். கடைசியில் புத்தகத்தை மூடி வைத்துக் கொண்டு கற்பனையில் அந்தக் கதாபாத்திரங்களை எண்ணிப் பார்த்தாள். அருண் சொன்னதையும், கதையில் படித்ததையும் எண்ணிப் பார்த்த போது மனம் கனத்தது. இவ்வளவு ஆழமாகக் காதலித்தவர்கள் பிரிவை எப்படித் தாங்க முடியும்? அவள் மனதில் சேதுபதி நாவலில் எழுதிய முடிவு தான் நிஜமாக இருக்க முடியும் என்று தோன்றியது. பிரிந்து வாழ்வதை விட இறந்து போவது தான் அவர்களுக்கு எளிதாக இருந்திருக்கும் என்று அவள் நம்பினாள். அந்தக் கதைப்படி அவர்கள் உடனடியாக இறந்திருக்காவிட்டாலும் குறுகிய காலத்தில் இறந்திருக்கக்கூடும் என்று நினைத்தாள். ஆனால்

அருண் அவர்கள் உயிரோடு இருக்கக்கூடும் என்று தன் உள்ளுணர்வு சொல்வதாக சொன்னதை நினைத்த போது குழப்பமாக இருந்தது. அவனைப் போன்ற புத்திசாலி தப்பாக கணிக்க மாட்டான் என்றும் தோன்றியது. குழப்பத்துடன் உறங்க முற்பட்டாள்.

ஆனால் தாரா நீண்ட நேரம் உறங்காமல் விழித்திருந்தாள்.

மறுநாள் ஈஸ்வரன் விமானநிலையத்துக்குக் கிளம்பும் வரை காத்திருந்தவள், அவர் சென்ற பிறகு டெலிபோன் டைரக்டரியை எடுத்து உண்மை பத்திரிக்கையின் போன் நம்பரைத் தேடிக் கண்டுபிடித்தாள். போனில் அம்பலவாணனைக் கேட்டவள் இணைப்பு கிடைத்தவுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"வணக்கம். நான் தாமிராவின் அம்மா தாரா பேசறேன்"

அம்பலவாணன் சுதாரிக்க சிறிது நேரம் தேவைப்பட்டது. "சொல்லுங்கம்மா"

"நான் உங்களை நேரில் பார்க்கணும். இன்றைக்கோ, நாளைக்கோ உங்களுக்கு நேரம் கிடைக்குமா?"

அம்பலவாணன் இந்த திடீர் கோரிக்கையால் பேசும் சக்தியை இழந்து விட்ட மாதிரி தெரிந்தது. தாரா தொடர்ந்தாள். "என் அண்ணா டில்லி போயிருக்கார். அவர் வர்றதுக்குள் உங்களைப் பார்த்துப் பேச நினைக்கிறேன்...."

அம்பலவாணன் சொன்னார். "இன்றைக்கு சாயங்காலம் ஆறு மணிக்கு உங்களால் வர முடியுமா?"

"வர்றேன் சார். ஆனால் நான் உங்களை மட்டும் தனியாகப் பார்த்து பேசணும். நான் வர்றது என் அண்ணா, தாமிரா உட்பட யாருக்கும் தெரிய வேண்டாம்னு நினைக்கிறேன்....."

அவள் உங்களை மட்டும் என்பதை அழுத்திச் சொன்ன விதம் சந்திப்பின் போது அருண் இருப்பதையும் அவள் விரும்பவில்லை என்பதை அம்பலவாணனுக்குத் தெளிவாக உணர்த்தியது. "அப்படியே ஆகட்டும். நீங்க வாங்கம்மா" என்றார்.

அவள் சற்றுத் தயங்கி விட்டு தெளிவாகச் சொன்னாள். "நான் வர்றது அருணுக்குக் கூட தெரிய வேண்டாம், ப்ளீஸ்"

அம்பலவாணன் தன் காதுகளை நம்ப முடியாமல் திகைத்தார். அவள் அருணின் பெயரை சொன்ன விதம் முன் பின் தெரியாதவர்களைச் சொல்வது போல் இருக்கவில்லை. அண்ணா, தாமிரா பெயர்களை சொன்னது போல மிகவும் நெருக்கமானவர்கள் பெயர் சொல்வது போல் அவருக்குப் பட்டது. இது கற்பனையா இல்லை நிஜமா என்று அவரால் ஊகிக்க முடியவில்லை.

"சரிங்கம்மா" என்று சொல்லி போனை வைத்த பிறகும் நீண்ட நேரம் குழப்பத்தில் இருந்தார். அவள் ஏன் அவரை சந்திக்க வருகிறாள்? அது ஏன் ரகசியமாய் இருக்க வேண்டும் என்று நினைக்கிறாள்?

# (49)

For all sad words of tongue and pen, The saddest are these, 'It might have been'.

– John Greenleaf Whittier

அம்பலவாணனுக்குத் தாரா போன் செய்த விஷயத்தை அருணிடம் சொல்ல மனம் துடித்தாலும் தாராவுக்குக் கொடுத்த வாக்கை மீற அவரால் முடியவில்லை. அருண் அந்த அலுவலகத்திலேயே வேறொரு வேலையில் மும்முரமாக மூழ்கிக் கிடக்க அவர் தாராவின் வரவுக்காகக் காத்திருந்தார். தாரா வரும் போது சபாபதி இருப்பது ஈஸ்வரனுக்கு நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு சமானம் என்பதால் சற்று முன் தான் அவர் சபாபதியை ஒரு வேலை சொல்லி வெளியே அனுப்பி இருந்தார்.

இண்டர்காம் ஒலித்தது. தாரா வந்திருப்பதை அவரது செகரட்டரி தெரிவித்தாள். "அனுப்பும்மா" என்றார்.

அசப்பில் தாமிராவின் அச்சாக தாரா இருந்தாள். ஓரிரு நரைமுடிகள் அங்கங்கே பளிச்சிட்டன. மகளிடம் இல்லாத ஒருவித கம்பீர அழகு தாயிடம் இருந்தது. முகத்திலும், நடையிலும் ஒருவித மென்மை பிரதானமாக இருந்தது. "நமஸ்காரம்" அவள் அவரைப் பார்த்துக் கை கூப்பினாள். அம்பலவாணன் தன்னையும் அறியாமல் எழுந்து நின்றார். ஒரு மிக நல்ல பெண்மணி தன் முன்பு நிற்பதாக மனப்பூர்வமாக உணர்ந்தார். "வணக்கம். உட்காருங்கம்மா"

தாரா அவர் எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தாள். அமர்ந்தவள் அறையை சுற்றும் முற்றும் பார்த்தாள். அறைச் சுவரில் தங்க முலாம் தகட்டில் எழுதி இருந்த "சத்யமேவ ஜெயதே" மீது அவள் பார்வை ஒரு கணம் தங்கியது. பின் அவரைப் பார்த்து அவள் புன்னகைத்தாள். அம்பலவாணன் அவ்வளவு அழகான புன்னகையை இது வரை பார்த்ததில்லை என நினைத்தார். நேரடியாக அடுத்தவர் மனதை தொடர்பு கொள்ளக் கூடிய புன்னகை. மற்றவர்களை உடனே தனக்கு ஆதரவாக ஆக்கிக் கொள்ளும் புன்னகை.....

"தாமிரா உங்களைப் பற்றியும் அருண் பற்றியும் உயர்வாய் சொன்னாள்...."

"உயர்ந்தவங்க அடுத்தவங்களையும் அப்படியே பார்க்கிறாங்க..." அம்பலவாணன் சொன்னார்.

அவரது வார்த்தைகளை மனதினுள் மெச்சியபடி மறுபடி புன்னகைத்தாள். "இல்லை. உங்களைப் பத்தி மத்தவங்களும் அதே தான் சொல்றாங்க. இந்தக் காலத்திலும் இவ்வளவு நேர்மையாய் பத்திரிக்கை தர்மத்துடன் நீங்க பத்திரிக்கை நடத்தறீங்க. அப்படிப்பட்ட நீங்க ஒரு காலத்தில் மூன்று நாள் ஜெயிலில் இருந்தீங்கன்னு ரெண்டு நாள் முன்னால் தான் கேள்விப்பட்டேன். எனக்கு ரெண்டு நாளாய் சரியாய் தூக்கம் வரலை...." சொல்லச் சொல்ல அவள் கண்களில் லேசாய் நீர்த்திரை போட்டது. குரல் கரகரத்தது.

இந்த வார்த்தைகளை அவளிடம் இருந்து சற்றும் எதிர்பார்த்திராத அம்பலவாணன் திகைத்துப் போனார்.

அவள் தன்னிரண்டு கைகளையும் கூப்பினாள். "உங்களை மாதிரி ஒரு நல்ல நேர்மையானவருக்கு ஒரு தப்பும் செய்யாம ஜெயில்ல இருந்த அந்த மூன்று நாள்ல ஒவ்வொரு நிமிஷமும் எப்படி இருந்திருக்கும்னு என்னால உணர முடியுது. அப்படி யாரால ஆச்சுன்னு நீங்க பின்னால் தெரிஞ்சிருப்பீங்க. மன்னிச்சுடுங்க. அந்த சமயத்தில் நான் கொஞ்சம் மனநிலை

சரியில்லாம இருந்தேன். நான் மட்டும் நல்லபடியாய் இருந்திருந்தா நானே நேர்ல வந்திருப்பேன். உங்க கிட்ட அது ஒரு நிஜக் கதை, சிலரோட தனிப்பட்ட விஷயம், அதனால் தயவு செஞ்சு இதை விட்டுடுங்கன்னு கெஞ்சிக் கேட்டிருப்பேன். நீங்களும் அதைப் புரிஞ்சுகிட்டிருப்பீங்க..... ஆனா நடந்ததை மாத்த முடியாதப்ப மன்னிப்பு கேட்கறதைத் தவிர எனக்கு வழி தெரியலை"

அவள் முகத்திலும் வார்த்தைகளிலும் தெரிந்த வலி அவர் மனதை நெகிழ்த்தியது. அதே நேரத்தில் அவளுடைய சாதுரியத்தையும் அவரால் கவனிக்காமல் இருக்க முடியவில்லை. அன்றே அது சிலரின் தனிப்பட்ட அந்தரங்க விஷயம் என்று உங்களுக்குத் தெரிவித்து இருந்தால் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று சொல்லும் போது, அதே நிலை இன்றும் இருக்கிறது, புரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லாமல் சொல்கிறது போல் இருந்தது.

அவர் சொன்னார். "இன்னொருத்தர் செஞ்சதுக்கு நீங்க என்ன செய்ய முடியும்? நீங்க மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமே இல்லை"

"அன்றைக்கு என் சார்பில் செய்யப்பட்டது தான் அது. அதனால் நான் மன்னிப்பு கேட்கிறது தான் முறை.... உங்களை நான் ஒரு கேள்வி கேட்கலாமா?"

"கேளுங்க"

"நீங்க ஒரு நேர்மையான மனிதர். உங்க பத்திரிக்கைக்கு 'உண்மை'ன்னு பேர் வச்சிருக்கீங்க. உங்க ஆபிஸ் ரூமில் 'சத்யமேவ ஜெயதே'யை பிரதானமாய் வச்சிருக்கீங்க. ஆனால் நீங்க எல்லா உண்மைகளையும் வெளியே சொல்லியிருக்கீங்களா?"

"நான் உண்மையை மட்டும் சொல்லியிருக்கேன்னு நினைக்கிறேன்."

"என் கேள்வி அதல்ல சார். எல்லா உண்மைகளையும் வெளியே சொல்லியிருக்கீங்களான்னு கேட்கிறேன். வெளியே விடுங்க. உங்க மனைவி, குழந்தைகள் கிட்ட உங்களைப் பத்தின எல்லா உண்மைகளையும் சொல்லியிருக்கீங்களா? சொல்லத் தயங்கின, தேவையில்லைன்னு நினைச்சு சொல்லாமல் விட்ட உண்மைகள் எதுவும் இருக்காதா?"

அம்பலவாணன் அசந்து போனார். இந்தக் கேள்விக்கு இல்லை என்று பதில் சொல்லக்கூடிய மனிதன் இது வரை இந்த உலகில் வாழ்ந்திருக்கிறானா என்று யோசித்தார்.

அவர் மௌனமே பதிலாக அமைந்தது. அதை அவளும் அப்படியே எடுத்துக் கொண்டு தொடர்ந்தாள். "இந்த நாவல் கதையும் சிலரோட அந்தரங்க வாழ்க்கை சார். கற்பனையை விட அழகான ஒரு காதலை பக்கத்தில் இருந்து பார்த்த சேதுபதிக்கு அதை எழுதாமல் இருக்க முடியலை. ஆனால் இப்ப அந்தக் கதாபாத்திரங்கள் யார்னு வெளியே வர்றது சிலருக்கு தர்மசங்கடத்தையும், சிலருக்கு துக்கத்தையும் கொடுக்கும். சார், மத்தவங்களோட அந்தரங்க விஷயங்களை வெளியே கொண்டு வர்றதை ரசிக்கிறீங்களா? இதை இத்தோட விட்டுடுங்களேன், ப்ளீஸ்"

அவள் கெஞ்சிக் கேட்ட விதம், அவள் முகத்தில் தெரிந்த துக்கம் எல்லாம் சேர்ந்து அவர் மனதை என்னவோ செய்தது. உறுதியாக சொன்னார். "நான் நடத்தறது மஞ்சள் பத்திரிக்கை அல்ல. நீங்க இவ்வளவு தூரம் சொன்னதுக்கப்புறம் சிலரை கஷ்டப்படுத்தப் போகிற தனிப்பட்டவர்களின் ரகசியங்களை நான் மேற்கொண்டு துருவப்போறதும் இல்லை. என்னைப் பொருத்தவரை நான் உறுதியாய் இதை சொல்றேன். ஆனால் இதில் நான் மட்டும் இல்லை. அருணும் இருக்கிறான். இதை தயவு செய்து அவன்கிட்டயும் சொன்னீங்கன்னா நல்லாயிருக்கும். கண்டிப்பாய் அவனும் என் முடிவுக்கே வருவான். அவனும் நல்ல நாகரிகமான பையன்....அவன் பக்கத்து ரூமில் தான் இருக்கான். கூப்பிடட்டுமா?"

அவனைக் கூப்பிடும் யோசனையே அவள் முகத்தில் பெரும் கலவரத்தை ஏற்படுத்தியது. "ஐயோ, வேண்டாம்...." என்று மறுத்தாள். அவள் முகத்தில் லேசாக வியர்வைத் துளிகள் பளிச்சிட்டன. பதட்டத்துடன் தன் முகத்தை அவள் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். அம்பலவாணனுக்குத் தன்னுடைய பழைய சந்தேகம் ஊர்ஜிதம் ஆனது. அருண் அவனுக்கே தெரியாமல் ஏதோ விதத்தில் இவர்களுடன் சம்பந்தப்படுகிறான். அது எந்த விதத்தில்...?

## (50)

An error doesn't become a mistake until you refuse to correct it.

– O.A.Battista

தாரா சொன்னாள். "நீங்க அருண் கிட்ட நான் சொன்னதை சொல்லுங்க, அது போதும்"

அம்பலவாணன் அதற்கு மேல் அவளை வற்புறுத்த விரும்பவில்லை. "சொல்லிப் பார்க்கிறேன்" என்றார். தாரா நன்றி தெரிவித்தாள்.

அம்பலவாணன் சிறிது யோசனைக்குப் பிறகு சொன்னார். "ஆனா உங்க பொண்ணு மாதிரி அருணும் மத்தவங்க அந்தரங்க விஷயங்களில் தலையிடறதாய் நினைச்சு இதில் ஆர்வம் காட்டலை. ஒரு ஜீனியஸ் ஆன மனிதன் தன் எல்லா அறிவையும் அழிச்சுட்டு சுவடே இல்லாமல் போனதை அவர்களால் தாங்க முடியலை. உங்க பொண்ணு இப்ப கணிச்சிருக்கிற கணிப்புகளை இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னாலேயே கணிச்சிருக்கிற ஒரு மாமேதையை இந்த உலகம் திரும்பப் பெறணும். அந்த அறிவு இந்த உலகத்துக்குத் திரும்பவும் பிரயோஜனப்படணும்னு அவங்க நினைக்கிறாங்க. அது தப்புங்களா?"

தாரா பேச்சிழந்தது போல ஓரிரு நிமிடங்கள் அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் எல்லையில்லாத சோகம் படர்ந்தது. பிறகு உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாள். "சில விஷயங்களை திருப்பி கொண்டு வர்ற சக்தி நம்ம கிட்ட இல்லை சார். அப்படி இருந்திருந்தா எவ்வளவோ நல்லா இருக்கும். விதி தீர்மானிச்சுட்ட விஷயங்களை மனுஷன் மாத்திட முடியுமா சார்?"

"எல்லாத்தையுமே விதியோட தீர்மானத்துக்கு விட மறுக்கறவங்களால் தான் சரித்திரமே எழுதப்பட்டிருக்கு. இல்லைங்களா"

"ஆனா அதுக்கும் ஒரு விதி வேணும்னு என் அனுபவத்தில் நான் உணர்ந்திருக்கேன்..... நான் உங்க நேரத்தை நிறையவே எடுத்துகிட்டேன்னு நினைக்கிறேன்." தாரா எழுந்தாள்.

அம்பலவாணனும் எழுந்தார். "என்னைப் பொருத்தவரை இந்த விஷயமாய் துப்பு துலக்கறதை இந்த நிமிஷத்தோட விட்டுட்டேன். நீங்க என்னை நம்பலாம்"

"உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு எனக்குத் தெரியலை"

"நன்றி தேவையில்லை. நீங்க இங்க வந்திருக்கக் கூடத் தேவையில்லை. உங்கண்ணா ஒரு வார்த்தை போனில் சொல்லியிருந்தா கூட நான் இதில் இருந்து விலகி இருப்பேன். ஏன்னா, இப்பவும் என் மூணு மகள்கள் தங்கள் குடும்பத்தோட தமிழ்நாட்டில தான் இருக்காங்க. அவங்களுக்கு ஒரு ஆபத்துன்னா இப்பவும் இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னால் எடுத்த முடிவு தான் எடுக்க வேண்டி இருக்கும்..."

அவள் முகத்தில் வருத்தம் தெரிந்தது. "சேச்சே, நீங்க அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. உங்களைக் கட்டாயப்படுத்த நான் வரலை. புரிய வைக்கத் தான் வந்தேன். அண்ணா அன்றைக்கு அப்படி நடந்துகிட்டார்னா, அவருக்கு வேற விதமாய் நடக்கத் தெரியாதது தான். சின்ன வயசுல இருந்தே மோசமான அனுபவங்களை மட்டுமே பார்த்து வளர்ந்ததால் அவர் அப்படி ஆயிட்டார். அவர் சார்பாய் நான் இன்னொரு தடவை மன்னிப்பு கேட்டுக்கறேன்....."

அம்பலவாணன் அவளை அதிசயமாய் பார்த்தார். ஈஸ்வரனுக்கு இப்படியொரு தங்கையா?

அவள் கை கூப்பி விட்டுக் கிளம்பினாள். அவளை அறைக்கு வெளியே வரை கொண்டு போய் விட எண்ணி அம்பலவாணன் தொடர்ந்தார். அறையை விட்டு வெளியே வந்த தாரா ஒரு கணம் நின்றாள். பக்கத்து அறையில் அருண் இருப்பதாய் அம்பலவாணன் சொன்னது நினைவுக்கு வந்தவளாய் பக்கத்து அறைக் கதவின் கண்ணாடி வழியாக உள்ளே பார்த்தாள். ஆழ்ந்த சிந்தனையோடு எதையோ அருண் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவன் அவள் பார்ப்பதை கவனிக்கவில்லை என்பதால் அவனையே பார்த்தபடி சிறிது நேரம் நின்றாள். அம்பலவாணன் ஏதோ வசியம் செய்யப்பட்டவர் போல அவளைப் பார்த்தபடி அப்படியே நின்றார். அவள் அருணைப் பார்த்த விதத்தில் பாசம் தெரிந்தது. ஒரு தாய் தூர இருந்து தன் குழந்தையைப் பார்க்கும் வாத்சல்யம் போல் அவருக்குத் தோன்றியது. தாரா திடீரென்று அங்கிருந்து நகர்ந்தாள். போகும் போது கைக்குட்டையால் அவள் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு போவதைப் பார்த்தார் அம்பலவாணன். திரும்பவும் அதே கேள்வி அவர் மனதில் பலமாக எழுந்தது. அருண் எந்த விதத்தில் இவர்களுடன் சம்பந்தப்படுகிறான்?

அவர் அருண் இருந்த அறைக்குள் நுழைந்தார். கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு அருண் எழுதுவதை நிறுத்தி விட்டு நிமிர்ந்தான்.

"அருண், கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நம் ஆபிசிற்கு ஒருத்தர் வந்திருந்தார்....." அம்பலவாணன் ஆரம்பித்தார். அவர் தாரா வந்ததைச் சொன்னவுடன் அருண் பரபரப்புடன் கேட்டான். "ஏன் சார் என்னைக் கூப்பிடலை?" அவன் குரலில் கோபம் இருந்தது.

வருவதற்கு முன்பே அவரை மட்டும் தான் சந்திப்பதென்று அவள் உறுதியோடு இருந்ததை அம்பலவாணன் அருணிடம் சொன்னார். "அவங்க என்ன சொல்றாங்கன்னு தெரிஞ்சுக்கற ஆர்வத்தில் நானும் ஒத்துகிட்டேன்....."

"என்ன சார் சொன்னாங்க" அவன் ஆர்வமாகக் கேட்டான். "ஆரம்பத்தில் இருந்து விவரமாய் சொல்லுங்க சார்"

அவர் ஆரம்பத்தில் இருந்து சொல்ல ஆரம்பித்தார். அவள் கேட்டுக் கொண்டபடி இந்த விஷயத்தில் மேற்கொண்டு தலையிடுவதில்லை என்று முடிவு எடுத்ததை தெரிவிக்கும் போது சொன்னார். "அவங்க சொன்னபடி என்னோட தனிப்பட்ட எத்தனையோ விஷயங்கள் மத்தவங்களுக்குத் தெரியக் கூடாதுன்னு நான் நினைக்கிறப்ப, மத்தவங்களோட தனிப்பட்ட விஷயங்கள் தெரிஞ்சுக்கறதில் நான் ஆர்வம் காட்டறதில் என்ன நியாயம் இருக்கு? இருபத்தஞ்சு வருஷங்கள் முன்னால் மூணு நாள் ஜெயிலில் இருந்த ஆத்திரம் கூட அவங்க கூட பேசிகிட்டிருந்தப்ப போயிடுச்சு....."

ஈஸ்வரன் போன் செய்து ஒரு வார்த்தை சொல்லி இருந்தாலே இதில் இருந்து தான் விலகி இருப்பேன் என்று சொன்னதாய் சொன்ன போது "நீங்க இப்படி சொல்லி இருக்கலாமா" என்பது போல் பார்வையால் அருண் குற்றம் சாட்டினான்.

அம்பலவாணன் சொன்னார். "ஒரு உண்மையை வெளியே கொண்டு வர்றதால ஜனங்களுக்கு பெரிய நன்மை கிடைக்கப் போகிறதுங்கற நிலையில் நான் என் குடும்பத்தைக் கூட நினைக்க

மாட்டேன் அருண். ஆனால் இது போல தனிப்பட்டவர்கள் ரகசியங்கள் விஷயத்தில் நான் கண்டிப்பாய் ஈஸ்வரனைப் பகைச்சுக்க மாட்டேன். என்ன விலை கொடுத்து எதை சாதிக்கிறோம்ங்கிறது முக்கியமாய் யோசிக்க வேண்டிய விஷயமில்லையா அருண்"

ஆனாலும் அருணுக்கு மனம் ஒத்துக் கொள்ளவில்லை. என்ன ஆனாலும் ஈஸ்வரனைப் போன்றவர்களுக்கு வளைந்து கொடுப்பதில் அவனுக்குத் திருப்தியில்லை. ஆனால் ஒரு வேளை தன் தாய் மாதுரிக்கு ஒரு ஆபத்து என்கிற சூழ்நிலை வந்தால் கூட அவனால் வளைந்து கொடுக்காமல் இருக்க முடியுமா என்பதை எண்ணிப் பார்த்த போது அவனால் எதையும் உறுதியாக சொல்ல முடியவில்லை. அதிகாரத்தில் இருப்பவர்களின் இப்படிப்பட்ட மிரட்டல்களால் உண்மை எப்படியெல்லாம் அடக்கப்பட்டு விடுகிறது என்று அவன் எண்ணிப் பார்த்தான்....

கடைசியாக ஒரு நிமிடம் நின்று அவனைப் பார்த்து விட்டு தாரா சென்றாள் என்பதை ஏனோ அம்பலவாணன் சொல்லவில்லை. அவர் மனதில் அவர்களுடன் ஏதோ விதத்தில் அருண் சம்பந்தப்படுவதாக தான் நினைப்பதாகவும் அவர் சொல்லவில்லை. அவரை ஏதோ சொல்ல விடாமல் தடுத்தது. இப்போதைக்கு சொல்ல வேண்டாம் என்று நினைத்தார்.

"சார் ஒரே ஒரு கேள்வி"

"கேள் அருண்"

"லாஜிக், ஈஸ்வரன் எல்லாத்தையும் ஒரு நிமிஷம் மறந்துடுங்க. நீங்க "நீ நான் தாமிரபரணி"யைப் படிச்சதையும், கொஞ்ச நேரத்திற்கு முன்னால் அவங்களை நேரில் பார்த்து பேசினதையும் மட்டும் வச்சு சொல்லுங்க. அந்த நாவலோட 'தேவி'யாக தாமிராவோட அம்மா இருக்க முடியுமா?"

அம்பலவாணன் யோசித்து விட்டுச் சொன்னார். "எனக்கு தாராவைப் பார்த்துப் பேசினதுக்குப் பிறகு வேற யாரையும் 'தேவி'யாய் நினைச்சுப் பார்க்க முடியலை. அந்த நல்ல மனசு, அந்த மென்மை எல்லாமே அவங்களை அந்த தேவியாய் தான் அடையாளம் காட்டுது அருண்"

# (51)

Every trial endured and weathered in the right spirit makes a soul

nobler and stronger than it was before.

– James Buckham

"ஹலோ, மாதுரி?"

"ஆமா, நீங்க யார் பேசறது?"

"நான் சுரேந்தர் பேசறேன். நேத்து தான் கனடாவில் இருந்து வந்தேன். ஒரு பிசினஸ் விசிட். மூணு நாள் இருப்பேன். அதான் ஹலோ சொல்லலாம்னு போன் செய்தேன். எப்படி இருக்கே?"

மாதுரிக்கு திடீரென்று தொண்டையில் ஏதோ கசப்பான உணர்வு ஏற்பட்டது. சுதாரித்துக் கொண்டு பேசினாள். "நல்லாயிருக்கேன். ஷாலினி எப்படியிருக்காள்?"

"ஃபைன். அவ செகண்ட் ஹஸ்பெண்டையும் டிவோர்ஸ் செய்துட்டு மூணாவது ஹஸ்பெண்டை தேடிட்டு இருக்கா". பலத்த சிரிப்பு."உன் ஃபாமிலி எப்படியிருக்கு? உனக்கு அப்பப் பிறந்தது கர்ளா, பாயா?"

"பையன். எல்லாம் நல்லாயிருக்கோம்"

"இந்த மூணு நாளில் எப்ப ஃப்ரீயாய் இருப்பே?"

"என் பையன் நிச்சயதார்த்தம் வெள்ளிக்கிழமை இருக்கிறதால் நான் பிசியாய் இருக்கேன், சாரி. ஷாலினியைக் கேட்டதாய் சொல்லு. உன் ஃபேமிலி எப்படியிருக்கு? சௌக்கியம் தானே, வைக்கட்டா"

போனை வைத்து விட்டாலும் மாதுரியின் தொண்டைக் கசப்பு போகவில்லை. போனை வெறித்துப் பார்த்தாள். கடந்த காலத்தை அவள் விட்டொழிக்கப் பார்த்தாலும் அது அவளை விட்டொழிவதாக இல்லை. அடிக்கடி ஏனோ மீண்டும் மீண்டும் உயிர்த்தெழுகிறது.

"அம்மா" அருண் குரல் கேட்க மாதுரி திரும்பினாள். "அம்மா ஒரு சுவாரசியமான விஷயம்". அலுவலகத்திலிருந்து அப்போது தான் வந்தாலும் உடனடியாகத் தாயிடம் அதைச் சொல்லத் தோன்றியது.

"என்னடா"

"உங்கப்பாவோட ஃப்ரண்டோட தங்கச்சி இன்றைக்கு எங்க ஆபிசிற்கு வந்திருந்தாங்க"

"எங்கப்பாவோட ஃப்ரண்டா, யாருடா அது"

"அது தான் அந்த ஈஸ்வரன்"

"அந்த ஆள் ஒண்ணும் எங்கப்பா ஃப்ரண்ட் இல்லன்னு எத்தனை தடவை சொல்றது" என்று கோபத்துடன் மறுத்தவளுக்கு பின்பு தான் அவன் சொன்ன விஷயம் உறைத்தது. தாரா ஏன் அங்கே போனாள்? ஒரு கணம் உடலெல்லாம் சில்லிட்டது. அவள் அங்கு இவனைப் பார்த்துப் பேசினாளா? என்ன பேசினாள்?....நினைக்க நினைக்க அவளுக்கு வயிற்றைக் கலக்கியது.

இயல்பாக முக பாவத்தை வைத்துக்கொண்டு மாதுரி மகனைக் கேட்டாள். "சரி சொல்லு. நீ பார்த்துப் பேசினாயா?"

அருண் ஏமாற்றத்துடன் சொன்னான். "அவங்க அம்பலவாணன் சார் கிட்ட தனியாய் பேசணும், வேற யாரும் இருக்கக் கூடாதுன்னு முதல்லயே சொல்லி அவர் ஒத்துகிட்டதுக்கப்புறம் தான் வந்தாங்க. வந்து அவர் கிட்ட மட்டும் தான் பேசினாங்க. எனக்கு முதல்லயே தெரிஞ்சிருந்தா ஒளிஞ்சு நின்னாவது நான் பார்த்திருப்பேன்..."

"எதுக்காக வந்தாங்களாம்?"

"அம்பலவாணன் சாரை மூன்று நாள் ஜெயில்ல இருக்க உங்கப்பா ஃப்ரண்ட், சாரி ஃப்ரண்டில்ல, ஈஸ்வரன் காரணமாய் இருந்ததுக்கு மன்னிப்பு கேட்கவும், அந்த நாவல் விஷயமாய் மேற்கொண்டு துப்பு துலக்காமல் இருக்கச் சொல்லவும் வந்தாங்க....." என்றவன் அவள் அம்பலவாணனும் தாராவும் பேசியதையெல்லாம் அப்படியே மாதுரியிடம் சொன்னான்.

மாதுரியால் தாராவை மனதில் மெச்சாமல் இருக்க முடியவில்லை. தன்னைப் போல அவள் கையாலாகாத்தனத்துடன் வேடிக்கை பார்க்காமல், கௌரவம் பார்க்காமல் அம்பலவாணனைக் கண்டு பேசப் போனது அவளை வியக்க வைத்தது. யோசித்துப் பார்க்கையில் தாரா என்றுமே

அவளை வியக்கத் தான் வைத்திருக்கிறாள். எல்லா சந்தர்ப்பங்களிலும் நல்லவளாக, நியாயமானவளாக......

"அவங்க அம்பலவாணன் சாரை நிறையவே இம்ப்ரஸ் செஞ்சிட்டாங்கம்மா. அவர் அந்த நாவலோட தேவி அவங்களாகத் தான் இருக்கணும்னு நினைக்கிறார்னா பார்த்துக்கோயேன்..."

மாதுரி மகன் முகத்தை நேரில் பார்க்கப் பயப்பட்டாள். தன் உணர்ச்சிகளை அவனிடம் வெளிக்காட்டாமல் இருப்பது அவ்வளவு சுலபமாக அவளுக்கு இருக்கவில்லை. அருகில் இருந்த ஷோகேசில் இருந்தவற்றை ஒழுங்குபடுத்த திரும்பிக் கொண்டாள். "எது எப்படியோ மத்தவங்க தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடறதில்லைங்கிற முடிவுக்கு வந்தீங்களே அது நல்ல நாகரிகமான விஷயம்".

"அது அவர் எடுத்த முடிவு. நான் எப்ப அந்த முடிவு எடுத்ததாய் சொன்னேன்?" அருண் மறுபடி அவள் வயிற்றில் புளியைக் கரைத்தான்.

"ஏண்டா உனக்கு நீ செய்யறது அநாகரிகம்னு தோணலையா? அவ்வளவு தூரம் ஒருத்தர் வந்து சொன்னதுக்கப்புறமும் அந்த விஷயத்தில் பின் வாங்க மாட்டாயா?"

"அம்மா... அவங்க சொன்னது என்னன்னா அந்த உண்மைகள் எல்லாம் வெளியே தெரிய வந்தால் சிலருக்கு அதிர்ச்சி, துக்கம் வரும்னு தான். நான் அது என்னன்னு கண்டுபிடிப்பேன். இல்லாட்டி எனக்கு தலை வெடிச்சிடும். ஆனா கண்டு பிடிச்சதை வெளியே சொல்ல மாட்டேன். தெரிஞ்சிக்கறதால எனக்கு திருப்தி. வெளியே சொல்லாததால் அவங்களுக்கு நிம்மதி. எப்படி நம்ம ஐடியா?"

"புடலங்காய் ஐடியா. ஆளை விடு சாமி" என்று எரிச்சலோடு சொன்ன மாதுரி பெருமூச்சு விட்டாள். எல்லாமே மலையில் இருந்து உருட்டி விட்ட கல்லைப் போல கட்டுப்படுத்த முடியாமல் வேகமாக நகர்கின்றன. இதெல்லாம் எதில் போய் முடியுமோ? இருக்கிற தலைவலிகள் போதாதுன்னு அந்த சுரேந்தரின் போன் வந்தது வேறு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.

அன்றிரவு பழைய நினைவுகள் பல வந்து அலைக்கழித்தன. தாராவை நினைத்தபடியே நீண்ட நேரம் உறங்காமல் உட்கார்ந்திருந்தாள்.

மறுநாள் காலை அருணும் ராஜராஜனும் கிளம்பிப்போகும் வரை காத்திருந்து விட்டு போனை எடுத்தாள். மறுபக்கம் நீண்ட நேரம் மணி ஒலித்தாலும் எடுக்கப்படவில்லை. வைத்து விடலாமா என்று அவள் நினைத்த போது தான் போன் எடுக்கப்பட்டது. "ஹலோ"

இதயத் துடிப்பு சம்மட்டி ஒலியாக மாற ஆரம்பித்தது. தயக்கத்துடன் மாதுரி கேட்டாள். "தாரா?"

"இல்லை நான் அவங்க மகள் தாமிரா பேசறேன். நீங்க யார் பேசறது?"

"நான்...நான்... அவங்க ஃப்ரண்ட் பேசறேன்" சொல்லி விட்டு மாதுரி நாக்கைக் கடித்துக் கொண்டாள். பெயரைக் கேட்டால் என்ன சொல்வது என்ற பயம் அவளை ஆட்கொண்டது. ஆனால் தாமிரா நல்ல வேளையாக அவள் பெயரைக் கேட்கவில்லை. "அம்மா உனக்கு போன்" என்று அவள் கத்தியது மாதுரி காதில் விழுந்தது. சிறிது நேரம் கழித்து தாராவின் குரல் கேட்டது. "ஹலோ"

"தாரா...நான் மாதுரி பேசறேன்....."

சிறிது நேரம் மறுமுனையில் இருந்து சத்தமில்லை. தாராவின் அதிர்ச்சியை மாதுரியால் உணர முடிந்தது. "மாதுரி...." தாராவின் குரல் கரகரத்தது.

இத்தனை காலம் கழித்து ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருவரும் பேச நேர்ந்ததால் இருவருக்குமே பேசுவது சுலபமாக இருக்கவில்லை. ஆனால் முந்திய இரவின் சிந்தனைகள் மாதுரியைப் பேசக் கட்டாயப்படுத்தியதால் சிரமப்பட்டுப் பேசினாள்.

"எப்படியிருக்கிறாய் தாரா?"

"இப்ப குணமாயிட்டேன்...."

"பலகாலமாய் உன் கிட்ட ரெண்டு வார்த்தை சொல்லணும்னு பலதடவை நினைச்சிருக்கேன் தாரா. ஆனா உனக்குத் தான் என்னைப் பத்தி நல்லாத் தெரியுமே. என்னால் எதையுமே சரியான சமயங்கள்ல செய்ய முடியறதில்லை. எனக்கு எதுவும் புரிஞ்சு நான் செய்யப் போகிற நேரத்தில் எல்லாமே கண் கெட்ட பிறகு செய்யற சூர்ய நமஸ்காரமாய் போயிடறது. காலம் கழிஞ்சிடறது. அதனால் தான் உன் கிட்ட சொல்ல நினைச்சதையாவது, இவ்வளவு தாமதிச்சாவது, சொல்லிடணும்னு போன் செய்தேன்"

"சொல்லு, மாதுரி"

"ஒன்னு, சாரி" அதைச் சொல்லும் போதே மாதுரியின் குரல் உடைந்தது. "இன்னொன்னு தேங்க்ஸ்". அந்த இரண்டாவது வார்த்தையை மாதுரி அழுது கொண்டே சொல்லி போனை வைத்து விட்டாள்.

மறுமுனையில் ரிசீவரைக் கீழே கூட வைக்காமல் தாரா திகைத்துப் போய் நின்றிருந்தாள். சுயநினைவுக்கு வந்து அவள் ரிசீவரைக் கீழே வைத்த போது அவள் கண்களும் கலங்கி இருந்தன.

## (52)

A man should conceive of a legitimate purpose in his heart, and set out to accomplish it. He should make this purpose the centralizing point of his thoughts. It may take the form of a spiritual ideal, or it may be a worldly object, according to his nature at the time being. But whichever it is, he should steadily focus his thought forces upon the object which he has set before him.

– James Allen

வெள்ளிக்கிழமை காலையில் இருந்தே மாதுரிக்கு மனம் திக் திக் என்று இருந்தது. போவதற்கு நேரம் நெருங்க நெருங்க அவள் படபடப்பு அதிகமாகியது. அருணின் நிச்சயதார்த்தம் நல்லபடியாக முடிந்தால் பிள்ளையாருக்கு நூற்றியொரு தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொண்டாள்.

மகனைத் தனியாக அழைத்துக் கேட்டாள். "ஏண்டா உன் மாமனாரை அதிகம் பேச வேண்டாம்னு சொல்லியிருக்கியா, இல்லையா? உங்கப்பா கிட்ட போய் அவர் ஏதாவது வழவழன்னு பேசப் போறார்"

"அப்பா பத்தி காவ்யாவுக்கு நல்லாவே தெரியும். அவர் கிட்ட தானே வேலை பார்க்கிறாள். அதனால அவளோட அப்பா கிட்ட அதெல்லாம் சொல்லியிருக்காள். நாலு வார்த்தைக்கு மேல பேச மாட்டார். கல்யாணத் தேதி கூட நீ ரெண்டு மூணு பார்த்துச் சொன்னா அதில் ஒண்ணு

தேர்ந்தெடுப்பாங்க. நான் முதல்லயே அவங்க கிட்ட சொல்லிட்டேன். நீ என்ன தேதியெல்லாம் பார்த்து வச்சிருக்கே?"

"அடுத்த மாசம் ஏழாம் தேதி, இருபதாம் தேதி, முப்பதாம் தேதி மூணும் நல்லாயிருக்குன்னு ஜோசியர் சொன்னார். ஏண்டா அவங்க நிச்சயத்துக்கு வீட்டில் ஒரு கும்பல் சேர்த்துக்க மாட்டாங்களே?"

அவன் புன்னகை செய்தான். "அங்க நமக்கும் அவங்களுக்கும் தான் இடம் சரியாய் இருக்கும். அதுக்கு மேல் வர்றவங்க வெளியே நிக்க வேண்டியது தான். அதனால் அதைப் பத்திக் கவலைப்படாதே. நாம மூணு பேர் அவங்க வீட்டு ஆளுக நாலு பேர். அவ்வளவு தான்"

"நல்லது" என்று தலையசைத்தாலும் அவளால் ஏனோ நிம்மதியாக உட்கார முடியவில்லை. தட்டில் வைத்துக் கொண்ட பொருட்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக் கொண்டாள். "பூ மட்டும் போறதுக்கு முன்னால் எடுத்து வச்சுகிட்டா போதும். ஏண்டா நாம் போறது என்னோட கார்லயா, இல்லை அப்பாவோட பெரிய கார்லயா?"

"அவர் கார்லயே போலாம். டிரைவர் வேண்டாம். நானே ஓட்டறேன்" சொல்லி விட்டுப் புன்னகைத்தான். இன்று எல்லாவற்றையும் அவன் தான் முடிவு செய்யப் போகிறான். பிடிக்காவிட்டால் அவர் வாய் விட்டுச் சொல்லட்டும்.

அவள் தயக்கத்துடன் தலையசைத்தாள். பிள்ளையாருக்கு உடைக்க எண்ணிய தேங்காயில் பத்தைக் கூட்டினாள். "நீ இன்றைக்கு அதிகப்பிரசங்கித்தனமாய் எதுவும் செஞ்சு வைக்காதே. ஆமா, உங்கப்பாவுக்கு வரப்போகிற மருமகள் அவர் கம்பெனில வேலை பார்க்கிற பொண்ணு தான்னு தெரியுமா?"

"தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். இல்லாட்டி போனதுக்கப்புறம் தெரிஞ்சுக்குவார்."

"என்ன இருந்தாலும் அவர் கிட்ட பொண்ணு, அவங்க குடும்பம் பத்தி எல்லாம் நீ நேரில் போய் சொல்ல வேண்டாமாடா"

"ஏன் உன் புருஷனுக்கு வாயில்லையா? கூப்பிட்டு விவரம் கேட்கறதுக்கென்ன?" என்றவன் வாய் விட்டு சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கறே?"

"இல்லை. பொண்ணை ஆபிசிலயே பார்த்திருக்கோம், சம்பந்தியை நேரில் நல்ல முறையில் பார்த்திருக்கோம், அதனால் இனி கேட்கறதுக்கு என்ன இருக்குன்னு அவர் கேட்காமல் இருந்திருக்கலாம்"

"இருந்தாலும் உனக்கு இவ்வளவு கொழுப்பு ஆகாதுடா" என்று மகன் மேல் எரிந்து விழுந்த மாதுரி "சரி போய் டிரஸ் செஞ்சுக்கோ" என்று மகனை அனுப்பி, தானும் உடை மாற்றச் சென்றாள்.

தாயும் மகனும் உடை மாற்றிக் கொண்டு வந்த போது ஹாலில் ராஜராஜன் தயாராக அமர்ந்திருந்தார். வழக்கம் போல் தான் இருந்தார் என்றாலும் அருணால் தன் தந்தையின் கம்பீர அழகைப் பார்த்து வியக்காமல் இருக்கமுடியவில்லை. மாதுரிக்கு மட்டும் கேட்கும் படி அடிக்குரலில் சொன்னான். "மாப்பிள்ளை நானா, இவரா?"

மாதுரி பெருமிதத்துடன் தன் கணவனைப் பார்த்தாள். பின் தன் மகனையும் பார்த்தாள். அருணும் அந்தப் புதிய உடையில் மிக அழகாகத் தெரிந்தான். அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து போவது அது தான் முதல் தடவை என்பதைத் தாயும் மகனும் ஒரே சமயம் நினைத்துப் பார்த்தார்கள்.

"உங்க கார்லயே போயிடலாமா? அருணே ஓட்டறானாம்" என்று கணவனிடம் கேட்டாள். அவரிடம் பேசும் போதெல்லாம் அவள் குரல் ஏனோ மிக மெலிந்து போவதை அருண் கவனித்தான்.

அவர் தலையசைத்தார். டிரைவர் சீட்டில் உட்கார்ந்த போது அருண் புன்னகைத்தான். அவர் அவனுடனோ, பின் சீட்டில் அமர்ந்த மாதுரியுடனோ தான் உட்கார வேண்டும். என்ன செய்யப் போகிறார்? அவர் அவனருகே உட்கார்ந்தார். முகத்தில் வழக்கம் போல எந்த உணர்ச்சியும் இல்லை.

"அம்மா எல்லாத்தையும் எடுத்துகிட்டியா?"

"எடுத்துகிட்டேன்"

காரை ஓட்டும் போது அருணின் மனம் லேசாகியது. இது தான் குடும்பம்...... ஒவ்வொரு குடும்பத்திலும் எல்லாரும் எல்லா சமயங்களிலும் சேர்ந்து போவது மிகச் சாதாரணமான விஷயம் என்றாலும் அவர்கள் குடும்பத்தில் அபூர்வமாக அந்த நிகழ்ச்சி இன்று தான் நடந்திருக்கிறது. சமீபத்திய பிரபலமான பாட்டு ஒன்றை விசில் அடித்தபடி ஓட்டினான். மாதுரி அருணிற்கு நேர் பின்னால் அமர்ந்திருந்ததால் கணவனின் முகத்தைப் பார்க்க முடிந்தது. அவர் முகத்தில் ஏதும் மாற்றமில்லை. எத்தனையோ வருடங்கள் கழித்து அவள் மனதிலும் ஒருவித நிறைவு இருந்தது. 'பிள்ளையாரப்பா, இன்றைக்கு முழுசும் இப்படியே எல்லாம் நல்ல விதமாய் போகணும்ப்பா. ஒரு அசம்பாவிதமும் நடந்துக்காம பார்த்துக்கோப்பா. நான் உன்னைத் தான் நம்பியிருக்கேன்' என்று மறுபடி வேண்டிக் கொண்டாள்.

காரை ஒரு இடத்தில் அருண் நிறுத்தினான். "அந்தச் சின்ன ரோட்டில் தான் அவர்கள் வீடு இருக்கு. ஆறாவது வீடு. அந்த ரோட்டில் இந்தக் காரை நிறுத்த முடியாது"

மாதுரி தன் கணவனை திகிலுடன் பார்த்தாள். பிள்ளையாருக்கு தேங்காய் இன்னும் பத்து கூடியது. அவர் மௌனமாக காரை விட்டு இறங்கினார். பல்லைக் கடித்துக் கொண்டு காரில் இருந்தபடியே மகனைக் கேட்டாள். "ஏண்டா இது உனக்கே நல்லாயிருக்கா? பேசாம என் சின்னக் காரையே எடுத்துட்டு வந்திருக்கலாமில்ல"

அருண் மெள்ள சொன்னான். "எனக்கு இந்த ரோடு இவ்வளவு சின்னதுங்கறது ஞாபகம் வரலை. சாரி"

இருவரும் இறங்கினார்கள். மூவரும் அந்த சிறிய குறுக்குத் தெருவில் நடக்க ஆரம்பித்தார்கள். பல வீடுகளில் இருந்தும் ஆட்கள் அவர்களை அதிசயமாகப் பார்த்தார்கள். அவர்கள் யார் வீட்டுக்குப் போகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள பலருக்கும் ஆவல் இருந்தது. கணவனை மாதுரி ஓரப்பார்வை பார்த்தாள். அவர் மிக இயல்பாக இருந்தார். அருண் அவள் படபடப்பை உணர்ந்தது போல "ரிலாக்ஸ்" என்று மெல்லிய குரலில் சொன்னபடி அவள் கையை அழுத்தினான்.

அந்த நேரமாகப் பார்த்து ஒரு ஏழெட்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் கையில் காற்றாடி ஒன்றைப் பிடித்தபடி வேகமாக ஓடி வந்து நேராக ராஜராஜன் மீது மோதினான். தூரத்தில் இருந்தே அவன் வருவதை அவர் பார்த்தபடி இருந்ததால் அவர் சமாளித்து மோதிய சிறுவனை கீழே விழாமல் தடுத்து நிறுத்தினார். சிறுவன் மூன்று பேரையும் அண்ணாந்து பார்த்தான். அருணைப் பார்த்தவுடன் அவன் முகம் வெளிறியது. முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு மறுபடி தலை தெறிக்கத் திரும்ப ஓடினான்.

பல்லைக் கடித்துக் கொண்டு மாதுரி மகனைப் பார்த்தாள்.

தர்மசங்கடத்துடன் மாதுரியிடம் அருண் மெல்லிய குரலில் சொன்னான். "அது தான்....காவ்யாவோட தம்பி"

மாதுரிக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. சம்பந்தி வீட்டவர்களின் முதல் சந்திப்புகளே ஏடாகூடமாகத் தான் இருக்கிறது. பிள்ளையார் அவள் நிர்ணயித்த தேங்காய் எண்ணிக்கையில் ஏனோ திருப்தி அடைந்தது போல் தெரியவில்லை. ராஜராஜனை ஓரக் கண்ணால் பார்க்கக் கூட அவளுக்குப் பயமாக இருந்தது. மூவரும் மௌனமாக நடந்தார்கள்.

ஒரு சிறிய ஓட்டு வீட்டின் முன் வந்ததும் அருண் சொன்னான். "இது தான் வீடு"

# (53)

The thoughts that in our hearts keep place,
Lord, make a holy, heavenly throng,
And steep in innocence and grace
The issue of each guarded tongue.
– T. H. GILL.

தலை தெறிக்க ஓடி வந்த மகனை திகைப்புடன் சந்திரன் பார்த்தார். "ஏண்டா சக்தி இப்படி ஓடி வர்றே?"

"அவங்க வந்துட்டாங்க" என்ற சக்தி சமையலறையின் மூலையில் ஒட்டினாற் போல நின்று கொண்டான்.

காவ்யா தன் தம்பியை சந்தேகத்துடன் பார்த்தாள். "அதுக்கு நீ ஏண்டா இப்படி ஒளிஞ்சு நிற்கிறாய்"

"நான் அவங்க மேல இடிச்சுட்டேன்"

"யார் மேல? அருண் மேலயா?"

"இல்லை. அவங்க கூட வந்த இன்னொரு அங்கிள் மேல" என்று சொல்லி சக்தி தலை குனிந்து கொண்டான்.

சந்திரனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. "ராஸ்கல்" என்று அவனை அடிக்கப் போன அவர் கையை காவ்யா பிடித்துக் கொண்டாள். "அவங்க வர்றப்ப இதல்லாம் வேண்டாம்".

அமைதியாகச் சொன்னாலும் அவளுக்கு வயிற்றைக் கலக்கியது.

"போய் உள்ளே கூப்பிடுங்கப்பா" என்றாள்.

மூன்று நாட்களாக தந்தையிடம் கிளிப்பிள்ளைக்கு சொல்வது போல சொல்லியிருக்கிறாள்.

அவங்கப்பாவுக்கு வழவழன்னு பேசுனா பிடிக்காது. அதனால் சுருக்கமாய் பேசுங்க. ஏதேதோ பேசி சொதப்பாதீங்க. எவ்வளவு குறைவாய் பேசறீங்களோ அவ்வளவு நல்லது"

முதல் முறை அவள் சொன்ன போது சந்திரன் கேட்டார். "நான் முதல் தடவை அவங்க வீட்டுக்குப் போய் கலாட்டா செய்ததுக்கு அவர் கிட்ட மன்னிப்பு கேட்க வேண்டாமா? அதுக்கப்புறம் நான் அவரைப் பார்க்கலை"

"ஒண்ணும் கேட்க வேண்டாம். அமைதியா வேண்டியதுக்கு மாத்திரம் நாலு வார்த்தை பேசினா போதும்" என்று காவ்யா சொல்லி இருந்தாள்.

அவர்களை வரவேற்கப் போன போது சந்திரனுக்கு உடம்பெல்லாம் லேசாக நடுங்கியது. "வாங்க, வாங்க உட்காருங்க" என்று வரவேற்று அங்கிருந்த பழைய சிறிய சோபாவைக் காண்பித்தார். அந்த சோபாவில் அவர்கள் மூன்று பேரும் நெருக்கிக் கொண்டு சிரமப்பட்டு உட்கார்ந்தார்கள். நடுவில் ராஜராஜனும் இருபக்கமும் மாதுரியும் அருணும் உட்கார்ந்தார்கள். ஓரிரு நிமிடங்கள் கழித்து நெருக்கடி தாங்காமல் அருண் தன் கையை எடுத்து சோபாவின் பக்கவாட்டில் போட்டான். கிட்டத்தட்ட ராஜராஜன் தோள் மீது கை போட்டு அவன் உட்கார்ந்தது போல இருந்தது.

அருணுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து இவ்வளவு நெருக்கத்தில் தன் தந்தையுடன் இருந்ததில்லை. அவன் மட்டுமல்ல, அவன் தாயும் கூட தந்தையுடன் இத்தனை நெருக்கத்தில் இருந்து அவன் பார்த்ததாய் நினைவு இல்லை. குறைந்த பட்சம் இரண்டு அடிகளாவது இடைவெளி அவர்களுக்குள் எப்போதும் இருந்திருக்கிறது. இன்றைய நாள் எத்தனையோ விதங்களில் அவன் வாழ்வில் முதல் நாளாக இருக்கிறது என்பதை நினைத்த போது அவன் இதழ்களில் லேசாக புன்னகை அரும்பியது.

அவர்களுக்கெதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்த சந்திரனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அத்தனை பெரிய மனிதர்கள் தங்கள் வீட்டுக்கு வந்து அமர்ந்திருப்பது இன்னும் கனவு போல இருந்தது. ஏதாவது பேசலாம் என்றால் முன்பே மகள் அவர் வாயைக் கட்டிப் போட்டு இருந்தாள். சும்மா இருக்க முடியாமல் இரு கைகளையும் சேர்த்து சம்பந்திகளைப் பார்த்துக் கூப்பினார். ராஜராஜனும் இயல்பாக பதில் வணக்கம் செய்தார். வேறு வழியில்லாமல் மாதுரியும் அப்படியே செய்தாள்.

இன்னும் சந்திரன் என்ன செய்வாரோ என்று அருண் பயந்த போது நல்ல வேளையாக காவ்யா காபியோடு வந்தாள்.

போட்டோவில் பார்த்திருந்தாலும் மாதுரி காவ்யாவை நேரில் பார்ப்பது அது தான் முதல் முறை. பெரிய அழகென்று சொல்ல முடியாவிட்டாலும், குடும்பப்பாங்காகவும் நல்ல மாதிரியாகவும் அவளுக்குக் காவ்யா தெரிந்தாள். ராஜராஜன் முகத்தில் அவளைப் பார்த்த போது எந்த விதமான உணர்ச்சியும் இல்லை. அவளை முன்பே அறிந்திருந்ததற்கு அவர் முகத்தில் எந்த விதமான அடையாளமும் இல்லை. அவள் தான் உள்ளூர டென்ஷனாக இருந்தாள். அவர் அவள் கொடுத்த காபியை வாங்கிக்கொண்டார். அருணிடம் காபியைக் கொடுத்த போது அவன் ராஜராஜனின் தோள் மீது கை போடாத குறையாக உட்கார வைத்ததற்காக நன்றி சொல்லும் பாவனையில் அர்த்த புஷ்டியுடன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அதைப் புரிந்து கொண்ட அவள் முகத்திலும் புன்னகை அரும்பியது. இன்று அவர் அங்கு வந்ததும், இவ்வளவு நெருக்கமாக அவனுடன்

அமர்ந்திருப்பதும் அவனைப் பொருத்தவரை எத்தனை மகிழ்ச்சியான விஷயம் என்பதை அவள் அறிவாள். அந்தப் புன்னகையுடனேயே மாதுரிக்குக் காபி கொடுத்த போது தன் மருமகள் அழகு தான் என்ற முடிவுக்கு மாதுரி வந்தாள்.

அருண் எல்லோரையும் விட அதிகமாய் தன் தந்தையை கவனித்தான். காவ்யா தன் கம்பெனியில் வேலை பார்ப்பவள் என்பதை அவர் காண்பித்துக் கொள்ளாததும் எதுவும் சொல்லாததும் யாராயிருந்தால் எனக்கென்ன என்ற நிலைப்பாடாக அவனுக்குப்பட்டது. ஆனாலும்

ஒரு குறை கூட சொல்ல முடியாத அளவு அவர் அங்கு நடந்து கொண்டார் என்பதை அவனால் மறுக்க முடியவில்லை. கொண்டு வந்த காபியை ஒரு வாய் குடித்து விட்டு மிச்சம் அப்படியே வைத்து தங்கள் பெரிய தனத்தைக் காட்டிக் கொள்ளும் சில அநாகரிக பணக்காரர்கள் போல செய்யாமல் காபியை முழுவதும் குடித்தார். பின்பு வந்த இனிப்பு கார பலகாரங்களையும் முழுவதும் சாப்பிட்டார். மாதுரி சந்திரனிடம் அவரது மற்ற குழந்தைகளைப் பற்றிக் கேட்க, அவர் காவ்யாவின் தங்கையை அழைத்து அறிமுகம் செய்ய, அவள் வணக்கம் சொன்ன போது தலையசைத்தார்.

பின் கடைக்குட்டிப் பையனை சந்திரன் அழைக்க அவன் பயத்தோடு தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்தபோது அவரையும் அறியாமல் அவர் முகத்தில் ஒரு புன்னகைக் கீற்று தோன்றி மறைந்தது.

பின்பு நிச்சயதார்த்த சடங்கைச் செய்யும் போது சொல்ல வேண்டிய சம்பிரதாய வார்த்தைகளை சுருக்கமாய்ச் சொல்லி, தட்டு மாற்றிக் கொள்ளும் போதும் அவர் மிக இயல்பாக எந்திரத்தனம் இல்லாமல் நடந்துகொண்டது மாதுரியையும், அருணையும் நிஜமாகவே பிரமிக்க வைத்தது. அவரை அழைத்துக் கொண்டு போனாலும் ஒவ்வொன்றையும் தானே தான் பேச வேண்டி இருக்கும் என்று நினைத்து வந்திருந்த மாதுரிக்கு இது பெரிய ஆசுவாசத்தைத் தந்தது. காவ்யாவின் தாயும் இல்லாத சூழ்நிலையில் ராஜராஜனையும் வைத்துக் கொண்டு தானே பேச வேண்டி வருவது மிக தர்மசங்கடமான விஷயம் என்று சில நாட்களாகவே எண்ணி வருந்தியவள் மனம் உண்மையில் நிம்மதியடைந்தது. மாதுரி கையில் குறித்து வைத்திருந்த தாளை வாங்கி அந்த மூன்று நாட்களில் எந்த நாளில் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்று சந்திரனிடம் கேட்ட போது சரிசமமானவர்களிடம் பேசும் தோரணையே அவரிடம் காணப்பட்டது. அந்த வீட்டு ஏழ்மை நிலையைப் பார்த்து எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் முகபாவனையால் கூட தங்கள் மேல்நிலையை சுட்டிக்காட்டாத அந்தப் பெருந்தன்மையை அருணும், காவ்யாவும் கூர்ந்து கவனிக்கத் தவறவில்லை. அருண் தன் தந்தையிடம் உண்மையாகவே இந்த அளவு எதிர்பார்த்திருக்கவில்லை. அவ்வளவு இயல்பாக அங்கு நடந்து கொள்ள முடியாமல் சில கணங்களில் மாதுரி கூடத் திணறிணாள் என்பது உண்மை.

கடைசியில் அடுத்த மாதம் முப்பதாம் தேதி கல்யாணம் வைத்துக் கொள்வது என்று தீர்மானித்தார்கள். கல்யாண மண்டபம் பற்றிப் பேச்சு வந்த போது மாதுரி நகரத்தின் மிகப்பெரிய முழுமையாக குளிர்சாதன வசதியுள்ள மண்டபத்தின் பேரைச் சொன்ன போது சந்திரன் வாயைப் பிளந்தார். அருண் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. எளிமையாய் கோயில் ஒன்றில் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று மாதுரியிடம் சொன்ன போது அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அவள் பிடி கொடுக்காமல் பேசியது இங்கு எல்லோர் முன்னாலும் காலை வாரத்தான் என்று உணர்ந்த போது அவனால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தந்தையின் பணத்தைச் செலவு செய்து ஆடம்பரமாக திருமணம் செய்து கொள்வது அவனுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை.

அங்கு வந்தமர்ந்த பின் முதல் முறையாக பல்லைக் கடித்துக் கொண்டு "அம்மா" என்றான்.

# (54)

The I do not call one greater and one smaller,
That which fills its period and place is equal to any.
– Walt Whitman

மாதுரி மகனைத் திரும்பிப் பார்க்காமல் சொன்னாள். "நீ சும்மா இருடா. இந்த ஒரு விஷயத்தில் பேசாதே. எனக்கு இருக்கிறது நீ ஒரே பையன். பொண்ணை தேர்ந்தெடுக்கறதோட உன் வேலை முடிஞ்சுடுச்சு. கல்யாணத்தை எப்படி செய்யணும்கிறதை எங்க கிட்ட விட்டுடு"

அம்மா இப்படி காலை வாருவாள் என்று அருண் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்கள் இருவரும் மட்டும் இருக்கையில் அவள் இப்படி சொல்லி இருந்தால் அவன் தன் தந்தையின் பணத்தில் ஆடம்பரத் திருமணம் செய்ய விரும்பவில்லை என்று ஆணியடித்தாற்போல சொல்லி இருப்பான். ஆனால் ராஜராஜனும், காவ்யாவின் குடும்பத்தினரும் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் முன் வாக்குவாதம் செய்ய நாகரிகம் விடவில்லை. மாதுரியும் மகனை நன்றாக தெரிந்து வைத்துக் கொண்டு தான் சமயம் பார்த்து அப்படிப் பேசினாள். எப்படித் தன் கோபத்தை அடக்கிக் கொள்வதென்று தெரியாமல் அருண் திணறினான்.

சந்திரனுக்கு அந்த ஏ.சி ஹாலின் பெயர் கேட்ட பிறகு தன் மகள் எப்படிப்பட்ட இடத்திற்கு மருமகளாகப் போகிறாள் என்று நினைக்க நினைக்க புல்லரித்தது. தினம் ஒன்றிற்கு கிட்டத்தட்ட இரண்டு லட்சம் வாடகை என்று முன்பே கேள்விப்பட்டிருக்கிறார். அங்கு திருமணம் நடத்தும் அளவு செல்வந்தர்களாக அவருக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லாததால் உள்ளே போய் பார்க்கும் வாய்ப்பு இதுவரை கிடைத்ததில்லை. இன்று தன் மகள் திருமணமே அங்கு நடக்கப் போகிறது என்று ஆன பிறகு இது கனவல்ல, நிஜம் தான் என்று மனதில் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டார். மனம் உணர்ச்சி வசப்பட்டார்.

"பொன்னை வைக்கிற இடத்தில் பூ வைக்கிறதாய் சொல்வாங்க. ஆனா எனக்கு பூ அல்ல நார் வைக்கிற அருகதை கூட இல்லை. எங்க நிலைமை உங்களுக்குத் தெரியும்....."

தாயின் மீது அருணிற்கு இருந்த கோபத்தை அவன் வெளிப்படுத்தாவிட்டாலும் காவ்யாவால் ஊகிக்க முடிந்தது. எளிமையான திருமணம் என்று அவன் பலமுறை அவளிடம் சொல்லி இருக்கிறான். அவன் எப்படி அதை சமாளிக்கப் போகிறான் என்று திகைத்திருந்த இந்த நேரத்தில் தன் தந்தை பேச ஆரம்பித்தது அவளுக்கு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. மனிதர் பேச ஆரம்பித்த பிறகு லகான் போடுவது மிகக் கஷ்டம் என்று உணர்ந்திருந்த அவள் அவருக்குக் கண்ணால் சமிக்ஞை செய்யப் பார்த்தாள். ஆனால் அவரோ மகள் பக்கமே திரும்பவில்லை.

மாதுரி சந்திரனிடம் சொன்னாள். "கல்யாண செலவைப் பத்தி நீங்க கவலையேபடாதீங்க. எல்லா செலவும் நாங்க பார்த்துக்கறோம்....."

மகனின் கோபத்தையோ, காவ்யாவின் பயத்தையோ, சந்திரனின் உணர்ச்சி வசப்பட்ட நிலையையோ, மாதுரியின் பேச்சையோ ராஜராஜன் கவனித்தது போல் தெரியவில்லை. ஆனால் அவர் முகத்தில் அலட்சிய பாவனையும் தெரியவில்லை. மாதுரியிடம் நன்றியுடன் தலையசைத்த சந்திரன் ராஜராஜன் கிளம்புவதற்காக எழுந்து நின்றதைப் பார்த்தார். முன்பு போதையில் இருந்த போது ராஜராஜனைப் பார்த்த சமயம் அவருக்கு ஏற்பட்டிருந்த ஒருவித பயபக்தி இப்போதும் ராஜராஜனைப் பார்க்கும் போது அவருள் எழுந்தது. இப்படிப்பட்ட பணமும் புகழும் கொண்ட மனிதர் முன்பு, குடித்து விட்டு தான் செய்த கலாட்டாவைப் பொருட்படுத்தாமல் சம்பந்தம் பேச தன்னுடைய வீட்டுக்கு வந்தது அவரது பெருந்தன்மையைக் காட்டுவதாக சந்திரனுக்குப் பட்டது. இங்கு வந்த பின்னும் தன்னை சரிசமமாக நடத்தி அவர் பேசி நடந்து கொண்ட விதம் சந்திரன் மனதை பெருமளவு நெகிழ்த்தியது. அவரிடம் மட்டும் அன்று நடந்து கொண்டதற்கு தான் மன்னிப்பு கேட்கவில்லை என்பது அவர் மனதை உறுத்தியது. மகள் கட்டுப்பாட்டை காற்றில் பறக்க விட்டு ராஜராஜனைப் பார்த்து கைகூப்பியபடி கண்கள் கலங்க சொன்னார்.

"ஐயா, எனக்கு உங்க மாதிரி பெரியவங்க கிட்ட எப்படிப் பேசணும்னு தெரியாது. ஆனாலும் அடிமனசால உணர்றதை சொல்லாட்டா மனசுக்கு சாந்தி கிடைக்காது. அன்னைக்கு உங்க

வீட்டுக்கு வந்து அநாகரிகமாய் நடந்துகிட்டதுக்கு என்னை மன்னிக்கணும். எதையும் மனசுல வச்சுக்காம என் பொண்ணை ஏத்துகிட்ட உங்க மகனுக்கும், இந்த ஏழையோட குடிசைக்கு வந்து சம்பந்தம் பேசுன உங்களுக்கும் உங்க சம்சாரத்துக்கும் நான் ஏழு ஜென்மத்துக்கு செருப்பா இருந்தாலும் அது ஜாஸ்தியாகாது. ரொம்ப நன்றிங்க ஐயா...."

அனைவர் பார்வையும் ராஜராஜன் மேல் விழுந்தது. காவ்யா பல்லைக் கடிக்க, அருண் பெருமூச்சு விட்டான். ராஜராஜன் ஒன்றும் பேசாமல் சந்திரன் தோளை நட்புடன் தட்டிக் கொடுத்தார். "நாங்க கிளம்புறோம். கல்யாண சம்பந்தமாய் ஏதாவது பேச வேண்டி இருந்தால் நீங்க மாதுரி கிட்ட எப்ப வேணும்னாலும் பேசலாம்."

ராஜராஜன் வெளியேற, எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு தாயும் மகனும் பின் தொடர்ந்தார்கள். அருணுக்குத் தன் தந்தையின் இன்றைய நடத்தை நம்ப முடியாதபடி இருந்தது. ஒரு இயல்பான தந்தை சரிசமமான இடத்தில் சம்பந்தம் பேசும் போது எப்படி நடந்து கொள்வாரோ அப்படி அவர் இன்று நடந்து கொண்டு இருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக கடைசியில் சந்திரனைத் தட்டிக் கொடுக்கும் அளவு நட்பு பாராட்டியது அவனை நிஜமாகவே பிரமிக்க வைத்தது. கடைசியில் பேசிய போது ஏதாவது இருந்தால் எப்ப வேணும்னாலும் மாதுரியிடம் பேசலாம் என்று சொல்லி இதில் இருந்து கச்சிதமாக கழன்று கொண்டது தான் லேசாக இடித்தது. ஆனாலும் மொத்தத்தில் எதிர்பார்த்ததை விட பிரமாதமாக அவர் நடந்து கொண்டார் என்பதில் அவனுக்குப் பெரும் திருப்தி.

காரில் செல்லும் போது மூவரும் தங்களுக்குள் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. வீடு போய் சேர்ந்ததும் ராஜராஜன் தனதறைக்குப் போய் விட அருண் தாயிடம் எரிந்து விழுந்தான். "அவ்வளவு தூரம் சொல்லியிருக்கேன். காதிலயே விழாத மாதிரி ஏ.சி.ஹால்ல கல்யாணம் வைக்கிறதா நீயேன் சொன்னாய்?"

மாதுரி பின் வாங்கவில்லை. பதிலுக்கு அவளும் எரிந்து விழுந்தாள். "ஆமா, சொன்னேன். அதுக்கென்ன இப்ப. எனக்கும் என் மகன் கல்யாணத்தை எப்படியெல்லாம் நடத்திப் பார்க்கணும்னு ஆசை இருக்காதா? நீ சொன்ன மாதிரி சிம்பிளா கல்யாணம் செஞ்சா, காவ்யாவை பல பேர் முன்னால் மருமகளாய் ஏத்துக்க நாம் தயக்கம் காண்பிக்கற மாதிரி ஆயிடும். நாம வெட்கப்படறோம், அதனால தான் ரகசியமாய் கல்யாணம் செஞ்சு வச்சுட்டோம்னு எல்லாரையும் பேச வைக்கிற மாதிரி ஆயிடும்...."

"யார் எப்படிப் பேசினா நமக்கென்ன? அப்பாவோட காசுல தாம் தூம்னு கல்யாணம் செஞ்சுக்க எனக்குப் பிடிக்கலை"

இது வரை எந்திரம், உன் கணவன் என்று பேசி வந்த மகன் அப்பா என்று அவரைக் குறிப்பிட்டுப் பேசியதை அவள் கவனிக்கத் தவறவில்லை. அருணிடம் அவனைப் போலவே கோபமுற்ற தொனியில் பேசினாள். "எல்லாமே உனக்குப் பிடிச்ச மாதிரி நடக்காது. நாங்க நீ சொன்ன மாதிரி நிச்சயம் பண்ண அங்கே வந்தோமா இல்லையா. இப்ப நான் சொல்ற மாதிரியும் நீ கேட்கணும். அது உங்கப்பா காசு மட்டுமல்ல. என்னோடதும் தான். எங்க காசுல நீ கல்யாணம் செய்துக்கறதுல உன் கௌரவம் ஒண்ணும் போயிடாது"

சொல்லி விட்டு மாதுரி அதற்கு மேல் அங்கு நிற்காமல் தனதறைக்கு உடை மாற்றும் சாக்கில் சென்று விட்டாள். கோபம் வந்த போதும் அவளிடம் வாதமிட தன்னிடம் வலுவான காரணங்கள் இல்லாததால் அருணும் வேறு வழியில்லாமல் அங்கிருந்து நகர்ந்தான். அவள் சொன்னபடி எல்லாமே அவன் விருப்பப்படி நடந்து விட முடியாது.

அதே நேரத்தில் ஈஸ்வரனின் செல் போன் அலறியது. முதலில் அதில் வந்த எண்ணைப் பார்த்தவர் பிறகு பேசத் தீர்மானித்தார். "ஹலோ"

"சார், நாங்க சேதுபதி இருக்கிற இடத்தைக் கண்டுபிடிச்சுட்டோம்....."

## (55)

**அனந்த சாஸ்திரம் பகுவேதிதவ்யம்**
**ஸ்வல்பஸ்ச காலோ பஹுவஸ்ச விக்னா:**
**யத் ஸார பூதம் தது‌பாஸிதவ்யம்**
**ஹம்ஸோ யதா க்ஷீரம் இவாம்**
**மிஸ்ரம் – ஒரு வடமொழி சுலோகம்**

(தெரிந்து கொள்ள வேண்டிய சாஸ்திரங்களோ அதிகம். காலமோ குறுகியது, இடையூறுகளோ மிக அதிகம். ஆகையால் அன்னப் பறவை தண்ணீரில் கலந்த பாலை மட்டும் தனியாகப் பருகுகிறதோ அது போல எது சாரமோ அதை மட்டும் கிரஹித்துக் கொள்ள வேண்டும்)

"அந்த நாய் எங்கே இருக்கு?"

"காந்தி நகர் முதல் தெருல இருக்கிற கடைசி பங்களாவில் வேலை பார்க்கிறார் சார்... அவர் அங்கே வேலைக்கு சேர்ந்து ஒரு வாரம் தான் ஆகுது. தோட்ட வேலை பார்த்துகிட்டு அங்கேயே அவுட் ஹவுசில் தங்கி இருக்கிறாரு... அதிகம் வெளியே வர்றதில்லை..."

"24 மணி நேரமும் அந்த ஆளைக் கண்காணிச்சுட்டிருங்க. சந்தேகம் வராத மாதிரி இருக்கணும். நான் சொல்ற வரைக்கும் யாரும் அவனை நெருங்கக்கூடாது. பேசவும் வேண்டாம். ஆனா எந்தக் காரணத்தை வச்சும் உங்க கண்காணிப்புக்குத் தப்பிச்சு அந்த நாய் போயிடக்கூடாது. எத்தனை ஆளை வேணும்னாலும் இதுக்கு ஏற்பாடு பண்ணிக்க. புரிஞ்சுதா?"

"புரிஞ்சுதுங்க சார்"

செல் போனை ஆஃப் செய்து விட்டுத் திரும்பிய போது தாரா பின்னால் நின்று கொண்டு இருந்ததை ஈஸ்வரன் பார்த்தார். தமையன் யாரைச் சொல்கிறார் என்பதை ஊகிக்க முடிந்த தாரா அவர் அருகே உட்கார்ந்தபடி கேட்டாள். "ஏன் அண்ணா?"

புரியாதது போல் அவர் தங்கையைப் பார்த்தார். தாரா நேராகவே கேட்டாள். "சேதுபதியை எதுக்குண்ணா கண்காணிக்க சொன்னீங்க?"

"ஒரு காரணமாகத்தான். ஆனா பயப்படாதே. அந்த நாயை ஒண்ணும் செஞ்சிட மாட்டேன். ஆனா அவன் எப்ப எங்க இருக்கான்னு தெரிஞ்சுக்க வேண்டிய அவசியம் இருக்கு"

அதற்கு மேல் அவர் ஒன்றும் சொல்ல மாட்டார் என்பதை உணர்ந்த தாரா மேலே எதுவும் கேட்காமல் தலையசைத்தாள். ஈஸ்வரன் தங்கையை வாஞ்சையுடன் பார்த்தார். அவள் புன்னகைத்தாள். என்ன தான் வெளியே புன்னகையுடன் இருந்தாலும் அவளுக்குள் இருக்கும் ரணத்தை அவர் நன்றாக அறிவார். சில வலிகள் பகிர்ந்து கொள்ள முடியாதவை. நாளாக நாளாக குறையாதவை. எத்தனை தான் நேசித்தாலும் அவரால் அவளது அந்தவகையான உள் துக்கத்தைக் குறைக்க ஒன்றுமே செய்ய முடியவில்லை. அடுத்தவர் துக்கத்தை வாங்க முடிகிற வல்லமை மனிதனுக்கு இருக்குமானால் கண்டிப்பாக தங்கையிடமிருந்து வாங்கிக் கொண்டு அவள் நிம்மதியிலேயே அவரும் நிம்மதி கண்டிருப்பார். குணமான இந்த சில நாட்களில் அவள்

எத்தனையோ கேள்விகள் பலரைப் பற்றி அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தாள். ஆச்சியைப் பற்றிக் கேட்டிருக்கிறாள். அருணைப் பற்றி ஒரு ஆய்வே செய்யும் அளவு கேட்டிருக்கிறாள். அம்பலவாணனைப் பற்றிக் கூட கேட்டிருக்கிறாள். ஆனால் 'அவனை'ப் பற்றி மட்டும் அவள் கேட்கவில்லை. தாமிரபரணி நதிக்கரையில் இருந்து வந்த பின் ஓரளவு சுய நினைவோடு இருந்த காலத்தில் கூட அவள் 'அவனை'ப் பற்றி ஏனோ பேசியதேயில்லை.

"தாரா நான் ஒண்ணு கேட்டால் நீ ஒளிக்காமல் பதில் சொல்வாயாம்மா?"

"கேளுண்ணா" –புன்னகையுடனேயே சொன்னாள்.

"நீ ஏன் 'அவனை'ப் பத்தி மட்டும் எதுவுமே கேட்கலை" முதல் தடவையாக 'அவனை'ப்பற்றி அவளிடம் கேட்டார்.

அவள் முகத்தில் புன்னகை காணாமல் போயிற்று. முகத்தில் ஆழமான சோகம் படர்ந்தது. "தெரியாததைப் பத்தி மட்டும் தானேண்ணா கேட்கணும். அவர் எப்படியிருப்பார்னு எனக்குத் தெரியும். அதனால் கேட்கலை"

சொல்லி விட்டு அவள் போய் விட்டாள். அந்த வார்த்தைகள் அவரை என்னவோ செய்தன. ஆத்மார்த்தமான காதலுக்கு இதை விடப் பெரிய உதாரணம் வேண்டுமா என்று யோசித்துப் பார்த்தார். மனம் கனக்க ஆரம்பித்தது.

பலவந்தமாக மனதைத் திசை திருப்பினார். காலம் அதிகமில்லை என்று மனம் சொன்னது. செய்ய வேண்டியவை எத்தனையோ இருக்கின்றன. எவ்வளவு முடியும் என்று அவரால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. சேதுபதி தன் கண்காணிப்புக்குள் வந்தது இப்போதைய சூழ்நிலையில் முக்கியமான விஷயம் என்று நினைத்தார். அருணின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும், தாமிரா அவனுடன் எந்த அளவு துப்பு துலக்க சேரப் போகிறாள், என்றெல்லாம் தெரியாவிட்டாலும் தவிர்க்க முடியாத ஒரு கடைசி கட்டத்திற்கு அவர் தயாராகி விட்டார். உண்மையைச் சொன்னால் அவர் காத்திருக்கிறார்.

"ஹாய் அருண்" என்ற குரல் கேட்டு அருண் திரும்பினான். அந்த ஓட்டலில் இரண்டு டேபிள் தள்ளி தாமிரா அமர்ந்திருந்தாள். அருண் எழுந்து சென்று அவள் எதிரே உட்கார்ந்தான்."எப்படியிருக்கீங்க தாமிரா?"

"ஃபைன். நேத்து உங்க ஆபீசுக்கு போன் செய்து அம்பலவாணன் சார் கிட்ட பேசினேன். உங்க நிச்சயதார்த்தம்னும், அதனால் வரலைன்னும் சொன்னார். எல்லாம் நல்லபடியாய் முடிஞ்சுதா அருண்"

"முடிஞ்சுது". சிறிது நேரம் காவ்யாவைப் பத்தி தாமிரா ஆவலாகக் கேட்டாள். அருணும் சொன்னான்.

"உங்கப்பா ஆபிசிலேயே வேலை பார்க்கிற பெண்ணைக் கல்யாணம் செய்ய உங்கப்பா, அம்மா ஒண்ணும் சொல்லலியா?" அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

அப்பா எதைப் பற்றியும் எதுவும் சொல்ல மாட்டார் என்று சொல்ல முடியாமல் "சொல்லலை" என்று மட்டும் சொன்னான்.

"கிரேட்" என்று தாமிரா உற்சாகத்துடன் சொன்னாள். அவள் உற்சாகம் அவனுக்குப் பிடித்திருந்தது. உற்சாகம் மட்டுமல்ல அவளுடைய எல்லா குணாதிசயங்களும் அவனுக்குப் பிடித்திருந்தது. நிறைய காலம் பழகியது போன்ற உணர்வை அவனிடம் அவள் ஏனோ ஏற்படுத்தினாள். "உங்க காவ்யாவை எப்ப எனக்குக் காட்டப்போறீங்க?"

"கல்யாணம் முடியற வரை பழைய மாதிரி வெளியே சந்திக்க வேண்டாம்னு முடிவு செஞ்சிருக்கோம். அவளும் வேலையிலிருந்து ராஜினாமா செய்துட்டாள். அதனால் அவளைப்பார்க்கணும்னா அவள் வீட்டுக்குத் தான் போகணும்" என்றவன் புன்னகையுடன் பேச்சை மாற்றினான். "உங்கம்மா எப்படியிருக்காங்க? சேதுபதி பத்தி கேட்டீங்களா?"

மாமா அவனை எந்தக் காரணம் வைத்தும் வீட்டுக்கு அழைத்து வரக் கூடாது என்றது ஞாபகம் வர அதைச் சொல்ல முடியாமல் பொதுவாகச் சொன்னாள். "நீங்க நினைச்ச மாதிரி அவர் அந்தக் காலத்தில் படிச்சவர்ங்கிறது உண்மை தான். ஆனா அம்மாவுக்கு அதிகமாய் அவர் பத்தித் தெரியலை..... அவர் அப்ப கதைகள் எல்லாம் எழுதி பிரபலமாகாதது ஒரு காரணமாய் இருக்கலாம்......."

"உங்கம்மா தோழிகள் யாராவது இருந்தால் அவங்க கிட்ட வேணும்னா நாம கேட்டுப் பார்க்கலாம்"

"அது நல்ல ஐடியா" என்றவள் திடீரென்று நினைவுக்கு வர "முந்தா நாள் கூட அம்மாவோட தோழி ஒருத்தி போன் செஞ்சு அம்மாகிட்ட பேசினாங்க. அது யார்னு அம்மா கிட்ட வேணும்னா நான் கேட்டுப் பார்க்கிறேன்" என்று சொன்னாள்.

25 வருடங்கள் சித்த சுவாதீனமில்லாமல் இருந்த தாராவுக்கு அவள் குணமானது ஓரிரு நாட்களில் தெரிந்து போன் செய்யுமளவு நெருங்கிய தோழி இருப்பது அவனுக்கு சுவராசியமான தகவலாகப் பட்டது. ஆவலோடு கேட்டான். "போன் செய்த தோழி பெயர் என்ன?"

அவள் ஒரு நிமிடம் யோசித்தாள். பின் சொன்னாள். "போன் எடுத்தது நான் தான்னாலும் நான் பேர் கேட்கலை. அவங்களும் சொல்லலை.....இருங்க... ஆனா அம்மா அவங்க பேர் சொல்லி பேசினாங்க....அது காதுல விழுந்தது. ஆனா என்ன பேர்னு சரியா ஞாபகம் இல்லை. நான் அம்மா கிட்ட கேட்டு உங்களுக்கு சொல்றேன்"

"கொஞ்சம் யோசிச்சுப் பாருங்களேன்" என்றான்.

"ஏதோ பேர் சொன்னாங்களே... மா..... மாதவியோ....மாதுரியோ... அந்த மாதிரி ஏதோ பேர்"

மாதுரி என்ற பெயர் கேட்டவுடன் அருண் அடைந்த அதிர்ச்சிக்கு அளவில்லை. அவனுக்கு உள்ளே ஒரு பிரளயம் ஏற்பட்டதென்றே சொல்ல வேண்டும். அதை வெளியே காண்பிக்காமல் இருக்க நிறையவே பிரயாசைப்பட்டான்.

## (56)

If you want the truth,  
I'll tell you the truth:  
Listen to the secret sound,  
which is inside you.  
– Rumi, A sufi poet

அருணுக்கு அந்தப் பெயர் மாதவியாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் ஒரு கணம் வந்திருந்தாலும் அது வந்த வேகத்திலேயே மறைந்து விட்டது. தாரா படித்த காலத்திலேயே, அதே கல்லூரியிலேயே மாதுரி படித்திருந்ததும், அந்த நாவல் பற்றி சொன்ன சமயங்களில் எல்லாம் அவள் அடைந்த பதட்டமும், ஈஸ்வரனுடன் கை கோர்த்து சேதுபதி பற்றிய தகவல்கள் எல்லாம்

வெளிவராமல் செய்ய மாதுரியின் தந்தை செய்த முயற்சிகளும் எல்லாமே இப்போது அவனுக்கு மாதுரியையே தாராவின் அந்தத் தோழியாக சுட்டிக் காட்டின.

அருண் சிறிது யோசித்து விட்டுக் கேட்டான். "உங்கம்மாவோட அந்தத் தோழியோ, மற்ற தோழிகளோ அவங்க உடல்நிலை சரியில்லாமல் இருந்தப்ப போன் செஞ்சு பேசினதுண்டா? இல்லை நேரில் வந்து பார்த்ததுண்டா"

"இல்லை" என்றாள் தாமிரா. "எனக்கு நினைவு தெரிஞ்சு அது தான் முதல் போன். நேரில் வந்து யாரும் பார்த்ததும் இல்லை. இப்ப திடீர்னு ஒரு போன் வந்ததை யோசிச்சா எனக்கும் ஆச்சரியமாய் இருக்கு"

முந்தைய நாள் தாரா வந்து விட்டுப் போனதை மாதுரியிடம் தெரிவித்திருந்தது அவனுக்கு நினைவு வந்தது. இப்போது அவனுக்கு ஆச்சரியமாய் இல்லை. சந்தேகமும் இல்லை. கண்டிப்பாக தாராவுடன் போனில் பேசியது மாதுரியாகத் தான் இருக்க வேண்டும்......

"என்னாச்சு அருண். திடீர்னு முகம் எல்லாம் மாறிடுச்சு" தாமிரா கேட்ட போது பலவந்தமாக புன்னகைக்க முயன்று தோற்றுப் போனான்.

"உங்க கிட்ட நான் சொல்லாதது கொஞ்சம் இருக்கு தாமிரா. என் கண் முன்னாலேயே இருந்தும் நான் பார்க்காமல் விட்டதும் கொஞ்சம் இருக்கு......." என்று தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அவன் சொன்னான்.

"புதிர் போடாம தெளிவாய் சொல்லுங்க அருண்"

"தாமிரா நாளைக்குக் காலைல உங்களுக்கு நேரம் கிடைக்குமா? நாம் எங்கேயாவது சந்திக்கலாமா? நான் அப்ப எல்லாம் விவரமாய் சொல்றேன். அதற்கு முன்னால் நான் உறுதிப்படுத்திக்க வேண்டிய விஷயங்கள் சிலதிருக்கு"

"நாளைக்கு எனக்குப் பெரிய வேலை எதுவுமில்லை. எங்கே சந்திக்கலாம்?"

அவன் இடத்தைச் சொல்ல அவளும் காலை பத்து மணிக்கு சந்திப்பதாக சொல்லி விடைபெற்றாள்.

அலுவலகத்திற்குப் போகும் வழியில் அவன் மனதில் பழைய தகவல்கள் எல்லாம் புதிய அர்த்தங்களைப் பெற்றன. ஈஸ்வரனைப் போன்ற சக்தி வாய்ந்த மனிதர்களுக்கு சிலவற்றை சாதிக்க அவனுடைய தாத்தா செல்வரங்கத்தைப் போன்றவர்களின் உதவி என்றுமே தேவைப்பட்டிருக்க வாய்ப்பில்லை. அப்படி இருக்கையில் சேதுபதி பற்றிய துப்பறிதலை நிறுத்த ஈஸ்வரனுடன் செல்வரங்கம் சேர வேண்டுமென்றால் அது தனிப்பட்ட அக்கறையாகத் தான் இருக்க வேண்டுமே தவிர வேறு காரணம் இருக்க வாய்ப்பில்லை.

சேதுபதி, தாரா, ஈஸ்வரன், ஆச்சி என்று யாரைப் பற்றிப் பேசிய போதும் கலவரமடைந்த மாதுரி உண்மையில் ஈஸ்வரனால் மகனுக்கு ஆபத்து வரும் என்று பயந்தாளா இல்லை பயப்பட அவள் வாய் விட்டுச் சொல்லாத வேறு காரணம் உண்டா என்ற சந்தேகம் அவனுள் வேர் விட ஆரம்பித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக 'எப்பவுமே என்னை வெறுத்துட மாட்டேன்னு சத்தியம் செய்து கொடுப்பாயா?" என்று அவள் கேட்டது நினைவுக்கு வந்து காரணம் புரியாத சஞ்சலம் அவனுள் எழுந்தது. வெறுக்கக்கூடிய அளவு அவள் என்ன செய்திருக்கக்கூடும்?

ஒரு கணம் நேரடியாக அவளிடம் இது பற்றிக் கேட்க எண்ணினான். யோசிக்கையில் அவள் உண்மையை சொல்ல மாட்டாள் என்றும் பதிலாக அழுகையே அவளிடமிருந்து வரும் என்றும் அவனுக்குத் தோன்றியது. எந்தக் காரணமாக இருந்தாலும், எந்த சூழ்நிலையிலும் அவளுடைய

துக்கம் அவனால் தாங்க முடியாததாகவே இருந்ததால் அவளிடம் கேட்கும் எண்ணத்தைக் கைவிட்டான்.

அலுவலகத்தில் அவனைப் பார்த்த அம்பலவாணன் கவலையுடன் கேட்டார். "என்ன அருண், உடம்பு சரியில்லையா? என்னவோ மாதிரி இருக்கிறாய்?"

"உடம்புக்கு ஒண்ணுமில்லை சார், மனசு தான் சரியில்லை....."

"என்ன ஆச்சு அருண்....?"

அம்பலவாணனை அருண் வெறும் பத்திரிக்கை ஆசிரியராக என்றுமே நினைத்ததில்லை. நெருங்கிய நண்பராகவும், தொழிலில் எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்த குருவாகவும், இன்னும் சொல்லப் போனால் ராஜராஜனின் இயந்திரத்தனமான அணுகுமுறையால் அம்பலவாணனை தந்தையின் ஸ்தானத்தில் வைத்தும் தான் அருண் பார்த்திருக்கிறான். மனதில் ஒரு இமயமாக அழுத்திய சுமையை அவரிடம் இறக்கி வைத்தான். ஆரம்பத்தில் அந்த நாவல் துப்பறிய மாதுரி எதிர்ப்பு தெரிவித்ததில் இருந்து தாராவுக்கு வந்த 'போன் கால்' வரை எல்லாவற்றையும் சொன்னான்.

அம்பலவாணன் எல்லாவற்றையும் கேட்டு சிலையாக சமைந்திருந்தார்.

அருண் கடைசியாகக் கேட்டான். "சார் நீங்க நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. என் தாத்தாவும் ஈஸ்வரனும் உங்களுக்கு அந்த நாவல் துப்பறிய முட்டுக்கட்டை போட்டதை நீங்க ஆரம்பத்தில் மறைச்ச மாதிரி, என் கிட்ட எப்படி சொல்வதுன்னு சொல்லாமல் மறைச்ச விஷயம் ஏதாவது இருக்கா?"

"சொல்லக் கூடாதுன்னு நினைக்காட்டியும் சரியான ஆதாரம் இல்லாததால நான் சொல்லாமல் விட்ட சந்தேகங்கள் சிலதிருக்கு அருண். எனக்கென்னவோ மறுபடியும் துப்பறியக் கிளம்பின நம்மை ஈஸ்வரன் திரும்பவும் மிரட்டாமலும், தடுத்து நிறுத்தாமலும் இருக்கக் காரணம் நீ தான்னு தோணிச்சு. அதை உறுதி செய்யற மாதிரி தாரா உன் பேரை சொல்லி உனக்கு அவங்க வர்றது தெரிய வேண்டாம்னு சொன்ன விதம் கூட ஒரு முன்பின் தெரியாத ஒரு பத்திரிக்கைக்காரனைப் பத்தி சொன்ன மாதிரி படலை. நல்லா தெரிஞ்ச ஒருத்தனைப் பத்தி சொன்ன மாதிரி தான் இருந்தது. எல்லாத்துக்கும் மேலாய் அவங்க போறதுக்கு முன்னால் உன்னைப் பார்த்த விதம்...."

"தாரா என்னைப் பார்த்தாங்களா? எப்போது?" அருண் திகைப்போடு கேட்டான்.

அம்பலவாணன் குற்றவுணர்வோடு அவனைப் பார்த்தபடி சொன்னார். "நான் சொல்லாமல் விட்ட ஒரு விஷயம் இருக்குன்னா அது ஒண்ணு தான் அருண். அதை ஏன் சொல்ல வேண்டாம்னு அப்போ நினைச்சேன்னு எனக்கே சரியாய்த் தெரியலை....."

அவர், தாரா அவனை அறைக்கதவு கண்ணாடி வழியாக பார்த்து நின்றதையும், போகும் போது கண்களைத் துடைத்துக் கொண்டு போனதையும் விவரித்த போது அருண் மனதில் ஆயிரம் கேள்விகள் எழுந்தன.

அம்பலவாணன் தொடர்ந்து சொன்னார். "....அவங்க உன்னைப் பார்த்த விதம் துப்பறியக் கிளம்பிய பத்திரிக்கைக்காரன் எப்படி இருப்பான்னு தெரிஞ்சுக்கற ஆர்வம் மாதிரி இல்லை. நிறைய காலம் கழிச்சு தன் குழந்தையைப் பார்க்கிற தாயின் பார்வையை அதில் பார்த்தேன். அப்போதே எனக்கு நீ அவங்களோட ஏதோ விதத்தில் சம்பந்தப்படற மாதிரி உறுதியாய்த் தோணிச்சு. எந்த விதத்தில்னு அப்பவும் சரி இப்பவும் சரி என்னால் யூகிக்க முடியலை. ஆனால் நீ தேடற ரகசியத்தில் நீயும் ஒரு அங்கம்னு என் மனசுக்குப் பட்டதால் தான் அதை எப்படிச் சொல்றதுன்னு நான் தயங்கினேன்னு இப்பத் தோணுது...."

சொல்லிக் கொண்டிருந்த அம்பலவாணன் திடீர் என்று நிறுத்தி தன் தலையில் லேசாக அடித்துக் கொண்டார்.

"என்ன சார்?"

"தாரா கழுத்தில் தாலி இருந்தது. நெற்றியில் குங்குமமும் இருந்தது, அருண். அப்ப எனக்கு எதனாலோ இடிக்கலை. திடீர்னு இப்ப தான் புத்திக்கு எட்டுது. அப்படின்னா அந்த தேவன் இறந்து போயிருக்க வாய்ப்பில்லை தானே."

# (57)

"Every act of conscious learning requires the willingness to suffer injury to our self–esteem. That is why young children, before they are aware of their self–importance, learn so easily; and why older people, especially if vain or arrogant, cannot learn at all." –

Thomas Szasz.

மகன் வீட்டினுள் நுழைந்த நேரம் முதல் அவனிடம் பெரிய வித்தியாசத்தை மாதுரி கவனித்தாள். அவளைப் பார்த்த பார்வையில் ஒருவித தீட்சண்யம் இருந்தது. கூர்மையாக அவளுடைய இதயத்தை ஊடுருவிப் பார்த்த அவன் கண்களை நேரடியாக சந்திக்க முடியாமல் மாதுரி தடுமாறினாள். நல்ல வேளையாக அவன் வழக்கம் போல ஹாலில் அமராமல் தனதறைக்குப் போனவன் சாப்பிடும் நேரம் மட்டும் தான் வெளியே வந்தான்.

சாப்பிடும் போது மகனைக் கேட்டாள். "ஏண்டா என்னவோ மாதிரி இருக்கிறாய்?"

ஒன்றுமில்லை என்று ஒற்றை வரியில் பதில் சொன்னவன் மேற்கொண்டு பேசவில்லை. சாப்பிட்ட பிறகு மறுபடி தனதறைக்கு அவன் போய் விட்டான். மாதுரியை இனம் புரியாத பயம் தொற்றிக் கொண்டது. வாழ்நாள் எல்லாம் அவள் பயந்து கொண்டிருந்த தருணம் கூப்பிடு தூரத்தில் இருப்பதாக உள்ளுணர்வு சொன்னது. அன்று இரவு அவளுக்கு உறக்கம் வரவில்லை. பயம் பல அவதாரங்கள் எடுத்து அவளை வதைத்தது.

அன்று உறங்காதது அவள் மட்டுமல்ல, அருணும் தான். அம்பலவாணன், தாரா அவனைப் பார்த்ததும், கண்களைத் துடைத்துக் கொண்டு சென்றதும் பற்றி சொன்னதை நினைக்கையில் அதன் பொருள் என்ன என்று அவன் ஊகிக்க முடியாமல் தடுமாறினான். அவர் சந்தேகப்படுவது போல் நிஜமாகவே அவன் ஈஸ்வரன், தாராவுடன் ஏதாவது வகையில் சம்பந்தப்படுகிறானா என்பதை அவனால் தீர்மானிக்க முடியவில்லை. அவனும் அவன் தாயும் இந்தக் கதையிலோ, கதாபாத்திரங்களின் வாழ்க்கையிலோ எப்படி சம்பந்தப்படுகிறார்கள்?..... நினைக்க நினைக்கக் குழப்பமே மிஞ்சியது...

திடீர் என்று பூங்கொடி கிராமத்தில் ஆச்சி தன்னிடம் காட்டிய பாசம் நினைவுக்கு வந்தது. நிஜமாகவே முன் பின் தெரியாத ஒரு பத்திரிக்கையாளனை யாராவது முதல் பழக்கத்திலேயே வீட்டில் தங்க வைத்து அன்பு மழை பொழிவார்களா என்ற கேள்வி பிரம்மாண்டமாக எழுந்து அவன் முன் நின்றது. ஒரு கிராமத்துக் கிழவியின் வழக்கமான விருந்தோம்பல் அல்ல அது என்று உள்மனம் சொன்னது. அன்று ஆச்சியிடம் செல்போனில் பேச மாதுரியிடம் சொன்ன போது தொடர்பு துண்டிக்கப்பட்டதும் நினைவுக்கு வந்தது. அம்மா வேண்டுமென்றே தொடர்பை துண்டித்தாளோ? பிறகு திரும்பவும் அவன் தாயை போனில் கூப்பிட்ட பிறகு ஆச்சி தர்மசங்கடத்துடன் போனை வாங்கி பேசியது நினைவுக்கு வந்தது. உண்மையில் அவன் தாயும்

ஆச்சியும் முன்பே அறிமுகமானவர்களா? கடைசியில் பூங்கொடி கிராமத்திலிருந்து வந்தபிறகு அவன் பேசப் பேச மாதுரி மயங்கி விழுந்தது நினைவுக்கு வந்தது. என்ன சொல்லும் போது மயங்கி விழுந்தாள் என்று அறிய மனத்திரையில் அன்றைய சம்பவத்தை திரும்பத் திரும்ப குறும்படமாக ஓட்டிப் பார்த்தான். அவனால் அதைத் துல்லியமாக அறிய முடியவில்லை. எல்லாம் பொதுவாக நினைவிருந்ததே தவிர குறிப்பிட்டுச் சொல்லும்படியாக எதுவும் நினைவுக்கு வரவில்லை. ஆனால் அவன் சொன்னதையெல்லாம் கேட்டு தான் அவள் மயங்கி விழுந்தாள் என்பது மட்டும் உண்மை. நினைக்க நினைக்க அவனுக்கு அவன் மேலேயே கோபம் வந்தது. பெரிய புத்திசாலியாக தன்னை நினைத்துக் கொண்டிருக்க, உண்மையில் எவ்வளவு கண்மூடித்தனமாக இருந்திருக்கிறோம் என்று நினைக்கையில் அவமானமாக இருந்தது.

மறுநாள் காலை தாமிராவை சந்தித்த போது அவன் தோற்றத்தைப் பார்த்து அவள் திடுக்கிட்டுப் போனாள். "என்ன அருண் உங்களுக்கு உடம்பு சரியில்லையா?". முந்தைய இரவு அவன் சரியாக உறங்காததும், பல்வேறு உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப் பட்டிருந்ததும், அவனது தோற்றத்தைப் பாதித்திருந்தன.

"உடம்பு நல்லாத்தான் இருக்கு தாமிரா" என்ற அருண் அவளை ஆழமாகப் பார்த்தான். அவளால் உண்மையை எந்த அளவு ஜீரணிக்க முடியும் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. ஒரு பெருமூச்சு விட்டு பிறகு ஆரம்பித்தான். "தாமிரா நீங்க நினைக்கிற மாதிரி நாம் கண்டுபிடிக்க ஆர்வமாயிருக்கிற 'நீ நான் தாமிரபரணி' கதாபாத்திரங்கள் பத்தின நிஜங்கள் நமக்கு சம்பந்தமில்லாத ஒரு விஷயமில்லை... குறைந்த பட்சம் நம்ம குடும்பமாவது அதில் சம்பந்தப்பட்டிருக்கிற மாதிரி தோணுது...."

அவள் குழம்பினாள். "என்ன சொல்றீங்க, அருண்"

முன்பு அவளிடம் சொல்லாமல் மறைத்து வைத்திருந்த ஈஸ்வரன், தாரா சம்பந்தமான உண்மைகளை அருண் விவரமாக தாமிராவிடம் சொன்னான். அன்று அம்பலவாணனை தடுத்து நிறுத்த முயன்றவர்கள் ஈஸ்வரனும், அவனுடைய தாத்தா செல்வரங்கமும் தான் என்பதையும், தாராவுக்குக் கல்யாணம் ஆனதற்கான ஆதாரம் எதுவுமில்லை என்பதையும் தாராவுடைய கணவரைப் பற்றி பல கேள்விக்குறிகள் இருக்கின்றன என்பதையும் சொன்ன போது அவள் அடைந்த அதிர்ச்சிக்கு அளவேயில்லை. பேசும் சக்தியையே அவள் இழந்து விட்டது போல் இருந்தது. அதோடு அவனுடைய தாய் அந்த நாவல் சம்பந்தமாக அவன் காட்டிய ஆர்வத்துக்கு ஆரம்பத்தில் இருந்து காட்டிய எதிர்ப்பையும், அவள் பயத்தையும் சொன்னான்.

தொடர்ந்து தாரா தங்கள் அலுவலகத்திற்கு வந்ததைப் பற்றி சொல்லும் முன்னால் அவன் ஒருவித வருத்தத்துடன் சொன்னான். "நான் இத்தனை வருஷமாய் ஒரே ஒரு பத்திரிக்கை தர்மத்தை கை விட்டதில்லை. வெளியே தெரிய வேண்டாம்னு எங்களைக் கேட்டுக் கொண்டு மத்தவங்க எங்க கிட்ட வந்ததையோ சொன்னதையோ தப்பித் தவறி கூட வெளியே சொன்னதில்லை. ஆனால் இந்த ஒரு தடவை அந்த தர்மத்தை நான் கை விட வேண்டி இருக்கு. தாமிரா, உங்க அம்மா அம்பலவாணன் சாரைப் பார்க்க எங்க ஆபிசுக்கு வந்திருந்தாங்க...."

இப்போது தாமிராவைப் பார்க்கும்போது அவனுக்கு தன்னைப் பார்த்து தாமிராவும், அம்பலவாணனும் "உடம்புக்கு என்னாச்சு?" என்று ஏன் கேட்டார்கள் என்பது புரிந்தது. மனம் ரணமாகும் போது அது தானாகவே தோற்றத்தில் வெளிப்படுகிறது.

கடைசியில் தாராவிற்கு போன் செய்த தோழி தன் தாய் மாதுரி தான் என்று அவன் தெரிவித்த போது அவள் தன் தலையை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டாள். "எனக்கு நிஜமாவே தலை சுத்துது அருண்"

அருண் கவலையுடன் அவளுடைய தோளைத் தொட்டு சொன்னான். "தாமிரா ரிலாக்ஸ்"

உடனடியாக ஈஸ்வரன் போன் அலறியது. "சார் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு மேல அருணும் தாமிராம்மாவும் பேசிகிட்டுருக்காங்க. அருண் சொன்னதை எல்லாம் கேட்டு தாமிராம்மா அதிர்ச்சி அடைஞ்சுட்ட மாதிரி தெரியுது. தன்னுடைய தலையைப் பிடிச்சுகிட்டு ஏதோ சொன்னாங்க. அவங்களுக்கு என்னவோ உடம்பு சரியில்லாத மாதிரி தோணுது. அருண் இப்ப அவங்க தோளைப் பிடிச்சு ஏதோ சொல்றாரு...."

பொதுவாக எந்த நடவடிக்கையும் முடிந்த பின்பு தான் ஈஸ்வரனுக்கு முழுமையான ரிப்போர்ட் போகும். ஆனால் இந்த முறை இடையிலேயே அவரை தொடர்பு கொள்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் தாமிராவின் உடல்நிலை குறித்து அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகமும், அருண் அவளைத் தொட்டதும் தான். ஈஸ்வரன் மருமகளை சாதாரணமாக அன்னிய ஆண்கள் தொடுவது கூட அவரது அகராதியில் பெரும் குற்றமே.

"பரவாயில்லை. நீங்க தூரத்திலேயே இருங்க. கண்காணிக்கறதை மட்டும் நிறுத்திடாதீங்க...." என்று சொல்லி செல் போனை ஈஸ்வரன் கீழே வைத்தார். அவர் நினைத்தபடி அந்தத் தவிர்க்க முடியாத கூட்டணி அமைந்து விட்டது. அவரது மருமகளும் அருணும் பேசிக் கொண்டது என்ன என்று துல்லியமாகச் சொல்ல முடியாவிட்டாலும் தங்கள் குடும்பத்தினருக்கும் அந்தக் கதைக்கும் ஏதோ சம்பந்தம் உள்ளது என்கிற அனுமானத்திற்கு அவர்கள் வந்திருக்கக் கூடும் என்பதை அவரால் ஊகிக்க முடிந்தது. இத்தனை நாட்கள் ஒரு விஞ்ஞானியையும் அவன் காதலியையும் கண்டு பிடிக்க ஆர்வம் காட்டியவர்கள் இனி மேல் காட்டப் போகும் ஆர்வம் வேறு மாதிரியாக இருக்கும் என்பதை உணர்ந்த ஈஸ்வரன் குறிப்பாக தாமிராவை எப்படி எதிர் கொள்வது என்று பயந்தார். பொய்யிற்கு மேல் பொய்யாக நம்பும்படி சொல்லும் வித்தை அந்த அரசியல்வாதி அறியாததல்ல. ஆனால் தாராவைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு தாமிராவை சமாளிக்க தன்னால் முடியும் என்பதை அவரே நம்பவில்லை.

# (58)

"Men who are resolved to find a way for themselves will always find opportunities enough; and if they do not find them, they will make them."

– Samuel Smiles

தாமிரா தன்னை சுதாரித்துக் கொண்டு பலவீனமாய் புன்னகை செய்தாள். "திடீர்னு ஒரே நாள்ல இத்தனை அதிர்ச்சியைத் தாங்க முடியலை....."

அருணிற்கு அவள் நிலையைப் புரிந்து கொள்ள முடிந்தது. புரிகிறது என்பது போல் தலையசைத்தான்.

"நீங்க எங்கப்பா பத்தி என்ன சொல்ல வர்றீங்க. அவர் தான் அந்த விஞ்ஞானி, எங்கம்மா தான் அந்த தேவின்னு சொல்ல வர்றீங்களா?"

"அந்த லாஜிக்கில் தப்பில்லைன்னு தோணுது தாமிரா...இல்லைன்னா உங்கம்மா ஏன் அம்பலவாணன் சாரை பார்க்கப் போகணும்?"

"அந்த லாஜிக் சரியாய் இருந்தால், அந்த விஞ்ஞானி கதைப்படியே செத்திருக்கணும் அருண். ஏன்னா என் மாமா அவரோட தங்கையோட சந்தோஷத்துக்காக எதையும் செய்யக் கூடிய ஆள். அவரால் தன் தங்கைக்கு அந்த விஞ்ஞானியைக் கல்யாணம் செய்து கொடுக்க முடியாமல்

போகணும்னா அந்த மனிதர் செத்துப் போயிருந்திருக்கணும். வேற எந்தக் காரணமும் என் மாமாவைப் பின் வாங்க வச்சிருக்க முடியாது"

கிட்டத்தட்ட இதே அபிப்பிராயத்தை தான் முன்பு ஒரு முறை அம்பலவாணனும் அவனிடம் தெரிவித்திருந்தார். ஆனால் அதே அம்பலவாணன் தான் பின்பு தாராவைத் தவிர வேறு யாரையும் அந்த 'தேவி'யாக நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை என்று ஒத்துக் கொண்டார். ஆனாலும் தாமிரா சொல்வதிலும் உள்ள உண்மையை அவனால் மறுக்க முடியவில்லை.

"ஆனால் உங்கம்மா கழுத்தில் தாலியும், நெற்றியில் குங்குமமும் இருந்ததாய் அம்பலவாணன் சார் சொன்னாரே"

"அம்மா சித்த சுவாதீனம் இல்லாம போனதுக்குக் காரணமே அப்பா மரணம் தான் அருண். அம்மா மனசில் இன்னும் அப்பா உயிரோட தான் இருக்கார்னு தோணுது. அம்மா இன்னும் முழுசும் குணமாகலைங்கிறதுக்கு இதுவே ஒரு அத்தாட்சி"

அவனுக்கு ஏனோ அந்த 'தேவன்' இறந்து போயிருக்கக்கூடும் என்பதை நினைக்கக் கஷ்டமாக இருந்தது. ஆனாலும் சொன்னான். "நீங்க சொல்றதும் சரியாய்த் தான் தோணுது தாமிரா. அப்படி அந்த விஞ்ஞானி 'தேவன்' இறந்து போயிட்டார்ங்கிற கோணத்தில் பார்த்தா பாக்கி எல்லாமே சரியாய்ப் பொருந்துது தாமிரா. அவரும் உங்கம்மாவும் காதலிச்சு ரகசியமாய் கல்யாணம் செய்துகிட்டதால் அவங்க கல்யாணம் வெளியே யாருக்கும் தெரியலை. அவரோட மரணம் உங்கம்மாவை சித்த சுவாதீனம் இல்லாமல் செஞ்சுடுச்சு. அப்படி ரகசியக் கல்யாணத்தின் மூலமாய் ஒரு குழந்தையும் உங்கம்மா பெத்துகிட்டதால் அந்தக் கதை வெளியே வரக்கூடாதுன்னு உங்க மாமா நினைச்சார்......"

அந்த சூழ்நிலையிலும் தாமிரா வாய் விட்டுச் சிரித்தாள். "அருண், சும்மா கற்பனைக் குதிரையைப் பறக்க விடாதீங்க. இதில் நிறைய முரண்பாடுகள் இருக்கு. முதலாவது எங்கம்மா ரகசியக் கல்யாணம் செய்துக்க வேண்டிய அவசியமே இல்லை. மாமாவுக்கு ஆளை சுட்டிக் காண்பிச்சா போதும். கடத்திகிட்டு வந்தாவது அந்த ஆளை தங்கைக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருப்பார்...."

"ஒருவேளை அந்த ஆள் உங்க மாமாவோட பரம எதிரியாய் இருந்திருந்தா.....?"

"தமிழ் சினிமா நிறைய பார்த்திருக்கீங்கன்னு தெரியுது..." என்று தாமிரா பழையபடி சிரித்தாள். "என் மாமா தங்கையோட சந்தோஷத்துக்கு எதிரா தன்னுடைய விருப்பு வெறுப்புகளை ஒரு பொருட்டாய் நினைக்க மாட்டார். உங்களுக்கு அவர் பத்தித் தெரியாது. அரசியல்வாதி ஈஸ்வரனுக்கும், அண்ணன் ஈஸ்வரனுக்கும் இடையில் ஒற்றுமையான விஷயம் எதுவுமே இல்லைன்னே சொல்லலாம். இன்னொரு விஷயம் – உங்க குடும்பம் எந்த விதத்தில் இதில் சம்பந்தப்படுதுன்னு தெரியலையே. ஒரு வேளை உங்கம்மா அந்த தேவியாய் இருந்திருந்தால்ங்கிற சந்தேகம் கூட எனக்கு வந்தது. ஆனா அந்தக் கோணத்தில் பார்த்தா எங்க மாமாவும் அம்மாவும் எப்படி இதில் வர்றாங்கன்னு சொல்ல முடியலை. ரொம்பவே குழப்பமாய் இருக்கு அருண்."

ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு கேட்டாள். "நீங்க ஏன் அருண் உங்கம்மாவை நேரடியாய் கேட்கக்கூடாது"

"அதை நான் முதல்லயே யோசிச்சுப் பார்த்து கை விட்டுட்டேன் தாமிரா. எனக்கு அவங்க உண்மையை சொல்வாங்கங்கற நம்பிக்கை இல்லை."

அவள் தயக்கத்துடன் சொன்னாள். "என் மாமா கிட்ட கேட்டாலும் வண்டி வண்டியாய் பொய் தான் வரும். உங்கப்பா பத்தி என்ன வேணும்னாலும் என் கிட்ட கேட்கலாம்னு அவர் சொல்லியிருக்கார். ஆனாலும் அவரை நம்ப முடியாது. அம்மாவைக் கேட்கலாம்னா அவங்க இப்ப

தான் குணமானவங்க. நான் ஏதாவது இது பத்தி பேசப்போய் என் மாமா பயப்படற மாதிரி அவங்க பழைய நிலைமைக்குப் போயிடுவாங்களோன்னு பயமாயிருக்கு, அருண்"

அருண் ஆழ்ந்த சிந்தனையோடு சொன்னான். "சரி தாமிரா, விடுங்க. நம்ம குடும்பத்து மனுஷங்களை கேட்டாலும் மழுப்புவாங்களே தவிர நிஜத்தை சொல்வாங்கங்கற நம்பிக்கை எனக்கும் இல்லை. நாமே கண்டுபிடிக்கலாம்..... நமக்கு உறுதியாய் தெரிஞ்சதை மட்டும் முதல்ல பட்டியல் போடலாம். உங்க மாமாவும் என் தாத்தாவும் சேர்ந்து தான் அம்பலவாணன் சாரை அன்றைக்கு தடுத்து நிறுத்தப் பார்த்தாங்க. அடுத்ததாய் உங்கம்மா உங்க மாமாவுக்கே தெரியாமல் வந்து அம்பலவாணன் சார் கிட்ட வந்து பேசினதை பார்க்கையில் அது உங்கம்மாவுக்காக உங்க மாமா செஞ்ச காரியம்னு உறுதியாகவே அனுமானிக்க முடியுது. உங்கம்மாவும் எங்கம்மாவும் தோழிகள். எங்கம்மா சொன்னதை வைத்துப் பார்த்தால் உங்க மாமாவும், என் தாத்தாவும் சேர்ந்து இந்த விஷயத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் நண்பர்களாக இருக்கலை......."

"அந்தக் கதாபாத்திரங்களை எடுத்துகிட்டா அவர்கள் கதைப்படி அப்பவே சாகலை. அவர்கள் யாருன்னு சிலருக்குத் தெரியும். நம்ம குடும்பத்தாரை தவிர்த்துப் பார்த்தால் சேதுபதி, ஆச்சி, ரங்காச்சாரி, நரசிம்மராஜுலு – இந்த நாலு பேருக்குமே தெரியும். ஆனா அவர்கள் சொல்ல மறுக்கிறாங்க. காரணம் அவங்க எல்லாருமே அந்த ரெண்டு பேரையும் நிறையவே நேசிக்கிறாங்க.... என்ன தாமிரா இது எல்லாமே நிச்சயமாய் நமக்குத் தெரியற விஷயங்கள். சரி தானே?"

திடீர் என்று அவள் முகம் பிரகாசித்தது. "அருண் இப்ப நீங்க சொல்ல மறந்த விஷயம் ஒன்றிருக்கு. நமக்கு வேண்டிய பதில் வரக் கூடிய இடம் அங்கே இருக்கு"

ஆச்சரியத்துடன் அருண் கேட்டான். "அது என்னது?"

"அம்பலவாணன் சாருக்கு போன் செய்து அன்றைக்கு அந்த உண்மைகளை சொல்லத் தயாராய் ஒரு ஆள் இருந்தார். நாம் அந்த ஆளை அணுகினால் இப்போது கூட அந்த உண்மைகளை வரவழைக்கலாம்"

"அந்த ஆள் யார்னு நமக்குத் தெரியாதே தாமிரா"

"இப்படி யோசிச்சுப் பாருங்க. அந்த ரெண்டு பேரை நேசிச்சவங்க சொல்லத் தயங்கற உண்மையை சொல்ல முன் வருகிற ஆள் அவங்களை நேசிக்கலை, அல்லது அவங்களை லட்சியம் செய்யலைன்னு நாம் வச்சுக்கலாம் இல்லையா?"

"ஆமாம். அப்படி வச்சுக்கலாம்"

"அப்படிப்பட்ட ஆள், அவர்களைப் பத்தி நன்றாய்த் தெரிந்து வைத்திருக்கும் வாய்ப்பும் இருக்கிற ஆள், ஒருத்தர் இருக்கார்"

பரபரப்புடன் அருண் கேட்டான். "யாரது?"

"ஆச்சி மகன் மருதமுத்து. நீங்க அன்றைக்கு சொன்னதை வச்சுப் பார்க்கையில் அப்படி எல்லா குணாதிசயங்களும் அந்த ஆளுக்குப் பொருந்துது. நடந்ததை எல்லாம் கூட இருந்து பார்த்த ஆள், அவ்வளவு அன்னியோன்னியமாய் யாரிடமும் சேராத ஆள், கிராமத்து ஆள், ஏன் அம்பலவாணன் சாருக்கு போன் செய்த ஆளாய் இருக்கக்கூடாது.? அப்படி போன் செய்தது அந்த ஆளாகவே இல்லாவிட்டாலும் கூட பணத்தை வீசினா அந்த ஆள் கொஞ்சம் கூட வருத்தம் இல்லாமல் தனக்குத் தெரிஞ்ச உண்மைகளை சொல்வார்னு தோணுது"

அருணால் அவளை மெச்சாமல் இருக்க முடியவில்லை. மருதமுத்துவைப் பார்த்த கணம் முதல் அவனுக்குப் பிடிக்காததால் அவன் அவரை தன் சிந்தனைகளில் இருந்து ஒதுக்கியே இருந்தான்.

ஆனால் தாமிரா சொன்னது போல் அந்த ஆள் விலை போகக்கூடிய ஆள் என்பதில் அவனுக்கு சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை. உற்சாகத்துடன் சொன்னான். "நிஜமாகவே இது எனக்குத் தோணவேயில்லை பார்த்தீங்களா? சரி அப்படின்னா நம்ம அடுத்த கட்ட நடவடிக்கை...."

"பூங்கொடி கிராமத்துக்கு நாம ரெண்டு பேருமே போகப் போகிறோம்." – உறுதியாக தாமிரா தெரிவித்தாள்.

# (59)

A person is never happy except at the price of some ignorance.

–Anatole France

இரண்டு பேருமே பூங்கொடி கிராமத்துக்குப் போகப் போகிறோம் என்று அவள் சொன்ன போது அருண் ஆச்சரியத்துடன் கேட்டான். "உங்க மாமா கேட்டா என்ன சொல்வீங்க?"

"அவரோட மருமகள் நான். எனக்குப் பொய் சொல்ல சொல்லியா கொடுக்க வேண்டும். ஏதாவது சொல்லிட்டு வர்றேன்."

"என்ன சொன்னாலும் அவருக்குத் தெரியாமல் போகாது. நீங்க வரணும்னு இல்லை. நானே போய் தெரிஞ்சுகிட்டு வர்றேன்"

"இது நம்ம குடும்பம் சம்பந்தப்படற விஷயம்னு ஆன பிறகு நானும் நேரில் வராட்டி என் மண்டை வெடிச்சுடும். அதனால் நான் வர்றேன்" என்று உறுதியாகச் சொல்லி அவன் மேற்கொண்டு மறுப்பு சொல்லாதபடி முற்றுப் புள்ளி வைத்தாள். தன்னுடைய காரையே எடுத்துக் கொண்டு வருவதாக சொன்னாள். இருவரும் மாற்றி மாற்றி ஓட்டினால் களைப்பு தெரியாதென சொன்னாள். பழகிய சில நாட்களிலேயே அவள் தைரியமாக தொலைதூரப் பயணத்திற்கு தன்னுடன் தனியாக வர தீர்மானம் செய்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எதற்கும் காவ்யாவையும் அழைத்துப் போகலாமா என்ற எண்ணம் வந்தது. ஆனால் அவளுக்குக் காய்ச்சல் என்று முந்தைய நாள் சொல்லியிருந்தது நினைவுக்கு வர அந்த எண்ணத்தைக் கை விட்டான்.

"நாளைக்கே போகலாமா?" தாமிரா ஆவலோடு கேட்டாள்.

"போகலாம்" என்று தலையசைத்தான். காலையில் கிளம்பும் நேரத்தையும் சொன்னான். அவள் ஒத்துக் கொண்டு கிளம்பினாள்.

திடீரென்று அவளிடம் அவன் கேட்டான். "உங்க அப்பா ஃபோட்டோ இருக்கா?"

அவள் தன் கைப்பையில் இருந்து ஒரு பழைய, பல முறை மடங்கி சரி செய்யப்பட்ட, புகைப்படத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அருண் ஆர்வத்துடன் வாங்கிப் பார்த்தான். அதில் பெரிதாக வித்தியாசப்படுத்திச் சொல்ல முடியாத ஒரு மனிதரை அவன் பார்த்தான். அந்தப் படத்தைப் பார்க்கையில் எந்த விதத்திலும் அது 'தேவனை'ப் பிரதிபலிப்பதாக அருணுக்குத் தோன்றவில்லை.

"அவங்க கல்யாண ஃபோட்டோ, ஆல்பம் ஏதாவது வீட்டில் இருக்கா?"

"அம்மாவுக்குப் பழைய ஞாபகங்களை ஏற்படுத்திடும்னு எங்க மாமா எல்லாத்தையும் எரிச்சிட்டதாய் சொன்னார்"

எத்தனை சௌகரியமாய் போய்விட்டது என்று அருண் நினைத்தான். அதே எண்ணம் தான் அவள் மனதிலும் ஓடியது. அப்பா விஷயத்தில் மாமா முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிற மாதிரி தெரிந்தது. அப்பா பற்றிப் பேச்சு எடுத்தாலே அவர் அங்கிருந்து உடனே நழுவிய விதமும், அம்மாவிடம் அப்பாவைப் பற்றி பேச வேண்டாம் என்று கெஞ்சியதும் பல கேள்விகளை அவள் மனதில் தற்போது எழுப்பின.

"நாளைக்குக் காலைல பார்க்கலாம்." என்று சொல்லி விட்டுக் கிளம்பினாள். வீட்டுக்குப் போகும் வழியில் அருண் சொன்ன தகவல்கள் எல்லாவற்றையும் பற்றி தாமிரா திரும்பத் திரும்ப யோசித்தாள். எல்லாமே புதிராக இருந்தன. அம்மா அம்பலவாணனை சந்திக்கச் சென்றதும் இது பற்றி துப்புத் துலக்க வேண்டாம் என்று சொன்னதையும் அவளால் இப்போதும் ஜீரணிக்க முடியவில்லை. ஒரு வேளை அம்மா தான் அந்த தேவியோ? அந்த நாவலின் கதாநாயகி தேவியைப் பற்றித் தெரிந்த அளவுக்குக்கூட தன் தாயைப் பற்றி தனக்குத் தெரியவில்லை என்கிற உண்மை கசந்தது. அந்த மென்மை, நல்ல மனம் எல்லாம் அம்மாவிற்குப் பொருந்தியது என்றாலும் மற்றவை...? அம்மாவுக்கு நன்றாக வரைய வருமா? ....

அம்பலவாணன் சொன்னது போல் அருணுக்கும் அவள் குடும்பத்திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ? மற்ற இளைஞர்களுடன் அதிகமாக அவள் பழகுவதை விரும்பாத ஈஸ்வரன் அருணிடம் பழகுவது பற்றி ஒன்றும் சொல்லாதது பற்றி யோசிக்கையில் அவளுக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. அதே சமயம் அவனை வீட்டுக்கு மட்டும் அழைத்து வர வேண்டாம் என்று அவர் சொன்னதற்குக் காரணம் அவன் பத்திரிக்கையாளனாக இருப்பது தான் என்பதை நம்ப இப்போது அவளால் முடியவில்லை. தாரா குறிப்பாக அவனை சந்திக்க விரும்பாததையும், அதே நேரத்தில் அவனை அவனறியாமல் பார்த்து நின்றதையும் சிந்திக்கையில் உண்மையான காரணம் வேறிருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. தன்னுடைய தோழியின் மகன் என்று பார்த்தாளா இல்லை வேறு காரணமா?

வீட்டுக்கு சிந்தனையோடு நுழைந்த மருமகளை ஈஸ்வரன் உள்ளூர பயத்தோடு பார்த்தார். ஆனால் நல்ல வேளையாக அவள் அவரையோ தாராவையோ ஒன்றும் கேட்கவில்லை. புதிதாகப் பார்ப்பது போல் வித்தியாசமாக இருவரையும் பார்த்தாளே ஒழிய வழக்கம் போல் கேள்விக் கணைகளைத் தொடுக்கவில்லை. தாரா அன்று மகளுக்குப் பிடித்தமான உணவு வகைகளை சமைத்திருந்தாள். தாமிரா சாப்பிடும் போது தன் தாயின் கைக்கு முத்தம் கொடுத்தாள். "என்னமாய் சமைச்சிருக்கேம்மா?"

தாராவின் மனம் குளிர்ந்தது. மகளை வாஞ்சையோடு பார்த்தாள். தாமிரா இன்னும் தாயின் கையை விடவில்லை. "உன் கை விரல்கள் எவ்வளவு நீளம்மா. ஒரு ஆர்ட்டிஸ்டோட கை. ஏம்மா உனக்கு நல்லா வரைய வருமா?"

ஒரு கணம் தாயின் கை இறுகியதை தாமிரா உணர்ந்தாள். அதே சமயம் ஈஸ்வரன் முகமும் கலவரத்தைக் காண்பித்தது. தாரா மெள்ள சொன்னாள். "ஒரு காலத்தில் ஏதோ கொஞ்சம் வரைவேன்...."

தாமிரா அதற்குப் பின் எதுவும் அது பற்றிக் கேட்கவில்லை. அண்ணனும் தங்கையும் சற்று நிம்மதியடைந்தார்கள். தன் மருமகள் முன்பு போல் அருணைச் சந்தித்து வந்ததும் அது பற்றி விரிவாகப் பேசவில்லை என்பதை ஈஸ்வரன் கவனிக்கத் தவறவில்லை. சந்தேகம் ஏற்பட்டிருந்தாலும் அதைப் பற்றி அவள் ஏதும் கேட்காதது அவருக்கு வியப்பாக இருந்தது. ஒரு விதத்தில் அது மிகப் பெரிய ஆசுவாசத்தை ஏற்படுத்தினாலும் அடுத்து அவள் என்ன செய்ய உத்தேசித்துள்ளாள் என்பதை அவரால் சரியாக கணிக்க முடியவில்லை.

சிறிது நேரம் கழித்து தாமிரா சொன்னாள். "எனக்கு நாளைக்கு வெளியூர் போக வேண்டி இருக்கு மாமா. திருநெல்வேலியில் ஒரு கான்ஃப்ரன்ஸ். கொஞ்ச நேரம் முன்னால் தான் போன் செஞ்சாங்க"

ஈஸ்வரனின் கேள்விக்கு பதில் கிடைத்து விட்டது. ஆனால் தாரா மகள் சொன்னதை அப்படியே எடுத்துக் கொண்டாள்.

"தனியாகவா போகிறாய்?"

"இல்லைம்மா. ஃப்ரண்டு கூட போகிறேன்".

தாமிரா தனியாக அவ்வளவு தூரம் போகப் போவதில்லை என்றறிந்த பிறகு தாரா நிம்மதியடைந்தாள். அதை அவள் முகபாவத்தில் இருந்து உணர்ந்த ஈஸ்வரன் அறியாமை பல சந்தர்ப்பங்களில் ஒரு வரப்பிரசாதம் தான் என்று எண்ணினார். அது பல சமயங்களில் ஒரு மனிதனை நிம்மதியாக இருக்க வைக்கிறது. வழக்கமாக இது போல் மருமகள் வெளியூர் போகும் சந்தர்ப்பங்களில் ஆயிரம் கேள்விகள் கேட்கக்கூடிய ஈஸ்வரன் இந்த முறை வாயே திறக்கவில்லை. ஏதாவது கேட்கப் போய் அவள் திரும்ப தன்னிடம் கேள்வி மழை பொழிந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவரிடம் இருந்தது.

அதே போல் அருண் வெளியூர் போவதாக மாதுரியிடம் சொன்ன போது அவளும் வழக்கம் போல் எங்கு, ஏன் என்ற கேள்விகளை எழுப்பவில்லை. அவன் சொல்லப் போகும் பதிலை அவள் முன்பே ஊகித்தது போல் மௌனமாக இருந்தாள். ஆனால் அவளுடைய மனநிலை முகத்தில் தெரிந்தது. பேயறைந்தது போல் மாறிய அவள் முகத்தைப் பார்க்க அருணுக்குப் பாவமாக இருந்தது. எப்போதும் என்னம்மா ஆயிற்று என்று கேட்பவன் இந்த முறை தானும் கேட்கவில்லை. இவளை வாட்டும் அந்த உண்மை என்ன என்று தெரிந்து கொள்ளாமல் திரும்பி வருவதில்லை என்று அவன் மனதில் உறுதி பூண்டான்.

## (60)

"When you get to the end of your rope, tie a knot and hang on." Franklin D. Roosevelt

காரில் பயணித்த போது அருணும் தாமிராவும் மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். அவள் தன் மாமனைப் பற்றியும், தாயைப் பற்றியும், தன் விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றியும் சொல்ல அவன் தன் தந்தையின் எந்திரத்தனத்தைப் பற்றியும், தாயைப் பற்றியும், காவ்யாவைப் பற்றியும் சொன்னான். யாரிடமும் சொல்லாத தங்கள் குடும்ப விஷயங்களை தங்களுக்குள் பகிர்ந்து கொள்வது அவர்களுக்கு இயல்பாக இருந்தது.

தன் தாயிற்கு நன்றாக வரைய வரும் என்று நேற்று தெரிந்து கொண்டதை அவள் சொன்ன போது அவள் உணர்ச்சிவசப்பட்டாள். "...ஒரு நிமிஷம் அம்மா தான் தேவியாய் இருக்கலாம்னு தோணுது....இன்னொரு நிமிஷம் இருக்க முடியாதுன்னு தோணுது.... இப்படி மாறி மாறி சந்தேகம் வர்றது பெரிய சித்திரவதையாக இருக்கு அருண். இந்தப் புதிரை எல்லாம் விடுவிக்காம நாம் திரும்பக் கூடாது"

"அதே தான் நானும் நினைச்சேன் தாமிரா. இது சம்பந்தமாய் பேசறப்ப எல்லாம் எங்கம்மா முகத்தில் தெரியற வேதனையைப் பார்க்கறப்ப எனக்கும் அப்படியே தோணிச்சு"

இந்த உறுதியோடு தான் அவர்கள் பூங்கொடி கிராமத்திற்குள் நுழைந்தார்கள். லேசாக இருட்டியிருந்த போதும் பௌர்ணமி நிலவின் ஒளியில் கிராமத்து அழகு காண இதமாக இருந்தது.

"முதலில் நதிக்கரைக்குப் போய் பிறகு ஆச்சி வீட்டுக்குப் போகலாம்" என்று அருண் சொல்ல தாமிராவும் சரியென்றாள். தாமிரபரணியின் கரையில் அவர்கள் அமர்ந்த சில நிமிடங்களில் இருவர்

மனமும் லேசாகியது. அந்த நதிக்கரையில் இன்னும் அந்த இருவர் கை கோர்த்துக் கொண்டு நடப்பது போலவும் அந்த நதியும் அதே வேகத்தில் அவர்களுடனே நகர்வது போலவும் தாமிராவிற்குத் தோன்றியது. இது போன்ற கற்பனை வருவது அவளுக்குப் புதிது. ஆனால் அவளையும் அறியாமல் அந்த நாவலின் அழகான தருணங்கள் தத்ரூபமாக மறுபடி மனதில் ஒளிபரப்பாக ஆரம்பித்தன. எல்லாவற்றையும் நேரில் பார்ப்பது போல அவளுக்குத் தோன்றியது. ஒரு கதையும் அதன் சம்பவங்களும் தன்னை இவ்வளவு தூரம் இந்த இடத்தில் பாதிக்கும் என்பதே அவளுக்கு வியப்பாக இருந்தது.

"தாமிரா திடீர்னு திரும்பிப் பார்க்காதீங்க. சும்மா வேடிக்கை பார்க்கிற மாதிரி பார்த்துகிட்டே திரும்புங்க. பின்னால் அந்த மேட்டுப்பகுதியில் நின்னு பார்த்துட்டு இருக்கிற ஆள் தான் மருதமுத்து..."

அருண் சொன்னவுடன் கற்பனைகளில் இருந்து விடுபட்ட தாமிரா அவன் சொன்னபடியே எல்லா இடத்தையும் பார்த்துக் கொண்டே திரும்பினாள். மருதமுத்துவைப் பார்த்தாள். மருதமுத்து தான் நின்ற இடத்திலேயே கால்கள் வேரூன்றி விட்டது போல உணர்ந்தார். அந்த இடத்தை விட்டு நகர கால்கள் ஒத்துழைக்கவில்லை. அந்த இடத்தில் அவர்கள் இருவரைக் கண்ட அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்னால் அவள் அவரைப் பார்த்ததும் கால்கள் மண்ணுக்குள் ஆணி வேர் சல்லி வேர் விட்டு ஐக்கியமாகி விட்டது போல் அவருக்குத் தோன்றியது. சில நிமிடங்களில் எத்தனையோ பழைய நினைவுகள் மனதில் பொங்கி எழ அவர் சர்வ பலத்தையும் திரட்டி கால்களை நகர்த்தினார். கால்கள் நகர ஆரம்பித்த பின் சிரமப்பட்டு ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குப் போனார்.

"என்ன மருது" என்று ஆச்சி எதிர்கொண்டு அவரைக் கேட்ட போது அவர் பதில் சொல்லவில்லை. தனதறைக்குள் தஞ்சம் புகுந்த பின்னரும் தன் இதயத்துடிப்பின் வேகத்தைக் கட்டுப்படுத்த அவரால் முடியவில்லை.

சிறிது நேரம் கழித்து இலைதழைகளில் இரண்டு ஜோடி காலடியோசை கேட்க ஆரம்பித்த பிறகு தான் ஆச்சி பரபரப்புடன் வெளியே வந்தாள். அவர்கள் இருவரையும் பார்த்த போது ஆச்சியின் நிலையும் கிட்டத்தட்ட மருதமுத்து நிலையாகத் தான் இருந்தது. பழைய நினைவுகள் பெரும் சுமையுடன் அழுத்த அதிர்ச்சியில் ஆச்சியும் அப்படியே சிலையாக நிற்க அருண் சிரித்தபடி கேட்டான்.

"இது ஆச்சியா, ஆச்சியின் சிலையா?"

ஆச்சி முகத்தில் அதிர்ச்சி போய் மகிழ்ச்சி பரவியது. "வா ராசா வா".

"தாமிரா இது தான் ஆச்சி...ஆச்சி இது தான் தாமிரா" என்று அருண் அறிமுகப்படுத்தி வைத்தான்.

தாமிரா யார் என்று அருண் ஆச்சிக்கு சொல்லவில்லை என்றாலும் ஆச்சி மிகுந்த பாசத்துடன் அவளைப் பார்த்தாள். தாமிராவுக்கும் ஆச்சியைப் பார்த்தவுடன் மிகவும் பிடித்து விட்டது.

அவர்களை அங்கிருந்த பிரம்பு நாற்காலிகளில் அமரச் சொன்ன ஆச்சி அருணிடம் கேட்டாள். "இது யார்னு சொல்லலையே ராசா". அவள் யார் என்று தெரிந்து கொள்ள ஆச்சி அந்தக் கேள்வியைக் கேட்டது போல் அருணிற்குத் தெரியவில்லை. அவன் என்ன சொல்கிறான் என்று தெரிந்து கொள்ள கேட்ட கேள்வி போல் அது இருந்தது.

"இவங்க ஒரு விஞ்ஞானி ஆச்சி"

ஆச்சி முகத்தில் ஒருவித பெருமிதம் தெரிந்தது. "ரொம்ப சந்தோஷம்" என்றவள் "வீட்டில் எல்லாரும் சௌக்கியமாம்மா?" என்று தாமிராவிடம் கேட்டாள். அதுவும் வீட்டில் யார் இருக்கிறார்கள் என்றே தெரியாதவர்கள் கேட்பது போல் இருக்கவில்லை.

தாமிராவும் "சௌக்கியம்" என்று மட்டும் சொன்னாள். ஆச்சிக்கு அந்தப் பொதுவான பதில் திருப்தியளிக்கவில்லை என்பது முகபாவனையிலேயே தெரிந்தது. பிறகு பொதுவாக சிறிது நேரம் பேசினாலும் ஆச்சி அவர்கள் ஏன் வந்தார்கள் என்று கேட்கவில்லை. ஆனால் அவர்கள் வந்ததில் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி அவள் முகத்தில் பிரகாசித்தது. பேசும் போது சுற்றி வளைத்துப் பேசி தாமிராவிடம் வீட்டில் யார் எல்லாம் இருக்கிறார்கள் என்று கேட்டு, பிறகு "உங்கம்மா எல்லாம் நல்லாயிருக்காங்களாம்மா" என்று ஆச்சி நேராகவே கேட்டாள்.

தாமிரா "நல்லாயிருக்காங்க. ரொம்ப வருஷமாய் உடம்பு சரியில்லாமல் இருந்தாங்க. இப்ப குணமாகி நல்லாயிருக்காங்க" என்று சொன்னபோது ஆச்சியின் முகத்தில் திருப்தி கலந்த நிம்மதி தெரிந்தது. ஆச்சி அவளுடைய தந்தை பற்றி எந்தக் கேள்வியையும் எழுப்பாததை அருணும் தாமிராவும் கவனிக்கத் தவறவில்லை. சிறிது நேரம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு, ஆச்சி அவர்களுக்காக சமைக்கப் புறப்பட தாமிராவுக்கு அந்த இடத்தை சுற்றிக் காண்பிப்பதாக சொல்லி அருண் கிளம்பினான்.

வெளியே அந்த சிறிய வீட்டுக்கு தாமிராவை அழைத்து வந்து அருண் சொன்னான். "அவங்க ரெண்டு பேரும் வாழ்ந்த வீடு இது தான்". தாமிரா ஆர்வத்துடன் அந்த வீட்டைப் பார்வையிட்டாள். அந்த நதிக்கரை போலவே அந்த வீட்டிலும் அந்த இருவருடைய எண்ண அலைகள் பரவியிருந்தது போல் அவளுக்குத் தோன்றியது. சுவரில் ஆச்சியின் அந்தக் கால ஓவியம் தொங்கிக் கொண்டிருந்தது. தத்ரூபமாக வரையப்பட்டிருந்த அந்த ஓவியத்தை தாமிரா பிரமிப்புடன் பார்த்தாள். அதில் ஆச்சியின் முகத்தில் சந்தோஷம் என்றால் என்ன என்று வரையறுத்தது போல் இருந்தது. "இந்தப் படம் அம்மா வரைந்ததாக இருக்குமோ?" என்ற கேள்வி தாமிரா மனதில் எழுந்தது. அதை எடுத்து அதில் வரைந்தவர் பெயர் எழுதப்பட்டிருக்கிறதா என்று பார்க்க நினைத்தாள். அதை உணர்ந்தது போல் அருண் சொன்னான். "நான் அன்றைக்கே அதைப் பார்த்துட்டேன். அதில் பெயர் இல்லை"

வீட்டை விட்டு வெளியே வரும் போது அருண் சொன்னான். "தாமிரா. அந்த மருதமுத்துக்கு என்னை எதனாலேயோ ஆரம்பத்தில் இருந்தே பிடிக்கலை. நான் கேட்டால் அந்த ஆள் சரியாக பதில் சொல்றது சந்தேகம். அதனால் அந்த ஆளைப் பார்த்தால் நீங்கள் பேசிப் பாருங்க. நீங்க பேசிகிட்டிருக்கிறப்ப ஆச்சி கிட்ட நான் பேச்சுக் கொடுக்கிறேன். நாம் நாளைக்குக் காலைல கிளம்பறதுக்கு முன்னால் வந்த வேலையை முடிக்கணும்"

தாமிரா சரியென்று தலையசைத்தாள். இருவரும் மறுபடி ஆச்சியின் பெரிய வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

## (61)

At first glance, nothing is as simple as it seems.

After closely scrutinizing it, neither is it as complex. The trick, is merely how to look at it...

– bobby jennings

மருதமுத்துவுக்கு அவர்கள் இருவரும் அங்கு வந்தது பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தி இருந்தது. அவர் மனதில் உள்ள காயம் ஆறும் முன் மீண்டும் அதில் கீறிப் பார்ப்பதற்காகவே

அருண் அந்தப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு வந்திருப்பது போல் அவர்கள் வருகை இருந்தது. கிழவியின் சந்தோஷம் சமையல் அறையில் இருந்து வந்த மணத்தில் இருந்து தெரிந்தது. அவர்கள் இங்கிருந்து போகும் வரை கிழவி ஒரு நிதானத்தில் இருக்க மாட்டாள். அவர் மனதில் பொறாமை கொழுந்து விட்டு எரிந்தது.

'அவன் களத்தில் இல்லாவிட்டால் கூட இன்னும் கதாநாயகன் தான்' என்கிற எண்ணம் வர இன்னும் உள்ளூர வெந்தார். அவனை சந்தித்திராவிட்டால் இந்தக் கிழவி அவரை மகன் போல் நேசித்திருக்கக் கூடும். அவன் இருந்திராவிட்டால் அந்த 'தேவி' அவரைக் கவனித்திருக்கவும் ஏன் காதலித்திருக்கவும் கூட கூடும்..... ஈஸ்வரன் இந்த விஷயத்தில் கை கழுவி விட்டது போலத்தான் நடக்கிறவற்றைப் பார்க்கையில் அவருக்குத் தோன்றியது. அன்று அருண் தனியாக வந்ததும், இப்போது ஈஸ்வரனின் மருமகளையே கூட்டிக்கொண்டு வந்ததும் அதைத் தான் காட்டுகிறது. ஈஸ்வரனே பின் வாங்கிய நிலையில் துப்பறிய வந்தவர்களிடம் எல்லாவற்றையும் சொல்லி எல்லார் வாழ்க்கையையும் ஒரு கலக்கு கலக்கினால் என்ன என்று தோன்றிய போது தான் அவர் அறை வாசலில் தாமிரா வந்து நின்றாள்.

சமையலறையில் ஆச்சியும் அருணும் ஏதோ பேசும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மருதமுத்து ஆச்சரியத்துடன் தாமிராவைப் பார்க்க தாமிரா புன்னகை பூத்தாள். "நான் தாமிரா..."

மருதமுத்துவுக்கு தொண்டையை ஏதோ அடைத்தது. வார்த்தைகள் வராமல் தலையை மட்டும் ஆட்டினார். ஆச்சி சமையல் அறையில் இருந்து வெளியே வரும் முன் பேச வேண்டும் என்பதால் அவசர அவசரமாக தாமிரா சொன்னாள்.

"அருணும் நானும் எதற்காக இங்கே வந்திருக்கிறோம்னு உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன். ஒரு காலத்தில் இரண்டு காதலர்கள் இங்கே வந்ததும், ஒரு வருஷம் இருந்ததும் உங்களுக்குத் தெரியும். அவங்க யாருன்னு தெரிஞ்சிக்கறதுக்காக தான் நாங்க வந்திருக்கோம். நீங்க சொல்லத் தயார்னா நாங்க அதுக்கு ஒரு விலை கொடுக்கவும் தயாராய் இருக்கோம்...."

எல்லாவற்றையும் தானே சொல்லி, ஏற்படுகிற விளைவில் குளிர் காய எண்ணியிருந்தவருக்கு தாமிரா சொன்னது பேரானந்தத்தைக் கொடுத்தது. அதை வெளியே காண்பிக்காமல் தன்னை சுதாரித்துக் கொண்டு கேட்டார். "எவ்வளவு கொடுப்பீங்க?"

"எவ்வளவு எதிர்பார்க்கிறீங்க?"

எவ்வளவு கேட்பதென்று மருதமுத்துவுக்குத் தெரியவில்லை. சற்று யோசித்து விட்டு சொன்னார். "ரெண்டு லட்சம்"

முன்பே கிட்டத்தட்ட மூன்று லட்சம் பணத்தை இதற்காகக் கொண்டு வந்திருந்த தாமிரா உடனடியாக ஒப்புக் கொண்டாள்.

மருதமுத்து கேட்டார். "நீங்க எப்ப கிளம்பறீங்க?"

"நாளைக்குக் காலைல கிளம்பறோம்"

"கிழவி இருக்கிறதால இங்கே முடியாது. கிராம எல்லையில் ஒரு ஆல மரம் இருக்கு. நீங்க போகிறப்ப அங்கே நில்லுங்க. பணத்தைக் கொடுத்தீங்கன்னா அங்கேயே உங்களுக்கு வேண்டிய தகவலைச் சொல்றேன்"

"தேங்க்ஸ்" என்று சொல்லி விட்டு தாமிரா நகர்ந்தாள். மருதமுத்து முதல் முறையாக புன்னகை பூத்தார். எல்லாருக்கும் ஒரு காலம் வரத்தான் செய்கிறது என்று நினைக்கையில் மனம் குளிர்ந்தது.

அருண் அருகில் வந்து தாமிரா தலையசைத்தாள். அருண் சமையல் அறையில் இருந்து வெளியே வந்து ஆவலோடு தாமிராவைப் பார்க்க அவள் மருதமுத்துவுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தைச் சொன்னாள். அருணால் அவளை மனதில் மெச்சாமல் இருக்க முடியவில்லை. இந்த ஆளை இப்படிக் கேட்டால் படிவான் என்று அவள் அனுமானித்தது போலவே நடந்ததைப் பார்க்கையில் ஈஸ்வரன் மருமகளிடம் தான் கற்க வேண்டியது நிறைய இருக்கிறது என்று எண்ணினான்.

ஆச்சி வெளியே வந்து கேட்டாள். "காவ்யா எப்படி இருக்கா ராசா?"

ஆச்சியிடம் காவ்யா பெயரை ஒரு முறை தான் சொல்லியிருந்ததாக அருணுக்கு நினைவு. ஆனாலும் நினைவு வைத்துக் கொண்டு அவள் கேட்டது அவனை அதிசயிக்க வைத்தது. "எப்படி ஆச்சி அந்தப் பெயரை ஞாபகம் வச்சிருக்கீங்க?" என்று கேட்டான்.

"என் பேரன் கட்டிக்கப் போகிற பொண்ணு பெயரை மறந்துடுவேனா ராசா" என்று ஆச்சி சொல்ல அருண் அந்த வார்த்தைகளில் நெகிழ்ந்து போனான். தன் திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டதை சொன்னவன் "ஆச்சி நான் அடுத்தது கல்யாணப் பத்திரிக்கையோடு வருவேன். நீங்க கண்டிப்பாய் என் கல்யாணத்துக்கு வரணும். வரலைன்னா இந்த பேரன் அப்படி இப்படிங்கிற வார்த்தையெல்லாம் நடிப்புன்னு நினைச்சுக்குவேன்" என்றான்.

"கண்டிப்பாய் வர்றேன் ராசா" என்று ஆச்சி உடைந்த குரலில் சொன்னாள்.

சாப்பிட ஆச்சி சென்று மருதமுத்துவைக் கூப்பிட்ட போது பசியில்லை என்ற காரணம் சொல்லி அறையை விட்டு வெளியே வரவில்லை. ஆச்சி அதைப் பொருட்படுத்தவில்லை. அருணையும் தாமிராவையும் சாப்பிட உட்கார வைத்து தன் கையால் பரிமாறி அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்ந்தாள். அவளையும் அறியாமல் அவள் கண்களில் இருந்து அருவியாக வழிந்தது கண்ணீர்.

தாமிராவும் அருணும் திடுக்கிட்டார்கள். "என்ன ஆச்சி?"

ஆச்சி கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னாள். "மனசு கொஞ்சம் பின்னாடிப் போயிடுச்சு ராசா. என்னை மாதிரி ஒத்தை மனுஷிக்கு வயசான காலத்தில் மிஞ்சறது சில நினைவுக மட்டும் தானே ராசா...."

இதே போல அந்த இரண்டு பேரையும் உட்கார வைத்து அவள் உணவு பரிமாறியிருக்க வேண்டும் என்று அருணும் தாமிராவும் நினைத்தார்கள். ஆனால் ஆச்சி சாமர்த்தியமாக தன்னை சுதாரித்துக் கொண்டு பேச்சை திசை திருப்பினாள். தாமிராவிடம் அமெரிக்கா எப்படி இருக்கிறது என்று ஆர்வமாகக் கேட்டு அங்குள்ள மக்கள், இடங்களைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்து விட்டாள். தாமிரா பொறுமையாக அவளுக்குப் புரியும் விதத்தில் விவரித்த விதம் அவளுக்கு 'அவனை' நினைவுபடுத்தியது. மறுபடி தழும்ப ஆரம்பித்த கண்ணீரை மறைக்க ஏதோ பாத்திரம் எடுக்கப் போவது போல் சமையலறைக்குப் போய் வந்தாள்.

சாப்பிட்டு முடிந்தவுடன் ஆச்சி கேட்டாள். "நாளைக்கே போகணும்னு சொல்றீங்களே ராசா. நீங்க வந்த வேலை முடிஞ்சுடுச்சா"

"இவங்க இந்த கிராமத்தைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டதால கூட்டிகிட்டு வந்தேன். பார்த்தாச்சு. அவ்வளவு தான்" என்று அருண் சொன்னதை நம்ப ஆச்சிக்குக் கஷ்டமாக இருந்தது. மருதமுத்துவிடம் தாமிரா பேசியது தெரியாததால் குழம்பினாள். மூன்று பேரும் கடிகார ஓட்டத்தை உணராமல் நிறைய நேரம் பேசினார்கள். பின்பு உறங்க முற்பட்ட போது மூவருக்கும் உறக்கம் வரவில்லை. ஆச்சிக்கு பழைய நினைவுகளும் இன்றைய நிகழ்வுகளும் பின்னிப் பிணைந்து மனதில் ஓடியதால் உறக்கம் வரவில்லை என்றால் அருணுக்கும் தாமிராவுக்கும் மறுநாள் மருதமுத்துவிடம் இருந்து வரப்போகும் தகவல் பற்றிய பரபரப்பால் உறக்கம் வரவில்லை.

மறுநாள் காலை அவர்கள் கிளம்ப ஆரம்பிக்கும் போதே மருதமுத்து தாமிராவைப் பார்த்து தலையசைத்து விட்டு முன்பே போய் விட்டார்.

"நல்ல செவ்விளநீ இருக்கு. கார்ல தானே போறீங்க. டிக்கில போட்டுகிட்டுப் போங்களேன். ரெண்டு பேர் வீட்டுக்கும் எடுத்துக்குங்க. இவ்வளவு ருசியான் இளநீர் அந்தப் பக்கமெல்லாம் கிடைக்காது.....தாமிரா உங்கம்மா உடம்பு சரியில்லாம இருந்து இப்ப தான் குணமானாங்கன்னு சொன்னாயே. அவங்களுக்கும் கொடு. உடம்புக்கு நல்லது." என்று சொன்ன ஆச்சி கார் டிக்கியை செவ்விளநீர்களால் நிரப்பி விட்டாள். அருணுக்கு ஏனோ அந்த இளநீர்கள் தாராவிற்காகவே பிரத்தியேகமாய் ஆச்சி அனுப்புவதாக தோன்றியது.

வேறென்ன கொண்டு போகிறீர்கள் என்று கேட்ட ஆச்சி அங்கு தோட்டத்தில் விளைந்ததையெல்லாம் பட்டியலிட்டாள். ஆச்சியின் அன்பு மழையில் நனைந்த இருவரும் வேறொன்றும் வேண்டாம் என்று சொல்லி அங்கிருந்து விடைபெற்றார்கள். இதயம் படபடக்க இருவரும் காரில் கிளம்பினார்கள். சொன்னபடியே கிராம எல்லையில் இருந்த ஆலமரத்தடியில் மருதமுத்து அவர்களுக்காக காத்து நின்றிருந்தார்.

# (62)

There is a plan working in our lives; and if we keep our hearts quiet

and our eyes open, it all works together; and, if we don't, it all rights together, and goes on fighting till it comes right, somehow, somewhere.

ANNIE KEARY.

சாம்பசிவம் மருத்துவப் பரிசோதனை முடிவுகளைப் படித்து முடித்து நிமிர்ந்த போது ஈஸ்வரன் அவரைக் கேள்விக்குறியுடன் பார்த்தார்.

"இன்னும் எனக்கு எவ்வளவு நாள் இருக்கு டாக்டர்?" ஈஸ்வரனின் குரலில் எந்த உணர்ச்சியும் இல்லை. இன்றைக்கு மழை பெய்யுமா டாக்டர் என்று சாதாரணமாகக் கேட்பது போலக் கேட்டார்.

"இப்போதைக்கு பயப்பட ஒண்ணும் இல்லை ஈஸ்வரன். கான்சர் கிருமிகளை நாம் கட்டுப்பாட்டில் தான் இன்னும் வைத்திருக்கோம்".

ஈஸ்வரன் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக அவரைப் பார்த்தார். ஈஸ்வரனின் பார்வை மிகப் பிரபலமானது. பலரைத் திகிலுக்கு உள்ளாக்குவது. சாம்பசிவத்துக்கு லேசாக வயிற்றைக் கலக்கியது. ஈஸ்வரனின் மௌனமான பார்வையைத் தாங்க முடியாமல் சாம்பசிவம் கேட்டார். "என்ன பார்க்கிறாய் ஈஸ்வரன்?"

"என் தங்கையாய் மனசு வைக்காமல் அவளைக் குணப்படுத்த யாராலும் முடியாதுன்னு ஒரு காலத்தில் நீங்க சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கு. இப்ப அவள் குணமாக மனசு வச்சதுக்குக் காரணம் நான் சாவை நெருங்கிகிட்டிருக்கறதைப் பத்தி நீங்க சொன்னது தானா டாக்டர்?"

மறுக்க முடியாமல் சாம்பசிவம் மெள்ளத் தலையசைத்தார். ஈஸ்வரன் முன்பே சொல்லியிருந்தார். "நான் போய் சேர்றதுக்கு முன்னால் யாருக்காவது இந்த விஷயம் தெரிஞ்சுதுன்னா, நீங்க எனக்கு முன்னால் போய் சேர்ந்துட வேண்டி இருக்கும் டாக்டர்".

பயத்தை மூலதனமாக வைத்து அரசியல் நடத்தும் அவருக்கு தற்போதைய அவரது உடல்நிலை வெளியே தெரியாமல் கட்டிக் காக்க வேண்டிய அவசியம் இருந்தது. சொன்னதை செய்து காண்பிக்கக் கூடியவர் என்று ஈஸ்வரனை அறிந்திருந்த சாம்பசிவம் அந்த ரகசியத்தைக் கட்டிக் காத்தார். தாராவுக்கு மட்டுமே சொன்னதை அவர் வேறு யாரிடமும் சொல்லவில்லை.

அன்று அவளிடம் சொல்லியிருந்தார். "உங்கண்ணா சாகும் போதாவது நிம்மதியாய் சாகணும்னா அது நீ குணமாகறதுல தான் இருக்கு, தாரா. ஒவ்வொரு நாளும் உனக்கு இப்படியாயிடுச்சேன்னு துடிச்சிகிட்டு வாழ்றவனை சாகிறப்பவாவது நிம்மதியடைய வைம்மா..." அதன் பிறகு அவளிடம் ஏற்பட்ட அசாதாரணமான மாற்றத்தைப் பார்த்த போது அன்பும், பாசமும் எவ்வளவு வலிமையானது என்பதை அவரால் உணர முடிந்தது. பின் அவள் அவரை அழைத்துப் பேசிய போது அழுத விதம் ஒரு கல்லையும் கரைய வைக்கும்.....

"கடைசியாய் ஒரு தடவை உனக்கு வந்த இந்த வியாதியைச் சொல்லிப் பார்க்கலாம்னு தோணிச்சு. அதான்......"

"இப்படி குணமாவாள்னு தெரிஞ்சிருந்தா நான் என்னைக்கோ சாகத் தயாராயிருந்திருப்பேன்..... டாக்டர் அவள் திரும்பி முன் மாதிரியே ஆயிட மாட்டாளே"

"ஏன் கேட்கிறாய்?"

"குழந்தைகள் எந்த நேரத்திலும் உண்மையைத் தெரிஞ்சுகிட்டு வரலாம். அவங்க அதை எப்படி எடுத்துக்குவாங்க, அதை எப்படி பெரியவங்ககிட்ட காட்டுவாங்கன்னு என்னால் யூகிக்க முடியல. அப்படி வந்தால் தாரா எப்படி சமாளிப்பாள்னு தெரியாததால் கேட்டேன்"

"அவள் சமாளிப்பாள்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. ஈஸ்வரன் நீ கடவுளை நம்புகிறாயா?"

"இல்லை"

ஐயோ பாவம் என்பது போல் சாம்பசிவம் ஈஸ்வரனைப் பார்த்தார். எல்லாமே மூழ்கிப் போகும் நிலையிலும் தெய்வ நம்பிக்கை இருக்கும் மனிதர்கள் மட்டும் நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் எதிர்நீச்சல் போடுவதைக் கண்கூடாக பார்த்திருக்கிறார்....

"சரி விதியையாவது நம்புகிறாயா?"

"எப்ப அந்தப் பையன் அந்த நாவல் பத்தி துப்பு துலக்க கிளம்புனானோ அப்பவே விதி மேல் நம்பிக்கை வந்துடுச்சு. எப்ப தாமிராவும் அவன் கூட சேர்ந்தாளோ என் நம்பிக்கை வலுவாயிடுச்சு. இதெல்லாம் தற்செயலாய் நடக்கிற விஷயம் இல்லையே டாக்டர்..."

"விதியும் கடவுளும் வேறு வேறு அல்ல ஈஸ்வரன். எல்லாமே ஒரு காரணத்தோட தான் நடக்கிறது. சில காரணங்கள் நமக்கு தெரியாமல் இருக்கலாம், நம் அறிவுக்கு எட்டாமல் இருக்கலாம். ஆனாலும் அர்த்தமில்லாமல் எதுவும் நடக்கிறதில்லை. அந்த எல்லாம் வல்ல கடவுள் அல்லது எல்லாத்தையும் நடத்திகிட்டு போகிற விதி ஒவ்வொரு செயலுக்கான விளைவையும் திருப்பித் தர தவறினதில்லை. சிலது சீக்கிரம் கிடைக்கலாம். சிலது காலம் போய் வட்டியோடு கிடைக்கலாம். உன் தங்கை ஒரு காலத்தில் நல்ல மனசோட எடுத்த அந்த முடிவுக்கு இப்ப நல்லதாகவே திருப்பித் தரத்தான் விதி அருணை உந்தியிருக்கு. இதில் எனக்கு சந்தேகமே இல்லை, ஈஸ்வரன்"

ஈஸ்வரனின் செல்போன் பாடியது. "ஹலோ"

"சார் அந்த மருதமுத்து அருண், தாமிராம்மா கிட்ட பணம் வாங்கிட்டு ஏதோ ஒரு கவர் கொடுத்துட்டிருக்கிறான்...."

ஈஸ்வரன் அமைதியாகச் சொன்னார். "உடனடியாய் ஒரு பப்ளிக் பூத்திலிருந்து அருண் செல்லிற்கு போன் செய். சேதுபதி இருக்கிற இடத்தைச் சொல்லு. அருணோட செல் நம்பர் இருக்கில்ல....சீக்கிரம் போன் செய்...."

செல் போனை ஆஃப் செய்த ஈஸ்வரனை சாம்பசிவம் குழப்பத்துடன் பார்த்தார். "என்ன ஈஸ்வரன் இதெல்லாம்?"

"அருணுக்கும் தாமிராவுக்கும் உண்மை தெரிஞ்சு போச்சு டாக்டர். இப்ப அவங்க செய்யக் கூடிய முதல் வேலை அவங்க பெத்தவங்ககிட்ட வந்து கேள்விகளோட நிற்கறது தான். அவங்களுக்கு விளக்கம் தர்றது அவ்வளவு சுலபமாய் இருக்கப் போகிறதில்லை. அந்தக் கதை எழுதுன நாயே சொல்றது தான் சரியாய் இருக்கும். ஆரம்பத்தில் இருந்து கூட இருந்தவன் அவன். ரெண்டு பக்கமும் அவனுக்கு நல்லாத் தெரியும். கதை எழுதினவன் அதோட பின்னணியையும் சொல்லட்டும்... அப்புறம் அவங்க ரெண்டு பேரும் எப்படி எடுத்துக்கறாங்க, என்ன செய்யப் போறாங்கங்கறது அவங்களைப் பொறுத்தது...."

ஈஸ்வரனின் மனக்கணக்கை சாம்பசிவத்தால் மெச்சாமல் இருக்க முடியவில்லை. அதே நேரம் இன்னொரு உண்மையும் மெள்ள அவருக்குப் புரிய ஆரம்பித்தது. மரணம் நெருங்க ஆரம்பித்ததை அறிந்தவுடனேயே காய்களை ஈஸ்வரன் வேறு விதமாக நகர்த்த ஆரம்பித்த விதம் தான் அருணும் தாமிராவும் துப்பறிய ஆரம்பித்ததைத் தடுக்காமல் இருக்கும் காரணம் என்பது தெளிவாகத் தெரியவர அவர் ஈஸ்வரனைக் கனிவாகப் பார்த்தார்.

"என்ன டாக்டர்?"

"உனக்குப் பின்னால் உன் தங்கையையும், மருமகளையும் பாதுகாக்க ஒரு ஆளை தயார்ப்படுத்திட்டே இல்லையா?"

ஈஸ்வரன் புன்னகைத்தார்.

பணத்தை வாங்கிக் கொண்டு அந்தக் கவரைக் கொடுத்த போது மருதமுத்து முகத்தில் பரம திருப்தி தாண்டவமாடியது. "நீங்க தேடற அந்த ரெண்டு பேரும் சேர்ந்து எடுத்துகிட்ட போட்டோ இது. கிழவி கிட்ட இருந்தது. அதுக்குத் தெரியாம சுருட்டிகிட்டு வந்துட்டேன்..."

பெரும் ஆர்வத்துடன் அருணும் தாமிராவும் பிரித்து அந்தப் புகைப்படத்தை வெளியே எடுத்துப் பார்த்தார்கள். இருவரும் அதிர்ச்சியில் திகைத்துப் போனதை மருதமுத்து ரசித்து ஒரு நிமிடம் நின்றார். இடியோடு மின்னல் தாக்கியது போல் துடித்து நின்ற இருவரையும் குரூரமான திருப்தியுடன் பார்த்து விட்டு மருதமுத்து வீடு திரும்பினார்.

## (63)

Do not weep; do not wax indignant. Understand.

–Baruch Spinoza

அவர்கள் இருவரும் மருதமுத்துவின் முகத்தில் தெரிந்த குரூர திருப்தியையும் அவர் அங்கிருந்து சென்றதையும் கவனிக்கும் நிலையில் இருக்கவில்லை. அதிர்ச்சி குறையாமல் அந்தப் பழைய புகைப்படத்தைப் பார்த்தபடி சிலையாக சிறிது நேரம் நின்றிருந்தார்கள்.

குரல் நடுங்க தாமிரா சொன்னாள். "இது எங்க அம்மா தான், ஆனா கூட இருக்கிறது எங்க அப்பா இல்லை வேற யாரோ"

அருண் வறண்ட குரலில் சொன்னான். "உங்கம்மா கூட இருக்கிறது எங்கப்பா"

பலவிதமான உணர்ச்சிகள் ஒருசேர அவர்களை அலைக்கழித்தன. இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூசினார்கள். பெற்றோரின் தகாத உறவைக் கண்டுபிடிக்க நேரிட்ட பிள்ளைகள் போல் மனம் ரணமாகியது. அந்த நேரத்தில் தான் அருணின் செல் போன் மறுபடி இசைத்தது. ஒரு நிமிட தயக்கத்திற்குப் பின் எடுத்துப் பேசினான். "ஹலோ"

"அருண் சார், நீங்க சேதுபதியைப் பார்க்கணுமா?"

"ஆமாம். நீங்க யார் பேசறது?"

"அது முக்கியமல்ல. சேதுபதி இருக்கிற இடத்தைச் சொல்றேன். குறிச்சுக்கங்க......."

தங்கள் நகரத்திலேயே ஒரு விலாசத்தைக் கேட்ட போது அருண் ஆச்சரியப்பட்டான். பேசிய ஆள் அருண் வேறெதுவும் கேட்கும் முன் போனை வைத்து விட்டான்.

"யார் பேசினது?" தாமிரா கேட்டாள். அவள் குரலிலும் உயிர் இல்லை.

"யார்னு தெரியலை. ஆனால் சேதுபதி இருக்கிற இடத்தை சொன்னான்...." அருண் சொல்லி வாய் மூடும் முன் மறுபடி செல்போன் இசைத்தது. "ஹலோ"

"ஹலோ அருண், நான் காவ்யா பேசறேன். எனக்கு நேத்து நீ மருதமுத்து சொல்ல ஒத்துகிட்டதாய் சொன்னதில் இருந்து தூக்கமே இல்லை. அந்த மருதமுத்து தேவன், தேவி யாருன்னு சொல்லியாச்சா"

அருண் தர்மசங்கடத்துடன் என்ன சொல்வதென்று யோசித்து விட்டு கவனமாய் சொன்னான். "நான் எல்லாத்தையும் நேரில் வந்து சொல்றேன், காவ்யா. இப்ப எனக்கு சேதுபதி இருக்கிற இடமும் தெரிஞ்சுடுச்சு. அங்க போகலாம்னு இருக்கோம். பிறகு பேசலாம். ஓ.கே?" செல்போனை அவசரமாக ஆஃப் செய்த போது அவன் மனதில் குற்ற உணர்ச்சி இருந்தது.

தாமிராவிடம் வேதனையுடன் சொன்னான். "நான் இதுவரைக்கும் காவ்யா கிட்ட எதையும் மறைச்சதே இல்லை. ஆனால்.... இதை.... இதை அவள் கிட்ட எப்படி சொல்றதுன்னு தெரியலை"

அவளுக்கும் இதை இன்னொருவரிடம் வாய் விட்டுச் சொல்ல முடியும் என்ற தைரியம் இல்லை. அதே உயிரற்ற குரலில் கேட்டாள். "இனி என்ன செய்யறது?"

"பிடிக்குதோ பிடிக்கலையோ உண்மையை முழுசும் தெரிஞ்சுக்கணும். சேதுபதியைப் பிடிச்சுக் கேட்கலாம்...."

இருவரும் காரில் மீண்டும் பயணத்தைத் தொடங்கிய பிறகு மௌனமாகவே இருந்தார்கள். ஆனால் மனதில் ஆயிரமாயிரம் கேள்விகள் எழுந்தபடி இருந்தன. வரும் போதிருந்த உற்சாகமும் ஆவலும் போய், இப்போது துக்கமும், அவமானமும் அவர்களுக்குள் குடி கொண்டிருந்தன. கிட்டத்தட்ட நகரத்தை நெருங்கும் போது அருணின் செல்போன் அலறியது.

"ஹலோ அருண் சார். பார்ட்டி இப்ப வேற இடத்துக்குப் போறார். ரங்காச்சாரின்னு ஒரு பப்ளிஷர் இருக்கார், தெரியும் இல்லையா. அவர் வீட்டுக்குப் போயிட்டிருக்கார். அவர் வீடு தெரியுமா? அட்ரஸ் குறிச்சுக்கங்க....."

"என்ன சேது ஆச்சு. இப்படி பதட்டமாய் இருக்கிறாய்?" ரங்காச்சாரி தன் மாணவனைக் கேட்டார்.

"கொஞ்ச நாளாகவே என்னை யாரோ கண்காணிக்கிறாங்க. யார் என்னன்னு தெரியலை. நெருங்கி வந்து பேசவும் மாட்டேங்கிறாங்க. ஆனா எங்க போனாலும் பின்னால் வர்றாங்க. இப்ப கூட நான் வேலை செய்யற இடத்தில் இருந்து இங்கே வர்ற போது கூட பின்னால் இருக்காங்க"

"இதில் சந்தேகம் என்ன இருக்கு. இந்த மாதிரி வேலை எல்லாம் ஈஸ்வரன் வேலையாய் தான் இருக்கும்?"

"ஆனால் அந்த ஆள் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு எதையும் செய்யக் கூடியவர். இப்படி எட்ட நின்னு வேடிக்கை பார்க்க மாட்டாரே"

ரங்காச்சாரிக்கும் சேதுபதி சொன்னது சரியாகவேபட்டது. ஆனாலும் ஈஸ்வரன் அவ்வளவு சுலபமாக கணித்து விடக்கூடிய ஆள் அல்ல, ஏதாவது காரணம் இருக்கும் என்று எண்ணினார். அந்த நேரமாகப் பார்த்து அருணும் தாமிராவும் அவர் பங்களாவின் முன் காரை நிறுத்தினார்கள். ஜன்னல் வழியாக அவர்கள் வருவதைப் பார்த்த ரங்காச்சாரி ஒரு கணம் கடந்த காலத்திற்குப் போனார். தூரத்தில் இருந்து பார்க்கையில் ராஜராஜனும், தாராவும் வருவது போலத் தோன்றியது. அவர் முக மாற்றத்தைப் பார்த்து சேதுபதியும் அவர் பின்னால் இருந்து எட்டிப் பார்த்தார். "ஐயோ" என்ற சேதுபதி எப்படி ஓடித் தப்பிப்பது என்று யோசித்தது போல் தெரிந்தது.

ரங்காச்சாரி அமைதியாகச் சொன்னார். "உன் கதையின் கதாநாயகன், நாயகி யார்னு தெரிஞ்சு தான் வர்றாங்கன்னு நினைக்கிறேன். என் அனுமானம் சரின்னா அவங்க என்னைப் பார்க்க வரலை, உன்னைத் தேடித் தான் வந்திருக்காங்க. இனி மறைச்சு பிரயோஜனம் இல்லைன்னு முடிவுக்கு வந்த ஈஸ்வரன் தான் நீ இருக்கிற இடத்தை மறைமுகமாய் சொல்லி இருப்பான். அவனால் அவன் தங்கை முன் போய் தாமிரா கேள்வியோட நிற்கறதை தாங்க முடியாது. அதனால் அதைத் தடுக்க உன்னைக் கை காட்டி இருப்பான்னு தோணுது"

"வெளியே போக பின்னாடி வழி இருக்கா" சேதுபதி பரிதாபமாகக் கேட்டார்.

"அவங்க கிட்ட பேசாம நீ வெளியே போக ஈஸ்வரன் ஆள்கள் விடுவாங்கன்னு எனக்குத் தோணலை. ஓடி ஒளிஞ்சது போதும் சேது. அவங்களா ஏதேதோ தப்பாய்ப் புரிஞ்சுக்கறதை விட நீ எல்லாத்தையும் சொல்றது தான் இனி நியாயம்"

சேதுபதி எந்த முடிவுக்கும் வருமுன் அருணும், தாமிராவும் உள்ளே நுழைந்தார்கள்.

அருண் முகம் கல்லாக இறுகி இருந்ததையும், தாமிரா முகம் வெளிறி இருந்ததையும் இருவரும் கவனித்தார்கள். ரங்காச்சாரிக்கும் சேதுபதிக்கும் அதே இறுக்கத்துடன் அருண் வணக்கம் தெரிவித்தான். சேதுபதியைப் பார்ப்பவர்கள் யாரும் அவரைப் படித்தவர் என்று மதிப்பிட முடியாதபடி தோற்றமளித்தார். ராஜராஜனின் சாயல் அவனிடமும், தாராவின் சாயல் அவளிடமும் பார்த்த சேதுபதி ஒருகணம் மலைத்து நின்றார். தாமிராவும் அவரை அதிசயமாகப் பார்த்தாள்.

அருண் அவரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். "என் பெயர் அருண். இவங்க பெயர் தாமிரா...."

சேதுபதியின் நாக்கு வரண்டது.

முன்பொரு சமயம் அருண் அவரை சந்தித்துப் பேச முடிந்திருந்தால் அந்தக் கதைக்காக அவரை சிகரத்தில் வைத்துப் பாராட்டி இருப்பான். அந்தக் கதாநாயகன் நாயகி யாரென்று அறிய அவன் எவ்வளவு பணிவாகவும் பேசத் தயாராக இருந்திருப்பான். ஆனால் இன்று அறிய நேர்ந்த உண்மையின் கசப்பு அவன் வார்த்தைகளில் விஷமாய் வெளியே வந்தது. "நீ நான்

தாமிரபரணிங்கற ஒரு அற்புதமான கதை எழுதின சேதுபதி நீங்க தான் இல்லையா. வணக்கம். பூங்கொடி கிராமத்தில் தூரத்தில் உங்களைப் பார்த்திருக்கேன். நான் பக்கத்துல வர்றதுக்குள்ளே நீங்க போயிட்டீங்க. அந்தக் கதையில் புனிதமானவங்களாய் நீங்க சித்தரிச்சவங்க ரெண்டு பேரும் நிஜ வாழ்க்கையில் அப்படி இல்லை போல் தெரியுது. ஏன்னா ஒருவனுக்கு ஒருத்திங்கறது போய் ஒவ்வொருத்தருக்கும் ரெண்டு ரெண்டு பேர்னு ஆயிப் போச்சு. இதை எப்படி வெளியே சொல்றதுன்னு தான் இத்தனை நாள் ஓடி ஒளிஞ்சிங்களா? இந்த ஆள்களைப் போய் இமாலய உயரத்தில் நிறுத்திட்டோமேங்கற குற்ற உணர்ச்சியில் தான் பேனாவை வீசி எறிஞ்சுட்டீங்க போல இருக்கு."

அவன் வார்த்தைகள் துப்பாக்கிக் குண்டுகளாக வெளியே வந்தன. தாமிராவே அந்த வார்த்தைகளின் கூர்மைக்கு நெளிந்தாள். ரங்காச்சாரியின் கண்களில் அனல் வீசியது. சாதுவாக, பயத்துடன் நின்றிருந்த சேதுபதியோ சவுக்கடி பட்டது போல் ஒருகணம் துடித்துப் போனார். பிறகு பேசிய போது அவர் குரல் கரகரத்தது. "வழக்கு என்னன்னே தெரியாமல் தீர்ப்பு சொல்லாதே, அருண். என் கதாபாத்திரங்க இப்பவும் அதே உயரத்தில் தான் இருக்காங்க. அவங்க என் சினேகிதர்களாய் இருந்தாங்கன்னு சொல்றதுல நான் இப்பவும் பெருமை தான் படறேன். அரைகுறை உண்மைகள் பெரிய பெரிய பொய்களை விடக் கொடுமையானது அருண். நீ நடந்தது என்னன்னு முழுவதும் தெரிஞ்சுக்கணும்......"

சேதுபதி ஆரம்பித்தார்.

## (64)

மனித குல வாழ்க்கையில் மிகப் புனிதமானது தனி மனிதனின் சுதந்திரம். அதை நொறுக்கி முடமாக்கி விட்டு நாம் எந்தப் புனிதத்தையும் காப்பாற்றி விட முடியாது.

—ஜெயகாந்தன்

"நீ முதல்ல ராஜராஜன்கிற மனுஷனைத் தெரிஞ்சுக்கணும். உன் தகப்பனாய் உனக்குத் தெரிஞ்ச எந்திரமாய் இருக்கிற ராஜராஜனைச் சொல்லலை. நிஜமான ராஜராஜனை சொல்றேன். ஒரு ஜீனியஸாய் இருந்தாலும் அவன் ஒரு துரதிர்ஷ்டசாலின்னு தான் சொல்லணும். என்னைக் கேட்டால் தன் தகப்பனை சின்ன வயதிலேயே இழந்துட்டு தாய் மாமன் வீட்டுக்கு தன் அம்மாவோட வாழ வந்தப்பவே அவன் துரதிர்ஷ்டம் ஆரம்பிச்சுடுச்சுன்னு சொல்லுவேன்......"

ஒரு மனிதனின் குரலில் இருந்து அப்படியொரு வேதனையை உணர முடியும் என்று அருண் அதுவரை நம்பியதில்லை. அவர் சொல்லச் சொல்ல அவன் அந்த வேதனையை உணர ஆரம்பித்தான். அவன் இதுவரை அறிந்திராத வகையில் அவன் தந்தையும் தாயும் புதியதொரு பரிமாணம் எடுக்க ஆரம்பித்தார்கள்........

தன் தமக்கை விசாலத்துடன் வந்த மருமகன் ராஜராஜனை செல்வரங்கம் தான் பெறாத மகனாகவே நினைத்தார் என்றால் அது மிகையில்லை. ஆனால் தன் மகளை எவ்வளவு செல்லமாக அவர் வளர்த்தாரோ அதற்கு எதிர்மறையான கண்டிப்போடு மருமகனிடம் நடந்து கொண்டார். தன்னுடைய தொழில் வாரிசாக அவனை முன்பே மனதில் தீர்மானித்து விட்ட அவர் அவன் புத்தி கூர்மையையும், அவனிடம் இருந்த அசாதாரண மன உறுதியையும் கண்டு பெருமிதம் கொண்டார். ஆனால் அவன் புத்தி கூர்மையும், அவனுள் இருந்த அக்னியும் அறிவியல், இலக்கியம் என படிப்பு சம்பந்தமாக இருந்தது அவருக்கு சிறிதும் பிடிக்கவில்லை. மனிதனிடம் பணம் இருந்தால் போதும் இது போன்ற எத்தனை படிப்பாளிகளை வேண்டுமானாலும் விலைக்கு வாங்கலாம் அல்லது வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று வாழ்க்கைப் பாடம் படித்திருந்த அவர் அவனிடம் தான் படித்ததைப் புரிய வைக்க முயன்றார். அத்தனை பெரிய புத்திசாலியான ராஜராஜன் மனதில் அவர்

சொன்னது சிறிதும் எடுபடாமல் போகவே கண்டிப்பைக் காட்ட ஆரம்பித்தார். பெயருக்கு ஒரு பட்டதாரியாக அவன் ஆனால் போதும் மற்றபடி வியாபார நுணுக்கங்களை கற்றுக் கொள்வதில் தான் அதிக நாட்டம் காட்ட வேண்டும் என்று கட்டளை இட்டார்.

மனவேதனையுடன் ராஜராஜன் தன் தாயிடம் புகார் சொன்ன போதோ அவள் வழக்கமான புத்திமதியையே மகனிடம் சொன்னாள். "ராஜா நாம் உன் மாமாவோட நிழல்ல இருக்கோம். அனாதரவாய் நின்ன நமக்கு அடைக்கலம் கொடுத்து காப்பாத்தறவன் அவன். நீ அனுசரித்து தான் போகணும்".

சொந்த தந்தையாக இருந்திருந்தால் பிடிவாதமாக உரிமையுடன் தன் விருப்பு வெறுப்புகளைச் சொல்லி ராஜராஜன் போராடி இருப்பான். ஆனால் மாமனிடம் அது முடியவில்லை. அவன் தான் படிக்க நினைத்த அறிவுப் பொக்கிஷங்களை எல்லாம் கூட எல்லோரும் உறங்கிய பிறகு திருட்டுத் தனமாய் இரவில் கண்விழித்துப் படிக்க வேண்டி இருந்தது. ஏதோ ஆபாசப் புத்தகங்கள் படிப்பது போல் மாமாவுக்குத் தெரியாமல் இப்படி தன் அறிவுப் பசியைத் தீர்த்துக் கொள்வதில் ராஜராஜனுக்கு திருப்தியிருக்கவில்லை என்றாலும் அவனால் விட முடியவில்லை. தேர்வு சமயங்கள் தவிர, மற்ற நேரங்களில் அவனை வியாபார வேலைகள் செய்ய செல்வரங்கம் தொடர்ந்து ஏவினார். அவன் அதிலும் மிகவும் சமர்த்தனாக இருந்தான். ஆனால் அதை முடித்து விட்டுப் படிக்க அவன் முனைந்தாலோ அடுத்த வேலை சொல்லி விடுவார். தான் உருவாக்கிய வியாபார சாம்ராஜ்ஜியம் அவன் காலத்தில் பல மடங்காக பரவ வேண்டும், தன் பெயரை அவன் நிலை நாட்ட வேண்டும் என்ற தன் ஒரே கனவு அவன் ஒரே கனவாகவும் இருக்க வேண்டும் என்று செல்வரங்கம் ஆசைப்பட்டார்.

கல்லூரியில் அவன் படிக்கையில் போட்டிகளில் கலந்து கொள்ள அவர் அனுமதிக்கவில்லை. கல்லூரியில் இருந்து ஆசிரியர்கள் ரங்காச்சாரியும், நரசிம்மராஜுலுவும் கூட வந்து செல்வரங்கத்தைக் கண்டு பேசினார்கள். இப்படிப்பட்ட அறிவு வீணாகப் போய் விடக்கூடாது என்று வருத்தத்துடன் அவர்கள் சொன்ன போது செல்வரங்கமும் அதே வருத்தத்தோடு தன் மருமகனை இந்த உபயோகமில்லாதவற்றில் ஈடுபடுத்திக் கெடுத்து விட வேண்டாம் என்று அவர்களை வேண்டிக் கொண்டார். தன் அறிவியல் வேட்கையைத் தீர்க்க எத்தனையோ இரவுகள் செல்வரங்கத்தை ஏமாற்றி தப்பித்து நரசிம்மராஜுலுவின் வீட்டுக்குப் போய் ராஜராஜன் படித்ததும், ஆராய்ச்சி செய்ததும் உண்டு.

இதற்கு நேர்மாறாக தன் மகளை செல்லம் கொடுத்து வளர்த்தார் செல்வரங்கம். தாயில்லாப் பிள்ளை என்பதும், பெண் தானே என்பதும் அவர் அதற்குக் கொடுத்த காரணங்கள். வேறு வீட்டுக்கு மருமகளாய் போகக்கூடிய பெண் என்ற பயமும் அவரிடம் இல்லை. அவள் ராஜராஜனைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறவள் என்பது சிறுவயதிலேயே அவர் தீர்மானம் செய்து விட்ட விஷயம். மாதுரி ஒரு வேலையும் செய்யாமல், பெரிதாய் படிப்பிலும் ஆர்வம் காட்டாமல், தந்தையின் பணத்தை தன் விருப்பப்படி கணக்கில்லாமல் செலவு செய்து பணக்காரத் தோழிகளுடன் ஊர் சுற்றி பொழுதைக் கழித்தாள். விசாலம் ஜாடை மாடையாக தம்பிக்கு இது சரியல்ல என்று உணர்த்த முயன்று தோற்றுப் போனாள்.

கல்லூரியில் அவள் வகுப்பில் படித்த தாராவுக்கும் ராஜராஜனுக்கும் காதல் அரும்பியது. மென்மையும், கண்ணியமும் நிறைந்த தாரா ராஜராஜனைக் கவர்ந்தது போலவே அழகும், அபூர்வமான அறிவும் படைத்த ராஜராஜன் தாரா மனதில் இடம் பிடித்தான். ஆனால் சிறுவயது முதல் மாதுரி தான் தனக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டவள், மாமா வளர்த்ததற்காக அவர் மகளைத் திருமணம் செய்ய நன்றிக்கடன் பட்டிருக்கிறோம் என்று தாயால் அடிக்கடி சொல்லி வளர்க்கப்பட்டிருந்த ராஜராஜன் தன் காதலை மூடி மறைத்தான். தாராவும் வாய் விட்டுத் தன் காதலைச் சொல்லவில்லை. மாதுரிக்கு ராஜராஜன் மீது காதல் இல்லையென்றாலும் கல்லூரியில் எல்லோரையும் மயங்க வைத்த ஒருவனை தான் கைப்பற்றப் போகிறோம் என்ற கர்வம் அவளுக்கு இருந்தது. யாருக்கும் கிடைக்காத பொம்மை தனக்குச் சொந்தம் என்று பெருமிதம் அடையும் குழந்தையின் மனோபாவமாகவே அது இருந்தது. திருமணம் பற்றிய பேச்சு அடிபட

ஆரம்பித்தவுடன் ராஜராஜன் மாதுரியிடம் வெளிப்படையாக தங்கள் இருவரது குணாதிசயங்களும் நிச்சயம் ஒத்துப் போக முடியாது என்பதைச் சுட்டிக் காட்டினான். தன் தோழிகளால் 'மன்மதன்' என்றழைக்கப்படும் ராஜராஜனைக் கல்யாணம் செய்து கொண்டு பல பேரை பொறாமை அடைய வைக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி இருந்த மாதுரி அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

அந்த நேரத்தில் தான் ராஜராஜனின் நிழல் என்றழைக்கப்படும் அவன் நண்பன் ராஜராஜனுக்குத் தெரியாமல் தானும் மாதுரியிடம் சொல்லிப் பார்த்தான். ராஜராஜன் மனதில் தாரா இருப்பதையும் சேதுபதி சொன்னான். "மாதுரி. நீ சொன்னால் தான் உங்கப்பா கேட்பார். இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்காதே. உன்னைப் போலவே குணாதிசயங்கள் இருக்கிற ஆளைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கோ. ஒவ்வொரு நிமிஷமும் வாழ்க்கையில் உபயோகமாய் கழிக்கணும்னு நினைக்கிற அவனுக்கும், ஒவ்வொரு நிமிஷமும் வாழ்க்கையை ஜாலியாய் அனுபவிக்கணும்னு நினைக்கிற உனக்கும் கண்டிப்பாய் ஒத்துப் போகாது. ரெண்டு பேர் வாழ்க்கையும் சுகப்படாது. நாளைக்கு உன்னையே உன்னால் மன்னிக்க முடியாது. நல்லா யோசி மாதுரி, ப்ளீஸ்".

எதைப்பற்றியும் என்றுமே ஆழ்ந்து யோசித்து அறியாத மாதுரி சேதுபதி பேச்சை ஒரு பொருட்டாகவே நினைக்காமல் திருமணத்திற்கு நகை தேர்ந்தெடுக்கக் கிளம்பினாள். ராஜராஜன் மனதில் இன்னொருத்தி இருப்பது பெரிய விஷயமாகவே அவளுக்குத் தோன்றவில்லை. விசாலம் கூட மகன் முகத்தில் தெரிந்த வேதனை தாங்க முடியாமல் மருமகளிடம் சொன்னாள். "ஏம்மா பார்ட்டி, பிக்னிக்குன்னு அலையற உனக்கு எப்பவும் சீரியஸாய் வாழ்க்கையைப் பார்க்கிற இவன் கூட வாழ முடியுமா? இதெல்லாம் விளையாட்டு அல்ல பின்னால் மாத்திக்கறதுக்கு. யோசிச்சுப் பார் மாதுரி".

"சும்மா பயப்படாதீங்க அத்தை. நாங்க ரெண்டு பேரும் அழகான ஜோடியாய் இருப்போம்னு இப்பவே என் ஃப்ரண்ட்ஸ் எல்லாம் சொல்றாங்க. எங்க காலேஜே எங்க கல்யாணத்தைப் பத்தி தான் பேசுது"

தம்பியிடம் இருவருக்கும் பொருத்தம் சிறிதும் இல்லாத உண்மையைச் சுட்டிக் காட்ட தைரியமில்லாத விசாலம் இந்தத் திருமணம் மாதுரியாகத் தன் தந்தையிடம் மறுத்தால் ஒழிய நடந்து விடப் போகிறது என்றுணர்ந்து மருமகளிடம் பலவிதங்களில் சொல்லிப் பார்த்தாள்.

அவள் சொல்வதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமல், "ரிசப்ஷனுக்கு அவருக்கு டார்க் ப்ளூ கலர் சூட் செலக்ட் பண்ணிட்டேன். அப்ப நான் இந்தக் கலர் பட்டு சேலை கட்டிக்கறதா, இல்லை இது கட்டிக்கறதா. எது மேட்சிங்காய் இருக்கும் சொல்லுங்க அத்தை" என்று ஆர்வமாய் இரு பட்டுச் சேலைகளுடன் வந்து மாதுரி கேட்ட போது விசாலம் ஓய்ந்து போனாள்.

திருமணம் விமரிசையாக நடந்தது.

## (65)

Like wonder drugs that combat a specific illness but can have undesirable side effects, your actions can also have unintended consequences. Be that as it may, karma — choice, action, and consequence — is embedded in an interactive matrix of perceptions and values. – Ashok Bedi, M.D

மாதுரிக்குத் திருமணம் முடிந்த சில மாதங்களில் தன் தவறு புரிய ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் அலங்கரித்துக் கொண்டு ஊர் சுற்ற அவள் ஆசைப்பட்டதற்கு ராஜராஜன் ஒத்துழைக்க

மறுத்தான். வாழ்க்கை தெய்வம் மனிதனுக்கு அளித்த வரப்பிரசாதம் என்றும் வாழ்ந்ததற்கு அடையாளமாக பெரும் சாதனைகள் படைத்து சாக வேண்டும் என்றும் ஆசைப்பட்ட ராஜராஜன் அனுபவிக்கத் தெரியாதவன் என்பதை திருமணத்திற்குப் பின்பு தான் மாதுரி கண்டுபிடித்தாள். இத்தனை அழகான கணவன் அமைந்தும் அவன் கூப்பிட்ட இடங்களுக்கெல்லாம் கூட வர மறுத்தது அவளுக்கு சகிக்க முடியாததாக இருந்தது.

அவள் தோழிகளில் நெருங்கியவளான ஷாலினியிடம் பல முறை தன் நிலையை சொல்லி மாதுரி வருத்தப்பட்டாள். முற்போக்குவாதி என்று தன்னை என்றுமே எண்ணி வந்த ஷாலினிக்கு மாதுரியின் கவலை அர்த்தமில்லாததாகப்பட்டது.

"ஒத்து வராததை உதறித்தள்ளு மாதுரி அது தான் புத்திசாலித்தனம்"

"அப்படின்னா..."

"பேசாம உன் ஹஸ்பெண்டை டிவோர்ஸ் செஞ்சுடு. ராஜராஜனும் யாரையோ லவ் செஞ்சதா சொல்றே. அந்த ஆள் அவளைக் கல்யாணம் பண்ணிக்கட்டும். நீ உனக்குப் புடிச்ச மாதிரியான ஆளைக் கல்யாணம் செஞ்சுக்கோ"

ஆரம்பத்தில் அந்த யோசனை மாதுரியை அதிர வைத்தாலும் சிந்தித்துப் பார்க்கையில் சரியென்றே பட்டது. ஆனால் செல்வரங்கம் ஒத்துக் கொள்ள மாட்டார் என்று நினைத்தாள். அதை தோழியிடம் சொல்லவும் செய்தாள்.

"மாதுரி ஆரம்பத்தில் உங்கப்பா கோபப்படலாம். ஆனா உன் மேல் உயிரையே வச்சிருக்கிறவர் அப்புறமாய் வழிக்கு வருவார்..... உன்னைக் கட்டிக்க இப்பவும் எத்தனையோ பேர் ரெடியாய் இருக்காங்க. எங்கண்ணா சுரேந்தர் கூட ஆரம்பத்தில் இருந்து உன் மேல் உயிராய் இருக்கான். ஆனா ராஜராஜன் அழகுக்கு முன்னால் போட்டி போட முடியாதுன்னு தான் ஒதுங்கினான்...." என்று தன் தமையன் விஷயத்தை பேச்சோடு பேச்சாக சொன்னாள்.

அதுவரை சுரேந்தரைப் பற்றிப் பெரிதாக நினைக்காத மாதுரிக்கு பிறகு சுரேந்தரை நினைத்துப் பார்க்கையில் அவன் பரவாயில்லை என்று தோன்றியது. சொன்னபடி கேட்பான், நன்றாக ஊர் சுற்ற வருவான், வாழ்க்கையை ஜாலியாக அனுபவிக்கத் தெரிந்தவன் என்பதெல்லாம் பெரிய அனுகூலமான விஷயங்களாகப் பட்டது. அவனைப் பின்பு சந்தித்த போது அவளை மறுமணம் செய்து கொள்ளத் தயார் என்று அவனும் சூசகமாகச் சொன்னான்.

எதையும் மறைமுகமாகவோ குறுக்கு வழியிலோ செய்யத் தெரியாத மாதுரி கணவனிடம் நேரடியாக தன் எண்ணத்தைச் சொன்னாள்.

ராஜராஜன் வாயடைத்துப் போனான். "மாதுரி நீ என்ன சொல்கிறாய்?"

"நீங்க, அத்தை, சேது எல்லாம் ஆரம்பத்திலேயே சொன்னீங்க. ஆனா எனக்குத் தான் தலைக்கு ஏறலை. சாரி. ஆனா இனிமேயும் இது நமக்கு சரி வரும்னு தோணலை. பேசாமல் நாம் விவாகரத்து செஞ்சுக்கலாம். நீங்க தாராவைக் கல்யாணம் செஞ்சுட்டு சந்தோஷமாய் இருங்க. நான் சுரேந்தரைக் கல்யாணம் செஞ்சுக்கறேன்...."

எல்லாவற்றையும் சுலபமாகச் சொல்லும் தன் மனைவியைப் பார்க்கையில் ராஜராஜனுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

"உங்கப்பா ஒத்துக்குவாரா மாதுரி"

"கொஞ்சம் கோபப்படுவார். அவரை நான் சரி செஞ்சுக்கறேன். முதல்ல நாம ரெண்டு பேரும் இதில் உறுதியாய் இருக்கோம்னு அவருக்குத் தெரியணும். அவ்வளவு தான். ஷாலினி ஒரு ஐடியா சொன்னாள். நீங்க சொல்லாமல் ஓடிப் போய் தாராவைக் கல்யாணம் செய்துகிட்டு கொஞ்ச நாள் தலைமறைவாய் இருந்தால் பிறகு நான் அப்பாவை வழிக்குக் கொண்டு வர சரியாய் இருக்கும்னு சொன்னாள். அவர் வேற வழியில்லாமல் நான் சுரேந்தரைக் கல்யாணம் செய்ய அனுமதி கொடுப்பார்னு சொல்றாள்"

ராஜராஜன் மனைவியிடம் பொறுமையாய்ச் சொன்னான். "கல்யாணம்கிறது விளையாட்டு விஷயம் இல்லை மாதுரி. இது என்ன டிரஸ்ஸா? பிடிக்கலைன்னா கழற்றி வீசிட்டு வேறொண்ணு போட்டுக்க. என்ன பேசறாய் மாதுரி"

"அதுக்குன்னு நாம ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் கஷ்டப்படுத்திகிட்டு கூடவே இருக்கணும்கிறது தலையெழுத்தா? நீங்க ஒத்துழைச்சா ரெண்டு பேரும் நிம்மதியாய் இருக்கலாம்"

"மாதுரி நீ சீரியஸாவே சொல்றியா?"

"ஆமா. நீங்க முதல்ல போயிடுங்க. எங்கேன்னு என் கிட்ட கூட சொல்ல வேண்டாம். தெரிஞ்சா நான் ஓட்டை வாய் உளறிடுவேன். அப்பா என் திட்டத்துக்கு ஒத்துகிட்டவுடனே நான் சேது மூலமாய் சொல்லி அனுப்பறேன். அப்ப வாங்க போதும். ப்ளீஸ் எப்ப போறீங்க"

ஒரு எண்ணம் மனதில் தோன்றியவுடனேயே அதை செயல்படுத்தி விட வேண்டும் என்ற வழக்கமான அவளது குழந்தைத்தனமான வேகத்திற்கு ஆரம்பத்தில் தடை போட்டு அவளை யோசிக்கச் சொன்னான் ராஜராஜன். ஆனால் வழக்கம் போல் அவளது அப்போதைய முடிவே அருமையான தீர்வாக அவளுக்குப் பட்டது. ராஜராஜன் போய் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு எங்கோ வாழத்துவங்கி விட்டான் என்று அறிய நேர்ந்தால் செல்வரங்கம் தன்னை சுரேந்தருக்குத் திருமணம் செய்து கொடுக்க வேறு வழியில்லாமல் ஒத்துக் கொள்வார் என்று திரும்பத் திரும்ப சொல்ல ஆரம்பித்தாள். வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளத் தயாரான பிறகு அவளுடன் மேலும் வாழ்வதில் அர்த்தம் இல்லை என்று ராஜராஜன் கடைசியில் சம்மதித்தான்.

சேதுபதியிடம் ராஜராஜன் இதைச் சொன்ன போது சேதுபதியும் வாயைப் பிளந்தான். "இதென்ன இந்தியாவா? அமெரிக்காவா?"

ஆனால் மாதுரி இதில் உறுதியாய் இருக்கிறாள் என்று அறிந்தவுடன் நண்பனிடம் சேதுபதி சொன்னான். "எது எப்படியோ நீ உன் மாமா கிட்ட இருந்தும் மாதுரி கிட்ட இருந்தும் தப்பிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் ராஜா, நான் தாரா கிட்ட பேசிப் பார்க்கட்டுமா?"

ராஜராஜன் இன்னும் தயங்கினான். ஆனால் சேதுபதி தாராவிடம் சென்று பேசினான். அவர்கள் இருவரும் மணம் செய்து கொள்ள வற்புறுத்தினான். ராஜராஜனுக்கு விவாகரத்து கிடைத்தால் ஒழிய ஈஸ்வரன் இந்தத் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ள மாட்டார் என்று தாரா அறிந்திருந்தாள். ஆனால் சேதுபதி இது இருவருக்கும் ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று திரும்பத் திரும்ப சொன்னான். கடைசியில் தாராவே மாதுரிக்கு ஃபோன் செய்து பேசினாள். மாதுரியும் இது மூவருக்கும் நல்ல வழி ஏற்படுத்தக் கூடிய அருமையான சந்தர்ப்பம் என்று சொன்னாள். தாராவும் ராஜராஜனும் கலந்து ஆலோசித்தார்கள். அண்ணனுக்குச் சொன்னால் ஒத்துக் கொள்ள மாட்டார், சொல்லாமல் போகவோ மனம் மறுத்தது என்ற தர்மசங்கடத்தில் தாரா இருந்தாலும் இறுதியில் காதல் வென்றது. கடைசியில் தற்காலிகமாக இருவரும் தலைமறைவாவது என்ற முடிவிற்கு வந்தார்கள். எங்கு போவது என்ற கேள்வி வந்தபோது தான் சேதுபதி பூங்கொடி கிராமத்தைப் பற்றிச் சொன்னான். சேதுபதி இங்கு இருக்கையில் இவர்கள் அங்கு போவார்கள் என்று யாரும்

ஊகிக்க மாட்டார்கள் என்றும், கேட்கும் எல்லோரிடமும் தான் அவர்கள் பம்பாய் சென்று விட்டதாகச் சொல்வதாகவும் சேதுபதி சொன்னான். இவர்கள் தங்க ஆச்சியிடம் பேசி முன்பே ஏற்பாடு செய்து விட்டும் சேதுபதி வந்தான்

அண்ணனுக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு தாரா கிளம்பினாள். ராஜராஜனும் அவளும் பூங்கொடி கிராமத்திற்குக் கிளம்பினார்கள்.

ஈஸ்வரனும் செல்வரங்கமும் உண்மையை அறிய நேர்ந்த போது பிரளயமே ஏற்பட்டது. சேதுபதி அவர்கள் சென்ற இடத்தைத் தவிர மற்ற உண்மைகளை இருவரிடமும் அப்படியே சொன்னான். ஈஸ்வரன் உடனடியாக செல்வரங்கத்துக்கு ஃபோன் செய்து எப்போது விவாகரத்து என்று கேட்ட போது செல்வரங்கம் கிட்டத்தட்ட மயக்கமே போட்டு விட்டார். மாதுரியை அழைத்து அவர் கேட்ட போது இது தன்னுடைய திட்டம் தான் என்று தந்தையிடம் ஒளிக்காமல் சொன்னாள். அந்த முடிவுக்குத் தான் வந்ததற்கான காரணங்களை அவள் விளக்கிய போது அவர் பேயறைந்தது போல் அவளைப் பார்த்தார். மருமகனிடம் காட்டிய கண்டிப்பில் கால் பாகம் மகளிடம் காட்டி இருந்தால், தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ள ஆரம்பத்திலேயே அவளை அனுமதிக்காமல் இருந்திருந்தால் இப்படியொரு நிலைமை வந்திருக்காது என்ற உண்மை அந்தத் தந்தைக்கு அப்போது தான் உறைத்தது. முதல் முறையாக அவளை ஓங்கி அறைய அவர் முற்பட்ட போது மாதுரி வாந்தி வருகிறது என்று சொல்லி ஓடினாள்.

அவள் கருவுற்றிருக்கிறாள் என்று பின்னர் அறிய நேர்ந்த போது செல்வரங்கத்திற்கு சந்தோஷப்படுவதா, துக்கப்படுவதா என்று தெரியவில்லை.

"இது யார் குழந்தை?" தன் சந்தேகத்தை மகளிடம் வெளிப்படையாகக் கேட்டார்.

# (66)

"If what you believe is actually true,
you don't need to believe it."
-- Ron Smothermon

மாதுரியின் முகம் கோபத்தில் சிவந்தது. "என்ன கேட்டீங்க?"

"இது யார் குழந்தைன்னு கேட்டேன். ராஜராஜனோடதா, இல்லை சுரேந்தரோடதா?"

அவள் பத்திரகாளியாக மாறினாள். "என்னை என்னன்னு நினைச்சுட்டீங்க. ஒருத்தனைக் கல்யாணம் செய்துகிட்டு இன்னொருத்தன் கிட்ட குழந்தை பெத்துக்கற கீழ்த்தரமான பொண்ணுன்னு நினைச்சுட்டீங்களா?"

அவள் சொன்ன வார்த்தைகள் வயிற்றில் பாலை வார்த்தாலும் அவர் அதை வெளியில் காண்பித்துக் கொள்ளாமல் சொன்னார். "தாலி கட்டினவன் உயிரோட இருக்கையில் அதைக் கழற்றி வச்சுட்டு இன்னொரு தாலி கட்டிக்க தயாராய் இருக்கியே, அதனால் தான் கேட்டேன்"

"அப்பா அவரும் நானும் எல்லா விதத்திலும் எதிர்மறையாய் இருக்கோம். இதில் ரெண்டு பேரும் சந்தோஷமாய் இல்லை. இன்னும் எங்க முன்னாடி எத்தனையோ காலம் இருக்கு. இப்படியே அத்தனை காலத்தையும் கழிக்கப் பிடிக்கலை. அதனால் தான் இந்த முடிவெடுத்தோம். ஆனா நான் இது வரைக்கும் அவருக்கு துரோகம் செய்ய மனசளவில் கூட நினைச்சதில்லை...."

"ராஜராஜனுக்குத் தெரியுமா நீ கர்ப்பமாய் இருக்கிறது"

"இல்லை...."

"சரி இனி நீ என்ன செய்யப் போறே. கருக்கலைப்பு செஞ்சுக்கப் போறியா?"

மறுபடியும் அவள் முகம் கோபத்தில் சிவந்தது. "உங்களுக்கு என்ன பைத்தியமா? என் முதல் குழந்தை எனக்கு வேணும்.... இது அவர் மாதிரியே அழகாய் இருக்கும்னு நினைக்கிறேன்"

கோபத்தில் ஆரம்பித்து குழந்தையைப் பற்றிய கனவுடன் மென்மையாக பேச்சை முடித்த மாதுரியை விசாலமும் செல்வரங்கமும் புரிந்து கொள்ள முடியாமல் திகைத்தார்கள்.

"குழந்தையைப் பெத்துக்கணும்னு நினைக்கிறது சரி. இந்தக் குழந்தையோட உன்னை அந்த சுரேந்தர் ஏத்துக்குவானா?"

"கேட்டுப் பார்க்கணும். ஒத்துக்குவார்னு நினைக்கிறேன். அவங்க எல்லாம் ரொம்ப ஃபார்வர்டுப்பா. இருங்க எதுக்கும் நான் ஷாலினி கிட்ட இப்பவே பேசிட்டு உங்களுக்கு சொல்றேன்......" என்று சொல்லி விட்டு போன் செய்ய அந்த அறையை விட்டு மாதுரி வெளியே போனபோது தலையில் படார் படார் என்று செல்வரங்கம் அடித்துக் கொண்டார். "எல்லாம் என் தலையெழுத்து. அந்த சனியன் ஷாலினி என் பொண்ணு மனசை எப்படியெல்லாம் மாத்திட்டா..."

விசாலம் மௌனமாக அழுதாள்.

மாதுரி உற்சாகத்துடன் வந்தாள். "சுரேந்தரே பேசினார். நோ ப்ராப்ளம்னுட்டார். நான் தான் சொன்னேனே அப்பா. ஃபாரின்ல இதெல்லாம் சர்வசகஜம்ப்பா"

செல்வரங்கம் கண்கள் கலங்கச் சொன்னார். "உனக்கு வரப் போற சொத்து தான் 'நோ ப்ராப்ளம்'னு அவனை சொல்ல வச்சிருக்கு. அந்த சுரேந்தர் நம்ம ராஜராஜன் கால் தூசுக்கு சமமாவானா மாதுரி?"

"அவர் மாதிரி யாரும் இருக்க முடியாதுன்னு எனக்குத் தெரியும்ப்பா. ஆனா நான் சாதாரண மனுஷிப்பா. எனக்கு சாதாரணமான மனுஷன் போதும்னு நினைக்கறது தப்பாப்பா? என்னை என்ன செய்யச் சொல்றீங்க?"

"எனக்கு ஒரு பாட்டில் விஷம் கிடைச்சா கொண்டு வாம்மா அது போதும். நான் போய் சேர்ந்துடறேன். அந்த ஈஸ்வரன் விவாகரத்து எப்பன்னு கேட்க ஆரம்பிச்சுட்டான். நான் இதையெல்லாம் எப்படி சமாளிக்கப் போறேன்னே தெரியலை..... கடவுளே நான் என்ன செய்வேன்?"

அடுத்த முறை ஈஸ்வரன் விவாகரத்து என்ன ஆயிற்று என்று கேட்க போன் செய்த போது செல்வரங்கம் தன் மகள் கர்ப்பமாக இருப்பதைச் சொன்னார்.

"நான் உன் மகள் கர்ப்பமா இல்லையான்னு கேட்கலை... விவாகரத்துக்கு என்ன செஞ்சீங்கன்னு கேட்கறேன். அவங்க ரெண்டு பேரும் ஒரு முடிவு தெரியாம வர மாட்டாங்க போல இருக்கு. எனக்கு என் தங்கையைப் பார்க்காம பைத்தியம் புடிச்ச மாதிரி இருக்குய்யா"

"ஈஸ்வரன் நீ என் நிலைமையில் இருந்து பார்த்துட்டு பேசு. நீயாயிருந்தா என்ன செய்வாய்?"

"லூசுப் பொண்ணை பெத்துட்டு என் கிட்ட கேட்டு என்னய்யா பிரயோஜனம்? விட்டா அப்பனும் பொண்ணும் சேர்ந்து எல்லாரையும் பைத்தியமாக்கிடுவீங்க போல் இருக்கே"

தொடர்ந்த நாட்கள் இரு குடும்பங்களிலும் பெரிய கொந்தளிப்பையே ஏற்படுத்தின. இது எதுவும் தெரியாமல் பூங்கொடி கிராமத்தில் திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து கொண்டு இருந்தார்கள் ராஜராஜனும் தாராவும். சேதுபதிக்கு மாதுரி கருவுற்று இருப்பது தெரிய வந்த போது காலம் கடந்து விட்டதால் அவரும் அதை நண்பனுக்குத் தெரிவிக்கப் போகவில்லை. செல்வரங்கம் பிடி கொடுத்துப் பேசாததால் ஈஸ்வரன் மனதில் சிறு பயம் குடி கொள்ள ஆரம்பித்தது. அவர்களைக் கண்டுபிடிப்பது முக்கியமான அவசரம் என்று நினைத்தவர் உடனடியாக சேதுபதியை வரவழைத்துப் பேசினார்.

"நாயே உன் முகத்தில் ஏதோ திருட்டுத்தனம் தெரியுதே. அவங்க எங்கே இருக்காங்கன்னு உனக்குத் தெரியும் போலத் தெரியுதே..."

"ஐயோ சத்தியமாய் தெரியாதுங்க. பாம்பே போறதாய் மட்டும் சொன்னாங்க. அங்க ராஜா ஏதோ வேலை இருக்கிறதாய் சொன்னான். அவ்வளவு தாங்க. போய் எனக்கு போன் கூட செய்யலைங்க. எனக்குத் தெரிய வந்தா நான் கண்டிப்பாய் சொல்லாமல் இருக்க மாட்டேங்க"

ஆழமாக சேதுபதியைப் பார்த்தபடி ஈஸ்வரன் சொன்னார். "நீ மறைக்கிறாய்னு தெரிஞ்சா தோலை உரிச்சு உப்புக் கண்டம் போட்டுருவேன்....."

ஈஸ்வரனும் செல்வரங்கமும் ராஜராஜனை பம்பாயிலும் பெரிய நகரங்களிலும் தேடினார்கள். குடும்ப விஷயம் என்பதால் வெளிப்படையாக தேட முடியாமல், விசுவாசமான நபர்களைக் கொண்டு தனிப்பட்ட முறையில் தேடினார்கள். அவன் படிப்பிற்கேற்ற வேலைகள் கொடுக்கக்கூடிய பெரிய சிறிய கம்பெனிகளில் தேடினார்கள். ஒரு குக்கிராமத்தில் இருக்கும் அவனை பெரிய பெரிய நகரங்களில் தேடித் தோற்றுப் போனார்கள். நாளாக நாளாக அவர்கள் பயம் அதிகரிக்க ஆரம்பித்தது. சேதுபதி அபூர்வமாய் யாருக்கும் சந்தேகமில்லாமல் பூங்கொடி கிராமத்திற்கு வந்து போனான். அவனது நண்பன் முகத்திலும் தாரா முகத்திலும் தெரிந்த பரிபூரண சந்தோஷத்தைப் பார்த்த போது சேதுபதியால் உண்மையான நிலவரத்தைச் சொல்ல முடியவில்லை. ராஜராஜன் கேட்ட போது செல்வரங்கம் இன்னும் மாதுரியின் திட்டத்துக்கு ஒத்துக் கொள்ளவில்லை, பொறுத்துப் பார்த்து பிறகு முடிவு செய்யலாம் என்று சொல்கிறார் என்று மட்டும் சொன்னான்.

செல்வரங்கம் உண்மையில் விவாகரத்தைப் பற்றியும் மறுமணத்தைப் பற்றியும் அடிக்கடி கேட்ட தன் மகளிடம் அதையே தான் சொல்லியிருந்தார். "எதுக்கும் குழந்தை பிறக்கட்டும். பிறகு பார்க்கலாம்". அவள் மனதிலும் குழந்தை பிரதான இடத்தைப் பிடிக்க ஆரம்பித்தது. அவளுக்கு குழந்தையின் ஒவ்வொரு அசைவும் பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தது. "அத்தை எனக்கென்னவோ இது பையனாய் இருக்கும்னு தான் தோணுது..... அப்பா இது அவங்க அப்பா மாதிரி சீரியசாய் இருக்குமா? என்ன மாதிரி ஜாலியாய் இருக்குமா?"

"உன்னை மாதிரி அது இருக்க வேண்டாம்... நீ ஒருத்தியே போதும்...." என்று செல்வரங்கம் சொன்ன போது முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு உட்கார்ந்த மாதுரியின் அருகில் உட்கார்ந்து தலையை வருடிக் கொடுத்தார். அவரால் ஏனோ மகள் மீது நிறைய நேரம் கோபமாக இருக்க முடியவில்லை. "நீயே ஒரு குழந்தை... உனக்கொரு குழந்தை வேறு...." மகளுடன் நீண்ட நேரம் இருக்க ஆரம்பித்த தந்தை அவளுக்கு அன்பாக புத்திமதி சொல்ல ஆரம்பித்தார். அது எந்த அளவு அவள் அறிவுக்கு எட்டியது என்று அவருக்குத் தெரியவில்லை.

கடைசியில் ஒரு ஆண் குழந்தையை மாதுரி பெற்றெடுத்து அருண் என்று பெயரும் வைத்தாள். ஆனால் குழந்தையின் தகப்பன் இருக்கும் இடம் மட்டும் தெரியவில்லை. ஈஸ்வரன் அந்தக் குழந்தை பிறந்த பிறகு சிக்கல் அதிகமாவதை உணர்ந்தார். ஆனாலும் அவர் திட்டமிட்டபடி அந்த விவாகரத்தைப் பெற்று சட்டபூர்வமாக தங்கைக்கும் ராஜராஜனுக்கும் திருமணம் செய்து வைக்க உறுதி பூண்டார். செல்வரங்கமோ மாதுரிக்கு வேறு திருமணம் செய்து வைக்கும் எண்ணமே இல்லாதது போல் நடந்து கொண்டார். மாதுரியும் குழந்தை மீது அதிகக் கவனம் செலுத்தியதால் மறுமணத்தைத் தற்காலிகமாக மறந்தாள்.

இந்த சமயத்தில் தான் ஈஸ்வரனுக்கும், செல்வரங்கத்துக்கும் மருதமுத்து தயவில் பூங்கொடி கிராமத்தில் இருவரும் இருப்பது தெரிய வந்தது.

## (67)

To meet, to know, to love and then to part
Is the sad tale of many a human heart.
– S.T.Coleridge

வாழ்க்கையில் முதல் முதலாக சந்தோஷம் என்பதன் பொருளை ராஜராஜன் தாராவுடன் வாழ்ந்த அந்த நாட்களில் உணர்ந்தான். காதலின் பெருமை என்றுமே காதலிப்பவர்களின் மேன்மையைப் பொருத்தே அமைகிறது. காலம் செல்ல செல்ல, யதார்த்த வாழ்க்கையின் உரசல்கள் உணர ஆரம்பித்த பின்னரும் ஆழப்படுவதே நிஜமான காதல். அந்த நிஜக் காதல் மேலான மனிதர்களுக்கே சாத்தியப்படுகிறது. அப்படிப்பட்ட காதலில் திளைத்த அவர்கள் இருவருக்கும் அந்த தாமிரபரணி நதிக்கரையில் இருந்த குக்கிராமம் சொர்க்கமாகவே தோன்றியது.

அவன் தன் விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கையில் அவள் ஓவியங்கள் வரைந்து கொண்டிருப்பாள். அவள் சமைக்கையில் அவன் தோட்ட வேலை செய்து கொண்டிருப்பான். இருட்ட ஆரம்பித்த பின் இருவரும் தாமிரபரணி நதிக்கரையில் அமர்ந்து சில சமயங்களில் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பார்கள்; சில சமயங்களில் மணிக்கணக்கில் மௌனமாக இருப்பார்கள். அந்த இரண்டுமே அந்தந்த சமயங்களுக்கு அவர்களுக்கு இயல்பாகவே தோன்றும். அவ்வப்போது ஆச்சியும் அவர்களுடன் கலந்து கொள்வாள். பேச்சு சில சமயம் அறிவார்ந்த விஷயங்களில் இருக்கும். புரியாததை ஆச்சி அவனிடம் தயக்கமில்லாமல் கேட்பாள். அவனும் மிகவும் பொறுமையாக அவளுக்குப் புரிகிற விதத்தில் எளிமையாக விளக்குவான். ஆச்சி அவனை மகனாகவும், அவளை மருமகளாகவுமே பாவிக்கத் தொடங்கிவிட்டிருந்தாள்.

சில மெல்லிருட்டு நேரங்களில் அவன் பழைய பாடல்கள் பாடுவான். ஆச்சி, தாராவுடன் அந்த தாமிரபரணியும் ரசிப்பது போல் தோன்றும். அபூர்வமாக சேதுபதி அவர்களுடன் வந்து சேர்வதுண்டு. விவாகரத்து விஷயமாக செல்வரங்கம் முடிவு செய்து விட்டாரா என்று ஆர்வமாக ராஜராஜனும் தாராவும் கேட்பதுண்டு. சேதுபதி இல்லை என்றும் சிறிது காலம் பொறுக்க வேண்டும் என்றும் சொல்வான். இவர்களது சந்தோஷம் மருதமுத்துவை மட்டும் திராவகமாக அரித்தது. தாராவைப் பார்த்த கணம் முதல் தன் மனதை அவளிடம் பறிகொடுத்திருந்த அவனை தாரா ஒரு பொருட்டாக நினைக்காதது அவனால் சகிக்க முடியாததாக இருந்தது. அதே நேரத்தில் ராஜராஜனைப் பார்க்கையில் எல்லாம் அவள் முகம் பிரகாசித்த விதம் அவனைச் சித்திரவதை செய்தது. ஆச்சி கூட மாறி, பாசத்தை அதிகமாக ராஜராஜன் மேல் பொழிந்தது எல்லாவற்றையும் விட வேதனைப்படுத்தியது. மாலை நேரங்களுக்குப் பின்பு மட்டும் நதிக்கரைக்கு அவர்கள் செல்வதும், சேதுபதி திருட்டுத்தனமாக வந்து போவதும் மருதமுத்துவிற்குப் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. அவர்கள் பேசும் போது ஒட்டுக் கேட்க ஆரம்பித்து அவர்கள் யார் என்பதைக் கண்டு பிடித்தான். அவர்கள் இங்கிருப்பதை அவன் செல்வரங்கத்துக்கும், ஈஸ்வரனுக்கும் உடனடியாக தெரிவிக்கவும் செய்தான்.

மறுநாள் செல்வரங்கமும், ஈஸ்வரனும் தங்கள் கார்களில் பூங்கொடி கிராமத்திற்குள் பிரவேசித்தார்கள். தாராவின் கழுத்தில் தொங்கிய தாலியைப் பார்த்த பிறகு செல்வரங்கம் தன் நம்பிக்கையைப் பெரிதும் இழந்தார். ஈஸ்வரன் ராஜராஜனை தாராவிடமிருந்து பறிக்க சம்மதிக்க மாட்டார் என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆனாலும் பேரன் பிறந்திருப்பதை

மருமகனிடம் கண்ணீருடன் சொன்னார். ராஜராஜன் மகன் பிறப்பில் சந்தோஷப்படுவதா துக்கப்படுவதா என்று தெரியாமல் குழம்பினான். மாதுரி அவன் வாழ்க்கையில் முடிந்து போன அத்தியாயமாகவே இருந்தாள். ஆனால் குழந்தையோ அவன் ரத்தம்.... செல்வரங்கம் ராஜராஜனைத் திரும்பி வரும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்.

ராஜராஜன் திரும்பிப் போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தான். அதைச் சொன்னவன் இத்தனையும் மாதுரியின் முடிவின்படி தான் நடந்ததென்பதை சுட்டிக் காட்டினான். அதை மறுக்க முடியாத செல்வரங்கம் வாய்விட்டு அழுதபடி சொன்னார். "ராஜா, உன் குழந்தைக்காகவாவது நீ வரணும்"

"மாமா என் குழந்தையை ஏத்துக்க நான் தயாராய் இருக்கிறேன். குழந்தையை எங்க கிட்ட கொடுத்துட்டு மாதுரி அவள் நினைச்சபடி கல்யாணம் செய்துக்கட்டும். எப்ப வேணும்னாலும் அவள் குழந்தையை வந்து பார்க்கலாம்......"

செல்வரங்கம் மகளிடம் கருக்கலைப்பு செய்யப் போகிறாயா என்று கேட்டதற்கு அவள் மறுத்ததில் இருந்து தற்போது குழந்தை மேல் உயிராய் இருப்பது வரை துக்கத்தோடு விவரித்தார். "என் பொண்ணு இது வரைக்கும் எதுலயாவது சீரியசாய் இருந்து நான் பார்த்ததில்லை. முதல் தடவையாய் அவள் தன் குழந்தை விஷயத்தில் இருக்கிறாள். அவள் குழந்தையைப் பிரிய ஒத்துக்க மாட்டாள். நீ வந்துடு ராஜா. நீ எப்படி சொல்றியோ, அப்படி அவளை இருக்க சொல்றேன். அவளை நீ நினைக்கற மாதிரி மாற வைக்கிறேன். நீ என்ன சொன்னாலும் கேட்கறேன், ப்ளீஸ்"

ஈஸ்வரன் குரலில் அனல் பறந்தது. "அப்படின்னா என் தங்கை கதி?"

ராஜராஜனோ, செல்வரங்கமோ பேசுவதற்கு முன் தாரா இடைமறித்து ராஜராஜனிடம் சொன்னாள். "ராஜா நான் உங்க கிட்ட தனியா கொஞ்சம் பேசணும்"

அவர்கள் இருவரும் தனியாக பேசப்போன பின் செல்வரங்கம் ஈஸ்வரனும், ஆச்சியும் தன்னை சுட்டெரிக்கும்படி பார்ப்பதைப் பார்த்தார். ஈஸ்வரன் கோபம் அவருக்குப் புரிந்தது. ஆனால் இந்த கிராமத்துக் கிழவியின் கோபத்திற்குக் காரணம் அவருக்கு உடனடியாக விளங்கவில்லை.

தங்கள் அறைக்கு வந்ததும் தாரா ராஜராஜனிடம் சொன்னாள். "ராஜா உங்கப்பா இல்லாததால் எல்லா சுதந்திரமும் பறிபோய் நீங்க உங்க மாமா கிட்ட கஷ்டப்பட்டீங்கன்னு பல தடவை என் கிட்ட சொல்லியிருக்கீங்க. இப்ப நீங்க போகலைன்னா கண்டிப்பா வேற வழியில்லாமல் உங்க மாமா மாதுரியை சுரேந்தருக்குக் கல்யாணம் செய்து கொடுத்துடுவார். அப்போ உங்க மகனும் தன் சுதந்திரத்தை இழந்து பலவிதத்தில் கஷ்டப்பட வாய்ப்பிருக்கு இல்லையா?"

மாதுரி தேர்ந்தெடுத்துள்ள சுரேந்தர் பணத்தாசை கொண்டவன், பொறுப்பில்லாமல் திரியும் ஆசாமி என்பதை உணர்ந்திருந்த ராஜராஜனுக்கு அவள் சொன்னதை மறுக்க முடியவில்லை. "அதனால் தான் குழந்தையை நாமே வளர்த்தலாம்னு சொன்னேன்"

"ஆனால் மாதுரி ஒத்துக்க மாட்டாள்ங்கிறப்ப......."

ராஜராஜன் தாராவைக் கேள்விக்குறியுடன் பார்த்தான். தாரா சொன்னாள். "அந்தக் குழந்தை எந்தத் தப்பும் செய்யலையே. அது கஷ்டப்பட நாம் காரணமாய் இருந்துடக் கூடாது ராஜா. அதுவும் அப்படிப்பட்ட ஒரு நரகத்தை அனுபவிச்சிருக்கிற நீங்களே அதை அனுமதிச்சிடக் கூடாது. அப்படி அனுமதிச்சுட்டா நம்மை நாமே மன்னிக்க முடியாது"

"என்ன செய்யலாம்னு சொல்றாய் தாரா?"

தாரா கண்கள் கலங்க உறுதியுடன் சொன்னாள், "நீங்க உங்க மாமா சொல்றபடி திரும்பிப் போயிடுங்க."

ராஜராஜன் தன் காதுகளில் காய்ச்சிய ஈயம் ஊற்றப்பட்டது போல உணர்ந்தான். "அப்ப நீ"

குரல் கரகரக்க ஆழ்ந்த துக்கத்துடன் தாரா சொன்னாள். "நான் என் அண்ணா கூடப் போயிடறேன். விதி நமக்கு ஆரம்பத்தில் இருந்தே சாதகமாயில்லை ராஜா. ஆனால் அது ஒரு வருஷம் கருணை காட்டியிருக்குன்னு நினைக்கிறேன். இல்லைன்னா மாதுரிக்கு இந்த மடத்தனமான யோசனை வந்து, நாமளும் அதை ஏத்துகிட்டு இங்க வந்திருக்க மாட்டோம். ஒரு வருஷம் சேர்ந்து வாழ்ந்திருக்க மாட்டோம். அழகான கனவு மாதிரி இந்த ஒரு வருஷம் இருந்தது. ஆனால் எத்தனை அழகாய் இருந்தாலும் கனவு கலைஞ்சு தானே ஆகணும்."

ராஜராஜன் தாங்க முடியாத வேதனையுடன் சொன்னான், "நம்மால் பிரிஞ்சிருக்க முடியும்னு நினைக்கிறாயா தாரா?"

"உங்களால் முடியாததுன்னு எதுவும் இருக்கிறதாய் நான் நம்பலை. எனக்குக் கொஞ்சம் கஷ்டம் தான். ஆனால் தாக்குப் பிடிக்க இந்த ஒரு வருஷத்து நினைவுகள் இருக்கு. இதை வச்சுட்டே சமாளிச்சுடுவேன்னு நினைக்கிறேன்", சொல்லும்போதே அவள் நெஞ்சடைத்தது.

உடைந்த குரலில் ராஜராஜன் சொன்னான். "உன்னைப் பிரிஞ்சு என்னால் இருக்க முடியாது தாரா"

"உங்க குழந்தை எங்கேயோ கஷ்டப்படறதை மட்டும் நம்மால் தாங்க முடியும்னு நினைக்கிறீங்களா ராஜா?"

தாரா தன் நிலையில் இருந்து கடைசி வரை மாறவில்லை. அது மட்டுமல்ல எந்தக் காரணம் கொண்டும் தன்னை மீண்டும் சந்திக்க வரக்கூடாது என்ற வாக்குறுதியையும் அவள் ராஜராஜனிடமிருந்து வாங்கிக் கொண்டாள். தாங்கள் எடுத்த முடிவு கேலிக்கூத்தாகாமலிருக்க அது தேவை என்று அவள் நம்பினாள்.

இருவரும் தாங்க முடியாத துக்கத்துடன் பிரிந்தனர்.

## (68)

"We have to dare to be ourselves, however frightening or strange that self may prove to be." -- May Sarton

ஈஸ்வரன் தங்கையின் முடிவை மாற்ற தன்னால் ஆன வரை முயன்றார். ஆனால் தாரா தன் முடிவில் உறுதியாக இருந்தாள். தன் கணவனின் குழந்தை தங்கள் முடிவால் பாதிக்கப்படுவதை தன்னால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதை அவள் தெளிவாகச் சொன்னாள். ராஜராஜனிடம் வாக்குறுதி வாங்கியது போலவே அவரிடமும் எந்தக் காரணம் கொண்டும் அவர் மாதுரிக்கோ, அருணுக்கோ கெடுதல் செய்யக் கூடாது என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டாள். தன் தமையனின் சிந்தனைப் போக்கு அவளுக்கு அத்துப்படி. யார் தடங்கலாக இருக்கிறார்களோ அவர்களை ஒழித்துக் கட்ட அவர் என்றுமே தயங்கியதில்லை. சத்தியத்தால் அவர் கைகளையும் அவள் கட்டிப் போட்டாள். தங்கைக்கு எதையும் மறுத்து அறியாத அந்த அண்ணன் வேறு

வழியில்லாமல் கட்டுப்பட்டார். பிறகு அவளும் கர்ப்பமாக இருக்கிறாள் என்று அறிய நேர்ந்த போது மட்டும் அவளிடம் கேட்டார். "இப்ப உன் குழந்தை மட்டும் கஷ்டப்பட்டுடாதா?"

"அண்ணா அவரில்லாவிட்டால் அருணுக்கு சுரேந்தர் தகப்பன் ஸ்தானத்தில் நிற்பான். அவனை மாதிரி ஆளுக கிட்ட அந்தக் குழந்தை சந்தோஷமாய் உபயோகமாய் வளர முடியாது. ஆனால் என் குழந்தையை அப்பா ஸ்தானத்தில் நீங்க தான் வளர்த்தப் போறீங்க. என்னை வளர்த்தின மாதிரி நீங்க அதையும் அன்பாய் வளர்த்துவீங்க. அந்த விஷயத்தில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை."

பிரிவு என்பது தாராவுக்கு சுலபமாக இருக்கவில்லை. உயிரோடு உயிராக அவளுள் பதிந்து விட்ட அவனைப் பிரிந்திருப்பது ஒவ்வொரு நொடியிலும் ரணமாய் இருந்தது. நிகழ்கால நிஜங்களின் ரணத்திலிருந்து தப்பிக்க அந்த ஒரு வருடம் அவனுடன் வாழ்ந்த நாட்களின் நினைவுகளில் தஞ்சம் புக ஆரம்பித்தாள். நாட்கள் செல்லச் செல்ல நிகழ்காலத்திலிருந்து ஒரேயடியாக விலகி விட்டாள். டாக்டர்களிடம் ஈஸ்வரன் கேட்ட போது குழந்தை பிறந்தால் அவள் குணமடைய வாய்ப்பிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆனால் குழந்தை பிறந்தும் சில மிகக் குறைந்த நேரங்கள் தவிர அவள் நிகழ்காலத்திற்கு வரவில்லை. அப்படியொரு ஆரம்ப அபூர்வ நேரத்தில் தான் தன் குழந்தைக்கு தாமிரா என்று தாமிரபரணியின் நினைவாக பெயர் வைத்தாள்.

ராஜராஜனும் தாராவைப் பிரிந்த பின் இயந்திரமானான். இலக்கியமும், விஞ்ஞானமும், சிரிப்பும், உயிர்ப்பும் அவனிடமிருந்து ஒரேயடியாக விடைபெற்றுக் கொண்டன. வாழ்க்கை மனிதனுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றும் வாழ்நாளில் உபயோகமாய் சாதிக்க வேண்டும் என்றும் எப்போதும் நினைத்திருந்தவன் முழுமையாக வியாபாரத்தில் எந்திரத்தனமாக ஈடுபட்டான். வியாபாரம் பெருகிய போது நிறைய பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடிந்தது. நிறைய குடும்பங்கள் அவனால் கடைத்தேறின. அவனுடைய வாழ்க்கை அந்த விதத்தில் பயனுள்ளதாக இருந்தது. ஆனால் அவனுடைய அந்தரங்க வாழ்க்கையின் வெறுமை மட்டும் என்றுமே பிறகு மாறவில்லை. ரணமாகி ரணமாகி கடைசியில் மனம் மரத்துப் போனது. தன்னைச் சுற்றி அவன் யாரும் புக முடியாத அரணை அமைத்துக் கொண்டான். அதனுள் யாரும் புக முடியவில்லை.

நாட்கள் போகப் போக எல்லாம் சரியாகி விடும் என்று நினைத்த செல்வரங்கமும், விசாலமும் ஏமாந்து போனார்கள். அவர்கள் இருவரும் பழைய ராஜராஜனைப் பார்க்காமலேயே சீக்கிரமாகவே இறந்து போனார்கள். தந்தை கணவனை அழைத்து வந்தவுடன் படித்துப் படித்து சொல்லியபடி அடக்கமாக, அவன் விருப்பப்படி வாழ முற்பட்ட மாதுரி நாளடைவில் தன் எந்த மாறுதலும் பழைய ராஜராஜனைக் கொண்டு வரப் போவதில்லை என்று புரிந்து கொண்டாள். தன் தவறை அவள் உணர்ந்திருந்தாள். ஆனால் அவன் தன் குழந்தையிடமாவது பாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டது நிராசையாகவே போய் விட்டது. சேதுபதி என்ற உயிர் நண்பனும், நரசிம்மராஜுலு, ரங்காச்சாரி என்ற மிக நெருங்கிய ஆசிரியர்களும் கூட அவன் எழுப்பியிருந்த அரணுக்குள் புக முடியவில்லை. நேரில் பார்த்த போதும் அடையாளம் தெரியாத அந்நியர்கள் போலவே அவன் நடந்து கொண்டான்.

சேதுபதி கடைசியில் உடைந்த குரலில் சொன்னார் "....எனக்கு ஒரு ஆசை ஆரம்பத்தில் இருந்தே இருந்தது. நான் எழுதற முதல் நாவலே பெரிய அளவில் பிரபலமாய் விடணும்கிறது தான் அந்த ஆசை. எத்தனையோ கதைகள் ஆரம்பத்தில் எழுதி இருக்கேன். ஆனாலும் அது மனசுக்கு திருப்தி தரலை. பிரசுரிக்க அனுப்பவும் இல்லை. பிறகு இவங்க கதை எழுதலாமேன்னு தோணி, எழுதினேன். பிரசுரமாகி பிறகு பிரபலமும் ஆச்சு. எனக்குப் பெரிய பாராட்டு விழா நடத்துனாங்க. உங்கப்பாவுக்கும் அழைப்பு அனுப்பி அவனும் அதிசயமாய் வந்தான். முதல் வரிசையில் உட்கார்ந்திருந்தான். எல்லாரும் பாராட்டிப் பேசினப்ப சம்பந்தமேயில்லாத அந்நியன் மாதிரி என்னையே பார்த்துட்டு உட்கார்ந்திருந்தான்.

எனக்கென்னவோ அந்த நேரத்தில் அந்த பாராட்டுகளையெல்லாம் விட என் மகத்தான தோழனோட வெறுமை தான் மனசில தங்குச்சு. அப்ப தான் தாராவை அட்மிட் செஞ்சிருந்த ஆஸ்பத்திரியில் இருந்து அவளை மருத்துவத்தால் குணப்படுத்த முடியாதுன்னு கடைசியாய் டாக்டர்கள் கைவிரிச்சுட்டாங்கன்னு போன் வந்தது. நான் ஒரு டாக்டர் கிட்ட என்ன நிலவரம்கிறதை கண்டிப்பாய் போன் செஞ்சு சொல்லணும்னு சொல்லி வச்சிருந்தேன். அவர் போனும் வந்த பிறகு நான் வாழ்க்கை வெறுத்துப் போயிட்டேன். என் வாழ்க்கையில் நான் ரொம்பவும் நேசிச்ச ரெண்டு பேர், எல்லாரும் பாராட்டின என்னோட கதாபாத்திரங்கள், இப்படி ஆயிட்டாங்களேன்னு நொந்துட்டேன். பேனாவைத் தூக்கி எறிஞ்சுட்டேன். இனி எந்தக் காரணம் வச்சும் அதைத் தொடக் கூடாதுன்னு தீர்மானிச்சேன்......"

ரங்காச்சாரி சொன்னார். "இவன் கதை மாதிரியே அவங்க செத்துப் போயிருந்தா அது மேலாக இருந்திருக்கும். அவங்க மாறின விதம் மரணத்தை விட மோசமானது. ராஜராஜனைப் பார்த்தப்ப எல்லாம் துடிச்சுப் போயிட்டேன். அவன் எப்படியெல்லாம் ஆவான்னு கனவு கண்டிருந்தேன். ஆனா... ஆனா....". அவரால் மேலே பேச முடியவில்லை.

அருண் இதயத்தை இமயம் அழுத்தியது. மனம் உடைந்து போய் உட்கார்ந்திருந்தான். அவனுடைய ஜனனம் இருவர் வாழ்க்கையை திசை திருப்பி இருக்கிறது. அந்த இருவர் வாழ்க்கையையும் நரகமாக்கி இருக்கிறது. நினைக்க நினைக்க இதயத்தில் இரத்தம் கசிந்தது.

தாமிராவும் பேச்சிழந்து அமர்ந்திருந்தாள். அவள் தந்தை உயிரோடிருக்கிறார் என்பதும், அவர் தான் அவள் ஆராதித்த அந்த விஞ்ஞானி என்பதும் மனதில் பதிய சிறிது நேரம் ஆகியது. மனதில் சந்தோஷம் பிரவாகம் எடுத்தது. திடீரென்று நினைவுக்கு வந்தவளாக பர்ஸில் வைத்திருந்த புகைப்படத்தை எடுத்துக் காண்பித்தாள். "அப்படின்னா இது யாரு?"

சேதுபதியும், ரங்காச்சாரியும் அந்தப் புகைப்படத்தைப் பார்த்து தெரியாதென தலையசைத்தார்கள். ரங்காச்சாரி சிறிது யோசித்து விட்டு சொன்னார். "அப்பா பத்தி நீ கேட்டா ஒரு ஆளைக் காண்பிக்கணுமேன்னு ஏதோ ஒரு போட்டோ கொடுத்துருப்பான் உன் மாமன்"

சிறு வயதில் இந்த ஆளின் பெரிய புகைப்படத்திற்கு மாலை இட்டு வைத்த போது அம்மா அதைத் தூக்கி எறிந்தது ஞாபகம் வந்தது. அப்பாவின் மற்றெந்த புகைப்படமும் இல்லாததன் காரணமும் தெளிவாகப் புரிய மாமா மேல் கோபம் வந்தது. 'என்னை எப்படி ஏமாற்றி இருக்கிறார் மனுஷன்'

தாமிரா தகப்பன் யாரென்று அறியாமல், தாய் சித்த சுவாதீனம் இல்லாமல் இருந்ததால் தாய்ப்பாசமும் கிடைக்காமல், வாழ்ந்ததற்கு ஒரு விதத்தில் தான் தான் காரணம் என்று அருண் நினைத்த போது அவன் மனத்தின் ரணம் மேலும் அதிகமாகியது. சிறிது நேரம் நால்வரும் மௌனமாக இருந்தனர். ஒவ்வொருவர் மனதிலும் ஒவ்வொரு விதமான எண்ண அலைகள். அருண் கடைசியில் தன்னை சுதாரித்துக் கொண்டு எழுந்தான். தாமிராவைப் பார்த்து போகலாமா என்று அவன் தலையசைப்பில் கேட்க அவளும் அவனுடன் கிளம்பினாள்.

மனதை அழுத்திய கனம் அருணின் பேசும் சக்தியையும் பாதித்தது போல் இருந்தது. தலையசைப்பிலேயே அவர்களிடமும் அவன் விடை பெற்றான்.

ஆக்ரோஷமாக உள்ளே வந்தவன் இப்போது கூனிக் குறுகிப் போவதைப் பார்த்த போது சேதுபதிக்கும் மனம் இளகியது.

"அவன் இனி என்ன செய்வான்னு நினைக்கிறீங்க?" என்று சேதுபதி ரங்காச்சாரியைக் கேட்டார்.

ரங்காச்சாரியால் எதையும் அனுமானிக்க முடியவில்லை.

## (69)

No one forgives with more grace and love than a child.
– Real Live Preacher

காரில் செல்லும் போதும் அருண் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. சிறிது நேரம் மௌனம் சாதித்த தாமிரா மெள்ள அவனிடம் சொன்னாள். "எனக்கு அப்பாவை ஒரு தடவை பார்க்கணும் போல இருக்கு"

ஏதோ பலத்த அடிபட்டது போல அவன் முகத்தில் ஒரு வலி தெரிந்தது. சுதாரித்துக் கொண்டு மெள்ள சொன்னான். "கொஞ்சம் பொறு. இப்ப வேண்டாம்"

அவன் அவளை வாங்க போங்க என்று மரியாதையுடன் அழைப்பதை நிறுத்தி பொறு என்று ஒருமையில் சொன்ன போது சந்தோஷமாக இருந்தது. அவன் அவளுடைய அண்ணன்..... தாமிரா ஒருவிதமான குழந்தைத்தனத்தோடு உரிமையோடு அவனை ஒட்டி உட்கார்ந்தாள். மெள்ள சொல்லிப் பார்த்தாள். "அண்ணா...."

காரை தெருவின் ஓரமாக நிறுத்தி விட்டு ஒரு தமையனின் உரிமையோடு அவள் தோளைப் பிடித்து தன் பக்கம் இழுத்து இறுக்கமாகப் பிடித்துக் கொண்டான். மடை திறந்த வெள்ளம் போலக் கிளம்ப கண்ணீர் தயாராக இருந்தது. கஷ்டப்பட்டு அதைத் தடுத்து நிறுத்தி குரல் கரகரக்க சொன்னான். "இந்த அண்ணா மட்டும் இல்லைன்னா நீ, உங்கம்மா, அப்பான்னு சந்தோஷமாய் இருந்திருப்பீங்க இல்லையா?"

அவளுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவனுடைய துக்கம் அவளைக் கஷ்டப்படுத்தியது. "நீ ஏன் உன்னைத் தப்பு சொல்கிறாய்? அவங்க எடுத்த முடிவுக்கு நீ என்ன செய்ய முடியும்?". அவள் அவனை சமாதானப்படுத்த முயன்றாள். அவளும் அவனை ஒருமையில் அழைத்த விதமும் சொன்ன வார்த்தைகளும் இத்தனை துக்கத்தின் மத்தியிலும் இதமாக இருந்தது. ஒன்றும் சொல்லாமல் மறுபடி காரைக் கிளப்பினான். போகும் போது சொன்னான். "நீ போய் உங்கம்மா கிட்ட இப்போதைக்கு எதுவும் தெரிஞ்ச மாதிரி பேசாதே. எப்பவும் மாதிரி இரு." அவள் சரியென்று தலையசைத்தாள். அதன் பிறகு தாமிராவின் வீடு சென்று சேரும் வரை அவர்கள் இருவரும் எதுவும் பேசவில்லை.

தாமிராவின் வீட்டில் காரையும் அவளையும் விட்டு விட்டு "பிறகு பார்க்கலாம். நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்" என்று கிளம்பினான்.

"எப்படி வீட்டுக்குப் போகப்போகிறாய்" என்று தாமிரா கேட்ட போது "நான் ஒரு கால் டேக்ஸியில் போகிறேன்" என்று சொல்லி அருண் கிளம்பினான்.

கால் டேக்ஸியில் வீடு நோக்கி பயணம் செய்த போது அவன் எண்ணங்கள் எல்லாம் அவன் தந்தையைச் சுற்றியே இருந்தன. எத்தனை காலமாக அவரை அவன் 'எந்திரம்' என்று கேலி செய்திருக்கிறான். நினைக்கையில் மனம் வலித்தது. அவர் நிலையில் அவன் இருந்திருந்தால் என்றோ பைத்தியமாகி இருப்பான் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. காவ்யாவை சில நாட்கள் நேரில் பார்க்காமல் இருந்த போதே அவனால் சுலபமாகத் தாங்க முடியவில்லை. இத்தனைக்கும் போனில் தினமும் பேசி இருக்கிறான். சில நாட்களில் மறுபடி சந்திக்கப் போகிறோம் என்று

உறுதியாக அவனுக்குத் தெரியும். அப்படி இருந்தும் அவனால் அவளைப் பார்க்காமல் இருக்க முடிந்ததில்லை. தாராவைப் பிரிந்து அவரால் எப்படி இத்தனை காலம் இருக்க முடிந்தது என்பதை எண்ணிய போது அவரது மன வலிமையை அவனால் மெச்சாமல் இருக்க முடியவில்லை.

அவனுடைய சுதந்திரத்தில் என்றுமே அவர் தலையிட்டதில்லை என்பதையும் நினைத்துப் பார்த்தான். அவன் பத்திரிக்கைத் துறைக்குப் போன போதும் சரி, காவ்யாவைத் தேர்ந்தெடுத்த போதும் சரி அவர் மறுப்பு சொன்னதில்லை. இன்னும் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவன் விருப்பப்படி வாழ அனுமதித்திருக்கிறார் என்பதையும் அவனால் மறுக்க முடியவில்லை. அதையெல்லாம் நீ எக்கேடு கெட்டால் எனக்கென்ன என்கிற மனப்பாங்கில் தான் அனுமதித்திருக்கிறார் என்று எண்ணியிருக்கிறான். அவரைக் கிண்டல் செய்த தருணங்கள் பல நினைவுக்கு வந்தன. மனமெல்லாம் குற்ற உணர்வில் கசந்தது. யாராவது தன்னை இரக்கமில்லாமல் தண்டித்தால் தேவலை என்று தோன்றியது.

அம்மாவின் முந்தைய வாழ்க்கை முறையும் அவள் முட்டாள்தனமான நடவடிக்கைகளும் தான் இத்தனைக்கும் காரணம் என்றாலும் அவளையும் அவனால் வெறுக்க முடியவில்லை. அவள் நல்ல மனைவியாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் நல்ல தாயாக இருந்திருக்கிறாள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆரம்பத்தில் அவன் சிறு வயதில் அவள் பழைய வாழ்க்கை முறைக்குத் திரும்பிய நாட்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தன. லேடீஸ் கிளப், சோஷியல் சர்வீஸ் என்ற பெயரில் ஊர் சுற்றிய போதும் அவன் "எனக்கு செத்துப் போகணும்" என்று அறிவித்தவுடன் மாறிய விதம் நினைவுக்கு வந்தது. கண்ணீருடன் "எனக்கு நீ முக்கியம்டா" என்று சொன்னதும் பின்பு எப்போதும் அவன் மனம் கோணாத தாயாக அவள் நடந்து கொண்டதும் நினைவுக்கு வந்தது.

வீட்டில் இறங்கியவுடன் தந்தையின் கார் வெளியே நிறுத்தப்பட்டிருப்பதைப் பார்த்தான். அவர் வீட்டில் தான் இருக்கிறார். உள்ளே போனவன் நேரடியாக மாடியேறி அவர் அறைக்குப் போனான்.

ஏதோ எழுதிக் கொண்டிருந்த ராஜராஜன் தன் மகனின் அபூர்வமான வரவைக் கண்டு ஒரு கணம் ஆச்சரியப்பட்டது போல் தோன்றியது. மறு கணம் அவர் இயல்பாக என்ன என்பது போலப் பார்த்தாலும் அவன் தோற்றத்தில் தெரிந்த மாற்றத்தை அவர் உணராமல் இல்லை. துக்கம் என்பதன் விளக்கம் அவன் முகமெல்லாம் எழுதப்பட்டிருந்தது. கண்கள் கலங்க அவரிடம் கேட்டான். " அப்பா நீங்க என்னை நிஜமாகவே வெறுக்கிறீங்களாப்பா?"

ராஜராஜன் இப்படியொரு கேள்வியை அவனிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை என்பது அவர் முகபாவனையில் இருந்து தெரிந்தது.

அவன் அவரருகில் வந்து உடைந்த குரலில் சொன்னான். "நான் பிறக்காமலேயே இருந்திருந்தால் நல்லாயிருந்திருக்கும்னு நீங்க பல தடவை நினைச்சிருப்பீங்க. இல்லையாப்பா?"

ராஜராஜன் கையில் இருந்த பேனா நழுவிக் கீழே விழுந்தது. அமர்ந்திருந்த சுழல் நாற்காலியைத் திருப்பி அவனைத் திகைப்புடன் பார்த்தார். அருண் அத்தனை நேரம் கட்டுப்படுத்தி வைத்திருந்த எல்லையில்லாத துக்கம் அணை திறந்த வெள்ளம் போல வெளி வந்தது. மண்டி இட்டு அவர் கால்களைப் பிடித்துக் கொண்டு அவன் குலுங்கிக் குலுங்கி அழுதான். ராஜராஜன் பேச்சிழந்து சிறிது நேரம் சிலையாக உட்கார்ந்திருந்தார். பிறகு அவர் கைகள் அவன் தலையைக் கோதின. அவன் அழுகை நிற்க நிறைய நேரம் ஆனது. ஆனால் அவன் கேள்வி நிற்கவில்லை. "நான் கேட்டதுக்கு நீங்க எதுவுமே சொல்லலையே. என் கிட்ட பேசக் கூடப் பிடிக்கலையாப்பா?"

அவர் குரல் கரகரத்தது. "நான் உன்னை எப்பவுமே வெறுத்ததில்லை அருண். உன்னை மாதிரி ஒரு மகன் இருக்கிறது எனக்கு எப்பவுமே பெருமையாய் தான் இருந்திருக்கு"

அந்தப் பதில் அவனை மேலும் அழ வைத்தது. கடைசியில் தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்துக் கேட்டான். "உங்களுக்கு ஒரு மகள் இருக்கிறது தெரியுமாப்பா?"

அவர் முகத்தில் அவரது கட்டுப்பாட்டையும் மீறி வேதனை தெரிந்தது. "அருண், ப்ளீஸ், வேண்டாம் இனி என்னை எதுவும் கேட்காதே"

அவர் காலடியில் அவரையே பார்த்தபடி அருண் சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தான். பின்பு கண்களைத் துடைத்துக் கொண்டு மெள்ள எழுந்தான். "குட் நைட்ப்பா"

அவன் மாடிப்படி இறங்கி கீழே வந்த போது மாதுரி அவனையே பார்த்தபடி சோபாவில் அமர்ந்திருந்தாள். மகன் உள்ளே நுழைந்த போதே அவன் தோற்றத்தைப் பார்த்து அவள் திடுக்கிட்டுப் போயிருந்தாள். அவன் நேராக தந்தையின் அறைக்குச் சென்ற போது அவளுக்கு உண்மை விளங்கியது. அருண் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு விட்டான். வாழ்க்கையில் அவள் பயந்து கொண்டிருந்த அந்தக் கணம் வந்து விட்டது. அவள் எந்தத் தண்டனைக்கும் தயாராக இருந்தாள், மகனின் வெறுப்பைத் தவிர.

குற்ற உணர்வுடன் அமர்ந்திருந்த தாயிடம் அவன் சொன்னான். "எனக்குப் பசிக்குதும்மா. சாப்பாடு போடும்மா"

அவன் ஒன்றுமே நடக்காதது போல் நடந்து கொண்டது மாதுரியை ஆச்சரியப்படுத்தியது. எழுந்து அவனுக்கு உணவு பரிமாறினாள். அவன் சாப்பிட்டு முடியும் வரை அவனையே பார்த்துக் கொண்டு அவனருகில் அமர்ந்திருந்தாள். கடைசியில் பொறுக்க முடியாமல் மகனைக் கேட்டாள். "அம்மா மேல் வெறுப்பாய் இருக்காடா?"

அவன் தந்தையிடம் கேட்ட அதே கேள்வியை அவன் தாய் அவனிடம் கேட்கிறாள். இல்லையென்று தலையசைத்து விட்டு அவளிடம் சொன்னான். "அம்மா நீ ஒரு காலத்தில் எப்படியிருந்தாய்ங்கிறது முக்கியம் இல்லை. இப்ப எப்படியிருக்கிறாய் என்பது தான் முக்கியம்".

அவள் அவன் தோளில் சாய்ந்து கொண்டு மௌனமாக அழுதாள். மனதில் இருந்த பாரமெல்லாம அந்த அழுகையில் கரைந்து அவள் மனம் லேசாகியது.

## (70)

Each time we love and accept our inner realities, we are improving the global mess. We are advancing humanity. – Dr. Doris Jeanette

தாமிரா உள்ளே நுழைந்த போது ஹாலில் ஈஸ்வரனும் தாராவும் அமர்ந்திருந்தார்கள். மகளைப் பார்த்தவுடன் தாரா கேட்டாள். "ஏன் தாமிரா போய் ஒரு போன் கூட செய்யலை? உன் செல்லிற்கு போன் செய்தால் ஸ்விட்ச்டு ஆஃப்ன்னு மெஸ்ஸேஜ் வருது. எனக்கு என்னவோ மனசே சரியில்லை"

தாமிரா பதில் சொல்லாமல் தாயை முதல் முறை பார்ப்பது போல் பார்த்தாள். சின்னச் சின்ன விஷயங்களில் கூட விட்டுக் கொடுக்கத் தயங்கும் உலகில், அடுத்தவர் மனம் பற்றி சற்றும் கவலைப்படாத பெரும்பாலோனோர் மத்தியில் தாரா செய்த தியாகம் இன்னமும் அவளைப் பிரமிக்க வைத்தது. எத்தனை பெரிய மனது இந்த அம்மாவுக்கு?.....

"என்ன தாமிரா அப்படி பார்க்கிறாய்?"

தாமிரா புன்னகையோடு சொன்னாள். "எனக்கென்னவோ உன்னைப் பார்த்துகிட்டே இருக்கணும்னு தோணுதும்மா"

தாராவின் முகத்தில் புன்னகை அரும்பியது. "நல்லா மழுப்பத் தெரியுது. போன் ஏன் செய்யலைன்னா அதுக்கு பதில் இல்லை"

"சாரிம்மா. கான்ஃபரன்ஸ் ஹாலில் செல்லை ஸ்விட்ச் ஆஃப் செய்தவள் திரும்ப ஆன் செய்ய மறந்துட்டேன்......" என்றவள் வேலையாளைக் கூப்பிட்டு கார் டிக்கியில் இருந்த செவ்விளநீர்களை எடுத்து வரச் சொன்னாள்.

"இது எங்கேயிருந்து இவ்வளவு செவ்விளநீ" தாரா ஆச்சரியமாய்க் கேட்டாள். "எனக்கு செவ்விளநீன்னா ரொம்பப் பிடிக்கும்"

வழியில் பார்த்து வாங்கி வந்ததாக தாமிரா சொன்னாள். ஆனால் தாரா மனத்திரையில் ஆச்சி முகம் ஏனோ வந்து நிலைத்தது. ஆச்சி எப்போதும் தானே வெட்டி குடிக்கக் கொடுப்பாள்... அந்த அன்பும் பாசமும் நினைவுக்கு வந்தது....

"என்னம்மா யோசனை?"– தாமிரா கேட்க தாரா ஒன்றுமில்லை என்றபடி உள்ளே போனாள்.

ஈஸ்வரன் மருமகள் வந்த கணத்தில் இருந்து அவள் மேல் வைத்த கண்ணை எடுக்கவில்லை. தாய் உள்ளே போன பின் தாமிரா மாமனைப் பார்த்த பார்வையில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. அவருக்கு நினைவு தெரிந்து அவர் தங்கை ஒரு நாள் கூட யாரிடமும் கோபப்பட்டதில்லை. புன்னகையுடன் எதற்குக் கோபம் என்பது போல் மருமகளைப் பார்த்தார்.

அவள் பர்ஸில் வைத்திருந்த புகைப்படத்தை அவர் மடியில் வீசினாள். "யார் போட்டோ இது?"

அவர் உண்மையைச் சொன்னார். "எப்பவோ செத்துப் போன எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் போட்டோ இது"

"யாரோ ஊர் பேர் தெரியாத ஆளோட போட்டோவை இத்தனை நாள் எங்கப்பான்னு நினைக்க வச்சுட்டீங்களே. எனக்கு வர்ற கோபத்தில் அப்படியே உங்க கழுத்தை நெரிச்சு கொன்னுடலாம்னு தோணுது."

"கழுத்தை நெரிக்க வேண்டிய அவசியமே இல்லை. நானே கொஞ்சம் கொஞ்சமாய் செத்துகிட்டுத் தான் இருக்கிறேன்" அவர் அமைதியாகச் சொன்னார்.

தாமிராவின் கோபம் காணாமல் போனது. "என்ன சொல்றீங்க?" அவர் அருகில் உட்கார்ந்து கொண்டு மெள்ள கேட்டாள்.

"எனக்கு கேன்சர். கடைசி ஸ்டேஜ்.........." அவர் அமைதியாக சொன்னார்.

அவள் கண்களில் கண்ணீர் உடனடியாக நிரம்பியது. "ஜோக்கடிக்கிறீங்களா?" குரல் தழுதழுத்தது. மனமோ அவர் ஆமாம் என்று சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டது. அவளது துக்கமும் கேள்வியும் ஈஸ்வரன் மனதை நெகிழ்த்தியது. அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு மௌனமாக இருந்தார். பெரிய பெரிய டாக்டர்கள் பெயர்களையும், பெரிய பெரிய

மருத்துவமனைகள் பெயர்களையும் சொல்லி அங்கெல்லாம் போகலாம் என்று அவள் சொன்ன போது பயனில்லை ஒன்று ஒற்றை வரியில் சொன்னார்.

"அம்மாவுக்குத் தெரியுமா?"

அவர் தலையசைத்தார். சாம்பசிவம் தாராவிடம் முன்பே தெரிவித்த தகவலை சொன்னார். தாமிராவிற்கு உடனடியாக சேதுபதிக்குத் தெரியாத அந்த உண்மை விளங்கியது. அம்மா தன் கற்பனை உலகில் இருந்து வெளியே வந்தது அண்ணனின் கடைசி நாட்களில் அவருடன் கழிக்கத்தான் இருக்க வேண்டும். கண்களில் தாரை தாரையாக கண்ணீர் வடிய இது ஏதோ அவராக வரவழைத்துக் கொண்டது போல கோபப்பட்டாள். "என்ன மாமா இது"

எத்தனை பெரிய விஞ்ஞானியாக இருந்தாலும் இவள் இன்னும் சில விஷயங்களில் சின்னப் பெண் தான் என்று எண்ணிப் புன்னகை செய்தவராகக் கேட்டார். "அருண் என்ன சொல்றான்?"

"அண்ணாவா....?" என்று கேட்ட தாமிராவிற்கு மாமாவின் நோய் பற்றிய எண்ணங்களில் இருந்து மீண்டு வர முடியவில்லை. அவர் கேள்வி இன்னும் அவள் மனதில் பதிந்தது போல் தெரியவில்லை. அவள் மனநிலையைப் புரிந்து கொண்ட ஈஸ்வரன் இரண்டு விஷயங்களுக்காக சந்தோஷப்பட்டார் – அவர் மேல் அவளுக்கு இருந்த பாசம்.... அதற்குள் அருண் 'அண்ணன்' ஆனது .....

தாமிராவின் கண்ணீர் திடீர் என்று அதிகரிக்க ஈஸ்வரன் பதற்றத்துடன் கேட்டார். "என்ன தாமிரா?"

அழுகையின் ஊடே அவள் சொன்னாள். "எனக்கு அப்பா இருக்கார், அண்ணன் கிடைச்சுட்டான்னு சந்தோஷப்பட்டா, இப்ப நீங்க இப்படி சொல்றீங்க. நான் அதிர்ஷ்டம் இல்லாதவ போல் இருக்கு மாமா. ஒண்ணு கிடைச்சா இன்னொன்னு பறி போகணும்னு என் விதியில் இருக்கு..."

மகளின் அழுகை சத்தம் கேட்டு தாரா வெளியே வர ஈஸ்வரன் மருமகளைப் பார்வையால் எச்சரிக்கை செய்தார்.

"என்ன ஆச்சு இவளுக்கு?" தாரா கேட்டாள்.

"எனக்கு கேன்சர்னேன். அதான்...."

தாரா உடனடியாக மகளை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போனாள். "உன் மாமாக்கு நம்ம ரெண்டு பேர் துக்கம் சகிக்க முடியாதும்மா. இந்த மாதிரி நேரத்தில் அவர் முன்னால் அழுது அவரை சங்கடப்படுத்தாதே."

அதே நேரத்தில் மாதுரி மகனிடம் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருந்தாள். "........ உனக்கு உண்மை தெரிய வர்றப்ப நீ அதை எப்படி எடுத்துக்குவாய்னு தெரியாததால நான் எதுக்கும் இருக்கட்டும்னு இதை வாங்கி வைத்தேன்"

அவள் காண்பித்த அந்த தூக்க மாத்திரை புட்டி அவனை அதிர்ச்சி அடைய வைத்தது. "என்னம்மா நீ....?" அவன் கோபத்துடன் கேட்க அவள் புன்னகையுடன் சொன்னாள். "என்னை நீயும் வெறுத்துட்டா என்னால் தாங்க முடியாதுடா. அதான் ஒரு கடைசி முடிவாய் அதை வாங்கி வைத்தேன். அப்பவும் உள் மனசில் ஒரு தயக்கம். உன் கல்யாணத்தையும், அப்புறமாய் உன் குழந்தைகளையும் பார்க்காமல் போகவும் எனக்கு மனசில்லை. நல்ல வேளை அதை பயன்படுத்தற சந்தர்ப்பத்தை நீ எனக்கு தரலை.."

அந்த மாத்திரை புட்டியை அவள் கையில் இருந்து வாங்கி டாய்லெட்டில் மாத்திரைகளைக் கொட்டி தண்ணீர் விட்டு வரும் வரை அவன் மனதின் படபடப்பு குறையவில்லை. "முதல்லயே எனக்கு என் மேல் வெறுப்பாய் இருக்கு. நீயும் இப்படி முட்டாள் தனமாய் ஏதாவது செஞ்சிருந்தா எனக்கு பைத்தியமே பிடிச்சிருக்கும்....."

"உனக்கு ஏண்டா உன் மேல் வெறுப்பு?"

"நான் பிறக்காமல் இருந்திருந்தா அப்பா, அந்த தாரா, தாமிரா எல்லாரும் சந்தோஷமாய் இருந்திருப்பாங்க இல்லையாம்மா......" அவன் துக்கம் மீண்டும் கட்டுக்கடங்காமல் கிளம்ப அவன் அவள் மடியில் தலை வைத்து குழந்தை போல் குமுறிக் குமுறி அழுதான்.

மகனின் துக்கம் மாதுரியின் இதயத்தை வெட்டிப் போட்டது. இப்போதும் கூட அவன் அவளைக் குற்றப்படுத்தவில்லை! தான் பிறந்ததே தவறென்று தன்னையே தான் குற்றம் சாட்டிக் கொள்கின்றான் என்று நினைக்க நினைக்க மனம் கனத்தது. அவள் மகனை சமாதானப்படுத்தத் தெரியாமல் சிலையாக சிறிது நேரம் அமர்ந்திருந்தாள். பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்து மகனிடம் சொன்னாள். "அருண்... சில வருஷங்களுக்கு முன்னால் நீ தனியாய் ஒரு குடித்தனம் போகலாம்னு சொன்னாய். ஞாபகம் இருக்கா?"

அவன் தலையை நிமிர்த்தி கண்களை துடைத்துக் கொண்டு கேட்டான். "அதுக்கு என்ன இப்போ?"

"அவங்களை ஒண்ணு சேர்த்துட்டு நாம தனியாய் போயிடலாமாடா?"

ஒரு கணம் அவளை பிரமிப்புடன் பார்த்து விட்டு அவளைக் கட்டியணைத்துக் கொண்டு அவன் நிறைய நேரம் மீண்டும் அழுதான். ஆனால் அவன் மனதில் இருந்து இமயம் இறங்க ஆரம்பித்தது. அவளும் அவனுடன் சேர்ந்து அழுதாள். அழுது ஓய்ந்த பிறகு மனம் விட்டு தாயும் மகனும் நிறைய நேரம் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

## (71)

Any transition serious enough to alter your definition of self will require not just small adjustments in your way of living and thinking but a full–on metamorphosis. – Martha Beck

காரில் இருந்து இறங்கிய அருணையும், மாதுரியையும் ஜன்னல் வழியே பார்த்த ஈஸ்வரனின் இதயத்துடிப்பு ஒரு கணம் துடிக்க மறந்தது. அருண் வரவு இன்றில்லா விட்டாலும் பின்பாவது அவர் எதிர்பார்த்தது தான். ஆனால் மாதுரியை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

அண்ணனின் முகமாற்றத்தைப் பக்கவாட்டில் இருந்து பார்த்த தாரா தானும் அருகே வந்து ஜன்னல் வழியாகப் பார்த்தாள். அவள் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. "என்னண்ணா இது?"

தங்கையிடம் ஈஸ்வரன் சொன்னார். "அருணுக்கும் உன் மகளுக்கும் எல்லாம் தெரிஞ்சுடுச்சு தாரா."

தாராவின் முகம் வெளுத்தது. அவளது பதட்ட நிலையைக் கண்ட ஈஸ்வரன் அமைதியாகச் சொன்னார். "தாரா, எதையும் எத்தனை நாளைக்கு மூடி வைக்க முடியும்? கவலைப்படாதே உன் மகள் உண்மையை சந்தோஷமாய் தான் எடுத்திருக்கா."

அவள் எதுவும் சொல்வதற்கு முன் அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அருண் தயக்கத்துடன் இரண்டு அடி பின்னால் இருக்க மாதுரி முன்னால் வந்தாள். ஈஸ்வரன் சற்று பின் தங்கினார். இது அரசியல் அல்ல, அவர் தீர்மானிக்க வேண்டிய விஷயமும் அல்ல. இங்கு அவர் வெறும் பார்வையாளர் மட்டுமே.

மாதுரியும் ஈஸ்வரன் இருந்த பக்கம் தன் பார்வையைக் கூடத் திருப்பவில்லை. தாராவை புன்னகையுடன் விசாரித்தாள். "என்ன தாரா எப்படியிருக்கிறாய்?"

தாரா அருணின் வரவால் சற்று நிலை கொள்ளாமல் தவித்தாள். சமாளித்துக் கொண்டு பலவந்தமாக ஒரு புன்முறுவலைத் தருவித்து சொன்னாள். "நல்லாயிருக்கேன்"

"இது என் மகன் அருண்" மாதுரி அறிமுகப்படுத்தினாள்.

அருண் வந்த கணம் முதல் தாராவின் மீது வைத்த பார்வையை எடுக்கவில்லை. அவன் மனதில் எத்தனையோ எண்ண அலைகள்.... அவன் கண்களில் நீர் கோர்த்து நின்றது. எத்தனை ஜென்மங்கள் எடுத்து சேவை செய்தாலும் இவள் கடனைத் தீர்க்க முடியும் என்கிற நம்பிக்கை அவனுக்கில்லை. மௌனமாகக் கை கூப்பினான்.

அன்று தூரத்தில் இருந்து பார்த்தவனை இன்று அருகில் பார்க்கிறாள். அவன் கண்களில் தெரிந்த துக்கம் அவளை சங்கடப்படுத்தியது. அவன் அவரை நினைவுபடுத்தினான். அவரது சாயல் அவனிடம் நிறையவே இருந்ததை அருகில் இருந்து பார்ப்பதால் அறிய முடிந்தது. அவள் மனதிலும் எத்தனையோ நினைவுப் பிரவாகங்கள்.... அவனைப் பார்த்து புன்னகைக்க முயன்றாள். புன்னகைக்கு முன்பாக கண்ணீர் திரை போட்டது.

மாதுரிக்கு அவள் மனநிலையை உணர முடிந்தது. அருணைப் பார்த்தவர்கள் ராஜராஜனை நினைக்காமல் இருக்க முடியாது. அவசரமாக அவள் சொன்னாள். "நான் உன் கிட்ட கொஞ்சம் தனியாய் பேசணும் தாரா".

அருண் உடனடியாக அவளுக்கு உதவினான். "சரி நீங்க பேசிகிட்டிருங்க. நான் தாமிரா கிட்ட பேசிகிட்டிருக்கிறேன். தாமிரா?..." அவன் ஈஸ்வரனைப் பார்க்க அவர் தாமிரா அறையைக் காண்பிக்க அவனைக் கூட்டிக் கொண்டு கிளம்பினார். அவளறையை நோக்கிப் போகும் போது கூட அவர் வாயைத் திறக்கவில்லை. பத்தடி தள்ளி நின்று அவள் அறையைக் காட்டினார். அவன் "தேங்க்ஸ்" என்று சொல்லி அவரைப் பார்த்துப் புன்னகைத்தான். அவர் திரும்ப புன்னகைக்கவில்லை. அமைதியாக அவனையே பார்த்துக் கொண்டு நின்றார். ஆனாலும் மறுபடி அவரைப் பார்த்து புன்னகைத்து விட்டு அவள் அறைக்குப் போனான். அவர் அவனை வெறுத்தால் கூட அவனால் அதைப் புரிந்து கொள்ள முடியும். அவன் தாயும் அவனுமாக சேர்ந்து அவர் தங்கை வாழ்வில் விளையாடியதை அவரால் மன்னிப்பது சுலபமில்லை என்பதை அவன் உணர்ந்திருந்தான்.

அருணைப் பார்த்தவுடன் தாமிரா திகைத்துப் போனாள். அவள் கைகளில் இருந்த "நீ நான் தாமிரபரணி" நழுவிக் கீழே விழுந்தது. அந்த நாவலைப் பார்த்தபடியே ஒரு கணம் அருண் நின்றான். தாமிரா மெள்ளச் சொன்னாள். "எனக்கு ..... அப்பாவைப் பத்தி தெரிஞ்சுக்கணும்னு தோணிச்சு. முதல்ல கதாபாத்திரமாய் தான் படிச்சிருக்கேன்.....அதான் இன்னொரு தடவை படிக்கலாம்னு ....."

மனம் கனக்க அவளையே சிறிது நேரம் பார்த்து விட்டு சொன்னான். "சரி கிளம்பு"

"எங்கே?"

"நம்ம வீட்டுக்கு"

அவன் வார்த்தைகளை நம்ப முடியாமல் தாமிரா அவனை மலைப்புடன் பார்த்தாள். "உங்க அம்மா?"

"உங்கம்மா கூட பேசிகிட்டு இருக்காங்க. பேசி முடிய கொஞ்ச நேரம் ஆகும். அது வரைக்கும் பேக் பண்ணு"

அவன் வார்த்தைகள் மனதில் பதிய அவளுக்கு சிறிது நேரம் ஆகியது. "அண்ணா....." ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள். அவள் தலைமுடியை வருடியபடி அவள் அறையை அருண் நோட்டமிட்டான். அங்கங்கு புத்தகங்களும், துணிமணிகளும் இறைந்து கிடந்தன. "இதென்ன ரூமை இந்த மாதிரி வச்சிருக்கே"

அவள் அவனிடமிருந்து விலகி அந்த அறையைத் தானும் ஒரு முறை பார்வையிட்டாள். "ஏன் நல்லாத் தானே இருக்கு"

அவன் வாய் விட்டு சிரித்தான். "நல்லா இருக்கா. ஒரு பொண்ணு இப்படி ரூமை வச்சிருக்கறதே தப்பு. அதை நல்லா இருக்குன்னு சொல்றது மகா தப்பு"

"ஆண்கள் எப்படி வேணும்னா வச்சிக்கலாம்கிறாய். ஒ ரொம்பத்தான் அண்ணன்கிற அதிகாரம் காட்டறாய்...."

அவன் புன்னகை செய்தபடி சுற்றும் முற்றும் பார்த்து பெரிய சூட்கேஸ் ஒன்றை எடுத்து படுக்கையில் விரித்து சொன்னான். "அவசரத்துக்கு வேணும்கிற டிரஸ் மட்டும் எடுத்துக்கோ. பாக்கியை அப்புறம் பார்த்துக்கலாம்".

மௌனமாக அவள் பீரோவில் இருந்து சில ஆடைகளை எடுத்துத் தர அவன் சூட்கேஸில் கச்சிதமாக அடுக்க ஆரம்பித்தான். அண்ணனும் தங்கையும் ஒருவித இயல்பான மௌனத்துடன் சூட்கேஸை நிரப்ப ஆரம்பித்தார்கள். ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டு இருந்த ஈஸ்வரன் லேசாகக் கண்கள் கலங்கினார். சத்தமில்லாமல் அங்கிருந்து நகர்ந்தார். தங்கை அறை அருகே வந்த போது மாதுரி தாராவிடம் சொல்லிக் கொண்டிருந்தது கேட்டது.

".....கடந்த காலத்துக்குப் போய் நம் வாழ்க்கையில் திருத்தம் செய்யலாம்னு ஒரு சக்தி இருந்திருந்தா நான் எத்தனையோ விஷயங்களை கண்டிப்பாய் சரி செஞ்சிருப்பேன் தாரா. எங்கப்பா கடைசி வரைக்கும் எங்கம்மா வளர்த்தியிருந்தா நான் பொறுப்பாய் வளர்ந்திருப்பேன்னு நினைச்சார். ஆனா அது உண்மையில்லைன்னு எனக்குத் தோணுது. நீ கூட அம்மா இல்லாமல் தான் வளர்ந்தாய். உங்கண்ணாவும் உனக்கு எதையும் இல்லைன்னு சொன்னதில்லை. ஆனா என்னை மாதிரி நீ என்னைக்கும் ஏடாகூடமாய் நடந்துகிட்ட மாதிரி தெரியலை....."

"பழசு எல்லாம் இப்ப எதுக்கு மாதுரி"

"இல்லை. மனதில் பட்டதை சொல்லாமல் இருக்க முடியலை. ஊர் சுத்தணும், ஜாலியாய் இருக்கணும்கிற எண்ணத்தைத் தவிர எனக்கு அந்தக் காலத்தில் வேற எண்ணமே இருக்கலை. எந்த அளவு முட்டாள்தனமாய் அந்த சுரேந்தரைக் கல்யாணம் செஞ்சுக்கலாம்கிற வரை நான் போயிருக்கேன் பார். அருண் பிறக்கிற வரைக்கும் கூட நான் அந்த எண்ணத்தில் உறுதியாய் இருந்தேன் தாரா. அவன் பிறந்ததுக்கப்புறம் எங்கப்பா சுரேந்தர் அருணுக்கு நல்ல தகப்பனாய் ஆக

முடியாதுன்னு படிச்சுப் படிச்சு சொன்னார். அப்ப தான் நான் பின் வாங்கினேன். என் குழந்தை கஷ்டப்படறதை மட்டும் என்னால் சகிச்சுக்க முடியாதுன்னு தோணிச்சு..... ஆனாலும் என் குழந்தை நிறையவே கஷ்டப்பட்டுட்டான் தாரா. நீ ஆசைப்பட்ட மாதிரி அவர் என்னைக்கும் அவன் சுதந்திரத்துக்கு தடையாய் நிக்கலை. ஆனா அவர் ஒரு அப்பாவா அவனுக்கு அறிமுகமாகவேயில்லை. உன் மகள் மட்டுமில்லை தாரா என் மகனும் அவங்கப்பாவை நிஜமாய் இன்னும் பார்க்கலை. உருவம் தெரியும் ஆனால் உண்மையான அப்பாவை அவனுக்குத் தெரியாது. உயிரை உன் கிட்ட விட்டுட்டு அவர் அங்கே நடைப்பிணமாய் தான் இருக்கார்...."

தாரா மௌனமாக இருந்தாள். மாதுரியின் வார்த்தைகளில் தெரிந்த வேதனை அவள் முகத்தில் பிரதிபலித்தது.

மாதுரி சிறிது நேர மௌனத்திற்குப் பின்னால் சொன்னாள். "பழசை நாம் மாத்த முடியாது தாரா. ஆனா இப்ப என்ன ஆகணும்னு நம்மால் தீர்மானம் செய்ய முடியும். நீயும் தாமிராவும் எங்க கூட வந்துடுங்க தாரா"

## (72)

கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?
– கம்பன்

தாரா மாதுரியை அதிர்ச்சியுடன் பார்த்தாள். "மாதுரி"

"தாரா அவர் இப்பவும் உனக்கு மட்டும் தான் புருஷன். ஒரு காலத்தில் நான் எடுத்த முடிவு அவர் திரும்பி வந்ததால எதையும் மாத்திடல. எனக்கு அருணோட அம்மாங்கிற ஸ்தானம் மட்டும் தான் அங்க இருக்கு. எனக்கு அது போதும். கிளம்பு தாரா"

மாதுரியின் மாற்றமும் அழைப்பும் தாராவை இன்னும் திகைப்பில் இருந்து விடுவிக்கவில்லை. ஆழ்ந்த யோசனையுடன் தாரா மாதுரியைப் பார்த்தாள். மாதுரி அவள் தயக்கத்தை வேறு விதமாக எடுத்துக் கொண்டாள். "உனக்கு நான் அந்த வீட்டில் இருக்கிறது தர்மசங்கடமாய் இருந்தால் நானும் என் பையனும் போயிடறோம் தாரா. என் மகன் கல்யாணம் வரைக்கும் நான் அங்கே இருந்துடறேன். அது முடிஞ்சவுடனே நான் போயிடறேன்."

தீயைத் தீண்டியது போல தாரா பின் வாங்கினாள். "ஐயோ நான் அதற்கு யோசிக்கலை. எங்கண்ணாவுக்கு உடம்பு சரியில்லை. இன்னும் எத்தனை நாள்னு தெரியலை. அவரோட கடைசி காலத்தில் நான்........"

ஈஸ்வரன் உள்ளே நுழைந்தார். "தாரா, அண்ணனோட கடைசி காலத்தில் அவனுக்கு வேண்டியது அவன் தங்கை அவள் புருஷன் வீட்டில் சந்தோஷமாய் இருக்கிறாள்ங்கிற எண்ணம் மட்டும் தான். இத்தனை காலம் நீ இங்கே இருந்தது போதும், நீ கிளம்பு"

தாரா இன்னும் தயங்கினாள். "தாமிரா...."

"அவள் சூட்கேஸ் எல்லாம் எடுத்துகிட்டு ரெடியாயிட்டா"

"அண்ணா...."

"என்னைப் பத்திக் கவலைப்படாம நீ போ தாரா. ரொம்ப சீரியசானா நான் சொல்லியனுப்பறேன். பயப்படாதே அண்ணனோட கடைசி மூச்சு உன் மடியில தான் போகும்"

அந்த வார்த்தைகளைக் கேட்டு அழாமல் இருக்க தாரா பிரம்மப் பிரயத்தனம் செய்ய வேண்டி இருந்தது. தங்கையின் கண்ணீரை மட்டும் என்றுமே தாங்க முடியாத அந்த அண்ணனுக்கு மனம் வருத்தமாகும்படி அவள் எதையும் செய்ய விரும்பவில்லை. கனத்த மனதோடு கிளம்பத் தயாரானாள். ஈஸ்வரன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. மருமகள் என்ன செய்கிறாள் என்று பார்க்க நகர்ந்தார். தாமிராவின் சூட்கேஸை அருண் தூக்கி வர அவள் அறையிலிருந்து வெளியே வந்தாள். அவரைப் பார்த்தவுடன் சொன்னாள். "நான் அப்பப்ப வருவேன். அதனால் என் ரூமைக் காலி செஞ்சுடாதீங்க....."

அவர் சிரித்தபடி தலையசைத்தார். அப்போது தான் அவர் உடல்நிலை பற்றி நினைவுக்கு வந்தவளாக மெல்லிய குரலில் அருணிடம் கேட்டாள். "அண்ணா, எங்க மாமாவையும் கூட்டிகிட்டு போயிடலாமா?"

அது அவர் காதுக்குத் தப்பவில்லை. பாசத்துடன் மருமகளைப் பார்த்தபடி சொன்னார். "என்ன பிக்னிக்கா போறீங்க, எல்லாரையும் கூட்டிகிட்டு போறதுக்கு. போம்மா"

அப்போது தான் மாதுரியும் தாராவின் அறையிலிருந்து வெளியே வந்தாள். அருண் தாயைப் பார்த்தவுடன் தங்கையை அறிமுகப்படுத்தினான். "அம்மா இது தாமிரா"

மாதுரி புன்னகைக்க, தாமிரா கை கூப்பி வணக்கம் தெரிவித்தாள். அருணிடம் மெல்ல கேட்டாள். "உங்கம்மாவை நான் எப்படி கூப்பிடறது?"

அவன் குறும்பாகச் சொன்னான். "பேர் வச்சு மாத்திரம் கூப்பிட்டுடாதே. தாங்க மாட்டாங்க. வேற எப்படி வேணும்னாலும் கூப்பிட்டுக்கோ"

தாமிரா அவனைப் பார்த்து முறைத்து விட்டு மாதுரியிடம் கேட்டாள். "இவன் ஏன் அப்போலிருந்து என் கிட்ட எடக்கு முடக்காவே பேசறான்?".

அப்போது தான் அறையில் இருந்து வெளியே வந்த தாரா, மகள் பேச்சைக் கேட்டு அதிர்ந்து போய் திட்டப் போகும் முன் மாதுரி சிரித்தபடி சொன்னாள். "அவனை வீட்டுக்குப் போய் சரி செஞ்சிடலாம்". அவளுக்கு தாமிராவை மிகவும் பிடித்துப் போய் விட்டது. எப்படி அவளிடம் பேச ஆரம்பிப்பது என்று அவள் குழப்பத்தில் இருக்கையில் வெகு இயல்பாக அவள் தன்னை அணுகிய விதம் பிடித்திருந்தது.

அவர்கள் சிறிது நேரத்தில் கிளம்பினார்கள். போகும் போது தாமிரா அழுதாள். ஆனால் தாரா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். அவர்கள் கார் பார்வையில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டு ஈஸ்வரன் நின்றார். மனம் மிக லேசாய் இருந்தது. தன் வாழ்நாளில் முதல் முறையாக லேசான மனத்தை உணர்கிறார்.....

*****

அன்று ராஜராஜன் ஆபிசிற்குப் போகவில்லை. இத்தனை நாள் தன்னை சுற்றி அவர் எழுப்பி இருந்த அரணை அவர் மகன் நேற்று உடைத்துத் தள்ளி விட்டான். இப்போது அந்தப் பழைய ரணம் வட்டியோடு எழுந்து நின்றது. அருண் நேற்று அழுதபடி கேட்ட அந்த இரண்டு கேள்விகள்

காதில் அடிக்கடி ஒலித்தன. "என்னை நிஜமாவே வெறுக்கிறீங்களாப்பா?.... உங்களுக்கு ஒரு மகள் இருக்கிறது தெரியுமாப்பா?" வார்த்தைகளுக்குத் தான் எத்தனை மகிமை? ஒரு மனிதனை என்னவெல்லாம் செய்து விடுகிறது.

மகள் இருப்பதையே அவர் நீண்ட காலம் கழித்து தான் அறிந்தார். அவள் விஞ்ஞானி என்று கேள்விப்பட்ட போது அவர் அடைந்த சந்தோஷம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால் சந்தோஷம் என்று ஒன்றை அவரால் தனியாக உணர முடியவில்லை. அதன் இரட்டைப் பிறவியான துக்கமும் சேர்ந்து தான் வந்தது. ஒரு நாள் இண்டர்நெட்டில் அவள் பற்றி தகவல் சேகரித்த போது தான் அவள் அவர் செய்த ஆராய்ச்சியில் தான் ஈடுபட்டுள்ளாள் என்பது தெரிய வந்தது. அன்று அவள் புகைப்படம் பார்த்த போது தாரா நினைவும் சேர்ந்து வர அத்தனை சேகரிப்புகளையும் கம்ப்யூட்டரில் இருந்து நீக்கி விட்டார். அந்த பழைய நினைவுகளும் மனதின் மேற்புறத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டன. ஆனால் இன்று எல்லாம் ஏனோ பெரும்பலத்துடன் மனதில் அலை மோதுகின்றன.

"அப்பா" அருணின் குரல் கேட்டு திரும்பினார். அவனுடன் நின்றிருந்த தாராவையும் தாமிராவையும் பார்த்து சிலையானார்.

"இது தான் அப்பா" அருண் தங்கைக்கு தந்தையை அறிமுகப்படுத்தினான். தாராவும் சிலையாக நின்றிருக்க தாமிரா ஒருவித பிரமிப்புடன் அவரை நெருங்கினாள். "அப்பா..." அவள் குரல் கரகரத்தது. அடுத்த கணம் அவர் அணைப்பில் இருந்தாள். அவருக்கு இன்னும் எல்லாம் கனவு போலத்தான் இருந்தது. தாரா இன்னமும் சிலையாகத் தான் தூர நின்றிருந்தாள். தாமிராவுக்கு தந்தையிடம் பேச ஆயிரம் விஷயங்கள் இருந்தன, கேள்விகள் இருந்தன. எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தெரியாமல் அவள் தன் தந்தையை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருக்க அருண் அவளைப் பார்த்து கண்ணால் சைகை செய்தான். "வா"

தந்தையிடமிருந்து விலகி தாமிரா தமையனிடம் வந்தாள். "என்ன?"

"வெளியே போகலாம் வா"

"வா லூசு சொல்றேன்" என்று முணுமுணுத்தபடி அவளை அழைத்துக் கொண்டு போய் தந்தையின் அறைக்கதவை சாத்தினான். சிறிது நேரம் அங்கேயே நின்றான். ஏதோ சொல்ல வந்த தாமிராவை சைகை செய்து அமைதியாக இருக்கச் சொன்னான். சில நிமிடங்கள் கழித்து உள்ளே இருந்து அழுகை சத்தம் கேட்டது.

"அவங்க இத்தனை நாள் சேர்த்து வச்ச துக்கத்தை இப்ப அழுது இறக்கிக்கிட்டிருக்காங்க. முழுசும் இறக்கி வைக்க ரொம்ப நேரம் ஆகும். அது வரைக்கும் நாம போய் தொந்தரவு செய்ய வேண்டாம்" – அருண் கண்கள் கலங்க தங்கையிடம் சொன்னான்.

தாமிரா கண்கள் கலங்க அண்ணனைப் பார்த்தாள். "இனி மேல் எல்லாம் சரியாயிடுமில்லையா?".

அவனும் கண்கள் கலங்க சரியாகி விடுமென்று தலையசைத்தான். அவளை அழைத்துக் கொண்டு கீழே வந்தான்.

திடீரென்று கேட்டாள். "நீ ஏன் என்னை லூசுன்னு கூப்பிட்டாய்?"

"தெரியாமல் உன் நிஜப்பெயர் வச்சு கூப்பிட்டுட்டேன். சாரி"

அவள் அடிக்க கை ஓங்க, அருண் ஓட, அவள் துரத்திக் கொண்டு ஓடினாள். அவர்கள் ஓடி வருவதைப் பார்த்து மாதுரி வாயைப் பிளந்து நின்றாள். "என்ன இது சின்னக் குழந்தைகளாட்டம்"

"என்னை அவன் லூசுன்னு கூப்பிடறாம்மா.."

"கூப்பிட்ட உடனேயே அதே மாதிரி நடந்துக்குவான்னு எனக்கு தெரியாமப் போச்சும்மா"

அவர்கள் இருவரும் மாதுரியைச் சுற்றி ஓட அவள் சோகம் கலந்த புன்னகையுடன் அவர்களைப் பார்த்தாள். சிறு வயதில் இழந்திருந்த இந்த உறவின் சீண்டல்களையும், சந்தோஷங்களையும் இப்போது தருவித்துப் பார்த்துக் கொள்கிறார்கள் என்று தோன்றியது. மனம் நெகிழ்ந்தது.

## (73)

"The world is full of poetry. The air is living with its spirit; and the waves dance to the music of its melodies, and sparkle in its brightness." – Percival

எல்லாம் சுமூகமாக ஆன பின் நடந்ததை எல்லாம் காவ்யாவிடமும் அம்பலவாணனிடமும் சொல்லும் வரை அருணிற்கு நிம்மதி இருக்கவில்லை. காவ்யாவிடம் எல்லாம் சொல்லி கடைசியில் அருண் மன்னிப்பு கேட்டான்.

"எதற்கு?"

"நான் இது நாள் வரை உன் கிட்ட எதுவும் மறைச்சதில்லை. ஆனால் நீ அன்றைக்கு போன் செய்த போது எனக்கென்னவோ அந்த தேவன் எங்கப்பா தான்னு தெரிஞ்சிருந்தும் உன் கிட்ட சொல்ல தயக்கமாய் இருந்துச்சு"

காவ்யா அதை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. அவள் எண்ண ஓட்டம் வேறு மாதிரியாக இருந்தது. "முதல்ல அற்புதமான கதாபாத்திரங்கள்னு நினைச்சோம். பிறகு அது நிஜமான மனுஷங்கன்னு ஆனப்புறம் ஒரு தடவையாவது பார்க்க முடியுமான்னு துடிச்சோம். ஆனா இப்ப இனி தினமும் பார்க்கப் போகிற நம்ம வீட்டு ஆட்கள் தான்னு ஆயிடுச்சுன்னு நினைக்கிறப்ப எவ்வளவு சந்தோஷமாய் இருக்கு தெரியுமா"

அம்பலவாணன் அருண் எல்லா உண்மையையும் சொன்ன போது ஆரம்பத்தில் திகைத்து, பிறகு கலங்கி, கடைசியில் அருணுக்காக சந்தோஷப்பட்டார். "யோசிச்சுப் பார்த்தா அன்றைக்கு உன் தாத்தாவும், ஈஸ்வரனும் சேர்ந்து செஞ்சதெல்லாம் நியாயமாய் தான் படுது. இப்ப கூட உன் அம்மா இந்த முடிவு எடுத்திருக்காட்டி யாரும் இந்த உண்மையை வெளியே சொல்ல முடியாது இல்லையா..... ஆனாலும் நாமாய் இந்த முயற்சி எடுத்திருக்காட்டி இந்த மாதிரி ஒரு சுபமான முடிவு வந்திருக்காது.. உனக்கு ஒரு அப்பா, அம்மா, தங்கைன்னு லாட்டரியில் விழுந்த மாதிரி இவங்க கிடைச்சிருக்க மாட்டாங்க. எல்லாமே ஒரு காரணத்தோடு தான் நடக்குது அருண்"

தொடர்ந்த நாட்களில் அந்த வீட்டில் சிரிப்புச் சத்தம், வாக்குவாதம் எல்லாம் பலமாய் கேட்டது. தாராவிடம் பழக ஆரம்பித்த பின் அப்பா அவளை அந்த அளவு நேசித்ததில் காரணம் இல்லாமல் இல்லை என்று அருணுக்குத் தோன்றியது. தாமிரா தந்தையிடம் விஞ்ஞானம் பற்றிப் பேசும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அண்ணனிடம் சண்டை போட்டாள். அவள் சண்டையில் தன் பக்கம் பேச மாதுரியைத் துணைக்கழைக்க அருண் தாராவைத் துணைக்கழைப்பான். தீர்ப்பு சொல்ல

ராஜராஜனிடம் போவார்கள். அவர் ஒரு முறை மகள் பக்கமும், ஒரு முறை மகன் பக்கமும் பேசுவார்.

ராஜராஜனின் மாற்றம் அருணைப் பெரிதும் திகைக்க வைத்தது. அவர் கண்களில் தெரிந்த அந்த ஒளியும், இதழ்களில் சதா தவழ்ந்த புன்னகையும், ஒவ்வொரு அசைவிலும் தெரிந்த உறுதியும், பேச்சில் தொனித்த அந்த உயிர்ப்பும் இத்தனை நாட்கள் அவன் காணாதது. அவர் இளமையாகவும், மேலும் அழகாகவும் தெரிந்தார். ("அப்பா ஏன் சினிமால நடிக்கப் போகலை?"—இது தாமிராவின் வருத்தமான கேள்வி).

அருணிற்கு கல்யாண உடைகள் தேர்வு செய்ய கூட வந்து பல கடைகள் ஏறி இறங்கியது ராஜராஜனும், தாமிராவும் தான். அவர் எல்லையில்லாத ஆனந்தத்தோடு அவனுக்காக தேர்ந்தெடுத்ததைப் பார்க்கையில் ஒரு கட்டத்தில் அவனை அறியாமல் அவன் கண்கள் கலங்கின. "இந்த அப்பாவை நான் இத்தனை நாள் இழந்திருந்தேனே". அதை உணர்ந்தது போல அவர் வருத்தத்துடன் அவனிடம் சொன்னார். "சாரிடா. அப்ப எல்லாம் நான் நானாய் இருக்கலை..."

வீட்டிற்கு சேதுபதி, ரங்காச்சாரி, நரசிம்மராஜுலு அடிக்கடி வந்து போனார்கள். சேதுபதியை முதலில் பார்த்தவுடன் ராஜராஜன் உரிமையுடன் போபித்துக் கொண்டார். "இனியாவது இந்த தோட்டக்காரன் டிரஸ்ஸை மாத்து. உன்னை இப்படி எனக்கு பார்க்க முடியலை"

சேதுபதி ஆக்ரோஷத்துடன் நண்பனிடம் சண்டை போட்டார். "எத்தனை நாள் நான் உன்னைப் பார்த்து பேச வந்துருப்பேன். என்னை ஏதோ ஒரு அன்னியனைப் பார்க்கிற மாதிரி அப்ப எல்லாம் பார்த்தாய்... அப்ப எல்லாம் உனக்கு எதுவும் தோணலை இல்லையா?"

ராஜராஜன் "சாரி" என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி ஒரு அழகான விலையுயர்ந்த பேனாவை எடுத்து நண்பனிடம் தந்தார். "இனிமேல் நீ நிறைய எழுதணும்". சேதுபதி கண்கலங்க அந்த பேனாவை வாங்கிக் கொண்டார்.

முதல் முறை வந்த போது ரங்காச்சாரி ராஜராஜனைப் பார்த்து கண்கலங்க சொன்னார். "சாகறதுக்கு முன்னாடி உன்னை பழையபடி பார்ப்பேன்னு நம்பிக்கை இருக்கலை. இனி செத்தாலும் கவலையில்லை".

நரசிம்மராஜுலு வந்து தாமிராவும் சேர்ந்து கொண்டு ராஜாராஜனிடம் மணிக்கணக்கில் பேசிய நேரங்களில் எல்லாம் அந்த விஞ்ஞான நுணுக்கங்களை கேட்கும் பொறுமையில்லாமல் அருண் அங்கிருந்து நகர்ந்து விடுவான். அப்படி ஒரு நாள் அவன் வந்த போது தான் ஈஸ்வரன் அவர்கள் வீட்டுக்கு வந்தார். "வாங்க...."என்று வரவேற்க ஆரம்பித்தவன் தயக்கத்துடன் "மாமா" என்று முடித்தான். அவர் புன்னகைத்தார்.

"தாமிரா மேலே சயன்ஸ் பத்தி அப்பா கூட பேசிகிட்டிருக்கா. எலக்ட்ரான், ப்ரோட்டான், நியூட்ரான்னு கேட்டு கேட்டு தலை சுத்திடுச்சு.. அம்மா, அம்மா கூட சமையலறையில் பேசிகிட்டிருக்காங்க... இருங்க கூப்பிடறேன்"

'அம்மா, அம்மா கூட பேசிகிட்டிருக்காங்க' என்கிற வார்த்தைகள் அவரை மனம் குளிர்வித்தன. தாராவைக் கூப்பிடக் கிளம்பியவனை தடுத்து நிறுத்தினார். "அவங்களை எல்லாம் அப்புறம் பார்க்கறேன். நான் முக்கியமாய் வந்தது உன்னைப் பார்க்கத் தான்"

அவன் குழப்பத்துடன் அவரைப் பார்த்தான். அவர் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அவனைப் பார்த்தார். அவன் பிறந்து அவர் தங்கை வாழ்க்கை பாழாய் போன போது அவர் அவனை வெறுத்தார். அவன் அந்த நாவல் பற்றித் துப்பறியக் கிளம்பிய போது அவன் மேல் வந்த கோபத்திற்கு அளவில்லை. அவன் போவான் என்று எதிர்பார்த்த இடங்களுக்கு முன்பே போய்

தடயங்களை அழித்ததுமுண்டு ஆனால் அவருக்கு கேன்சர் என்று தெரிந்தபின், அவன் கண்டு பிடிக்க கிளம்பியது அவனது குடும்ப ரகசியத்தைத் தான், எனவே அது பத்திரிக்கைகளில் பிரசுரமாகாது என்கிற உண்மை உறைத்த பின் அவர் அவனை உபயோகப்படுத்திக் கொள்ளவே நினைத்தார். தன் தங்கைக்கு திரும்பவும் ஒரு வாழ்வு கிடைக்கும் என்கிற அளவுக்கு அவர் நம்பிக்கை வைக்கா விட்டாலும், அவன் தன் தங்கையையாவது பாசத்துடன் பார்த்துக் கொள்ள வாய்ப்பு இருப்பதாகத் தான் அவனைப் பற்றி அவர் சேகரித்திருந்த குணாதிசயங்களை வைத்து கணக்கு போட்டார். ஆனால் தானாகவே அவனிடம் உண்மையைச் சொன்னால் தாராவுக்குக் கொடுத்த சத்தியத்தை மீறியதாகவே அவள் நினைப்பாள் என்பதால் அவனாக அறியும் வரை தான் இடைப்படுவதில்லை என்று முடிவெடுத்திருந்தார். எப்போது அவன் அறிந்து விட்டான் என்று தெரிந்து கொண்டாரோ அப்போது அதை அவனும், தாமிராவும் முழுமையாகத் தெரிந்து கொள்வது தான் நல்லது என்பதால் அவர் சேதுபதியைக் காட்டிக் கொடுத்தார். பிறகு எதிர்பார்த்ததற்கும் மேலாய் நடந்த இப்போதைய நிகழ்வுகள் அவன் ஒருவனால் மட்டுமே முடிந்தது என்பதில் அவருக்கு சந்தேகமில்லை. தினமும் போனில் பேசிய போது தங்கையும் மருமகளும் சந்தோஷத்தின் எல்லையில் இருப்பதை அவரால் உணரமுடிந்தது....

"எல்லாத்துக்கும் ரொம்ப நன்றி தம்பி" – அவர் வாழ்வில் முதல் முறையாக ஒருவனுக்கு நன்றி சொல்கிறார்.

அவன் தர்மசங்கடத்துடன் சொன்னான். "அம்மாவுக்குத் தான் நன்றி சொல்லணும். இது அவங்களா எடுத்த முடிவு"

கணவன் இயந்திரமாக மாறியதைப் பார்த்த பின்பும், தாராவுக்கு ஒரு குழந்தை பிறந்ததை அறிந்த பின்பும், தாரா புத்தி சுவாதீனம் இழந்ததை அறிந்த பின்பும் மாதுரி எடுக்காத இந்த முடிவு இப்போது எடுக்கப்பட்டதென்றால் அது அவள் மகன் மனதை வைத்தே எடுக்கப்பட்டது என்பதை ஈஸ்வரன் நன்றாக அறிவார். ஆனால் அவனிடம் மறுத்துப் பேச அவர் முற்படவில்லை. தான் கொண்டு வந்திருந்த கனத்த உறையை அவனிடம் கொடுத்தார்.

"என்ன இது" என்பது போல அவன் அவரைப் பார்த்தான்.

"நான் என் கணக்கில் இருக்கும் சொத்தையெல்லாம் தாரா பேரிலும், தாமிரா பேரிலும் எழுதிட்டேன். கணக்கில் இல்லாமல் ஸ்விஸ் பேங்கில் நிறைய இருக்கு. அதுக்கான சீக்ரெட் கோடு, தகவல் எல்லாம் இதில் இருக்கு. அதை உன் கிட்ட ஒப்படைக்கிறேன். எப்படி செலவு செய்யணும்னு நினைக்கிறாயோ அப்படி செய்"

அருண் சில நிமிடங்கள் பேசும் திறனை இழந்தான். திகைப்புடன் உறையைப் பிரித்துப் பார்த்தவன் மொத்தமாக இருக்கும் தொகையைப் படித்த போது கிட்டத்தட்ட மயக்கம் அடையும் நிலையை எட்டினான். ஒரு மாநில அரசியலில் இருக்கின்ற இவர் சேர்த்து வைத்த பணமே இவ்வளவு என்றால் மற்ற மாநில, தேசிய அரசியல்வாதிகளிடம் இருக்கக் கூடிய பணத்தை அவனால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. இந்தியா ஏழை நாடென்று யார் சொன்னது?

அவர் அவன் அதிர்ச்சியைக் கண்டும் முகம் மாறாமல் இருந்தார். அருணுக்கு ஏதோ ஒரு படத்தில் கவுண்டமணி சொல்லும் டயலாக் நினைவுக்கு வந்தது. "அரசியல்ல இதெல்லாம் சகஜம்ப்பா". இவர் சொல்லக்கூடிய பதிலும் அதுவாகத்தான் இருக்கும்.

"இதையேன் என் கிட்ட...?" தயக்கத்துடன் கேட்டான்.

"தாரா தாமிராவுக்கு இதை வச்சுட்டு என்ன செய்யறதுன்னு தெரியாது. அவங்களுக்கு அடுத்தபடியாய் எனக்கு உன்னை விட்டால் வேறு யாரும் இல்லை. பணம் நல்ல முறையில் சேர்த்ததில்லைன்னாலும் நல்ல முறையில் அதை செலவு செய்ய முடியும் இல்லையா."

# (74)

In the end, or rather, as things really are, any event, no matter how small, is intimately and sensibly tied to all others. All rivers run full to the sea; those who are apart are brought together; the lost ones are redeemed;

– Mark Helprin

எல்லோரும் பூங்கொடி கிராமத்திற்கு ஏ.சி பொருத்தப்பட்ட டெம்போ டிராவலரில் மகிழ்ச்சியுடன் போய்க் கொண்டு இருக்கும் போது சேதுபதியால் மட்டும் முழு மகிழ்ச்சியுடன் இருக்க முடியவில்லை. ஆச்சிக்குப் போன் செய்து ராஜராஜன், தாரா இணைந்ததை சந்தோஷமாக முதலில் தெரிவித்தவர் அவர் தான். ஆச்சி எல்லோரையும் பூங்கொடி கிராமத்திற்கு வர அழைப்பு விடுத்ததை ராஜராஜனிடம் சொல்லி உடனடியாகக் கிளம்ப சம்மதம் வாங்கியவரும் அவர் தான். அருண் திருமணம் முடியாவிட்டாலும் காவ்யா அவன் மனைவியாக நிச்சயிக்கப்பட்டவள், எனவே அவளும் கூட வந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லி அவள் வர ஏற்பாடு செய்தவரும் அவர் தான். ஆனால் அவர் முயற்சியே செய்யாமல், எதிர்பாராத விதமாக ஈஸ்வரனும் கூட வருவது அவருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அங்கு போயிருக்கும் போது அண்ணனுக்கு ஏதாவது ஆகி விட்டால் தன்னால் தாங்க முடியாது, அதனால் வரவில்லை என்று தாரா சொன்ன போது அவரையும் கூட்டிக் கொண்டு போகலாம் என்று தாமிரா ஆலோசனை சொல்லி, அவரை வற்புறுத்தி கூட்டிக் கொண்டும் வந்து விட்டாள். ராஜராஜன், மாதுரி, தாரா, தாமிரா, அருண், காவ்யா, சேதுபதி என்ற ஏழு பேரோடு சேர்ந்து எட்டாவது நபராக ஈஸ்வரனும் வந்தது நெருடலாக இருந்தது. நியூமராலஜியில் எட்டாம் எண்ணுக்கு அதிபன் சனி என்று ஞாபகம் வர எல்லாம் பொருத்தமாகத் தான் இருக்கிறது என்று நினைத்து பெருமூச்சு விட்டார். அதுவும் அவர் அருகிலேயே ஈஸ்வரன் உட்கார்ந்து பயணம் செய்ததை அவர் ரசிக்கவில்லை.

"உனக்கென்ன வயிற்று வலியா?"– ஈஸ்வரன் சேதுபதியைக் கேட்க சேதுபதி வேகமாக மறுத்தார்.

"பின்னே ஏன் முகத்தை அப்படி வச்சிருக்கே?" என்று ஈஸ்வரன் கேட்டதற்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை. முகத்தைத் திருப்பி ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார். ராஜராஜன்–தாமிரா, அருண்–காவ்யா, மாதுரி–தாரா என ஒருவருக்கொருவர் ஏதேதோ சுவாரசியமாய் பேசிக் கொண்டு வர தனக்குப் பேச இந்த ஆளா கிடைக்க வேண்டும் என்று மனதில் நொந்து கொண்டார்.

ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்தாலும் ஈஸ்வரன் அவரை விடுவதாக இல்லை. சேதுபதியின் சட்டைப் பையில் இருந்த அழகான பேனாவைப் பார்த்து "ஓ...நீ பழையபடி கதை எழுதப் போகிறியாக்கும்" என்று கேட்க சேதுபதி ஆமாம் என்று தலையசைத்தார்.

"அடுத்து எழுதற கதையையாவது சொந்தமா எழுது. இந்த மாதிரி அடுத்தவங்க கதையை எழுதாதே"

"பேசாமல் தனியா பஸ் ஏறி வந்திருக்கலாம் போல இருக்கு" என்று சேதுபதி முணுமுணுத்துக் கொண்டார்.

"என்ன சொல்றே?"

"இல்லை... கண்டிப்பாய் நீங்க சொன்னபடியே செய்யறேன்னேன்"

ஈஸ்வரன் புன்னகையுடன் மௌனமானார். ஆரம்பத்தில் பூங்கொடி கிராமத்திற்கு இருவரையும் அனுப்பி விட்டு மும்பையில் அவர்களைத் தேட விட்டதற்கும், பின் கதை எழுதிக் காணாமல் போனதற்கும் சேதுபதி மேல் கடும் கோபம் இருந்தாலும் தாரா மேல் உண்மையான அன்பு வைத்தவன் என்ற ஒரு காரணம் மட்டும் தான் சேதுபதியை அவர் கோபத்தில் இருந்து காப்பாற்றியது. ஆனால் இப்போது சேதுபதி மீது கூட ஏனோ அவருக்குப் பரிவு தோன்றியது.

ஆச்சியின் கிராமத்து வீட்டை அவர்கள் நெருங்கிய போது இருட்டி விட்டது. ஆச்சி வழியில் நின்று பேரானந்தத்துடன் அவர்களை வரவேற்றாள்.

"ஆச்சி, உங்களுக்குக் கொள்ளி வைக்க ஒருத்தரைக் கூட்டிட்டு வரச் சொன்னீங்களே, அவரைக் கூட்டிட்டு வந்திருக்கேன். நீங்க ரெடியா?" – என்று எல்லோருக்கும் முன்னால் இருந்த அருண் குறும்பாகக் கேட்க மாதுரி மகனைத் திட்டினாள். "என்னடா இது. தாமிரா கிட்ட பேசற மாதிரி அவங்க கிட்டயும் பேசறே"

ஆனால் ஆச்சி அவன் பேச்சை ரசித்தபடி சொன்னாள். "நான் ரெடியில்லை. என் பேரன் கல்யாணம் கூடிய சீக்கிரமே இருக்கு. அது முடிஞ்சு, கொள்ளுப் பேரன், பேத்தி எல்லாம் எடுத்துக் கொஞ்சி அப்புறமா தான் இந்த கட்டை போகும்"

ஆனால் அவள் பார்வை எல்லாம் பின்னால் வந்த ராஜராஜன் மேல் தான் இருந்தது. கண்கள் நிறைய, ஓடிப் போய் அவர் கைகளைப் பிடித்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். "இந்த நாளுக்காக எத்தனை வருசமா நான் தவமாய் இருந்தேன் தெரியுமா ராசா...." ராஜராஜன் அவள் பாசத்தில் மனம் நெகிழ்ந்து போனார். "நானும் உங்களை நினைக்காத நாளில்லை ஆச்சி"

அதே பாசத்தோடு தாராவையும் அணைத்துக் கொண்ட ஆச்சி பின் ஒவ்வொருவரையும் தனித் தனியாக வரவேற்று உபசரித்தாள்.

ஈஸ்வரன் தூரத்தில் நின்று எல்லோரையும் வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்த மருதமுத்துவைத் தனியாக அழைத்தார்.

"நாயே, எல்லாரும் ரெண்டு நாளாவது இருப்போம். அது வரைக்கும் எங்கேயாவது வெளியூர் போய் இரு. இங்கே இருந்தால் அவங்க சந்தோஷத்தைப் பார்த்து நெஞ்சு வெடிச்சு செத்துப் போயிடுவாய்"

ஈஸ்வரன் ஏதோ பேசியதையும், கேட்டு விட்டு மருதமுத்து ஓடாத குறையாக அங்கிருந்து போனதையும் பார்த்த சேதுபதி "இந்த ஆள் யார் கிட்ட ஒரு வார்த்தை பேசினாலும் ஓடறாங்க. சாகப் போகிற காலத்தில் கூட இப்படிப் பாடாய்ப் படுத்தறானே" என்று மனதில் நினைத்துக் கொண்டார். அதன் பிறகு ஈஸ்வரன் இருக்கும் இடத்தில் இருந்து குறைந்தது இருபதடி தூரத்திலாவது தானிருக்கும் படி பார்த்துக் கொண்டார்.

உண்மையாகவே மருதமுத்து தங்கியிருந்தால் அந்த வீட்டில் நிலவிய ஆனந்தத்தைப் பார்த்து வெந்து போயிருப்பார். அந்தப் பெரிய வீடு அவர்களின் குதூகலத்தால் நிரம்பி வழிந்தது. ஈஸ்வரன் மட்டும் சற்று தள்ளி அமர்ந்திருந்து அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்.

மருந்துகள் பலமிழந்து போனது போல் அவருக்குத் தோன்றியது. உடலில் ஒவ்வொரு அணுவும் வலித்தது. அருகில் இருந்தால் தங்கை கண்டு பிடித்து விடுவாள் என்று தோன்றியதால் தள்ளியே இருந்தார். தங்கை அவ்வப்போது அவரைப் பார்க்கையில் எல்லாம் கஷ்டப்பட்டு உடல் வேதனையை முகத்தில் இருந்து மறைத்தார்.

அவர்கள் பேசி முடிவதாக இல்லை. ஆச்சியின் அபார சமையலை அனுபவித்து ருசித்த பின் இரவு இரண்டு மணி வரை பேசிக் கொண்டிருந்து விட்டு உறங்கப் போனார்கள். மறுநாள் காலை அனைவரும் தாமிரபரணியில் குளிக்கக் கிளம்பினார்கள். ஈஸ்வரன் மட்டும் கரையில் அமர்ந்து வேடிக்கை பார்த்தார்.

நதியில் அனைவரும் நீச்சலடித்துக் கொண்டும், விளையாடிக் கொண்டும், நீரை இரைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும் நேரம் போவது தெரியாமல் இருந்தார்கள். தங்கையின் முகத்தில் இதுவரை கண்டிராத சந்தோஷத்தை ஈஸ்வரன் பார்த்தார். இந்த நதிக்கரையில் தான் அவள் வாழ்வு ஆரம்பித்து ஒரு வருடம் கழித்து முற்றுப் பெறுவது போல் இருந்தது. திரும்பவும் இத்தனை காலம் கழித்துப் பெற்றதை அந்த நதியிலேயே கொண்டாடுவது போல் தோன்றியது. அவருக்குத் தன் வலி ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. தங்கையின் ஆனந்தத்தைப் பார்க்கையில் அவருக்கு வரப் போகிற மரணம் உட்பட எதுவும் பொருட்டாகத் தெரியவில்லை.

"அப்பா நல்லா பாடுவீங்கன்னு கேள்விப்பட்டோம். ஒரு பாட்டு பாடுங்க ப்ளீஸ்" என்று தாமிரா தந்தையிடம் கேட்டுக் கொண்டாள்.

"அந்த இந்திப்பாட்டு பாடு ராசா" என்று ஆச்சி சொல்ல அருண் கிண்டல் செய்தான். "ஆச்சி எப்ப ஹிந்திப் பாட்டு ரசிகையானீங்க"

"இல்லை... அந்தப்பாட்டு அவன் எப்பவும் அனுபவிச்சுப் பாடுவான். அதனால சொன்னேன்"

காவ்யா, அருண், தாமிரா மூவரும் சேர்ந்து வற்புறுத்த சிறிது தயக்கத்துக்குப் பின் ராஜராஜன் பாடினார்.

"படே அச்சே லக்தேஹே..... "

(இந்த விஷயங்கள் மிக இனிமையாக இருக்கின்றன– இந்த இடம், இந்த சூழ்நிலை, இந்த நதி, இத்துடன் நீ)

அந்தக் கடைசி வார்த்தையைச் சொல்லும் போது ராஜராஜன் கண்கள் கலங்கி தாரா மீது லயித்தன. அவளும் சந்தோஷத்தில் கண்கள் கலங்கினாள். அனைவரும் அந்தக் காட்சியில் மனம் நெகிழ்ந்து போனார்கள்.

காவ்யா அருணிடம் சொன்னாள். "நான் இவங்களால எப்படி பிரிஞ்சு இவ்வளவு காலம் இருக்க முடிஞ்சதுன்னு பல தடவை நினைச்சிருக்கேன். பிரிவுல அவங்க ரெண்டு பேரும் நிறையவே கஷ்டப்பட்டாலும் ஏதோ ஒரு நம்பிக்கை அவங்க மனசுல ஆழமாய் இருந்திருக்கணும்னு தோணுது. அது தான் அவங்களை தாக்குப் பிடிக்க வச்சிருக்கு"

அவன் ஒன்றும் சொல்லவில்லை. உண்மையான காதலால் முடியாதது என்று எதுவும் இருக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. மனம் லேசாக அந்த நதியைப் பார்த்தான். பல வருடங்களுக்கு முன் அரும்பி வளர்ந்த ஒரு மாபெரும் காதலுக்கும், அந்தக் காதலின் பிரிவிற்கும் மௌன சாட்சியாக இருந்த தாமிரபரணி நதி இன்று அவர்கள் ஒன்று சேர்ந்ததையும், பிள்ளைகளுடன் ஒன்று சேர்ந்து வந்து களிப்பதையும் கண்டு பேரானந்தம் அடைந்தது போல் பிரவாகமெடுத்து ஓடிக் கொண்டு இருந்தது.